2969

T.N.C.A. Debates

Official Report

VOL 37 NO 4

8th April 1987


V211,31 N57
N87.37.4
136516

V211.31 N87

N87.37.4

136516

600 008

# உள்ளடக்கம்

8—4—1987

பக்கங்கள்

1. வினாக்கள்: விடைகள்—

   (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 741—779

   (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 779—807

2. தகவல் கோரல்—

   (அ) அம்பாசமுத்திரம் சேரன்மாதேவி பகுதிகளில் பாசனக் கால்வாய்களைத் திறந்து விட வேண்டியதன் அவசியம் குறித்து .. 807—808

   (ஆ) சின்னமனூர் வட்டம் கருங்காட்டாங்குளம் பகுதியில் வெற்றிலைக் கொடிகால்களுக்கு நீரின்மை .. .. . 808

   (இ) சீர்காழி, சிதம்பரம் தாலுகாக்களிலுள்ள நெற்பயிர்களுக்குத் தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து .. .. 808—809

   (ஈ) மொழி பற்றிய அரசின் தீர்மானத்தின் மீது மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கை .. .. .. .. 809—810

   (உ) நெல்லை மாவட்டத்திலே அமையவிருக்கும் இந்தியக் கடற்படை நுண்தொடர்பு நிலையத்திற்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுத்தல் .. .. .. 810—811

3. விதி 110 (1)இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—

   (அ) தமிழக வறட்சி நிலை குறித்து .. 811—813

   (ஆ) சென்னையில் மின் தடங்கல் ஏற்பட்டது குறித்து .. .. .. .. 1009

4. கவன ஈர்ப்பு—

   (அ) சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்குவதில் தாமதம் .. 813—815

   (ஆ) மதுரை கோட்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஹார்விபட்டி நகரியத்தின் பராமரிப்புப் பணிகள் .. 815—816

   (இ) சேரன்மாதேவி அரிகேசவநல்லூரில் ஆதிதிராவிட மக்களுக்கு மருத்துவ வசதியின்மை .. .. .. .. 817—820

   (ஈ) வடாற்காடு மாவட்டம் புதூர் நாடு மருத்துவமனை முறையாகச் செயல்படாமை .. .. .. 820—822

   (உ) காமராஜர் மாவட்டத்தில் நிலங்களின் மதிப்பீட்டை உயர்த்தியிருப்பதால் பத்திரச் பதிவு பாதிப்பு .. .. 822—828

உள்ளடக்கம்—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| (5) அறிவிப்பு— | |
| பேரவை அலுவல் .. .. .. | 828 |
| (6) வரவு-செலவுத் திட்டம் 1987-88 வாக்கெடுப்பு—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 17—கல்வி .. .. | 828—.048 |
| மாண்புமிகு திரு சி. பொன்னையன் .. | 828, 830 1009, 1047 |
| திரு டி. என். முருகானந்தம் .. .. | 830—839 |
| திரு இரா. சண்முகம் .. .. | 839—848 |
| திரு அ. ரகுமான்கான் .. .. | 848—863 |
| திரு க. சோலைராசு .. .. .. | 863—873 |
| *திரு கு. ரமணி .. .. .. | 874—888 |
| திரு பாப்பா சுப்பிரமணியன் .. .. | 889—895 |
| திரு ஜி. ஆனந்தகிருஷ்ணா .. .. | 896—903 |
| திருமதி பா. வளர்மதி .. .. | 903—911 |
| திரு ஆ. கா. அ. அப்துல் சமத் .. .. | 912—922 |
| *டாக்டர் தே. குமாரதாஸ் .. .. | 922—931 |
| திரு துரை அன்பரசன் .. .. | 932—935 |
| திரு கே. சுப்பராயன் .. .. | 935—951 |
| திரு ஆ. பிரேம் குமார் .. .. | 951—958 |
| திரு எஸ். பி. மணவாளன் .. .. | 958—964 |
| திரு வே. கு. சின்னசாமி .. .. | 964—969 |
| திரு கே. முத்துவேல் .. .. .. | 969—973 |
| திரு மா. கதிர்வேல் .. .. .. | 973—978 |
| *திரு சா. ஞானசுந்தரம் .. .. | 978—985 |
| திரு ஜி. கே. பிரான்சிஸ் .. .. | 985—988 |
| திரு ஏ. எஸ். ரவீந்திரன் .. .. | 988—996 |
| திரு ச. பாலகிருஷ்ணன் .. .. | 996—1002 |
| *டாக்டர் ந. மாசிலாமணி .. .. | 1002—1011 |
| (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 1048 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987 ஏப்ரல் 8, புதன்கிழமை.

பங்குனி 25, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு".

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**வேடசந்தூர் தொகுதியில் கிணறுகளை ஆழப்படுத்த கடன்.**

336—(*வினா எண் 3271) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கி ஆகியவைகள் விவசாயிகளுக்கு தங்கள் வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த கடன் வழங்குவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் இயக்குநர் அலுவலகத்தினர் வேடசந்தூர் போன்ற பகுதிகளை, கறுப்புப் பகுதிகளாக, 'டார்க் ஏரியா' என்று அறிவித்திருக்கிற காரணத்தால், கூட்டுறவு அமைப்புகளில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கூட கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே,

அந்தத் துறையிடம் கலந்து ஆலோசித்து—வேடசந்தூர் தாலுகா முழுவதுமாக கறுப்புப் பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது —அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அப்படி வேளாண்மைக் கிணறு களை ஆழப்படுத்துகின்றபொழுது கடன் வழங்குவதில்லை யென்று எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று நான் குறிப் பிட்டேன். வேடசந்தூர் தொகுதியில் அடங்கியுள்ள வேடசந்தூர், குஜிலியம்பாறை மற்றும் வடமதுரை ஆகிய வட்டாரங்களில் விவசாயிகளுக்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதி, திண்டுக்கல் மற்றும் வேடசந்தூர் நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றன. வேடசந்தூர் வட்டாரத்திற்கு 50 நில நீர் அலகுகளும் வட மதுரை வட்டாரத்திற்கு 50 நில நீர் அலகுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த நில நீர் அலகுகளைப் பயன்படுத்தி, வட்டார புதிய சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள், திட்ட அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நபார்டின் ஒப்புதல் பெறவேண்டும். அந்த ஒப்புதல் பெறப்பட்ட பின்னால் இது செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்தத் திட்டங்களின்கீழ் விவசாயிகளின் கடன் கோரிக்கைகளுக்கு ஏற்ப கிணறுகளை ஆழப்படுத்த கடன் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குகிறபொழுதுகூட இந்தப் பகுதி இல்லா மல் வேறு பகுதியில் கூட கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும் 500 அடி தூரத்திற்கு உள்ளே கிணறுகள் இருந்தால் கேட்க முடியாது என்ற ஒரு நடை முறையை இன்று பல்வேறு துறைகள் பின்பற்றி வருகின்றன. இந்த நடைமுறையை அரசாங்கம் அமுல் நடத்துவதற்குக் காரணம், நிலத்தடி நீரை இப்படி அதிகமாக எடுத்து விடக் கூடாது என்பதற்காகத்தான். ஆனால், தடையை இப்படிப் பட்ட கடன் கேட்கிறவர்களுக்கு மட்டும் போடுவதால், எந்த நோக்கத்திற்காக அரசாங்கம் இந்த விதியைப் போட்டதோ, அந்த நோக்கம், கடன் கேட்பவர்களுக்கு மட்டும்தான் பொருந்தும், கடன் கேட்காமல் வசதியாக இருப்பவர்கள் எப்படி வேண்டுமா னாலும் கிணறு வெட்டிக் கொள்ளலாம் என்கிற ஒரு சூழ்நிலை



இருக்கிறது. ஒன்றில் 500 அடி என்பதை கடன் பெறுகின்றவர் களுக்கு மாற்ற வேண்டும். இல்லையென்றால் உண்மையிலேயே அரசாங்கம் நல்ல நோக்கத்துடன் அந்த நிலத்தடி நீரை எக்ஸ்பிளாய்ட் செய்வதைத் தடுக்க வேண்டுமென்றால், தனிப்பட்டவர்கள் கூட 500 அடிக்குள்ளே வெட்டக் கூடாது என்று சொன்னால் பரவாயில்லை. எனவே அதைப் பரிசிலனை செய்து, கடன் கேட்பவர்களுக்கு மட்டும் 500 அடி இடைவெளி இருக்க வேண்டுமென்று சொல்வதை மாற்றி, அந்த இடைவெளியைக் குறைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்படி இவ்வளவு அடி தூரம் இருக்க வேண்டுமென்ற கணக்கின் அடிப்படையில், புவியியலார், மற்றவர்கள் எல்லாம் ஆராய்ந்து அறிந்து, அதற்காக இருக்கின்ற நிலைமை என்கின்ற அளவில் ஒரு அளவு வைத்திருக்கிறார்கள். பணம் கொடுக்கின்ற பொறுப்பில் நாம் இருப்பதன் காரணமாக, பணம் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று இருப்பதன் காரணமாக இந்த வகையிலே எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. தனியார் செலவழிக்கும்போது அதிலே அவர்களுக்கு நட்டம் ஏற்பட்டாலும் அதிலே பணம் வராமல் போனாலும், எப்படிப் போனாலும் அதைத் தாங்கிக் கொள்ள வேண்டியவர்கள் அவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், நாம் கொடுக்கிற பணம் சரியாகப் போய்ச் சேர வேண்டுமென்பதில் அக்கறை இருப்பதன் காரணமாகவும், பணம் கொடுக்கிற ரிசர்வ் வங்கி இதிலே ஒரு அளவு முறையை வற்புறுத்துவதன் காரணமாக வும், இதையெல்லாம் கடைபிடிக்க வேண்டியிருக்கிறது. நடை முறையிலே இதிலே ஏதாவது தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு எடுத்துச் சொல்லி, அவர்கள் அதற்கான சிலபல வழிமுறைகளை, திருத்தங்களைக் கொண்டு வருவார்களானால், அரசு அதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கும். ஆனால் வேடசந்தூர் தொகுதியில் அடங்கிய பகுதியில் 1983-84-ல் அரசு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 55 கிணறுகளை ஆழப் படுத்திட ரூ. 2.48 இலட்சம் விவசாயிகளுக்கு அப்பொழுதே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று, 1984-85 ஆம் ஆண்டில் பருவ நிதி உதவித் திட்டத்தின்கீழ் 25 விவசாயிகளுக்கு

கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 1.30 இலட்சம் அளவில் கடன் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு 16 விவசாயிகளுக்கு 2 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. 1986-87 ஆம் ஆண்டில் 31—10—1986 வரை 5 விவசாயிகளுக்கு 38 ஆயிரம் ரூபாய் அளவுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில் விவசாயிகளுக்கு வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த கடன்கள் வேடசந்தூர் பகுதியில் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் விவசாயிகள் திண்டுக்கல் மற்றும் வேடசந்தூர் நிலவள வங்கி களை அணுகினால் பெருந்த நிதியுதவி திட்டத்தின்கீழ் கடன் உதவி பெற இயலும். நான் முதலிலேயே எடுத்துச் சொன்னபடி நபார்ட் திட்டத்தை எடுத்துக் கொள்கிற சூழ்நிலை ஏற்படுமா னால் அதற்குப் பிறகும் கடன் வழங்குகிற சூழ்நிலைகள் மாண்பு மிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று ஏற்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியிலே குஜிலியம்பாறை, வடமதுரை போன்ற பகுதிகள் எல்லாம் இன்றைக்கு வறட்சியாக இருக்கின் றன. அதேபோன்று தொடர்ந்து பருவ மழை பொய்த்த காரணத் தினாலே தமிழகத்திலே பல இடங்களிலே வறட்சி அதிகமாகி யிருக்கிற காரணத்தினாலே விவசாயப் பெருமக்களுக்கு தங்க ளுடைய விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்கீடு இந்த வறட்சியைக் கருத்தில் கொண்டு ஒதுக்கப்பட் டிருக்கிறதா? ஆமெனில் அதைப்பற்றிய விவரங்கள் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்கள் இல்லை. எந்த அளவுக்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன, எந்த அளவுக்கு அந்தத் திட்டங்களுக்கு நிதியொதுக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்குச் செலவிடப்பட்டிருக்கிறது என்ற விவரக் குறிப்பு கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அறிந்து சொல்லலாம்.

**திரு. வே. இரா. ஜெயராமன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நிலத்தடி நீர் அளவு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எந்த ஆண்டு எடுக்கப்பட்டது? அந்த ஆய்வின் அடிப்படையில் எந்த எந்த மாவட்டங்களில் அதிக நிலத்தடி நீர் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. அ. மலர்மன்னன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கு ஏற்ப நிலத்தடி நீரை 68 சதவீதம் நாம் பயன்படுத்திவிட்டதாகவும், இன்னும் 32 சதவீதம் தான் இருப்பதாகவும் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்களே, இந்த நிலையில் நாம் மேலும் நிலத்தடி நீரைப் பெறுவதன் காரணமாக ஏதாவது ஆபத்துக்கள், விளைவுகள் ஏற்படும் என்ற செயற்குறிப்பு அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அது குறித்து அரசு என்ன அறிவிப்பைச் செய்திருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி நிலத்தடி நீர் விவரங்கள் பற்றியதாக உள்ளதால் அது பற்றிய முழு விவரங்கள் தான் என்னிடத்தில் இருக்கும். இது வேடசந்தூர், கிணறுகள் ஆழப்படுத்துதல், கடன்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அதோடு முடிந்து விட்டதன் காரணமாக வேடசந்தூரோடு நின்று விட்டது. அந்த அளவுக்குத்தான் என்னிடத்திலே குறிப்பு இருக்கும். அது திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் கேள்விகள் கேட்கிற அளவிற்கு அமைந்து இருக்கிறதே தவிர, மற்றவர்கள் கேள்விகள் கேட்கிற சூழ்நிலை இல்லை. தனிக் கேள்வி என்று தான் சொல்ல வேண்டும். ஆகவே அடுத்த கேள்விக்குப் போவது நல்லது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த 500 அடி வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதை நிலத்தடி நீர் இருக்குமா இல்லையா என்பதை வைத்து ஒரு உத்தேசமாகத்தான் கணக்கிட்டிருக்கிறார்கள். நாம் பார்க் கிறோம். குடிநீர் வாரியத்தில் நாம் மெகர் வைத்துப் பார்த்தும் கூட தண்ணீர் இல்லாமல் போய்விடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் விவசாயிகள் பார்த்து, போடுகிற 500 அடிக்குள்ளேயே மிகப் பெரிய அளவிலே தண்ணீர் இருக்கிற வாய்ப்பு இருக்கிறது. எனவே இவைகளையெல்லாம் அருள்கூர்ந்து நம்முடைய

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் நிறுவனங்களுக்கு எழுதி—கடன் வாங்கியவர்கள் தாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டால் போதும், அதற்கு நில அடமானம் வாங்குகிறோம், வசூலாகவில்லை என்ற நிலை ஏற்படப் போவதில்லை—எனவே மாநில அரசு மத்திய அரசின் நிறுவனங்களுக்கு எழுதி இந்த 500 அடிக்குள் கிணறுகள் இருந்தால் அந்தக் கடன் கிடையாது என்ற முறையை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் கூறியதைப் போன்று அதைப்பற்றிய தன்மைகளை நாம் கேட்டறியலாம். அதற்கான வல்லுநர்களிடம் சொல்லி 500 அடி என்பதை தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இலட்சக்கணக்கான விவசாயிகள் இருப்பதனாலும் நிலங்கள் துண்டு துண்டாக அமைந்து இருப்பதனாலும், ஆங்காங்கே நீர்ப்பாசன வசதியை அவர்களே பெறவேண்டிய இக்கட்டான சூழ்நிலை விவசாயிகளுக்கு இருப்பதனாலும் அதிலே இருக்கக்கூடிய கட்டுப்பாடுகளை ஓரளவுக்குத் தளர்த்தி விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்த இயலுமா என்பதை அவர்களுக்கு எழுதி, வல்லுநர்களும் இசைவை அளிப்பார்களானால் அதற்கு ஏற்ப திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும்.

**சேலம் மாவட்டம், ஓமலூரில் கூட்டுறவு விற்பனை சங்கம்.**

337—(*வினா எண் 10077) **திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



(முற்பகல் 10-10)

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிடத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைப்பதற்கு அரசு என்ன என்ன வரைமுறைகளை வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனைச் சங்கம் விவசாயிகளுடைய விளைபொருள் சரக்குகள் வந்து சேர்வதற்கும் விற்பனைக்கும் ஏற்ற அளவாக அமைய வேண்டும். சேலம் மாவட்டத்தில், சேலம், திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம், ஆத்தூர் ஆகிய இடங்களில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கீழே சேலம், ஏற்காடு, ஓமலூர் மற்றும் மேட்டூர் வட்டங்கள் உள்ளடங்கிய வகையில், அந்தச் சேலம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் சிறம்பட பணியாற்றி வருகிறது. ஆகவே, ஓமலூர் வட்டத்தைச் சேர்ந்தவர்கள், கிட்டத்தட்ட சேலத்திலிருந்து 10, 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருப்பதன் காரணமாக, சேலத்திலே அமைந்திருக்கிற இந்த விற்பனைச் சங்கம் எல்லா வகையிலும் சிறந்த வகையிலே அமைந்திருப்பதன் காரணமாகவும், அங்கே இந்த விற்பனைச் சங்கம் பல்வேறு வகைகளிலே, சிறந்த வகைகளிலே, பணியாற்றி வருவதன் காரணமாகவும் விவசாயிகள் அதை விரும்புவதன் காரணமாகவும் சேலத்தில் இருப்பதே சிறந்தது என்றும் ஓமலூருக்கு என்று தனியாக அமைப்பது சரிபட்டு வராது என்றும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுதே அங்கே உறுப்பினர்களில் பெரும் பகுதி அதாவது 97 சதவீதத்தினர், அந்தப் பகுதியிலே வாழ்பவர்கள், சேலத்தைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள்.

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதியில் இருக்கக்கூடிய காடையாம்பட்டி ஒன்றியம் மற்றும் பிற பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களின் விவசாய விளைபொருள்களை விற்பதற்காக சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேலத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அதோடு தனியார்களிடம் விவசாயிகள் குறைந்த விலைக்கு விளைபொருள்களை விற்க வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. நீண்ட காலமாக, ஓமலூர் தாலுகாவின் தலைமையிடமாக இருக்கக்கூடிய ஓமலூரிலேயே ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க வேண்டுமென்று விவசாயப் பெருங்

குடிமக்கள் கோரி வருகின்றார்கள். அவர்களுடைய
கோரிக்கையை ஏற்று, விவசாயிகளுடைய விளைபொருளுக்கு
உரிய விலை கிடைக்கக்கூடிய வகையில் இந்த ஆண்டாவது
ஓமலூரில் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை அமைப்பதற்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
அவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் வட்டத்தைப் பொறுத்த
வரையில் 39,046 ஹெக்டேர் பரப்பில் விவசாய விளைபொருட்
கள் பயிரிடப்படுகின்றன. இவற்றில் பெருவாரியாகப் பயிராகும்
கடலை மற்றும் பருத்தி இவற்றின் மதிப்பு ரூ. 668.34 இலட்ச
மாகும். சேலம் நகரில், சேலம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்
தலைமையகம் அமைந்துள்ளது. அதில், தினசரி சரக்குகள்
விற்க நிரந்தரத் திடல் வசதி உள்ளது. சரக்குகளை பாது
காத்து வைக்க நவீன கிடங்கு வசதிகள் விரிவாக ஏற்படுத்தப்
பட்டுள்ளன. உலர் வசதிகளும், விவசாயிகள் சரக்கு போக்கு
வரத்துக்கு உதவ வாகன வசதிகள் உள்ளன. விளை பொருட்
களைப் பதனப்படுத்தி விற்க, பதப்படுத்தப்படும் ஆலைகள்
உள்ளன. மேலும், சேலத்தின் மையப் பகுதியில், சேலம்
கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு அருகிலேயே லி பஜார்
என்ற தனியார் வர்த்தக அமைப்பு உள்ளது. ஓமலூர் பகுதியில்
உள்ள விவசாயிகள், ஓமலூரில் இருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில்
உள்ள மேலே குறிப்பிடப்பட்ட, லி பஜார் வர்த்தக அமைப்பு
மற்றும் சேலம் கூட்டுறவு விற்பனைச் சங்கம், மூலமாகவே அவர்
களின் விவசாய விளை பொருட்களை எவ்வித சிரமமும் இன்றி
விற்பனை செய்து வருகிறார்கள். 1985 ஆம் ஆண்டு பருவ
காலத்தில், ஓமலூர் மற்றும் அதன் அருகில் உள்ள
காடையாம்பட்டி, தீவட்டிப்பட்டி மற்றும் சாக்கப்பிள்ளையூர்
ஆகிய நான்கு இடங்களில், சேலம். கூட்டுறவு விற்பனைச்
சங்கம், பல பருவகால கிளைகள் திறந்து, ஓமலூர்
வட்டார விவசாயிகளுக்கு விற்பனைத் திடல் வசதிகளைச்
செய்து கொடுத்தது. ஆனால், அங்குள்ள விவசாயிகள்
அவர்களது விளைபொருட்களை அவ்விற்பனைக் கிடங்கில்
விற்காமல். சேலம் கொண்டு வந்து விற்க முன் வந்தனர். அதே
போல், இவ்வாண்டும் ஓமலூர், காடையாம்பட்டி, கே. காளிப்பட்டி,
மேட்டுப்பட்டை, எலவம்பட்டி ஆகிய இடங்களில் விற்பனை



திடல் திறந்தும் அவை செயல்படாமல் போய்விட்டன. ஓமலூர்
வட்டத்தில் பெருவாரியாக பயிரிடப்படும் கடலை மற்றும் பருத்தி
விற்பனை உயர்வான ரூ. 40.10 லட்சத்தில், சேலம் கூட்டுறவு
விற்பனைச் சங்கத்தில், ஓமலூர் வட்டத்தில் திறக்கப்பட்ட பல
கிளைகளின் வாயிலாக 1982-83, 1983-84, 1984-85 மற்றும் 1985-86
ஆகிய ஆண்டுகளில் முறையே 42.54 சதவீதம், 45.46 சதவீதம்,
64.71 சதவீதம், 50.04 சதவீதம் அளவிற்குக் கொள்முதல் செய்யப்
பட்டுள்ளது. குறிப்பாக, ஓமலூர், சேலம் அருகில் உள்ள
தால், அங்கு துவக்கப்பட்ட கிளையில் 1985-86-ல் ரூ. 3,000 மதிப்
புள்ள வேளாண் விளைபொருட்கள் மட்டுமே கொள்முதல் செய்
யப்பட்டன. ஆகவேதான் அப்படிப்பட்ட காரணங்களால்
ஓமலூர் சரிப்பட்டு வரவில்லை. பக்கத்திலே உள்ள சேலம்தான்
விவசாயிகளால் வரவேற்கப்பட்டு வருகிறது. ஓமலூரில்
விற்பனைக் கூடம் திறந்து அது பயன்பட்டு வரவில்லை
யென்பதால்தான், அது சரிப்பட்டு வரவில்லையென்றும்
கூறப்பட்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் நில உரிமைப் பதிவேடு புத்தகங்கள்
வழங்குதல்.

338—(* வினா எண் 11435) திரு. கே. உச்சி: மாண்புமிகு நிதி
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—
நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டத்தின் கீழ், நீலகிரி
மாவட்டத்தில் நில உரிமைப் பதிவேடு புத்தகங்கள் பட்டாதாரர்
களுக்கு வழங்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள எல்லா
மாவட்டங்களிலும் சட்ட ரீதியான நில உரிமைப் பதிவேடு புத்த
கங்கள் படிப்படியாக வழங்க அரசு உத்தேசித்துள்ளது. நீலகிரி
மாவட்டத்தில் மறு நில அளவைப் பணி முழுமையாக முடிந்த
பிறகு, நில உரிமைப் பதிவேடு புத்தகங்கள் பட்டாதாரர்களுக்கு
வழங்குவது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. கல்லன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நீலகிரியிலுள்ள பெரும்பாலான நிலங்களில் ஜாயிண்ட்
ஹோல்டிங்ஸ் என்று சொல்லி ஒவ்வொரு நிலத்திலும் 50, 60
பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். அதை எளிதுபடுத்த, துரிதப்
படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அதற்கான அடிப்படைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறிய விவசாயிகள் யார் யாரென்று நில உரிமைப் பதிவேட்டு புத்தகத்தின் மூலம் அடையாளம் கண்டு கொள்ள இயலுமானதால், அவர்களுக்குரிய சலுகைகளை எளிதாகப் பெற முடியும். இது சட்ட ரீதியானதால், நில உரிமையாளர்கள் இதை வழக்கு மன்றத்தில் சட்டபூர்வமான சாட்சியமாகக் காட்ட இயலும். இது தவிர தனி நிறுவனங்களிலிருந்து தேவையான கடன் பெறுவதும், மின் வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறுவதும் எளிதாகும். இந்த நில உடைமைப் பதிவேட்டுடன் நிலங்களுக்கான வரைபடம் இருப்பதால், நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களை எளிதில் கண்டு கொள்ள முடியும். விற்பனை போன்ற நிலங்களில் பிறர் உதவியை நாடாமல் இதன் துணை கொண்டு தாங்களே தெரிந்து கொள்ளவும் முடியும். பரீட்சார்த்தமாக இப்பொழுது இந்தத் திட்டம் திருத்தணி வட்டத்திலேயும், குளித்தலை வட்டத்திலேயும் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நடைமுறைப்படுத்துவதிலே ஏற்படுகின்ற சிக்கல்களை ஆராய்ந்து பிற வட்டங்களிலேயும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அநேகமாக இந்த நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், மறு நில அளவைப் பணி முடிக்கப்பட்டு குன்னூர், உதகமண்டலம் வட்டங்களில் பின் தொடர் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி தோராயமாக 30—9—1987-ல் முடிக்கப்படலாம். பிறகு மற்ற வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும். இப்பணி யாவும் முழுமையாக முடிந்த பிறகு, இம்மாவட்டத்தில் நில உரிமைப் பதிவேடு புத்தகங்கள் பட்டாதாரர்களுக்கு வழங்க முடிவு எடுக்கப்படும். அப்படி வழங்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற பொழுது, நான் மேலே குறிப்பிட்ட முழு விவரங்களும் அடங்குகின்றபொழுது பல இடர்ப்பாடுகள் விவசாயிகளுக்கு, இந்த நில உரிமைதாரர்களுக்கு நீங்குவதற்கும், வசதி ஏற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம் என்பது ஒரு சிறப்பான திட்டம். அரசே வலியச் சென்று பட்டா புத்தகங்களை விவசாயிகளுக்குக் கொடுப்பது பாராட்டுதற்குரியது. ஆனாலும், நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டத்தின் கீழ் பணிபுரிகின்ற வரைவாளர்கள் மற்றும் நில அளவர்கள்,



பதிவேடு வழங்கல் திட்டம் முடிவு பெறுகின்றபொழுது ஆயிரக் கணக்கான பேர்கள் வேலையிழக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமே. அப்படிப்பட்டவர்களுக்கு மாற்றுப் பணியை வழங்க அல்லது அவர்களுக்குப் பாதுகாப்பு தர அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அவர்களைச் சேர்க்கும்பொழுதே, தற்காலிகப் பணி என்று சொல்லித்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது தற்காலிகப் பணி, நிரந்தரப் பணியாக இருந்தால்தான் சேர்வோம், தற்காலிகப் பணி என்றால் சேர மாட்டோம் என்று சொல்லியிருப்பார்களேயானால் இந்த இடர்ப்பாடுகள் வந்திருக்காது. அப்படிப்பட்ட ஒரு பணியில் சேர்க்கும்பொழுது கடைசிவரையில் நிரந்தரமாக்க முடியாது. ஆகவே, கூடுமான வரையில் அவர்களுக்கு ஏதாவது செய்யலாமே தவிர ஒரு அரசு செய்கின்ற தற்காலிகப் பணிகள் அத்தனையையும்—நிலத்தை அளந்து விடலாம் பதிவேடும் கொடுத்து முடிந்ததற்குப் பிறகும் மறுபடியும் நிலத்தை அளந்து கொண்டே இருக்கும்படியாகச் சொல்லுவோமேயானால் அரசு எங்கே போவது? பணத்திற்கு எங்கே போவது? இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். அதற்குப் பிறகு வாய்ப்பு ஏற்படுமேயானால் புதிதாக வருபவர்களுக்கு இடம் தராமல் இவர்களுக்கே வேலை வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டி வரும். இதையெல்லாம் மனிதாபிமான அடிப்படையில் செய்யலாம். ஆனால் திட்டவட்டமாக, தெளிவாக, உறுதிமொழி கூறுவதற்கில்லை. அவர்களை வேலையிலே சேர்க்கின்றபொழுதே, தற்காலிக வேலைதான், சிலபல காலத்திற்கு நடைபெறும், அதுவரையிலும் தான் இது நடைபெறும் என்று சொல்லித்தான் இந்த வேலையிலே நாம் அமர்த்தியிருக்கிறோம்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம் ஒரு நல்ல திட்டம் தான். ஆனால், செயல்முறையிலே வருகின்றபொழுது அது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு செயல்முறையாக இருந்திருக்கிறது. அது என்னவென்றால், விவசாயிகள் வைத்திருக்கக்கூடிய நிலங்களுக்கு வரைபடங்களை வரைந்து கொடுக்க வேண்டும். ஆனால் நிலத்திற்கே செல்லாமல், ஏற்கெனவே பழைய முறையில் உள்ள சில வரைபடங்களையே வரைந்து அப்படியே கொடுத்து

விடுகிறார்கள். அப்படிச் செய்கின்றபொழுது, சில இடங்களில் கூட்டுப்பட்டாவாக இருந்து கொண்டிருக்கிறது. சொந்த நிலத்தில் இருப்பது போன்ற வரைபடங்களை வரையாமல், அவர்கள் பழைய வரைபடங்களையே பார்த்து வரைந்து கொடுத்து விடுகிறார்கள். அப்படி வரையும்பொழுது சிக்கல் ஏற்படுகிறது. இது போன்ற காரியங்களை நீக்குவதற்கு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தனியாக அழைத்து, அது நடைமுறைக்கு ஒத்துவரும் அளவிற்குச் செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னிடம் அந்த விவரம் இருக்கிறது. நான் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் பேசும்போது என்னுடைய நிலமே பறி போயிருக்கிறது என்ற விவரத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகள் வராமலிருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, நல்ல முறையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நில உரிமைப் பதிவேடு பட்டாதாரருக்கு வழங்கப்படும்போது அன்றைய நிலையில் அவர்களுடைய நிலம் எப்படி இருக்கிறதோ அதே அளவுக்கு, அதே மாதிரி பட்டா அமைய வேண்டும். வரைபடங்கள் எல்லாம் கூட அப்படி இருக்க வேண்டும். அந்த முறையில் அமைந்த பதிவேடு வழங்கப்பட்ட பிறகு அவர்கள் செய்கின்ற எந்த மாற்றமும், கடன் வாங்கினாலும், விற்பனை செய்தாலும் அவற்றை எல்லாம் அந்தப் பட்டாப் புத்தகத்தில் குறிப்பிடவேண்டும். அந்த அடிப்படையில் வரைபடமும் காட்டப்பட வேண்டும். அப்போதுதான் அதனுடைய வரலாறு எல்லாம் தெரியும். ஏற்கெனவே யார் யாரிடம் அந்த நிலம் இருந்தது, எப்படி எப்படி இருந்தது, எவ்வளவு விற்பனை செய்தார், எவ்வளவு கடன் வாங்கினார் என்ற முழு விவரங்களும், அன்றைய தேதி வரையில் உள்ள வரலாறும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஏடாக அல்லாமல் ஒரு புத்தகமாகத் தந்திருக்கிறோம். திட்டமிட்டபடி இல்லை என்றால், ஏதாவது



குறைபாடு இருந்தால், கவனத்திற்கு கொண்டு வந்தால், உரிய அதிகாரிக்கு அனுப்பி, குறைபாட்டினை நீக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆர். தியாகராசன்:** சபாநாயகர் அவர்களே, இந்த நில அளவையைப் பொறுத்தவரையில் கிராமங்களில் போய் விசாரிக்காமல், அளவையாளர்கள் ஒரு சில இடங்களில் பார்த்துவிட்டு, மற்ற நிலங்களை அவர்கள் நேரடியாகச் சென்று பார்க்காமல், அவர்களை யார், யார் அணுகுகிறார்களோ, என்ன சொல்கிறார்களோ அந்த முறையிலே வரைபடம் தயார் செய்து, பட்டா புத்தகம் கொடுத்து விடுகிறார்கள். விருத்தாசலத்தில் இப்படிப்பட்ட கேஸ்கள் 25 இருக்கின்றன. அவர்கள் அத்தனை பேர்களும் ஏழை எளிய மக்கள். அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். அவர்களுக்கு நியாயம் வழங்க அதிகாரிகளை மீண்டும் அந்த ஊர்களுக்கு அனுப்பி, மறு அளவை செய்து சரியான பட்டா புத்தகம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நிலங்களை எல்லாம் புதிதாக அளந்து, நில உரிமைப் பதிவேடு தரவேண்டுமென்ற நோக்கத்திலேதான் அதிகாரிகளை நியமித்து, சம்பளம் தந்து, படி தந்து, மற்ற வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். நாம் தெரிவித்த முறைப்படி அவர்கள் அந்தப் பணியைச் செய்யாமல், அவர்களிடம் வந்து சொன்னவர்கள் கொடுத்த விவரங்களை வைத்து பணியாற்றியிருந்தால் தவறு; அது குற்றமுமாகும். இப்படிப்பட்ட குறைபாடு வந்தால் அதன்மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். அப்பீல் என்ற முறையில் அவர்கள் மேல்முறையீடு செய்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், மறுபடியும் அந்த ஊர்களுக்குச் சென்று விசாரித்து, உண்மையான அளவுப்படி விவரங்கள்படி பட்டாப் புத்தகம் வழங்க வருவாய்த் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

**சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி.**

**123—(* வினா எண் 5420) திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1987 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவரவர்களே, இப்போது இருக்கும் பல் மருத்துவக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்? எத்தனை பேர் ஆண்டுதோறும் விண்ணப்பம் செய்கிறார்கள்? என்ன தகுதி அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, சென்னையில் இருக்கிற பல் மருத்துவக் கல்லூரியில் இருக்கிற இடங்கள் 45. ஆண்டுதோறும் 45 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை. அந்த 45 பேர்களில் மத்திய அரசுக்கு 4 இடங்கள்; இராணுவத்தில் பணியாற்றும்போது இறந்துபோன தமிழ் வம்சாவழியினருக்கு 1 இடம்; வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் வம்சாவழியினருக்கு 1 இடம்; பி.எஸ்சி. பட்டதாரிகளுக்கு 2 இடங்கள்; மற்றவர்களுக்கு 37 இடங்கள்; ஆக மொத்தம் 45 இடங்கள் இருக்கின்றன.

**டாக்டர் அ. முஹம்மது சலீம்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பல் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன? தென் மாவட்டங்களின் கோரிக்கையை மனதிற்கொண்டு மதுரையில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, சென்னையில் இருப்பதுபோல சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைய இருக்கிறது. மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் குறிப்பு தற்சமயம் அரசிடம் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு அதிலே வழங்கப்படும் என்ற குறிப்பு இல்லை. எனவே அவர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்தக் குறிப்பு இல்லை.



1987 ஏப்ரல் 8]

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது சிதம்பரத்தில் பல் மருத்துவக் கல்லூரி இருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய வகையில் அங்கு எத்தனை இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு அனுமதி அளித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கின்ற மற்ற விவரங்கள் குறித்து தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரமும் சேகரித்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை

124—(*வினா எண் 9157) **திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக இருந்தும் கூட இன்றையதினம் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத்தான் அது இருக்கிறது. அதனை 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக உயர்த்துவதற்குரிய திட்டம் அரசினிடத்தில் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி இருந்தால் அந்த வேலை எப்போது தொடங்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்றுதான் படித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது அந்த மருத்துவமனை ஏற்கெனவே 20 படுக்கைகள் கொண்டதாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அங்கே வெளிப்புற நோயாளிகள் 400 பேர்தான் வருகிறார்கள். உள்ளே தங்கி இருப்பவர்கள் 37 பேர் தான் இருக்கிறார்கள். எனவே நோயாளிகள் அதிகமாக ஆனால் தான் மருத்துவமனை பெரிதாக ஆக்கப்படும். நோயாளிகளைப் பொறுத்துத்தான் அது இருக்கிறது. அதற்காக நோய் வர வேண்டுமென்று நான் விரும்பவில்லை.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பநிலைதன்டம் மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக இருப்பதால் அங்கே எக்ஸ்-ரே பிரிவு, ஆபரேஷன் தியேட்டர், E.C.G. பிரிவு போன்றவற்றை அமைக்கவும் ஆம்புலன்ஸ் வேன் புதிதாக வாங்கிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து தாலுகா மருத்துவமனைகளிலும் எக்ஸ்-ரே பிரிவு வைக்கவேண்டும் என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அப்போது நிர்வாகம் இதைப்பற்றி அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுதல்.**

**125—(*வினா எண் 11911) திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை.**

**126—(*வினா எண் 11939) திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை நிறுவ அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை நிறுவும் திட்டம் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. மூலிகைப் பண்ணை அமைப்பதற்காக சேலம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து நில உரிமை மாற்றும் செயற்குறிப்பு கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மூலிகைப் பண்ணையில் என்னென்ன நோய்களைக் குணப்படுத்தக்கூடிய மூலிகைகளை வளர்க்க இருக்கிறார்கள்? மேலும் புற்றுநோய் போன்ற நோய்களைக்கூட போக்குவதற்கு சித்த வைத்தியத்தில் மூலிகைகள் இருப்பதாகச் சொல்கிறார்களே, அப்படிப்பட்ட மூலிகைகளை அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலமே இன்னும் அந்தத் துறைக்கு வந்து சேரவில்லை. நிலம் வந்ததற்குப் பிறகுதான் பண்ணை அமைக்கப்படும். மேலும் சித்த வைத்தியத்தில் புற்றுநோயைப் போக்குகிற மூலிகை இருப்பது என்பது உண்மைதான். அதை வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைப் பண்ணை ஆரம்பிப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பழனி, திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு வந்து பார்வையிட்டார்களே, அங்கெல்லாம் இந்த மூலிகைப் பண்ணைகளை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பழனியில் ஆரம்பிக்கலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புற்று நோயைப் போக்குவதற்கு ஒரு பச்சிலை கண்டு பிடித்து, ஒரு தனியார் கம்பெனி அதைத் தயாரித்துக் கொண்டிருப்பதாகச் செய்தி அறிகிறோம். அப்படி ஏதேனும் நடந்து வருவது பற்றிய செய்தியை அரசு அறியுமா? ஆமென்றால் இதுபோன்ற விவரங்களைச் சொல்ல அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் இப்படி நிறைய மருந்துகளை தனியார் வைத்திருக்கிறார்கள். அந்தத் தனியார்கள் அதனை அரசுக்குக் கொடுத்தால்—வேண்டுமென்றால் அதுபற்றி ஆய்ந்து அவர்களுக்குப் பணம் கொடுத்து பெற்றுக் கொள்வதற்குக்கூட அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படி ஏதாவது தகவல் இருந்தால் தயவுசெய்து அதனை அரசுக்குக் கொடுத்து உதவுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கொல்லிமலையில் நிலம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டு அங்கே பொதுப்பணித் துறையின் மூலம் ஒரு சிறிய நீர்த்தேக்கம் கட்டி, ஒரு சிறிய குடோன் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நிலம் கொடுக்கப்பட்டு அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே அந்தப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலத்தில் இருக்கிற காடுகளை எல்லாம் எப்படி அழிப்பது, எப்படி அப்புறப்படுத்துவது என்பது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். அது முடிந்ததற்குப் பிறகுதான் மூலிகைப் பண்ணையை அமைக்க முடியும்.





**திரு. எல்வ. இராசமாணிக்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகைப் பண்ணை மூலமாக புதியதாக பரவி வரும் எய்ட்ஸ் நோயை தீர்ப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எய்ட்ஸ் நோயைப் பற்றி வீணான பீதி அடையத் தேவையில்லை. தமிழ்நாட்டில் சொல்லப்படும் அளவுக்கு அந்நோய் எங்கும் இல்லை.

**டாக்டர் ந. மாசிலாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு நிறுவனம் மூலிகையில் தயாரிக்கின்ற டாம்கால் என்ற ஆயில் முடி கொட்டாமல் இருப்பதற்கும் நரை படாமல் இருப்பதற்கும் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்கு போதுமான விளம்பரம் இல்லாத தால் தான் விற்காமல் இருக்கிறது. எனவே அந்த டாம்கால் ஆயிலுக்கு போதிய விளம்பரம் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, டாம்கால் ஆயிலுக்கு விளம்பரம் கொடுத்ததற்காக அரசு சார்பிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விற்பனை ஆகவில்லை என்று சொல்லப்படுவது தவறு. எவ்வளவு உற்பத்தி ஆகிறதோ அவ்வளவும் விற்று போகிறது. கிடைக்கவில்லை என்ற புகார்தான் இருக்கிறது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த வைத்திய மூலிகைப் பண்ணையை ஆரம்பிப்பதற்கு கொல்லிமலையை விட தீர்த்த மலைதான் சிறந்தது என்று இதிகாசங்களும், புராணங்களும், சரித்திரங்களும் வரலாறுகளும் கூறுகின்றதோடு, சித்தர்களும் அங்கு வாழ்ந்ததாகவும் தீர்த்த மலையில் சிறந்த மூலிகைகள் இருப்பதாகவும் மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றனர். எனவே கொல்லிமலையைக் காட்டிலும் அதிக வசதிகளும் சாத்தியக் கூறுகளும் இருப்பதால் தீர்த்த மலையில், மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மூலிகை கிடைக்கிறது என்பது உண்மைதான். அந்த மூலிகை பற்றிய இரகசியத்தை

சில பேர்கள் தாம் தெரிந்து வைத்திருக்கின்றவர். அதைச் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். நாட்டிற்கு, எதிர் கால சமுதாயத்திற்கு அது பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்த இரகசியங்களை தந்து உதவ முன் வந்தால் அரசாங்கம் சன்மானம் கூட தந்து பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. எந்த இடத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க வேண்டும் என்பது பற்றி ஆலோசிக்கும் போது மற்ற வசதிகள் எல்லாம் கூட பார்க்க வேண்டியிருக்கிறது. மூலிகை கிடைக்கும் இடத்தில் எல்லாம் மூலிகைப் பண்ணையை ஆரம்பித்து விட முடியாது. அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தமலை என்றாலே பல நோய்களைத் தீர்த்த மலை என்றுதான் வந்திருக்க வேண்டும். அதற்கு முன் உரிமை கொடுத்து மூலிகைப் பண்ணை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தீர்த்த மலை வியாதிகளைத் தீர்த்த மலையாகவே இருக்கட்டும். என்ன வியாதியை தீர்த்தது, என்ன மூலிகை என்று தெரியாமல் எப்படி உரிமை கொடுப்பது. அவற்றை எல்லாம் அரசு ஆராயும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த வைத்தியத் துறை அதிகாரிகள் சித்தகிரி மலை வந்து, அங்கே ஆய்வு செய்தார்கள். ஆகவே இந்த மூலிகைப் பண்ணையை அங்கே அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். சில இடங்களில் மூலிகைகள் வளர்கின்றன. சில இடங்களில் இருக்கின்றன. எந்தெந்த இடங்களில் என்னென்ன மூலிகைகள் என்று தெரியவில்லை. அவற்றை எல்லாம் அரசுக்கு கிடைக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் முயற்சி செய்தால் நல்லது. அதுபற்றி விவரமாக அரசுக்குச் சொல்லட்டும். அதற்குப் பிறகு எங்கே மூலிகைப் பண்ணை ஆரம்பிப்பது என்பது பற்றி ஆராயலாம்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாம்கால் ஆயிலைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இங்கே உள்ள நமது உறுப்பினர்களுக்கு, நான்



உட்படச் சொல்கிறேன், தலை நரைத்து இருக்கிறது. சிலருக்கு வழுக்கை கூட விழுந்து இருக்கிறது. ஆகவே அது பரீட்சார்த்தமாக எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** டாம்கால் கிடைக்கிறது. வேண்டுமானால் மானியம் வருகிறபோது மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பாட்டில் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

**ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சித்த மருத்துவமனைகள்.**

**127—(* வினா எண் 12087) திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சித்த மருத்துவமனைகளை தொழில் நுணுக்க ரீதியில் செம்மைப்படுத்த மாவட்ட மருத்துவ அலுவலரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கோ. இரகுபதி:** தலைவர் அவர்களே, சித்த மருத்துவ மனைகள் பஞ்சாயத்து யூனியன்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளில் மருத்துவம் மக்களுக்குப் பயன்படுகிற அளவிற்கு கொடுக்கப்படுவதில்லை. எனவே மாவட்ட அளவில் மாவட்ட மருத்துவ அலுவலர்களின் கீழ் இந்த மருத்துவமனைகளைக் கொண்டு வர வேண்டும். சித்த மருத்துவமனைகள் சரியான முறையில் இல்லாத காரணத்தால், பிரைமரி ஹெல்த் சென்டர் போன்றவைகளை அரசு ஏற்று நடத்துகிற சூழ்நிலையைப் போல, இவைகளையும் அரசு ஏற்று நடத்த முன்வருமா? அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சித்த மருத்துவமனைகள் ஊராட்சி மன்றங்களால், ஊராட்சிகளால் நடத்தப்படுகின்றன. அவைகளை அரசு ஏற்றுக்கொள்வதற்கு இப்போது இயலாது. அதனால் தான் இப்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் எவ்வளவு கிடைக்கிறார்களோ, அதற்கு ஏற்றவாறு அவர்களை நியமித்துக் கொண்டு

வருகிறோம். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்த மருத்துவமனைகளை விரிவுபடுத்த வேண்டுமென்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். இந்த மருத்துவர்கள் தேர்வு முடிந்து வெளியே வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யலாம்..

**திரு. கோ. இரகுபதி:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களின் நிதியாதாரத்தைப் பார்க்கும்போது, அங்கே மருந்துகளை வாங்கிக் கொடுப்பதற்குக் கூட நிதியாதாரம் இல்லாத நிலையில் டாக்டர்கள் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிற நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே சித்த வைத்தியத்தை, சிறந்த வைத்தியத்தை மக்களுக்கு பயன்படுகிற அளவிற்குச் செய்வதற்கு நிதியாதாரம் கிடைக்காத காரணத்தால்—மருந்து வாங்கிக் கொடுக்காத காரணத்தால் இயலாமல் இருக்கிறது. ஆகவே அரசே முன் நின்று அந்த மருந்துகளை வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சித்த மருந்துகள் விலை அதிகமென்று அரசு ஒப்புக்கொள்ளாது. மிகவும் மலிவான விலையில் மருந்துகள் கிடைக்கின்றன. ஊராட்சி ஒன்றியம் ஏழ்மையாக இருந்தாலும் அதைத் தாங்கக்கூடிய சக்தி அதற்கு இருக்கிறது என்று இந்த அரசு கருதுகிறது.

**டாக்டர் கே. சமாசம்:** தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது அந்த மருத்துவத்தின் மேன்மையையும், மூலிகைகளின் பல்வேறு சக்திகளையும் தெரிவித்தார்கள். பலருக்கு இது இன்னும் புரியாமல் இருக்கிறது. அந்த விவரங்கள் சிலரிடத்தில் தான் இருக்கிறது. முழுமையாக அரசுக்கு கிடைக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அப்படியானால் அரசாங்கம் Open Competition என்ற வகையில் இன்னென்ன வகையில் மூலிகைகளை ரிசர்ச் செய்து இந்த வகையில் வெற்றி பெற்றிருக்கிறோம். இதனை அரசாங்கத்திற்கு அறிவிக்க விரும்புகிறோம் என்று சொல்லக்கூடிய நிலையில் ஒரு நல்ல ஏற்பாட்டை செய்து அவர்களையெல்லாம் வரவழைத்து, அந்த விவரங்களைக் கண்டறிந்து, நாட்டிற்கு அந்த மருந்துகளை அறிமுகப்படுத்த வழிவகைகளைச் செய்ய அரசு முயற்சி எடுக்குமா, அதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



இதனுடைய முடிவு என்ன என்று கேட்டால் தாய்மொழிக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. தமிழ் அழிவதற்கான சந்தர்ப்பம் இந்தக் கொள்கையில் இருக்கிறது.

அது மட்டும் அல்லாமல் வட இந்தியாவிலிருந்து 7-வது வகுப்புக்கு ஒரு பாடப் புத்தகம் போட்டிருக்கிறார்கள். அதில் எல்லா வரலாறுகளும் போடப்பட்டு இருக்கின்றன. பாடப் பொருள்களை 25 அயிட்டங்களாகக் கொடுத்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டின், தென் நாட்டின் வரலாறு அதில் இருக்கிறதா என்றால், இல்லை. எனவே சொல்கிறேன் மத்திய அரசின் தேசிய கொள்கை என்ற பெயரில் நவோதயா பள்ளிகளின் மூலம் இந்தியைத் திணிக்கிற முயற்சி நடைபெறுகிறது. இரண்டு வர்க்கம் உருவாக்கப்படுகிறது. இது அண்ணாவினுடைய கொள்கைக்கு விரோதமானது. ஆனால் துரதிருஷ்டவசமாக தமிழ்நாட்டை ஆளுகின்ற அ.இ.அ.தி.மு.க. கட்சியின் மதுரை மாநாட்டில் அதை வரவேற்று இருக்கிறார்கள். இது சரிதானா?

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவோதயா கொள்கையை இந்த அரசு தெளிவாக எதிர்க்கிறது. தெளிவாக மைய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. நவோதயாவை தமிழகத்தில் துவக்கச் சொல்லி அவ்வப்போது மைய அரசு வற்புறுத்தியும்கூட, முடியாது என்று மறுத்துவிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்களோடு இந்த அரசு ஒன்றுபட்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, ஜோதிபாசு அவர்கள் மேற்கு வங்கத்திலே மறுத்ததைப்போல் நாங்கள் நவோதயாவைக் கொண்டுவர அனுமதிக்க மாட்டோம் என்று தமிழக அரசாங்கம் சொல்லிவிடுமானால் . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, நவோதயாவை தமிழகத்தில் எக்காலத்திலும் அனுமதிக்கமாட்டோம் என்று ஏற்கனவே சொல்லிவிட்டோம். இன்றைக்கும் சொல்கிறேன்.

[1987 ஏப்ரல் 8

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தி
யைத் திணிக்கக்கூடிய நவோதயாவை ஏற்றுக்கொள்ளமாட்
டோம் என்று சொன்னால் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.
ஆனால் ஒரேயொரு கேள்வி. ஆனால் மதுரையில் நடைபெற்ற
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில்
அதை வரவேற்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய கொள்கை
விளக்கக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? நாங்கள்
இதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்ற கருத்து இருக்கிறதா,
என்றால் இல்லை.

மத்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய தேசிய கல்விக்
கொள்கையை, ஒன்றிரண்டு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்,
முழுக்க முழுக்க இதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், இது ஒரு
முற்போக்கான கொள்கை என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே,
புதிய தேசியக் கல்விக் கொள்கையைப் பொறுத்தவரைக்கும்,
மேலும் பல தகவல்களைச் சொல்ல விரும்புகிறேன். 1983 ஆம்
ஆண்டு 'நியூ எஜுகேஷன் பாலிசியின்' முக்கியமான பல அம்சங்
களை நாம் தமிழகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்
டோம். நவோதயா பள்ளியைப் பொறுத்தவரைக்கும்,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல்,
நவோதயா பள்ளிகளில் 8-வது வகுப்பிலிருந்து திணிக்கப்படு
கின்ற இந்தி மூலமாக எல்லா மட்டத்திலும் படிப்படியாக மாடல்
ஸ்கூல்களாக, நவோதயா பள்ளியை வைத்து, எல்லாப் பள்ளி
களிலும் இந்த நிலையைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான்
மத்திய அரசினுடைய நோக்கமாக இருக்கிற காரணத்தால், ஒரு
காலக் கட்டத்தில் எல்லா பள்ளிகளிலும் இந்தியும், ஆங்கிலமும்
மட்டும்தான் இருக்கும். தாய் மொழிகூட இராது என்ற
நிலைமை! மத்திய அரசு எடுத்திருக்கிற காரணத்தால், முழுக்க
முழுக்க இதை இந்த அரசு எதிர்த்திருக்கிறது. மாண்புமிகு
முதல்வர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று
மத்திய அரசுக்குத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். அவை
யிலும் பலமுறை இதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.
இப்போது அதை வலியுறுத்திச் சொல்கிறேன்.



1987 ஏப்ரல் 8]

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய
துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய
கொள்கை விளக்கக் குறிப்பிலே, 9-வது பக்கத்திலே, 12 ஆம் பத்தி
யிலே "நவோதயா பள்ளிகளில் அந்தந்த மாநில மொழியே
பயிற்று மொழியாக இருக்க வேண்டுமெனவும் மொழிச் சிறு
பான்மையினருக்கும் பிற மாநில மாணவ மாணவியருக்கும் பயன்
படுவதற்காக தேவையானால ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவும்
இருக்கலாம் எனவும் இவ்வரசு கருதுகிறது" என்று தெரிவித்
திருக்கிறீர்கள். நவோதயா பள்ளியை நாங்கள் ஒப்புக்கொள்ள
வில்லை என்று கூறியிருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே,
நவோதயா பள்ளியினுடைய நோக்கமே வேறு. இந்தியை
வேண்டாம் என்று சொன்னபோது, அந்தப் பிரச்சினையே
இங்கே எழ வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பின
ருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய
துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது
சொல்கிற விளக்கம் இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பில் இருக்கு
மேயானால், நான் இதைப்பற்றிப் பேச வேண்டிய அவசியமே
இருக்காது. சந்தேகம் ஏற்பட்டதனால்தான் கேட்டேன்.

மதுரை மாநாட்டில் ஆதரித்துப் போட்ட தீர்மானம், ஒன்று.
இரண்டாவதாகக் கொள்கைக் குறிப்பில் "நவோதயா பள்ளி
களில் அந்தந்த மாநில மொழியே பயிற்று மொழியாக இருக்க
வேண்டுமெனவும், மொழிச் சிறுபான்மையினருக்கும் பிற மாநில
மாணவ மாணவியருக்கும் பயன்படுவதற்காக தேவையானால்
ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவும் இருக்கலாம் எனவும் இவ்வரசு
கருதுகிறது" என்று கூறியிருக்கிறீர்கள். நவோதயா பள்ளியை
முழுக்க முழுக்க . . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நவோ
தயா தீர்மானம் வந்து கொண்டிருப்பதால், நான் பேச்சை நிறுத்த
விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தாகி
விட்டது. திரும்ப அதையே பேசிக் கொண்டிருப்பது முறையல்ல.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவாகச் சொல்லியிருந்தால், குழப்பத்திற்கு இடமில்லை. அதனால்தான் இந்தப் பிரச்சினை. இப்போது கேட்டதற்குப் பிறகு நவோதயா பள்ளிகளை அனுமதிக்கப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதற்காக வாழ்த்து தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே எங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது இந்தி ஆதிக்க எதிர்ப்புத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. அதுகுறித்து என்ன நடவடிக்கை என்று கேட்டார்கள். முன்னவர் அவர்கள் விளக்கம் தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் எங்கே இந்தி திணிக்கப்படுகிறது என்ற கேள்வியை இனி யாரும் கேட்க மாட்டார்கள் என்று கருதுகிறேன், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக.

அடுத்து ஐ.டி.ஐ. கல்லூரி. அரசாங்கத் தொழில் பயிற்சி, மதுரை. அங்கே ஒரு போராட்டம் நடைபெற்று, பல மாணவர்கள் கைது செய்யப்பட்டு, வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. காரணம் என்னவென்று கேட்டால், ஒரு கேள்வித்தாள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் கேட்கப்பட்டது என்பதற்காகத்தான். தேசியக் கல்வி என்பதன் பெயரால், இந்தி மொழிக்கு இந்த அரசு மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஆதரவு கொடுத்துவிடக்கூடாது, இரட்டைப் போக்குகளின் காரணமாக என்பதற்காகத்தான் இங்கே நான் தெரிவிக்கின்றேன்.

பல்கலைக்கழகத்தைப் பற்றி இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பல்கலைக்கழகத் துணை வேந்தருடைய காலம் இரண்டு 'டர்ம்சிற்கு' மேலே போகக் கூடாது என்று சொல்கிறார்கள். 1978-லே பேசிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பதவி நீட்டிப்பு, அதாவது எக்ஸ்டன்ஷன், யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், நம்முடைய 'லா செக்ரட்டரி'க்கு 3. 4 முறை எக்ஸ்டன்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய டி. ஜி. பி. ரவீந்திரன் அவர்களுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே, எக்ஸ்டன்ஷன் கொடுக்கக்கூடாது என்பது அரசினுடைய கொள்கை அல்ல. திறமையை வைத்து அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சட்டச் செயலருக்குக் கொடுத்தது ரீ-எம்ப்ளாய்மெண்ட். டி.ஜி.பி.-க்கு கொடுக்கப்பட்டது எக்ஸ்டன்ஷன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, ரிட்டையர் ஆகப் போகின்றவர்கள், ரிட்டையராகி இருப்பவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்புத் தரப்படாமல் ரிட்டையர் ஆகின்றவர்களுடைய அறிவை, ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்கிறேன் என்றால் எல்லோருக்கும் இந்த விதியா என்று கேட்டால் இல்லை . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே, இது ஒன்றும் மறைமுகமாகச் சொல்லவேண்டியதில்லை. நேரடியாகச் சொல்கிறேன். சட்டச் செயலாளரைப் பொறுத்தவரைக்கும், it involves professional skill. மராட்டிய மாநிலத்திலே ஒரு சட்டச் செயலாளர் 74 வயதுவரை இருந்து இருக்கிறார். பல மாநிலங்களில் அப்படி இருந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தகுதி அடிப்படையில் நீட்டித்துத் தரப்பட்டிருக்கிறது. அதை அரசு தவறாகக் கருதவில்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த விதி எல்லோருக்கும் பயன்பட்டால் எப்படி என்பது வேறு விவகாரம். ஆனால் இது நம்முடைய விருப்பு வெறுப்புக்களுக்குத் தகுந்தபடி—கொள்கை வேறு—சில இடங்களில் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இன்னொன்று. இங்கே, சென்னை பல்கலைக் கழக சிண்டிகேட் தன்னுடைய சுய ஆட்சித் தன்மையை இழந்து வருகிறது. அட்டானமஸ்ஸை இழந்து வருகிறது. அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தேர்தல் மூலம் 11 பேர்கள். இப்போது அரசாங்கம் 10 பேர்களுக்கு நாமினேஷன் போட்டிருக்கிறது. மோர் ஆர் லெஸ் சென்னை பல்கலைக் கழகம் இன்றைக்கு சர்க்காருடைய ஒரு டிபார்ட்மெண்டாக அதனுடைய சுய ஆட்சியை இழந்திருக்கிறது. உதாரணத்திற்கு, லா செக்ரட்டரி நாமினேஷன் போட்டிருக்கிறீர்கள். டைரக்டர் ஆப் லீகல்

ஸ்டடிஸ், அவரைப் போட்டிருக்கிறீர்கள். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ், போட்டிருக்கிறீர்கள். ஹெல்த் செக்கரட்டரி, அவரைப் போட்டிருக்கிறார்கள். இரண்டுமே இரண்டு துறைகள். நான் கேட்கிறேன், இது ஜனநாயகக் கொள்கைக்கு விரோதம் அல்லவா? அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தெரிவிக்க வேண்டும். என்னுடைய நேரம் அதிகமாகப் போய்விடுகிறது. துணைத் தலைவர் அவர்களே, உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே என்ன வேடிக்கை என்று கேட்டால் நம்முடைய லா செக்கரட்டரி சிண்டிகேட் மீட்டிங்குக்கு வராவிட்டால் அவருடைய ஒரு ஆளை அனுப்பலாம். தனக்குக் கீழே இருக்கின்ற ஒரு அதிகாரியை அனுப்பலாம். ஹெல்த் செக்கரட்டரி சிண்டிகேட்டுக்கு வர நேரம் இல்லையென்றால் அவர் நினைக்கின்ற ஆளை—ப்ராக்சி—அனுப்பலாம். நான் கேட்கிறேன். பல்கலைக்கழகத்தை அவமானப்படுத்துவதற்கு வேறு வழியே வேண்டாமா? எவ்வளவு சாதாரணமாக சிண்டிகேட் இன்றைக்கு தனித் தன்மையை இழந்திருக்கிறது. நான் கேட்கிறேன். மந்திரி கேபினட் மீட்டிங் நடக்கிறது. அவர் போகாமல் தன்னுடைய பி.ஏ.வை அனுப்புவாரா? கேட்டால் என்னுடைய ஆள் வருகிறார் என்று சொல்வாரா? அல்லது அவருடைய ப்யூனை அனுப்புவாரா? ஆக இன்றைக்கு சட்டத்திலே போட்டிருக்கிறீர்கள். அவசர அவசரமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது பல்கலைக் கழகத்தினுடைய சுய ஆட்சி, அட்டானமி. மாநில சுய ஆட்சி பேசுகிறோம். அதைப்போலவே இன்னொரு வேடிக்கை என்னவென்று கேட்டால் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ் இருக்கிறார். அவர் இன்றைக்கு சிண்டிகேட் மெம்பர். ஹெல்த் செக்கரட்டரி இருக்கிறார். வேடிக்கை என்னவென்று கேட்டால் மதுரை மருத்துவ கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவ கல்லூரி, இராமச்சந்திரன் மெடிக்கல் காலேஜ், கீழ்ப்பாக்கம் மெடிக்கல் காலேஜ், சி.எம்.சி., எம்.எம்.சி.—நான் ஆதாரங்கள் வைத்திருக்கிறேன். தேவைப்பட்டால், அமைச்சர் பார்க்க விரும்பினால் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இதிலே வேடிக்கை என்னவென்று கேட்டால் 10 பேராசிரியர்கள் அடிப்படைத் தகுதி இல்லாமல் புரொபசராக மெடிக்கல் காலேஜில் இருக்கிறார்கள். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ், சிண்டிகேட் மெம்பராக இருக்கிறார். ஹெல்த் செக்கரட்டரி சிண்டிகேட்டிலே இருக்கிறார். அதுபோல நான் கேட்கி-



றேன். இன்றைக்கு மருத்துவத் துறையில்—உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். மெடிக்கல் கௌன்சில் ஆப் இந்தியா ரூல்ஸ் வையலேட் பண்ணப்பட்டிருக்கிறது. இவர்களுடைய படிப்பு என்ன தெரியுமா? எம்.பி., பி.எஸ் ஒரு பாச்சலர் ஆப் சானிட்டரி சைன்ஸ். ஒரு ஆள் ஹெல்த் ஆபீசராக இருப்பார் நிர்வாக சைடிலே. அவரைக் கொண்டு போய் பேராசிரியராக போட்டிருக்கிறீர்கள். 10 பேர்களைப் போட்டிருக்கிறீர்கள். பெயர், டேட் ஆப் அப்பாயின்ட்மெண்ட், காலேஜ், நேம் ஆப் புரொஃபசர் அத்தனை பர்ட்டிகுலர்சையும் வைத்திருக்கிறேன். உங்களிடத்தில் தருகிறேன். அவர்கள் ரீடர்ஸாக இருந்தார்களா இல்லை. டெமான்ஸ்ட்ரேட்டர்களாக இருந்தார்களா இல்லை. ஆசிரியர் பயிற்சி உண்டா கிடையாது. அசிஸ்டெண்ட் புரொஃபசராக நியமிப்பதற்கே எம்.பி.பி.எஸ்ஸோடு எம்.டி. படித்திருக்க வேண்டும். இது ஒன்றுமே இல்லாமல் எம்.பி.பி.எஸ். படித்து ஹெல்த் ஆபீசராக ரெக்ரூட் பண்ணப்பட்டவர்களை, ஆசிரியராக அனுபவம் இல்லாதவர்களை இதிலே கொண்டு போய் நியமிக்கிறார்களே இதற்கு என்ன பெயர் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதைப்போல, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட், செனட்டிற்குத் தேர்தலே கிடையாது. சிண்டிகேட் கூட்டம் அங்கே நடப்பதே கிடையாது. இங்கே சென்னையிலேதான் நடக்கிறது. நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அங்கே போடப்படவில்லை. ஆசிரியர் பிரதிநிதிகள் இல்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்களோ. வைத்தது சட்டமாக, ஒரு சாதாரண டிப்பார்ட்மெண்ட்டாக மெஜுரா யூனிவர்சிட்டி ஆகிவிட்டது. ஆகவே நான் கேட்கிறேன். மாநகராட்சிக்குத்தான் தேர்தல் இல்லை. கூட்டுறவுச் சங்கத்திற்குத்தான் தேர்தல் இல்லை. இங்கேயுமா? பல்கலைக் கழகத்திலுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் மூன்று நிமிடத்தில் முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) நிறைய நேரம் ஆகிவிட்டது.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அதுபோலவே, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே அஞ்சல் வழித்துறை—நான் ஆதாரத்தோடு சொல்கிறேன்—அஞ்சல் வழித்துறை பி.ஜி.எல். முதல் ஆண்டு படிக்கிறார். 25—7—1986-லே அவர் சேருகிறார். 525 ரூபாய் ஃபீஸ் கட்டி. அவர் நம்பர் 712604. முதல் ஆண்டு பாடம். இதுவரைக்கும் தபாலிலே அனுப்பவில்லை. ஏப்ரல் மாதம் பரீட்சைக்கு ஃபாரமும் அனுப்பி பணமும் கட்டி இருக்கிறார். பாடமே அனுப்பாமல் அவர் எங்கே போவார்? இது மெஜூரா யூனிவர்சிட்டி. நான் கேட்கிறேன். இப்படி ஒன்றிரண்டு அல்ல. உதாரணத்திற்கு ஒன்று.

அடுத்து நான் உங்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கிறேன். சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு மானியமாக ஆண்டிற்கு 66 ஆயிரம் ரூபாய்தான் தரப்படுகிறது. அதை அதிகமாகத் தர வேண்டும், போதாது. இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். மருத்துவப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு—தந்தை பெரியார் பெயரிலே பல்கலைக்கழகம் இல்லை, அறியாமைக்கு எதிராக அக்கினிப் பிரவேசம் செய்து, அறிவுலகிற்கு அடையாளம் காட்டிய அண்ணல் தந்தை பெரியாரின் பெயரை பல்கலைக்கழகத்திற்கு சூட்டவேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகம்—பகிரங்கமாகக் குற்றம் சுமத்துகிறேன். ஊழலின் ஊற்றுக்கண்ணாக இருக்கிறது. பாலவாக்கத்திலே ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்காக வீடு கட்டித் தரும் திட்டத்திற்காக 8.5 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்கீம். அது சம்பந்தமாக, நிலம் வாங்கப்பட்ட பத்திரங்களை பல்கலைக் கழகத்திலே தேடித் தேடிப் பார்த்தோம். பட்டாக்களைக் காணவில்லை. டீட்ஸ்-ஐக் காணவில்லை. அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதே இடத்தில் பாலவாக்கம் ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் குழந்தைகளுக்காக பள்ளிக்கூடம் கட்டுவதற்காக பல இலட்சம் ரூபாய், அதற்கு மறைந்துபோன ஏ. எல். முதலியார் என்டோமென்ட் சம்பந்தப்பட்ட ஃபைலைத் தேடிப் பார்க்கிறோம். கிடைக்கவில்லை. பல்கலைக் கழகத்திலே ஃபைல்களைக்





காணோம். ஆனால் உண்மையான குற்றவாளிகள் யார்? இது வரைக்கும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது. தவறு செய்துவிட்டு, இன்னார் தான் செய்துவிட்டார்கள் என்று திசை திருப்பக்கூடாது.

நான் கேட்கிறேன். பல்கலைக்கழகத்திலே, இது மட்டுமா? இன்றைக்கு போஸ்ட்-கிராஜுவேட் ஹாஸ்டல் கடற்கரை ரோட்டிலே இருக்கிறது. 75,000 ரூபாய்க்கு அங்கே கையாடல். ஒரு வார்டன், இதுவரைக்கும் ஆளைக் கண்டுபிடிக்கவே இல்லை. தொகை வாங்கவில்லை. 'இன்வெஸ்டிகேஷன் இஸ் கோயிங் ஆன்'. நான் கேட்கிறேன். பல்கலைக் கழகமா?

அது மட்டுமல்ல; ஒரு கான்டிராக்ட். அதிலே 'ஏர்னஸ்ட் டெப்பாசிட்' வாங்காமலேயே கான்டிராக்ட் போட்டு இருக்கிறார்கள். ரிபேட்டுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்தக் கடிதமே காணோம். நான் கேட்கிறேன். அன்றைக்கு பாரதிதாசன் சொன்னார். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' பல்கலைக்கழகம் போல் இருக்கவேண்டும் என்று சொன்னார்.

நம்முடைய அண்ணா அவர்கள் கூட, நம்முடைய நாவலரை அப்படி இருக்கவேண்டும் என்ற பெருமையிலேதான், **

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகத்திலே சில குறைபாடுகள் உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இவை குறித்து சென்ற ஆண்டே, 'சான்ஸலர்' என்று சொல்லப்படுகிற நமது ஆளுநர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் இருக்கிறார். பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், அது அட்டானமஸ் பாடி. ஆகவே, சில பிரச்சினைகள் நடைபெறுகிறபோது சிண்டிகேட்டுக்கே அதிகாரம் இருக்கிறது. அவற்றைப்பற்றி நடவடிக்கை எடுக்க. அதிலும் சிலவற்றில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று அரசுக்கும் தகவல் வந்தது. அதைப்போலவே ஆளுநர் அவர்களுக்கும் தகவல் வந்து, அதுகுறித்து விசாரணை நடந்து வருகிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அதிகாரிகள்தான் அங்கே ஏராளமாக இருக்கிறார்கள். அடுத்து, உதவிப் பேராசிரியர் சம்பந்தமாக—அசிஸ்டென்ட் புரொஃபசர்ஸ் ஏற்கனவே இந்த பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டது. . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னது நன்றாக இல்லை. நீக்கப் படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாவலரைப்பற்றி சொன்னதை நீக்கிவிடுவோம். (குறுக்கீடுகள்).

**திரு. அ. ரகுமான்கான் :** அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நான் அவருக்கு பெருமை சேர்க்கிற விதத்திலேதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டிமாண்டுக்கு வந்துவிடுங்கள். நேரம் ஆகிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, "காவிரி போல் வாழ்க" என்று சொல்லமுடியவில்லை. காரணம் காவிரி நீர்ப் பிரச்சினை இருக்கிறது . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் பேசுகிறார். கல்வியமைச்சர் இருக்கிறார், அவரும் அவரும் பேசிக்கொள்ள வேண்டும். நான், அமைதியாக, அடக்கமாக உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். என்னை ஏன் வீண் வம்புக்கு இழுக்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஏன் எனக்கு * * என்றால் இதையெல்லாம் எதிர்பார்க்காமல், என்னைப் பார்க்காமல் இருந்திருக்க முடியாது, எனவே

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





அருமை நண்பர்—என்னிடத்தில் அதிக அன்பும், மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிற திரு. ரகுமான்கான்—அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் என்றைக்குமே நாவலர் அவர்களைப் புண்படுத்திப் பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல. இது அவருக்கே தெரியும். இதை நான் ஜோவியலாகத்தான் சொன்னேன். * * இப்படி இருக்கிறதே என்று ஜோவியலாகத்தான் நான் சொன்னேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதற்கும் கூட மாண்புமிகு நாவலர் அவர்கள் விளக்கம் கொடுத்து விட்டார்கள்.

அடுத்து, உதவிப் பேராசிரியர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் 9 மாதத்திற்கு மட்டும் வேலை பார்க்கிறார்கள். வெகேஷன் சமயத்தில் அவர்களை லேஆஃப் செய்து விடுகிறார்கள். அவர்களுக்கு வாழ்வே கிடையாது. அந்த ஆசிரியப் பெருங்குடி மக்கள் சார்பாக நான் இந்தக் கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். தயவு செய்து அவர்கள் பணியை நிரந்தரம் ஆக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கிடையில் பல பிடித்தங்களைச் செய்து டைரெக்டர் ஆப் காலேஜியேட் எஜுகேஷனில் இருந்து உத்தரவு வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆராய்ச்சிப் பிரிவில் இருக்கிறார்கள் என்றால் மாதத்திற்கு ரூ. 100 என்று 9 மாதங்களுக்கு ரூ. 900 பிடித்தம் என்கிறார்கள். அதைப் போலவே இன்கிரிமென்ட் பிடித்தம். They have to pay ஏற்கெனவே வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அது வேறு சிரமம். அத்துடன் "They have to pay" என்கிற நிலை இருக்கிறது. இது சரியல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் அவர்களை ஏன் தலைமை ஆசிரியர்களாகப் போடக் கூடாது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

அதைப் போலவே பட்டதாரி ஆசிரியர்களையெல்லாம் நீங்கள் டி.ஈ.ஓ. என்றும் சி.ஈ.ஓ. என்றும் போடுகிறீர்கள். ஆனால் தமிழுக்காகப் பாடுபடுகிற அரசாங்கம் என்று சொல்லுகிறீர்களே அப்படியானால் ஏன் இந்த அரசாங்கம் தமிழ் ஆசிரியர்களையும் டி.ஈ.ஓ. ஆக அல்லது சி.ஈ.ஓ. ஆகப் போடக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதைப்போலவே தமிழ் மொழி மீது மிகுந்த அக்கறை உடையவர்கள் என்று சொல்லுகிறீர்கள். இன்ஸ்ட்ரக்டிங் அட்வான்ஸ் அதாவது பயிற்சி கால ஊக்க ஊதியம் எல்லோருக்கும் தரப்படுகிறது. ஆனால் தமிழ் ஆசிரியர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுவதில்லை—இது ஏன்? தமிழ் மீதுள்ள பற்று காரணமாக இந்தத் தொகை தரப்படவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாடு தமிழ் ஆசிரியர்களின் சங்கத்தின் மூலமாக இரண்டு கோரிக்கைகளும் வரப் பெற்று அதைப் பரிவோடு பரிசீலித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கோரிக்கைகளை ஏற்க இசைவு தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இப்போது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான்கான் அந்தப் பாயின்ட்டோடு முடித்து விடுங்கள். . . .

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்டதாக அரசு அறிவித்தது. நல்ல திட்டம்தான். ஆனால் ஜீ.ஓ. போட்டீர்களா? கிடையாதே. பிறகு ஏன் அறிவிக்கிறீர்கள்? அதைக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அறிவித்ததை ஜீ.ஓ. ஆகப் போடுங்கள் . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான்கான் நீங்கள் பேசி முடியுங்கள். நான் அவரை அனுமதிக்கவில்லை. இந்த பாயின்ட்டோடு முடித்துவிடுங்கள். நீங்கள் அமருங்கள். Mr. Ramalingam please resume your seat.





**திரு. அ. ரகுமான்கான்:** அதைப் போலவே பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் 1981 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்கள். ஆனால் 6 வருஷமாகியும் இன்னும் அவர்களுக்கு சர்வீஸ் ரூல்ஸ் கிடையாது. அவர்கள் பி.எப். செக்கை பஞ்சாயத்து யூனியனில்தான் வாங்குகிறார்கள். ஆறு வருஷமாக சர்வீஸ் ரூல்ஸ் போடப்படவில்லை. அதுமட்டுமல்ல. பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் மூன்று இலட்சம் பேர் இருக்கிறார்கள். 42,000 வேகன்சி இருக்கிறது. அவர்களை டிரான்ஸ்பர் செய்ய வேண்டும் என்றால் முன்பெல்லாம் டி.ஈ.ஓ. அல்லது சி.ஈ.ஓ. செய்து வந்தார். இப்போது டைரெக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்குத்தான் அந்த அதிகாரம். அதிகாரம் எங்கே பரவலாக்கப்படுகிறது? கன்னியாகுமரியில் இருக்கிற ஒருவர் டிரான்ஸ்பர் செய்யப்பட்டால் அவர் சென்னையை நோக்கி வந்து டைரெக்டரைப் பார்க்க வேண்டும். ஏன்? மாவட்ட சி.ஈ.ஓ. அல்லது டி.ஈ.ஓ. பார்க்கக் கூடாதா? என்ன காரணம் அப்படி வைத்திருக்கிறீர்கள்? எல்லா ரோடுகளும் ரோமாபுரியை நோக்கி வரவேண்டும் என்பதா? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது (மணி அடிக்கப் பெற்றது) (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரையும் விட கூடுதலாக நேரம் கொடுத்திருக்கிறேன் (குறுக்கீடு)

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விபற்றிய மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உணர்வுகள் சிலவற்றை இந்த மன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழக கல்வித் துறை, பள்ளிக் கல்வி . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுபோக எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறேன் என்று பாருங்கள். எல்லோரும் அப்புறம் இதையே கேட்பார்கள். அடுத்தபடியாக பேசலாம். அமருங்கள். அவர் பேச ஆரம்பித்தாகிவிட்டது. தயவுசெய்து அமருங்கள் . . . (குறுக்கீடு)

**திரு. க. சோலைராசு:** பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, பொதுக்கல்வி என்று 5 பிரிவுகளாகப் பிரித்து அது ஆற்றியிருக்கிற சாதனைகளை . . . (குறுக்கீடு).

(பிற்பகல் 12-30)

**திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நல்ல மனது வைத்து அதிக நேரம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுக்கு, பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் உங்களிடம் கேட்டுக் கொண்டேன், அதை நீங்களும் ஏற்றுக் கொண்டீர்கள். கடைசியாக ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு முடிக்க விரும்புகிறார். அதற்கு மட்டும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை மீறி திரு. ரகுமான்கான் பேசினால் அதை நீங்கள் தடுத்தால் நான் உங்களுக்குத் துணையாக இருப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஏற்கெனவே நிறைய நேரம் பேசியாகிவிட்டது. என்னுடைய வசதிக்காக, திரு. ரமணி அவர்கள் கேட்பார்கள் என்பதற்காக அவர் எத்தனை நிமிடங்கள் பேசினார் என்பதைச் சொல்லவில்லை.

**திரு. க. சோலைராசு:** இதய தெய்வம் தமிழக புரட்சித் தலைவர் ஆட்சியில் தமிழகம், கல்வித் துறையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஈடு, இணையற்ற சாதனையைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே உரக்கப் பேசுகின்ற நண்பர்கள் ஏழரை ஆண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்கு உரக்கப் பேசுகின்ற உறுப்பினர் திரு. ரகுமான்கான் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டை ஏழரை ஆண்டுக் காலம் ஆண்டபோது என்ன செய்தார்கள் என்பதை, அவர் சற்றுப் பொறுமையாக இருந்தால் கேட்க விரும்புகிறேன். 1975-76 ஆம் ஆண்டு கல்விக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒதுக்கிய தொகை 127 கோடி ரூபாய். பிறகு வந்த புரட்சித் தலைவர் ஆட்சியில் 1985-86 ஆம் ஆண்டு கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 445 கோடி ரூபாய் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே 1987-88 ஆம் ஆண்டு கல்விக்காக இந்த அரசு ஒதுக்கியுள்ள தொகை 597 கோடி ரூபாய் என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். கல்வி என்பது மிகப் பெரிய நதியைப்





போன்றது. இந்த நதியில் ஆதிதிராவிடர் நலம், பிற்பட்டோர் நலம், சத்துணவு, இலவச பாடநூல் வழங்குதல், இலவச சீருடை போன்ற பல்வேறு கிளை ஆறுகள் மூலம் கல்வியின் மேம்பாட்டுக்காக, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, இந்த 597 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கல்விக்காக மட்டும் தனிப்பட்ட முறையில் பார்க்கும்போது 597 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆதிதிராவிடர் நலத் துறையிலே கல்விக்காகவும், பிற்பட்டோர் நலத் துறையிலே மாணவர்களுடைய விடுதிகளை நடத்துவதற்காகவும் தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூடுதலாக நேரம் கொடுத்தாகிவிட்டது, அவருடைய கட்சியின் தலைவரும் அதை ஒத்துக் கொண்டார். (குறுக்கீடு) சர்வாதிகாரம் என்றால், யார் சர்வாதிகாரம் செய்கிறார்கள் என்பதை அவையினர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திரு. ரகுமான்கானின் சர்வாதிகாரத்திற்கேற்ப நாங்கள் செய்யத் தயாராக இல்லை. அப்படிச் செய்தால் சட்டசபையை நடத்த முடியாது. அவையின் எல்லா உறுப்பினர்களுக்கும் . . . (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற உறுப்பினர்களை விட உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி விவாதிப்பது நல்லதல்ல. இவ்வளவு வேகம் எதற்காக? தயவுசெய்து அமருங்கள். இன்னுமொரு நேரத்தில் இந்த ஐந்து நிமிடத்தை சேர்த்துக் கொள்ளலாம். திரு. சோலைராசு.

**திரு. க. சோலைராசு:** தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்பட்டோர் நலம், சத்துணவு, இலவச பாட நூல், இலவச சீருடை என்கிற பல்வேறு தலைப்புகளின் மூலம் பல்வேறு நிதிகள் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கல்வித் துறை தமிழகத்தில் மிகச்

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 8

சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தொழில் கல்வி தமிழ்நாட்டில்தான் முதன்மை பெறுகிறது. தொடக்கக் கல்வியிலேயும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு தான் சிறப்பு பெற்றிருக்கிறது என்ற பெருமையையும், பாராட்டையும் கல்வித்துறை பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே பேசிய திரு. ரகுமான்கான் சிலவற்றைச் சொன்னார். எனக்கு ஒரு பழைய திரைப்படம்தான் நினைவுக்கு வருகிறது. "திருவிளையாடல்" என்ற திரைப்படத்தில் சிவனாக வருபவர் 'தருமி' என்பவரைப் பார்த்துக் கேட்பார், "ஆற்றல் மிக்கவர் நீயா, நானா?" என்று. பிறகு "கேள்வியை நீ கேட்கிறாயா அல்லது நான் கேட்கட்டுமா" என்று கேட்கிறபோது, 'தருமி' சொல்லுவான், 'கேள்வியைக் கேட்டுத்தான் எனக்குப் பழக்கம், பதில் சொல்லிப் பழக்கமில்லை, நானே கேள்வியைக் கேட்கிறேன், சிவபெருமானே நீங்கள் பதில் சொல்லுங்கள்" என்று சொல்லுவான். இது அந்தப் படத்திலே மிகப் பெரிய நகைச்சுவைக் காட்சியாக வந்தது. அந்த நகைச்சுவைக் காட்சிபோல, இங்கே திரு. ரகுமான்கான் அவர்கள் கேள்வி கேட்டபோது இதைச் செய்தார்களா அதைச் செய்தார்களா என்று கேட்கிறார்களே தவிர 7½ ஆண்டுகளில் அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்லவில்லை. எனவே கேள்வி கேட்பது சாமர்த்தியமான காரியமல்ல. அதைச் செய்வதுதான் சாமர்த்தியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் கடந்த காலங்களை எண்ணிப் பார்க்கிறேன். அதற்கு அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று எண்ணுகிறேன். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியும் 95,000 ஆசிரியர் பெருமக்களை 1—6—1981 முதல் அரசு அலுவலர்களாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆசிரியர்கள் பட்ட துன்பங்களை, இன்னல்களைப் பார்க்கும் போது நெஞ்சம் விம்முகிறது. ஒன்றியப் பெருந்தலைவரின் பண்ணையாட்களை ஆசிரியப் பெருமக்கள் கோபித்துக்



1987 ஏப்ரல் 8] [திரு. க. சோலைராசு]

கொண்டால், கிழக்குப் பகுதியில் பணியாற்றிய அவரை மேற்குப் பகுதிக்கு மாற்றும் அவலச் சூழ்நிலை இருந்தது. இருபால் ஆசிரியர் பெருமக்களும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆட்களை அழைத்துச் சென்று, மருத்துவ மனைகளில் படுத்திருந்த அவல நிலை இருந்ததை யாரும் மறந்துவிட மாட்டார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்க வேண்டுமென்றுதான் 1—6—1981 முதல் 95,000 ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அவலங்கள் போக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கல்வித் துறை பல்வேறு சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்தாலும், கல்வித் துறைக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடு என்பது பாராட்டத்தக்கது என்றாலும், அரசு தொலைநோக் கோடு பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டவும் விஞ்ஞானக் கருவிகள் வாங்கவும் அதிகப்படியான ரூபாயை 2 நிதி ஆண்டுகளுக்கு ஒதுக்கினால், வருகிற 25, 30 ஆண்டுகளுக்கு கட்டிடங்கள் இல்லை அறிவியல் சாமான்கள் இல்லை என்று சொல்லும் தொல்லைகள் தீரும். எனவே ஒதுக்கப்பட்ட நிதியிலே 50 சதவிகிதத்தை கட்டிடங்கள் கட்ட பயன்படுத்த வேண்டுமென்று அன்போடு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் என்று சொல்லி சிறுபான்மையினர் தொடங்கி, நாட்டிலே பல்லாயிரக் கணக்கான வர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்மேல் பச்சாதாபப்பட்டு, இந்த ஆண்டு அவர்கள் பரீட்சை எழுத அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்படி அனுமதி வழங்கியது கடைசியாக இருக்கட்டும். இன்றைக்குக்கூட செய்தித் தாள்களிலே பார்த்தோம். அப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு, நீதி மன்றங்களிலே கூட தடையுத்தரவு வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை, குறிப்பாக சிறுபான்மையினர் ஆரம்பிப்பதை அறவே தடை செய்ய அரசு ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டும். ஆசிரியர்களுக்கு புனிதமான கடமை இருக்கிறது. நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள். பிற துறைகளில் தவறு

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 8

இருக்கிறதென்றால், அதைத் திருத்திக்கொள்ளலாம். நீதி மன்றத்திலே ஒரு வழக்கறிஞரை நம்பி வழக்காடும்போது, வழக்கு தோற்று விட்டது என்றால் மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய வேறொரு வழக்கறிஞரை அமர்த்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. வழக்கு தோற்றாலும் பாதிக்கப்படுவது ஒரு குடும்பம் தான், இதைப் போல நோயாளி ஒருவன் மருத்துவரைப் பார்க்கும்போது, சரியான முறையில் மருத்துவம் செய்யவில்லை என்றால் அவன் சாகிறான். அதனால் அந்தக் குடும்பத்திற்கு மட்டும் கஷ்டம் ஏற்படுகிறது. அதிலே குறையிருந்தால் திருத்திக்கொள்ளலாம். ஆனால் ஆசிரியர்கள் பணி புனிதமான பணி, நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள். எனவே இந்தத் துறையில் இருக்கக் கூடியவர்கள் செம்மையான முறையில் இருக்க வேண்டும். இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மிகவும் கெட்டிக்காரர்களாக, ஆற்றல் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் மாணவர்களைத் தேர்வு செய்ய வேண்டியவர்களாக இருக்கிற காரணத்தால், பெட்டிக்கடை போல உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையங்களை அதுவும் புதிதாகத் துவக்கப்படுவதை அறவே தடுக்க அரசு சட்டமுன் வடிவைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தற்போது பணியாற்றுகிற ஆசிரியர்களைப் பற்றி கவலையில்லை. இனி தமிழ் நாட்டிலே ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்போது, 3 ஆண்டுக் காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் எடுக்க வேண்டும். அப்படி ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யும்போது அப்படி தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் 3 ஆண்டுகள் பாடம் சொல்லிக்கொடுத்த மாணவர்களுள் எத்தனை சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள்; எத்தனை சதவிகிதம் மாணவர்கள் திறமை பெற்றிருக்கிறார்கள்; எத்தனை சதவிகிதம் மாணவர்கள் கெட்டிக்காரர்களாக உருவாகியிருக்கிறார்கள் என்று பார்த்து, நல்ல முறையிலே சொல்லிக் கொடுத்திருந்தால் ஒப்பந்தத்தை நீட்டிக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்த ஆசிரியர் சரியான முறையில் மாணவர்களைத் தயார் செய்யவில்லை என்றால், ஒப்பந்தத்தை அறவே ரத்து செய்து அவரை வீட்டுக்கு அனுப்ப ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று அமைச்சரவர்களை வேண்டுகிறேன்.



1987 ஏப்ரல் 8] திரு. க. சோலைராசு]

(பிற்பகல் 12-40)

இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அந்த இடையூறு வேண்டாம். வருங்காலத்திலே அப்படி ஆசிரியர்களைத் தேர்வு செய்தால் நல்ல திறமையான மாணவர்களை உருவாக்க முடியும். அதற் காகத்தான் நான் இந்த யோசனையைச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே இன்றைக்கு மாவட்டக் கல்வி அதிகாரி மற்றும் முதன்மைக் கல்வி அதிகாரி இவர்கள் எல்லாம் பள்ளிக் கூடங்களுக்குச் சென்று ஆய்வு செய்கின்றார்கள். அங்கே இன்ஸ் பெக்ஷன் நடக்கிறது. அந்த நேரத்திலே மாணவர்கள் எல்லாம் எப்படி படிக்கிறார்கள் என்று பார்க்கின்றார்கள். அந்த நேரத் திலே தனியாக ஒரு வோட்டுப் பெட்டிபோல் வைத்து, ஆசிரியர்கள் எல்லாம் நல்ல முறையிலே பாடம் நடத்துகின்றார்களா, ஒழுங்காக பள்ளிக்கூடத்திற்கு வருகின்றார்களா, ஆசிரியர்கள் கெட்டிக்காரர் களாக இருக்கின்றார்களா என்பதற்கான கருத்துக்களைத் தெரி விக்கின்ற அளவில் மாணவர்கள் அந்தப் பெட்டியிலே எழுதிப் போட்டால் அதை எடுத்துப் பார்த்து மாவட்டக் கல்வி அதிகாரிகள், முதன்மைக் கல்வி அதிகாரிகள் முடிவினை எடுக் கின்ற சூழ்நிலைகளை உண்டாக்க வேண்டும் என்று நான் பணி வோடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விளையாட்டுத் துறை. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழகம் ஓரளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கின்றது. கோவையிலே நடைபெற்ற 10 ஆம் ஆண்டு மகளிர் விளையாட்டுப் போட்டியிலே தமிழ்நாடு முதலிடம் பெற் றிருக்கிறது. அதேபோல என்னுடைய மாவட்டத் தலைநகரத் தில் உள்ள ஊரக விளையாட்டுத் துறையிலேகூட தமிழ்நாடு விளையாட்டுத் துறை முதலிடம் பெற்றிருக்கிறது. அப்படி வளர்ந்து வருகின்ற விளையாட்டுத் துறையை ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாராட்டத்தக்க வகை யிலே இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதை ஊக்கப்படுத்தி தமிழ்நாட்டிலே விளையாட்டுத் துறைக்கு என்று ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊரக விளையாட்டுத் துறையிலே அதிகமாக வெற்றி பெறுகின்றவர்கள் இளைஞர்கள். அந்த இளைஞர்களை

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 8

அப்படியே நாம் தத்து எடுத்துக்கொண்டு அரசாங்கம் அவர்களை
விளையாட்டுத் துறையிலே ஊக்கப்படுத்தக்கூடிய அளவிலே திட்
டங்களை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் தொன்மை வாய்ந்தது.
தமிழ் பழமை வாய்ந்தது. தமிழ் போற்றுதற்குரியது. தமிழ்
இயல், இசை, நாடகம் என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்
கின்றது. முத்தமிழ் என்று பெருமை பெற்றது. இசைத் தமிழ்,
குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் என்று
ஏழாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெருமை தமிழுக்குத்
தான் உண்டு. சுவை ஆறாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இனிப்பு,
புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, துவர்ப்பு என்று பிரிக்கப்
பட்டிருக்கின்ற பெருமை பெற்றது தமிழ். அதுபோலவே
நிலம் குறிஞ்சி, நெய்தல், முல்லை, பாலை, மருதம் என்று
ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. காற்றை நான்காகப் பிரித்
திருக்கின்றார்கள். அதைப்போலவே இலக்கணம். இரண்டாகப்
பிரித்திருக்கின்றார்கள். அகம், புறம் என்று. ஒழுக்கத்தை ஒன்
றாக வைத்திருக்கின்றார்கள். பல நாடுகளிலே உலக அளவிலே
நான்கு திக்கிலும் காற்று வருவதாகக் கிடையாது. தமிழகத்திலே
இருக்கின்றது. ஆக தமிழ் போற்றுதற்குரியதாக இருக்கின்றது.
இருந்தாலும் தமிழிலே சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய
கட்டாயச் சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு காலத்திலே உலகம் தழுவிய அள
விலே பிரெஞ்சு மொழி கொடி கட்டிப் பறந்தது. இன்றைக்கு
பிரெஞ்சு மொழி அழிந்து ஆங்கில மொழி உலக அளவிலே கொடி
கட்டிப் பறக்கிறது என்று சொல்லலாம். அதற்குக் காரணம் அந்த
ஆங்கிலம் காலத்திற்கு ஏற்ப மாறிக்கொள்ளக்கூடிய தன்மை
களைப் பெற்றிருக்கின்றது. அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்ப கருத்
துக்களை எடுத்துக் கொள்கின்ற சூழ்நிலையிலே ஆங்கிலம் இருக்
கின்றது. வெண்டைக்காய் என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்திலே
வார்த்தை இல்லையென்றால், அவர்கள் பெண்களுடைய விரல்
களைப் பார்க்கின்றார்கள். வெண்டைக்காய் அவர்கள் விரல்
போல் இருப்பதால், அதற்கு லேடிஸ் பிங்கர் என்று வைத்து விடு
கின்றார்கள். அதைப் போலவே முருங்கைக்காய் என்றால்,
அதற்கு என்ன பெயர் வைப்பது என்று யோசிக்கின்றபோது,
அது டிரம் ஸ்டிக் போல் இருப்பதால், டிரம் ஸ்டிக் என்று



1987 ஏப்ரல் 8] [திரு. க. சோலைராசு]

வைத்துவிடுகின்றார்கள். இப்படி அவர்கள் ஒவ்வொரு வார்த்தை
யாகச் சேர்த்துக்கொண்டே போகின்றார்கள். தமிழிலேயும்
இப்படிப்பட்ட நுட்பங்கள் வரவேண்டும். தமிழ் தமிழ் என்று
சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதால் மட்டும் தமிழ்
வளர்ந்து விடாது. தமிழர் வளருகின்றபோதுதான் தமிழ் வளரும்.
இங்கே தமிழ்மொழிப்பற்று பெற்றிருக்கின்ற காரணத்தி
னாலேயே தமிழ் வாழ்க தமிழ் வாழ்க மற்ற மொழி ஒழிய
வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றதாலேயே தமிழ்
வளர்ந்து விடாது. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இந்த நாட்டி
னுடைய பொருளாதாரத்திற்கும் தொடர்பு இருக்கிறது.
எனக்குக்கூட ஒரு ஐயம் இருக்கின்றது. ஆங்கிலத்தை
மிஞ்சக்கூடிய அளவிலே இன்றைக்கு ரஷ்ய மொழிகூட உலக
மொழியாக வந்து விடுமோ என்று சொல்கின்ற அளவில்
சந்தேகம் இருக்கின்றது. ரஷ்ய நாட்டிலே இன்றைக்கு பல்வேறு
ஆய்வுகள், சாதனைகள் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.
ரஷ்ய நாட்டிலே அற்புதமான விஞ்ஞான கண்டுபிடிப்புகள் இருக்
கின்றன. அந்தக் கண்டுபிடிப்புகளின் பலனைக் கண்டுகொள்
கின்ற அளவுக்கு அந்த மொழியிலே தெரிந்து கொள்கின்ற சூழ்
நிலை வந்து விடுகிறது. அப்படிக் கண்டு கொள்கின்றபோது
நிச்சயமாக அந்த மொழி வளரும். தமிழர் பொருளாதாரத்திலே
வளரவேண்டும் என்று சொன்னால், அது விஞ்ஞான யுகத்திற்கு
வரவேண்டும்.

இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு கௌரவப் பட்டங்கள்
கொடுக்கின்றார்கள். முனைவர் என்று டாக்டர் என்பதற்குப்
பதிலாக சொன்னால், படித்தவர்கள்கூட புரிந்துகொள்வதில்லை.
பலருக்கு முனைவர் என்றால் அர்த்தம் தெரியவில்லை. இன்
றைக்கு சினிமா என்று சொன்னால் பட்டி தொட்டியிலே இருக்
கின்றவர்களுக்குத் தெரிகிறது. ஆனால் திரைப்படம் என்று
சொன்னால் தெரியாது. சைக்கிள் என்று சொன்னால் தெரி
கிறது, ஆனால் மிதி வண்டி என்று சொன்னால் தெரிவதில்லை.
எனவே தமிழிலே தற்காலிகமாக சீர்திருத்தம் கொண்டுவர வேண்
டும். பண்டைய காலங்களிலே கடிதங்கள் எழுதுகின்றபோது,
'நான் க்ஷேமம், உங்கள் க்ஷேமம்' என்பார்கள். அதற்குப் பதிலாக
'நலம்' என்ற வார்த்தையைக் கண்டுபிடித்து விட்டதால் "க்ஷேமம்"
என்று சொல்
போய்விட்டது. இன்றைக்கு 'நலம் அறிய ஆவல்' என்று சொல்
கின்றார்கள். எனவே வார்த்தைகளை தற்காலிகமாக கண்டு

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 8

பிடிக்க வேண்டும். சில நேரங்களிலே ஹைட்ரோஜன், ஹைட்ரோஜன் என்றெல்லாம் எழுதுகிறோம். அதையெல்லாம் அப்படி அப்படியே எழுதிக்கொள்கின்ற அளவுக்கு தமிழ்படுத்தியும் எழுதுகிறார்கள். தமிழில் கரியமில வாயு என்றும் அது, இது என்றும் எழுதுகிறார்கள். அது பையனுக்குப் புரியவில்லை. இதையெல்லாம் படித்துவிட்டு வேறு மாநிலத்திற்குப் போய் அங்கே படிக்கின்றபோது அங்கே நைட்ரஜன், ஹைட்ரஜன் என்று சொல்வதால் அதையே ஏற்றுக்கொள்கின்ற தன்மை வந்து விடுகிறது. (மணி அடிக்கப்பெற்றது).

நம்முடைய மாநிலத்தில் கரியமில வாயு என்று படித்துவிட்டு வேறு மாநிலங்களுக்குச் சென்று படிக்கிறபோது அங்கே ஆக்சிஜன் என்றும், ஹைட்ரஜன் என்றும், நைட்ரஜன் என்றும் சொல்லிக் கொடுக்கிறபோது அவர்களுக்குப் புரியவில்லை. ஆகவே, வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்திற்கேற்ப நம்மை நாம் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்து, மூன்று குலத் தமிழ் மன்னர்—என்னை மூண்ட நல்லன்போடு நித்தம் வளர்த்தார்—இன்றொரு சொல்லினைக் கேட்டேன்—இனி ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள். கொன்றிடற் போலொரு வார்த்தை இங்கு கூறத்தகாதவன் கூறினான் கண்டீர்—மெல்லத் தமிழினிச் சாகும்—சுத்த மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்—என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ! இந்த வசையெனக் கெய்திடலாமோ! சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர் என்று அன்றைக்கே பாரதியார் சொல்லியிருக்கிறார். ஆகவே, தேவையென்றால் பிற சொற்களை எடுத்துக் கையாள்வதன் மூலம் தமிழ் மேலும் மேலும் வளரும் என்கிற யோசனையை இந்தத் துறைக்கு, தமிழ் வளர்ச்சித் துறைக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, திருச்சியில் இருக்கிற பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் வணிகவியல் என்ற ஒரு துறை இல்லாததால் அங்கே படிக்கின்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் முதுகலைப் பட்டம் படித்தவர்கள் டாக்டர் பட்டம் பெற விரும்பினால், அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்து அவர்கள் டாக்டர் பட்டம் பெற வாய்ப்பு அளிக்கலாம்



1987 ஏப்ரல் 8] [திரு. க. சோலைராசு]

அதற்காக என்ற துணை தலைமை ஒன்று அங்கே இல்லாததால் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே துணை தலைமை துறை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மணப்பாறை இன்றைக்கு பெரிய அளவில் தாலுக்கா தலைநகராக இருக்கிறது. அங்கேயிருந்து 30 மைலுக்கு அப்பால், 45 மைலுக்கு அப்பால் இருக்கிற திண்டுக்கல், மதுரை, திருச்சி போன்ற இடங்களுக்குச் சென்று கல்வி கற்பது சிரமமாக இருப்பதால் மணப்பாறையில் அவசியம் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சட்டமன்ற உறுப்பினராவதற்கு முன்பு படித்த கல்லூரி முசிறி கல்லூரி. அந்தக் கல்லூரியில் வணிகவியல் முதுகலைப் பட்டப் படிப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1979 முதல் 1985 வரை தற்காலிகமாக பணியாற்றிவரும் உதவிப் பேராசிரியர் பணியினை நிரந்தரப்படுத்த அரசு பணியாளர் தேர்வாணைக் குழு விண்ணப்பங்களை 1985 ஆம் ஆண்டு கோரி ஒரு வருடமாகியும், அவர்களை நிரந்தரப் படுத்த இன்னும் தேர்வு வைக்காததால் அவர்கள் படும் சிரமத்தை நீக்க விரைவில் தேர்வாணைக் குழு தேர்வு வைக்க வேண்டும் என்கிற என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் முன் வைக்கிறேன். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, பிளஸ் 2 ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் பிளஸ் 2 ஆட்டோ மெக்கானிக் பொறியியல் போதகர்களுக்கும் பொருந்தும் என்ற அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதுபோல தேர்வு நிலை பொறியியல் ஆசிரியர்களுக்கு உதவித் தலைமை ஆசிரியர் பதவி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, இவைகளையெல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[1987 ஏப்ரல் 8

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களை இந்த அவைக்கு முன்னால் தெரிவிக்க விரும்புகிறேன். அவ்வளவு விஷயத்தையும் இங்கே பேசுவது கஷ்டம் என்பது நடைமுறையில் தெரிகிறது. ஆதனால் நான் வைத்திருக்கிற குறிப்பிலிருந்து சில விவரங்களை படித்துச் சொல்லி முடிக்க விழைகிறேன். 1986-87-ல் 551 கோடி ரூபாய் கல்வி மானியத்துக்கு ஒதுக்கப்பட்டதற்கு மாறாக இப்போது 597 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருப்பதானது முன்பை விட அதிகப்படி பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்துபட ஆக தாப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரணமாகப் பார்த்தால் இது சென்ற ஆண்டைவிட உயர்வுதான். ஆனால், இந்த உயர்வானது உண்மையிலேயே அரசாங்கத்தினுடைய வருமானத்தோடு சம்பந்தப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. அன்றைக்கு இருந்த வருமானப்படி, இப்போதிருக்கிற வருமானப்படி பார்த்தால் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 20 அல்லது 21 பெர்சன்ட் வரும். ஆக, முன்பு இருந்ததை விட பெரிய ஒதுக்கீடு அல்ல இது. என்னைப் பொறுத்தவரையில் 46 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்தது பற்றாது என்பதுதான் பிரச்சினை. மக்களுடைய கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாம் இன்னும் வெகு தூரம் முன்னேற வேண்டியிருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எப்படி கல்வியினுடைய தரத்தை உயர்த்த வேண்டும், அதிலே எவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன என்றெல்லாம் எடுத்துக் காட்டினார்கள். அரசியல் சட்டப்படி, அரசியல் அமைப்பில் கூறப்பட்டபடி 14 வயது வரை உள்ள சிறுவர்கள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வியைக் கட்டாயம் கொடுக்க வேண்டும், படிக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்தும், இதுநாள் வரை இந்திய நாடு முழுவதற்கும் அது அமுல்படுத்தப்பட்டதில்லை.

(பிற்பகல் 12-50)

இன்றைக்கும் 100க்கு 60 பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் படிப்பு கொஞ்சம் அதிகமாக இருக்கும். கேரளாவிலே இதைவிட இன்னும் ஜாஸ்தியாக இருக்கும். இப்படிச் சில வித்தியாசங்கள் இருக்குமே தவிர மொத்தமாக எடுத்துக்கொண்டால் இது நம் நாட்டினுடைய 40 ஆண்டுக்கால சுதந்திரத்திற்குப் பிறகு இன்னும் 100க்கு 60 பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் இருக்கிறார்கள் என்று





சொல்வது எவ்வளவு கஷ்டமான, மோசமான நிலைமை என்பதை நாம் கணக்கில் கொள்ள வேண்டும். நமது கல்வித் திட்டத்தை நாம் சரியான முறையிலே வகுத்துக் கொள்வதற்கு அந்த விஷயங்கள் நம்மைத் தூண்ட வேண்டும்.

அடுத்து, புதிய கல்விக் கொள்கையை இப்பொழுது மத்திய அரசாங்கம் நமக்கு வெளியிட்டுள்ளது. அமைச்சரவர்களும் தன்னுடைய குறிப்பிலே அதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். தேசிய கல்விக் கொள்கையோடு அநேகமாக ஒத்துக்கொண்டுதான் நாங்கள் போகிறோம், ஒன்றிரண்டு விஷயங்களில்தான் வித்தியாசம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரச்சினைக்குப் புதிய கல்விக் கொள்கை தீர்வு தரப்போவதில்லை. இதை நாம் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு புதிய மேல்தட்டுப் பகுதியினரை மட்டும் உருவாக்கும்படியான,தாகும் Technically developed electronics, Computerisation, etc இதை நாம், ஏராளமாக அந்நிய நாடுகளிலேயிருந்து இங்கே இறக்குமதி செய்து நம் நாட்டில் டெக்னாலஜியை வளர்க்க இப்படிப்பட்ட மிக மிக உயர்ந்த டெக்னாலஜியைக் கொண்டு வராததால்தான் பல கோடிக்கணக்கான மக்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது அல்லது பிரச்சினை தீராமல் போய்விட்டது என்று எண்ணக்கூடிய அடிப்படையே தவறு. இன்றைக்கு 10, 12 கோடிக்கு மேற்பட்ட மக்கள் இந்த நாட்டிலே விவசாயத் தொழிலாளர்களையும், தொழிலாளிகளையும், படிப்பாளிகளையும், உழைப்பாளிகளையும் எடுத்துக் கொண்டால் அன் எம்ப்ளாய்ட். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்குத் தகுந்த ஒரு இயந்திர தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சியை நாம் கொடுத்தாக வேண்டும். அதற்கு மீறி நீங்கள் போவீர்கள் என்றால் அதிலேயே முரண்பாடு ஏற்பட்டு பல கஷ்டங்களுக்கு நீங்கள் ஆளாவீர்கள். ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம். அப்படிப்பட்ட முறை நமக்குத் தீர்வு தரப்போவதில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதே மாதிரி, கல்விக் கூடங்களிலே இருக்கும்படியான வசதிகளையும் நீங்கள் பார்த்துக்கொண்டால், அமைச்சரவர்கள் அந்தக் குறிப்பிலே பலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மொத்தம் எடுத்துக்

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 8

கொண்டால் 4,191 பள்ளிகள் இருக்கின்றன. 1987-88-ல் கட்டிடங்களில் சிறு பணிகள் செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் வெறும் 33 இலட்சம். முந்தைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு பாக்கி நிற்கிற கட்டிடங்களுக்குச் செலவழிக்க திட்டமிட்டிருக்கிற தொகை 2 கோடியே 51 இலட்சம். புதுப் பள்ளிகள் கட்ட 75 இலட்சம். இதுதான் கட்டிடங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம். இந்தப் பணத்தைக்கொண்டு உண்மையிலேயே எத்தனை கட்டிடங்களைப் புதிதாகக் கட்ட முடியும்? எத்தனை கட்டிடங்களுக்கு ரிப்பேர்கள் நடத்த முடியும்? இன்றைக்கு சுவர் வைத்து கட்டிடங்கள் கட்டிவிட்டால் மட்டும் போதாது. அந்தக் கட்டிடங்களுக்கு உள்ளே உட்காருவதற்கு பெஞ்சு, நாற்காலி, மேஜை போன்ற பல சாதனங்கள் தேவை. 6-வது, 7-வது வகுப்பு வரையுள்ள பள்ளிகளில் ப்ளாக்கல் போர்டு நடத்தக்கூடிய பள்ளிகளிலேயும் கிடையாது; அரசாங்கம் நடத்தக்கூடிய பள்ளிகளிலே கூடக் கிடையாது. எனவே, கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். மாச் சாமான்கள் எல்லாம் உபயோகப்படுத்தப்பட வேண்டும். இவைகளெல்லாம் இல்லாமல் அந்தக் கட்டிடங்களுடைய எல்லாக் காரியங்களும் எப்படி நிறைவேறும்? எப்படி நல்ல முறையில் மாணவர்கள் வந்து அதிலே படிப்பதற்கு முடியும்? படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களும் எப்படி அதிலே சரியானபடி செயலாற்ற முடியும்? இன்றைக்கு நேற்றைக்குகூட அல்ல, ஒவ்வொரு தடவையும்—நானும் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து பத்து வருஷங்களாகப் பார்க்கிறேன்—ஒவ்வொரு வருஷமும் இதையேதான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பணமெல்லாம் மிகக் குறைவானது. இன்றைக்கிருக்கக் கூடிய தேவைக்கு இது முற்றிலும் கட்டுபடியாகாது.

ஐந்து ஏக்கர் நிலமும், பத்தாயிரம் ரூபாயும் தந்தால் உயர் நிலைப்பள்ளி அமைக்க அனுமதி தருவதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இந்தப் பத்தாயிரம் ரூபாய் அல்ல, அதற்கு மேலும்கூட பணம் கொடுத்தும், இடம் கொடுத்தும்கூட எத்தனை இடங்களில் பள்ளிக்கூடங்கள் அனுமதிக்கப்படாமல் இருக்கின்றன? அது தவறானது. அந்த மாதிரி கொடுக்கப்பட்ட இடங்களிலே திட்டவட்டமாக அவர்களுக்குப் பள்ளிகளை அனுமதிக்க வேண்டும். அப்படிப் பள்ளிகளை அனுமதித்தால் அதற்குச் சில பொறுப்புகளையும், அதற்கு வேண்டிய பணச்



1987 ஏப்ரல் 8] [திரு. கு. ரமணி]

செலவுகளையும் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு அதிகச் செலவாகும். அந்தப் பணச் செலவுக்கு முதலிலே திட்டம் இல்லாததால்தான், கொள்கைப் பிரகடனம் செய்தாலும், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், கேட்கின்ற கட்டிடங்கள் அனுமதிக்கப்படாமல் போவதற்குக் காரணம் எல்லாம் 'பைனான்சை', பணத்தைப் பொறுத்தவரையில்தான் இருக்கிறது என்று தெரிகிறது.

அதேமாதிரி, தொடக்கப் பள்ளிகளினுடைய நிலைமை என்ன? தன்னிறைவுத் திட்டப் பணிகளில் மூன்றாண்டுகளில், 1981, 1982, 1983 ஆகிய இந்த மூன்றாண்டுக் காலத்திலே பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளை 4,500 பள்ளிகளைக் கட்டிக் கொடுத் திருப்பதாக இந்தக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதற்காக 30 கோடி ரூபாய் செலவு. 1987-88-ஆம் ஆண்டுக்கு என்ன? 1983-க்குப் பிறகு, இப்பொழுது, 1987, 1988 வரையில் என்ன நிலை? எந்தப் பகுதியிலாவது, ஆரம்பப் பள்ளிகள் கட்டப் பட்டிருக்கிறதா? தன்னிறைவுப் பணி முடிந்துவிட்டது. ஆரம்பப் பள்ளிகள் இல்லை. ஆரம்பப் பள்ளிகள் ஏராளமான கிராமங் களில் இன்றைக்கும் இல்லை. இருப்பது போதுமானதாக இல்லை. ஆகவே, ஐந்தாவது வகுப்பு வரையில் குழந்தை களுக்கு பள்ளிக்கூடம் இல்லை என்ற நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது. இப்படி பல குறைபாடுகள் இருக்கின்றன. எல்லா வற்றையும் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தேவை யான பொருள்கள், மாச் சாமான்கள் எல்லாம் வாங்கிப் போட்டு, வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இப்படிப் பட்ட வசதிகளுக்கு பணம் இல்லை; என்ன செய்வீர்கள் என்று கேட்டால் பொதுமக்களிடம் நன்கொடை வசூல் செய்வோம் என் கிறீர்கள். பொதுமக்களிடம் இருந்து வாங்குவோம் என்றால் அவர்கள் தாராளமாக வைத்துக்கொண்டா இருக்கிறார்கள்? வரி போட்டு வசூல் செய்கிறமாதிரி, விற்பனை வரி மாதிரி அவர்களி டம் வசூல் செய்ய முடியாது. அவர்கள் எல்லாம் சாதாரண கூலிகள். கூலி வேலை செய்து ஜீவனம் நடத்துபவர்களிடம் வரி போட்டு வாங்குவது அல்லது நன்கொடை வாங்குவது என்பது முடியாது. பணம் போதாது என்று சொன்னால், வருஷா வருஷம் பெரிய, பெரிய முதலாளிகளுக்கு பல்வேறு காரியங் களுக்கு லைசென்ஸ் கொடுக்கிறீர்களே, தனியார் கல்லூரி நடத்த

அனுமதி கொடுக்கிறீர்களே, அவர்களிடம் கேளுங்கள். மரச் சாமான்கள் வாங்க வேண்டும்; கட்டிடங்கள் கட்ட வேண்டும்; 10 கோடி ரூபாய் தேவை; அரசாங்கத்திற்கு நன்கொடையாகத் தாருங்கள் என்று கேளுங்கள். அவர்கள் கொடுப்பார்கள்; கொடுக்க முடியும். அது அல்லாமல் பணச் செலவு இருக்கிறது என்பதற்காக சாதாரண ஜனங்களிடம், கூலி வேலை செய்து ஜீவனம் நடத்துகிறவர்களிடம் வசூல் செய்ய முடியாது; அவர்களை நிர்ப்பந்திக்கவும் கூடாது.

அடுத்து, நவோதயா பள்ளி புதிய கல்வித் திட்டத்தில் இடம் பெறுகிறது. அதற்காகக் கோடிக்கணக்கான பணம் செலவு செய்து, மாவட்டத்திற்கு ஒரு பள்ளி ஆரம்பிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அடிப்படைத் தேவையையே செய்ய முடியாமல் இருக்கிறபோது நவோதயா பள்ளியினால் என்ன செய்ய முடியும்? கல்வியின் அடிப்படைத் தேவையை இந்த நவோதயா பள்ளி செய்ய முடியாது என்பது என்னுடைய கருத்து. கல்வியின் தரம் உயர்ந்ததா இல்லையா என்ற கேள்விக்குள் நான் போக விரும்பவில்லை. கல்வியின் உச்சக்கட்டமாக விஞ்ஞானப் படிப்பு, கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்தும் முறை, எலக்ட்ரானிக் சிஸ்டம் எல்லாம் வந்ததற்குப் பின்னால் இந்த நவோதயா கல்வித் திட்டத்தைக் கொண்டு வாருங்கள். ஆரம்பத்தில் தாய் மொழிக் கல்வியே சிறந்தது. ஐந்தாவது வகுப்பு வரையில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பள்ளிக்கூடங்களில் தாய்மொழிக் கல்வி கண்டிப்பாக இடம்பெற வேண்டும். அந்த அடிப்படைக் கல்வியையே பெற முடியாத நிலையில் கோடிக் கணக்கான பணம் செலவு செய்து நவோதயா பள்ளியை அமைப்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. ஐந்தாவது வரையில் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டும். அதன் பிறகு என்ன மொழி வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். தாய் மொழிக் கல்விக்கு வழியில்லாமல் வளர்ந்து வரும் சிறுவர்களை மட்டும் தட்டக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு மாணவர்களுடைய எண்ணிக்கை இலட்சக்கணக்கில் உயர்ந்திருக்கிறது. அரசாங்கம் செயல் படுத்துகின்ற சத்துணவுத் திட்டம்தான் அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சத்துணவுத் திட்டம் நல்லது தான். இதுவரை படிக்காதவர்கள் சத்துணவுத் திட்டத்தினால் சோறு கிடைக்கும்; கல்வியும் கிடைக்கும் என்று வருகிறார்கள்;



குழந்தைகள் வரட்டும்; நல்லது. ஆனால் ஆரம்பப் பள்ளிகளில் இப்படி குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிற அள வுக்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதா? எவ்வளவு அதிகமான ஆசிரியர்களை நீங்கள் நியமித்திருக்கிறீர்கள்? குறைந் தபட்ச அளவிலாவது ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரத்தின்படி ஆசிரியர்களையும் நியமித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்த அளவுக்கு ஆசிரியர்கள் நிய மனம் உயரவில்லை. கேட்டால் அமைச்சர் அவர்கள் சொல்வார் கள், அதற்கும் பணம் தேவை என்று. பணம் இல்லை என்ற காரணம் சரியாகாது. குழந்தைகள் அதிகமாக வந்துவிட்டால் கல்வி 'ஆட்டமாட்டிக்'காகப் போகாது. மாணவர்களின் எண் ணிக்கைக்கு ஏற்றபடி எல்லா வகுப்புகளுக்கும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பல ஆசிரியர் இடங்கள் காலியாக இருக் கின்றன. அந்த காலியிடங்களில் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். காலியாக இருக்கின்ற எல்லா இடங்களை யும் பூர்த்தி செய்ய வேண்டும். என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி கொடுத்தார்கள். ஆறு மாதத்திற்குள் சாங்ஷன் செய்தார்கள். கிட்டத்தட்ட 900 மாண வியர்கள், 1,000 மாணவர்கள்—எல்லோரும் பெண்கள்—அந்தப் பள்ளியிலே படிக்கிறார்கள். ஆனால் ஹெட்மிஸ்ட்ரஸ் ஆரம்பத்தில் நியமிக்கப்படவில்லை. ஒரு கிளார்க் கிடையாது, அட்டன்டர் கிடையாது; தோட்டி கூட இல்லை. இதைப்பற்றி கார்ப் பரேஷனிலே கேட்டேன். போஸ்ட் சாங்ஷன் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதனுடைய லகான் இங்கேதான் இருக்கிறது. நீங்கள் பள்ளிக்கூடத்திற்கு அனுமதி அளிக்கும் போது தேவையான எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லை என்றால் பள்ளிக்கூடம் வந்தும் பயனில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி சில பள்ளிகளில், கல்லூரிகளில் சேருவதற்கு 300 மார்க்குக்கு மேல் மாணவர்கள் வாங்கியிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பாஸ் மார்க் இருந்தால் போதும். பள்ளிகளில் சேர ஏன் 300 மார்க் என்று வைக்க பாசாகிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது கிராமங்களில் இருந்து வேண்டும்?

வருகின்ற மாணவர்கள்தான். இந்த 300 மார்க் என்பது ஒரு வடிகட்டும் முறைதான். கிராமப்புறங்களில் இன்றைக்கும் பள்ளிக் கூடத்தில் இருக்க வேண்டிய எல்லா வசதிகளும் செய்யப் படவில்லை. பல்வேறு காரணங்களால் கல்வியின் தரமும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே இந்த 300 மார்க் என்ற வரையறையினால் கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். அரசு கல்லூரிகளில் சேர வேண்டுமானால் கூட சாதாரணமாக இன்றைக்கு அவர்கள் வேறு வகையில் பணத்தை கொடுக்காமல் சேர முடியாது. அந்த வகையில் ஒரு மாணவன் கிட்டத்தட்ட 1,300 ரூபாய் செலவிட வேண்டும்.

(பிற்பகல் 1-00)

தனியார் கல்லூரிகளில் 50 சதவீதம்தான் சீட்கள் என்று அரசு வைத்திருக்கிறது. அப்படி அதிலே ஏதேனும் பிரச்சினை வந்தால் அதுபற்றி எங்களுக்குச் சொல்லுங்கள் நாங்கள் அதை சரியாக நடத்திக் காட்டுகிறோம் என்று இதே மன்றத்தில் உங்களுக்கு முன்னால் இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். அதெல்லாம் நடக்கிற காரியமல்ல. அங்கே என்ன நிலைமை என்றால் நீங்கள் ஒதுக்கி இருப்பதில் கூட ஒரு இடத்திற்கு கிட்டத்தட்ட 7,000 ரூபாய் வாங்குகிறார்கள். அதற்கு அவர்கள் இப்போது ரசீது கூட போட்டுக்கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள் அவ்வாறு வாங்கக் கூடிய பணத்திற்கு பாஸ் ஆகி வெளியே போகிறபோது பாக்கிப் பணத்தைத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். பாஸ் ஆனால்தானே தெரியும், பணம் மிச்சம் இருக்கிறதா என்பது குறித்து.

அடுத்து, தொழில் கல்வி. மேல்நிலைப் பள்ளிகளில் அதைக் கற்றுக் கொடுக்க நிரந்தர ஏற்பாடுகள் இல்லை. கற்பிக்கப்படும் தொழில் கல்விக்கான தளவாடங்கள் மற்றும் ஏற்பாடுகள் அங்கே இல்லை. அது கட்டாயம் தேவை. பல பள்ளிகளுக்கும் சேர்த்து ஒரு வண்டியில் தளவாடங்களை வைத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்து நடமாடும் வண்டியாக அவற்றை வைத்து, இந்த முறையில் கல்வியைக் கற்றுக் கொடுத்தால் எப்படி முன்னேற்றம் ஏற்படும்? ஆரம்பத்தில் என்ன செய்யப்பட்டது என்றால் தனியார்கள் நிர்மாணித்து இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு





ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் மாணவர்களைக் கொண்டு போவார்கள். அந்த மாணவர்கள் அந்தத் தொழிற்சாலைகளில் இருக்கின்ற இயந்திரங்களுக்கு மத்தியில் போய் என்ன பண்ணுவார்கள்? இயந்திரங்களுக்குப் பின்னால் பயந்து போய் நிற்பார்கள். அந்த அளவுக்கு பூதாகாரமாக அது தெரியும். எனவே என்ன கஷ்டப்பட்டாவது ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் தேவையான இரண்டு அல்லது மூன்று பாடங்களுக்கான தளவாடங்கள் என்னவோ, சுருக்கமான தளவாடங்கள் என்னவோ அவற்றைக் கட்டாயம் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி இல்லை என்றால் பேசுகிற பேச்சுத்தான் நிற்குமே தவிர அந்த சாராம்சம் பயிற்சியில் இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கீழ் மட்டத்திலிருந்து தொழில் கல்வியைக் கற்பிப்பது அவசியம். தற்போதைய அனுபவத்தில் இருந்து பார்த்தால் ஏதாவது ஒரு தொழில் கற்று இருந்தால்தான் எங்கேயாவது போய் வேலை தேட முடியும். இல்லை என்றால் சாத்தியம் இல்லை. கிராமப்புறங்களில் இருக்கின்றவர்கள் பாப்பர்களாக மாறி நிலத்தை இழந்து வெளியேறுகிறார்கள்.

This is the development that is taking place in our country. கிராமங்களில் உள்ள தங்களுடைய நிலங்களை எல்லாம் விட்டு விட்டு வெளியேறுகிறார்கள். அவர்கள் அத்தனைபேரும் மூட்டை தூக்கி ஜீவனம் பண்ண முடியாது. ஏதாவது தொழில் கற்றிருந்தால்தான் முடியும். ஆகவே கீழ் மட்டத்திலேயிருந்தே அவர்களுக்கு தொழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வாழ்க்கைக்கு ஆதாரமான கல்வி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப் போவதாகவும், அந்த வகையில் சிலபசை மாற்றப்போவதாகவும் சொல்கிறார்கள். அது என்ன என்பது வரும்போது தான் தெரியும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தயாரிக்கிறபோது ஏன் இந்தச் சபையில் எங்களையும் வைத்து விவாதித்து முடிவெடுக்கிற வகையில் ஏன் அந்தத் திட்டங்களை நீங்கள் எங்கள் முன்னால் வைக்கக்கூடாது? அப்படிச் செய்தால் நாங்களும் எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியும்.

அடுத்து, ஆசிரியர்கள் பயிற்சி. இதிலே இப்போது ஒரு தண்டனை கொடுக்கிற நிலைமை இருக்கிறது. அதாவது பெண்களை மட்டும் 20 அல்லது 30 பேர்களை செலக்ட் பண்ணி

வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். ஆண்களை அனுமதிப்ப தில்லை. அது ஏன்? பெண்களாக இருந்தால் தகராறு இருக் காது. ஆண்களாக இருந்தால் காசு ஏதேனும் அதிகமாகக் கேட்டால் தகராறு பண்ணுவார்கள் என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அந்தமாதிரி வித்தியாசம் பார்க்கக் கூடாது. ஆண்கள், பெண்கள் எல்லோருக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும். ஆண்களாக இருப்பவர்கள், அவ்வாறு படிக்க வேண்டி யவர்கள் எல்லாம் தனியார் பள்ளிகளுக்குப் போய் ஏமாற்றப் படுகிற நிலைமை இருக்கிறது. பல்வேறு ஏமாற்று வித்தைகளுக்கு அவர்கள் இரையாகிறார்கள்.

அடுத்து ஆசிரியர்களின் நிலைமை. பஞ்சாயத்துக்களில் உள்ள ஆசிரியர்கள் ஏற்கெனவே அரசு ஊழியர்களாக ஆக்கப் பட்டு இருக்கிறார்கள். அது அவர்களுடைய கோரிக்கை. அது ரொம்ப நல்ல திட்டம். நகரியம், நகராட்சி, மாநகராட்சி போன்ற வற்றில் இருக்கிற ஆசிரியர்களையும் 1—6—1987 முதல் அரசு ஊழியர்களாக ஆக்குகிறீர்கள். ஆனால் தற்போது நிர்வாகம் எல்லாம் அவர்களுடைய கையிலேதான் இருக்கிறது. இதற்கும் வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். அதற்கு பிரம்மாண்டமான ஏற்பாடு தேவை. அரசே செய்யவேண்டும். செய்துதான் ஆகவேண்டும். ஆனால் இதில் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் அரசு கவனிக்க வேண்டும். உதாரணமாக [illegible] என்பது பயங் கரமாக நடக்கிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் இடமாற் றங்கள் செய்யும்போது இங்கே இருக்கிற டைரக்டர் ஆஃப் கல்லெ ஜியேட் எஜுகேஷன் மட்டும்தான் பொறுப்பாக இருந்து அத்தனை மாற்றங்களையும் செய்வது என்றால், திட்டவட்டமாக நான் சொல்கிறேன், அது ஊழலுக்கு இடம் கொடுக்கும். ஆகவே டிஸ்ட்ரிக்ட் வைஸ்-ஆக இதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து பி.எஃப். பணம் பஞ்சாயத்தில் பிடித்து இருக்கிறது. ஆசிரியர்களுக்கு எல்லாம் பி.எஃப். பணம் இருந்து வந்தது. எவ்வளவு பணம் அவர்களுக்கு இருக்கிறது என்ற கணக்கு இல்லை. அவர்களுக்கே அது எவ்வளவு என்பது தெரியாது. காரணம்





அதற்கான ரெக்கார்டே கொடுக்கவில்லை. பிடிக்கின்ற பணத்தைப் பிடித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். இதைப் பொறுத்த வரையில் அரசுக்கு உரிய தகவல் இருக்க வேண்டும். அப்படி அரசுக்குத் தகவல் இருக்கிறதா? ரெக்கார்டு இருக்கிறதா? எனக்குத் தெரிந்த வரையில் அரசினிடத்தில் அந்தத் தகவல் இல்லை என்றுதான் சொல்லப்படுகிறது. ஏன் இந்த நிலைமை? எல்லாவற்றையும் சென்ட்ரலைஸ் பண்ணி இதற்கெல்லாம் தேவையான ரெக்கார்டு வைத்து, வருஷத்திற்கு ஒருதரம் அதனைக் கணக்கிட்டு அந்தப் பணக்கணக்கையும் ரெக்கார்டை ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டும். அவர்களுடைய பணமும், நீங்கள் போட வேண்டிய பணமும் அதிலே இருக்கிறது. ஆயிரக் கணக்கான ஊழியர்களுக்கு கணக்குகளை அளிக்க வேண்டும். 5 ஆயிரம் 6 ஆயிரம் கிளார்க்குகள் அந்த வேலைக்கு வேண்டும். ஆனால் அது இல்லை. இருந்தாலும் அதைப் பண்ணவேண்டும் என்றால் நிறைய செலவு ஆகும். ஆனால் செலவு ஆனாலும் பரவாயில்லை என்று கிளார்க்குகள் போட வேண்டும். இல்லையென்றால் நாளைக்கு இவ்வளவு பணமும் யாரோ கொண்டு போனார்கள் என்ற பிரச்சினை எல்லாம் வரும். அப்படி இல்லாமல் இதை நீங்கள் கவனிக்க வேண்டும். எவ்வளவோ செலவு பண்ணும்போது இதையும் கவனித்து, வேண்டிய கணக்கு களைத் தயாரித்து, அவர்களுக்கு வழங்க ஏற்பாடு பண்ண வேண்டும்.

அடுத்து ஆசிரியர்கள் பிரச்சினை. ஆரம்ப ஆசிரியர்கள் முதல் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வரையிலும், மற்ற ஊழியர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரம் கேடி போராட்டம் நடத்தினார்கள். 2 மாத காலம் தமிழகத் திலே அது நடந்தது. தமிழக மக்களும், உழைப்பாளர் வர்க்கமும் அவர்களுக்கு உறுதுணையாக நின்றார்கள். அதனுடைய பலன் [illegible] முதல் அமைச்சர் அவர்கள் அவர்களை அழைத்துப் [illegible] அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாக்குறுதி அளித்தார்கள். அந்தப் போராட்டத்திலே சில ஆசிரியர்கள் வேதனையினாலும் கவலையினாலும் இறந்து போய்விட்டார்கள். அந்தத் தியாகமும் செய்தார்கள். இன்றைக்கு அவர்களுடைய நிலை என்ன? நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம். எங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள்

[திரு. கு. ரமணி] 1987 ஏப்ரல் 8]

முழுமையாக நிறைவேற்றப்படவில்லை, சிலதுதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அவர்கள் வேதனைப்படுகிறார்கள். இதை நான் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. அவர்களுடைய நிலைமை அது. அதைப் புரிந்து கொண்டுதான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களே அவர்களை அழைத்துப் பேசி அந்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது).

நான் தலைவரிடமே நேரம் கேட்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. அதற்குத்தான் அவசரமாகப் படித்துக் கொண்டிருக்கிறேன்.

அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அவர்களுடைய படிப்புக்கு ஏற்ப சிறப்பு ஊதியம் கொடுக்கப்பட்டது. அவர்களைத் தவிர, கடைநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், மற்ற ஊழியர்கள் என்று யாருக்கும் இந்த சிறப்பு ஊதியம் வழங்கப்படவில்லை. இதை அவர்கள் எப்படி எண்ணுகிறார்கள் என்றால், கல்லூரி ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் மத்தியில் பிளவு உண்டாக்கக் கூடிய நிலைமை என்று கருதுகிறார்கள். அவர்களுடைய மனோநிலையைத் தெரிந்துதான் நான் சொல்கிறேன்.

அடுத்து, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் 1981 முதல் செனட், சிண்டிகேட் கவுன்சில் தேர்தல் நடத்தப்படவே இல்லை. அது சம்பந்தமாக இருக்கிற வழக்கை உடனே முடிவிற்குக் கொண்டு வர [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால், அந்த ஸ்தாபனங்களை அமைப்பதில் ஆசிரியர்களுக்குத்தான் [illegible] கொடுக்க வேண்டும் என்று சொல்லலாம் [illegible] இதைப்பற்றி உங்களுக்கு முன்னால் அமைச்சராக இருந்தவர்கூட இதே அவையில் சொல்லியிருக்கிறார்கள். [illegible] உடனடியாக முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. கு. ரமணி]

[illegible] கழுதியில உள்ள ஒரு கல்லூரி இடிந்தே விழுந்துவிட்டது. அது இப்போது காது ஹராப்ட ஸ்தாபனத்தினுடைய கோர்ட்வுனுக்குள்ளே நடந்துகொண்டிருக்கிறது. இது எல்லாம் ரொம்ப மோசமான நிலைமை. கல்லூரி மாணவர்கள் எப்படி தங்களுடைய படிப்பை முறையாக அங்கே நடத்துவார்கள். இவைகள் எல்லாம் உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அதேபோல அடுத்தது கான்டிராக்ட் முறை. கான்டிராக்ட் முறை கூட 1969-லே அபாலிஷன் செய்ய சட்டம் செய்து ஆகிவிட்டது. ஆனால் அது பரந்து கல்லூரிகளில் பரவி பரவி இப்போது ஆசிரியர்களுக்கு மத்தியிலே வந்து இருக்கிறது. கல்லூரிகளிலே கான்டிராக்ட் அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்கள். அவர்களில் 200 முதல் 300 பேர்கள்

(பிற்பகல் 1-10)

வரை பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசு இப்படி நடப்பது எப்படி சரியாக இருக்கும்? படித்தவர்கள் இடையே வேலையின்மை அதிகரித்து வருவதைப் பயன்படுத்தி இப்படிச் செய்வதை ஒரு சுரண்டுகிற முறை இன்டன்சிவ் எக்ஸ்ப்ளாய்டேஷன் என்று சொன்னால் என்ன தவறு? அவர்களுக்கு அரசாங்கம் கொடுத்த பொங்கல் பண்டிகைப் பரிசுப் பணம் 300 ரூபாயை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி அவர்கள் விசேஷமான பயிற்சி பெற்றவர்கள் என்ற முறையில் 100 ரூபாய் கொடுத்து வருவதை ஒன்பது மாதங்கள் கொடுத்து அந்த 900 ரூபாயையும் பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வேலையும் போயிற்று, வெறும் கையோடு போகிறார்கள். 900 ரூபாயும், 300 ரூபாயும் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் எப்படிக் கொடுப்பார்கள். அவர்களை கைது செய்து ஜெயிலில் தான் போட வேண்டும். அது சரியில்லாதது, அப்படி செய்யக் கூடாது.

அடுத்து சி.இ.ஓ. பதவிகள் 12 மாவட்டங்களில் காலியாக இருக்கின்றன. எல்லோருக்கும் புகார் எழுதி கடைசியாக மேலதிகாரி என்ற முறையில் அப்பீல் பண்ணுகிற இடம் அது. அந்த இடங்களில் அதிகாரிகளை உடனே போட வேண்டும். அந்த இடங்களில் டி.இ.ஓ.க்களை வைத்து காரியங்களை நடத்துவது [illegible] சரியல்ல.

[திரு. கு. ராமணி] [1987 ஏப்ரல் 8

அந்தமாதிரி கல்லூரி ஆசிரியர்கள் சம்பள விகிதம் என்பது 14 ஆண்டுகளாக இன்னும் மாற்றியமைக்கப்படவில்லை. மத்திய அரசு தான் அதைச் செய்ய வேண்டுமென்பது சரி. மத்திய அரசு செய்யாமல் இருப்பதைப் பார்த்து நம்முடைய சர்க்கார் சும்மா இருக்கக் கூடாது. அப்படி இருப்பது சரியல்ல. மத்திய அரசு அவர்களின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கிறார்கள். கொடுக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை, ரொம்பவும் சரி, அதை நான் வரவேற்கிறேன். அந்த கல்லூரி ஆசிரியர்கள் என்ன சொந்தவர்களா? அவர்களுக்கு இந்த சம்பள விகிதத்தை மாற்றம் செய்ய வேண்டும். மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்த வேண்டும். அரசியல் பந்தமும், சினேகிதமும் வேறு. நம்முடைய ஊழியர்களைப் பாதுகாப்பது என்பது நம்முடைய கடமை, அப்படிச் செய்ய வேண்டும்.

அதைப்போல அண்ணா பல்கலைக் கழகம் பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். 900 தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். பதிவு செய்த தொழிற்சங்கம் வேறு இருக்கிறது. தொழிற்சங்க ஊழியர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். சங்கத்தினுடைய தலைவர் இரா. கணேசன் ஏழு ஆண்டுகளாக சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். சண்முகம், இராஜேஷ் கண்ணன், சுரேந்திரபாபு ஆகிய மூன்று பேர்கள் நான்கு வருடங்களாக சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். உப தலைவர் உன்னிகிருஷ்ணன் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். சட்டப்படியான 'சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ்' கூட கொடுக்கப்படவில்லை. நாம் ஆராய்ச்சிகளை நடத்துகிறோம். அறிவின் இருப்பிடமென்று நாம் பல்கலைக் கழகத்தை சித்தரிக்கிறோம். அங்கே இப்படிப்பட்ட அறிவிற்கு ஒத்து வராத நடவடிக்கைகள் நடக்கின்றன. ஆகவே அவர்களோடு கலந்து பேசி உங்களுடைய பினான்ஷியல் பொசிஷனுக்கு இவர்களுக்கு என்ன செய்ய முடியுமென்பதை நேரடியாகப் பேசி ஒரு நடவடிக்கையெடுக்க வேண்டும். அதனால் அவர்களுக்கு பிரச்சினை தீரும் மனநிம்மதி ஏற்படும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 31—3—1987-ம் நாள் [illegible] உங்களுக்கு ஒரு மகஜர் கொடுத்திருக்கிறது. அதிலே [illegible] சொல்லப்பட்டிருக்கிறது? கிராமங்களில் பெண் குழந்தைகள்



1987 ஏப்ரல் 8] [திரு. கு. ராமணி]

படிக்க வசதிகளை அதிகமாகச் செய்ய வேண்டும். கிராமப்புறங்களில் பெண்கள் பள்ளிக்கூடங்களை உருவாக்கி, அங்கே ஹாஸ்டல்களையும் ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் கிராமப் பெண்கள் இப்போது அதிகமாகப் படிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதேபோல் தனியார் பள்ளி, கல்லூரிகள். இவைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஏற்கெனவே ஏராளமாக அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இப்போது நிலைமை என்னவென்றால் அரசாங்கத்தையே அவர்கள் சேலஞ்ஜ் பண்ணுகிற அளவிற்கு வளர்ந்திருக்கிறார்கள். "கோயம்புத்தூரில் நான்-மைனாரிட்டி காலேஜ் மனேஜ்மெண்ட் அசோசியேஷன்' என்று நோட்டீஸ் கூட வந்திருக்கும் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு தனியார் கல்லூரி சட்டத்தை உடனடியாகத் திருத்த வேண்டும். அவர்களுக்குச் சாதகமாக எப்படித் திருத்துவது? பிரின்சிபால்களின் வேலை முழுவதிலும் எந்த விதமான தலையீடும் ஆசிரியர்கள் மூலம் ஏற்படக் கூடாது. பிரின்சிபால் லீவு போட்டு போனால், கல்லூரி மானேஜ்மெண்ட் கமிட்டியே வேறு பிரின்சிபாலை வைத்துக் கொள்வதற்கு அனுமதி வேண்டும். இதிலே கல்லூரிக் கல்வி இயக்குநரின் தலையீடு கூடாது. நாளைக்கு உங்களையே தலையிடக் கூடாது என்று சொல்லப் போகிறார்கள். அந்த நிலைமை ஏற்படும். அடுத்து ஆசிரியர்கள் சங்கங்கள் முதல்வர் வேலையில் தலையிடக் கூடாது. எந்த வேலையை அவர் செய்தாலும் தலையிடக் கூடாது. ஊழியர்கள் பதவிஉயர்வு சீனியாரிட்டியிலே தலையிடக் கூடாது. இவர்கள் இதுவரையில் படித்த பட்டம் பெற்றது எல்லாம் வியர்த்தம். மேலும் புதிய அசெஸ்மெண்ட் தேவை என்றால் இவர்களுக்கு மெரிட் இல்லையென்று அர்த்தம். அப்படிப்பட்டவர்கள் அதிகம் தெரிந்தவர்கள் வேலை செய்தால் நீங்கள் அவர்களுக்கு சன்மானம் கொடுங்கள். ஆனால் இடையில் இப்படிப்பட்ட இண்டரிம் அசெஸ்மெண்ட் எடுத்து எப்படி அவர்களை பழிவாங்க முடியும்? அது சாத்தியமல்ல. அதே போன்று கோடைக்கால விடுமுறையை இரண்டாகப் பிரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஒரு பகுதிக்கு கொடுங்கள் என்றும் இன்னொரு பகுதிக்கு ஸ்ப்ரெட் ஓவர் பண்ணி விடலாம் என்றும் சொல்கிறார்கள். அந்த லீவைக் கூட அவர்கள்

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 8

பெண்டாட்டி பிள்ளைகளோடு அனுபவிக்கக் கூடாது என்று முழங்கிய சொல்லுக்குரியவர்கள். என்ன கொடுமை இது? இந்நாட்டின் தனியார் பள்ளி, ஆச்சரியம் இந்தியாவினுடைய பாரம்பரியமான அதற்கு எதிராக 'சாவரன்ட்டி ஆப் இந்தியா, யூனிட்டி ஆப் இந்தியா, இண்டகிரிட்டி ஆப் இந்தியா' என்று சொல்லிக் கொண்டிருக்கும்படியான இந்த கொள்கைகளுக்கு எதிராக இந்தக் கல்வி ஸ்தாபனங்களில், ஆசிரியர்கள் நடவடிக்கைகளுக்கு இறங்கினால், அதற்கு விருப்பம் ஏற்படக் கூடிய முறையில ஆசிரியர்கள் நடந்தால், அவர்களைக் கைது செய்து சிறையிலே அடைக்கக்கூடிய அளவிற்கு தண்டனைச் சட்டங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைக்கு இன்று தனியார் கல்வி நிறுவனங்கள் வந்தாகிவிட்டது. அவர்கள் பணம் வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள். இப்போது அவர்கள் உங்களையே பதம் பார்க்கிறார்கள். எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். சர்க்கார் என்ன கட்டுத் திட்டங்கள், விசேஷ விதிமுறைகள் வைத்திருக்கிறதோ, அதற்கு எதிராக நடக்கக்கூடிய கல்வி ஸ்தாபனங்கள் மீது கடுமையான ஆக்ஷன் எடுக்க வேண்டும்.

அதேமாதிரி கோயம்புத்தூர் பாரதியார் யுனிவர்சிடி வருவதைப் பற்றி அன்று சந்தோஷப்பட்டோம். ஆனால் அந்த யூனிவர்சிடி சிண்டிகேட்டிலே, தணிக்கை பண்ணப்பட்ட அக்கவுன்ட்ஸ்கள் வைக்கப்படுவதில்லை. சென்னை பல்கலைக் கழகத்திலும் அப்படித்தான் நடக்கிறது. அங்கே தணிக்கை அக்கவுண்ட்ஸ் வைக்கக் கூடாது என்று சொன்னால், என்ன அர்த்தம்? எனவே இவைகள் எல்லாம் தவறான பெரும் மோசமான நிலைமைகளை ஏற்படுத்திவிடும். கல்வியை அடிப்படையிலேயே பாதிக்கும், டிசிப்ளினை பாதிக்கும், ஒழுங்கு முறையைப் பாதிக்கும். இவைகளால் நாம் எதிர்பார்க்கிற முன்னேற்றம் ஏற்படாது. எனவே இவைகளைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என்பதைப்பற்றி, நீங்கள் பதில் சொல்லும்போது கூறினால் நன்றாக இருக்கும் என்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காலை முதல் மாலை தொட்டு, இரவு விடியும் மட்டும்' ஏழை எளியவர்களுடைய வாழ்வை



[1987 ஏப்ரல் 8 [திரு. பாப்பா சுப்பிரமணியன்]

எண்ணி உழைத்து வரும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்கள் 'புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்' என்கிற கொள்கையின் அடிப்படையிலே வறுமையை ஒழிக்கவேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடு, ஏழை எளியவர்கள், பாட்டாளி வர்க்கத்திற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்த பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறார்கள். அதற்கேற்ற வகையில், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்தக் கல்வி மானியத்திலே பல்வேறு திட்டங்களைத் தீட்டி. மிகவும் சீர்திருத்தம் செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு. பள்ளிப் படிப்பு என்பது பணக்காரர்களுக்கு மட்டுமல்ல, ஏழை எளியவர்கள். பாட்டாளி மக்கள் அத்தனை பேர்களும் படிக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சிறிய குழந்தைகள், இளம் குழந்தைகள், அனைவரும் கல்வியிலே ஒரு நாட்டம் பெற்றாக வேண்டும். அவர்களுக்கு ஒரு நோட்டம் வந்தாக வேண்டும் என்ற அடிப்படையிலே இன்றையதினம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறார்கள் என்பதை அனுபவபூர்வமாகப் பார்க்கிறோம்.

பழைய காலத்திலே, நம்முடைய இந்துக்கள் கோயில்களிலே மாலை நேரத்திலே ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்கிற நேரத்தில், அங்கே சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, சுண்டல் கடலை போன்ற பல்வேறு பதார்த்தங்களை அங்குள்ள பெரியவர்கள் வழங்குவார்கள். ஆண்டவனுடைய சன்னிதானத்தில். மாலை நேரத்திலும், இரவு நேரத்திலும் சிறிய குழந்தைகளும், பெரிய குழந்தைகளும் விளையாடிக்கொண்டு இருப்பார்கள். அப்படிக் கோயில்களிலே விளையாடிக்கொண்டிருக்கிற நேரத்தில் கோயில்களில் மணி அடிக்கும். சாமியைக் கும்பிடுவதற்காக. அப்படி சாமி கும்பிடுவதற்காக மணி அடிக்கிற நேரத்தில் பெரியவர்கள் ஒரு வரிசையிலே நின்று சாமியைக் கும்பிடுவார்கள். அந்த நேரத்திலே சிறியவர்களும், இளைஞர்களும் [illegible] பெரியவர்களோடு சேர்ந்து ஆண்டவன் சன்னிதானத்திலே பெரியவர்கள் போதிக்கும் பக்தி என்ற கல்வியைப் பெறுவார்கள். அப்படிப்பட்ட பக்தி என்ற கல்வியை [illegible] என்ற கல்வியை பெரியவர்கள் ஆண்டவனுடைய சன்னிதானத்தில்

[திரு பாப்பா சுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 8

அளித்தார்கள். அந்தப் பெரியவர்கள் எல்லாம் எப்படி அந்தக் [illegible] வேண்டும், அல்லது [illegible] [illegible] என்ற நோக்கத்தோடு அவர்கள் கோயில்களிலே [illegible] எப்படி பக்தி என்ற [illegible] [illegible] பிரசாதங்களைக் கொடுத்து, [illegible] [illegible]களோ, அதே போன்றுதான் [illegible] புரட்சித் தலைவர் அவர்கள், குழந்தைகள் தட்டு தூக்க [illegible] அல்லது [illegible] வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் உண்மையிலேயே, மாணவ சமுதாயத்திற்கு நல்ல படிப்பைக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் அவர்களுக்குக் கல்வியிலே ஒரு ஆர்வம் வரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், தற்போது சத்துணவுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவருடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. இலவச சீருடை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இலவச காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இலவச புத்தகம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

(பிற்பகல் 1-20)

ஒரு கவிஞன், கம்யூனிஸ்ட் கவிஞன் பாடுகின்றான். "காலுக்கு செருப்பு இல்லை, கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லை, உழைத்தோமடா தோழா, உழைத்து உழைத்து உருக்குலைந்து போனோமடா' என்று கம்யூனிஸ்ட் கவிஞன் ஜீவா அன்றையதினம் பாடினார். அந்த கவிஞன் ஜீவாவுடைய உள்ளக் குமுறலை உணர்ந்து [illegible] இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றையதினம், கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லை என்று பாடினானே அந்தக் கவிஞனுடைய உள்ளக் குமுறலைப் புரிந்துகொண்டு கவலைப்படாதீர்கள். உங்களுடைய குமுறலை [illegible] நிறைவேற்றுவதற்கு நான் [illegible] என்று புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் [illegible] [illegible]. [illegible] பாடினானே காலுக்கு செருப்பில்லை என்று [illegible] எண்ணக் குமுறலுக்கு, இன்றைய [illegible] [illegible] [illegible] புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு பல்வேறு [illegible] [illegible] என்பதை நான் இந்தச்



1987 ஏப்ரல் 8] [திரு பாப்பா சுப்பிரமணியன்]

சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட சத்துணவுத் திட்டத்தையும், சீருடை திட்டத்தையும், இன்னும் பல்வேறு திட்டங்களையும் செய்ய முடியாதவர்கள், திக்கற்றவர்கள், திறனற்றவர்கள், உண்மையிலேயே இந்த அரசினுடைய நல்ல நோக்கத்தின்பால் நல்லெண்ணம் இல்லாதவர்களெல்லாம் இன்றையதினம் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நியாயமாக எதையும் செய்கிறது, ஏழை எளியவர்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்கிறவர்கள் இன்றையதினம் மனப்பூர்வமாக புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை பாராட்டத்தான் செய்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்வதோடு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு திட்டங்களைத் தீட்டி கிட்டத்தட்ட 597 கோடி ரூபாய்க்கு புரட்சித் தலைவர் அரசு பல்வேறு திட்டங்களை இந்த எஜுகேஷன் டிபார்ட்மெண்டுக்காக, கல்வி மானியத்திற்காக ஒதுக்கி இருக்கிறது. அதுவும், குறிப்பாக பள்ளிக் கல்விக்காக 484 கோடி ரூபாயை ஒதுக்கி புரட்சித் தலைவர் அரசு ஏழை எளியவர்கள் எந்த அளவுக்கு கல்வியால் பயன் பெறவேண்டுமென்பதற்காகப் பாடுபட்டு வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்வதோடு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே; நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் 75 பேரும் அதைப்போல நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் 25 பேரும், அதைப்போல நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் பிஎட். படித்தவர்கள் 200 பேரையும் புரட்சித் தலைவர் அரசு இன்றையதினம் நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியிலேதான் ஆசிரியர்கள் சுதந்திரப் பறவைகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு காலகட்டத்திலே ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுடைய கொத்தடிமைகளாக வாழ்ந்த ஆசிரியப் பெருமக்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அவர்களுடைய அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு இன்றையதினம் அவர்கள் சுதந்திரப் பறவைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. பாப்பா சுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 8

அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டுகூட நான் பேசிய நேரத்
திலே இன்னும் தமிழகத்திலே இலங்கைத் தமிழர்கள், நகராட்சிப்
பள்ளி ஆசிரியர்களாகவும், தனியார் பள்ளி ஆசிரியர்களாகவும்,
இன்றையதினம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும்
ஒரு காலகட்டத்திலே விடுதலை தரவேண்டுமென்று
நான் சென்ற கல்வி மானியத்திலே பேசிய
நேரத்திலே குறிப்பிட்டுப் பேசினேன். ஆனால் இன்றையதினம்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நகராட்சிப் பள்ளிகளு
டைய ஆசிரியர்களுக்கு விடுதலை கொடுக்கக்கூடிய அளவுக்கு
இன்றையதினம் அவர்களையும் அரசு ஊழியர்களாக மாற்றி,
அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், கல்வியைப் பொறுத்த
வரையில் அந்த அளவுக்கு முறையாக செயல்பட வேண்டுமென்ப
தற்காகவும், தன்னிச்சையோடு அவர்கள் செயல்பட வேண்டுமென்
பதற்காகவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு
செயல்பட்டு வருகிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே
தெரிவித்து, அதுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய ஆட்சியிலேதான் கல்வியினுடைய வளர்ச்சி,
சிறப்பாக, மேலோங்கி உயரவேண்டுமென்பதற்காக தஞ்சையிலே
தமிழ் பல்கலைக்கழகமும், அதைப்போல கிட்டத்தட்ட 9 பல்கலைக்
கழகங்களையும் துவக்குகின்ற அதே நேரத்திலே புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த ஆண்டு மருத்துவக் கல்விக்கும் ஒரு
பல்கலைக்கழகத்தைத் துவக்குவதாக இருக்கிறார்கள் என்ப
தையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்வதோடு,
நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர்
அவர்கள், சமீபத்திலே தஞ்சைக்கு வருகை தந்து, அவர்கள்
தமிழ், தமிழ், தமிழ், தமிழ்நாடு என்று சொல்லி, பல்கலைக்
கழகங்களைத் திறக்கவிருக்கிறார்கள். பல்வேறு ஆட்சியாளர்
களும் இந்த நாட்டை ஆண்டாலும்கூட. இப்படி தமிழ்
தமிழ் என்று சொல்லி தமிழ்நாட்டை அவர்கள் ஏமாற்றி இருந்
தாலும்கூட, அவர்களெல்லாம் தமிழுக்காக ஒன்றும் செய்துவிட
வில்லை. ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்
தமிழுக்காக பல்கலைக் கழகம் ஒன்றை துவக்குவதற்காக,
இன்னும் ரெண்டு மூன்று தினங்களிலே 13, 14, 15, 16 ஆம் தேதி
களிலே தஞ்சை மாவட்டத்துக்கு வருகை தந்து எங்களுடைய



1987 ஏப்ரல் 8] [திரு பாப்பா சுப்பிரமணியன்]

தஞ்சையில் வறுமையால் வாடிக்கொண்டிருக்கிற அந்த மக்களு
டைய கண்ணீரைத் துடைத்து எங்களை வாழவைப்பதற்காக,
தம்மை வாழ வைப்பதற்காக தஞ்சைக்கு வர இருக்கிறார்கள்.
எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை என்
னுடைய தொகுதியின் சார்பாக இந்தச் சந்தர்ப்பத்திலே வருக
வருக என்று நான் வரவேற்பதோடு, என்னுடைய தொகுதியைப்
பொறுத்தவரையில் ஒருசில கோரிக்கைகளையும் வைக்க விரும்பு
கிறேன்.

கூடவாசல் மருத்துவமனையை தாலுக்கா மருத்துவ
மனையாக அந்தஸ்தை உயர்த்தித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்வதோடு, அந்த மருத்துவமனைக்கு புதிய கட்டிடங்
களையும் கட்டித் தரவேண்டுமென்பதையும், அதைப்போல கூட
வாசல் வட்டம் எரவாஞ்சேரியில் புதிதாக ஒரு காவல்
நிலையத்தை உருவாக்கித் தரவேண்டுமென்றும், அதைப்போல
முதியோர் உதவித் தொகை பெற்றுவரும் முதியவர்கள், இறந்து
விட்டால் அவர்களுக்கு அரசாங்கமே ஈமச் சடங்கத்திற்காக
ரூபாயை ஒதுக்கித் தரவேண்டுமென்றும், இந்தச் சந்தர்ப்பத்திலே
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிடர்கள் இறந்து விட்டால், இன்றையதினம் 100
ரூபாயை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அவர்களின்
ஈமச்சடங்கிற்காக தந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால்
அனாதைகள் இறந்துவிட்டால் அந்த அனாதையை அடக்கம்
செய்வதற்கு யாரும் இல்லாமல் பிணம் நடு ரோடில் இருக்கிறது.
ஆகவே அப்படிப்பட்ட அனாதைகள் இறந்துவிட்டால்,
அவர்களை அடக்கம் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் அவர்களின் அடக்கச் செலவிற்கு 100 ரூபாயைத் தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மயிலாடுதுறை வட்டம், மங்கநல்லூரிலும், கூட
வாசல் வட்டம். எரவாஞ்சேரியிலும் கிளை நூலகத்தை அமைத்துத்
தரவேண்டும். என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்
கிறேன். அதேபோல் அமுதம் அங்காடியைப் பொறுத்தவரையில்
தரங்கை வட்டம், கீழ வல்லம், மயிலாடுதுறை வட்டம் கூடமங்
குடி, ஆலங்குடி, குடவாசல் வட்டம், சுரைக்காயூர் ஆகிய இடங்
களில் அமுதம் அங்காடிகளை திறக்கவேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். குத்தாலம் அரசு

மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்களை நியமித்து கிட்டத் தட்ட 10 படுக்கைகளுக்கான கட்டிட வசதி கொண்ட, குடிநீர் வசதி கொண்ட மருத்துவ மனையாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குத்தாலத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு திரு. கோபாலன் எஜுகேஷன் டைரக்டராக இருக்கிறார். அவர் குத்தாலம் உயர்நிலைப் பள்ளியில் படித்தவர். அவரே இன்றைய தினம் டைரக்டராக இருக்கிறார். அங்கே பெண்களுக்கு என்று தனியாக ஒரு உயர்நிலைப்பள்ளி இல்லை. ஆகவே தனியாக பெண்களுக்கு என்று ஒரு உயர்நிலைப்பள்ளியை குத்தாலத்தில் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குடவாசல் ஒன்றியம், வடுகர்பாளையம் கிராமத்தில் புதிதாக ஒரு துவக்கப்பள்ளியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பாலங்களைப் பொறுத்தவரையில், தேதியூர்-பாக சாலைக்கு குறுக்கே திருமலைராஜனுக்கு குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் மணவாளநல்லூர்-மருத்துவக்குடிக்கு குறுக்கில் அரசலாறுக்கு குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் காஞ்சிவாய்-கூடலூர்க்குக் குறுக்கே நண்டலாறுக்கு குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் எரவாஞ்சேரி-நாலாங்கட்டளைக்கு குறுக்கே அரசலாறுக்கு குறுக்கே ஒரு பாலத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கல்வி மானியத் தைப்பற்றி பேசுங்கள். பாலங்களைப் பற்றி எல்லாம் அப்ரோபிரி யேஷன் பில் வரும்போது பேசலாம்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் செருகளத்தூர்-இராதாநல்லூர்க்கு குறுக்கே குடமுருட்டிக்கு குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் சேத்ரபாலபுரம்-கூடலங்குடிக்கு குறுக்கே காவிரியின்





குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சேதவிபுரம்-வெள்ளமண்டபத்துக்கு குறுக்கே முடிகொண்டானுக்கு குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கல்வி சம்பந்த மாக இருந்தால மட்டும் பேசுங்கள்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை, பிரச்சினைகளை வைக்க மறந்துவிட்ட காரணத்தால், நான் என்னுடைய தொகுதி சம்பந்த மான பிரச்சினைகளைப் பேசுவதால், அது அவர்களுக்கு இடையூறாக இருக்குமோ என்று கருதி, என்னுடைய பிரச்சினையைப் பற்றி பேசுவதற்கு இடையூறாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றச்சாட்டை உறுப்பினர்கள்மேல் சொல்லக்கூடாது. கல்வி மானியத்தில் பேசுங்கள். அடுத்த உறுப்பினர் மேல் குற்றச்சாட்டை சொல்ல வேண்டாம்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் வளர்ச்சிக்காகவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், கல்வித் துறையின் மூலமாக பாடுபட்டுக்கொண்டு வருவதை பாராட்டி, வரவேற்று பேசுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பிற்பகல் 2-00 மணிக்குப் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(பிற்பகல் 2-00)

பிற்பகல் 2-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. வரவு செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி,

கோரிக்கை எண் 17—கல்வி.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவாதத்தில் எடுத்துக்கொள்ளப் படுகின்ற கல்வி இலாக்காவினுடைய மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக் கின்ற செய்ற்குறிப்பிலே நவோதயா பள்ளியைப் பற்றி ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, 7-வது பக்கத்திலே, 12-வது பாராகிராஃபிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது :

"12. The Government are of the view that only the regional language should be the Medium of Instruction in Navodaya Vidyalayas, with English Medium if necessary for the benefit of linguistic minorities and children from other States."

இந்தக் கருத்து 'ரீஜினல் லேங்வேஜ்' அதாவது மாநில மொழி பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர் களே, அதுகுறித்து மைய அரசிடம் என்ன விவாதித்து இருக்கி றீர்கள், என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பது இந்த செயற்குறிப்பில் தெரிவிக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு அவ்வப்போது அது குறித்து மாநில அரசுடன் தொடர்பு கொண்டு வருகிறது நவோதயா பள்ளி ஒவ்வொரு மாநிலத்திலும் துவக்கப்பட வேண்டும் என்பதிலே மைய அரசு ஆர்வம் காட்டி வருகிறது. அதிலே அவர்கள் தெளிவாகச் சொல்லியிருப்பது—

"Admissions to Navodaya Vidyalayas should be at the level of Class 6. In view of the fact that the wordings contained in the provisions circulated by the Government of India to State Government and in view of the fact that most of the students would have been taught earlier through the medium of mother tongue—regional language—, instructions will be provided through the same medium upto 7th or 8th class. During which time, intensive teaching of Hindi and English both as language subject and co-media will be undertaken. Through the skilful use of the media and modern techniques of teaching languages, switch over to Hindi and English



after 7th and 8th class would present no difficulty. Therefore, common medium will be Hindi and English in all the Navodaya Vidyalayas."

This is the clear instruction given by the Government of India to the State Governments.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நவோதயா வித்யாலயா பள்ளியி னுடைய விவரங்களை நான் படித்த வரையிலே, 8-வது வகுப்பு வரையிலும் மாநில மொழியிலே பயிற்று மொழி இருக்கும். 8-வது வகுப்பிற்குப் பிறகு 9-வது வகுப்பு துவக்குகின்றபோது, ஆங்கிலத்தையும், இந்தியையும் பயிற்று மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் என்று இருப்பதாக நான் படித்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்வதிலே என்ன தயக்கம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசிடம் நாங்கள் விளக்கம் கேட்டோம். அண்மையிலே நடந்த அகில இந்திய கல்வி மாநாட்டில்கூட, மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சரிடம் பேசினேன். அது கோ-கரிகுலாவாக— both English and Hindi will continue to be Medium of Instruction என்பதில் மாற்றம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** தலைவர் அவர்களே, இன்றைக்கு மக்கள் மத்தியிலே பிற மாநிலங்கள் பெறுகின்ற நன்மைகளை, இந்த நவோதயா பள்ளிகளை நம் மாநிலத்தில் ஏற்றுக்கொள் ளாததால், நாம் பெற முடியவில்லை என்ற கருத்து இருந்து வருகிறது. மக்கள் கற்க வருகின்றபோது, என் மற்ற மாநிலங் களில் எல்லாம் வெவ்வேறு மொழி பேசுகின்றவர்கள் இருந்த போதிலும் அதை ஏற்றுக்கொள்ளும்போது, நாமும் ஏன் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். எனவே நான் கேட்டுக்கொள்வது, இந்த நவோதயா பள்ளி மூலம் 'மாடர்ன் டெக்னாலஜி' என்ற வகையில், நல்ல விஞ்ஞான ரீதியான கல்வி நமக்குக் கொடுக்கப்படும் என்ற வகையில் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். மேலும் நம்முடைய பாலிசி நோட்டில் சொல்லப் பட்டிருக்கிறது. தாய் மொழியை ஒரு வகுப்பு வரையிலும் கற்றுக் கொடுத்தப் பிறகு விஞ்ஞானம் மற்ற டெக்னாலஜி கற்றுக் கொடுக்கின்றபோது ஆங்கில மொழியையும் நாம் பயன்

வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இந்த நவோதயா வித்யாலயாவை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வெறுகமொள்ள வேண்டும் என்பதை என்னுடைய கட்சியின் கருத்தாக வைக்க விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தும் கல்வி நிலையை எடுத்துக்கொண்டால் பல்வேறு நிலைகள் இருக்கின்றன. பணக்காரர்களுக்கு ஒருவிதமான கல்வி, ஏழைகளுக்கு ஒருவிதமான கல்வி. சென்னையில் இருக்கின்ற டான்பாஸ்கோ, ரோசரி மெட்ரிகுலேஷன் போன்ற பள்ளிகளில் பணக்காரர்கள் படிக்கிறார்கள். பணம் அதிகம் இருப்பதினால் படித்து முன்னேறி அவர்கள் பெரிய பதவியில் இருக்கிறார்கள். ஆனால் அரசு உயர் நிலைப் பள்ளிகளில் படிக்கின்றவர்களுடைய ஸ்டாண்டர்டு மிகவும் குறைவாக இருந்து, எந்த எண்ட்ரன்ஸ் பரிட்சைக்குப் போனாலும் தேர்வு பெறாத நிலை இருக்கிறது. கல்வி என்றால் அது தனியார் பள்ளிகளானாலும், அரசு பள்ளிகளானாலும் ஒரு சீரான கல்வியாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இன்றைக்குப் பணம் படைத்தவர்களுக்கு ஒருவிதமான கல்வி, ஏழைகளுக்கு ஒருவிதமான கல்வி இருக்கக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஆங்கிலத்திலே படிக்க வேண்டும் என்ற மோகம் தமிழகத்திலே எல்லா நிலையில் இருக்கின்ற சமுதாயத்தினரிடமும் இருக்கிறது. ஒரு சிறிய கிராமத்தில் கூட இந்த ஆங்கிலப் பள்ளிகள் வியாபார ரீதியாக துவக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளுக்கு ரெக்கக்னிஷன் கிடையாது. ஆனாலும் இந்தப் பள்ளிகளிலே மாணவர்களை அதிகமான அளவிலே பெற்றோர்கள் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்கின்ற நோக்கிலே, மக்கள் விரும்பி ஆங்கிலம் படிக்க வேண்டும் இந்தி படிக்கவேண்டும் என்று அந்தப் பள்ளியிலே சேர்கிறார்கள். இதற்குக் காரணமே அரசு பள்ளிகளில் இதற்குத் தகுந்த வாய்ப்பு இல்லாததால் இப்படிப்பட்ட பள்ளிகள் துவக்கப்படுகின்றன. அரசு பள்ளிகளில் ஆங்கிலம் படிப்பதற்கும், அவர்கள் விரும்புகின்ற மொழியைப் படிப்பதற்கும் வசதி இருந்தால் இந்நிலை இருக்காது. தரக்குறைவான, பயிற்சி பெறாத ஆசிரியர்கள் எல்லாம் கல்வி நிலையங்களில் இருக்கிறார்கள். இது தடுக்கப்பட வேண்டும். நம்முடைய அரசுப் பள்ளிகளில் தரமான கல்வி சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு ஆங்கில வகுப்புகளுக்கு இருக்கின்ற தடையை நீக்கிப்





போதுமான அளவுக்கு வகுப்புகள் துவக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகளிலே பள்ளிக் கட்டிடங்கள் கிடையாது. பள்ளிகளுக்கு இடம் கிடையாது. வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே ஒரு பள்ளி இருக்கிறது. நசரத் அரசு உயர்நிலைப் பள்ளி 1982-லே அரசு அனுமதி பெற்று துவக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பாழடைந்த ரைஸ் மில் கோடவுனில் அது இருக்கிறது. எந்த நேரமும் இடிந்து விழுகின்ற ஒரு ஆபத்து இருக்கிறது. மாணவர்கள் உயிர் இழக்கும் அபாயம் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு அரசு நிலத்தை தேர்ந்தெடுத்து அந்த நிலத்திலே அந்த அரசு பள்ளி கட்டிடங்களை நடத்த வேண்டும். அங்கே மக்களே இதற்காக பணம் கொடுத்து கட்டிடம் கட்ட தயாராக இருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டுக்கு டிரான்ஸ்பர் புரபோசல்ஸ் கொடுத்திருக்கிறோம். டிரான்ஸ்பர் புரோபோசல்ஸுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரை 50 முறையும் அதற்கு மேலே தாசில்தார், ஆர்.டி.ஓ. போன்றவர்களையும் சென்று பார்த்திருக்கிறார். இன்றைக்கு கமிஷனர் ஆப் லேண்ட் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு வந்திருக்கிறது. அது குட்டை புறம்போக்காக அவர்கள் சொல்கிறார்கள். அங்கு குட்டையே இல்லை. மேடாக இருக்கிறது என்று. அங்கு டிரான்ஸ்பர் பிரபோசல்ஸ் குட்டை புறம்போக்காக இருப்பதால் இந்த இடத்தில் வேறு எதுவும் முடியாது என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் எத்தனை பள்ளிகள் கிடையாது. இப்படிப்பட்ட நிலங்கள் இருக்கின்றனவோ எனக்கு தெரியாது. இப்படிப்பட்ட நிலங்கள் ரெவின்யூவில் இரிகேஷன் டாங்க் பற்றி ஒரு இருந்தால்கூட ரெவின்யூவில் ... இருக்கிறது.

(பிற்பகல் 2-10)

அதை எக்ஸெம்ப்ட் செய்து, அந்தக் குட்டைப் புறம்போக்கு பயன்படவில்லை மக்களுக்குப் பயன்படுகிறதா என்று பார்த்து பள்ளிக்குக் கொடுக்கலாம் என்ற ... யெனில் கல்விக்கு இந்தப் பணிக்குக் கொடுக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ... அரசு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ... அதுமட்டும் அல்லாமல், இன்றைக்கு பள்ளிகள் துவக்கப்பட்டு ... பள்ளிகள் பலவற்றிற்குக் கட்டிடங்கள் கிடையாது.

[திரு ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1987 ஏப்ரல் 8

இன்றைக்கு எங்கள் பகுதியிலே 20 வருடங்களுக்கு முன்பு துவக்கப்பட்ட ஆவடியிலே இருக்கின்ற காமராஜர் மேல்நிலைப் பள்ளி, காமராஜ் நகர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இதுபோன்ற பள்ளிகளுக்கு எல்லாம் கட்டிடங்கள் கிடையாது. ஏனென்று சொன்னால், இன்னும் டிரான்ஸ்பர்கள் செய்யப்படவில்லை. 20 வருடங்களாக முயற்சி செய்தும் கூட, அரசுப் புறம்போக்கில் இருக்கும் அந்தப் பள்ளி இடம் சி.ஈ.ஓ. பெயருக்கு டிரான்ஸ்பர் செய்யப்படவில்லை. எனவே, நிரந்தரமான கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு பி.டபிள்யூ.டி. தயாராக இல்லை. எனவே, அந்தப் பள்ளி அரசு புறம்போக்கு நிலத்தில் துவக்கப்பட்டபோதும், அதற்கெல்லாம் டிரான்ஸ்பர் செய்து கொடுப்பதற்கு—எப்படி லேண்ட் அக்வெசிஷனுக்கு ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்கிறீர்களோ, இதற்கும் ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதை மாவட்ட ரெவின்யூ இலாக்காவிலேயே விட்டுவிட்டால் அவர்களுக்கு இருக்கின்ற வேலைப் பளுவிலே இதைச் செய்ய முடிவதில்லை. அவர்களுக்கு அக்கறை இருப்பதில்லை. ஒரு மாவட்டத்திற்கு டைரக்டர் ஆபீசிலே அப்படிப்பட்ட ஒரு ஸ்பெஷல் தாசில்தாரை—எம்.எம்.டி.ஏ.யிலே கூட ஸ்பெஷல் தாசில்தாரை வைத்திருக்கிறீர்கள். அதேபோல் ஒரு ஸ்பெஷல் தாசில்தாரை வைத்து அந்த டிரான்ஸ்பர் ப்ராப்போசல்லை உடனடியாக இரண்டு, மூன்று வருடங்களில் முடித்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் கட்டிடங்கள் கட்டுவது; ஒரு பள்ளி துவக்கப்பட்டவுடன் 5 ஆண்டுகளுக்குள்ளாவது அந்த வகுப்பறைகள் கட்டித் தரப்பட வேண்டும். பி.டி.ஏ.யிலே கட்டுகிறார்கள். அவர்களாலே முடியவில்லை. இன்றைக்கு காமராஜர் நகர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலே நாங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு 'தாட்ச்சட் ஷெட்'—கூரைக் கொட்டகை போட்டுக் கொடுத்தோம். அந்தக் கொட்டகைகள் தீயிலே எரிந்து விட்டன. மீண்டும் பி.டி.ஏ.யிலே கட்ட வேண்டும் என்றால், அங்கு ஒரு சிமெண்ட் ப்ளோரிங் போடக் கூட பணம் இல்லை. (மணியடிக்கப் பெற்றது).

அந்தப் பெண்கள் பள்ளியிலே மிகவும் துர்ப்பாக்கியமான நிலையிலே இன்றைக்கு மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி துவக்கப்



1987 ஏப்ரல் 8] [திரு ஜி. ஆனந்த கிருஷ்ணா]

பட்டு, 5 ஆண்டுக் காலத்தில் குறைந்த பட்சம் அவர்களுக்கு தேவைப்படுகின்ற வகுப்பறைகள் கட்டித் தருவதற்கு ஒரு பாலிசியை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிலையிலே நான் 'கட் மோஷன்' கூட பார்த்தேன். என்னுடைய தொகுதியில் தான் இந்த நிலைமை என்று பார்த்தால், தமிழகத்திலுள்ள அத்தனை தொகுதிகளிலும் இதே நிலை தான். கூடுதல் கட்டிடங்கள், புதிய கட்டிடங்கள் தான் இருக்கின்றன. அந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மற்றொரு முக்கியமான தேவை. எங்களுடைய பூந்தமல்லி ஹையர் செகண்டரி ஸ்கூல் 100 வருடங்களுக்கு மேலாக இருக்கிறது. 100 வருஷங்களான அந்தப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கிடையாது. என்னுடைய தொகுதியிலே 12 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த 12 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளிலே, எந்தப் பள்ளிக்கும் சுற்றுச் சுவர் கிடையாது. அந்தச் சுற்றுச் சுவர் இல்லாததனாலே, அந்தப் பள்ளிகளினுடைய மைதானங்கள் சமூக விரோதிகளாலே பலவிதமான தவறுகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. பொதுக் கழிப்பறைகளாக உபயோகப்படுத்தப்படுகின்றன. அங்கே படிப்பதற்குண்டான சூழ்நிலையே கிடையாது. மாணவர்கள் படிக்க வேண்டுமானால், அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

பர்னிச்சர் கிடையாது. பரிட்சை எழுதவேண்டும் என்றால், தரையிலே உட்கார்ந்து பரிட்சை எழுதவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே பர்னிச்சர் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

மேலும், விளையாட்டைப் பற்றி என்னுடைய ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சென்னை மாநகரத்திலே 'சந்தோஷ் டிராஃபி ஃபுட்பால் டோர்னமென்ட்' நடந்தது. அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—அடுத்து, சென்டினரி கோப்பை நடப்பதற்குள் ஒரு விளையாட்டு அரங்கம், ஒரு 50,000 மக்கள் உட்கார்ந்து பார்க்கக்கூடிய விளையாட்டு அரங்கம் கட்டித் தருகிறேன் என்று சொன்னார்கள்.

ஆனால், இதுவரை நிறைவேற்றித் தரப்படவில்லை. இங்கே ஒரு இன்டோர் ஸ்டேடியம் கிடையாது. கல்கத்தாவிற்குச் சென்றால், சுபாஷ் சந்திரபோஸ் இன்டோர் ஸ்டேடியம் இருக்கிறது. டெல்லிக்குச் சென்றால், அங்கே இந்திரா காந்தி இன்டோர் ஸ்டேடியம் இருக்கிறது. நம்முடைய புகழ் பெற்ற சென்னை மாநகரில் ஒரு இன்டோர் ஸ்டேடியம் கிடையாது.

ஆர்ட்ஸ்-க்கு ஸ்டேடியம் கிடையாது. அஸ்ட்ரோ-டர்ஃபும் கிடையாது. இப்படி விளையாட்டை எடுத்துக்கொண்டால், எந்தவிதமான வசதியும் இல்லாத நம்முடைய விளையாட்டு வீரர்கள், சில சாதனைகளைச் செய்து வருகிறார்கள். இன்றைக்கு நம்முடைய அத்லெட்டிக்லை எடுத்துக் கொண்டால், இங்கே ஒரு டிராக் கூட கிடையாது. இராஜாரத்தினம் ஸ்டேடியத்தில் இருக்கிற டிராக் புதிய விளையாட்டு வீரர்கள் உபயோகப்படுத்துகிற டிராக் அல்ல. அது சின்டர் டிராக். ஏதோ விளையாட்டு மைதானம் என்று இருக்கிறது. சென்னையில் நான் மாணவனாக இருந்த போது இருந்த நிலையைத்தான் நான் இப்போதும் பார்க்கிறேன். அதில் எந்தவிதமான மாறுதலும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்களும் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் டிஸ்ட்ரிக்ட் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஸ்போர்ட்ஸ் கவுன்சில் என்ன செய்திருக்கிறது என்பதே எனக்குத் தெரியவில்லை. மாவட்டத்திற்கு ஒரு அத்லெட்டிக் டிராக் தேவையாக இருக்கிறது. பல்வேறு விளையாட்டுகளை நடத்தக்கூடிய ஸ்டேடியம் நம் மாகாணத்தில் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும். அதைப் போலவே நல்ல விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டுமென்றாலும், விளையாட்டுகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றாலும் இதற்குத் தனியாக அமைச்சகம் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் பஞ்சாபில் இருக்கிற முறையிலே நாமும் தமிழகத்தில் நல்ல விளையாட்டுகளையும் விளையாட்டு வீரர்களையும் உருவாக்க முடியும்—அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்க முடியும் என்று சொல்லி விளையாட்டில் ஈடுபாடு





கொண்டால்தான் நம் சமுதாயம் நல்ல முறையில் வளர முடியும் என்று சொல்லி வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக்காக ஆகிற செலவு ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கான மூலதனம் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் கல்விக்காக ரூ. 597 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1987-88 ஆம் ஆண்டில் கல்விக்காக செலவிட இருக்கும் தொகை 734 கோடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு கல்விக்கு என நிதி ஒதுக்கம் செய்திருக்கிற புரட்சித் தலைவரின் அரசை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்பக் கல்வியை விரிவாக்கி சீரமைக்க அதற்கு என்று ஒரு தனியான இயக்குநர் நியமிக்கப்பட்டிருப்பதை இந்த நேரத்தில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி என்று மட்டுமே அரசு தனது கவனத்தைச் செலுத்தாமல் ஆரம்பக் கல்வியைச் சீரமைக்கிற பணியை மனதில் வைத்து அதற்கு என்று ஒரு தனி இயக்குநரை நியமித்திருப்பது நல்லெண்ணத்தை காட்டுவதுடன் மிகுந்த மகிழ்ச்சியையும் தந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு சத்துணவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்குப் பள்ளிகளுக்குச் செல்லுகிற பிள்ளைகளின்—குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சத்துணவுத் திட்டத்தின் மூலமாக 1-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரையில் படிக்கிற பிள்ளைகள்தான் பயன் அடையும் நிலை உள்ளது. இதை 11-வது வகுப்பு வரையில் படிக்கும் பிள்ளைகளுக்கும் விரிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இலவச காலணித் திட்டம் என்பது மிகப் பெரியதொரு புரட்சிகரமான திட்டம். அதைப் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தை நீடித்ததுபோல் இலவசக் காலணித் திட்டத்தையும் சத்துணவு

[திருமதி பா. வளர்மதி] [1987 ஏப்ரல் 8

சாப்பிடுகிற எல்லாத் தரப்பினருக்கும் காலணி வழங்குவதற்குரிய வகையில் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

595 கோடி ரூபாயிலேயே 10 கோடி ரூபாய் இலவச காலணித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கல்விக்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கிற தொகையிலிருந்து இதை எடுக்காமல் இதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காலணி வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிற நிதி போதாது. இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கிட வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நகர்ப்புறங்களில் உள்ள பள்ளிகளில்—அவை தனியார் பள்ளிகளானாலும் சரி அரசுப் பள்ளிகளானாலும் சரி—இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு அடிப்படைக் காரணம் ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் கிராமப்புறங்களில் இல்லாத காரணத்தால்தான் அந்த அளவுக்கு இங்கே இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 2.20)

இதைப் போக்குகிற விதத்தில் நகரத்திலே உள்ள அரசுப் பள்ளிகளைப் போலவே கிராமங்களில் இருக்கின்ற பள்ளிகளிலும் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக வைத்து கற்றுத் தரக்கூடிய வாய்ப்பை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்கிற காரணத்தால் இட நெருக்கடி மிக சாதாரணமான முறையிலே தீரக்கூடிய பிரச்சினையாக அமைந்துவிடும், மாணவர்களின் கல்வித் தரம் உயரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மொழி சிறுபான்மையினர் என்ற பெயரால் நடத்தப்படுகிற பள்ளிகளிலும், பல தனியார் பள்ளிகளிலும் ஆங்கிலமும், இந்தியும் மட்டுமே சொல்லித் தரப்படுகிறது. தமிழே சொல்லித் தராமல் தமிழுக்காக குறைந்தபட்சம் ஒரு ஆசிரியர் கூட இல்லாத நிலைமையில் இன்றைக்கு எத்தனையோ பள்ளிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் தமிழ்தான் இல்லை என்ற



1987 ஏப்ரல் 8] [திருமதி பா. வளர்மதி]

அவல நிலையை போக்கிய புரட்சித் தலைவர் அரசு, தமிழுக்கு என்று சங்கம் அமைத்த தமிழக அரசு, தமிழுக்கென்று ஒரு பல் கலைக் கழகம் அமைத்த தமிழக அரசு மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு தமிழ்நாட்டில் தமிழ் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை என்ற அவலத்தைப் போக்கிட முன்வர வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள அத்தனை பள்ளிகளிலும் தமிழ் கட்டாய பாட மாக இருக்க வேண்டும். மொழி சிறுபான்மையினர் விரும்பினால் அல்லது யார் விரும்பினாலும் மற்ற மொழிகளை அவர்கள் விருப் பப் பாடமாக சொல்லித் தருகிற வசதியும் செய்து தர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசின் உதவியோடு, ஆதரவோடு சைனிக் ஸ்கூல், 'டூன்' ஸ்கூல் போன்ற பள்ளிகளில் இராணுவ பயிற்சிகள் சொல்லித் தருகிறார்கள். அதே மாதிரி நம்முடைய தமிழ் நாட்டிலே அரசுப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, வேறு எந்த பள்ளிகளாக இருந்தாலும் சரி அந்த பள்ளிகளில் இராணுவ பயிற்சிகளை மாணவர்களுக்குச் சொல்லித் தர அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்கிற நேரத்தில் அந்த இராணுவ பயிற்சிகளை சொல்லித் தருவதற்கு போலீஸ் டிரெயினிங் ஸ்கூல் என்ற பெயரால் மாநில அரசே பள்ளிகளை குறிப்பிட்ட சில இடங்களில் அல்லது மாவட்ட தலைமையிடங்களில் ஏற்படுத்து வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தப் பள்ளிகளை நிர் வகிக்க இந்தியாவிலேயே தலை சிறந்த நம்முடைய காவல் துறை அதிகாரிகளை இந்தப் பள்ளியின் தலைவர்களாக போட்டுக் கொண்டாலும் சரி. இல்லையென்றால் பயிற்சி அளிக்க மட்டு மாவது எடுத்துக் கொண்டாலும் சரி. இந்த மாதிரி பயிற்சிகளை மாணவர்களுக்குத் தருகிற நேரத்தில் மாணவர்களுக்கு உள்ள அச்ச உணர்வை போக்கக்கூடிய சூழ்நிலை வருகிறது. அப்படி ஏற்படுத்தக்கூடிய பள்ளிகளில் இராணுவ பயிற்சி பெற்று வருகிற மாணவர்களை காவல் துறைக்கு அல்லது இராணுவத்திற்கு அனுப்பக்கூடிய நேரத்தில் எதிர்காலத்திலே அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு பல்வேறு தனியார் பள்ளிகள், எந்த வசதியும் இல்லாமல், அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் கூரை போட்ட பள்ளிகளாக இயங்கி வருகின்றன. கூரை போட்ட பள்ளிகளாக இயங்கி வருவதால், கோடை காலங்களில் வெயில் அடிக்கும்போது சில அபாயகரமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இதைப்

போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன். அங்கீகாரம் அளிக்கும்போது அடிப்படை வசதிகள் உள்ள பள்ளிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல். நடைபெறுகிற ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், கூரை போட்ட பள்ளிக்கூடமாக இருந்தாலும், ஆரம்பிக்கிற நாளில் இருந்து தனியார் பள்ளியைச் சேர்ந்தவர்கள் கட்டட நிதி என்று பத்தாண்டுகளுக்கு பெற்றோர்களை கசக்கிப் பிழிகிறார்கள். ஆரம்பிக்கிற காலத்திலே கட்டட நிதியென்று வசூலித்தாலும் பரவாயில்லை. ஆரம்பித்து பத்துப் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து பெற்றோர்களிடத்திலே நன்கொடை என்ற பெயரால் வாங்குவதால், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மாணவர்களின் பெற்றோர்கள்தான் இதனால் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு குறைந்தபட்சம் ஒரு வரம்பு வைக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னுமொன்று. சிறந்த பள்ளிகளாக விளங்கக்கூடிய பள்ளிகளில்கூட விளையாட்டு மைதானங்கள் இல்லை. அதற்கு உதாரணம்—மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய குழந்தை ஒரு பள்ளியில் படிக்கிறான். அவன் படிக்கிற பள்ளிக்கு மைதானம் கிடையாது என்பதை ஒரு நோக்கில் வருத்தத்தோடு சொன்னார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தப் பள்ளிக்கூடம் என்று கேட்கிறார்கள். கேள்வி கேட்கக்கூடிய எண்ணத்தோடு நான் சொல்லவில்லை. மைதானம் இல்லாத எல்லா பள்ளிகளையும்தான் சொல்லுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். உறுப்பினரே சொல்லுவார்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள்ளியம்மை பள்ளிக்கூடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை நீங்கள் பேசும்போது பின்பற்றினால் பரவாயில்லை. நிறைய பேர் நிற்கிறீர்கள். அதே மாதிரி நீங்கள் சொன்னால் பரவாயில்லை.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் சொல்வது, நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவது மைதானங்கள் இல்லாத பள்ளிகளுக்





இருக்கின்றன என்பதற்காகவும் மைதானங்கள் அதிகமாக இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு அங்கீகாரம் தரவேண்டும் என்பதற்காகத்தான் அமைச்சர் பிள்ளை படிக்கிற காரணத்தால் அந்தப் பள்ளிக்கு மைதானம் தேவை என்று சொல்லவில்லை. மைதானம் இல்லாத பள்ளிகள் அனைத்துக்கும் மைதானம் தாருங்கள் என்றுதான் கேட்கிறேன். தவறாக மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சில நேரங்களில் எல்லா வசதிகளும் இருப்பதாகச் சொல்லி, தனியார் பள்ளிகள் அங்கீகாரம் பெறுகிறார்கள். அங்கே போய் பார்க்கும்போது வசதிகள் குறைவாக இருக்கின்றன. தனியார் பள்ளிகளில் படித்த ஆசிரியர்கள், தகுதி பெற்ற ஆசிரியர்கள் 100 ரூபாய், 150 ரூபாய், 200 ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்கிறார்கள். அதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டம்தான். ஆனால் முழுச் சம்பளத்திற்கும் ரசீது பெற்றுக்கொள்கிறார்கள். இந்த முறையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கல்லூரிப் பேராசிரியர் பஸ்சிலே போகிறார், நர்சரிப் பள்ளி நிர்வாகி காரிலே பவனி வருகிறார். இந்த நிலைமை மாற அரசு கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு இன்றைக்கு அந்தஸ்தை தந்திருக்கிறோமோ அதே அந்தஸ்தை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரவேண்டும். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே வேலை செய்யும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்ததைப்போல, தனியார் பள்ளி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலம்தான் எடுக்க வேண்டுமென்ற புதிய திட்டத்தை அரசு உருவாக்கியிருக்கிறது. மானியக் கோரிக்கையிலே அப்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்று. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு எந்த அந்தஸ்தை தருகிறோமோ அதே அந்தஸ்தை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தந்தால், அவர்கள் நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்கள் அரசைப் பாராட்டுவார்கள். (மணி அடிக்கப்பெற்றது). இன்னும் பாயிண்டுக்கே வரவில்லை. விரைவிலே முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தனியார் பள்ளிகளிலே, அரசுப் பள்ளிகளிலே ஒரே வகுப்பில் 60, 65 மாணவர்களை அடைத்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்கி, 30, 25, 20 மாணவர்கள் ஒரு வகுப்புக்கு என்று தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு கல்வி கொடுக்கக்

[திருமதி பா. வளர்மதி] [1987 ஏப்ரல் 8

கூடிய வாய்ப்பை அமைச்சரவர்கள் உருவாக்கித் தரவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். மரியாதைக்குரிய திரு. சுந்தர
வடிவேலு அவர்கள் ரஷ்யாவுக்குச் சென்றபோது, அங்கே சுற்றிப்
பார்க்கப் போனார். அங்கே 700 பிள்ளைகளுக்கு 70 ஆசிரியர்
கள் இருந்தார்களாம். அதாவது 10 பேர் படிக்க ஒரு ஆசிரியர்.
அந்த மாதிரி 10 பேருக்கு ஒரு ஆசிரியர் வேண்டாம், அட்லீஸ்ட்
25, 30 பேருக்கு என்று ஓர் ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஒரு வகுப்பில் 65, 70 பேர் என்று சொன்
னால் எப்படி அவர்களைக் கண்காணிக்க முடியும் என்று கேட்க
விரும்புகிறேன். தங்களுக்கு கணக்கு எழுத கிளார்க் தேவை
என்று இந்தியக் கிளார்க்குகளை உருவாக்க பிரிட்டிஷ்காரர்கள்
ஏற்படுத்திய பழைய கல்வித் திட்டம் அது. இன்றைக்கு புதிய
கல்வித் திட்டம் பற்றிப் பேசுகிறார்கள். இன்றைக்கு காலம்
மாறி வருகிறது. அறிவியல் விஞ்ஞானம் அணு விஞ்ஞானமாக
வேகமாக வளர்ந்து வருகிறது. இராஜராஜ சோழனும், அசோ
கனும் நமது பிள்ளைகளுக்கு சோறு போட மாட்டார்கள். எந்த
மணிமேகலையும் அமுதசுரபியுடன் வரமாட்டாள். இந்த நிலைமை
கள் மாற வேண்டுமென்றால், ஏழைப் பிள்ளைகள் படித்து முன்
னேற வேண்டுமென்றால், கல்வி முறை மாற வேண்டும். கார்ல்
மார்க்ஸ் அவர்கள், பிள்ளைகள் பிறக்கும்போது பசிப்பதற்கு வயி
றோடு மட்டுமல்ல, உழைப்பதற்கு இரண்டு கைகளோடும் பிறக்
கின்றன என்று சொன்னார். எனவே அதற்கான திட்டம் தொழிற்
கல்வித் திட்டம். இது சிறந்த திட்டம். அந்தத் திட்டத்திற்கு
இன்றைய ஒதுக்கீடு செய்த தொகை, உண்மையிலேயே பாராட்ட
வேண்டிய ஒன்று.

தொல்பொருள் ஆய்வுத் துறையின் பணிச் சிறப்புகளைச்
சொல்லியாக வேண்டும். காரணம், அதன் தலைமை அலுவலகம்
என்னுடைய மயிலைத் தொகுதியிலே இருக்கிறது. ஆகவேதான்
இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஒரு அச்ச
கப் பிரிவு இருக்கிறது. கல்வெட்டுக்களைப் பதிவு செய்யக்கூடிய
தும், நம் நாட்டிலே உள்ள புராதன சிற்பங்களை பதிவு செய்யக்
கூடியதுமான அந்த அச்சகப் பிரிவு கிடப்பிலே இருக்கிறது. மறு
படியும் அது இயங்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்
துறையின் ஆணையோடு பதிவு அலுவலர்கள் இன்றைக்கு பணி
யிறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தயவு செய்து மறுபடியும்



1987 ஏப்ரல் 8] [திருமதி பா. வளர்மதி]

இது பற்றி மத்திய அரசோடு பேசி, அவர்களுக்கு பதவி உயர்வு
கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
கல்வெட்டுக்களையும், புராதனச் சிற்பங்களையும் காக்கக்கூடிய
பெரிய பணியில இருக்கக்கூடியவர்கள் அவர்கள். ஆகவே இதை
செய்ய வேண்டும்.

1980 அக்டோபரிலே மத்திய அரசு பெண்கள் கல்விக்காக ஒரு
பரிசுத் திட்டத்தை அறிவித்தது. எந்த மாநிலத்தில் அதிகமான
பெண்கள் படிக்கிறார்களோ, அந்த மாநிலத்திற்கு பரிசு வழங்க
வேண்டுமென்று திட்டத்தை அறிவித்தது. அந்தப் பரிசை தமிழ்
நாடு இந்த ஆண்டு வாங்க முயற்சி செய்ய வேண்டுமென்று
தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-30)

என்னுடைய தொகுதியிலே 13 மாநகராட்சிப் பள்ளிகள்
இருக்கின்றன. அந்த 13 மாநகராட்சிப் பள்ளிகளையும் அரசு
எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஜீ.ஓ. இருக்கிறது. வெகு
விரைவிலே எடுத்துக்கொண்டு, அந்த பள்ளிகளுக்கு இருக்கக்
கூடிய தேவைகளை பூர்த்திசெய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே மாதிரி நூலகம் கட்டவேண்டும் என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களைச் சந்தித்து கேட்கிறபோது, வரை
படத்தைத் தாருங்கள் என்று சொன்னார்கள். வரைபடத்தைத்
தந்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
ஆண்டாவது நூலகம் வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.
பெசன்ட் நகர் பகுதி அந்த நூலகம் கட்ட வசதியான இடம்.
அங்கே அந்த நூலகத்தை அமைத்துத் தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் கல்வி திட்டத்திலே மேற்பார்வையாளர்கள் இருக்
கின்றார்கள். அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய
அந்தஸ்த்தைக் கொடுக்கவேண்டும். மாறுதல் மற்றும் பதவி
உயர்வு இவைகள் எல்லாம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

இன்னொன்று இறுதியாக சொல்லிக்கொள்கிறேன். இந்த
மானியக் கோரிக்கை. புதிய கல்விக் கொள்கையின்படி ஓராண்டு
விஷயங்களில் மத்திய அரசோடு இந்த அரசு ஒத்துப்போக

முடியாத நிலையில் இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கிறது. அந்தக் கருத்தை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம், மும்மொழி என்ற பெயரால் நம் மீது இந்தியைத் திணிக்க விரும்புகிற சில இந்தி வெறியர்கள், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் தென் இந்திய மொழிகளுக்கு இடம் தருவது குறித்து கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தி பேசுகின்ற மாநிலங்களிலே ஒரு மொழிக் கொள்கையைப் பின்பற்றுவதை இந்த மானியக் கோரிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே ஏற்றத் தாழ்வு இல்லாத வகையிலே நவோதயா பள்ளிகளிலே அந்தந்த மாநில மொழியோ அல்லது ஆங்கில மொழியோ பயிற்சி மொழியாக இருக்கலாம் என்பதை மானியக் கோரிக்கை தெளிவுபடுத்தியிருக்கிறது. எனக்கு மொழி வேண்டுமா நாடு வேண்டுமா என்று கேட்டால், அடிமைப்படுத்தப்பட்ட நாட்டைவிட எனக்கு மொழி தான் சிறந்தது, மொழியினுடைய விடுதலைதான் தேவை என்று அயர்லாந்து போராட்டவீரன் டிவேலரா சொன்னான். தாய் மொழிப் பற்று இல்லாதவனின் தாயையே சந்தேகிக்கிறேன் என்று அண்ணல் காந்தி அடிகள் சொன்னார்கள். அந்த அடிப்படையை மனதிலே வைத்துத்தான் இந்த மானியக் கோரிக்கை தெளிவு படுத்திக்கொண்டு இருக்கிறது. இந்த நாட்டினுடைய வாசலிலே வருவதற்கு இன்னொரு வாசல் இன்று திறக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரத்தை தாண்டி யாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழுக்குள்ள எந்த தகுதியும் இல்லாத இந்தி மொழி இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக, அதிகார மொழியாக வரக்கூடாது என்பதிலே மிகவும் அக்கறையாக இருந்தார்கள். ஆனால் இந்தியை வரவேற்பதற்கு இங்கே ஒரு கூட்டம் இருக்கிறது என்றால் இந்த கொடுமையை என்ன பெயரிட்டு அழைப்பது. தென்னாட்டிலே தன்னுடைய வாழ்விலே வசந்தக் காற்று வீசாதா என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட 14 மொழி





களில் ஓரே ஒரு மொழி மட்டும் ஆட்சிமொழி என்றால், தமிழக மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கச் செய்யப்படுகின்ற அந்த முயற்சியை அண்ணா அவர்கள் கடைசியில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த சென்டன்ஸோடு முடிந்துவிடுங்கள்.

**திருமதி பா. வளர்மதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். பிரிவினையை அண்ணா அவர்கள் இறுதியில் ஒரு ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டார்கள். பார்ப்பனீயத்தை எதிர்த்த அண்ணா அவர்கள் கடைசியில் ஓரளவுக்கு இணங்கி வந்தார்கள். ஆனால் இறுதிவரை மறுத்தது இந்தி மொழித் திணிப்பைதான். ஆதிக்கத் தைத்தான் பெரும்பான்மையான மக்கள் பேசுகிறார்கள் என்ற வாதத்தை வைத்தபோதுகூட அண்ணா அவர்கள் சொன்னார்கள். மொழி உணர்வுக்கு நாம் மதிப்பு தருகிறோம். ஒரு மொழி உணர்வுக்கு மதிப்பு கொடுப்பது உண்மையானால் ஒரு மொழி எத்தனை சதவிகிதம் மக்களாலே பேசப்படுகிறது என்ற ஆராய்ச்சி அநாவசியமானது என்றார். ஒரு மொழியை பேசினால் இந்தியாவில் ஒற்றுமை வந்துவிடும் என்பது உருப்படாத வாதம். பஞ்சாபி மொழியைப் பேசியவன்தான் பஞ்சாப் தலைவன் லோங்கோவாலை கொலை செய்தான். இந்தி மொழி பேசிய கோட்சேதான் காந்தியடிகளின் உயிருக்கு உலை வைத்தான். இன்றைக்கு இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் எந்தத் தலைவருக்கும் சளைக்காதவர் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு, அந்த இந்தி எதிர்ப்பைத் தொடங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களும் தந்தை பெரியார் அவர்களும் இல்லை. ஆனால் அதை முடித்துவைப்பதில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தை தொடங்கிய ஒரு தலைவர், தமிழர்களுக்காக பல நல்ல திட்டங்களை தமிழ் புத்தாண்டு தினத்திலே அறிவித்து வருகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டி, கல்வி அமைச்சர் அறிவித்து இருக்கின்ற மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ தமிழகத்தின் மொத்த வருமானத்தில் 21 சதவிகிதம், 591 கோடி ரூபாய் அளவுக்கு, தமிழ்நாட்டு மக்களுடைய கல்வி வளர்ச்சிக்காகச் செலவிடப்படுகின்றது என்ற பெருமித அறிக்கையோடு அமைச்சர் அவர்களுடைய இந்தக் குறிப்பு தொடங்குகிறது. 21 சதவிகிதம் என்று இருப்பதை, 25 சதவிகிதம் அளவுக்கு ஒதுக்குகிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதனை விரிவுபடுத்தினால் இந்த ஆண்டு 700 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் தொகை அதிகப்படுத்தப்பட்டிருக்குமேயானால் நான் ஒருவாறு வரவேற்றிருப்பேன். அண்டை மாநிலமான கேரளாவில் கல்விக்காக 25 சதவிகிதம் ஒதுக்கக்கூடிய நிலைமை பல ஆண்டு காலமாக இருந்து வருவதை நான் பார்த்து வருகிறேன். அந்த வகையில் அடுத்தடுத்து வரக்கூடிய ஆண்டுகளிலே, தமிழ்நாட்டிலேயும் கல்வி வளர்ச்சிக்காக அத்தகைய ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

வாழ்க்கைக்கு சிறப்பு சேர்க்கக்கூடிய கல்வியோடு கூட ஏழை மாணவர்களுக்கு பகல் உணவு தருவது என்று ஆரம்பித்து இப்போது சத்துணவு என்று மேலும் அதிலே சிறப்பு சேர்த்து, இன்று இதற்கும் மேலாக சிறப்பு சேர்க்கும் வகையில் காலுக்கு செருப்பு அளிக்கக்கூடிய வகையில் கல்வி நலத்தை தரும்வகையில் இந்த அரசு மாணவர்களுக்காக கல்வியை விரிவடைய செய்திருப்பதற்காக இதனை நான் வரவேற்கிறேன். மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்கும் திட்டத்துடன் கூடவே இன்றைக்கு கல்வி மானியத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பகல் உணவு அளிக்கும் அளவுக்கு விரிவடைந்திருப்பதுடன், இந்த விரிவடைவானது இனி அடுத்தடுத்து வரக்கூடிய மானிய விவாதங்களின்போதும் தொடர வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். (சிரிப்பு) மேலும் சாம்பார் சாதம், தயிர் சாதம் என்று இருக்கின்ற நிலையிலிருந்து, இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் கேட்பதுபோல (சிரிப்பு) பிரியாணி அளவுக்கு அது வரக்கூடிய நாட்களில் வளருமானால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).





இன்று அரசு தந்திருக்கக்கூடிய குறிப்பினைப் பார்க்கும்போது
கூட நம்முடைய இந்திய நடுவன் அரசிலே, நம்முடைய அரசியல்
அமைப்பிலே, நம்முடைய விழுமிய கொள்கையாக ஒன்று இருக்
கிறது. அதாவது 14 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு கட்டாயக்
கல்வி அளிக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. அதனை
10, 15 ஆண்டுக் காலத்திலே இந்தியா முழுவதிலும் அமல்படுத்த
வேண்டுமென்ற கொள்கை இருந்தாலும், இன்னும் இத்திட்டத்தை
நிறைவேற்ற முடியவில்லை என்பது மட்டுமல்லாமல் கல்வி
வளர்ச்சியில் முன்னேறிய நிலையிலுள்ள தமிழகம் கூட இந்த
விஷயத்திலே பின்தங்கித்தான் இருக்கிறது என்ற குறிப்பினைத்
தான் இங்கே பார்க்க முடிகிறது. இதனை செம்மையாக அமல்
நடத்துவதற்கு நான் ஒரு யோசனையை சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அரசு நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் ஒருபுறம்
இருக்க, தனியார்தான் இதிலே அதிக அளவு பங்கு பெற்றிருக்கி
றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின்
சார்பாக இன்றைக்கு 54 கல்லூரிகள் நடத்தப்படுகின்றன என்று
சொன்னால் தனியார் நடத்துகின்ற கல்லூரிகளின் எண்ணிக்கை
133 என்றும், மானியம் பெறாத கல்லூரிகளின் எண்ணிக்கை 11
என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆக, தனியார் கல்லூரிகளின்
மொத்த எண்ணிக்கை 144 என்றால் அரசு கல்லூரிகளின் எண்
ணிக்கை வெறும் 54 தான். இதனை அரசு குறிப்பு தெளிவாக
எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, தமிழகத்தில் இன்றைக்குக்கூட
உயர் கல்வி அளிக்கக்கூடிய ஒரு பொறுப்பினை தனியார் துறை
மேற்கொண்டிருப்பது என்பது வரவேற்கக்கூடிய ஒன்றுதான்.
ஆனால் அதே நிலை ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையிலும்,
நடுநிலைக் கல்வியைப் பொறுத்தவரையிலும் இருக்கிறதா
என்றால் எனக்கு அதைப்பற்றிய ஒட்டுமொத்தமான, அதிகார
பூர்வமான விவரம் இல்லை. அரசு தரப்பில் ஏறக்குறைய 29
ஆயிரம் தொடக்கப் பள்ளிகளும், 5 ஆயிரம் நடுநிலைப் பள்ளி
களும், 2,600 உயர்நிலைப் பள்ளிகளும், 1,600 மேல்நிலைப் பள்ளி
களும் நடத்தப்படுகின்றன என்கிற பள்ளிவிவரம் இங்கே எங்கள்
கையில் தரப்பட்டிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது
எல்லாம் யாரோ சிறுபான்மையினர் நடத்தக்கூடிய சில

பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் அங்கேயுள்ள நிர்வாகிகளால்
சில இடங்களில், சில தவறுகள் செய்யப்படுகின்றன என்று
சொல்லுகிறார்களே, அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-40)

அப்படித் தவறு செய்பவர்களை உணர்த்தி, அவர்களை
நல்வழிப்படுத்துவதற்கு உரிய அதிகாரம் அரசினுடைய கையிலே
இருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டங்கள் அதற்குப்
போதுமானவையாக இல்லையென்றால், அதை ஒழுங்குபடுத்து
வதற்குரிய சட்டங்களைக்கூட இதே மன்றத்திலே நிறைவேற்றிக்
கொள்வதற்கு உரிய வாய்ப்பும் அரசுக்கு இருக்கிறது. ஆகவே,
யாரோ சில பேர், தனியார் நிர்வாகிகளோ, சிறுபான்மையினர்
நிர்வாகிகளோ தவறு செய்கிறார்கள் என்பதற்காக அவர்கள்
நடத்தக்கூடிய பள்ளிகளே இல்லாமல் ஆக வேண்டுமென்று பேசப்
படுவது இன்றைய நிலையில் கல்வித்துறையிலே அவர்கள் ஆற்றி
வரக்கூடிய அளப்பரிய சேவைகளை வைத்துக் கணக்கிடுகின்ற
பொழுது அது பொருத்தமான பேச்சாக எனக்குப் படவில்லை.

நான் குறிப்பாக சிறுபான்மை சமுதாயமாகிய இஸ்லாமிய
சமுதாயத்தின் சார்பாக அரசுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க
விரும்புகிறேன். உயர்நிலைப்பள்ளிகள் 2,600 நடத்தக்கூடிய
அரசு, தமிழகத்திலே பத்து சதவீதமாக இருக்கக்கூடிய தமிழ்
முஸ்லீம் சமுதாயம் ஒரு 260 உயர்நிலைப் பள்ளிகளையாவது
நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். ஆனால் இதுவரையிலே 40 உயர்நிலைப்பள்ளிகளுக்குத்
தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பத்து உயர்நிலைப்
பள்ளிகள் இப்படித் தனி சிறுபான்மை மக்களுக்கு இருக்கக்கூடிய
—அவர்கள் அரசினுடைய அனுமதி பெறாமலேயே தொடங்கலாம்
என்று இருக்கக்கூடிய அனுமதியை வைத்து, அரசினுடைய அங்கீ
காரத்தை எதிர்பார்த்து ஆரம்பித்து பல்லாண்டுகள் ஆகியும்
அவர்களுக்கு அங்கீகாரம் கிடைக்காமல் அவர்கள் சிரமப்பட்டு
வருகிறார்கள். அதைக் கருணையோடு நம்முடைய கல்வியமைச்
சரவர்கள் இந்த உயர்நிலைப் பள்ளிகளினுடைய அங்கீகாரம்
மாத்திரம் அல்ல: தொடக்க நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்
பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகிய இப்படி ஆரம்பிக்கப்பட்
டிருக்கக்கூடிய எல்லாப் பள்ளிகளும் ஒரு உள்ளார்ந்த விழுமிய





நோக்கத்திற்காக, சமுதாயத்தினுடைய மொத்த கல்வி வளர்ச்சியி
லுடைய பங்காக இருக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக ஆரம்
பிக்கப்பட்டன என்பதை உணர்ந்து, அதற்கு அங்கீகாரம் தர
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் உள்ள
முக்கியமான சிக்கல், அரசினுடைய அங்கீகாரம் இல்லாமலேயே
ஆரம்பித்து அரசினுடைய அங்கீகாரத்தைக் காலப்போக்கிலே
பெறலாம் என்று அனுமதித்திருக்கக்கூடிய அரசியலமைப்புச்
சட்டத்தினுடைய அடிப்படையிலே இவர்கள் ஆரம்பித்த
பிறகும், அவர்கள் எதிர்நோக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை,
ஆரம்பித்தவர்கள் சிறுபான்மையானவர்களா என்பதை
நிரூபிக்க வேண்டுமென்று அரசு அந்தப் பணியைத் தொடங்கியவர்
களுக்கு நிபந்தனை விதிக்கிறது. அதை எப்படி அவர்கள் நிரூ
பிக்க வேண்டுமென்றால், அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போய்
நிரூபிக்க வேண்டும். அப்துல் சமத் தொடங்கிய அல்லது அப்துல்
சமத்தினுடைய நண்பர்கள் தொடங்கிய ஒரு பள்ளி, அதனுடைய
சட்ட திட்டங்களிலேயே இது சிறுபான்மையோரினுடைய பள்ளி
என்று குறிப்பிட்டிருந்தாலும்கூட, இது நிலைநாட்டப்படுவதற்கு
நீங்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லுங்கள் என்று கல்வித்துறை
அங்கே அனுப்பி வைப்பது என்பது, காலத்தினுடைய விரய
மாகவும் அது படுகிறது; கல்வித் துறையில் சேவையாற்ற முன்
வருபவர்களுக்கு இடர்ப்பாடு அளிப்பதாகவும் இருக்கிறது.
ஆகவே, இப்படிச் சிறுபான்மையினரால்தான் அது தொடங்கப்
பட்டது, அது சிறுபான்மையோர் பள்ளி என்று அங்கீகரிக்கக்
கூடிய பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொண்டு, வேண்டுமானால்
அதற்காக கல்வியாளர்களைக் கொண்ட ஒரு பொதுவான குழுவை
நியமித்து, அந்த அங்கீகாரத்தை ஒரு குறித்த காலகட்டத்தில்,
குறைந்தது ஒராண்டுக்குள்ளேயாவது வழங்கி, அது சிறுபான்மை
யோர் பள்ளி என்பதற்கான மற்ற வசதிகளையும், வாய்ப்பு
களையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

உதாரணத்திற்கு வேண்டுமானால், காயல்பட்டினத்தில் வாவு
நடுநிலைப்பள்ளியை ஆரம்பித்து இப்படி நிரூபிக்க வேண்டு
மென்பதற்காக அவர்கள் நீதிமன்றத்தினுடைய நெடும்படிக்கட்டு
களிலே ஏறி [illegible] தீர்ப்பு பெற்ற [illegible]
ஆகிவிட்ட பிறகும்கூட, இன்னும் அவர்களுக்கு அரசு மானியம்

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 8,

ஒரு செப்புக்காசுகூட தரப்படவில்லை. ஐந்தாறு ஆண்டுக்காலமாக, காயல்பட்டினம் வாவு மேல்நிலைப்பள்ளி பல இலட்சம் ரூபாய்களை அவர்கள் ஆண்டுதோறும் செலவழிக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட குறிப்பான, ஒரு நியாயமான கோரிக்கைகளையெல்லாம் அரசு உடனடியாக அங்கீகரிப்பதன் மூலம் தமிழகத்தினுடைய மொத்த கல்வி வளர்ச்சி மேலும் பெருகுவதற்குத் துணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேற்றையதினம் எனக்குக் கிடைத்த ஒரு புள்ளிவிவரத்தின்படி, இந்தியா முழுமையும் ஏறத்தாழ 85,000 கல்வி நிறுவனங்களில் கிறித்தவ சகோதரர்கள் உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். ஆகவே, அகில இந்திய அளவிலும்கூட, இன்றுகூட மதச் சார்புள்ள சிறுபான்மை சமுதாயத்தினர் செய்து வரக்கூடிய இந்த அளப்பரிய பணி பெருமைக்குரிய சர் இலட்சுமணசாமி முதலியார் போன்ற பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களாக இருந்தவர்களால் வாயாரப் பாராட்டப்பட்டிருக்கிறது. அந்த நிலை மேலும் தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த சமுதாயத்தின் சார்பாக ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. இந்தத் தொடக்கப் பள்ளிகளில் ஆயிரம் பள்ளிகளாவது முஸ்லீம் சமுதாயத்தின் சார்பாக நடத்தப்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஏன் என்றால் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்றால் 3000 பள்ளிகளை அவர்கள் நடத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சில நூறு பள்ளிகள் கூட அவர்களால் நடத்தப்படவில்லை. அரசு அனுமதிக்குமானால் ஆயிரம் பள்ளிகளை நடத்தத் தயாராக இருக்கிறார்கள்.

குறிப்பாக, ஏறத்தாழ 6000 பள்ளிவாயில்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிவாயில்களை ஒட்டி அரபிக் மொழி மூலம் மார்க்கம் சொல்லிக் கொடுக்கப்படுகிற கலாசாலைகள் ஏற்கெனவே இருக்கின்றன. அவற்றிலே ஆயிரம் கலாசாலைகளை நம்முடைய தமிழக அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கல்விச் சாலைகளாக மாற்றும் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அரசு ஆதரவு தருமானால் ஏறத்தாழ 15 இலட்சம் மாணவர்கள் ஆரம்பக் கல்வி பெற நாம் உடனடியாக வாய்ப்பு செய்தவர்கள் ஆவோம் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சகோதரி அவர்கள் மொழி வழி சிறுபான்மையினர் நடத்தக்கூடிய பள்ளிகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படவில்லை; பிற மொழியும் ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றன; தமிழ்நாட்டில் நடத்தப்படும் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படவில்லை; இந்த அவலம் ஏன் என்று கேட்டார்கள். அதை நானும் உணருகிறேன். இதில் உள்ள இடர்ப்பாடு என்னவென்றால் மொழிவழி சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழியிலே கல்வி கற்றுக் கொடுக்கலாம் என்று சொல்லுகின்றபோது அவர்களுடைய நன்மைக்காக அவர்களுடைய தாய்மொழியில் அவர்களுடைய கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். அது தமிழ் அல்ல. அவர்களுடைய தாய்மொழி தமிழ் அல்ல. அதோடு, உலகளாவிய மொழி என்ற வகையிலே ஆங்கிலத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தமிழையும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று ஆரம்பித்தால் அப்போது அது மும்மொழித் திட்டம் என்று வருகிறது. மும்மொழிக் கொள்கை என்பது இன்றைக்கு அரசு கடைப்பிடிக்கின்ற இருமொழித் திட்டத்திற்கு மாறுபட்டதாக இருக்கிறது. இதுபற்றி 8, 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் கல்வி அமைச்சர்களாக இருந்தவர்களோடு விவாதிக்கும்போது இன்னொரு மொழி புகாத வகையில் இந்த இரண்டு மொழியோடு தமிழையும் சொல்லிக் கொடுக்க வழி என்ன என்று கேட்கிறார்கள். அதற்கான வழியை நானும் இன்னும் காண முடியாமல் இருக்கிறேன். தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பள்ளிகளில், சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளாக இருந்தாலும், கட்டாயம் தமிழைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று அரசு விதி செய்யுமானால் அதை வரவேற்க மொழி வழி சிறுபான்மையினர் தயாராக இருக்கிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் உருதுமொழி வளர்ச்சிச் சங்கத்தினர் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைப் போட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பித்திருக்கிறார்கள். அதற்கும் ஒரு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நவோதயா பள்ளிகளைப் பற்றி பலபட இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோணத்தில் ஒரு மொழியைப் பற்றி இந்த அரசு கொண்டிருக்கக்கூடிய ஒரு தெளிவான கொள்கை அடிப்படையில் அதற்குரிய விமர்சனம் இருக்கிறது. இதை பல கோணத்தில்

சமுதாயத்தைப் பார்த்தால் கூட நவோதயா பள்ளிகளை ஆரம்பிப்ப தற்குரிய சூழ்நிலையில் தமிழ்நாட்டின் நிலைமை இல்லை என்று படுகிறது. இதற்கு என்ன காரணம் என்றால் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும்போது நம்முடைய பள்ளிக்கூடங்களிலே இருக்கக்கூடிய நிலைபற்றி தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட குறைகள்கூட செப்பனிடப் படாமல், பல நூற்றுக்கணக்கான பள்ளிகள் மரத்தடியில்தான் கடந்தகால பர்ணசாலை கல்விமுறைபோல் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன. இதை எல்லாம் கருத்திற்கொண்டு இந்த ஆண்டு கல்விக்காக ஓரளவு நிதியை கூடுதலாக ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போல ஒன்றிரண்டு கோடி ரூபாயை மட்டுமே பள்ளிக் கட்டிடங்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். 597 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைப் பார்க்கும்போது சமீப எதிர்காலத்தில் இவை எல்லாம் செப்ப னிடப்படுவதாகத் தெரியவில்லை. அப்படி இருக்கும்போது இரண்டு கோடி ரூபாய் திட்டத்திலே ஒரு கிராமத்தின் மையத் திலே எல்லாவிதமான வசதிகளோடும் நடத்தப்படும் நவோதயா பள்ளி அமைக்கப்படுமானால் அதற்கு வரக்கூடிய தட்டுமுட்டுச் சாமான்கள், நாற்காலிகளைக் கூட ஒரு நாற்காலி கூட இல்லாத பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எடுத்துக்கொண்டு போய் விடுவார்களோ என்ற அச்ச உணர்வு எனக்கு ஏற்படுகிறது. ஆகவே இப்படி ஒரு சமுதாயத்திலே இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வை எல்லாம் காலப்போக்கில் நாம் சன்னஞ்சன்னமாக நிரப்பி சமநிலைப்படுத்த வேண்டுமென்று முனைந்துகொண்டிருக் கிறோம். ஒரு புறத்திலே கூரையே இல்லாத பள்ளிக்கூடம், இன் னொரு பக்கத்தில் குளு, குளு பள்ளிக்கூடம் என்று அமைப்பது கூட, ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமுதாயத்தை அமைக்கவேண்டு மென்று விரும்பக்கூடிய நாட்டுக்கு ஏற்றதாக இல்லை என்றுதான் படுகிறது. இதனை ஆழமாக கல்வியமைச்சர்களுடைய மாநாட்டில் அவர்கள் விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2.50)

அதுமாத்திரமல்ல, எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. எவ்வளவு ஏழ்மையிலே நாம் இருக்கிறோம் ஆனால் எவ்வளவு பணத்தைச் செலவழித்து கட்டிடம் கட்டிக்கொண்டு



வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது ஒரு நிகழ்ச்சி நினை வுக்கு வருகிறது. ஈரான் நாட்டில் ஒரு கவிஞன் இருந்தான். அந்த நாட்டு மக்கள் எல்லாம் பலபட பாராட்டக்கூடிய கவிஞன் அவன். அவனுக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டு மென்று அந்த ரோம் நகரத்தினுடைய மேயர் பிரதான மக்களை குழுவை ஏற்படுத்தி கூட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். 20 இலட்சம் ரியால் செலவழித்து நகரின் மையத்தில் சிலை வைக்க வேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கும்போது கிழிந்த ஆடை களைத் தரித்துக்கொண்டு பிச்சைக்காரன் ஒருவன் அந்தக் கூட் டத்தில் வந்து சேர்ந்து விட்டான். முதலில் எல்லோரும் அவனை விரட்டினார்கள். பிறகு, 'அன்போடு நான் சொல்லும் வார்த்தை களைக் கேளுங்கள்' என்று அவன் கேட்டுக்கொண்டு, நீங்கள் என்ன பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்று அவன் கேட்க நாங்கள் நாட்டினுடைய மகாகவிக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்ல, என்ன நினைவுச் சின்னம் என்று அவன் கேட்க, இந்த இடத்தில் அவனுக்கு ஒரு சிலை வைக்கிறோம் என்று சொல்ல, அந்தத் தொகையிலே ஒரு இலட்சம் ரியாலை எனக்குக் கொடுத்தால் நானே சென்று அந்த இடத்தில் நிற்கிறேன் என்று கவிஞன் சொன்னான். அதாவது 20 இலட்சம் ரியாலில் சிலை வைக்க விரும்புகிறீர்கள், 2 ரியால் கூட இல்லாமல் நான் பட்டினி கிடக் கிறேன் என்று அந்தக் கவிஞன் சொன்னதாக எங்கோ படித்த தாக எனக்கு நினைவு. அப்படி நம்முடைய பள்ளிக்கூடங்கள் எல்லாம் அவல நிலையில் இருக்கும்போது 2 கோடிக்கு எங்கோ ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்டுவது என்று சொல்வதுகூட பொருத்தமாக இல்லை. எனவே இதனை மத்திய அரசு ஒரு சரியான கோணத்தில் கணக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று. இந்தக் கல்வித் துறையைப் பார்க்கும்போது அது பெரிதும் வளர்ச்சியுற்று இருப்பதாக எனக்குப் படுகிறது. ஏறத்தாழ 5 கோடி மக்கள் தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களில் நான்கில் ஒருவருக்காவது அதாவது ஒன்றேகால் கோடி பேருக்காவது கல்விக்கண் அளிக்கக்கூடிய மாபெரும் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால்தான் மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கையாவது செலவழிக்க வேண்டி

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 8

மென்று நான் ஆரம்பத்திலேயே கேட்டுக்கொண்டேன். இவ்வளவு வளர்ந்திருக்கக்கூடிய ஒரு துறையை ஒரு அமைச்சரிடத்தில் விட்டு வைப்பதைவிட காலப்போக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு டெபுட்டி மினிஸ்டரை ஏற்படுத்தி சில துறைகளை அவர்களுக்குக் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும்.

கல்வியைப் பொறுத்தவரையில், உயர்நிலைக் கல்வி, நடுநிலைக் கல்வி, ஆரம்பக் கல்வி, கல்லூரிக் கல்வி, பொறியியல் கல்வி என்று மட்டுமல்லாமல் தமிழ் பண்பாட்டு மையம் என்று தொடங்கி, அதன் சார்பாக ஆரம்பிக்கப்பட்டிருக்கக்கூடிய இளைக் கழகங்களைப் பார்த்தால், ஒரு அரசியல் இயக்கத்தினுடைய இளைக் கழகங்களின் எண்ணிக்கையாக அது அதிகப்பட்டு இருக்கிறது. ஆனால், ஆரம்பித்திருக்கக்கூடிய அத்தனை பிரிவையும் நான் வரவேற்கிறேன். ஆனால் ஆரம்பிக்கும்போது என்ன உற்சாகம் இருக்கிறதோ, அது காலப்போக்கில் இல்லாமல் போய் நலிந்து நலிந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

597 கோடி ரூபாய் ஒதுக்கக்கூடிய இந்தக் கல்வி மானியத்தில் தமிழ் பண்பாட்டுத்துறைக்காக எவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்றால் ஒரு சதவீதம் கூட இல்லை. அப்படி இருக்கும்போது, இவ்வளவு மாபெரும் பணிகளைத் துவக்கி, அலுவலகங்களை மட்டும் வைத்துக்கொண்டு, போர்டைப் போட்டுக் கொண்டிருக்கலாமே தவிர, உருவான பணிகளைச் செய்ய முடியாது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்று வைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் உருவான முறையிலே, தமிழை ஆராயக் கூடிய முறையிலே பிற நாடுகளிலே இருக்கக்கூடிய நல்லறிஞர் களை எல்லாம் அழைத்து, அவர்களுடைய ஆய்வையும் நாம் பெறக்கூடிய வகையிலே, அவர்கள் இங்கே வந்து போகக்கூடிய அளவுக்காவது நாம் பணம் ஒதுக்கி இருக்கிறோமா என்று பார்த் தால் அது போதுமானதாக இல்லை. ஆகவே பெயருக்கேற்ப நம்முடைய நடவடிக்கையும் உலகளாவிய முறையிலே, உலகிலே தமிழை ஆராய்பவர்களுடைய ஆய்வையும், முடிவையும் நாம் பெறக்கூடிய முறையிலே துரிதமாக வளர்ச்சி அடைய வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

பொறுப்பு தரப்
தமிழக வரலாறு தொகுக்கப்படுவதற்காக
பட்ட நிறுவனம் அதைத் தொகுத்துத் தந்துவிட்டதாக அறிக்கை
கூறுகிறது. இவ்வளவெல்லாம் தொகுத்து ஏதோ கல்வி
இலாக்காவினுடைய ஒரு இருட்டறையிலே பதுங்கி இருக்குமே
யானால் வரலாறு மீண்டும் வெளிச்சத்திற்கு வர முடியாது.
அது அச்சேற வேண்டும். அதற்கு தக்கவர்களிடத்திலே அந்த
அச்சுப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நம்முடைய பல்கலைக் கழகத்
திடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம். ஒரு செய்தி.
நம்முடைய பாவாணர் அவர்கள் தொகுத்த 'அகர முதலி'
என்ற ஒரு ஆராய்ச்சி நூல் ஒரு நூறு பிரதிகள் கூட விற்கப்
படவில்லை என்று சொன்னால் ஆராய்ச்சித் துறைக்கு அது
ஊக்கம் அளிப்பதாக இருக்க முடியுமா அல்லது பாவாணர்
போன்று தங்களுடைய ஆயுளில் பெரும் பகுதியை தமிழுக்காக
செலவிட்ட அந்த ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் ஒரு அங்கீ
காரம் பெறுவதாக அது இருக்க முடியுமா என்பதை மொத்த
தமிழகமும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

புத்தகங்கள் எல்லாம்
குறிப்பாக இப்படி பிரசுரிக்கப்பட்ட
விற்பனை ஆகாமல் இருப்பதற்குக் காரணம் அதனுடைய அச்சு
முகப்பே கூட கவர்ச்சிகரமாக இல்லாததும் ஒரு காரணமாக
இருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். இங்கிலாந்து நாட்
டிலே பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைக் கூட அன்சார்
என்ற கம்பெனிதான் இன்றுகூட அச்சிட்டுக் கொடுத்து வருகிறது.
அதுபோல இப்படிப்பட்ட நூல்களையெல்லாம் நல்ல பிரசு
கர்த்தர்களிடம் அளிக்க வேண்டும். ஆயிரக்கணக்கில் பிரதிகள்
அச்சிடப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு கடைசி
யாக நான் சட்டமன்றத்திற்கு வரும்போது ஆசிரியர்கள் சார்பாக
ஒரு சிலர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று போர்டைப்
பார்த்துவிட்டு என்ன விஷயம் என்று விசாரிக்க அவர்கள்,
எங்களை அழைத்து அமைச்சர் அவர்கள் பேசியிருந்தால் நாங்கள்
இங்கே உட்கார்ந்திருக்க முடியாதே என்று சொன்னார்கள். அது
தான் உங்களுடைய குறை. அவர்கள் நம்முடைய அலுவலர்கள்.
நம்முடைய குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கக்கூடியவர்கள்.

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 8

ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அவர்களை அழைத்து உங்களுடைய உறவாடலின் மூலம் தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் சமத் அவர்கள் ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பதாகவும் நான் அழைத்து பேசியிருந்தால் அது நடக்காமல் இருந்திருக்கும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் உண்மை நிலை வேறு. சென்ற ஆண்டு அவர்கள் போராட்டம் நடத்திய போது, அந்தப் போராட்டத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வர, முதல்வர் அவர்களோடு கலந்து பேச முடிவிற்கு கொண்டு வருவதில் நானும்தான் கல்வியமைச்சரோடு இருந்தேன், இம்முறையும் அவர்கள் என்னிடம் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். பேசும்போதே நான் ஒரு தேதியைக் குறிப்பிட்டு, இரண்டாம் செயலாளர் அஞ்சனி தயானந்த் அவர்களோடு பேசச் சொன்னேன். பேசிக் கொண்டிருக்கும்போதே திடீர் என்று ஸ்டிரைக் பற்றி அறிவித்து விட்டார்கள். இதுதான் நடந்தது. இப்போது கூட அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதைப்பற்றி எனக்கு யாரும் சொல்லவில்லை. தகவல்கூட இல்லை. ஆசிரியர்களை அழைத்துப் பேசக் கூடாது என்று அரசு கருதவில்லை. சுமுகமாக எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்றுதான் அரசு எண்ணுகிறது.

**திரு. கு. ரமணி:** நான் ஏற்கெனவே அவர்களுடைய போராட்டத்தைப் பற்றி பேசினேன். தயவுசெய்து நீங்கள் திரும்பவும் அவர்களை அழைத்துப் பேசி, இந்த நிலை தொடராமல் இருப்பதற்கு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு ஜனதா கட்சியின் சார்பாக என் கருத்தைப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலில், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்தக் கோரிக்கையில், கல்விக்காக 597 கோடி ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். பாராட்டுக்கள். 1984-85 ஆம் ஆண்டு 463 கோடியும், 1985-86 ஆம் ஆண்டு 550 கோடியும், 1987 ஆம் ஆண்டு—



1987 ஏப்ரல் 8] [டாக்டர் தே. குமாரதாஸ்]

இந்த ஆண்டு—597 கோடியும் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டக்கூடிய விஷயம். ஆனால் அதே நேரத்தில் இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து என்ன பயன் என்று கேட்க ஆசைப்படுகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், திருச்சியிலே இருக்கக்கூடிய ஒரு கலைக் கல்லூரி, கட்டிடம் இன்மை காரணமாக, மாணவர்கள் தங்கிப் படிக்க ஹாஸ்டல் வசதி இல்லாததன் காரணமாக அந்தக் கல்லூரியையே 1988-89 ஆம் ஆண்டில் மூடப் போவதாக அறிவிப்பு அளித்திருக்கிறார்களே, இந்த நிலையில் நீங்கள் 597 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதில் என்ன பயன் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இருக்கிற கல்வி ஸ்தாபனங்களை காப்பாற்ற முடியாத அளவிற்கு தரம் கெட்டுப்போய் விட்டோமென்ற வேதனை ஏற்படுகிறது.

(பிற்பகல் 3-00)

கன்னியாகுமரி மாவட்டத்தில் கருங்கல் பகுதியில் ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது. அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தேய்ந்து, அதற்கு மாணவர்கள் செல்வதற்கே தயங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய கேள்வி ஒன்றுக்கு பதில் கொடுக்கிறபோது, வருகிற நிதியாண்டில் அதை கவனத்தில் கொண்டு கட்டடம் கட்டுவோம் என்று சொன்னார்கள். இத்தனை கோடி ரூபாய்களை செலவு செய்தும் இருக்கிற பள்ளிகளை நல்ல முறையில் கொண்டு வர முடியாத சூழ்நிலையில் இருக்கிறீர்களே என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அரசு மேல் நிலைப்பள்ளி 727, தனியார் பள்ளிகள் 698 இருப்பதாக குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது பாராட்டிற்குரிய விஷயம்தான். தனியார்களுக்கு அதிகமாக பள்ளிகளைக் கொடுப்பதை நான் எதிர்க்கவில்லை. மாறாக அந்தப் பள்ளிகளில் சேர்கிற மாணவ, மாணவியர்கள் பணம் கொடுத்து சேர்கிற சூழ்நிலை இருப்பதால் அதற்கு முட்டுக்கட்டை வைக்கிற அளவிற்கு அதிகமான மேல்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மொத்தம் 39,299 பள்ளிகள் இருப்பதாகவும், 2 லட்சத்து 91 ஆயிரம் ஆசிரியர்கள் பணியாற்றுவதாகவும் மாணவ மாணவியர் ஒரு கோடியே 12 லட்சத்து 76 ஆயிரம் பேர்கள்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 8

இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அரசின் புள்ளிவிவரப்படி பார்த்தால்கூட ஒரு ஆசிரியர் குறைந்தபட்சம் 25 அல்லது 30 மாணவர்களுக்கு பாடம் எடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும், உங்களுடைய கணக்கின்படி பார்த்தால் கிட்டத்தட்ட 50 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற சூழ்நிலை வருகிறது. இது போதுமா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

சில பள்ளிகளில் அதாவது இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளில் 70, 90, 100 என்று மாணவர்கள் ஒரு வகுப்பில் படிக்கிறார்கள். ஒரே ஆசிரியர்தான் அவர்களுக்குப் பாடம் எடுக்கிறார் என்றால் அது போதுமானதாக இருக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

சில பள்ளிகளில் அதிகமாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்கள் இருக்கிற அளவிற்குக்கூட மாணவர்கள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அவைகளைப் பார்த்தால் அரசு பள்ளி களாகத்தான் இருக்கிறது. அரசு பள்ளிகள் இப்படி பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் தனியார் பள்ளிகள் இல்லையென்றால் தமிழகமே கல்வியில் இல்லையென்ற சூழ்நிலை வந்து கொண்டிருக்கிறதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலையைப் போக்குவதில் அரசு கண்ணும் கருத்துமாக இருந்து, கல்விக் கண் திறந்த கர்ம வீரர் காமராசர் அவர்கள் ஆட்சியின்போது இருந்ததைப்போல, அனைவரும் கல்வியில் முன்னேறுகிற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து 39,229 பள்ளிகளுக்கு கடந்த ஆண்டில் எடுக்கப்பட்ட வேலை, இந்த ஆண்டு செய்யப்பட வேண்டிய வேலை இரண் டிற்கும் நீங்கள் 3 கோடியே 67 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக் கிறீர்கள். அந்தப் பள்ளிகளுக்கு ஒரு கட்டடத்திற்கு வெள்ளை யடிப்பதற்கு 10 ரூபாய் என்று வைத்து பார்த்தாலும் கூட இந்தப் பணம் போதுமா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே அதிக மான பணத்தை ஒதுக்கீடு செய்து தர வேண்டும். பள்ளிகளுக்கு மேலைக் கூரை கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆசிரியர்கள் அமர்வதற்கு நாற்காலிகள் இல்லை. இப்படிப்பட்ட காரியங்கள் நிலைகளைக் களைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அடுத்து எஸ்.எஸ்.எல்.சி. தவறிய மாணவர்களுக்கு சிறப்பு போதனை செய்வதற்கென்று பி.எட். ஆசிரியர்களை நியமித்து இருக்கிறீர்கள். தமிழ் நாடு முழுவதும் எத்தனை ஆசிரியர்களை நியமித்து இருக்கிறீர்கள்? அவர்கள் செயல்பட்டு வருகிறார் களா? அதன்மூலம் கிடைத்த பலன் என்னவென்ற விவரங் களைக் கொடுத்து இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

தமிழகத்தில் 75 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த 75 பள்ளிகளில் படித்து வருகிற வர்களுக்கே வேலை இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர தனியார் பள்ளிகள் வேறு இருக்கின்றன. தனியார் பள்ளி களில் மாணவர்கள் படித்து வருகிறார்கள் என்றால் அவர்கள் படித்து, பட்டம் பெற்று வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் படிக்கிறார்கள். நீங்கள் எடுக்கிற முடிவு எதுவாக இருந்தாலும் நல்லதாக இருக்கவேண்டும். காரணம் ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்கள் அந்தத் தனியார் பள்ளிகளில் படித்து பரிட்சை எழுதுகிறார்கள். ஆனால் அந்தப் பள்ளிகள் ரெகக்னைஸ்ட் பள்ளிகள் அல்ல. அப்படிப்பட்ட பள்ளிகளில் படித்து பட்டம் பெற்று வேலை கிடைக்குமென்று நம்பி ஏமாந்து போகக்கூடிய சூழ்நிலையில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். எனவே நீங்கள் அனுமதி கொடுக்காமல் இருக்கிற பள்ளிகளை தீவிர நடவடிக்கையெடுத்து, அந்தப் பள்ளிகளை ஒன்று அப்புறப்படுத்த வேண்டும், இல்லை ரெககனிஷன் கொடுக்க வேண்டும். இரண்டும் கெட்டான் நிலையில் அவை இருக்கக் கூடாது. ஒரு தீர்க்கமான முடிவை அரசு மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஷார்மிக் வித்யோபீத் என்ற நிறுவனம், உழைப்போர் பல்நோக்கு கல்வி நிறுவனம் என்கிற அமைப்பின் கீழ் ஒரு நிறுவ னத்திற்கு மத்திய அரசு ஐந்து லட்சம் ரூபாய் வீதம் கொடுக் கிறது. இந்தியா முழுவதிலும் 54 நிறுவனங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் மூன்று நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த மூன்று நிறுவனங்களுக்கும் ஒரு நிறுவனத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் வீதம் 15 லட்சம் ரூபாய் வருகிறது. ஆனால் மொத்தம் ஐந்தே அதிகாரிகள்தான். அந்த அதிகாரிகள் எல்லாம் இந்தப் பணத்தை பயனுள்ள காரியங்களுக்காக செலவழித்திருக்கிறார்களா என்று

பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல முடியும். அந்தப் பணம் யாா யாருககு எந்த ரூபததுமல செலவழுககபபட்டது என்கிற விவரம் சரியாகத் தொியவில்லை.

அதேபோன்று இங்கே கல்லூரிகளைப் பற்றி பேசுகின்றபோது, மரியாதைககுரிய அப்துல் சமத் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, அரசினர் கல்லூரிகள் 54, மானியம் பெறும் தனியார் கல்லூரிகள் 133, மானியம் பெறாத கல்லூரிகள் 11. ஆகவே, அரசுக் கல்லூரிகளுக்கு அப்பாற்பட்டு, 144 கல்லூரிகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. அரசுக் கல்லூரிகள் 54 என்று சொல்கிற அந்த எண்ணிக்கையில் உள்ளடங்கியதுதான் நான் சொன்ன அந்த திருச்சியில் உள்ள கல்லூரியும் கூட. அடுத்து வருகின்ற ஆண்டில், இந்தக் கொள்கைக் குறிப்பைப் பார்க்கிறபோது, 54 என்கிற இந்த எண்ணிக்கை 53 ஆக மாறிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். திருச்சியிலே நான் சொன்ன அந்த பெல் நிறுவனத்தார் அந்தப் பகுதியில் உள்ளவர்கள் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காக இலவசமாக கொடுத்த பகுதியாகும். அந்தக் கல்லூரியை மூடவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தக் கல்லூரியை சட்டக் கல்லூரியாக மாற்ற இருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். எனவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே ஒரு கல்லூரி மூடப்பட வேண்டிய நிலையிலே இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே எந்தக் கல்லூரியும் திருச்சியிலே இல்லை. ஏதோ பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே திருச்சியிலே எந்தக் கல்லூரியும் அந்த நிலையில் இல்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியப் பெருமக்கள் சொன்ன தகவல்தான். நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய பெயரில் இயங்கி வருகிற கல்லூரி. உயிரோடு இருப்பவர்களுடைய





பெயரை வைக்கக்கூடாது என்று தமிழக அரசு உத்தரவு போட்ட காரணத்தினால், இன்றைக்கு அது அரசுக் கலைக் கல்லூரி என இருக்கிறது.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள கல்லூரி மூடப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். திருச்சியிலே அல்ல. திருவரம்பூர் தொகுதியில் அது இருக்கிறது. அந்த அரசுக் கல்லூரி நல்ல முறையில இயங்கிக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சற்று முன் பேசும்போது ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். அதாவது சரியாக நடத்த முடியாமல் அந்தக் கல்லூரி இடம் இல்லாமல், மூடப்பட இருக்கிறது என்று சொல்லி, இதுதானா உங்கள் ஆட்சி என்று கேட்டார்கள். அது உண்மையல்ல. கல்லூரியைக் கட்டியவர்கள் காண்ட்ராக்ட் காரர்கள். அவர்கள் கட்டியது சரியில்லை என்று சொல்லி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போய், அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றதனால், அடுத்த கட்டிடத்தைக் கட்ட முடியாத நிலைமை வந்து, நின்றுவிட்டது. இப்போது தீர்ப்பு கொடுக்கப் பட்டு இனிமேல் கட்டுவதற்கு ஆயுத்தமாக இருக்கிறார்கள். எனவே உண்மைக்கு மாறாகச் சொல்லி, என்னுடைய தொகுதியில் இருக்கிற கல்லூரி மூடப்படுகிற நிலைமை இருக்கிறது என்று சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணைத்தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த செய்தியைச் சொன்னேன். தவறு என்கிற பட்சத்தில் அதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். நிச்சயமாக உங்களுடைய தொகுதி கெட்டுப் போகவேண்டும் என்ற எண்ணத்தினுடைய அடிப்படையிலே நான் சொல்லவில்லை. ஒரு அரசுக் கல்லூரி பாழாகிப் போய்விடக்கூடாது என்ற ஆதங்கத்தில் சொன்னேன். தவறு இருக்குமானால் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே புரபசனல் கோர்ஸ்கள் கொண்ட கல்லூரி இல்லாத ஒரு குறை இருக்கிறது. மருத்துவக் கல்லூரி வேண்டும் என்றால், கோடிக்கணக்கான பணம் வேண்டும் என்று சொல்கிறீர்கள். அதேமாதிரி பொறியியல் கல்லூரி வேண்டுமென்று சொன்னாலும்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 8

சொல்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கல்வி இலாகாவையும், சட்ட இலாக்காவையும் தன்கையில் வைத்திருக்கிற காரணத்தால், எங்கள் மீது இரக்கம் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலே சட்டக் கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று விளையாட்டுத் துறையை எடுத்துக்கொண்டு பார்க்கிறபோது, நாம மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருக்கிறோம். இங்கே ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய திருமதி வளர்மதி அவர்கள் பேசுகிறபோது கூட குறிப்பிட்டார்கள். எந்தத்துறையாக இருந்தாலும், விளையாட்டிலே, அவர்கள் தகுதி உடையவர்களாக இருந்தால், அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் அளித்து, விளையாட்டுத் துறையிலே அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்று அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை நானும் வரவேற்று இந்த விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சுய நிதி நிறுவனங்கள் மூலமாக பாலிடெக்னிக்குகள் போன்றவற்றை ஆரம்பிப்பதை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், உங்கள் கணக்குப்படி கடந்த மூன்று ஆண்டுகளில் 77 தனியார் பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகவும், 24 பொறியியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகவும் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் அதே வரியிலே மூன்று பாலிடெக்னிக்குகள் இன்னும் சரியாக செயல்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். காரணம் என்ன? மாணவர்களை கான்வாஸ் செய்து, அந்த இடங்களை விற்க முடியாத காரணத்தால், அந்த மூன்று பாலிடெக்னிக்குகளும் இன்னும் செயல்படவில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மூற்பகல் 9-10)

அதைப்போல, தமிழக வரலாற்றைத் தொகுத்து எழுதி வெளியிட வேண்டுமென்பதற்காக, அப்படி வெளியிடுவதன் மூலம் அதுதான் அதிகாரபூர்வமான தமிழகத்தின் வரலாறாக இருக்க



1987 ஏப்ரல் 8] [டாக்டர் தே. குமாரதாஸ்]

முடியும் என்ற விதத்தில், இதற்காக அரசு ஒரு குழுவை நியமித்து அந்தக் குழு அரசுக்கு அறிக்கையை கொடுக்கவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். அந்தக் குழு 1½ ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்தும் அதை இன்னும் ஏன் வெளியிடவில்லை என்பதை கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குழுவை சென்னை பல்கலைக் கழகத்தோடு இணைப்பதாகக் கூட அரசு முடிவெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையிலே மின்சாரம் தடைபட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் தன்னுடைய குரலை எழுப்பிக்கொண்டிருக்கிறார்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் சென்ற ஆண்டே ஜெனரேட்டர் வைக்கவேண்டுமென்று சொன்னோம். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டு மூன்று ஆண்டுகளாக சி.ஈ.ஓ. நியமனம் செய்யப்பட வில்லை. இப்போது நியமனம் செய்யப்பட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நன்றி. அதேமாதிரி, தமிழகத்தில் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அரசு நடுநிலைப் பள்ளிகளில் உதவியாளர்களோ, எழுத்தர்களோ, காவலரோ, துப்புரவாளரோ நியமிக்கப்படுவதில்லை. இப்படிப் பட்ட நிலை இருக்கிற காரணத்தால் அந்தந்தப் பள்ளிகளிலே இருக்கிற தலைமையாசிரியர்கள், இதுபோன்ற இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்களை நியமிக்கிறார்கள். அப்படி இல்லையென்றால், அந்த வேலைகளை அந்தப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தலைமையாசிரியர்களே செய்யவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறார்கள். எனவே தயவுசெய்து இதை கருத்திலேகொண்டு, ஒவ்வொரு நடுநிலைப்பள்ளிக்கும், எழுத்தர், உதவியாளர், காவலர் போன்றவர்களை நியமிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின்கீழ் எட்டு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளில் எம்.பி.ஏ. கோர்ஸ் நடக்க வருகின்ற பி.பி.ஏ. மாணவர்களுக்கு சரியான வகையிலே [illegible] இல்லை. ஆனால் பி.எஸ்சி. மேத்ஸ், கெமிஸ்ட்ரி,

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 8

பிசிக்ஸ் போன்ற பாடங்களை எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்கு எம்.பி.ஏ. கோர்ஸில் உடனடியாக இடம் கிடைத்து விடுகிறது. பி.பி.ஏ. கோர்ஸ் படித்த மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. காரணம், அவர்கள் பி.பி.ஏ. கோர்ஸில் அதிகபட்ச மதிப்பெண்ணாக 78 சதவிதம்தான் வாங்குகிறார்கள். ஆனால் பி.எஸ்சி. படித்த ஒரு மாணவன் 100 சதவிதம் வரையிலும் மதிப்பெண் வாங்கமுடிகிறது. எனவே மதிப்பெண் அடிப்படையில் பார்க்கின்றபோது பி.எஸ்சி. படித்த மாணவர்களே முதலிடம் வகிப்பதால் அவர்களுக்கு எம்.பி.ஏ. கோர்ஸில் எந்த விதமான சிரமமும் இல்லாமல் இடம் கிடைத்துவிடுகிறது. எனவே எம்.பி.ஏ. கோர்ஸில் 15 அல்லது 20 சதவீத இடத்தையாவது பி.பி.ஏ. படித்த மாணவர்களுக்கென்று ஒதுக்கித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி அணைப் பகுதியிலே ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் துவக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் 22,500 ரூபாயையும் 5 ஏக்கர் நிலத்தையும் அரசுக்கு வழங்கி இருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அங்கு பள்ளிக்கூடம் கட்டுவதற்கான எந்தவிதமான முயற்சியையும் இந்த அரசு எடுக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, அங்கு ஒரு பள்ளிக்கூடத்தை உடனடியாக திறப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக உள்ள பள்ளிகளில், எந்தப் பள்ளியில் அதிகமான மதிப்பெண்களை மாணவர்கள் பெறுகிறார்களோ அந்த மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு, கல்விக் கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களுடைய பெயராலே "காமராஜர் பதக்கம்" ஒன்றை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிப்பட்ட பதக்கம் வழங்குவதால் ஆசிரியர்களை ஊக்குவிக்கின்ற முறையில், அவர்களும் நல்ல முறையிலே மாணவர்களுக்கு கல்வி போதிக்கக்கூடிய நிலைமையும் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் வேலைக்கு சேரும்போது அவர்களுடைய சான்றிதழ்களை சரிபார்த்துத்தான் அவர்களை வேலைக்கு சேர்த்துக்கொள்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும்



1987 ஏப்ரல் 8] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அதிகாரிகள் இன்ஸ்பெக்ஷன் செய்யும்போது அந்தச் சான்றிதழ்களை மறுபடியும் சரிபார்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள் இப்படி ஒவ்வொரு தடவையும் சரிபார்ப்பதால் அந்தச் சான்றிதழ்கள் டாமேஜ் ஆகிவிடுகின்றன. ஆகவே ஒரு முறை மட்டும், அவர்கள் வேலைக்குச் சேரும்போது மட்டும் அவற்றைச் சரிபார்த்தால் போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட கருங்கல், நல்லூர், உண்ணாமலைக்கடை, உதயமார்த்தாண்டன் காக்கவிளை, மேச்சறை, வேட்டமங்கலம், மத்திகோடு, பரம்பு ஆகிய பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகள் மிகவும் பழுது அடைந்துள்ளன. அந்தப் பள்ளிகளுக்கு புதியக் கட்டிடங்களையும் தேவையான ஆசிரியர்களையும் வழங்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மின்தடை காரணமாக, மீண்டும் மின்சாரம் வரும்வரை அவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 3-15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(பிற்பகல் 3-30)

மீண்டும் 3-32 மணிக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. **வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சென்னை நகரம் முழுவதும் மின்சாரம் போய்விட்டது. ஆகவேதான் இங்கேயும் மின்சாரம் போய்விட்டது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று அடிக்கடி நம்முடைய சட்டமன்ற வளாகத்தில் இப்படி பவர் கட் ஆகிறது. ஆகவே உடனடியாக நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகள் நடக்கும்போது இப்படி தடைபடாமல் இருக்க ஒரு ஜெனரேட்டர் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடிக்கடி ஏற்படுவதில்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்கான ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

[1987 ஏப்ரல் 8

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இழந்த சக்தியை பெற்றதற்காக மீண்டும் ஒரு வாய்ப்பு . . .

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88-ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களை குறிப்பிட வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை துவக்குகின்றேன்.

இதய தெய்வம் தமிழ்ப் பெருமக்களின் நம்பிக்கை நட்சத்திரம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மொத்த வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தில் 21 சதவீதம் என்று எண்ணுகிறபோது தமிழகத்து மக்கள் பெருமைப்படுகிற அளவுக்கு இன்றையதினம் கல்வி வளர்ச்சி சிறப்புடன் இருக்கிறது என்றால் அது மிகையாகாது. நான் நேரத்தின் அருமையைக் கருதி என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சில குறைகளை மட்டும் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். அவைகளை எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். எனக்குத் தரப்பட்டு இருக்கிற நேரத்திற்கும் குறைவாகவே பேசி முடித்து விடுகிறேன். ஆகவே என்னுடைய தொகுதியின் பிரச்சினைகளை மட்டும் நான் சொல்ல விழைகிறேன்.

தென் ஆற்காடு மாவட்டம் சர்க்கரை ஆலைகள் நிறைந்த ஒரு பகுதி. அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு என்று கல்வி நிலையம் ஒன்றை உருவாக்கித் தந்து அங்கே இருக்கின்ற தொழிலாளர் பெருமக்களுடைய குழந்தைகள் கல்விச் செல்வம் பெறுகின்ற அளவுக்கு வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நெல்லிக்குப்பம் தொகுதிக்கு உட்பட்ட தொரப்பாடி பேரூராட்சியில் மேல்நிலைப் பள்ளி ஒன்று இயங்கிக் கொண்டு வருகின்றது. அங்கே உள்ள அறிவியல் ஆய்வுக் கூடத்தின் கட்டிடம் இடிந்து விழுகின்ற நிலையில் இன்றையதினம் இருக்கின்றது. ஆகவே அந்தக் கட்டிடத்தை மாண்புமிகு



1987 ஏப்ரல் 8] [திரு. துரை அன்பரசன்]

அமைச்சர் அவர்கள் சீர் செய்து தரவேண்டும். காலம் தாழ்த்தாது அதிகாரிகளுக்கு உடனடியாக கட்டளை பணித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நெல்லிக்குப்பம் நகராட்சியிலே இயங்கி வருகின்ற அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலே 900 மாணவியர் பெருமக்கள் படிக்கின்றார்கள். அந்தப் பள்ளிக்கு இடம் இல்லாத காரணத்தினால் அது மிகவும் சீர்கேடான நிலையிலே இயங்கி வருகிறது. நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, நெல்லிக்குப்பம் ஒரு பின்தங்கிய நகராட்சியாக இருக்கின்ற காரணத்தால் 900 மாணவியர்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற அந்தப் பள்ளிக்குக் கூரைக் கட்டிடம்கூட பின் பகுதியிலே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் சென்ற ஆண்டு ஒரு கேள்வியின் போது கேட்டேன். அதற்கு சென்ற ஆண்டு அந்தப் பள்ளிக்கு 1½ இலட்சம் ரூபாயில், இரண்டு வகுப்பறைகள் கட்ட தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்று முன்னால் அமைச்சர் சொன்னார். அரசு ஒதுக்கிய அந்தத் தொகை இதுவரை அந்த நெல்லிக்குப்பம் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு வந்து சேரவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான், இன்றையதினம் பள்ளிக்குப் பின்னாலே வகுப்பறைகளைக் கட்டுகின்ற சூழ்நிலையை உருவாக்குகின்ற வகையில, ஈ.ஐ.டி. பாரி நிர்வாகத்தோடு பேசி, அங்கே மேற்கூரை வேய்கின்ற ஒரு சூழ்நிலையை கடந்த ஒரு வாரத்திற்கு முன் செய்து தந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்வது, இந்த அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஆக்கித் தந்தாகவேண்டும். அதற்குரிய தொகையைக் கட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும், அந்தத் தொகையோடு ஏழு ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கித் தர நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் நெல்லிக்குப்பம் பெண்கள், 11 இலே மேல்நிலைக் கல்விக்காக செல்லவேண்டுமென்றால்,

பட்டறுக்கு அப்பாலுள்ள கடலூருக்குச் செல்லவேண்டும். இல்லையென்றால் மேற்கேயுள்ள மேலபட்டாம்பாக்கம் டவுன் பஞ்சாயத்துக்குச் செல்லவேண்டும். ஏறத்தாழ 6 கிலோமீட்டர் தொலைவிலுள்ள அந்த ஊருக்குச் செல்லவேண்டும். 60,000 தொழிலாளர்களை, விவசாயக் கூலிகளை உள்ளடக்கிய அந்த நகராட்சியில் இந்தப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அவசியம் என்பதை நான் இந்த நேரத்தில் அமைச்சரவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு நூலகக் கட்டிடம் ஒன்று வேண்டுமென்று ஏற்கனவே ஒரு முறை கேள்வி நேரத்தின்போது கேட்டேன். அங்கே ஒரு நூலகம் அமைத்துத் தருவதாகச் சொன்னார்கள். நெல்லிக்குப்பத்தைப் பொறுத்த வரைக்கும் படித்த மக்களை உள்ளடக்கிய ஒரு நகரம். அங்கே வாடகைக் கட்டிடத்தில் தான் அந்த நூலகம் இதுநாள் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுவும் நகரத்திற்கு மையத்திலே பணி செய்ய வேண்டிய அந்த நூலகம், நகரத்திற்கு அப்பாலே தள்ளி, ஒரு ஒதுக்கப்பட்ட இடத்தில், மக்கள் சென்று படிக்க முடியாத சூழ்நிலையில் அந்த நூலகக் கட்டிடம் இயங்கி வருகிறது. ஆகவே நகரத்தின் மையத்தில் நூலகக் கட்டிடத்தை உருவாக்கித் தரவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியின் சார்பில் நான் சொல்லியிருக்கின்ற இந்த மூன்று கருத்துக்கள்—முதலிலே சொன்ன தொரப்பாடி பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய மேல்நிலைப்பள்ளியிலே இயங்கி வருகின்ற அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக அதிகாரிப் பெருமக்களை அந்த இடத்திற்கு அனுப்பி, அது எந்த அளவிற்கு சீர்கெட்டிருக்கிறது என்பதையும், எந்த நேரத்திலும் இடிந்து மாணவர்கள் மேலே விழக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் அறிந்து, தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பள்ளி ஆண்டு விழாவிற்குச் சென்றபோது அந்தப் பள்ளியைச் சுற்றிக் காண்பித்தார்கள். அது ஒரு நல்ல பள்ளி. ஆசிரியர் பெருமக்கள் மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சார்பாக இந்தக் கருத்தை எனது வாயிலாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக்



கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக மேல்நிலைப் பள்ளியில் இயங்குகின்ற அறிவியல் ஆய்வுக் கூடக் கட்டிடத்தை சீர்செய்து தரவேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நான் சொல்லிக்கொள்ள விரும்பப்படுவது, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகின்ற நூல்கள் சாதாரண நடுத்தர படிப்பறிவு உள்ளவர்கள் புரிந்து கொள்கின்ற வகையில் எழுதப் படவேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழ் வரலாறுகளை, தமிழ் சரித்திரத்தை, தொகுப்புகளை எல்லோரும் வாங்கிப் படிக்கின்ற அளவிற்கு அந்த நூல்கள் மக்களுக்கு கிடைத்திட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, நேரத்தைக் கருதி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 3-40)

திரு. கே. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு சார்பாக பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற கல்வி மானிய கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி என்ற குறிப்புரைகளோடு வழங்கப் பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே, மாநில அரசு செய்ய முயற்சித்திருக்கின்ற சில பணிகளுக்கு நிதி ஒதுக்கியிருக்கின்ற விவரத்தை கொடுத்திருக்கிறீர்கள். நான் மாநில அரசினுடைய கல்விக் கொள்கையின் நிலைமைகளை பரிசீலிப்பதற்கு முன்னால் மாநிலத்தில் நிலவுகின்ற கல்விக் கொள்கை என்பது மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையின் ஒரு பிரிவாக ஒரு கிளை யாக நடைமுறையில் நிலவுகின்ற காரணத்தால் எப்படி கருவிலே உருப்பெற்றுக்கொண்டிருக்கின்ற குழந்தை தாயின் நாபிக்கொடி யோடு இணைக்கப்பட்டிருக்கிறதோ அது போல மத்திய அரசி னுடைய புதிய கல்விக் கொள்கையோடு இந்த மாநிலத்தின் நடப்பில் நிலவுகின்ற கல்விக் கொள்கை முற்றிலும் இணைக்கப் பட்டிருக்கிறது என்பதனால் இந்திய அரசின் கொள்கையை மறந்துவிட்டு தமிழ்நாட்டின் நிலைமைகளைப் பற்றி மட்டும் பரிசீலிப்பது ஒரு அறிவு பூர்வமான பரிசீலனையாக இருக்காது. இன்றைக்கு நமக்கு முன்னால் கடுமையான விமர்சனத்திற்கும், விவாதத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கை யின் நிலைமைகளைப்பற்றி ஒரு சில விஷயத்தைப் பற்றி குறிப்பிட வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. இந்த

கொண்டிருக்கும் பட்டியல் அல்ல. இந்திய அரசியலமைப்பு மேடையாக வைக்கப்பட்ட நிலையைப் பற்றி இருக்கிறது, எப்படியெல்லாம் வழிகாட்ட வேண்டும் இருக்கின்றன என்பதற்கு ஒரு ஒரு உதாரணத்தைக் கூற வேண்டிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்ற வழிகாட்டும் கட்டளைப்படி 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாய இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதாகும். 1950-ல் அரசியல் சட்டம் வகுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் 6 லிருந்து 14 வயது வரையிலும் இருக்கின்ற இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி வழங்கப்படும். எனவே ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியல் சட்டத்தின் முறைகள் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டு இருக்கிறதா? இன்றைய புதிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டு இருக்கின்ற நிலையிலே கூட என்ன சொல்லுகிறார்கள்? பலரும் பல விஷயங்களைப் பேசுகிறார்கள். நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு சிந்திக்க வேண்டும் என்பதற்காக குறிப்பிட விரும்புகிறேன். ஏதேதோ சில அற்ப விஷயங்கள் மறக்கப்பட்டுவிட்டன என்றெல்லாம் நாம் சில நேரங்களில் சிலரோடு மோதிக்கொள்கின்றோம் அல்லவா? அரசியல் சட்டம் வகுத்த வழி காட்டும் கட்டளைகளை நடைமுறையில் மீறப்பட்டது மட்டும் அல்ல, அந்த அரசியல் சட்டம் 1960-க்குள் இந்திய நாட்டின் அனைத்து 14 வயது குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க வேண்டும் என்பதை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் நிறைவேற்றவில்லையே, அரசியல் சட்ட ஷரத்தையே நிறைவேற்றாத அந்த அரசுகளை கண்டிப்பது; தண்டிப்பது யார் என்று நான் கேட்க விரும்புகிறேன். சாதாரணச் சட்டத்தை மீறினால் தண்டிக்கிறார்களே. அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டளையை மீறிய அரசை தண்டிப்பது யார்? அரசு தன்னைத்தானே தண்டித்துக் கொண்டதா? மனசாட்சி இருக்குமானால் அந்த மனசாட்சியைத் தொட்டு சிந்தித்துப்பார்க்க வேண்டும் உரிய பொறுப்பில் உள்ளவர்கள். அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதை நிறைவேற்றாமல் விட்டுவிட்டு இன்றைக்கு 'புதிய கல்விக் கொள்கை ஒரு சவால்' என்கிறீர்களே, கேட்க நன்றாக இருக்கிறது. உண்மையில் என்ன தெரியுமா? இந்தியாவிற்கு புதிய கல்விக்கொள்கைதான் ஒரு சவாலே தவிர, புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியிருக்கிற மத்திய அரசுதான் மக்களுக்கு ஒரு சவாலே தவிர வேறு சவால்





ஒன்றும் இல்லை என்பது தான் நடைமுறை உண்மை. ஆனால் நான் குறிப்பிட விரும்புவது என்னவென்று சொன்னால் இன்றைய தமிழ்நாட்டின் அரசு, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற நடைமுறையிலிருந்து பிறண்டு போவது என்பது ஏன் நிகழ்கிறது என்பதை மிகுந்த அக்கறையோடும் இன்றையத் தேவையை பூர்த்தி செய்கின்ற உள்ளுணர்வோடும் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் என்ன சொல்லப்படுகிறது? இங்கே சொல்லப்படுகின்ற மிக முக்கியமான விஷயம் என்னவென்றால். . . (குறுக்கீடு) புதிய கல்விக் கொள்கையில் பலரும் பல கருத்துக்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். . . (குறுக்கீடு) உரிய நேரம் ஒதுக்கப்படுமானால் நான் இத்தகைய குறுக்கீடுகளை வரவேற்கிறேன். அத்தகைய உரிய நேரம் ஒதுக்கப்படவில்லை என்றால் எனக்கு மட்டும் நேரம் குறைக்கப்படுமானால் ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பும் என்ற நிலை பார்க்கப்படுமானால் அது சரியல்ல என்பதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். மற்றபடி அதுபற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பராயன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** இங்கே நான் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புவது; நாடு பொறுமையாக விவாதித்து நிறைவேற்றவேண்டிய ஒரு விஷயம், விவாதிக்கப்படாமலேயே அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டு விட்டது. அதைத் தான் புதிய கல்விக் கொள்கை என்று குறிப்பிட விரும்புகிறேன். நாடு விவாதிக்கிறபோதே அது நடைமுறையில் வேக, வேகமாக அமுல் படுத்தப்பட்டு விட்டது. அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிற அந்த வழிகாட்டும் கோட்பாடுகளில் 1960லேயே நிறைவேற்றப்பட வேண்டிய விஷயங்கள் நிறைவேற்றப்படாமல் விட்டவர்கள் இன்றைக்குச் சொல்வதை எப்படி நம்புவது என்று கேட்கிறேன். அரசியல் சட்டம் வரையறுத்த காலம் கடந்து நடைமுறையில் 27 வருடங்களுக்குப் பின்னரும் நிறைவேறவில்லை என்றால் எப்படி?

**திரு. மா. கதிர்வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சகோதரர் சுப்பராயன் அவர்கள், தேசிய புதிய கல்விக் கொள்கையைப் பற்றி, சிந்திக்காமலேயே நடைமுறைப்படுத்தியதாகச் சொன்னார்கள். (குறுக்கீடு). தவறான

தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியா முழுவதும் இருக்கின்ற அனைத்து மாநில முதல்வர்களையும் அழைத்துப் பேசி இது சம்பந்தமாக எல்லாக் கருத்தரங்குகள், அறிஞர் பெருமக்களை எல்லாம் கலந்து அதற்குப் பிறகுதான் நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை பேரவைக்குத் தந்து கொண்டு இருக்கிறார் என்பதை மட்டும் சொல்லிவிட்டு, மற்ற விஷயங்களை அமைச்சர் அவர்கள் இறுதியிலே தனது பதிலுரையிலே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, மிக முக்கியமான பிரச்சினையாக, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற தேசிய கல்விக் கொள்கையில் மீண்டும் அது வலியுறுத்தப்படுகிறது. எது? இலவசக் கல்வி முறை. நான் இங்கே இன்றைக்கு கேட்க விரும்புவது இந்தப் புதிய கல்விக் கொள்கையில் மத்திய அரசு அறிவித்து இருக்கிற வாக்குறுதிகள் நடப்பில் நிறைவேறும் என்பதை எந்த அடிப்படையில் ஒப்புக் கொள்ளச் சொல்கிறீர்கள்? அரசியல் சட்ட வாக்குறுதிகளையே நிறைவேற்றாத ஒரு அரசு, அரசியல் சட்டக் கட்டளைகளையே நிறைவேற்ற மறந்த ஒரு அரசு, இன்றைய புதிய கல்விக் கொள்கையிலே மட்டும் நிறைவேற்றும் என்பதை எப்படி என்னால் ஒப்புக்கொள்ள முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பாரதி, சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவையின் துணை நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், நம்முடைய நடுவண் அரசினுடைய கல்விக் கொள்கையிலே வேறுபாடு இருப்பதாகச் சொல்வதில் தவறாக நாங்கள் ஒன்றும் நினைக்க இல்லை. அந்தக் கொள்கையை இப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம். நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்த பிறகு அதில் ஏற்படுகிற நன்மை, விளைவுகளைச் சொல்ல வேண்டுமே தவிர, முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்ற உணர்வு அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கு முறையல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**திரு. கே. சுப்பராயன்:** பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் புதிய கல்விக் கொள்கை—ஒரு சவால் என்று ஆவணத்திலேயே சொல்கிறார்கள். புதிய மாதிரிப் பள்ளிகளைப் பற்றி, டூன் பள்ளிகளைப்பற்றி, அந்தப் புதிய கல்விக் கொள்கை சொல்கிறது. அந்த டூன் பள்ளிகள்—ஒரு பள்ளிக்கு இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு ஒரு பள்ளி—இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு ஒரு மாதிரிப் பள்ளி தோற்றுவிப்பதிலேகூட, இங்கே இருக்கிற, இந்த மாநிலத்திலே ஆளுகிற கட்சி எதிர்க்கிற நிலையிலே இருந்தும் எதிர்க்க விரும்பவில்லை. அங்கே இந்தி போதிக்கக்கூடாது, தாய்மொழியிலேயே போதிக்கப்படும் என்று சொன்னாலும், நாங்கள் மாதிரிப் பள்ளிகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இந்தி இருக்கிறது என்பதற்காக நாங்கள் எதிர்க்கவில்லை. இந்தியா, இங்கிலிஷா, தமிழா, தெலுங்கா, மலையாளமா கன்னடமா என்பது அல்ல கேள்வி. இரண்டு கோடி ரூபாய் செலவழித்து ஒரு பள்ளி, மாவட்டத்திற்கு என்றால், அதில் என்ன பொருள்? நடைமுறையில் என்ன அர்த்தம் விரல் விட்டு எண்ணுகிற, வசதி படைத்த கோடீஸ்வரர்களுக்கு மாதிரிப் பள்ளிகள், கோடிக்கணக்கான மக்களுக்கு மரத்தடிப் பள்ளிகளா? கோடிக் கணக்கான மக்களுக்கு மரத்தடியிலே பள்ளி அமைத்து விட்டு, சில கோடீஸ்வரர்களுக்கு மட்டும் மாடிப் பள்ளி, மாதிரிப் பள்ளி என்ற பெயரால் அமைக்கப்படுவதை ஒரு போதும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எனவே, இந்தியா, இங்கிலிஷா என்ற நிலையிலிருந்து எதிர்க்கவில்லை. அனைவருக்கும் கல்வி வேண்டும் .... (குறுக்கீடுகள், கூச்சல்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு எஜுகேஷன் பாலிசி. அதிலே பேசுகிறபோது, வார்த்தைக்கு வார்த்தை எப்படி பதில் சொல்லிக் கொண்டு இருப்பது? நிறைய உறுப்பினர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) பேசும்போது பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்). திரு. சுப்பராயன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குப் பின்னர் பேசுகிற வாய்ப்பு இருக்கிறது .... (குறுக்கீடு, கூச்சல்).

**டாக்டர் து. மாசிலாமணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினரை தான் அனுமதிக்கிறபோது, இன்னொரு உறுப்பினர் குட்கார வேண்டும். உங்கள் கட்சி உறுப்பினரைத்தான் நான் அனுமதிக்கிறேன். இப்படி எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? திரு. பாரதி, நீங்கள் பேசுங்கள்.

(பிற்பகல் 3-50)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர். அவருடைய இயக்கம் இந்தியைப் பொறுத்த வரையில் இந்தி வேண்டும் அல்லது வேண்டாம் என்பதில் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவரும் அரசியல் அரங்கத்தில் இருப்பதால் எங்கள் இயக்கங்களின் வெளியீடுகளைப் படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள் என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். நான் கேட்டுக் கொண்டிருக்கிற கேள்வி இந்தியைப் பொறுத்த [illegible] கேட்கிற கேள்வி வேறு. அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லையே என்பதற்காக வேறு வகையில் திசை திருப்புவது நல்லதல்ல. அடுத்து நான் குறிப்பிட விரும்புவது புதிய கல்வி கொள்கையும் பொறுப்பு கொள்கையை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. (குறுக்கீடு). அரசியல் சட்டத்திலேயே ஒப்புக் கொண்டிருக்கிற அடிப்படையில் கல்வி அரசைச் சார்ந்தது. (குறுக்கீடு). அப்படி இருக்கும்போது அரசு அந்தப் பணியைச் செய்யாமல் எதற்காகத் தனியாரிடம் அந்தக் கல்விப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அரசு தன்னுடைய பொறுப்பிலிருந்து விலகி தனியாருக்கு எப்படி அந்தப் பொறுப்பைக்—கல்வி கொடுக்கிற பொறுப்பை—அளிக்கிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, சரி திரு. மாசிலாமணி நீங்கள் சொல்லுங்கள் . . . . .

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனும் இல்லை. எனவே இதை நீக்க ஆணையிடுகிறேன். அவர் அவருடைய கருத்தைச் சொல்லுகிறார். அது அவருடைய கருத்து. நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள் . . . (குறுக்கீடு) [illegible] தவறு எங்கே இருக்கிறது என்று சொல்லுங்கள். பத்திரிகை [illegible] செய்தி வந்திருக்கிறது. பல மாநிலங்களில் [illegible] [illegible] உள்ள மாணவர்களுக்கு எழுதுவதற்கு வாய்ப்பில்லை என்ற செய்தியே வந்திருக்கிறது. மாணவர்கள் எழுத முன்வரவில்லை என்றும் செய்தி வந்திருக்கிறது . . . (குறுக்கீடு). [illegible] சில இந்திய அளவில் பத்திரிகைகளில் கொடுக்கப்பட்ட செய்தி மட்டு [illegible] பள்ளி விவரமே சொல்லிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) அது அவருடைய கருத்து. அதை அவர் சொல்லுகிறார், நீங்கள் [illegible] என்றால் இந்தப் பள்ளிகள் ஏழைகளுக்குத்தான் பயன்படுகிறது என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) இது பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனும் [illegible] ஆர்டரும் இல்லை. பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனும் இல்லை. எனவே இதை நீக்க ஆணையிடுகிறேன். (குறுக்கீடு). திரு. சுப்பராயன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு). காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால் அவர்கள் பேசுகிறபோது பதில் அளிக்கலாம். இப்போது திரு. சுப்பராயன், தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கே. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்துக்களில் தவறு இருக்குமானால் என்னுடைய கருத்துக்கள் தவறான வாதங்களின் அடிப்படையில் எழுந்திருந்தால் ஜனநாயகபூர்வமாக அதை அவர்கள் மறுப்பதற்கும், [illegible] ஆதாரபூர்வமாக தங்கள் நிலையை எடுத்துச் சொல்லவும் [illegible] உள்ளது. எனவே, குறுக்கீடு செய்யாமல் அந்தப் பணி [illegible] வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள் [illegible] பேச்சின் இடையில் குறுக் [illegible] வேண்டாம்—தலையிட வேண்டாம்—என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது இதுதான். கல்வி அளிக்க வேண்டிய பொறுப்பு யாருடைய பொறுப்பு? ஒரு அரசாங்கத்தின் [illegible] பொறுப்பு [illegible] அரசாங்கம் என்ன செய்கிறது? மத்திய அரசின் கல்விக் கொள்கையில்—அவர்கள் அறிவித்திருக்கிற [illegible]—

இப்படிக் கல்வியை மக்களுக்கு அளிக்கிற பொறுப்பிலிருந்து விலகி, ஓடி கல்வியை அளிக்கிற பொறுப்பை தனியாரிடத்தில் ஒப்படைத்து விட்டார்கள். இப்படித் தப்பி ஓடுகிற நிலைமைதான் நடைமுறையில் புதிய கல்விக் கொள்கையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஆதாரங்களின் அடிப்படையில் அந்த விவரங்களை வெளியிட்டுப் பேச விரும்புகிறேன். ஏன் கல்வியை மத்திய அரசே கொடுக்கத் தயாராக இல்லை? அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை அரசு செய்யாமல் தனியாரிடம் ஒப்படைப்பதற்கு என்ன காரணம் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிஷம் இருங்கள். அவர் வந்து கோடீஸ்வரர்களுக்கு அந்தப் பள்ளி என்று சொல்லுகிறார். நீங்கள் அவர் பேசவே கூடாது என்று பேசினால் எப்படி நியாயமாகும். ஒரேயடியாக அவர் குரல் வளையைப் பிடிப்பது சரியில்லை. அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை. அந்தப் பள்ளி வசதியானவர்களுக்கு என்றுதான் சொல்லுகிறார் (குறுக்கீடு). நீங்கள் இல்லை, அது ஏழைகளுக்குத்தான் என்று பேசுங்கள் (குறுக்கீடு). நீங்கள் நிறைய பேர் பேச இருக்கிறீர்கள். அப்போது சொல்லுங்கள். (குறுக்கீடு). மறுக்க வேண்டிய இடத்தில்—மறுப்பு சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லாமல் இருக்கிறீர்கள்—தேவையில்லாத இடத்தில் இப்படிச் செய்தால் என்ன அர்த்தம். (குறுக்கீடு). இப்படி குறுக்கீடு செய்தால் அது டிபேட் ஆகாது. அவர் அவருடைய கருத்தைச் சொல்லுகிறார். உங்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால் நீங்கள் சொல்லுங்கள் (குறுக்கீடு). திரு. சுப்பராயன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** அவைத் தலைவர் அவர்களே, கல்வி ஒரு சவால் என்ற ஆவணத்திலிருக்கிற புள்ளி விவரத்தைத்தான் நான் சொல்கிறேன். தற்போதுள்ள புதிய கல்விக் கொள்கையைப்பற்றி மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தின் அடிப்படையில் பார்த்தால் தற்போதுள்ள பள்ளிகளில் 40 சதவிகிதம் பள்ளிகளுக்குக் கட்டிடம் கிடையாது. 39.72 சதவிகிதம் பள்ளிகளுக்கு கரும்பலகை கிடையாது. 59.50 சதவிகிதம் பள்ளிகளுக்கு குடிக்கத் தண்ணீர் கிடையாது. 35 சதவிகிதம் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இருக்கின்றன. இந்த விவரத்தை மத்திய அரசாங்கத்தினுடைய ஆவணத்திலிருந்துதான் நான் குறிப்பிடுகிறேன். இப்படிப்பட்ட பள்ளிகளுக்குக் கரும்பலகை





கொடுக்கச் செலவழிக்காமல் கட்டிடம் கட்டிக் கொடுக்கச் செலவழிக்காமல் குடிக்கத் தண்ணீர் தருவதற்குச் செலவழிக்காமல் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்குச் செலவழிக்காமல், கோடிக்கணக்கான ஏழைகள் படிக்கும் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்களைக் கட்டச் செலவழிக்காமல் ஒரே ஒரு பள்ளிக்கு 2 கோடி ரூபாயைச் செலவழிப்பது நியாயம்தானா என்று கேட்கிறேன். நியாயம் என்று யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. மாநில அரசு இதை ஒப்புக்கொள்ளுமா? இதை ஒப்புக்கொள்ளக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

அது மட்டுமல்ல, துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கி ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறது. உலக வங்கியின் புள்ளிவிவரப்படி இந்தியாவில் 2030-வது ஆண்டில் கூட உலகத்தில் கல்வி அறிவு இல்லாதவர்களில் 54 சதவீதம் பேர் இந்தியாவில் தான் இருப்பார்கள் என்று சொல்லுகிறார்கள். இது உலக வங்கியின் புள்ளிவிவரக் கணக்கு. இந்தியாவிலே படிப்பறிவற்றவர்கள் இப்படியிருக்க என்ன காரணம்? இத்தகைய 'டூன்' பள்ளிகளுக்கு செலவழித்துவிட்டு ஏழைகளுக்கு எதும் செலவழிக்காமல் இருப்பதால்தான். தேசபத்தி என்றால் கோடிக்கணக்கான ஏழை மக்கள் வஞ்சிக்கப்படுவதை எதிர்த்து குரல் எழுப்பி போராடுபவன்தான் மிகச் சிறந்த தேசபக்தனாக இருப்பான். தேசபக்தியின் பேரால் கேட்க விரும்புகிறேன். புதிய கல்வி முறையை மாநில அரசு தைரியமாக எதிர்த்துப் போராட வேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத் தலைமுறையினர் சபிக்கிற பட்டியலில் உங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'கட்டாயம்' என்ற வார்த்தைக்கு என்ன பொருள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். 'கட்டாய இலவசக் கல்வி' கட்டாயம் என்று அரசியல் சட்டத்திலே சொல்லிவிட்டு அந்தக் கட்டாயத்தை கட்டாயமாக கைவிட்டுவிட்டால் என்ன நியாயம்? அதே ஆவணத்திலே சொல்லுகிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'கட்டாயம்' என்பது டைரக்டிவ் பிரின்சிபிளிலே இருக்கிறது. எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. மதுவிலக்கை எல்லோரும் அமுல்படுத்த வேண்டும் என்று வழிகாட்டுகிற நெறியில் 'கட்டாயம்' என்று சொல்லுகிறார்கள்.

[1987 ஏப்ரல் 8

திரு. கே. சுப்பராயன்: அப்படிக் கூறியிருப்பது வழிகாட்டு நெறியை வசதியாக மறந்து விடுவதற்காக அல்ல. வழிகாட்டு நெறி வழி நடந்து நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக வைத்திருக்கிறார்களே தவிர வசதியாக மறந்து விடுவதற்கில்லை. அதை நிறைவேற்ற முயற்சியே இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கல்வியைக் கொடுக்கிற பொறுப்பு இன்றைக்கு வெகு நுட்பமாக பொருளாக கைவிடப்பட்டிருக்கிறது. தேசிய பொறுப்பு என்று சொல்லிவிட்டு அரசு விலகிக் கொண்டிருக்கிறது. தேசிய பொறுப்பு என்றால் தனியார் பொறுப்பு என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தை மட்டும் குற்றம் சாட்டவில்லை. கல்வி என்பது நடைமுறையில் வர்த்தகச் சரக்காக தேசிய அளவில் ஆக்கப்பட்டிருக்கிறது. கல்வி விலை சரக்காக ஆக்கப்பட்டிருப்பதை எல்லோரும் சிந்தித்து அது மாற்றப்பட வேண்டிய விஷயம் என்பதற்காகத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தனியார் கல்வித் துறையிலே நடக்கிற அக்கிரமங்கள் என்ன கொஞ்சமா? ஏதாவது வழியில் போகிறபோது ஜேப்படி செய்தால் குற்றம். ஒரு கல்லூரி அல்லது பள்ளியைத் திறந்து வைத்துக்கொண்டு நன்கொடை ஐந்தாயிரம் ரூபாய் கேட்டால் குற்றம் இல்லை. அது ஜேப்படி, இது என்ன அடி? மிக நுட்பமாகக் கொள்ளையடிக்கிற நடவடிக்கை. இந்த வகையான கொள்ளை, இன்று நாட்டிலே தொடர்ந்து நடக்கிறது. இதற்கு ஒரு காரணம் மத்திய அரசு தனியார் துறைக் கல்வியை அனுமதிப்பது தான். இப்படி அனுமதிப்பதைச் சட்டபூர்வமாகத் தடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. அதுதான் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். அங்கே இந்தக் கல்விப் பொறுப்பைப் பற்றி நம்முடைய பெரியவர்கள் குறிப்பிட்டார்கள். மைனாரிட்டி என்றால் அவர்கள் கிறித்துவர்களா அல்லது முஸ்லிம்களா அல்லது இந்துக்களா, தனிப்பட்ட நபர்களா என்பது அல்ல கேள்வி. அரசைத் தவிர கல்வித் துறையை யாரும் நடத்தக் கூடாது. ஏனென்றால் கல்வி என்பது மிக முக்கியமான ஒரு முக்கியத்துவம் உள்ள ஒரு அம்சம். நாளைய தேவையை நிறை



1987 ஏப்ரல் 8] [திரு. கே. சுப்பராயன்]

வேற்றும் நம்பிக்கைக்குரிய அடிப்படைகளை உருவாக்கும் கருவி என்ற முறையில் இந்தக் கருவியை வியாபாரச் சரக்காக ஒரு போதும் மாற்றக்கூடாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். கல்வியை வியாபாரப் பொருளாக ஆக்கக்கூடாது என்பதை அரசு ஒத்துக்கொள்கிறது. ஆனால் அரசியல் சட்டத்தின்படி 'மைனாரிட்டிகள்' என்று சொல்லி சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகளை தடுக்கக் கூடாது என்று அரசியல் சட்டம் பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. அப்படி பாதுகாப்பு கொடுத்தது தவறு என்கிறாரா, அதை எடுத்து விடலாமா என்பதைப்பற்றி கருத்து தெரிவித்தால் பொதுவாக நன்றாக இருக்கும்.

(மாலை 4-00)

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூட வந்திருக்கிறது, தனியார் பள்ளி நடத்தினாலும் சரி, மைனாரிட்டியினர் பள்ளி நடத்தினாலும் சரி—அந்தப் பள்ளியை நடத்துகிற உரிமை அவர்களுக்கு உண்டே தவிர—அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் நடைமுறைச் சலுகைகளைக் கொடுத்துத்தான் நடத்த வேண்டும். தனியாரும், மைனாரிட்டியினரும் பள்ளி நடத்தும்போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் சலுகைகளை வழங்காமல் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சலுகைகள் பற்றிக் கேட்கவில்லை. தனியார் பள்ளிகள் நடத்துவது வியாபாரப் பொருளாகி விடுகிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள். அரசியல் சட்டப்படி சிறுபான்மையினராகக் கருதப்படுகின்ற முஸ்லீம் பெருமக்களுக்கும் அல்லது கிறித்தவப் பெருமக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட உரிமையைப் பறித்து விடலாம் என்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறதா என்று தெரிந்துகொள்ளத்தான் விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாகவே அமைச்சரவர்கள் பல்வேறு விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவார்கள் என்று எனக்குத் தெரியும். அதைத் தெரிவிப்பதிலும் எனக்கு ஆட்சேபணையில்லை. அரசியல் சட்டம் என்ன சொல்கிறது என்பதல்ல கேள்வி. இன்றைய சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல்

சட்டம் பொருத்தமாக இல்லை என்றால், அந்த அரசியல் சட்டமே நடைமுறையில் திருத்தப்பட வேண்டும் என்பதே சரி. அப்படி திருத்துவதற்குரிய வாய்ப்புகளும் இருக்கின்றன . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் மீண்டும் கேட்கிறேன், கிறித்துவப் பெரு மக்களுக்கும், முஸ்லிம் பெருமக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த உரிமையைப் பறித்துவிட வேண்டும், அவர்களுக்கு அந்த உரிமை கொடுக்கக்கூடாது என்று அங்கத்தினர் அவர்கள் கருதுகிறாரா? கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை அதுதானா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THIRU J. HEMACHANDRAN: Deputy Speaker Sir, they shall not be allowed to mis-use the powers.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் தமிழில்தான் மிகத் தெளிவாக, புரியும்படி சொன்னேன். கல்வித் துறையில், கல்வியைப் போதிக்கிற உரிமையை அரசு ஏகபோகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே எங்களுடைய நிலை என்பதைத் தெளிவாகச் சொன்னேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவைத் துணைத் தலைவரவர்களே, நான் அனாவசியமாக குறுக்கிட விரும்பவில்லை. நான் அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ள மாட்டேன். கல்வியை அரசுதான் ஏற்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான் உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, மேற்கு வங்கத்திலே இன்றைக்கு நிலைமை என்ன? அங்கே பூராவும் அரசே எடுத்துக் கொண்டிருக்கிறதா? தனியார்களுக்குக் கொடுப்பதில்லையா?

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேற்கு வங்கத்திலே இருக்கிற நடைமுறை முழுவதையும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒப்புக் கொள்கிறாரா என்று அறிந்ததற்குப் பின்னாலே, இதற்கு போகலாமென்று நினைக்கிறேன் . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவலுக்காக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சி கேரளாவிலே அரசாண்டபோது, கிறித்துவப் பெருமக்களின் பாடசாலைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டு





மென்று முடிவெடுத்தவுடன், போராட்டம் நடந்து, அதற்குப் பிறகு அது கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கையின் மீது பேசுங்கள்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1959 ஆம் ஆண்டு அந்த கல்விச் சட்டத்தை கேரள சட்டமன்றத்திலே கொண்டு வந்தபோது, அரசு போனாலும் பரவாயில்லை என்று எண்ணி, கல்விச் சட்டத்தை அந்த அரசு திரும்பப் பெறவில்லை. அரசு கவிழ்க்கப்பட்டதே தவிர, சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பது வரலாறு.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்டிருக்கிற சீனாவிலேகூட தனியார் பள்ளிகள் ஆரம்பிக்க அனுமதி தந்திருக்கிறார்கள். அது குறித்து உறுப்பினர் அவர்கள் என்ன கருதுகிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசும்போது சொன்னார்கள், கொள்கைதான், லட்சியம்தான் பெரிது, அரசு கவிழ்ந்தாலும் பரவாயில்லை என்று தீர்மானத்தை நிறைவேற்றினோம் என்று சொன்னார்கள். இப்போது அந்த ஆட்சி வந்திருக்கிறது. மீண்டும் தீர்மானம் வருமென்று நம்புகிறேன். எதிர்பார்க்கிறேன். மொழிப்பார்களா?

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு அமைச்சரவையிலே குறுக்கீட்டுத் துறை என்ற துறை இல்லை. ஆனால் அமைச்சரவர்கள் அவராகவே அதை எடுத்துக் கொண்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், ஓர் உறுப்பினர் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது— —

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறுக்கீடு வராமல் பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீங்கள் சொல்லுகிறீர்கள், அமைச்சர்களுக்கு குறுக்கீடு செய்வதற்கு உரிமையுண்டு என்று. அவர்களை அனுமதித்து விட்டு, குறுக்கீடு செய்யாமல் பேசலாம் என்றால்—வாய்ப்புத் திறக்காமல் பேசலாம் என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சர்ச்சைக்கு உள்ளாகாத விஷயங்களைச் சொல்லலாம். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவரவர்களே, எங்களுடைய கொள்கை நிலையில், எங்களுடைய அந்தரங்க சுத்தத்திலே அமைச்சரவர்கள் இவ்வளவு அக்கறை செலுத்த வேண்டிய அவசியமேயில்லை. மக்கள் அது குறித்து பார்த்துக் கொள்வார்கள். அது குறித்து அமைச்சரவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரே ஒரு விஷயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வியைத் தனியாரிடம் கொடுக்கும்போது என்ன நிகழ்கிறது? பள்ளி அல்லது கல்லூரியில் சேரும்போது கட்டணம் என்ற பெயரால் லஞ்சம் வாங்கப்படுகிறது. சுரண்டல் கல்வி நிலையங்களிலே நிலவுகிறது. கொள்கையை அன்றாட நியதியாக்கி விட்டார்கள். 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று சொன்னார்கள். கல்வி கற்கப் போகும் போதே, லஞ்சம் கொடுக்க கற்றுக் கொள்கிறான், கற்றுக் கொடுக்கப்படுகிறான். அப்படி லஞ்சம் கொடுத்து கல்வியைக் கற்றவன் எப்படி வாழ்க்கை அனுபவத்திலே தூயவனாக இருப்பான் என்பதை பொறுப்புணர்ச்சியோடு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்லும்போது, தனியார் கல்வி நிறுவனங்களில் லஞ்சம் தாண்டவமாடுவதாக சொல்கின்றார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். தனியார் லஞ்சம் இல்லாமலே, இந்த வகுப்புகளை, பள்ளிகளை, கல்லூரிகளை நடத்திக் கொண்டிருக்கின்றவர்களும் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.





**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே இந்த தனியார்களைப் பொறுத்த வரையில் அங்கு கொடுமையான துயரம் நிலவுவதாகப் பலதரப்பட்ட அறிஞர்கள் சொல்லிருப்பதால், தனியார் துறை கல்வி நிறுவனங்கள் மீது அரசு மிக கவனமாக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மிக முக்கியமான விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து அதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒரு புதிய அமைப்பாக மெட்ரிகுலேஷன் பள்ளிகள். அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே தமிழ் படிக்காமலேயே பட்டத்தை பெற்றுவிடலாம் என்ற நடைமுறை நிலவுகிறது. ஆங்கிலத்தை முதல் மொழியாகக் கொண்டு, பிரெஞ்சு மொழியோ அல்லது இந்தி மொழியோ அல்லது வேறு எந்த ஒரு மொழியையோ துணை மொழியாக எடுத்துக்கொண்டு அவர்கள் தமிழ் நாட்டிலே தமிழே படிக்காமல் தமிழ்நாட்டில் இருக்கின்ற பள்ளிக்கூடத்தில் பட்டம் பெற்று விடலாம். இது நடைமுறையில் இருப்பது நல்லதல்ல. அதுவும் மெட்ரிகுலேஷன் பள்ளியில் நிலவுகிற கொடுமை, அதிக விகித கட்டணம், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் இருப்பது போன்ற எல்லாம் இருக்கின்றன. அதே போல நன்கொடை வசூல் நடக்கிறது. இவற்றையும் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு தனியார் பள்ளியில் பணியாற்றக்கூடிய அனைத்து ஆசிரியர்களுக்கு அரசு பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்ற இணையான சம்பளம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகம் பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல்கலைக் கழகத்திலே அதனுடைய தன்னாட்சி நடைமுறை அரசால் குலைக்கப்பட்டு வருகிறது. அரசின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்துவதன் மூலம் தன்னாட்சி நடைமுறையின் மையமான உள்ளடக்கம் கொலை செய்யப்பட்டு தன்னாட்சி நிலையே தடம் புரண்டு போகின்றது. அவற்றைத் தடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சென்னை பல்கலைக் கழகத்தில்

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 8

உள்ள அந்த ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படக்கூடிய இரண்டு இன்கிரிமெண்ட் சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையும் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். தொழில் கல்வி என்று புதிய விஷயம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் 5,000 பகுதி நேர ஆசிரியர்களும், 491 முழு நேர ஆசிரியர்களும் பயிற்சி கொடுக்கின்ற தொழிற் பயிற்சி பயிலுகின்ற 37 ஆயிரம் ஆண், பெண்கள் அனைவருக்கும்; திட்டத்தின்படி அவர்களுக்கு பணியில் அமர்த்துவதற்குரிய வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை. அத்தகைய நிலையை அரசு கவனித்து சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று சொல்கிறேன். நீங்கள் கொள்கைபூர்வமாக ஒப்புக்கொண்டு இருக்கின்றீர்கள். ஜாதிப் பெயர்களை பள்ளி நிறுவனங்களில், பள்ளிகளில், கல்லூரிகளில் போடக்கூடாது. சாதிப் பெயரில் பள்ளிக்கூடங்கள் இயங்கக்கூடாது என்பது ஒப்புக்கொண்ட ஒன்று. அதுவும் தமிழ்நாட்டில் தந்தை பெரியார் அவர்கள் 60 ஆண்டுக் காலம் அவர் மூச்சுள்ள வரையில் அந்தக் கருத்தை, அந்த சாதி எதிர்ப்பை செய்து வந்தார்கள். ஜாதிப் பெயரை மாற்றுகின்ற அதிகாரம் இருந்தும் கூட மாற்றாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு படம் திறப்பது மட்டும்தான் நன்றிக் கடனா? அவர்களைப் பொறுத்தவரையில் அவருடைய கொள்கைகளை நிறைவேற்ற வேண்டாமா? அவர் வாழ்ந்த காலத்திலே அந்தக் கொள்கையை உயிருக்கும் மேலாக கருதினார்கள். அவர் கொள்கையை விட்டுவிட்டு அவருடைய படத்திற்கு பூஜிப்பது என்பது சரியல்ல. அதை மாற்றியமைக்க வேண்டும் என்று தாழ்மையோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் தயவுசெய்து கல்விக்கூடங்களில் சாதிப் பெயர் இருக்கக்கூடாது என்பதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களை கான்ட்ராக்ட் பேசிசில் அமர்த்துவது என்பது சரியல்ல என்று சுப்ரிம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்கின்றது. அந்த அடிப்படையிலே ஒப்பந்தப் பணியில் அமர்த்தப்படுபவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்



1987 ஏப்ரல் 8] [திரு. கே. சுப்பராயன்]

கின்றார்கள். ஆகவே அவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக ஒரே விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கல்வித் துறையில் தனியார் துறையைப் பொறுத்த வரையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். சிறுவையில் இயேசு அறையப்பட்டதுபோல, தனியார் பள்ளி நிறுவனத்தில் நியாயம் ஆறையப்பட்டு கிடக்கிறது. அதை மீட்கிற அதிகாரம் உள்ள நீங்கள் மீட்கவில்லை என்றால் தமிழ்நாட்டில் கல்வித் தரம் பாழ்பட்டு எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய பொருத்தமான பிரஜைகள் தோன்ற மாட்டார்கள் என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்

(மாலை [illegible])

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானிய கோரிக்கையை வரவேற்கிறேன். கல்வி கொடுத்தோர் கண் கொடுத்தோர் என்று சொல்வார்கள். அந்த அளவிலே இந்த ஆண்டு கல்விக்காக 597 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். கல்வியிலே தமிழகம் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதால் நான் இன்றைக்கு கல்வித் துறையை பாராட்டி மகிழக்கூடிய நிலையில் இருக்கிறேன். 1986-87-லே 6 வயது முதல் 11 வயது வரை பள்ளிகளில் சேர்ந்தவர்கள் 100 விழுக்காடு. 11 வயது முதல் 14 வயது வரை பள்ளியில் சேர்ந்தவர்கள் 79.63 விழுக்காடு என்பதை நாம் பார்க்கும்போது கல்வியைப் பெறுவதிலே தமிழகத்திலுள்ள சிறார்கள் சிறந்து விளங்குகிறார்கள். பலவிதத்தில் நன்மை அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம்.

அடுத்து, பெண்களை பள்ளிகளில் சேர்ப்பதில் சிறந்த முறையில் கல்வித் துறை பணியாற்றி வருவதற்காக இரண்டு பரிசுகளாக அதற்கான விருதினை தமிழகம் பெற்று வந்திருக்கிறது என்பதிலிருந்தே நம் கல்வித் துறை சிறந்து விளங்குகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 8

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் பேசும் போது 'ஏக சிறுவையில் அறையப்பட்டது போல' தனியார்கள் செயல்படுகிறார்கள் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். தமிழகத்தில் அவர்கள் சுதந்திரப் பறவைகளாக, உன்னதமான லட்சியத்தோடு, உரிய கொள்கைகளோடு அவர்கள் கல்வியின் தரத்தை உயர்த்தி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் தமிழ்நாட்டில் தமிழ்நாடு கல்வி வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் என்று இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வாத்தியார் என்று செல்லமாக சொல்வார்கள். வாத்தியாருடைய ஆட்சியில் வாத்தியார்களுக்கு நன்மைகளுக்கு குறையேதுமில்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு 52 லட்சம் ரூபாய் செலவிலே ஆசிரியர் இல்லம் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ள நிலைமையை நாம் பார்க்கிறோம். இதிலிருந்தே அது உண்மையானது என்று புலனாகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் அறிவியல் மானிட்டர்கள் என்றால் அவர்களுக்கு 20 ரூபாய் உதவித் தொகை அளிக்க இருப்பதையும், அதுபோல தமிழ்நாடு மாநில இளைஞர் குழு அமைக்க இருப்பதையும் நான் பாராட்டி வரவேற்கிறேன். மேலும் இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் பொதுவாக கல்வித் துறையிலே சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி தரத்தக்க திட்டங்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசிய பின்பு ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. சமூகக் கல்வியினுடைய திட்டத்தைப் பற்றி பேசும்போது சட்ட சபையிலே பேசுவது எப்படி என்று ஒரு தலைப்பையும் சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று கருதும் நிலை இருக்கிறது. அவர்கள் பேசும் போது * என்றெல்லாம் கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையை மறந்தவர்கள், கோட்பாட்டை மறந்தவர்கள் * மாற்றிக்கொள்ளச் சொல்கிறார்கள் என்று சொன்னால் அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 ஏப்ரல் 8] [திரு. ஆ. பிரேம்குமார்]

அடுத்து, 'சாரணர் இயக்கத்தைப் பொறுத்தவரையில் இந்தியா வில் இருக்கிற மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கு எண்ணிக்கை அளவிற்கு வெற்றிகரமாக இந்த இயக்கத்தை செயல் படுத்திக் கொண்டு வருவதற்காக இந்த அரசை நான் பாராட்டு கிறேன். காரணம் அதுவும் கல்வியின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல சோசியல் சர்விஸ் ஸ்கீம் என கல்வியில் ஒரு பாடம் இருக்கிறது. இது தமிழகத்திலுள்ள கல்லூரிகள் பலவற்றில் மிகவும் சிறந்த முறையில் செயல்படுகிறது. இதில் இடம் பெற்றிருப்பவர்கள் குளங்களைச் சீர் செய்தல், சாலை வசதிகளை அமைத்தல், சுகாதார கோட்பாடுகளை மாற்றியமைத்தல் போன்ற சமூகப் பணிகளை நல்ல முறையில் செய்து வருவது பாராட்டுக்குரியது. திண்டுக்கல்லில் இருக்கிற எம்.இ.எம். பெண்கள் கல்லூரியில் படிக் கின்ற மாணவிகள் இந்தப் பணியை நல்ல முறையில் செய்து வரு கிறார்கள். இப்பணிக்காக என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். ஆனால் இதற்காக இன்னும் சற்று அதிகமாக நிதி ஒதுக்கினால் அவர்கள் இந்த சமூக நிலை உயர்வதற்காக பல வேலைகளைச் செய்ய முடியும், இன்னும் உழைக்க முடியும். தேவையான பொருள்களை வாங்கி நல்ல பல திட்டங்களை அவர் கள் நிறைவேற்றிக் கொள்ள நாம் வாய்ப்பும் வசதியும் அளித்து உதவி புரிவதாகவும் அமையும்.

அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் டியுசன், ஸ்பெசல் கோச்சிங் போன்றவற்றை அதிகமாக எடுக்கக் கூடாது என்று கண்டிஷன் போட்டிருக்கிறார்கள். நான் சொல் கிறேன், இன்றைக்கு அரசு சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்ற அரசு டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் கிளினிக் வைத்துக் கொண்டு நல்ல முறையில் பொருள் ஈட்டுகிறார்கள். அவர்களோடு ஆசிரியர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆசிரியர்கள் மட்டும் டியுசன் எடுத்து பொருள் ஈட்டக் கூடாது என்கிற நிலையை ஏன் எடுக்க வேண்டும்? இன்றைக்கு ஆசிரியர் பணியை 'ஹோலி புரபசன்', புனிதமான பணி என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட புனிதமான வேலையில் இருக்கக்கூடிய ஆசிரியர் கள் தங்களை எவ்வளவு தூரம் இப்பணியில் ஈடுபடுத்திக் கொள் கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் உழைக்க, நல்ல சமுதாயத்தை உருவாக்க, அவர்களுடைய சர்வீசை உபயோகப் படுத்த, அவர்கள் பொருள் ஈட்டிக்கொள்ள யாரும் தடையாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள்.

அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உரிய ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் டியூசன் அதிகமாக எடுக்கிற காரணத்தால் பள்ளியின் ரிசல்ட் மற்றும் கொள்கைகள், கோட்பாடுகள் போன்றவைகளுக்கு எந்தவிதமான பாதகமும் வரக்கூடாது என்பதையும் ஆசிரியர்கள் மனதில் கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பிலும் கல்லூரிகளில் சேருவதிலும் தனி ஒதுக்கீடு செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈக்குவல் ஆப்பர்ச்சூனிட்டி என்று சொல்லக்கூடிய நேரத்திலே ஸ்போர்ட்ஸ்மென் கோட்டாவானது எப்படி சென்ட்ரல் கவர்ன்மெண்டிலே எந்த அளவுக்கு வைத்திருக்கிறார்களோ அதைப் போன்று ஸ்டேட் கவர்ன்மெண்டிலேயும் தனி ஒதுக்காடு வைத்து ஆசிரியர்களை ஊக்குவிக்கிற நல்ல காரியத்தை அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடு என்று சொல்லக்கூடிய மாநாடுகளை ஏற்பாடு செய்கிறபோது அதன் மூலமாகப் பள்ளிகளுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்வதற்காக வாய்ப்பு ஏற்படுகிறபோது—உதாரணமாக திண்டுக்கல்லிலே பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடைபெறுகிறது என்றால் அங்கே இருக்கிறவர்களுக்குத்தான் அது பற்றித் தெரிகிறது, அங்கே படித்த பழைய மாணவர்களுக்கும் அந்த மாநாடு பற்றித் தெரியக்கூடிய சூழ்நிலை இருக்குமானால், அவர்கள் சென்னையிலே இருக்கலாம் அல்லது திண்டிவனத்திலே இருக்கலாம், அந்த நிலையில் அவர்களுக்கு அந்த மாநாடு பற்றித் தெரியக்கூடிய சூழ்நிலை இருக்குமானால், அந்த அளவுக்கு நல்ல முறையில் விளம்பரப்படுத்தினால் அவர்களும் பொருள் உதவி செய்வார்கள்—அந்தப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலமாக அவர்கள் எல்லா உதவிகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சொல்லி, ஆகவே அதற்காகப் பல விளம்பரங்களைச் செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு நகர்நிலைப் பள்ளிகளிலும் கிராமப் பள்ளிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைத்துக் கொடுப்போமானால் அங்கே இருக்கிற மாணவ மாணவியர்கள் ஸ்போர்ட்ஸ் பற்றியும் சயின்டிபிக் டெவலப்மெண்ட் பற்றியும் பார்த்து அறிவியலை வளர்த்துக்





கொள்வார்கள் என்று தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 100 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரம் இருக்கக்கூடிய பள்ளிகளிலே அந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அது வரவேற்கத் தக்க கருத்தாக இருக்கிறது. எந்த அளவுக்கு மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாகவும் ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கிறதோ அந்த அளவுக்கு ஒவ்வொரு மாணவனையும் சிறப்பான முறையில் கவனிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு ஆசிரியர்களுடைய பணி செம்மையாக தொடர்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்ட் டைம் லெக்சரர்ஸ் என்று சொல்வதைப் போன்று பார்ட் டைம் டீச்சர்ஸ்களையும் ஏற்பாடு செய்தால் குறைந்த செலவிலே அவர்கள் காலையிலே வந்து பயிற்சி கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு அவர்களுடைய காரியங்களைச் செய்யச் செய்யலாம். அந்த சமயத்தில் அவர்கள் தொழிலைக் கற்றுக் கொள்ளவும் முடியும். அதே நேரத்திலே வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கக்கூடிய முறையிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் நல்ல கொள்கையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியோர் கல்வியைப் பொறுத்தவரையிலே மிகச் சிறப்பான முறையிலே தமிழகத்திலே செயல்படுத்தப்படுகிறது. முதியோர் கல்வியை இந்த அளவுக்கு ஏன் கவனிக்க வேண்டுமென்று சில நண்பர்கள் கூட நினைக்கிறார்கள். இங்கே கேள்வியாகக் கேட்டும் இருந்தார்கள். முதியோர் கல்வி என்பது இக்னரன்ஸ் என்று சொல்லக்கூடிய அறியாமையைப் போக்குகின்ற அளவுக்கு அவர்களை விவரம் தெரிந்தவர்களாக ஆக்கக்கூடிய காரணத்தினால் அவர்கள் பணிகளைச் செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் தாங்களாகவே முன்வந்து ஊதியம் பெறாமல் அந்தந்த தொழிலிலே ஈடுபடக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள் என்ற நிலை இருப்பதால் அவர்களுக்கு திட்ட என்ற முறையிலே ஏதா

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 8

வதி பரிசை அளித்து அக்காரியங்களில் ஈடுபடக்கூடிய
முறையிலே ஊக்குவிக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதியோர் கல்விச் சேவையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஆசிரியர்
கள் மற்றும் பணியாளர்களின் பணி நிரந்தரம் செய்யப்படாமல்
இருப்பதால் அதை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது ஹஸ்பெண்ட்
அண்ட் வைப், ஆசிரியரும் ஆசிரியையும் வெவ்வேறு இடங்களிலே
பணி செய்யக்கூடிய கஷ்டமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்
கிறது. இருவரும் ஒரு இடத்திலே வேலை செய்யலாமென்ற
ஆணை இருந்தாலும்கூட அந்த ஆணையின்கீழ் வராமல் இன்னும்
பல ஆசிரியர், ஆசிரியைகள் கஷ்டங்களில் இருந்து கொண்டிருக்
கிறார்கள். அந்தக் கஷ்டங்களைப் போக்கக்கூடிய முறையில்
இருவரும் ஒரு இடத்திலே வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அன்ரெகக்னைஸ்டு
பள்ளிகள் அதிகமாக வளர்ந்திருக்கின்றன.

(மாலை 4-30)

இன்றைக்குக்கூட சென்னை உயர்நீதி மன்றத்திலே தடை செய்
யப்பட்டு, கடுமையான முறையிலே அது தடுக்கப்பட்டிருக்கிறது
என்பதைப் பார்க்கும்போது வரவேற்கக்கூடிய ஒன்றாகவும் தானி
ருக்கிறது. ஆகவே, அன்ரெகக்னைஸ்ட் ஸ்கூல்களிலே ஆசிரியர்
பயிற்சியைத் தருபவர்களுக்குக் கடுமையான தண்டனையைக்
கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான்
கூறிக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல் பகுதியிலே, தனி
யார் பள்ளிகளிலேதான் இப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சி வகுப்பு
கள் இருக்கின்றனவே தவிர, அரசுப் பள்ளிகளிலே அப்படிப்பட்ட
அமைப்பானது இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நேருஜி நினைவு நகராட்சி பள்ளியில் இப்படிப்
பட்ட ஆசிரியர் பயிற்சி வகுப்பை ஏற்படுத்தித் தர வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல்லிலே நல்லமநாயக்கன்பட்டியிலே அறிஞர் அண்ணா
உயர்நிலைப் பள்ளியிலே கட்டடம் கட்டப்படாத சூழ்நிலையிருக்
கிறது. அதை உடனே கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. ஆ. பிரேம்குமார்]

திண்டுக்கல் பள்ளியிலே இன்றைக்கு இடம் கிடைக்கவில்லை
யென்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே தனியார்
பள்ளிகள்தான் இரண்டு மூன்று இருந்து கொண்டிருக்கின்றன.
ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே, அவசியம் அரசு உயர்நிலைப்
பள்ளியும் மேல்நிலைப் பள்ளியும் அங்கே ஏற்பாடு செய்து தர
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு எங்கும் தமிழ், எதிலும் தமிழ்
என்று புரட்சித் தலைவர் அரசானது செயல்பட்டு வருகிறது. வர
வேற்கிறோம், வாழ்த்துகிறோம். ஆனால், அதே நேரத்திலே
ஆங்கிலம் உலகப் பொது மொழியாக இருக்கிற சூழ்நிலையிலே
ஆங்கிலத்தினுடைய முக்கியத்துவத்தை மறந்து விட முடியாது.
திண்டுக்கல்லிலே இருக்கிற சோலை நாடார் மேல்நிலைப் பள்ளி
யிலே ஒரே ஒரு ஆங்கில வகுப்பு இருக்கிற காரணத்தால்
சென்னையிலிருந்து கூட மாணவர்கள் அங்கு வந்து சேரக்கூடிய
நிலை இருந்து கொண்டிருக்கிறது. இருக்கிற சூழ்நிலையை
மற்ற பள்ளிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஹெவி காம்படி
ஷன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மற்ற பள்ளிகளில் சேர
முடியாத நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகளை
எல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, அரசுப் பள்ளியாக இருந்
தாலும் சரி, ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வொரு ஆங்கில மீடியம்
செக்ஷன் அவசியம் இருக்க வேண்டுமென்ற கருத்தை அங்கே வலி
யுறுத்தி, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே
நான் கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றினாலும்
சரி, அல்லது நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக
மாற்றினாலும் சரி, ரூ. 25 அரசுக்குக் கட்ட வேண்டுமென்று
இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே
பெற்றோர்—ஆசிரியர் கழகம் என்று வைத்துக்கொண்டு அவர்
கள் ஒவ்வொருவரிடமும் சென்று, அனைவரும் நன்கொடை தர
வேண்டுமென்று சொல்கின்ற அளவில்தான் இருந்து கொண்டிருக்
கிறது. அரசுப் பள்ளிகளிலும் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்
நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசுப் பள்ளிகளி
லும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிற
காரணத்தால், அதை அவர்கள் பெறக்கூடிய முறையானது மிகவும்

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 ஏப்ரல் 8

கஷ்டமாகவும் சற்று கேவலமாகவும் இருக்கிறது. ஆகவே, அருள் கூர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து டெக்னிக்கல் போர்ட் என்று சொல்லி, அந்த டெக்னிக்கல் போர்ட் மூலமாக, பாலிடெக்னிக் கோர்சுகளுக்கெல்லாம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலே பரிட்சை எழுதியமைக்கு, இன்றும்கூட ரிசல்ட்டுகள் வெளி வராத சூழ்நிலையிருக்கிறது. ஆனால், திரும்பப் பரிட்சை எழுத பணம் கட்ட வேண்டிய தேதி 10 ஆம் தேதி என்று இருக்கிறது. ரிசல்ட்டே தெரிந்துகொள்ளாத மாணவர்கள் எப்படி அந்தப் பணத்தைக் கட்டக்கூடிய சூழ்நிலையிலே இருப்பார்கள் என்பதை அறிந்து, ரிசல்ட்டுகளை வெகு வேகமாக அவர்கள் பப்ளிஷ் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் ரீ-வால்யுவேஷன் வேண்டுமென்று ஒரு மாணவன் மனு செய்தால் உடனடியாக 15 தினங்களிலோ அல்லது 1 மாதத்திற்குள்ளோ என்று ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அதன் மீது ஒரு முடிவைத் தர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 நிதி ஆண்டு கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1987-88 நிதி ஆண்டின் மொத்த ஒதுக்கீடு ரூ. 2,874 கோடியில் 21 விழுக்காடுகள், அதாவது ரூ. 597 கோடி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளதைப் பாராட்டுகின்றேன். அந்த விழுக்காட்டை 30 விழுக்காடாக உயர்த்தி இருந்தார்களானால் இன்னும் மிகுந்த மனம் திறந்து பாராட்டியிருப்பேன்.

பாரதப் பிரதமருடைய புதிய கல்வித் திட்டத்திலே கரும்பலகைத் திட்டத்தின் மூலமாக, மைய அரசு நிதி உதவியோடு, இம்மாநிலத்தில் தொடக்கப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ள ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்; அதற்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் வகுப்பறைகளைக் கட்டுவதற்கு மேலும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோருகிறேன். குறிப்பாக பெண்கள் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுகிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. எஸ். பி. மணவாளன்]

திருப்பத்தூர் அரசு மீனாட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில்
19 வகுப்பறைகள் இல்லாமல் மாணவிகள் மிகவும் கல்வி பயில
அல்லலுறுகிறார்கள். இந்த நிதி ஆண்டில் குறைந்தது 5 வகுப்
பறைகளைக் கட்டித்தர மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களை
தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுநலத் திட்டப் பணிகள் பற்றி என்னுடைய சில கருத்
துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டு நலத் திட்டத்தைச்
செயல்படுத்துவதில், தேசிய அளவில் இரண்டாவது இடத்தை
வகிப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. வரும் கல்வி
யாண்டில், அது முதலிடத்திற்குச் செல்லும் என்ற ஒரு செய்தியை
அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்களையும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற
அதிகாரிகளையும் மனந்திறந்து நான் பாராட்டுகிறேன். இந்த
ஆண்டு இதற்காக ஒதுக்கிய தொகை ரூ. 116 இலட்சம். இந்த
ரூ. 116 இலட்சத்தில் மைய அரசின் மானியம் 12-க்கு 7 என்ற
அளவில் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு
ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேயே நிதி ஒதுக்கீடு செய்தாலும்
இங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதாக
அறிகிறேன். இந்த நிதி ஒதுக்கீட்டில், முதல் தவணையை ஏப்ரல்
மாதத்திலும், இரண்டாவது தவணையை அக்டோபர் மாதத்தி
லும் ஒதுக்கீடு செய்தால், இத்திட்டம் இன்னும் சிறப்பான முறை
யில் செயல்படுவதற்கு உறுதுணையாக இருக்குமென்பதை கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இத்திட்டம் தமிழகத்தில் 500 மேல்நிலைப் பள்ளிகளில்
செயல்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை
தமிழகத்தில் எஞ்சிய 1,178 மேல்நிலைப் பள்ளிகளிலும் விரிவு
படுத்தினால் சிறப்பாக இருக்குமென்ற என் கருத்தை சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். அதனால் இந்தியாவிலேயே முதன்மை
யாக இருக்கின்ற ஒரு மாநிலமாக தமிழகம் திகழும் என்கின்ற
கருத்தைக் கூறிக்கொள்கிறேன். தேசிய பணித் திட்டத்திற்கு
ஒரு தொடர்பு அலுவலரை, இயக்குநரின் மேற்பார்வையின்
கீழோ அல்லது பிற மாநிலங்களில் இருப்பதைப் போன்று
தலைமைச் செயலகத்திலோ, அனுபவமிக்க ஒருவரை நியமித்தால்
மேலும் இத்திட்டம் சிறப்பாக செயல்படுமென்று மாண்புமிகு
கல்வியமைச்சர் அவர்களிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 ஏப்ரல் 8

தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவழி விடுப்பு பயணச் சலுகையை வழங்கியது. அச்சலுகை தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கப்படவில்லை. தனியார் பள்ளியில் பணியாற்றி வருபவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள். அதில் பயிலும் குழந்தைகளும் தமிழகக் குழந்தைகள்தான். இன்றைக்குக் கல்வித் தரத்தை ஓரளவு சிறந்த முறையில் காப்பாற்றி வருபவை தனியார் பள்ளிகள்தான். எனவே அதில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சலுகைகளை மறுத்து, மாற்றாந்தாய்ப் பிள்ளைகளைப் போல் ஒரு கண்ணுக்கு வெண்ணெய், மற்றொரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்பதாக அரசு நடத்துவது சரியல்ல. மேலும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருப்பது போல் வாகனங்கள் வாங்கக் கடன் பெறும் சலுகையும் இல்லை. ஆகவே அரசு ஊழியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் அனைத்தும் தனியார் ஆசிரியர்களுக்கு எப்போதும் பொருந்தும் விதத்தில், அவர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து, மற்றவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் தங்களுக்கு மட்டும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களின் துயர் துடைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசு, ஒருவழிப் பயணச் சலுகையை அரசு ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது. அதை இருவழிப் பயணச் சலுகையாக அறிவிக்க வேண்டும். மேலும், தமிழ்நாட்டிற்குள்தான் அவர்கள் பயணம் செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. அவர்கள் தமிழ்நாட்டை இரண்டு தடவை சுற்றுப்பயணம் செய்துவிட்டால் மேலும் பார்க்க வேண்டிய இடங்கள் இருக்காது. எனவே அவர்கள் பிற மாநிலங்களுக்கும் சென்று, பல முக்கிய இடங்களைப் பார்க்க அரசு விதிமுறைகளைத் திருத்தி, ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் அரசு திரு. கார்த்திகேயன் ஒரு நபர் குழு, அதாவது கார்த்திகேயன் குழுவின் பரிந்துரையின் பேரில், ஆசிரியர்களின் பயிற்சிக் காலத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கும் ஒரு ஊதிய உயர்வினை வழங்கி ஆணை பிறப்பித்தது. இதனால் தமிழாசிரியர்கள் தவிர மற்ற அனைத்து ஆசிரியர்களும் பயன்



1987 ஏப்ரல் 8] [திரு. எஸ். பி. மணவாளன்]

பெற்றார்கள். தமிழாசிரியர்களுக்கு மட்டும் இந்த ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. தமிழாசிரியர்களும் ஆசிரியர் பயிற்சி பெற்றுத்தான் ஆசிரியர்களாக வருகின்றார்கள். தமிழ் வளர்க்கும் இந்த அரசு தமிழாசிரியர்களுக்கு மட்டும் ஊதிய உயர்வை வழங்காமலிருப்பது வியப்பாக இருக்கிறது. இது குறித்து தமிழக அரசை அணுகியபோது 'விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்' என்று உறுதி அளித்ததாக அறிகிறேன். ஆனால் இதுவரை ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே அரசு தமிழாசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு கிடைக்கும் வகையில், உடன் ஆணை வழங்கி, தமிழாசிரியர்களின் மன வேதனையை நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-30)

கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் இதுவரையில் தற்காலிகமாக 10 (ஏ) (1) என்ற அடிப்படையில் பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வந்த நிலையை மாற்றி இந்தக் கல்வி ஆண்டிலே ஒப்பந்த அடிப்படையிலே (கான்ட்ராக்ட் பேசிசில்) பேராசிரியர் நியமனம் செய்யப்பட்டது ஏனென்று எனக்கு விளங்கவில்லை. ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் மார்ச் மாதம் 31 ஆம் தேதி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இது வருந்தத்தக்க ஒன்றாகும்.

இனி இவ்வொப்பந்த அடிப்படையை மாற்றி நிரந்தர அடிப்படையில் கல்லூரிகளில் ஆசிரியர் நியமனம் செய்யப்படுமா? ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் நியமனங்களை விரைவுபடுத்தும் வகையில் தனியாக ஆசிரியர் தேர்வாணைக் குழு அமைக்கும் திட்டம் இருந்ததாக அறிகிறேன். இதை செயல்படுத்துவதிலே என் காலதாமதம் என்று தெரியவில்லை. இதை செயல்படுத்தினால் விரைவாக ஆசிரியர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் வேலை கிடைக்கும்.

தேசிய மாணவர் படை (என்.சி.சி.) 1948-ல் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 39 ஆண்டுகளாய் தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது. இராணுவப் பயிற்சி சம்பந்தப்பட்ட துறையாய் இருப்பதால், இதில் அதிகாரிகள் இராணுவத்தின் முப்படையிலிருந்தும்

தருவிக்கப்பட்டு, இரண்டாண்டுகட்குப் பணி புரிந்து மாற்றலாகிச் செல்கிறார்கள். இந்தத் துறையைச் சார்ந்த அலுவலகங்களில் பணி புரிவோர் மாநில அரசின் ஊழியர்களாய் இருந்து வருகிறார் கள். கடந்த 39 ஆண்டுகளில் தேசிய மாணவர் படை பல்வேறு பயிற்சிகளை உருவாக்கி, மாணவர்களை தயார் செய்து வருகின் றது. ஆனால் இந்தத் துறையைச் சார்ந்த மாநில ஊழியர் களின் பணி நிலைமை கடந்த 39 ஆண்டுகளாக எவ்வித மாற்ற மும் இல்லாமல் இருந்து வருகிறது. பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டும் அதன் காரணமாய் இராணுவ அதிகாரிகளுக்கு அதிக வேலை வாய்ப்பும், பதவி உயர்வும் கிடைத்ததே தவிர, அந்தத் துறையில் முதுகெலும்பாய் பணியாற்றி வரும் மாநில ஊழியர்கள் அதிகமான கடுமையான வேலைப் பளுவுடன், எந்த வித பதவி உயர்வும் இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டு வரு கிறார்கள். மூன்றாவது ஊதியக் குழுவும் நான்காவது ஊதியக் குழுவும், ஒரு நபர் குழுவும் இந்த ஊழியர்களுக்குப் பலனளித்த தாகத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் நேரடியாகத் தலையிட்டு, அந்த ஊழியர்களின் குறைகளைப் போக்கிட வேண்டுகிறேன்.

1978 ஆம் ஆண்டு முதல் மேல்நிலைக் கல்வியில் தொழில் பிரிவு ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை தொடர்ந்து இயங்கி இருப்பின் அதற்கு ஒரு முழு நேர ஆசிரியரை நியமிக்க வேண்டும் என்று இருந்தது. அதன் பின் வரும் பாட வேளைகளுக்கு ஒரு பகுதி நேர ஆசிரியரை மாத ஊதியம் ரூ. 150-ல் நியமிக்கலாம் என்று இருக்கிறது. அந்தப் பகுதி நேர ஆசிரியரின் சம்பளத்தை ரூ. 300 ஆக உயர்த்தித் தர வேண்டும் என்றும், பகுதி நேர ஆசிரிய ரையே முழு நேர ஆசிரியர் நியமனத்தின்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. குழந்தைசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு பரிந்துரை செய்தது. அதை செயல் படுத்தித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு தொடக்கக் கல்வி முதல் உயர்நிலை, மேல்நிலைக் கல்வி வரை ஆசிரியர்கள் நியமனம், மாறுதல் இவற் றிற்கு சென்னையிலுள்ள இணை இயக்குநருக்கு மனு அனுப்ப வேண்டும் என்று தலைமை ஆசிரியர்களுக்கு கல்வித்துறையில் இருந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இலட்சக் கணக்கான ஆசிரியர்கள் பணியாற்றுகின்ற நிலையில், 20 சத விதம் அல்லது 25 சதவிதம் ஆசிரியர்கள் மாறுதல் கேட்டு மனுச்



செய்தால் ஒரு அதிகாரி எப்படி இதை அமல்படுத்த முடியும் என்று தெரியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் எந்த முறையிலே செயல்படுத்தப் போகின்றார் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறீர்கள். சத்துணவு சாப்பிட்ட மாணவ, மாணவிகள் சாப்பிட்ட பின்னர் தண்ணீர் குடிக்க வழி இல்லாமல் பல பள்ளிக் கூடங்களில் அவதிப்படுகிறார்கள். எனவே கல்வித் துறையின் மூலமாக ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனுமதிக்கப்படாத ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றி ஏற்கெனவே பல உறுப்பினர்கள் பேசினார்கள். இன்று செய்தித் தாள் வாயிலாக, நீதிமன்றத்தின் மூலமாக அதைத் தடை செய் துள்ளதாக அறிந்தேன். மாநில அரசை நான் பணிவோடு கேட்டுக் கொள்வேன். அப்படிப்பட்ட ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை ஊக்குவிக்காதீர்கள்; மேலும் அனுமதிக்காதீர்கள் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் சார்ந்துள்ள திருப்பத்தூர் தொகுதியிலே சில கல்விப் பணிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சரவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூரைச் சுற்றி ஐம்பது மைல் சுற்றளவிலே பெண்களுக்கென தனிக் கல்லூரி எதுவுமில்லை. ஆனால் அரசினுடைய கொள்கை, கலைக் கல்லூரிகளைத் துவக்குவது கிடையாது என்பது. அந்த விதியைத் தளர்த்தி, பெண்களுக்காக திருப்பத்தூரிலே அரசு சார்பிலே ஒரு புதிய கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக்கை அமைத்துத் தாருங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் தொகுதியிலுள்ள திம்மனாமுத்தூர் நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர கோரு கின்றேன்

திருப்பத்தூர் தொகுதியிலே, ஜோலார்பேட்டையிலே உள்ள பொது நூலகத்திற்கு ஒரு நிரந்தரமான புதிய கட்டிடத்தைக் கட்டித் தர அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலகம் கட்ட, அதற்காக விண்ணப்பித்து மாநிலப் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் 29—7—1986 ஆம் தேதியே அரசுக்குப் பரிந்துரை செய்து ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்கள். அதிலேகூட, அவசியத்தை முன்னிட்டு இப்பணியைத் தனி அம்சமாகக் கருதி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இயக்குநர் சொல்லியுள்ளார்கள். ஆனால் இதற்கு முன் இருந்த கல்வியமைச்சர் அவர்களையும் பல முறை சந்தித்துக் கேட்டேன்; நிதியமைச்சரவர்களையும் சந்தித்துக் கேட்டேன். ஆனால் இந்தத் திட்டம் இதிலே சேர்க்கப்படவில்லை. அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து, இதற்காக ஒதுக்கிய நிலம், 17 ஆண்டுகளாக சும்மா இருக்கிறது, வருவாய்த் துறை அதிகாரிகள் வற்புறுத்தி வருகிறார்கள். வேறு அலுவலகத்திற்குக் கொடுத்து விடுகிறோம், 17 ஆண்டுகளாக நீங்கள் கட்டிடம் கட்டாமல் இருக்கின்றீர்களே என்று. இந்த நிலையைப் பொறுத்து, இந்த ஆண்டிலேயே மாவட்டக் கல்வி அலுவலகத்தைக் கட்ட அனுமதிக்க கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய ஒரு கருத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வருங்கால மாணவர்களுடைய நலனைக் கருதியும், இந்தியாவெங்கும் மாணவர்கள் சென்று வேலைவாய்ப்பைப் பெற வசதிகளைப் பெறுகின்ற வகையிலும், அவர்களுடைய உரிமைகளைப் பறிக்காத வகையிலும், அரசு அவர்களுக்கு விரும்புகின்ற மாணவர்களுக்கு, இந்தியைப் படிப்பதற்கான வசதியைச் செய்து தாருங்கள், மீண்டும் மீண்டும் சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றிகூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு கல்வியமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.





தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் மொத்த வருமானத்தில் 21 விழுக்காடுகள், கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் அளவிற்கு கல்விக் காக இன்றைக்குச் செலவிடுவதற்கு ஒப்புதல் தந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வரவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கே பேசிய நண்பர்களெல்லாம், அனைவருக்கும் கல்வி அறிவு வளர வேண்டும், அனைவரும் கல்வி கற்றாக வேண்டும், கட்டாயக் கல்வியை அமல் நடத்தியாக வேண்டுமென்ற கோரிக் கையை ஒவ்வொரு மன்ற உறுப்பினரும் வலியுறுத்திக் கூறினார் கள். ஆனால், அதற்கான வழிமுறைகளைத் தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் தெரிந்து, எப்படியெல்லாம் வழிவகுத்து வந்திருக் கிறார்கள் என்பதைச் சொல்வதற்கு மறந்து விட்டார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்துவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அனைத்துக் குழந்தைகளும் கல்வியறிவு பெற வேண்டுமென் றால், சாதாரணமாகக் கிராமத்திலே இருக்கின்ற மக்களும், ஏழை எளிய மக்களும், அமைச்சர்களோ அல்லது முதல்வர் அவர்களோ கிராமங்கள்தோறும் சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்திலே நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அவர்கள் கொடுக்கின்ற மகஜர் அத்தனையும் கைரேகையாகத்தான் இருக்கின்றன. ஆகவே, கைரேகையைப் பார்த்த முதலமைச்சரவர்கள் தான், கை ரேகைப் பதிவைப் பார்த்த முதலமைச்சரவர்கள்தான் இந்த நிலைமையைப் போக்குவதற்காக ஒரு நிரந்தர முடிவை ஏற்படுத்த வேண்டும். உண்டாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இன்றைய தினம் ஒரு மாபெரும் மாறுதலை—வளர்கின்ற ஒரு சமுதாயத்தின் அடிப்படையில்தான்—உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆகவே, வளர்ந்த ஒரு சமுதாயத்தை விட்டுவிட்டு, இன்னொரு புதிய ஒரு சமுதா யத்தை, வளர்கின்ற ஒரு சமுதாயத்தை, கல்வி அறிவோடு கூடிய ஒரு சமுதாயத்தைத் தமிழகத்தில் உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தான் இன்றைய தினம் அந்தக் கல்வி அறிவைப் பெறுவதற்காக இலவசமாக சத்துணவு தருகிறார்கள்.

(மாலை 4-40)

ஆக, சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது; இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன; அது மட்டுமல்லாமல் இலவச சீருடையும் வாங்கித் தந்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. வே. கு. சின்னசாமி] [1987 ஏப்ரல் 8

இப்படி இலவச பாடப் புத்தகம், இலவச சீருடை, இலவச
சத்துணவு அத்தனையும் தந்துள்ள மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் இலவசக் காலணியும் கொடுக்க முன்வந்துள்
ளார்கள். இத்தனைக்கும் பிறகு கூட இங்கே பேசிய உறுப்பினர்
கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இதை
எல்லாம் மறந்துவிட்டுப் பேசினார்கள். இவை எல்லாம் கல்வி
அறிவு வளர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள், காங்கிரஸ் நண்பர் திரு. மணி
வாவன் போன்றவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்பு
கிறேன். இந்த சத்துணவுத் திட்டத்திற்கு மாநில அரசு 200
கோடி ரூபாய், 300 கோடி ரூபாய் செலவிடுகிறது. அதிலே பாதி
யையாவது மத்திய அரசு ஏற்றுக்கொள்ள நீங்கள் வலியுறுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே ஏழை
எளிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் கல்வி அறிவு பெற
வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், ஏழை எளிய
மக்கள் மீது உங்களுக்கு அக்கறை இருந்தால் மத்திய அரசையும்
பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்களை
யும் சத்துணவுத் திட்டத்திற்கு ஆகும் செலவில் பாதியையாவது
கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, ஒரு தீர்மானம் போட்டு
அனுப்ப வேண்டும்; 100 கோடி ரூபாயையாவது பெற்றுத்தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கல்வி அறிவு வளர்ச்சியடைவதற்கு என்னென்ன
செய்திருக்கிறோம் என்று இங்கே நினைவுபடுத்த விரும்பு
கிறேன். எங்கள் பகுதியில் 1977 வரையில் ஒரு ஆரம்பப் பள்ளி
கூட இல்லாத நிலை இருந்தது. அங்கே காவலிபாளையம் என்ற
ஊரில் வலையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக
வாழ்ந்து வருகிறார்கள். பள்ளி ஆசிரியர்கள் அந்தப் பக்கத்தில்
வந்தாலே விரட்டி அடிப்பார்கள். அப்படிப்பட்ட அந்த ஊரிலே
1977-78 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
ஒரு ஆரம்பப் பள்ளியை உருவாக்கித் தந்தார்கள். அந்தச் சமு
தாயத்தைச் சேர்ந்த ஒருவரையே அங்கே ஆசிரியராக நியமித்து
அந்தக் குழந்தைகள் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார்
கள். அந்தக் குழந்தைகள் எல்லாம் இன்றைக்கு அங்கே உயர்
நிலைப் பள்ளியில் படிக்கின்ற நிலையை உருவாக்கித் தந்திருக்
கிறார்கள். அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம்
உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. வே. கு. சின்னசாமி]

அதுமட்டுமல்ல, சித்தன்குட்டை போன்ற ஊர்களில் வாழும்
மக்கள் மிகச் சாதாரண நிலையில் இருக்கிறார்கள். அவர்கள்
எல்லாம் குளத்தங்கரையில் வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட
இடத்திலே கூட ஒரு ஆரம்பப் பள்ளியை உருவாக்கித் தந்திருக்
கிறார்கள்.

இங்கே புதிதாக நவோதயாப் பள்ளியைப் பற்றிக் குறிப்பிட்
டார்கள். இதற்கு எவ்வளவு பெரிய எதிர்ப்புகள் உருவாகி இருக்
கின்றன என்பது தெரியும். இருந்தாலும் நான் காங்கிரஸ் நண்
பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும்
இரண்டு கோடி ரூபாய்ச் செலவில் ஒரு நவோதயாப் பள்ளியை
உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறீர்கள். இங்கே எத்தனை மாவட்டம்
இருக்கிறதோ அதைக் கணக்கிட்டு, இரண்டு கோடி ரூபாய் வீதம்
ஒட்டுமொத்தமான தொகையைப் பெற்று, அந்தத் தொகையை
தமிழக அரசுக்குக் கொடுத்து செலவு செய்வதற்கு உதவ வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் செலவழிக்கின்ற
பணத்தை தமிழக அரசிடம் கொடுத்து தமிழக அரசே நேரடி
யாகச் செலவழிக்க உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.
குறிப்பாக, பெரியார் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கல்
லூரிக் கல்வி வளரவேண்டுமென்ற அடிப்படையில், சாதாரண
போக்குவரத்துக் கழகத்தில் இருக்கிற ஊழியர் வீட்டு குழந்தை
களும் டாக்டர்களாக வரவேண்டும், எஞ்சினியர்களாக வரவேண்
டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில், பெரியார் மாவட்
டத்தில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக எஞ்சினியரிங்
கல்லூரியும் மருத்துவக் கல்லூரியும் உருவாக்கித் தந்திருக்கிறார்
கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும்
இந்த அரசையும் பெரியார் மாவட்ட மக்களின் சார்பாக
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு அங்கே ஒரு
வேளாண்மைக் கல்லூரியையும் உருவாக்கித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அந்த வேளாண்மைக் கல்லூரியை
பவானிசாகரில் ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற மற்ற மாநிலங்
களுக்கு எல்லாம் வழி காட்டுகின்ற அடிப்படையில் ஒரு வழி
காட்டியாக விளங்குகிற மாநிலம் தமிழ்நாடு என்பதை இங்கே

[திரு. கே. முத்துவேல்] [1987 ஏப்ரல் 8

பெருந்தகை எடுத்துக் கூறியதற்கு ஏற்ப தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் 1987-88 ஆம் ஆண்டில் கல்விக்காக சுமார் 597 கோடி ரூபாயை இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கி இருப் பதை நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சி யின் சார்பில் வரவேற்று நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளில் படிக்கிற பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும், சத்துணவுத் திட்டத்தின் மூலம் உணவு அளிப்பதன் காரணத்தா லும், அவர்களுக்கு இலவச சீருடை வழங்குவதன் காரணத்தா லும், பாடப் புத்தகங்கள் வழங்குவதன் காரணத்தாலும், இந்த ஆண்டு முதல் அந்தக் குழந்தைகளுக்கு காலணி வழங்கவிருப்ப தன் காரணத்தாலும் அந்த மாணவ, மாணவியர், இடையிலே படிப்பை விட்டுவிட்டுச் செல்லாமல் தொடர்ந்து கல்வியைப் படிக் கிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

கட்டிட பராமரிப்புக்காக சுமார் 1.33 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டு இருக்கிறது. அது இங்கே இருக்கிற பள்ளிகளை மராமத்து செய்வதற்குப் போதுமானதாக இருக்காது. தற்சமயம் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற பள்ளிகளின் ஆசிரியர்களை எல்லாம் கல்வித் துறையின் மூலம் நிர்வகித்து வருகிறார்கள். அங்கே இருக்கின்ற பள்ளிகளை ஊராட்சி ஒன்றியங்கள்தான் பராமரிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருப்பதன் காரணமாக அங்கே இருக்கிற பள்ளிகள் எல்லாம் மராமத்து செய்யப்படாமல் இருக் கின்றன. தற்போது புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம், பள்ளிகளிலே உள்ள ஆசிரியர் களைக் கட்டுப்படுத்த எங்களால் முடியவில்லை, பள்ளிகளை மட்டும் நாங்கள் எப்படி எங்களுடைய பணத்தைச் செலவழித்து மராமத்து செய்வோம் என்று சொல்லி மராமத்து செய்யாததன் காரணத்தால் பள்ளிகள் எல்லாம் இடிகிற சூழ்நிலையில் இருக் கின்றன.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் அரியமங்கலம், உடைய நாதபுரம் போன்ற இடங்களில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களின் கட்டிடங்கள் கீழே விழுந்து மாணவர்களை அமுக்குகின்ற நிலைமையில் இருப்பதன் காரணத்தால் அந்தக் கிராமங்களில் எல்லாம் மரத்தடியில்தான் பள்ளிகள் நடக்கின்றன.



1987 ஏப்ரல் 8] [திரு. கே. முத்துவேல்]

(மாலை 4-50)

அதேபோல கிராமத்துப் பள்ளிகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் எல்லாம் 10 கிலோ மீட்டர் 20 கிலோ மீட்டர் நடந்து சென்றுதான் பள்ளிக் குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்கிறார்கள். அந்தந்த கிராமத்திலேயே அவர்கள் தங்கி பணியாற்றக் கூடிய அளவிற்கு அரசு ஆணையிட வேண்டும் என்பதோடு, அவர்கள் அங்கே தங்குவதற்கு ஏற்ப வீடுகளையும் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விளையாட்டுப் பிரிவில் இந்த அரசு ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நகர்ப்புறங்களில்தான் விளையாட்டுப் போட்டிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் கிராமப்புறங்களிலும் நடத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டுமல்லாமல் கிராமப் புறங்களிலே கபடி போன்ற விளையாட்டுக்களை நடத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல், தேசிய மாணவப் படை தமிழகத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்காக 1½ கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அது போதாது. ஏனென்றால் மத்திய அரசின் பட்ஜெட்டிலே பெரும்பான்மை பணம் ராணுவத்திற்காகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கான செலவுகளையெல்லாம் மத்திய அரசு ஏற்று ராணுவப் பயிற்சியை மாணவர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரத்தை இரண்டாகப் பிரித்ததன் காரணமாக இராமநாதபுரத்தில் நூலகம் இல்லை. தற்போது சிவகங்கையில் தான் இருந்து வருகிறது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இராமநாதபுரத்திலேயே ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு நூலகங்கள் மாவட்ட நூலக ஆணைக் குழுவின் மூலம்தான் இதுவரை நடந்து வந்திருக்கிறது. இப்போது அது இல்லாமல் இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் இருப்பவர்கள் கொண்ட ஒரு குழு நூலகங்களை நிர்வகிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்வதோடு என்னுடைய தொகுதியில் காந்தியில் பெண்களுக்

கென்று தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளி கூட கிடையாது. தனியாருடைய உயர்நிலைப பள்ளிதான் இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூரில் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே சுமார் ஆயிரம் பெண்களுக்கு மேல் படிக்கிறார்கள். அவர்களுக்கு போதிய கட்டிட வசதி இல்லை. அங்கே மரத்தடியில்தான் மேல்நிலைப் பள்ளி நடந்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதிக்கே அந்த ஒரே ஒரு மேல்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. ஆகவே அதற்குத் தேவையான கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஆசிரியப் பயிற்சி வகுப்பையும் ஆரம்பிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு மிகவும் பின்தங்கிய பகுதியான கீழத்தூர் என்ற இடத்தில் உயர்நிலைப் பள்ளியைக் கட்டுவதற்காக 4, 5 ஆண்டு களுக்கு முன் ரூபாய் 10 ஆயிரமும் 5 ஏக்கர் நிலமும் கொடுத்திருக் கிறார்கள். இன்னும் அந்தப் பள்ளி அங்கே கிடைக்கவில்லை. தற்போது ஒரு சிறிய இடத்தில்தான் பள்ளிக்கூடம் நடந்து வருகிறது. கீழத்தூர் கிராமத்திற்கு ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வயது வந்தோருக்கான இரவு நேரப் பள்ளி என் தொகுதியில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே பணிபுரிகிற ஆசிரியர்களுக்கு எல்லாம் மாதம் ரூ. 500 சம்பளமும், போக்குவரத்துச் செலவிற்கு என்று ரூ. 150-ம்தான் கொடுக்கப் படுகிறது. அங்கே பணிபுரிகிற ஆசிரியர்கள் எல்லோருமே பட்டப் படிப்பு படித்தவர்கள் என்பதோடு பி.டி.-யும் படித்திருக்கிறார்கள். அதன் காரணத்தால் மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக் கொள்வதோடு அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.





இறுதியாக என்னுடைய தொகுதியில் நான்காம் தமிழ்ச் சங்கம் ஆரம்பித்த பாண்டித்தேவர் பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மா. கதிர்வேலு:** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள கல்வி மானியத்தின்மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற சான்றோர் வாக்கு மிகவும் மலிகின்ற அளவுக்கு கல்வியின் தரம் சென்று கொண்டிருக்கிறது. நாம் உடை கொடுக்கிறோம், உணவு கொடுக்கிறோம், புத்தகங்கள் கொடுக்கிறோம், இன்னும் சொல்லப்போனால் காலணியும் கொடுக்கிறோம். இப்படி கொடுப்ப தினால் கிராமப்புறங்களிலே கல்வி ஆர்வம் அதிகரித்து இருக்கிறதா என்று சொன்னால் கல்வி இல்லாத சூழ்நிலைதான் இருக்கிறது என்று பணிவோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு கிறேன். அங்கே இருக்கிற ஆசிரியர்கள் 250 ரூபாய், 400 ரூபாய் என்று சம்பளம் பெறுகிறார்கள். அங்கே பெற்றோர்கள் விரும்புகிற கல்வி கிடைக்கிறது. ஆனால் 1,400 ரூபாய், 2,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிற அரசுப் பள்ளிகளில் பெற்றோர்கள் நம்பிக்கைக்குரிய கல்வி கிடைக்கவில்லை. இதை சிந்தித்துப் பார்த்து அரசு என்ன நடவடிக்கையெடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இதை சம்பந்தமாக ஒரு குழுவை அமைத்து பெற்றோர்களின் கல்வி நிலையை கண்காணிக்கிற அமைப்பாக அதனை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் அரசின் புள்ளிவிவரப்படி 34,933 பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இப்படியுள்ள பள்ளிகளுக்கு இந்த ஆண்டில் 850 ஆசிரியர்கள் புதியதாக நியமிக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள் என்று வைத்துக்கொண்டாலும் கிட்டத்தட்ட 70 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆசிரியர்களே இல்லாத பள்ளிகள் இருக்கின்றன. ஒரு வகுப்பில் 100 மாணவர்கள், 200

[திரு. மா. கதிர்வேலு] [1987 ஏப்ரல் 8

மாணவர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, மேலும் அதிகமான ஆசிரியர்களை எப்போது நியமிக்கப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் மரத்தடியிலும் திண்ணையிலும் பள்ளிக் கூடங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் நடக்கவில்லையென்று சொன்னதாக பத்திரிகையில் பார்த்தேன். அது உண்மையாக இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். என்னுடைய இராணிப்பேட்டை தொகுதியில் ஏழு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதைப்போல மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 20 வகுப்புகள், 30 வகுப்புகள் மரத்தடியில் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு நீங்கள் ரூபாய் 1.3 கோடி மட்டும் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள் என்றால் வித்தையாக இருக்கிறது. வாரியங்கள் எத்தனையோ நாம் போடுகிறோம். பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக புதியதொரு வாரியத்தை அமைத்து, கட்டடங்கள் கட்ட தனி நிதியை ஒதுக்கி, கட்டடங்கள் கட்டும் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தியா என்பது ஒரு நாடு. தமிழகத்தில் ஒரு கட்சியின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து, இன்னொரு பல்கலைக் கழகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 'மைக்ரேஷன் சர்டிபிகேட்' கேட்கிறார்கள். இது நியாயமா என்று கேட்டு, இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒரு முறைகேடு நடந்திருப்பதாக அறிகிறேன். மருத்துவத் தேர்வில் ஓம்பிரகாஷ் ரங்கராஜன் என்ற மாணவன் மைக்ரோ பயாலஜியில் ஒரு மார்க் குறைவாக பெற்றிருந்தும், பெரியவர்கள் தலையிட்டால் 30 மார்க் என்று ஆகியிருக்கிறது. வாய்மையே வெல்லும் என்ற நிலையில் இந்த விவரம் வெளியாகிவிட்டது. இந்தத் தவறுக்கு அதிகாரிகள் மீதும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் மீதும் அரசு என்ன நடவடிக்கையெடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



1987, ஏப்ரல் 8] [திரு. மா. கதிர்வேலு]

அடுத்து நூலகங்களைப் பொறுத்தவரையில் ஏழுதாயிரம் 5,000 பேர்களுக்கு ஒரு நூலகம் என்று சொல்கிறார்கள். பொது நூலகம் வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி சொல்கிற அளவுக்கு 5,000 பேர்களுக்கு ஒரு நூலகம் என்று இருந்தால் அது 5,000 பேர்களுக்கு ஒரு நூலகம் என்று கேட்க விரும்புகிறேன். உண்மையா, அது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். குறைந்தது 2,000 பேர்கள் வசிக்கிற இடத்திற்கு ஒரு நூலகம் என்று வைக்க வேண்டும். அதைப்போல ஒரு தாலுக்காவிற்கு ஒரு நடமாடும் நூலகம் என்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும் அரசுக்கும் அவர்களுக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் உண்ணாவிரதம் இருந்தாலும், போராட்டம் நடத்தினாலும், அவர்களை அழைத்துப் பேசி தனியார்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசுக்கும் வித்தியாசம் இல்லாமல் ஒருமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறையில் இயக்குநர், இணை இயக்குநர், உதவி இயக்குநர்கள் போன்ற அதிகாரிகள் கடுமையாக வேலை செய்தும் கூட, ஆசிரியர்கள் மீது அவர்கள் அக்கறை கொண்டிருந்தும் கூட, அடிமட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அந்த ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். அப்படி தொல்லை கொடுக்கிற அதிகாரிகளை அரசு கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தனியார் கல்லூரி என்று எடுத்துக்கொண்டால் கொள்ளைக்கூடமாக, வட்டிக்கடைகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் மாவட்டத்தில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது. நான் இண்டர்வியூ வந்த ஒரு மாணவனை அழைத்துக் கொண்டு போனேன். அப்போது 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பீர்களா என்று கேட்டார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் அரசு இவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு ஒரு மிகப்பெரிய தவறு நடந்தது. லாட்டரி சீட்டு போட்டு மாவட்டக் கல்வி அதிகாரி திருமதி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியோடு

[திரு. மா. கதிர்வேலு] [1987 ஏப்ரல் 8

தான் செய்தேன் என்று சொன்னார். மாவட்ட ஆட்சித் தலைவர் டேனியல் குணாநிதி அவர்கள் இப்போது மாற்றலாகி இருக்கிறார்கள். அவர்கள் இதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏழு லட்சம் ரூபாய் யார் கைக்குப் போனது என்று தெரியவில்லை. சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கொடுக்கவில்லை. அப்படிச் செய்த அந்த அதிகாரிகள் இன்னமும் அந்தப் பதவியில் இருக்கிறார்கள். அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-00)

அடுத்து விளையாட்டுத் துறையை எடுத்துக்கொண்டால், கேரளாவிலே இருக்கிறவர்கள்தான் மிகத் திறம்பட முன்னணியில் இருக்கிறார்கள். இன்றைய தினம் நம்முடைய தமிழகத்திலே இருக்கிற விளையாட்டுத் துறையின் அலுவலகத்திற்குச் சென்று பார்த்தால், அது தூங்கு மூஞ்சி அலுவலகமாக இருக்கிறது. எனவே இந்த நிலையை மாற்றி, விளையாட்டுத் துறைக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் வாலாஜாப் பேட்டையில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்கவேண்டும். 100 ஆண்டு களுக்கு மேலாக ஆகிறது அந்தப் பள்ளி தொடங்கி. அதற்கு விளையாட்டு மைதானமே கிடையாது. எனவே அந்தப் பள்ளிக்கு விளையாட்டு மைதானத்தை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ராணிப்பேட்டை நகரத்தில் இருக்கிற ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிடம் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே அங்கே 10 அறைகள் கொண்ட ஒரு கட்டிடத்தையாவது கட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோல் அறிஞர் அண்ணா பெண்கள் கலைக் கல்லூரி எங்களுடைய மாவட்டத்திற்கு வரப்பிரசாதமாக இருக்கிறது. அது நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் எம்.காம். மற்றும் எம்.எஸ்சி. மேல் பட்டப் படிப்பை இந்த ஆண்டு



1987 ஏப்ரல் 8] [திரு. மா. கதிர்வேலு]

தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அனுமதி தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டம், பக்கத்திலே இருக்கிற செங்கற்பட்டு மாவட்டம், மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பெண்கள் எல்லாம் இங்கே வந்து தங்கிப் படிக்கிறார்கள். அவர்களுக்கு சரியான விடுதி கிடையாது. மேலும் எங்களுடைய பகுதியில் தொழிற்பேட்டை அமைந்திருப்பதால், தனியார்கள் வாடகையை அதிகமாகக் கேட்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அளவிற்கு வாடகையைக் கொடுத்து எப்படி மாணவிகள் படிக்க முடியும் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில், புதிய கல்விக் கொள்கையைப் பொறுத்த வரையில், மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, மறைந்த அன்னை இந்திரா காந்தி, ஆகியவர்களுடைய வழியிலே பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் உறுதியான நம்பிக்கையைத் தந்தார்கள். அதன் வழியாகத் தந்து கொண்டிருக் கிறார்கள். இருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்திலே இருந்த நேரத்திலேகூட போடாத தீர்மானத்தை இன்றையதினம் நீங்கள் போட்டு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்றையதினம் அவர்கள் நடத்தும் போராட்டத்திலே கல்லூரி மாணவர்கள் வெளியே வந்திருக் கிறார்களா? உயர்நிலைப் பள்ளியிலே இருக்கிற மாணவர்கள் வெளி வந்திருக்கிறார்களா? என்று பார்க்கிறபோது, இல்லாத சூழ்நிலைதான் இருக்கிறது. இங்கே சகோதரி வளர்மதி அவர்கள் சொல்கிறபோது, எங்களைப் பார்த்து ஒரு கூட்டம் என்று சொன்னார்கள். நான் வருத்தப்படுகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் இணைந்து செயல்படுகிற இந்த நேரத்தில் இப்படிப் பட்ட வார்த்தைகள் தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தமிழகம் முழுவதும் உள்ள படித்தவர்கள் மத்தியில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி, அதன் மூலமாக என்ன

[திரு. மா. கதிர்வேலு] [1987 ஏப்ரல் 8

முடிவு வந்தாலும் அதை நீங்கள் ஏற்று நடத்தத் தயாரா? புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தத் தயாரா என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதன்மூலம் பெற்றோர்கள் விரும்புகிற, அவர்கள் பிள்ளைகள் விரும்புகிற கல்வியைக் கொடுப்பதற்கு, நீங்கள் வாக்கெடுப்பு நடத்தத் தயாரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய அருமைச் சகோதரர் இளங்கோவன் அவர்களுடைய பெரியார் மாவட்டத்தில் உள்ள நியம்பாளை யத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர நிதி ஒதுக்கித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்; அதேபோல் திண்டிவனம் நகரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டும் என்று ஒரு போராட்டம் நடந்து, அங்கே ஒரு ஆசிரியரை சஸ்பென்சன் செய்து இருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர்கள் மாண்புமிகு முருகானந்தம் அவர்களும், தங்கமணி அவர்களும் சமாதானம் செய்தபின் இப்போது ஒற்றுமையாக இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்த அந்த அதிகாரி களுடைய நடவடிக்கையை மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட இருக்கிறது. எனவே அப்படிப் பிரிக்கிறபோது, மாவட்டத் தினுடைய முதன்மைக் கல்வி இலாக்காவை திண்டிவனத்திலே அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல நம்முடைய தென்காசி உறுப்பினர் மாண்புமிகு வேங்கடரமணன் அவர்கள் . . . (மணி யடிக்கப்பட்டது).

* **திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று, நான் சில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் கல்விக்காக 597 கோடி ரூபாய் செலவழிக்கக்கூடிய வகையில், மானியக் கோரிக்கைகளை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே பல நண்பர்கள்



1987 ஏப்ரல் 8] [திரு. சா. ஞானசுந்தரம்]

தைப்பற்றி பாராட்டிப் பேசினார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இந்தப் பணம் எல்லாம் எங்கோ ஒரு மூலைக்குப் போகிறது என்று சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக ஒரு குற்றச்சாட்டை அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு தமிழகத்தில் இப்படிப்பட்ட ஒரு தொகையை செலவு செய்கிற அரசு, நிதியாண்டினுடைய மொத்த வருமானத்தில் ¼ பகுதியை செலவுசெய்ய வேண்டுமென்று மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் இங்கே கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விழைவது இங்கே தமிழ்நாட்டினுடைய அரசு இத்தனை ரூபாயை செலவு செய்தாலும், இந்த ரூபாயில் 21 விழுக்காடு செலவு செய்தாலும், ஆதிதிராவிட நலத்துறையாலும், பிற்பட்ட நலத்துறையாலும் அல்லது விவசாயப் பல்கலைக் கழகத்தாலும் அல்லது மற்ற பல்கலைக்கழகங்களாலும் பல கோடி ரூபாய்களை செலவு செய்து வருகிறபோது, அதனுடைய கணக்கைப் பார்க்கிறபோது அது சதவீதத்தைத் தாண்டித்தான் இன்றைக்கு தமிழகம் கல்வித் துறையிலே செலவு செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துரைக்க விரும்புகிறேன். இன்றைக்கு, இந்தியத் திருநாட்டில், கல்விக்கொள்கையைப் பின்பற்றுகிற போது, தமிழ் மாநிலம்தான் இன்றைக்கு 6-லிருந்து 11 வயது வரையுள்ள குழந்தைகள் 1990 ஆம் ஆண்டு அடையவேண்டிய இலக்கினை 1986-87-லேயே அடைந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல 11 வயதி லிருந்து 16 வயது வரையுள்ள குழந்தைகள் அடைய வேண்டிய இலக்கு, மத்திய அரசு அமைக்கிருக்கக்கூடிய இலக்கு 25 சதவீதம் என்று சொன்னால் தமிழ் மாநிலம் இன்றைக்கு 79.64 [illegible] பெற்றுக்கொண்டிருக்கிறது. அதைப்போல [illegible] கல்வித்திட்டத்தில் அடைய வேண்டிய இலக்கு இன்றைக்கு 10 சதவீதம் என்று சொன்னால் இன்றைக்கு தமிழ்மாநிலம் [illegible] 25 சதவீதத்தை எய்திக்கொண்டிருக்கிறது என்கிறபோது [illegible] இன்றைக்கு தமிழகம் கல்வித்துறையிலே [illegible] கல்வித்துறையிலே [illegible] என்பதை நான் பெருமையோடு எடுத்து வைப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய

நண்பர்கள், மாதிரிப் பள்ளியை ஒரு பக்கத்தில் ஆதரித்துப் பேசினார்கள். எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் கதிர்வேல் அவர்கள், நீங்கள் வாக்கெடுப்பதற்குத் தயாரா என்று கேட்டார்கள். நான் சொல்கிறேன்; தமிழகத்தில் இன்றைக்கும் இருமொழிக் கொள்கையைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அண்ணா அவர்களின் வழியிலேதான் அது இருக்கும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் சவாலாக உங்களுக்கு வைக்கிறேன்: நாங்கள் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; தமிழகத்திலே வாக்கெடுப்பு வைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா என்று நான் கேட்கிறேன். இங்கே பேசிய நண்பர்கள் ஹிந்தி மொழியைப் பற்றி பேசினார்கள். அருமை சட்டமன்ற உறுப்பினர் மணவாளன் அவர்கள் 'ஹிந்தி' மொழிக்கு தமிழக அரசு செலவு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். தமிழக அரசுக்கு ஹிந்திக்காக செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதற்காக மத்திய அரசாங்கம் செலவு செய்து கொண்டிருக்கிறது. அதற்கு பல்வேறு வழிகளிலே உங்களுடைய அரசு மத்திய அரசாங்கம் இன்றைக்கு தென்னிந்தியச் சபையின் மூலமாகவும், ஹிந்தி பிரச்சார சங்கத்தின் மூலமாகவும் செலவுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, ஹிந்தியை நாங்கள் கற்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஹிந்தியைத் திணிப்பதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். ஹிந்தியை அவர்கள் படிப்பதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அதைப் படிக்கலாம் என்கிற கருத்தினை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு விரும்புகிறோம். எனவே இந்தக் கருத்தை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு தனியார் கல்லூரிகளெல்லாம் மிக மோசமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று ஜனதா கட்சி உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்திலே அதே கட்சியைச் சேர்ந்த [illegible] அண்ணன் [illegible] அவர்கள், தனியார் கல்லூரிகள் பல நல்லமுறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எனவே நான் சொல்லுகின்றேன்; இந்தக் காலத்தில், தியாகராயர் கல்லூரி, [illegible] கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி போன்ற கல்லூரிகள்





தான் தமிழை வளர்ப்பதற்கு தமிழ்நாட்டில் இருந்தன. அவையெல்லாம் தனியாருக்குச் சொந்தமான கல்லூரிகள்தான். அதைப்போல கிறிஸ்தவ ஆலயங்கள், முஸ்லீம் [illegible] இவையெல்லாம் கல்விக்காகச் செலவு செய்துகொண்டு வருகின்றன. அவைகளெல்லாம், இந்த நாட்டிலே கல்வி வளர வேண்டுமென்பதற்காக நல்ல காரியங்களை அரசாங்கத்தோடு சேர்ந்து செய்து வருகிறார்கள். ஆகவே, இந்தவகையில் இன்றைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற அந்தக் கருத்தை நான் பாராட்டுகிறேன். இன்றைக்கு தமிழகத்திலேதான் கல்விக்கென்று பல்கலைக்கழகங்களை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். 1987-க்கு முன்னாலே இருந்த பல்கலைக்கழகங்களைத் தவிர இன்றைக்கு தமிழுக்கு என்று ஒரு பல்கலைக்கழகம். அதைப்போல இன்றைக்கு தொழில் கல்விக்கு என்று ஒரு பல்கலைக்கழகம்; வருகின்ற ஆண்டிலே தமிழகத்தில் மருத்துவத்துறைக்கு என்று ஒரு பல்கலைக்கழகத்தைக் காண இருக்கிறார்கள். அதைப்போல விவசாயத்துறையைச் சேர்ந்திருக்கிற அனிமல் ஹஸ்பண்டரி என்று சொல்லக்கூடிய அந்தத் துறைக்கு ஒரு பல்கலைக் கழகத்தைக் காணவேண்டுமென்று விரும்பி இருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்திலே கல்விக்காக, இப்படிப்பட்ட நிலையிலே நல்லபல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கள் தமிழகத்தில் பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். குறைபாடுகள் சில ஆங்காங்கே இருக்கின்றன என்பது உண்மைதான். என்னைப் பொறுத்த வரையில், தொடக்கப் பள்ளிகளைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அந்தக் காலத்திலிருந்து— அவர்கள் என்றைக்கு நியமனம் செய்யப்பட்டார்களோ, அன்றிலிருந்து இன்றுவரை அவர்கள் அதே இடத்திலேயே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் [illegible]களுக்கு ஒரு மனமாற்றம் வேண்டும். மாணவப் பருவத்தில் மாணவர்கள் நல்ல கல்வியைப் பெறவேண்டும். எனக்கு ஐந்தாம் வகுப்பிலே கல்வி போதித்த ஆசிரியரே இன்றைக்கு என்னுடைய பிள்ளைக்கும் ஆசிரியராக இருந்து கொண்டிருக்கிறார். இத்தகைய ஒரு சூழ்நிலையிலே [illegible]

இரு மாற்றம் வரவில்லை என்ற கருத்தை நான் அனுபவபூர்வமாக சொல்ல விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், அந்த ஊரிலேயே அந்த ஆசிரியர்களைப் பார்க்கிறோம். அவர்களுடைய பிள்ளைகளைப் பார்க்கிறோம். அவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கிறோம்; அவர்களுடைய செயல்களைப் பார்க்கிறோம்; எனவே இந்தச் சூழ்நிலையிலே பிள்ளைகள் ஒழுங்கான கல்வியைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், அப்படிப்பட்ட ஆசிரியர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஆண்டோ, மூன்று ஆண்டுக்கு ஒரு முறையோ இடமாற்றம் செய்யவேண்டுமென்று— பொது இடமாற்றம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அவர்களை 5 ஆண்டுகளாகியும் மாற்றுவதில்லை. இன்றைக்கு 10 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்கு மேலாகக்கூட ஒரே ஆசிரியர் ஒரே இடத்தில் இருந்துகொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை மாற்ற வேண்டும். குறைந்தது 2, 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பள்ளிகளில் அந்த ஆசிரியர்கள் வேலை செய்கின்ற நிலையை தொடக்கப் பள்ளித் துறையில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-10)

காரணம் இன்றைக்கு பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள ஆசிரியர்கள் அரசாங்க ஆசிரியர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல் நகராட்சியில் உள்ள ஆசிரியர்கள் அரசாங்க ஆசிரியர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் என்ன கோரிக்கை வைக்கிறார்களோ அவைகளை எல்லாம் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் நான் கேட்கிறேன், இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் கோரிக்கைகள் இல்லையா? ஆசிரியர்கள் போராடவில்லையா? ஆசிரியர்கள் அன்றைக்கு சங்கங்களை வைத்துக்கொண்டு நடத்தவில்லையா? அந்த ஆசிரியர்கள் சங்கங்களை நீங்கள் இரண்டாக உடைக்கவில்லையா? எப்படிப்பட்ட நிலை அன்றைக்கு





இருந்தது? ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள்தான் ஆசிரியர் களுக்காக அவர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளை இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார்கள். பல்வேறு கோரிக்கை களை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிற முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு நபர் கமிஷன் மூலமாக இன்னும் பலவிதமான கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் இன்றைக்கு அரசியல் கட்சிகள் புகுந்து கொண்டு ஆசிரியர்களை அரசியல் கட்சிகளுக்கு சொந்தக்காரர்களாக ஆக்கி இந்த அரசுக்குக் கெட்டபெயர் ஏற்படுத்தவேண்டும் என்று செய்து கொண்டு இருக்கிறார்கள். இதை இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் முறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்று நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அந்த நிலையில் இன்றைக்கு நர்சரி பள்ளிகளைப் பற்றி சொல்லி ஆகவேண்டும். இன்றைக்கு தாய்மொழிக் கல்வியான தமிழ் பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று கருது கிறோம். நான் கல்லூரியில் தமிழை பயிற்சி மொழியாக எடுத்துப் படித்தவன். அதற்கு அன்றைக்கு 180 ரூபாய் உதவித் தொகை தந்துகொண்டு இருந்தார்கள். ஆனால் இன்றைக்கும் அதே 180 ரூபாயைத்தான் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தாய்மொழிக் கல்விப் பற்று குறைந்து கொண்டு வருகிற சூழ்நிலையில் தமிழகம் இருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இதற்குக் காரணம் நகர்ப்புறங்களில் உள்ள பெரிய பெரிய நகரங்களான சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களில் வாழ்கிறவர்கள் நர்சரி பள்ளிகளை ஆரம்பித்து அந்த நர்சரி பள்ளிகளுக்குத் தங்களுடைய பிள்ளைகளை அனுப்பி அங்கே ஆங்கிலம் படிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆங்கிலத்தில் படித்தால்தான் பெருமை என்று சொல்லக்கூடிய ஒரு சமுதாயச் சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம், நர்சரி பள்ளிகளில் எல்லாம் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும். நாம் சிங்கப்பூரைப் பார்க்கிறோம். அங்கே கல்விக் கொள்கை இருக்கிறது. அங்கே நான்கு மொழிகள் பேசக்கூடிய மக்கள் வாழ்கிறார்கள். அங்கே

ஆங்கிலம் பொது மொழியாக இருக்கிறது. சீனத்துக்காரன் சீன மொழியை ஆட்சி மொழியாக வைத்துப் பேசுகிறான். மலாய்க்காரன் மலாய் மொழியை ஆட்சி மொழியாக வைத்து இருக்கிறான். அதேபோல் தமிழனாக இருக்கக்கூடியவன் தமிழை ஆட்சி மொழியாக வைத்துப் பேசுகிறான்; படிக்கிறான். ஆகவே அந்த மொழிகளை எல்லாம் பிரைமரி பள்ளியில் வைத்து இருக்கிறார்கள்; நிச்சயமாக தமிழ் படிக்கவேண்டும், அதேபோல் சீனத்துக்காரன் சீனத்தை படிக்கவேண்டும், அதேபோல் மலாய்க்காரன் மலாயை படிக்கவேண்டும், அதேபோல் இந்த பிரைமரி பள்ளியில், தர்சரி பள்ளியில் தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாக வைத்துப் படிக்க வேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடைசியாக என்னுடைய மன்னார்குடி தொகுதியைப் பற்றி நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். மன்னார்குடியில் அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கே எம்.ஏ., பி.காம். வகுப்புகளைத் தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு வடபாதிமங்கலம், கண்டியம்பேட்டை, வேற்குடி ஆகிய மூன்று கிராமங்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளுக்கான பரிந்துரை செய்து அனுப்பப்பட்டு இருக்கிறது. அதை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியில் கல்வி மாவட்டம் ஏற்படுத்தப்பட முன்மொழியப்பெற்று அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது, உரிய முறையில் அதை நிறைவேற்ற வேண்டும் என்று அதிகாரிகள் பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மன்னார்குடி அரசு கலைக்கல்லூரியில் பெண்களுக்கு பி.எஸ்சி. கெமிஸ்ட்ரி வகுப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிஞ்சிப்பாடி கருங்குழி பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் வடஊரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நூலகங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். நூலகத் துறை தமிழ்நாட்டில் வளரவேண்டும், வளர்ச்சி பெற வேண்டும். கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழை எளிய மக்கள்





நூலகங்களுக்குச் சென்று படிக்கவேண்டும். அதற்கு மக்கள் தொகை 5 ஆயிரம் என்ற வரைமுறையை வைத்து இருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் ஊராட்சிக்கு ஒன்று என்றோ, ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று என்றோ அமையுங்கள். இந்த ஆண்டு ஒரு சில நூலகங்கள் ஏற்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு 1, 2 வரக்கூடும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இந்த நூலகங்களை தமிழ்நாட்டில் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். பாமர மக்கள் படிப்பதற்கு வசதியை ஏற்படுத்த வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த ஆண்டு திருமாப்பேட்டையில், முல்லிப்பேட்டையில் நூலகங்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மெத்தப் பணிவன்புடன் கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

Thiru G. K. FRANCIS: Hon. Deputy Speaker, Sir, as regards Demand No. 17—Education, I am extremely satisfied to find that the progress of education in Tamil Nadu is of a very high order. The outlay of Rs. 597 crores for education speaks volumes of the priority given by Government for education. We must congratulate the Hon. the Education Minister for the well-balanced and growth-oriented approach for implementing the educational programmes in this State during the year 1987-88. According to Durkheim, an eminent educationist, education is the influence exercised by adult generations on those who are not yet ready for social life. According to him, its object is to arouse and to develop in the child, a certain amount of physical, intellectual and moral status which is demanded of the child by both the political society as a whole and the special milieu for which he is specially destined. In every developing society, the catalystic factor that could bring about a quantum jump in economic development and social justice is education. There is an urgent need to educate the masses both qualitatively and quantitatively and, that too, very quickly. The State Government's thrust in this direction is noteworthy and commendable.

Sir, the New Education Policy has more or less become the nation's compass, pointing towards a higher quality of education with emphasis on the national objectives. The Tamil Nadu Government have set the pace in implementing many policies and programmes of the New Education Policy. The most outstanding sphere in which

Tamil Nadu has achieved remarkable progress is in being the pace-setter in the country in implementing vocational courses. These are highly productive and would not only enthuse the students opting for these courses but, above all, they would provide. jobs to those students who opted for vocational courses. The general feeling that the academic stream is more prestigious than the vocational stream must be removed through educational programmes, advertisements and moulding an academic environment that would make more students opt for vocational courses. In Japan, Germany and other advanced countries, the emphasis on technological training is engendered right from an early age and, therefore, it is no wonder that those countries have become highly technical and productive in character and content. I have a feeling that we must try to emulate the example of those countries.

Sir, a remarkable feature of this Policy Note is that Tamil Nadu has achieved 100 per cent enrolment in the age group 6—11 and 75 per cent enrolment in the age group 11-14. This is a highly commendable achievement for the Government. The various incentives offered by the Government, like the Chief Minister's Nutritious Meals programme, the free supply of text-books, the supply of foot-wear, etc., are all feathers in the cap of the Government. All these incentives would boost the interest of the students in learning and in improving their lot. Further, the various welfare schemes undertaken by the Government for the benefit of the teachers are also remarkable steps started by the Government to help the teaching community whose welfare has to be catered to constantly. Since the teachers face some problems, the Government should establish a special cell, comprising of Government officials and teacher-representatives to look into their problems and keep the Government informed of their grievances and problems. Sir, any educational programme will depend for its success on the quality of the teachers and the rewards that they get. Every effort should be taken to impsove the lot of the teachers in terms of both monetary and non-monetary benefits. The Government should consider implementing a medical reimbursement scheme for all teachers, sanction of leave travel concessions and payment of one month's salary as ex-gratia payment on par with other Government employees.

Sir, in the field of Higher Secondary Education, the Government should try to give special grants to schools run by minority institutions so as to enable them to organise vocational courses. This must be done especially to those schools which want to establish computer centres for use in the Higher Secondary course. As is well-known, ever since our Prime Minister started moving the nation towards a modernised and dynamic 21st century, the computer industry has





been growing by leaps and bounds. In fact, in the U.K., U.S.A., Japan and Germany, computer education is necessary for every student. Sir, the time has come for every student in our State also to be introduced to the computer. For this, the Government should help schools with special grants to obtain these high capital intensive computer equipments. The Government should endeavour to ensure that by the end of this century every school in this State is equipped with a computer centre. This will further help every other sector of the economy also to develop computer facilities.

Sir, as regards Anglo-Indian Schools, I am grateful to the Government for having increased the fee compensation grant given to all Anglo-Indian students in the Anglo-Indian schools. I request the Government to provide some kind of grants for buildings, equipment etc. for these schools. There is a constant need to upgrade these schools and all efforts in this direction are dampened due to lack of building facilities. As a result, resort is made to collection of donations. There is a need to instruct these schools to re-constitute their Boards by having noted academicians in those Boards. It is sad to find that non-educationists with no idea of education are functioning on the Boards of these schools. They distort the entire educational picture and inflict an intolerable damage on it.

(மாலை 5-20)

Sir, as regards Collegiate education, a large number of steps have to be taken to implement the policy measures of the New Education Policy. I would like to highlight some of the most important measures I would like to highlight some of the most important measures that have to be undertaken. First, there should be a qualitative improvement in the existing courses of study. In this connection, it would be worthwhile to mention that the semester pattern should be re-introduced because this system has become an all-India feature. Some years ago, Tamil Nadu also was having the semester pattern. But, for some reason or the other, it has back-tracked and gone back to the old pattern which is certainly out-dated. Secondly, there is a need to create more autonomous colleges and Departments. This is very necessary to utilise the expertise and acumen of teachers in developing high quality course-content in various fields, instead of depending on one uniform pattern. The teachers must be given opportunities to design and formulate courses that will be interesting, useful and job-oriented. Thirdly, there is a need to depute senior teachers of colleges and Universities for programmes like the University Grants Commission's FIP programme. In fact, such programmes could be designed by the State Government itself because

the intake of the present FIP programmo is very limited. I request the State Government to swing into action in this regard and formulate such programmes. I also request that the Government should see that the teachers who are deputed for such training are paid full salaries during the period of deputation.

Sir, I requst the Government to seek the co-operation of the Central Government and establish an Indian Institute of Management in Tamil Nadu. At present, the Government of India are running these Institutes at Ahmedabad, Bangalore, Calcutta and Lucknow. In view of the great demand for Management education, I think the time has come for us to have an Institute of Management in Tamil Nadu also. I also request the Government to set up a first-rate Centre for Computer Education in Tamil Nadu. This Centre should provide advanced courses in Computer Education, especially at the Post-Graduate and Doctoral levels. This will go a long way in creating a higher technical atmosphere in Tamil Nadu.

Sir, our State has progressed well in the library movement. But, I feel that there is a need to make the reading habit a people's movement. In these days of television and the video, the students and even the adults are gradually giving up their reading habit. But, it is important to strengthen this habit. This could be done by opening libraries in rural areas and also by having mobile libraries wherever possible.

With these words, I welcome the Demand and give my whole hearted support to it. Thank you, Sir.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானிய கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன்னே வைக்க ஆசைப்படுகிறேன். பத்திரிகை ஆசிரியர்கள் மட்டும் அல்ல, பள்ளி ஆசிரியர்களும், கல்லூரி ஆசிரியர்களும் கூட பரிதாபப்பட வேண்டிய நிலையிலே தான் இருக்கிறார்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தமிழகத்திலே உள்ள ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் இந்தியாவிலே உள்ள ஏனைய மாநிலங்களில் இருக்கின்ற—(குறுக்கீடு) என் கருத்தை நான் சொல்லலாம் என்பது ஏற்கனவே தீர்ப்பு—ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை விட மிகக் குறைந்த அளவே இருக்கின்ற துர்பாக்கியமான நிலைக்கு அந்த ஆசிரியர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்





என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. அதனால்தான் இன்று போதனை செய்ய வேண்டிய ஆசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு, எழிலகம் முன்பு கோடை வெய்யிலிலே உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். நாடு தழுவிய ஒரு போராட்டத்தை 1985-ம் ஆண்டின் இறுதியிலே நடத்திய ஆசிரியர் பெருமக்கள், முதல்வர் அவர்களின் மேலான வேண்டுகோளுக்கு இணங்கி, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஒத்தி வைத்தார்கள். பேச்சுவார்த்தை நடைபெறாத காரணத்தினால், 1987 பிப்ரவரி 10-ம் நாள் முதல் மீண்டும் வேலை நிறுத்தத்தில் இறங்கப்போகிறோம் என்று சொன்னபோது 29—1—1987 அன்று பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை எந்தவிதமான காரணமும் கூறாமல் ஒத்தி வைக்கப்பெற்றது. இன்று 1987 ஏப்ரலில் இருக்கிறோம். இன்று வரை அந்தப் பேச்சுவார்த்தை தொடங்கப்படவே இல்லை. முதல்வர் உறுதிமொழியே இப்படியாகுமானால், அந்த ஆசிரியர்கள் போராட்டங்களின் மூலம் தங்களை வருத்திக் கொள்வதைத் தவிர வேறு எந்த அடிப்படையில் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, ஒப்பந்த நியமனம். எங்குமே இல்லாத ஒரு நிலை. ஏனென்று கேட்டால் நாகபுரி உயர்நீதி மன்றம் இந்த ஒப்பந்த அடிப்படை முறையே தவறானது என்று தீர்ப்பு கூறியிருக்கிறது.

அந்த ஒப்பந்த அடிப்படை முறையிலே கல்லூரியிலே அரசாணை 801/86 என்கின்ற முறையிலே எம்.ஃபில், பி.எச்டி. போன்ற உயர் கல்வி படித்த பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்துகின்றது. அப்படி வேலைக்கு அமர்த்துகின்ற நபர்கள் கொத்தடிமை முறைக்கும் கேவலமாக இருக்கும் நிலையைக் காண்கிறார்கள். அந்த ஒப்பந்தப் பணிக் காலத்தில் அவர்களுக்கு வேறு நிரந்தர வேலை கிடைத்தால் போகக்கூடாது. 10 மாத காலத்திற்குத்தான் வேலை என்கிறார்கள். ஆனால் இதைவிடக் கொடுமை ஒன்று உண்டு. சாதாரணமாக பரிசு என்பது—கொடுப்பது. திரும்பிக் கேட்கக் கூடாத ஒன்று. கொடுத்துச்

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

இவர்ந்த காத்தை உடையவரை முதல்வராகக் கொண்டு இருக்கிறோம் என்று பெருமைப்படுகிற இந்த அரசு பொங்கல் பரிசு என்று அந்த ஆசிரியர்களுக்கு 300 ரூபாயை அளித்துவிட்டு இன்று அவர்களை அதைத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்று கேட்கிறது. சாதாரண மனிதன், சாமான்ய மனிதன் கூடச் செய்யாத ஒரு காரியத்தை எவ்வாறு இந்த அரசு செய்யலாம்...

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவி வழிச் செய்தியை வைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசக்கூடாது. ஆசிரியர்கள் அரசை அணுகியிருக்கிறார்கள். முழுக்க, முழுக்க தற்காலிக முறையிலே நியமிக்கப்பட்ட அவர்களுக்கு தொடர்ந்து பணியில் இருக்க கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அரசு அதை ஆய்ந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் நடவடிக்கை இதுவரையில் ஒன்றும் எடுக்கப்படவில்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : நிரந்தரமாக்கும் கோரிக்கை ஒன்று தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கூறுவது, ஆணை பிறப்பிக்கப்பட்டது உண்மையா, இல்லையா என்பதை அவை மூலம் அறிய விரும்புகிறேன். பொங்கல் பரிசாகச் செலுத்தப் பெற்ற பணத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று அவர்களுக்கு அரசாணை அல்லது கல்வி இலாகா ஆணை பிறப்பிக்கப்பட்டதா, இல்லையா என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நன்றியுடையவனாக இருப்பேன். அந்த ஆணைக்குப் பிறகுதான் கோரிக்கையே எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே, ஆணை இடப்படவில்லை என்று அமைச்சர் கூறமுடியாது. அதற்குப் பின்னால் ஆசிரியர் பிரதிநிதிகள் அணுகியிருக்கிறார்கள். அதுதான் உண்மையே தவிர என்னுடைய கூற்று—இது கேள்வி ஞானம் அல்ல. நிகழ்கால உண்மை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் கூறியதை மனப் பூர்வமாக நன்றியோடு ஏற்றுக்கொள்கிறேன்.

தயவுசெய்து கொடுத்த பரிசைத் திரும்பப்பெறுகின்ற கீழான நிலைக்கு இந்த அரசு வரவேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

அடுத்து, கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதம். 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நிச்சயமாக இந்த ஊதிய விகிதங்கள் திருத் தப்படவில்லை. பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரை கள் வரவேண்டும் என்று கூறுகின்றார்கள். நியாயம். ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசு மூன்றாண்டுக் கால ஊதிய உயர்வை இடைக்கால நிவாரணமாக கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுத்து இருக்கிறது. அதைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, தற்காலிக பேராசிரியர்கள் நீண்ட காலமாக நிரந் தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தயவுசெய்து நிரந்தரமாக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். பல ஆண்டுகள் பணி புரிந்தும் பணி வரன்முறைப்படுத் தப்படாத நிலை இருக்கிறது. அதை மாற்றி அமைக்க அரசு முன் வரவேண்டும்.

அதைக் காட்டிலும் இன்னும் ஒன்றை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். கோடை காலத்திலே எம்.ஃபில் ஆராய்ச்சிப் படிப்பிற்கு கல்லூரி ஆசிரியர்கள் எந்தவிதமான கூடுதல் ஊதியமும் இன்றி, பணி புரிகிறார்கள். கோடை விடுமுறையிலே அவர்களுக்கு அந்தப் பயிற்சி வகுப்பு நடப்பதால், கோடை விடு முறையையும் அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. ஆனால் அவ்வாறு பணியாற்றுகிற பேராசிரியர்களுக்கு சிறப்பு விடுப்போ அல்லது சிறப்பு ஊதியமோ தரப்படவில்லை.

இதைவிடக் கொடுமை என்னவென்றால், 1985-இலே ஆசிரியர் போராட்டம் நடந்தபோது அந்தப் போராட்டத்திலே பங்கு பெறாமல் ஒதுங்கி இருந்து கல்லூரிக்குச் சென்று, வகுப்பு நடத்தாமல் கையெழுத்து மட்டும் இட்டுவிட்டு வந்தார்களே, அந்த ஆசிரியர்களுக்கு சிறப்பாக 11 நாட்கள் ஈட்டிய விடுப்பு கொடுக்கப் பட்டிருக்கின்றது. இது ஒரு மூன்றாம் தர முதலாளியின் மனப்பான்மையைத் தான் காட்டுகிறதே தவிர, நல்ல ஒரு அரசி னுடைய தன்மையைக் காட்டவில்லை என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒட்டுமொத்தமாக நாடு தழுவிய ஒரு போராட்டம் நடைபெறு கிறபோது, அந்தப் போராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கி இருந்தவர்கள், ஓரம் போனவர்கள், எட்டப்பர்களாக இருந்தவர்

களுக்கு ஊக்கம் அளிக்கிறது என்றால், இது ஒரு அரசு செய்கிற காரியமாக என்னுடைய கருத்திற்குப் புலப்படவில்லை என்று நான் கூறமுடியும்.

மற்றொன்று, ஆசிரியர்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. ஏற்கனவே மேலவை இருந்தது. அதிலே, ஆசிரியர்கள் தரப்பிலே அவர்களுடைய எண்ணங்களை, பிரச்சினைகளை எடுத்துக் கூற பிரதிநிதிகள் இருந்தார்கள். இன்று மேலவை கலைக்கப்பட்ட நிலையிலே ஆசிரியர்களது குறைகளைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நபர் குழுவிற்குப் பதிலாக அதிலே ஆசிரியர்களின் பிரதிநிதிகளை அங்கம் வகிக்கச் செய்து, அவர்களின் குறைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-30)

மேலும் பள்ளிகளில் பணியாற்றுகிற பிற சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு அந்தப் பயிற்சி ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் அந்தச் சிறப்பு ஊதியம் எஞ்சினியரிங் இன்ஸ்ட்ரக்டர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் மட்டும் வழங்கப்படவில்லை. தமிழைப் போற்றுகிற இந்த அரசு, தமிழ் வாழப் போராடுகிற அரசு உடனடியாக தமிழ் ஆசிரியர்களுக்கும், எஞ்சினியரிங் போதகர்களுக்கும் இந்த சிறப்பு ஊதியம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே மற்ற ஆசிரியர்களுக்கு முதுகலைக் கல்வித் தகுதி இருந்தால் அந்தக் கல்வித் தகுதியைப் பயன்படுத்தாமல் சாதாரண ஆசிரியராகப் பணியாற்றினாலும்கூட ஒரு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பொறியியல் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற் கல்வி பயின்ற மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் ஒட்டுமொத்தமாக இதுவரை 100 இடங்கள்தான் தமிழகம் முழுவதுமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதன் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





அதைப் போலவே கல்வித் துறையில் அரசுத் தேர்வு குழுவில் பணியாற்றும் நண்பர்கள் பலர் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். சர்வே இலாகாவில் செக்ஷன் ரைட்டர்கள் என்ற பெயரில் நிரந்தரமாகப்படாது பணியாற்றிய ஊழியர்கள் தற்போது நிரந்தரம் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல் தேர்வுத் துறையிலும் ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்டவர்கள்—பட்டதாரிகள்— செக்ஷன் ரைட்டர்கள் என்ற பெயரில் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாகவே பணியாற்றி வருகிறார்கள். அவர்களையெல்லாம் அரசு நிரந்தரமாக்க முன்வரவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் பணியாற்றிய ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் 1—6—1986 முதல் அவர்கள் பணி வரன்முறைப் படுத்தப்பட்டிருந்தாலும்கூட அவர்களுக்கு இன்றுவரை பணி விதிகள் உருவாக்கப்படவில்லை. ஏறத்தாழ கடந்த 6 ஆண்டுகளாக இந்த நிலை இருக்கிறது. இன்றையதினம் வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில்கூட விரைவில் அந்த விதிகள் ஆக்கப்படும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் பணியை வரன்முறைப்படுத்திட அல்லது விதிகளை நிர்ணயிக்க இப்படி 6 ஆண்டுகள் ஒரு அரசுக்கு அல்லது ஒரு அரசு இலாகாவுக்குத் தேவைதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

மேலும் கிராமப்புற ஆசிரியர்களுக்கு வீட்டுவசதிப்படி கொடுப்பது பயனுடையதாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் அரசு சார்பில் சுயநிதி நிறுவனங்கள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு ...ணப்பினர் நண்பர் சுப்பராயன் அவர்கள் இதை ஒரு "பகல் கொள்ளை—ஜேப்படி" என்றெல்லாம் வர்ணித்தார்கள். நிச்சயமாக எனக்கு அதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் என்னுடைய நண்பர் மத்திய அரசு செய்ததாகக் குறிப்பிட்டார். மாநில அரசு தான் இங்கே அனுமதி வழங்கி அத்தனை சுயநிதி கல்வி நிலையங்களும், கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. ...தகளால் ஏற்பட்டு வரும் இந்தக் கொள்ளையைத் தடுக்க வேண்டு

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1987 ஏப்ரல் 8

மென்று அறைகூவல் விடுத்திருப்பாரானால் நான் அதை வரவேற்றிருப்பேன். அதை விட்டுவிட்டு . . . (குறுக்கீடு) yielding (குறுக்கீடு) அதைவிட்டுவிட்டு மத்திய அரசை மாத்திரம் குறைகூறி இருக்கிறார் என்றால் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருத்து அல்ல என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு உள்ளபடியே தமிழகத்தில் கல்வி விலை பேசப்பட்டு வருகிறது. காசு இருந்தால்தான் கல்வி என்ற நிலை உருவாகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நீங்கள் தனியார் கல்லூரிகளை ஊக்குவிப்பதை நான் குறை சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுயநிதி கல்லூரிகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவைகளைப் பொறுத்த வரைக்கும் "பகல்கொள்ளை என்றும்" குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் கூறுவது சரியாக இருக்காது என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொந்தமாகவே நிதி போட்டு அவர்கள் நிதியிலிருந்தே கல்லூரி நடத்திக் கொள்ள வேண்டுமென்பதுதான் செல்ப் பைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படை எண்ணம். அந்த அடிப்படையில்தான் அரசு அனுமதி அளித்திருக்கிறது. இப்படி அரசுக்குப் பணத் தடை இருக்கும்போது செல்ப் பைனான்சிங் டெக்னிகல் இன்ஸ்டிடியூஷன்கள் எந்த அளவுக்கு வருகின்றனவோ அந்த அளவுக்கு நல்லது என்றும், இந்தியத் திணைக் கண்டத்திற்கும் அது உதவியாக இருக்கும் என்றும் மத்திய கல்வி அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். எனவே அப்படி கட்ட வகையில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் டொனேஷன் வாங்குவதைக்கூட இந்த அரசு தவறாகக் கருதவில்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் ஒன்றை மட்டும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சுயநிதி நிறுவனங்கள் என்றால் தங்கள் சுயநிதியை வைத்து ஒரு கல்வி நிலையத்தை ஆரம்பித்தால் தனியார் கல்லூரி. அண்ணாமலைச் செட்டியார் கல்லூரிகளைப் போல் ஆரம்பித்திருந்தால் அதற்கு அந்தப் பெயர் பொருந்தும்.



1987 ஏப்ரல் 8] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

ஆனால் சுயநிதி நிறுவனம் என்ற பெயராலே பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கிறார்கள். ஒரு மருத்துவ வகுப்புக்கு ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு இலட்சம் ரூபாய் என்று. ஆனாலே, கூறுகிறேன்; இந்த ஆட்சியில் கல்வி விற்பனைப் பொருளாக, வியாபாரப் பொருளாக மாற்றப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஒளிவு மறைவு இல்லை. சுயநிதி நிறுவனங்களைப் பொறுத்தவரையிலே அவர்களாகவே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே எல்லா செலவுகளையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது, பணியாற்றும் இன்ஸ்பெக்டர்கள் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பது, லேபாரட்டரி இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து கட்டுவது, லேபாரட்டரி இவைகள் வேண்டும் என்று முழு அனுமதி அவர்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று முழு அனுமதி அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் இரகசியமாக வாங்கவில்லை. வெளிப்படையாக இவ்வளவு நிதி என்று வருந்து வாங்குகிறார்கள். அதைப் பற்றி பகல் கொள்ளை என்று பேசாமல் இருப்பது மாண்புமிகு உறுப்பினர் உணர்ச்சி வசப்படாமல் இருப்பதும் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: நான் பொறுப்போடுதான் பேசுகிறேன். நிதி வாங்குவது . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அங்குள்ள இருக்கைகள் முழுவதையும் அவர்களே எடுத்துக்கொள்ளவில்லை. அரசு 'மெரிட்' எக்சாமினேஷன் வைத்து அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு மாணவர்கள் போய் சேருகிறார்கள். ஆகவே ஒட்டுமொத்தமாக அதை 'பகல் கொள்ளை' என்றால் எப்படி?

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தைத் தெரிவிக்க எனக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது. ஐ அம் வியர் டு ஸ்ட்ரைட்டன் இ. அமைச்சர்கள் பதில் சொல்லலாம். பதில் (குறுக்கீடு) சொல்லக் கூடாது என்று சொல்ல முடியாது.

[1987 ஏப்ரல் 8

திரு. ஏ. [illegible]ந்திரன்: வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் இதை மறுக்கட்டும், எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆசிரியர்களுடைய சம்பளத்திற்காக என்றால் எவ்வளவு ரூபாய்? இதனால் தகுதி புறக்கணிக்கப் படுகிறது. இருக்கை இல்லை பேசப்படுகிறது என்பதால்தான் இதை நான் 'பகல் கொள்ளை' என்று சொல்லுகிறேன். இன்னும் கூறத் தயாராக இருக்கிறேன். இதிலே என் முடிவை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. (மணி அடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. ச. பாலகிருஷ்ணன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இந்த ஆட்சியிலே பத்திரிகை ஆசிரியர்களும், பள்ளி ஆசிரியர்களும் பரிதாபத்திற்குரியவர்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பால கிருஷ்ணன், ஒரு நிமிடம் இருங்கள். நான் சொல்லித்தான் ஆக வேண்டும். பத்து நிமிடங்களுக்கு மேல் உங்கள் கட்சி உறுப்பினர் களுக்கு அனுமதிக்க வேண்டாம் என்று உங்கள் கட்சியின் கொறடாவும், தலைவரும் ஏற்கெனவே ஒத்துக்கொண்டார்கள். நீங்கள் அதற்கு மேலே பேசியிருக்கிறீர்கள். வேண்டுமானால் ரிக்கார்டைப் பார்க்கலாம். ஆகவே மேலும் அனுமதிக்க முடியாது, திரு. பாலகிருஷ்ணன் பேசுங்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் ஒருவர், 'பள்ளி ஆசிரியர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் பரிதாபத்திற்கு உரியவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்' என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த உறுப்பினர் எந்தப்



1987 ஏப்ரல் 8] [திரு. ச. பாலகிருஷ்ணன்]

பத்திரிகை ஆசிரியரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பார் என்று நான் இங்கு அவ்வாறு எடுத்துச் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். அதை அவர்களே உணர்ந்திருப்பார்கள். இருந்தாலும் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பள்ளி ஆசிரியர்களுக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறவர்களுடைய காலத்திலே கல்வி என்பது வசதி படைத்தவர்களுக்காகவே இருந்தது என்பதையும், பள்ளி ஆசிரியர்களுடைய போராட்டம் என்றால் அவர்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகக் கூடிய நிலைமையும் இருந்தது உண்டு. அப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே இருந்திருக்கிறது. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகுதான் ஆசிரியர்களுடைய பிரச்சினையிலே தாய் உள்ளத்தோடு அக்கறை கொண்டு அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து வருகிறார்கள். 1967-க்கு முன்னதாக, ஆசிரியர்கள் போராட்டம் என்ற சொல்லைக்கூட நினைத்துப் பார்க்க முடியாததொரு நிலை தமிழகத்திலே இருந்தது. அதற்குப் பின்னாலே ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர்கள் ஆசிரியர்களை எப்படியெல்லாம் சித்திரவதை செய்தார்கள் என்பதற்கு ஒரு சரித்திரமே இருக்கிறது. ஆசிரியர்கள் போராட்டம் நடந்தபோது அந்த ஆசிரியர்களை சிறையிலே அடைத்து, அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை விடுதலை செய்த பின்பு, அவர் களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு மீண்டும் பணியிலே சென்று அமரலாம் என்று வைத்தார்கள். ஆசிரியர்கள் போராட்டம் நடத்திய காலத்தை அவர்கள் வேலை நிறுத்தம் செய்த காலத்திற்கு ஊதியம் இடையாது என்று சொல்லி, அவர் களிடம் மீண்டும் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு பணியிலே அமர்த்திய ஆட்சிக் காலம் தமிழகத்திலே இருந்திருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியபோது, சிறையிலே அவர்கள் அடைக்கப்பட்டபோது கூட, ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை விடுதலை செய்தார்கள், மீண்டும் பணியில் அவர்களை அமர்த்தினார்கள். ஆனால் எந்த ஒரு ஆசிரியரிடமும் மன்னிப்புக் கடிதத்தை இந்த அரசு எழுதி வாங்க வில்லை. அதே போல அவர்கள் வேலைநிறுத்தம் செய்த காலத்தை அவர்கள் வேலை செய்த நாட்களாக ஏற்றுக்கொண்டு

[திரு. ச. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல் 8

அவர்களுடைய ஊதியத்திலிருந்து எந்தவிதமானதொரு பிடித்தமும் இந்த அரசு பிடித்தம் செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-40)

அதைப்போல, இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் இன்றைக்கு திண்ணைகளிலும், மரத்தடிகளிலும் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 1960, 61 ஆம் ஆண்டிலே அவர் இருந்து கொண்டிருப்பார் என்று கருதுகிறேன். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஏறத்தாழ 4,500 தொடக்கப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள், வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியிலே மட்டும் 2 ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு ஒன்றியங்களிலும் 45 பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் ஆட்சி செய்த நேரத்திலே கிராமப்புறங்களைப் பற்றி யாரும் சிந்திக்கவில்லை. கிராமப்புறங்களிலே இருக்கும் மக்கள் கல்வி அறிவு பெற வேண்டும்; கிராமங்களிலே அழுத்தப்பட்டுக் கிடக்கும் ஏழை எளிய மக்கள் கல்வி அறிவு பெற வேண்டும் என்று சிந்திக்கவில்லை. இன்றைக்கு பள்ளிகளுக்கு நல்ல கட்டிடங்கள் இல்லை, தளவாடப் பொருள்கள் இல்லை, கரும்பலகைகள் இல்லை என்று அடிக்கடிக்காக குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து தங்கள் ஆட்சிக் காலத்தை இவர்கள் சிந்தித்துப் பார்த்தால் சரியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

அடுத்து, இங்கே இருக்கும் தனியார் கல்லூரிகளும், தனியார் பள்ளிகளும் கொள்ளை அடிக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலைமை தமிழகத்தில் மட்டுமா இருக்கிறது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தது. அங்கே தாவன்கரேயில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்தது. மணிப்பாலில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்தது. அந்த மருத்துவக் கல்லூரிகள்



1987 ஏப்ரல் 8] [திரு. ச. பாலகிருஷ்ணன்]

எல்லாம் மக்களை எப்படி கொள்ளை அடித்தன; காரணங்கள் என்பதை மறந்திருக்க மாட்டார்கள். தாவன்கரே மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாட்டு மாணவன் 5 ஆண்டுகளுக்கு முன்பு சேர 3 இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்த வரலாறு எல்லாம் இருக்கிறது. இன்னும் ஒன்று சொல்கிறேன். தனியார் என்று சொல்கிறபோது, உங்களை நீங்கள் கட்டுப்படுத்திக்கொள்ளத் தெரிந்துகொள்ளுங்கள். பெரியார் மாவட்டத்திலே தாளாளராக இருந்துகொண்டிருக்கும் ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே 5,000 ரூபாய் நன்கொடை இல்லாமல் யாராவது சேர முடியுமா என்றால் முடியாது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் மொடக்குறிச்சி திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கர்நாடகத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது உண்மையோ, பொய்யோ தெரியாது. ஆனால் ஈரோடு * என்று சொல்லுகிறார்கள். அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றி வேண்டுமென்றே திரித்துக் கூறுகிற போக்கினை அருமை நண்பர் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். அது உண்மை என்றால் யாரிடம், எவ்வளவு பணம் வாங்கினார் என்பதைச் சொல்ல வேண்டும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய அன்புக்குரிய நண்பர் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளங்கோவன் அவர்களுக்கு நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறேன். இதை எந்த இடத்திலும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். நானே நேரடியாகச் சென்றிருக்கிறேன், ஒரு மாணவியைச் சேர்க்க...

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு உறுப்பினர்கள் எழுந்தால் என்ன நியாயம்? இன்ஸ்டிடியூஷன் பெயரைச் சொன்ன வார்த்தைகளை நீக்குகிறேன். எல்லா செல்ப்-பைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்ஸ் பற்றிச் சொன்னீர்கள். அதை அனுமதிக்கச் சொல்லட்டும். (குறுக்கீடு)

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

சொன்னீர்கள். எனவே, இன்ஸ்டிட்யூஷன் பெயரைச் சொல்வதில் தவறில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார். நிரூபிப்பதற்கு (குறுக்கீடு) செல்ப் பைனான்சிங் கல்லூரிகள் கொள்ளை அடிக்கின்றன என்று சொன்னீர்கள். அதற்கு என்ன ஆதாரம்? (குறுக்கீடு) செல்ப் பைனான்சிங் இன்ஸ்டிட்யூஷன் பற்றி சொன்னீர்கள். அதற்கு என்ன ஆதாரம், அதை முதலிலே கொடுங்கள்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. க. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; அந்த நன்கொடை பற்றியும் நிரூபிக்கச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) பதில் கேட்கலாம். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும். உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கின்றார்கள். டைம் கொடுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். அவையிலே இல்லாதவர் ஒருவரைப் பற்றி குறிப்பாகக் குற்றச் சாட்டு சொல்கிறார். பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே 2, 3 நாட்கள் என்று நிர்ணயம் செய்து, அப்போது அவர்கள் அதை ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். அந்த கோரிக்கையை வைத்து அந்த மாணவியை இங்கே அழைத்துவந்து நேரடியாகச் சொல்ல வைப்பதற்குக்கூட நான் தயாராக இருக்கிறேன். எந்த வகையிலேயும் நிரூபிக்க முடியும். சம்பந்தப்பட்ட மாணவியை நான் கொண்டு வந்து நிறுத்து வதற்குத் தயாராக இருக்கிறேன். எதை வேண்டுமானாலும்





கேட்கலாம். பேசிக் கொண்டிருக்கின்றவர்கள் கட்டாயப் பணத்தினால் நிச்சயமாக சொல்கிறேன், அவர்கள் நியாயத்திற்கும் புறம்பாகத்தான் நடந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லவேண்டிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரையிலே, மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, வேளாண்மைக் கல்லூரியாக இருந்தாலும் சரி, அங்கே மெரிட்டிலேதான் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கு முன்னாலே ஒருகாலம் இருந்தது. ஒரு சீட்டுக்கு ரேட் பேசப்பட்ட காலம் எல்லாம் இருந்திருக்கிறது. இன்றைக்கு அந்த நிலை எல்லாம் மாற்றப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் தகுதியான மாணவர்களை, தகுதியான மாணவிகளைத்தான் சேர்த்தார்கள். அது மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, இந்த நிலைமைகள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடி இருக்கின்றார்கள். "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி, சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி" என்று பாடியிருக்கின்றார்கள். இன்றைக்கு கிராமப்புறத்திலே இருக்கின்ற தொடக்கப்பள்ளிகளிலே கல்வி நல்ல முறையிலே இருந்தால்தான் வளர்ந்துவருகின்ற சமுதாயத்தில் சின்னஞ்சிறார்கள் மேன்மையடைய முடியும். மேல் நிலைக் கல்வியாக இருந்தாலும் சரி, அது பட்டப்படிப்பாக இருந்தாலும் சரி, அவைகளை நல்லமுறையில் அவர்கள் பெற வேண்டும் என்பதைக் கருத்திலே கொண்டுதான் தொடக்கப் பள்ளியை விரிவுபடுத்துகின்றார்கள். நல்ல முறையிலே தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி கொடுக்கவேண்டும் என்பதற்காகவே ஆரம்பநிலைக் கல்விக்கு ஒரு இயக்குநர் அவர்களை; புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நியமித்திருக்கிறது. இப்படி பல்வேறு நிலைகளை இந்த அரசு கல்விக்காக ஏற்படுத்தி வரும்பணியாற்றி வருகின்றன. இன்றைக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், கொடுமுடி ஒன்றியத்திலே காமராயபாளையம் என்ற

[திரு. ச. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல் 8

இடத்தில் ஒரு நடுத்தரப் பள்ளி இருக்கிறது. அந்த நடுத்தரப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கித் தரவேண்டும் என்று அதற்காக அந்தப் பகுதி மக்கள் ரூ. 25 ஆயிரம் தொகை கொடுத்திருக்கிறார்கள். ஐந்து ஏக்கர் நிலத்தை இன்றைக்கு தயாராக வைத்திருக்கின்றார்கள். ஆகவே அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி தரவேண்டும். அதுபோலவே வளத்தூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே மொடக்குறிச்சி ஒன்றியத்திலே அவல்பூந்துறை பேரூராட்சியில் உள்ள இராட்டைசுற்றிபாளையத்திலேயும், எழுமாத்தூர் ஊராட்சியில் ஆனைக்கல்பாளையத்திலும் லக்காபுரம் ஊராட்சியில் சோலார்புதூரிலும் புதிதாக ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே ஈரோடு நகரைப் பொறுத்தவரை 3 ஆண்கள் கல்லூரியும் ஒரு பெண்கள் கல்லூரியும் இருக்கின்றன. ஆண்களுக்கு இடப்பற்றாக்குறை இருக்கின்றது. ஆகவே அரசின் சார்பிலே அங்கே ஒரு தலைக்கல்லூரி ஆரம்பித்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

(மாலை 5-50)

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கைக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 21 பெர்சன்ட் அதாவது 597 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதற்காகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக மத்திய அரசு கல்வியைப் பொறுத்தவரையில் சிறப்பாக செயல்பட்டதற்காக பரிசு பெற்றிருப்பதற்காகவும், நடப்பு ஆண்டில் 850 புதிய ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்தியிருப்பதற்காகவும், 100 பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியிருப்பதற்காகவும், ஆசிரியர்களுடைய பல்வேறு கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளில் 5 கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதற்காகவும் நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.



1987 ஏப்ரல் 8] [டாக்டர் ந. மாசிலாமணி]

அடுத்து, கல்வி மானியத்தைப் பொறுத்தவரையில் * விவாதம் நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இதையெல்லாம் பார்க்கும்போது இந்த அரசு கல்வி நலனில் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பதற்கு இது ஒன்றே சான்றாகும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது தவறான தகவல். * கல்வி மானிய விவாதம் நடைபெற்றதாகத் தகவல் இல்லை. அதிகாரிகளிடமும் கேட்டிருக்கிறேன். நீங்கள் சொல்வது தவறு. மூதறிஞர் காலத்திலும், பேரறிஞர் அண்ணா காலத்திலும், எப்போதுமே அவ்வாறு நடக்கவில்லை. இது ஹவுஸ் சம்பந்தப்பட்ட விஷயம். உறுப்பினர் சொல்லிய தகவல் சரியான தகவல் அல்ல. இன்று காலையிலும் மாலையிலும் என்று இரண்டு நேரமும் விவாதத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 20 உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். உறுப்பினர் சொன்னது ரெக்கார்டில் இருப்பது சரியில்லை. (குறுக்கீடு) கூடுதல் நாட்கள் விவாதம் வேண்டுமென்று கேளுங்கள், அது வேறு. பி.ஏ.சி.-யில் எல்லா கட்சித் தலைவர்களும் சேர்ந்து இன்னும் நாள் வேண்டுமென்று கேளுங்கள். தலைவர் அவர்கள் முடிவெடுப்பார்கள். அது சரியான முறை. ஆகவே, * சொன்னதை நீக்க வேண்டும் (குறுக்கீடு)

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்தை அதிக நாட்கள் வைத்திருந்தால் விவரமாகப் பேச வாய்ப்பு இருக்கும் என்பதால்தான் அவ்வாறு சொன்னேன். தவறான தகவல் அல்ல.

அடுத்து, ஆசிரியர்கள் நாடு தழுவிய போராட்டத்தை நடத்தினார்கள். 60 ஆயிரம் ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அரசிடம் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருந்தாலும் 5 கோரிக்கைகள்தான் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்ற கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டிருக்கலாம். காரணம் மற்ற கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகள் சம்பளத்தைப் பற்றியனவோ அல்லது

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பணத்தைப் பற்றியனவோ அல்ல. சிறையில் அவர்களை அடைத்ததால் ஆன செலவைக் கணக்கிட்டால் கூட அந்தப் பணத்தின் மூலமே அவர்களுடைய கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றியிருக்க முடியும். "ஆசிரியர் இன்று ஏங்கினால் நாடு நாளை தேங்கும்" என்று அண்ணா சொன்னார். ஆசிரியர்களைப் புறக்கணித்தால் வருங்காலத்தில் இந்த நாடே ஏங்கும் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகின்ற இந்த அரசு ஆசிரியர்களுடைய கோரிக்கைகளில் பலவற்றை நிறைவேற்ற வேண்டும். இன்றையதினம் ஆசிரியர்கள் கடற்கரையில் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

அன்றையதினம் "கார்த்திகேயன் ஒரு நபர் கமிஷன்" நியமிக்கப்பட்டபோது, ஆசிரியர்களுடைய கூட்டுக் குழு மாண்புமிகு முதலமைச்சருடன் விவாதம் நடத்தியபோது அன்றைக்கு சட்ட அமைச்சராக இருந்த இன்றைய கல்வி அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டார்கள். 3½ மணி நேரம் அன்றைக்கு விவாதம் நடைபெற்றது. அப்போது ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி விசாரிக்கின்ற ஒரு நபர் கமிஷன் மூலம், ஆசிரியர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் 'நான் இருக்கிறேன். நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் நானும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அன்றைக்கு அதிகமான கோரிக்கைகளைக் கேட்டார்கள். நிதித் துறை இல்லையென்று சொன்னது. ஆனால் 'கிடைக்கவில்லை என்றால்' என்று கேட்டபோது, 'அக்ரால் தி டேபிள்' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7 கோரிக்கைகளுக்கு ஏற்பு அளித்தார்கள். ஆகவே, அதுபற்றி நன்றி தெரிவித்து பத்திரிகைகளில் கூட வந்தது. எனவே, தற்போது நடக்கின்ற போராட்டத்தையும் அப்போதுள்ள நிலைமையையும் சம்பந்தப்படுத்தி பேசுவது உகந்ததல்ல.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. மீதியுள்ள கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரே ஒரு வாத்தியார் நாட்டை * அவர்கள் 3 லட்சம் வாத்தியார்கள் இருக்கிறார்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் அமருங்கள். (குறுக்கீடு) அத்தனை பேரும் ஒன்றாக எழுந்து நின்று பேசலாமா? அமருங்கள். அவர்கள் பேசியதும் தவறு; நீங்கள் பேசியதும் தவறு. யாரும் பேசக் கூடாது. (குறுக்கீடு) அதை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டாம், இருக்கட்டும். இதே வேலையா, பேச வேண்டியது, எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டியது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வாத்தியார் நாட்டை * என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை நீக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * என்ற வார்த்தையைச் சொல்ல வேண்டாம். அந்த ஒரேயொரு வாத்தியார்தான் தமிழ் நாட்டிலேயே சிறந்த வாத்தியார்; அதைத் தெரிந்து கொள்ளுங்கள். வேறு வாத்தியாரே இல்லை. நீங்களெல்லாம் மாணவர்கள்தான்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, * என்பதை நீக்கிவிடுங்கள்; ஆட்சி படைக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நல்லாட்சி படைக்கிறார் என்று ஏற்றுக்கொள்ளுங்கள்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாத்தியார் அவர்கள் நல்லாட்சி படைக்கிறார் என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 ஏப்ரல் 3

தமிழகத்திலே ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாசாரத்தைப் பார்க்கின்றபொழுது தமிழகத்திலே உள்ள ஆசிரியர்களுடைய எண்ணிக்கை 2,91,000. மாணவர்களுடைய எண்ணிக்கை 112 லட்சம். தமிழகத்தினுடைய ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாச்சாரம் 1 : 35 என்று இருக்க வேண்டும். உளவியல் நிபுணர்களின் கூற்றுப்படி ஒரு வகுப்பிலே 20 மாணவர்கள் படித்தால், அப்பொழுது தான் மாணவர்கள்மீது தனிக்கவனம் செலுத்தி, கல்வியின் பயனைப் பெற முடியும் என்று சைக்காலஜியிலே உலக வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தின் கணக்குப்படியே 1 : 35 என்ற விகிதாச்சாரத்தைக் கணக்கில் கொண்டால் கூட, இன்னும் 40,000 ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். ஆனால் இன்றையதினம் 850 ஆசிரியர்களைத்தான் நியமனம் செய்ய இருக்கிறார்கள். எனவே, பணிவோடு இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும்படியாக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூடம் கட்டுவதற்காக சுமார் 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது குறிப்புப் புத்தகத்திலே. தமிழகத்திலே 40,000 பள்ளிகள் இருக்கின்றன. ஒரு பள்ளிக்கு ஒரு கட்டிடம் என்று சொன்னால்கூட, 75 இலட்சம் ரூபாயில் சுமாராக 100 கட்டிடம் என்று கட்டினாலும்கூட 40,000 பள்ளிகளுக்கும் கட்டுவதற்கு இன்னும் 400 ஆண்டுகளாகும். மதியம் சாப்பிட்டு இரவே தெரிகின்ற திட்டங்களைப் போடுகிறோம். இல்லையென்றால் 400 ஆண்டுகளில் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைத்தான் நாம் போடுகிறோம்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா நகரில் அண்ணா டவர் பார்க் என்ற ஒன்று இருக்கிறது. அதற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்து அழகுபடுத்துவதற்காக தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு பார்க்கை அழகுபடுத்துவதற்கு ஒரு கோடி ரூபாய் . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா நகரிலே இருக்கின்ற பார்க் ஸ்டேட் சப்ஜெக்ட். கல்வி என்பதை கன்கரன்ட் லிஸ்டுக்கு மைய அரசு



1987 ஏப்ரல் 3] [திரு. சி. பொன்னையன்]

எடுத்துச் சென்றபிறகு மைய அரசினுடைய பொறுப்பு, மாநில அரசுகளுக்கு கல்விக்கு நிதி தர வேண்டுமென்பதை எல்லோரும் வலியுறுத்தி வருகிறோம். காங்கிரஸ் மாநிலங்கள்கூட வலியுறுத்தி வருகின்றன, மைய அரசு நிதி தருவதைப் பொறுத்துத்தான் அந்தத் திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியும் என்பதை அகில இந்திய கல்வியமைச்சர்கள் மாநாட்டிலே தெளிவுபடுத்தி, மாண்புமிகு மைய கல்வியமைச்சரவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையெல்லாம் பள்ளிக் கட்டிடம் தமிழகத்திலே உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் தேவை என்ற நிலை இருக்கிறது என்பதுதான். இங்கே பேசிய உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் பள்ளிக்குக் கட்டிடம் வேண்டுமென்று பேசினார்கள். எனவே, அதிக அளவில் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குறிப்புப் புத்தகத்திலே தருகின்றபொழுது 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களின் தொகை 73,28,000. 9 முதல் 10-வது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 9,70,000. 11 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 3,62,000. இந்த எண்ணிக்கையைப் பார்க்கின்றபொழுது 1 முதல் 5-வது வகுப்பு வரையிலே 100 மாணவர்கள் படிக்கிறார்கள் என்று சொன்னால், 11-வது, 12-வது வகுப்பில் ஐந்தே மாணவர்கள்தான் படிக்கிறார்கள் என்று ஆகிறது. எனவே, 1 ஆம் வகுப்பிலே சேர்ந்த 100 மாணவர்களிலே 95 மாணவர்கள் இறுதி வகுப்புக்குப் போகாமல் எங்கே போனார்கள் என்பதைத்தான் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். பள்ளியிலே சேர்ந்து தொடர்ந்து படித்து, கடைசி வரையில் படித்து வெளியேறுவதற்கு வேண்டிய வகைகளை இந்த அரசு செய்யும்படியாக இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள 56 கல்வி மாவட்டங்களில் 51 கல்வி மாவட்டங்களில் மட்டும் அறிவியல் கூடம். அதாவது நடமாடும் அறிவியல் கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

[1987 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கவேலு அவர்கள் உட்கார வேண்டும். ஒரு உறுப்பினர் பேசும்பொழுது எழுந்து நிற்பதே சரியல்ல. Follow some procedure (குறுக்கீடு) எனக்குத் தெரியும். கொஞ்சம் விளையாட்டாக எதுவும் பண்ண வேண்டாம். திரு. மாசிலாமணி அவர்கள் முடித்துவிட வேண்டும்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** இன்னும் நிறைய இருக்கிறது.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு தலைவரவர்களே, நான் பேசக்கூடாதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அமருங்கள். 597 கோடி ரூபாய் மானியம். எவ்வளவு ரூபாய் மக்களுக்குப் போகிறது ? கட்டிடத்திற்கு ஒரு ரூபாய் இல்லை. எதைப் பெரிதாகப் பேசப் போகிறீர்கள் ? திரு. மாசிலாமணி, பேசி முடித்து விடுங்கள்.

(இரவு 6-00)

**டாக்டர் ந. மாசிலாமணி :** தலைவரவர்களே, இந்தக் குறிப்புப் புத்தகத்தில் இருப்பதை வைத்துதான் சொல்கிறேன். கல்வி மாவட்டத்தில் செயல்படும் நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூடத்தில் ஒரு டிரைவர், ஒரு கிளீனர், ஒரு இன்ஸ்பெக்டர்தான் இருக்கிறார்கள். கூடுதலாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். ஊழியர்கள் போதாமையால் பல கல்வி மாவட்டங்களில் இந்த ஆய்வுக்கூடம் செயல்படவில்லை. குறிப்பாக அரியலூர் கல்வி மாவட்டத்தில் நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூடம் செயல்படாமல் இருக்கிறது.

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஆசிரியர்களுக்கு இன்சர்வீஸ் ட்ரெயினிங் கொடுக்க வேண்டும். மாறிவரும் பாடத் திட்டங்களை அவர்கள் அறிந்து, அதிலே பயிற்சி பெற்று நல்ல முறையில் கல்வி கற்பிக்க 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் அவர்களுக்கு இன்சர்வீஸ் ட்ரெயினிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஃபஸ்ட் எய்டு பாக்ஸ், டேப் ரிக்கார்டர், வானொலிப் பெட்டி கண்டிப்பாக இருக்க வேண்டும். பள்ளிகளில் சுகாதாரக் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது). என்னுடைய தொகுதிபற்றி குறிப்பிட ஒரு நிமிடம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொகுதி இல்லை என்றால் நீங்கள் இங்கே வரமுடியாது. ஆகையால் தொகுதியைப்பற்றி முதலிலே பேசியிருக்க வேண்டும்; கடைசியாக தொகுதியைப் பற்றி பேசும் நிலையை ஏற்படுத்தக்கூடாது. இப்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள். (குறுக்கீடு) அதற்குப் பின்னால் வாய்ப்புத் தருகிறேன்.

**5. விதி 110 (1)-இன்கீழ் அமைச்சர்களின் அறிக்கை—தொடர்ச்சி.**

**(ஆ) சென்னையில் மின்தடங்கல் ஏற்பட்டது குறித்து.**

The Hon. Thiru V. V. SWAMINATHAN: Mr. Speaker, Sir, at 3-15 p.m. the Neyveli-Singarapet 230 KV line carrying a load of 160 MW tripped on "fault". This caused the overloading of Neyveli-Villupuram 230 KV line which also tripped. Because of the tripping of these two lines the power flow to Salem, Coimbatore area got diverted *via* Tiruchirappalli, Madurai and Udumalpet. This caused the overloading of the Madurai—Udumalpet 230 KV feeder which tripped. The Madras, Salem, Arni, Villupuram areas got separated from the southern part of the Grid. The generation at the Kalpakkam Atomic Power Project (440 MW) and Ennore Power House (220 MW) was not enough to meet the load of Madras, Arni, Salem, Villupuram areas. Consequently the generators at Kalpakkam and Ennore tripped on overload. This resulted in power failure to Madras City, Villupuram, Arni and Salem. Supply to Arni and Korattur was restored at 15-45 hours. Supply to the City loads were normalised by 16-00 hours. I am sorry for the inconvenience caused to the consumers.

**6. வரவு-செலவுத் திட்டம் 1987-88 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி.**

**டாக்டர் ந. மாசிலாமணி :** என்னுடைய தொகுதியில் சுய நிதி பாலிடெக்னிக் ஒன்றும், எஞ்சினீயரிங் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுய நிதி பாலிடெக்னிக், கல்லூரி நடத்துகிறவர்கள் எல்லாம் பணம் வாங்குகிறார்கள், கொள்ளையடிக்கிறார்கள் என்று நீங்களே பேசியிருக்கிறீர்கள். ஆகையால் அதுபற்றி கேட்கக்கூடாது;

**டாக்டர் ந. மாசிலாமணி :** தலைவரவர்களே, நல்ல நிர்வாகம் உள்ள அரசு கல்லூரி தொடங்க வாய்ப்பு இல்லாத காரணத்தால் இதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுய நிதி கல்லூரி திறக்க வேண்டுமென்று நீங்கள் கேட்காதீர்கள்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** தலைவரவர்களே, அரசு எஞ்ஜினியரிங் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விக்ரமங்கலம், நாயகனைபிரியாள், கோடாலிகருப்பூர், உதயநத்தம், சித்தமல்லி போன்ற இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் புதிதாகக் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீன்சுருட்டி, சித்தமல்லி ஆகிய இடங்களில் கிளை நூலகங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உடையார்பாளையம் தாலுகாவில் பிரைவேட் காண்டிடேட்ஸ் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் டூ தேர்வு எழுதுவதற்கு சென்டர் இல்லை. அவர்கள் எல்லாம் அரியலூருக்குச் சென்றுதான் இந்தத் தேர்வுகளை எழுதவேண்டியிருக்கிறது. மிகவும் கஷ்டமாக இருப்பதால் உடையார்பாளையத்திலேயே ஒரு மையத்தைத் திறந்து, வருகின்ற அக்டோபரில் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் டூ தேர்வு அங்கே எழுதுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கமிஷனர் அண்ட் செக்ரட்டரி, எஜுகேஷன் டிப்பார்ட்மென்ட் அவர்கள் கொடுத்திருக்கிற ஒரு அறிக்கையை இங்கே படிக்கிறேன்.

"Self-financing institutions are therefore requested to collect the fees on par with the Government Engineering Colleges. They should not also collect any items of fees other than these.

Government Engineering Colleges may also be requested to exempt the Scheduled Caste/Scheduled Tribe students selected under the Government quota from payment of caution deposits as per the



pre-conditions for admission attached to these institutions. Serious view will be taken by the Government against the Institutions which, despite this appeal fail to adhere to the above instructions and severe action will be taken". . . என்று கமிஷனர் அண்ட் செக்ரட்டரி அந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள்.

எனது தொகுதியைச் சேர்ந்த ஒரு ஏழை மாணவன், அவன் பெயர் பார்த்திமலை ராஜா என்பது. அவன் ஒரு ஏழை விதவைத் தாயின் மகன். அந்த ஏழை விதவைத்தாய் தனக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டு அன்றையதினம் ஒரு சுயநிதி கல்லூரியில் பணத்தைக் கட்டியிருக்கிறார். அவருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதனால்தான் சொன்னேன், அதைக் கேட்கவேண்டாம் என்று. பின்னால் எல்லோரும் கேட்க வேண்டிய நிலை வந்துவிடும். அது வேண்டாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** தலைவரவர்களே, அரசு விதி முறைக்கு உட்பட்டு சில இனங்களில் வசூல் செய்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. 4,000 ரூபாய் வசூல் செய்திருக்கிறார். ஒரு ஏக்கர் நிலத்தை விற்று அந்த ஏழைத் தாயார் பணத்தைக் கட்டியிருக்கிறார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எல்லாம் அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். இது பெரிய பிரச்சினை அல்ல.

**டாக்டர் ந. மாசிலாமணி :** அந்தக் கல்லூரி முதல்வரை நான் சந்தித்தேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போதும், முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இதோடு முடித்துவிடுங்கள். இவ்வளவு நேரம் கிடைத்தது என்று திருப்திகரமாக அமருங்கள். அடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு ஆக்கத் திட்டங்களை கடந்த 10 ஆண்டுக் காலமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்த காரணத்தால் தற்போது எழுத்தறிவில் இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தைப் பெற்று தமிழ்நாடு கல்வி வளர்ச்சியில் சிறப்புற்று இருக்கிறது.

இந்த அவை ஏற்கெனவே அறிந்தவாறு 597 கோடி ரூபாய் கல்வி மானியத்தின்கீழ் கோரப்பட்டிருக்கிறது. கல்வி சம்பந்தப்பட்ட மற்ற மானியக் கோரிக்கைகளின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையையும் சேர்த்துக் கணக்கிட்டால் 734 கோடி ரூபாய், அதாவது தமிழ்நாட்டின் மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 25 சதவீதத்தை கல்விக்காக இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு பிரிவுகளில், அதாவது பள்ளிக்கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, பொது நூலகங்கள் இப்படி பல்வேறு பிரிவுகளில் ஆக்கப்பணிகள் பலவற்றை நிறைவேற்றி இருப்பதைப் பொறுத்தவரையில் இங்கே அவையிலே வைக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள்.

பள்ளிக் கல்வித் துறையிலே 1976 ஆம் ஆண்டு வாக்கில் வயது 6 முதல் 11 வரை தமிழகத்தில் பள்ளியில் சேர்ந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 90 சதவீதமாக இருந்தது தற்போது 100 சதவீதத்தைத் தாண்டிய நிலையில் உயர்ந்து இருக்கிறது. அதேபோல் வயது 11 முதல் 14 வரை உள்ளவர்கள்—6-வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரை சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 1976 ஆம் ஆண்டு 52 சதவீதமாக இருந்தது தற்போது 79.73 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது.

14 முதல் 16 வயது வரை உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை 1976 ஆம் ஆண்டில் 33 சதவீதமாக இருந்தது. அது தற்போது 52.85 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. இவையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் 'டிராப் அவுட்ஸ் ஃப்ரம் தி ஸ்கூல்ஸ்'—அதாவது பள்ளிகளில் சேர்ந்து இடையிலே நின்றுவிடுகிற குழந்தைகளின் எண்ணிக்கை 1976 ஆம் ஆண்டு வாக்கில்



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

42 சதவீதமாக இருந்தது, தற்போது 22 சதவீதமாகக் குறைந்து இருக்கிறது. மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பி இருக்கிற 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் தாக்கீது அடிப்படையில் பார்த்தால் 6 முதல் 11 வயது வரையிலான குழந்தைகளின் பள்ளிச்சேர்க்கை எண்ணிக்கை 1990 ஆம் ஆண்டு வாக்கில் 100 சதவீதத்தை அடையவேண்டும் என்றும், 11 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கை எண்ணிக்கை 1990 ஆம் ஆண்டு வாக்கில் 75 சதவீதத்தை அடைய வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1986-87-லேயே மத்திய அரசு, மாநில அரசுகள் அடையவேண்டுமென்று கோடிட்டுக் காட்டியிருக்கிற இலக்கை அடைந்துவிட்டது என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான காரணங்களை அவை அறியும்.

மூன்று முன்னோடித் திட்டங்கள் ஏழைக் குழந்தைகளின் நலன் கருதி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலேதான் முதல் முறையாக நடைமுறைக்குக் கொண்டு வந்த காரணத்தால் இந்த சிறப்பு தற்போது தமிழகத்திற்குக் கிட்டி இருக்கிறது. ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு என்ற முறையில் ஆண்டுக்கு 175 கோடி ரூபாய் செலவில் சுமார் 88 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவை அளித்தது நல்ல பலனைத் தந்திருக்கிறது. டிராப் அவுட்ஸ் இதனால் குறைந்திருக்கிறது.

ஒன்றிலிருந்து எட்டாவது வகுப்பு வரை பயிலும் 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூபாய் 15 கோடியில் பள்ளிச் சீருடைத் திட்டத்தைத் தருகிற காரணத்தாலும், 1 முதல் 8 வரை பயிலும் 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியருக்கு 12 கோடி ரூபாய் செலவில் இலவச பாடப்புத்தகங்கள் தருவதன் காரணத்தாலும், அதுமட்டுமல்லாமல் 5 இலட்சம் குழந்தைகளுக்கு காலணிகளும் வழங்குகிற திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்த காரணத்தால் பள்ளிகளில் சேர்ந்து இடையிலே நின்றுவிடுகிற குழந்தைகளின் எண்ணிக்கை இந்த அளவுக்கு தற்போது

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

குறைந்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் முதல் முறையாக கல்வியிலே ஒரு நடைமுறை மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு 1983 ஆம் ஆண்டு லைஃப் ஓரியன்டட் எஜுகேஷன், அதாவது வாழ்க்கைக் கல்வித் திட்டத்தைத் தமிழகத்தில்தான் நாம் கொண்டு வந்தோம். தற்போது மத்திய அரசு அகில இந்திய அளவில் மாநிலங்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்று கூறுவது என்னவென்றால் புதிய கல்விக் கொள்கையான வாழ்க்கைக் கல்வித் திட்டத்தை அதாவது வொகேஷனல் எஜுகேஷன் என்று சொல்கிற தொழில் கல்விப் பாடத்திட்டத்தை மத்திய அரசு வலியுறுத்துகிறது. ஆனால் 1983 ஆம் ஆண்டிலே அந்தக் கல்வித் திட்டத்தை தமிழகத்திற்குக் கொண்டு வந்து 1984-85-லே 660 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 1 லட்சத்து 16 ஆயிரம் மாணவர்கள் பயன் அடைகிற வகையில் லைஃப் ஓரியன்டட் எஜுகேஷன் என்று சொல்லக் கூடிய வாழ்க்கைக் கல்வித் திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முறையாக நாம் நடைமுறைப் படுத்தியிருக்கிறோம்.

(இரவு 6-10)

அதைப்போலவே 1985-86 ஆம் ஆண்டிலே மேல்நிலைக் கல்வித் திட்டத்தில், மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1,599 பள்ளிகளில் 1,251 மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வித் திட்டத்தை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். மைய அரசு புதிய கல்வித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்த வொகேஷனல் கல்வித் திட்டத்தை இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த மாநிலமும் இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. ஆனால், முன்னோடி திட்டமாக அது ஏற்கெனவே நடைமுறையிலே தமிழகத்திலே கொண்டு வரப்பட்டிருந்த காரணத்தாலே—ஏற்கெனவே அது 1,251 பள்ளிகளில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது—இந்தத் திட்டத்தின் மூலம் 1 லட்சத்து 61 ஆயிரம் மாணவ மாணவியரில் 81,700 மாணவ மாணவியர்கள் வேளாண்மை மனையியல் மற்றும் பொறியியல் போன்ற பல்வேறு வொகேஷனல் எஜுகேஷன் முறையில் துணைப் பாடங்களாகப் படிக்கக் கூடிய வாய்ப்பை இந்தியத் துணைக்



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

கண்டத்திலேயே முதன் முறையாக நம்முடைய தமிழகத்திலே தான் கொண்டு வந்திருக்கிறோம். அதைப்போலவே 1986 ஆம் ஆண்டினுடைய தேசிய கல்விக் கொள்கையை வலியுறுத்தி சுமார் 10 சதவீத மேல்நிலைப் பள்ளிகளில் 1990 ஆம் ஆண்டு வாக்கிலே 75 சதவீத மாணவர்கள் துணைக் கல்வித் திட்டத்தைப் படிக்க வேண்டும் என்று மைய அரசு மாநில அரசுகளுக்கு நாக்கீது அனுப்பியிருக்கிறது. ஆனால் 1986 ஆம் ஆண்டிலேயே, 1990-வது ஆண்டிலே அடைய வேண்டிய 75 சத இலக்கை தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் எட்டி இருக்கிறது. மாநில அரசினுடைய வருவாயைக்கொண்டே அந்தத் திட்டத்தை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதைப்போலவே கல்விக் கொள்கையில் நடைமுறைப்படுத்துவதில் நடைமுறையில் இருந்து வருகிற கல்விக் கொள்கையை மாற்றி புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. அதற்கு டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களுடைய தலைமையில் பல்வேறு வல்லுநர் சேர்ந்த ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையின்படி புதிய கல்விக் கொள்கையை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தக் கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மாணவர்களிடத்தில் ஒழுக்க உணர்வைப் போதிப்பதும், அதோடு கடந்த காலத்தில் இல்லாத தொழில் கல்வியை ஆராய்வது போன்ற திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது. தற்போது நடைமுறையில் இருந்து வருகிற கல்வியைப் பொறுத்தவரைக்கும் பை-ஹார்ட் என்று சொல்லக் கூடிய மனனம் செய்து [illegible] வேண்டிய பாடத்தில் மாணவர்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. மாணவர்களின் சொந்த [illegible] தாண்டி விடக்கூடிய அளவுக்கு கல்வி முறை தற்போது இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கேயும் இல்லை. நம் நாட்டை வெள்ளைக்காரன் ஆண்டபோது கிளார்க்குகள் [illegible] [illegible] பலரை உருவாக்கும் கல்வி முறையைக் கொண்டு வந்திருந்தான். [illegible] 40 ஆண்டுகள் ஆனபின்பும் இந்தியத் துணைக் கண்டத்தில் [illegible] [illegible] நிலை என்பதை இந்த

அரசு உணர்கிறது. அதை மனதிலே கொண்டு 1983-ஆம் ஆண்டிலேயே, பள்ளிப்படிப்பை முடித்து விட்டு ஒரு மாணவன் வெளியே வரும்போது அவன் ஏதாவது வேலை வாய்ப்பை அடையக் கூடிய அளவுக்கு, அந்தக் கல்வி அமைய வேண்டும். இன்றேல் அவன் சுய வேலைத் திட்டத்தை நாடினானானால், அதற்கு வழி வகுக்கக் கூடிய அளவுக்கு பிராக்டிகல் டிரெயினிங் என்று சொல்லக் கூடிய அளவுக்கு அந்தக் கல்வி முறை அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த இந்த அரசு இந்த மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

அப்போதுதான் தொழில் நுட்பக் கல்வி என்ற முறையிலே வொகேஷனல் எஜுகேஷன் முறையை கல்வி முறையிலே கொண்டு வருவதற்கு டாக்டர் வி.சி.டி. தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. 1983-லே ஆய்ந்து கொண்டு வந்த அறிக்கையைப் பார்த்து விட்டு, டாக்டர் வி.சி.டி. அவர்களையே மைய அரசும் நியமித்து ஒரு குழு அமைத்து, டாக்டர் வி.சி.டி. அவர்கள் கொடுத்த அந்த அறிக்கையினுடைய அடிப்படையிலேதான் தற்போது அனைத்து மாநிலங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது. அந்த முறையிலே கல்வியில் ஒரு மாற்றத்தை உருவாக்க தற்போது இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இங்கே இதிலே ஒரு முக்கியமான பிரச்சினை, பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையிலும் பல்வேறு கட்டங்களில் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தக் குறிப்பில் ஆசிரியர்கள் எண்ணிக்கை பெருக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு கட்டங்களில் உயர்த்த 91 ஆயிரம் ஆசிரியர் பெருந்தகைகள் பணியாற்றி வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருகிறபோது பல மாற்றங்களைச் செய்ய மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை தந்துள்ளது. இந்த அரசு அவற்றை ஏற்று நடைமுறைப்படுத்தியிருக்கிறது. உதாரணமாக 11-வது, 12-வது என்ற நிலையில் இருப்பவர்களுக்கு போஸ்ட் கிராஜுவேட் குவாலிபிகேஷன் உள்ள, குறிப்பாக விஞ்ஞானப் பாடத்தில் அந்தத் தகுதியுடையவர்களை ஆசிரியர்களாக அமர்த்துகிறபோதுதான் புதிய கல்வியினுடைய உயர்ந்த தரத்தை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய திறமை



அந்த ஆசிரியப் பெருந்தகைகள் பெறுகிறார்கள். அதைப்போல 9-வது, 10-வது ஆகிய வகுப்புகளுக்கு மாணவர்களுக்கு பாடங்களைச் சொல்லிக் கொடுக்க, புதிய கல்விக் கொள்கையின் உயர்ந்த தரத்தைச் சொல்லிக் கொடுக்க ஆசிரியர் பெருந்தகைகளுக்கு விஞ்ஞானப் பாடங்களுக்கு குறைந்தபட்சம் பி.எட். தேவைப்படுகிறது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல 6-லிருந்து 8-வது வரைக்கும் செகண்டரி கிரேட் டீச்சர்களை வைத்து நாம் சொல்லிக் கொடுக்கிறோம். ஆனால் செகண்டரி கிரேட் டீச்சர்ஸ் 10-வதுக்கு மேல் இரண்டு ஆண்டு படிப்பைப் படித்து அவர்கள் 6-லிருந்து 8-வரைக்கும் உள்ள மாணவர்களுக்கு படிப்பைச் சொல்லிக் கொடுக்கிற நிலை இருக்கிறது. தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிற புதிய கல்விக் கொள்கையை பொறுத்தவரையிலும் போஸ்ட் கிராஜுவேட்ஸ் கூட அந்தக் கல்வியைச் சொல்லிக் கொடுக்க முடியுமா என்ற அளவிற்கு அந்தப் பாடம் அதிகமாக இருக்கிறது. என்.சி.இ.ஆர்.டி. என்ற மத்திய அரசு அமைப்பு வைத்திருக்கிற பாடத்திட்டங்களையும் ஆறாவது, ஏழாவது வகுப்புகளில் தற்போது சி.பி.எஸ்.சி.யில் இருக்கிற பாடத்திட்டங்களையும் எம்.எஸ்ஸி. படித்தவர்களே சொல்லிக் கொடுக்க தடுமாறுகிற அளவிற்கு அதனுடைய தரம் உயர்த்தப்படுகிறது.

அகில இந்திய அளவிலே உயர்ந்த பாடத்திட்டம் நடைமுறைக்கு வருகிறபோது தமிழகம் இதிலே பின்தங்கி விடக் கூடாது என்பதற்காக இந்த 6-விலிருந்து 8-வது வரைக்கும் தரம் உயர்ந்த கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வருகிறபோது அந்த 6-வதிலிருந்து 8-வது வரையில் இருக்கிற இடங்களுக்கு பி.எட். பட்டதாரிகளை, குறிப்பாக விஞ்ஞானப் பாடங்களுக்குப் போடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது. மத்திய அரசினுடைய கல்விக் கொள்கையை ஒட்டி இதைச் செய்திருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் 6-வதிலிருந்து 8-வது வரையில் ஏற்கனவே இருந்து வருகிற ஆசிரியர் பெருந்தகைகளுக்கு இழப்பு ஏற்படாமல் இருப்பதற்காக அவர்கள் ஒன்றிலிருந்து ஐந்து வரையில் இருக்கிற வகுப்புகளுக்கு பணியாற்றுகிற நிலையை உருவாக்கி, அந்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களில் டிகிரி ஹோல்டர்களாவது இருப்பார்களானால் அவர்களுக்கு

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

புதவி உயர்வு கொடுக்கக் கூடிய நிலையை அரசு மேற்கொண்டு இந்த மாற்றங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது. அதைப்போல எஸ்.சி.இ.ஆர்.டி., என்ற அமைப்பு மத்திய அரசினுடைய தாக்கீதுக்கு ஏற்ப செயல்படுகிறது. என்.சி.இ.ஆர்.டி., என்பது மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இருக்கிற அமைப்பு. அதை ஒட்டி பாடத் திட்டங்களை மாற்ற உருவாக்கப்பட்டிருக்கிற மாநில அமைப்பு இந்த எஸ்.சி.இ.ஆர்.டி., ஆகும். அந்த எஸ்.சி.இ.ஆர்.டி. அமைப்பு இந்தப் பாடத்திட்டங் களை தற்போது மாற்றியமைக்க, ஒன்றிலிருந்து 12-வது வரைக்கும் பாடத்திட்டங்களை மாற்றியமைக்க சில ஆலோசனை களைத் தந்தது. ஆனால் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் உள்ள குழு எஸ்.சி.இ.ஆர்.டி., பிரதிநிதிகளைக் கொண்டு இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தரமுள்ள விஞ்ஞானத் தொழில் நுட்ப அடிப் படையிலான கல்வி அறிவை, அதேநேரத்தில் 80 சதவீதம் மக்கள் வாழ்கிற கிராமப்புறப் பொருளாதாரத்தை எந்த அளவிற்கு அந்தக் கல்வி மூலமாகப் பெருக்குவது என்ற நிலையைக் கருத்தில் கொண்டு, அந்தக் கல்வி முறையை மாற்றியமைக்க அரசு ஆணையிட்டு அந்தக் குழு அந்தப் பணியை தற்போது மேற்கொண்டிருக்கிறது.

What is the man-power needed for the next one decade? அடுத்த பத்தாண்டு காலத்திற்கு தேவையான மனித வளம் என்னவென்பதை ஆராய்ந்து, அந்த மனித வளத்திற்கு ஏற்ப வேலை வாய்ப்பை உருவாக்க, அல்லது சுய வேலையைப் பெருக்க அல்லது கிராமப்புறப் பொருளாதாரத்தை செம்மையுறச் செய்ய படிப்பு அந்த முறையில் அமைய வேண்டும் என்பது தான் மத்திய அரசினுடைய நோக்கமும், இந்த அரசினுடைய நோக் கமும் ஆகும். அந்த முயற்சியில் தற்போது ஸ்டேட் பிளானிங் கமிஷன் மூலமாக, மாநில திட்டக் குழுவின் மூலமாக அரசினுடைய பல்வேறு துறைகளைத் தொடர்பு கொண்டு, பல்கலைக் கழகங்களைத் தொடர்பு கொண்டு அத்தகைய கல்வி முறையை நாட்டிற்கு நாம் கொண்டு வருவோமானால் உடனடி யாக வேலை வாய்ப்பு கிடைத்து சுய வேலைக்குச் செல்கிறபோது, அதற்குரிய பயிற்சியை பாடத் திட்டங்கள் மூலமாகத் திட்ட [illegible]லாமென்று கருதி அதனை நடைமுறைக்குக் கொண்டுவர



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

அந்தக் குழு தற்போது ஆய்வு நடத்தி வருகிறது. தற்போது நடப்பாண்டில் 10-வது முடித்துவிட்டு 11, 12-வது வகுப்பிற்கு போகிறபோது

the students have to choose either Biology or Mathematics என்று இருக்கிறது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையி லும் 11-வது, 12-வது பாடங்களில் மாணவர்கள் பயாலஜியை எடுத்துக் கொள்ளலாம்; அல்லது மேத்தமேடிக்ஸை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இரண்டு ஆண்டுகள் அவர்கள் படிக்கிறபோது எதிலே அவர்களுக்கு ஆப்டிடியூட்—அதாவது ஆர்வம் இருக்கிறதோ அந்த ஆர்வத்தின் அடிப்படையில், எதில் எண்ணிக்கை அதிகமாகப் பெறுகிறார்களோ, அதற்கேற்ப அவர்கள் மேல்படிப்புக்குச் செல்லும் வாய்ப்பு உருவாக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் இந்த இரண்டும் தனித்தனியாக ஆக்கப்பட்டிருக் கிறது என்ற நிலையை மாற்றி தற்போது பயாலஜி, மேத்தமேடிக்ஸ் இரண்டுமே 11-வது, 12-வது மாணவர்கள் படிக்கும் வாய்ப்பை உருவாக்கவும், 12-வதுக்குப் பிறகு அவர்கள் பயலாஜிக்குச் செல்வ தென்றால் செல்லலாம் அல்லது மேத்தமேடிக்ஸிற்கு வைட் ஸ்கோப் இருக்கிறதால் அதற்கும் செல்லும் வாய்ப்பை உருவாக்கக் கூடிய அளவிற்கு அந்த முறையில் நடவடிக்கையை அரசு தற்போது எடுத்திருக்கிறது.

(இரவு 6-20)

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் பொறுத்தவரைக்கும், துல்லிய மாகக் கணக்கிட்டுப் பார்த்ததில் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணுவதுபோல் அந்த அளவிற்குப் பற்றாக்குறை இல்லை. ஓர் அளவிற்கு, இந்த ஓராசிரியர் பள்ளி என்ற நிலையில் இருப்பதை எல்லாம் மாற்றுகிறபோது, ஆசிரியர்கள் அதிகப்படியாகத் தேவைப்படுகிறது. இந்த புதிய கல்விக் கொள்கையினுடைய [illegible] நாம் 1988-89-லேயிருந்து ஈடேற்றுகிறபோது தற்போது இருக்கிற ஆசிரியர்களுக்கு பயிற்சி இன்னும் அதிகமாகத் தர வேண்டும். அதிகமாக விஞ்ஞானப் படிப்பிலே பட்டம் பெற்றவர் களைக் கொண்டு வரவேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், [illegible]யெல்லாம் கருத்தில் கொண்டு, ஆசிரியர்களுடைய பிரச்

சினையை எப்படி தீர்க்கவேண்டும் என்பதற்கு அரசு ஆய்ந்து வருகிறது. விரைவிலே அதுகுறித்து நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்தவரைக்கும், போதிய நிதி இல்லை என்ற குறையை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது எடுத்துச் சொன்னார்கள். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. கிட்டத்தட்ட இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த நேரத்தில், 1976 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை கட்டிடத்திற்காக வெறும் 23 லட்சம் ரூபாய். ஆனால் 1986-87 ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை 4 கோடியே 80 லட்சம் ரூபாய். இது போதும் என்று நான் சொல்லவில்லை. இன்னும் அதிகப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. சில கட்டிடங்களில் சில நடவடிக்கைகளை அவ்வப்போது அரசு எடுத்து வருகிறது. உதாரணமாக பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் கழிப்பறை வசதிகளை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று தற்போது 5 கோடி ரூபாய் நிதியைக் கூட இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம்—இருக்கிற பிரச்சினை என்ன என்பதை அவையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

1985 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களும், 1986 ஆம் ஆண்டில் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களும் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்ட பிறகு, தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு அவற்றை ஈடேற்றுவதற்காக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக தமிழகத்தில் மட்டுமே கொண்டுவரப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 30 கோடி ரூபாயை பிரத்யேகமாக 3 ஆண்டுக் காலத்தில் ஒதுக்கி பல்வேறு பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அதைப் போலவே கிட்டத்தட்ட 4,500 பள்ளிகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டு இருக்கின்றன. தேசிய ஊரகத் திட்டத்தை வைத்துக் கூட—மைய அரசு உதவியை வைத்துக்கூட— 1½ கோடி ரூபாய்ச் செலவிலே பல இடங்களில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட இந்த



அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எனவே இருக்கிற பிரச்சினையை அவை உணரவேண்டும். குறைந்தபட்சமாக 9-வதிலிருந்து 12-வது வரை இருக்கிற பள்ளிகளுக்கு the minimum needed building facilities என்று சொல்லக்கூடிய குறைந்தபட்ச கட்டிடத் தேவையைப் பெறவேண்டும் என்றாலும்கூட, தற்போது உள்ள நிலவரப்படி, எடுத்த எடுப்பிலேயே 250 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. அதையடுத்து, தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில், குறைந்தபட்சம்—இந்த தொடக்கப் பள்ளிகளில் 5 கிளாஸ், 6 கிளாஸ், 7 கிளாஸ், 8 கிளாஸ் எல்லாம் இருக்கிறது—2 வகுப்பறைகளைக் கட்டித் தரவேண்டும் என்ற முடிவை எடுத்தாலும் கூட—இப்போது 2, 3 வகுப்பறைகள் இருக்கின்றன—250 கோடி ரூபாய் அதற்குத் தேவைப்படுகிறது. இதனால் ஒட்டுமொத்தமாக கட்டிடங்களின் குறைந்தபட்ச தேவை பூர்த்தியாகிவிடாது. குறைந்தபட்ச கட்டிடங்களைக் கட்டித்தரவே கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாகத் தேவைப்படுகிறது.

தற்போது 'Operation Black-board' என்ற திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். மைய அரசு இந்தத் திட்டத்தை தீட்டியிருக்கிறது. புதிய கல்விக் கொள்கையை அவர்கள் ஓரளவிற்கு வகுத்திருக்கிறார்கள். ஆனால் கன்கரன்ட் லிஸ்டிலே கல்வியை எடுத்துச் சென்றுவிட்ட மைய அரசு நிதி ஒதுக்குவதில் பெரிதும் தயக்கம் காட்டுகிறது. நாம்கூட, தற்போது இந்த 'Operation Black-board' திட்டத்தை, கரும்பலகைத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர, எடுத்த எடுப்பிலேயே, தற்போது தொடக்கப் பள்ளிகளுக்கு 81 கோடி ரூபாய் இன்றியமையாத் தேவை என்பதை மைய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு வரை அவர்கள் இன்னும் நிதி தரவில்லை. இந்தத் திட்டங்களை நாம் ஈடேற்றுகிறபோது மைய அரசினுடைய உதவி இல்லாமல் புதிய கல்விக் கொள்கையை ஈடேற்றுவது இயலாத காரியம் என்பதற்காகச் சொல்கிறேன்.

புதிய கல்விக் கொள்கையினுடைய அடிப்படை நோக்கமே, To provide infrastructural facilities அடிப்படை வசதிகளை, பள்ளிகளுக்குத் தரவேண்டும். கட்டிட வசதிகள், லேபாரட்டரி

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

வசதிகள், எருப்பெட்டி வசதிகள், எஜுகேஷன், எய்ட்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த உபகரணங்களை எல்லாம் பெறவேண்டிய அந்தக் கட்டாயம் புதிய கல்விக் கொள்கையிலே இருக்கிறது. காரணம் வெறும் மனனம் செய்து கற்றுவந்த கல்வி முறையை மாற்றி, மாணவச் செல்வங்களுக்கு பிராக்டிகல் டிரெயினிங் கொடுக்க வேண்டிய கல்வி முறையைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கு, நல்ல நோக்கு, மத்திய அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே இதை ஈடேற்றுகிற போது, 40 ஆண்டுக்காலமாக மாநிலங்களுக்கு இதுகுறித்து ஒதுக்கவேண்டிய நிதியை ஒதுக்காது விட்டு விட்ட நிலையில், திடீரென்று ஓர் ஆண்டுக்காலத்தில், இந்தத் திட்டத்தை, அடிப்படை வசதிகளைப் பெருக்கி, புதிய கல்விக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருகிற, தொழில் கல்வியை விஞ்ஞான அடிப்படையாகக் கொண்ட, இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேவை என்ற நிலை உருவாகிறது. எனவேதான் மைய அரசு இதிலே மனம் வைத்து, பணம் தந்தாலொழிய, இந்தத் திட்டத்தை ஈடேற்றுவது சிறிதும் நடக்காத காரியமாகக்கூட ஆகிவிடுமோ என்ற அச்ச நிலை இருக்கிறது. ஆனால் மைய அரசை எதிர்பார்க்காத நிலையில், மாநில அரசு 1983 ஆம் ஆண்டிலிருந்து Science and Technology Oriented, Education, Life-Oriented Education என்ற கல்வி முறையை எல்லாம் கொண்டு வந்து, நாம் ஓரளவிற்கு மாநிலத்தினுடைய நிதியைக் கொண்டு, இவற்றை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இதுமட்டுமல்லாமல், பள்ளி சீரமைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது அது தேவையா என்று ஒரு வினாவைக் கூட எழுப்பினார்கள். ஆனால் மைய அரசினுடைய கொள்கையும் அதுதான். அரசே எல்லா இடங்களுக்கும் பள்ளிக் கட்டிடங்களையும், உபகரணங்களையும் தந்துவிட முடியாது. பொது மக்களையும் அதோடு இணைத்து செயல்பட வேண்டும். அதற்கு, பெற்றோர்



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

ஆசிரியர் சங்கத்தின் மூலமாக அவர்களை உற்சாகத்தோடு ஈடுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கு இன்று அகில இந்திய அளவிலே இருக்கிறது. அந்த அடிப்படையிலே தற்போது மட்டும் சுமார் 20 கோடி மதிப்புள்ள, பள்ளிகளுக்குத் தேவைப்படும் பொருள்களை நன்கொடையாக பொதுமக்களிடமிருந்து, பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் முயற்சியின் மூலமாக நாம் இதுவரைக்கும் பெற்றிருக்கிறோம்.

அதைப்போலவே, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மூலமாக மற்ற மாநிலங்களைவிட நாம் முன்னணியில் பல அவசர நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒட்டுமொத்த நிலை—இன்று படித்தவர்களுடைய, ஆண்களின் எண்ணிக்கை 46.74 சதவீதம்; பெண்கள் 24.88 சதவீதம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், ஆண்கள் 57.19 சதவீதமும், பெண்கள் 34.12 சதவீதமும் இருக்கிறார்கள். டோட்டல் ஆவரேஜைப் பொறுத்தவரைக்கும் அகில இந்திய அளவிலே இன்றைக்கு 36.17 சதவீதம் என்று இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் கல்வியிலே படிப்பறிவு பெற்றவர்கள் 45.78 சதவீதம் என்ற நிலைக்கு நாம் சென்றிருக்கிறோம். 'யூனெஸ்கோ' நிறுவனம் கூட வயதுவந்தோர் பள்ளி சாராக் கல்வித் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படும் பாங்கினைப் பாராட்டி "க்ருப்ஸ்தயா" என்ற ஒரு பரிசினைத் தந்து, 67,565 ரூபாய் பரிசையும் தந்திருக்கிறது.

அதைப்போலவே, மகளிரை அதிக அளவில் சேர்த்து பயனடையச் செய்தமைக்கு—மாண்புமிகு வளர்மதி பேசுகிறபோது சொன்னார்கள்—1982-83 ஆம் ஆண்டு 31.75 லட்சம் ரூபாயை மைய அரசு தமிழக அரசுக்கு பரிசாக தந்திருக்கிறது. அதைப்போல, 1983-84 ஆம் ஆண்டு 32 லட்சத்தை தமிழக அரசுக்கு பரிசாகத் தந்திருக்கிறது. அதிகப்படியான மகளிருக்கு இங்கே கல்வியைக் கற்றுக் கொடுத்த காரணத்தால் இந்தப் பரிசை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பிறகு அந்தத் திட்டத்தை மைய அரசு நிறுத்தி விட்டது. அதன் காரணமாகத்தான், இந்த ஆண்டும் அந்தப் பரிசைப் பெற வேண்டுமென்று சொன்னார்கள். அந்த நிலை இல்லாமல் போனதற்குக் காரணம் அந்தத் திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

அதைப்போலவே, கல்லூரிக் கல்வியிலும் பல ஆக்கப்பூர்வமான மாற்றங்களைக் கொண்டுவர அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. படித்துவிட்டு வேலை இல்லாமல் வீதி வீதியாக, வேலை வேண்டுமென்று சுற்றிவருகிற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாகக்கூடிய அளவுக்கு தற்போதைய நடைமுறையிலே இருக்கின்ற கல்வி முறை இருக்கின்ற காரணத்தால், இதை மாற்றியமைக்க வேண்டுமென்பது மாநில அரசினுடைய நோக்கு. மைய அரசினுடைய புதிய கல்விக் கொள்கைகூட இதைத்தான் வலியுறுத்துகிறது. அந்த அடிப்படையில் தற்போதுமட்டும் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறவர்கள் தமிழகத்தில் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். போஸ்ட் கிராஜுவேட்ஸ் மட்டும் 42 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். காரணம், பி.ஏ. (ஹிஸ்டரி), பி.ஏ. (எக்கனாமிக்ஸ்), பி.ஏ. (ஜியாகிரபி) போன்ற பல படிப்புகளைப் படித்தவர்கள் இருக்கிறார்கள். ஏழை பெற்றோர்கள் கடனை வாங்கிக்கூட பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். வேலைக்குச் செல்வான்; வேலை பெறுவான்; கடனைப் போக்குவான். வீட்டைக் காப்பாற்றுவான் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். 80 சதவீத மக்கள் வாழுகின்ற, பட்டிக்காட்டு கிராமத்தில் வாழுகின்ற பெற்றோர்கள் அறியாமை காரணமாக, அவர்களுக்கு தம் பிள்ளைகளை என்ன மேற்படிப்புக்கு அனுப்ப வேண்டுமென்று தெரிவதில்லை. கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு, சமுதாய மறுமலர்ச்சி இன்னும் செம்மையாக வாராத காரணத்தால், அங்குள்ள மாணவச் செல்வங்களுக்கு உலக நடவடிக்கைகள் தெரியாத காரணத்தால், அவர்கள் மெடிகலுக்கு டிரை பண்ணுகிறார்கள்; என்ஜினியரிங் டிரை பண்ணுகிறார்கள். கிடைக்கவில்லையென்றால் ஏதோ ஒரு படிப்பு படிக்க வேண்டுமென்று சேர்ந்து விடுகிறார்கள். ஆனால் நாம் கற்றுக்கொடுக்கின்ற படிப்பு அந்த மாணவர்களுக்கு உதவியான படிப்பா என்பதனை நாம் எண்ணிப் பார்க்காத காரணத்தால் இந்த அளவிற்கு நாட்டிலே கலைப்படிப்பினுடைய மதிப்பு குறைந்துவிட்டது. Arts education has totally outlived its utility. என்று சொல்லக்கூடிய அளவுக்கு கலைப் படிப்பு ஒரு பலனற்ற படிப்பாகப் போய்விட்டது. அந்தக் காலத்தில் பி.ஏ. (ஹிஸ்டரி), (எக்கனாமிக்ஸ்), (ஜியாகிரபி) போன்ற படிப்புகள் இருந்தது என்றால் வெள்ளைக்காரனுக்கு தேவைப்பட்ட ஒரு படிப்பு. ஆனால் தற்போது நமக்கு தொழில் படிப்பு தேவைப்படுகிறது;



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

(இரவு 6-30)

அறிவியல் படிப்பு தேவைப்படுகிறது; விஞ்ஞானப் படிப்பு தேவைப்படுகிறது; நமது மாநிலத்திலே, கிராமப்புறங்களிலே, எந்தெந்தப் பகுதிகளில், எந்தெந்த இயற்கை வளம் இருக்கிறதோ, அந்த இயற்கை வளங்களை வெளிக்கொணர்ந்து வேலை வாய்ப்பைப் பெருக்கி, தொழில் வளத்தைப் பெருக்கி Industrial and Rural Economyஐ எந்த அளவுக்கு வளர்ப்பது என்பதற்குரிய ஆய்வினை நடாத்தி அந்த அடிப்படையிலே ஒரு கல்வி முறையை அமைக்கிறபோதுதான் படிப்பவர்களுடைய பலன் மக்களுக்குச் சென்று சேரும். 597 கோடி ரூபாயை இதில் நாம் முதலீடு செய்கிறோம் என்றால் it is not to be considered as a mere expenditure இதை ஒரு பெரிய முதலீடு, மூலதனமாக நாம் கருத வேண்டும். இதை ஒரு மூலதனம் என்று. ஒருக்காதர் செய்கின்ற செலவைக் கருதவேண்டுமென்ற நோக்கோடுதான் மைய அரசுகூட கல்வித் துறை என்பதை மாற்றி "மனித வளத் துறை" என்றுகூட இதற்குப் பெயரிட்டு இருப்பதை நாம் இங்கே நினைவுகூற வேண்டியிருக்கிறது. இந்த முறையிலே தற்போது கல்லூரிகளிலே இருக்கிற பாடங்கள் பல்வேறு பட்டப்படிப்புகள் நாட்டுக்கு உதவி செய்யக்கூடிய படிப்புகளாக இல்லை. Degrees should have relevance to the needs of the Society. Utility-oriented courses should be introduced in Educational institutions

என்ற முறையில் பயன் தரக்கூடிய கல்வியை உடைய பாடத்தை மாணவர்களுக்குக் கற்றுத் தரவேண்டும் என்ற முறையில் முடிவு செய்து அண்மையில் துணை வேந்தர்கள் மாநாட்டில் கூட இந்த முடிவு எடுக்கப்பட்டு அதற்காக அண்ணா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த துணை வேந்தர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி, சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துணை வேந்தர் டாக்டர் சுந்தரேசன், பாரதியார் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சுப்பையன் மற்றும் பல்வேறு விஞ்ஞான தொழில் நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழு அடுத்த ஆண்டில் தமிழகத்தில் எத்தகைய படிப்புகளை நீக்கவேண்டும், எத்தகைய பலன் உள்ள படிப்புகளைக் கொண்டுவரவேண்டும் என்பதற்கு ஒரு ஆய்வை நடத்த அமைக்கப்பட்டு இருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

அதைப்போலவே Computer and Electronics என்று சொல்லக்கூடிய அந்த உயர்ந்த நவீன விஞ்ஞான முறையை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கொண்டு வரவேண்டும் என்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கைக்கு ஏற்ப அத்தகைய பாடத் திட்டங்களை விரைவில் எல்லா மட்டத்திலும் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

தொழில்நுட்பக் கல்வித் துறையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் பேசுகிறபோது சுய நிதி கல்லூரிகளின் குறைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

1978-ல் மொத்தம் 6 பொறியியல் கல்லூரிகளும், 38 தொழில் நுட்பப் பயிலகங்களும் இருந்தன. இன்று இருப்பது 31 பொறியியல் கல்லூரிகளும், 133 தொழில்நுட்பப் பயிலகங்களும் ஆகும். அன்று 1,630 ஆக மாணவர்களுடைய எண்ணிக்கை இருந்தது. இன்று 6 ஆயிரம் ஆக அது உயர்ந்து இருக்கிறது. தொழில் நுட்பப் பயிலகங்களின் மாணவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்து 6,800 ஆக இருந்தது. 23 ஆயிரமாக உயர்ந்து இருக்கிறது. தற்போது பொறியியல் கல்லூரிகளில் மகளிர் எண்ணிக்கை 980 ஆகவும், பாலிடெக்னிக்குகளில் 1,600 ஆகவும் உயர்ந்து இருக்கிறது. இதில் குறிப்பாக கடந்த காலத்தில் நகர்ப்புறத்தில் இருக்கிற பிள்ளைகள் மட்டுமே இதுபோன்ற விஞ்ஞான பாடத்தில் படிப்பதற்கு வாய்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது இதுபோன்ற கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகமாகிய பிறகு பெரும்பாலான பட்டிக்காடு கிராமங்களைச் சேர்ந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே பெரும்பான்மையில் படிக்கும் வாய்ப்பு தற்போது கிடைத்து இருக்கிறது.

இந்த சுய நிதி அடிப்படையில் நடக்கின்ற கல்லூரிகளில் குறைகள் நடக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் சொன்னார்கள். அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன் நாங்கள் வெளிப்படையாக தெரிந்தே தான் இதை அனுமதித்து இருக்கிறோம். அரசாலேயே இவ்வளவு கல்லூரிகளையும் துவக்கிவிட முடியாது. அரசு பள்ளிகளுக்கு



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

கட்டிடங்களைக் கட்டுவதற்கே முடியவில்லை. ஒருபுறம் பள்ளிக்கூடங்கள் அரசின் பொறுப்பிலே இத்தனை இருக்கின்றன. 1½ கோடி ரூபாய், 2 கோடி ரூபாய் எந்த மூலைக்கு போதும், இவ்வளவு இருக்கிறது என்று நீங்களே சொல்கிறீர்கள். ஆண்டு பலவாக இருந்து வருகிற நிலை இது. 1976-ல் ஒதுக்கிய தொகை கிட்டத்தட்ட 23 லட்சம் ரூபாய். தற்போது நாம் 4½ கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அதைச் சொல்வதற்குக் காரணம் அரசிடம் நிதித் தட்டுப்பாடு இருக்கிறபோது தனியார் முன்வந்து கல்லூரிகளைத் துவக்குகிறபோது அதை வேண்டாம் என்று சொல்லுவது சரியல்ல என்பதைத்தான் இந்த அரசு கருதுகிறது. ஆனால் அங்கு தவறுகள் நடப்பதை நாம் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் கட்டிடங்கள் கட்டவேண்டும், ஆசிரியர்களை அங்கே நியமிக்கவேண்டும், அவர்களுக்கு சம்பளம் தரவேண்டும், Equipment and Machinery போன்றவைகள் எல்லாம் பொறியியல் கல்லூரிக்கு வாங்க வேண்டும். அதற்கு அவர்கள் எப்படியும் நிதி வாங்கி சேர்க்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் அளவுக்கு மீறி அவர்கள் அதிலே நிதியை வாங்கிச் செல்லக்கூடிய ஒரு நிலை இருப்பதால் தரக்கூடிய நிதி infrastructural facilities சில நேரங்களில் இவர்களுக்கு வசதி இல்லாமலேயே இவர்கள் இதைச் செய்து இருக்கிறார்கள். சில கல்லூரிகள் துவக்கப்பட்டு இருக்கின்றன. எங்கெங்கே மாணவர்களுக்கு—நாம் இங்கே கவனிக்கவேண்டியது முக்கியமான ஒன்று—இவர்கள் நிதி வாங்குவதை விட அப்படி வாங்குகிற நிதியைக் கொண்டு மாணவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து தர பயன்படுத்துகிறார்களா என்பதுதான் முக்கியமானது. அப்படி பயன்படுத்தாத கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. தற்போது அதற்காக ஒரு கைடுலைன்—இப்படி இந்த, இந்த அடிப்படையில் வசதிகள் கட்டாயம் குறிப்பிட்ட கால கட்டத்தில் செய்து தரவில்லை என்றால் அந்தக் கல்லூரிகளுக்கு தரப்பட்டு இருக்கின்ற உரிமத்தை ரத்து செய்யவேண்டும் என்ற முறையில் ஒரு கைடுலைன் உருவாக்கப்பட்டு அது தற்போது தாக்கீதாக ஒவ்வொரு கல்லூரிக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே பொது நூலகத் துறையைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது பல கோரிக்கைகளை சுட்டிக்காட்டினார்கள். இங்கிங்கே லைப்ரரிகள் வரவேண்டும் என்று சொன்னார்கள். அவ்வப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட அந்த, அந்த மாவட்டங்களின் நிலையைப் பொறுத்து அதைச் செய்ய வேண்டியிருக்கிறது.

தற்போது பொது நூலகங்களைப் பொறுத்தவரையில் அரசு வாங்குகிற நூல்களில் ஒரு மாற்றத்தைச் செய்து இருக்கிறது. பொதுவாக Science and Value-oriented books போன்ற புத்தகங்களை வாங்கவேண்டும் என்றும், விஞ்ஞான தொழில் அடிப்படையிலான புத்தகங்களையும், ஒழுக்க ரீதியில் கருத்துக்களை பொதுவாக மக்களுக்கு புகட்டக் கூடிய புத்தகங்களையும் அரசு 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து வாங்குகிறபோது அந்த நூல்கள் தரம் உள்ள நூல்களாக இருக்கவேண்டும், மக்களுக்கு ஓரளவிற்கேனும் பலனைத் தரக்கூடிய நூலாக இருக்கவேண்டுமென்று ஆணையிட்டு, அந்த அடிப்படையில் அரசு இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்தனை பல்கலைக்கழகங்கள் ஏன் என்ற ஒரு வினாவை மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். தற்போது மைய அரசு அதை வெகுவாகப் பாராட்டியிருக்கிறது. தமிழகத்தில் தற்போது 11 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. பல்கலைக்கழகங்கள் வருவதில், [illegible] வசதிகளுக்காக மாநில அரசே முழுக்க [illegible] வேண்டிய நிதியைத் தரவேண்டியதில்லை. [illegible] பல்கலைக்கழகங்கள் [illegible] மைய அரசே வெகுவாகப் பாராட்டியுள்ளன. [illegible]

[illegible]

[illegible] University Grants Commission, Science and Technology Department என்ற மைய அரசின் [illegible] நிதி உதவிகளைச் செய்திருக்கின்றன.





[illegible] Funding [illegible] Higher Education [illegible] Research and Development [illegible] ஆராய்ச்சி அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. அப்படி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறபோது, அவர்கள் மேலை நாடுகளிலே கண்டு பிடித்திருக்கின்ற அந்தக் கண்டுபிடிப்புகளைக் கடன் வாங்கி, அவற்றை நம்முடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு நடைமுறைப்படுத்துகிறபோது, இன்னல், இடர்ப்பாடுகளை மேற்கொண்டு நாமே ஆராய்ச்சி செய்கின்றபோது அல்லது கண்டு பிடிக்கிறபோது Anything invented should be innovated further upon என்ற முறையிலே அதிலே ஒரு ஆக்கம் கிடைக்கும் என்ற நோக்கோடுதான் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி மையங்களாகச் செயல்படவேண்டுமென்று, அவற்றுக்கு உற்சாகம் தர மாநில-மைய அரசுகள் அதுகுறித்து நடவடிக்கை எடுத்திருக்கின்றன.

குறிப்பாக தமிழகத்தில் இருக்கின்ற அண்ணா பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொண்டோம் என்றால், இன்று இந்தியத் துணைக் கண்டத்திலே மைய அரசு பாராட்டக்கூடிய அளவிற்குச் சிறப்பாக பல ஆக்கப்பணிகளை செய்திருக்கிறது. Centre for Water Resources என்ற ஒரு துறையின் மூலமாக—அது தற்போது அகில இந்திய அளவிலே ஒரு சிறந்த அமைப்பாக இருக்கிறது. மைய அரசு அதற்குப் பலவித உதவிகளைத் தரக்கூடிய அளவிற்கு சிறப்புப் பணிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே Centre for Environmental Studies, Centre for Human Settlement, Centre for new and revenue sources, Centre for Crystal Growth என்று பல்வேறு புதிய அமைப்புகள் அங்கே துவக்கப்பட்டு இந்தியத் துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சிறந்த ஆராய்ச்சிகளை அங்கே மேற்கொண்டு சிறப்பாக செய்து வந்திருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

Institute of Remote Sensing என்ற அமைப்பைப் பொறுத்த வரைக்கும் மைய அரசினுடைய அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப் பட்ட சப்-சென்டராக, அண்ணா பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற Institute of Remote Sensing தற்போது அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அதன்மூலமாக, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து விடப்பட்டிருக்கின்ற சாடலைட் மூலமாகத் தொடர்புகொண்டு 22 தினங்களுக்கு ஒரு முறை, இந்தியத் துணைக்கண்டத்தினுடைய பல்வேறு பகுதிகளைப் படம் பிடித்து—ஆங்காங்கே ஃபாரெஸ்ட் ஓர்க்காக இருக்கலாம் அல்லது ஏரி குளங்கள் சம்பந்தமான பணிகளாக இருக்கலாம் அல்லது அர்பன் ஏரியா, எம்.எம்.டி.ஏ. போன்ற பணிகளாக இருக்கலாம் மற்ற National Resources எங்கெங்கே இருக்கிறது என்பதை எல்லாம் ஆராய்ந்து, அதை மைய அரசினுடைய பல்வேறு அமைப்புகளுக்குத் தரக்கூடிய முறையில் மிகச் சிறந்த பணிகளை தற்போது Institute of Remote Sensing மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் பேசும்போது அங்கே அதனுடைய டைரக்டராக ஒரு பி.எச்.டி. படித்தவர் இல்லை என்று சொன்னார்கள். அதற்கு பி.எச்.டி. படித்த உலக வல்லுநர் ஒருவரைப் போடவேண்டுமென்று விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கு இன்னும் சிறந்த, தகுதி படைத்தவர்கள் யாரும் கிடைக்கவில்லை. ஆனாலும் அங்கே யிருக்கின்ற 'Infra-structural' facilities'-ஐப் பொறுத்தும், பணியாற்றுகிறவர்களுடைய விஞ்ஞான நுண்ணறிவைக் கொண்டும் தான் மைய அரசு, இன்றைக்கு வெஸ்ட் ஜெர்மனியிலே கிட்டத்தட்ட ரூ. 1½ கோடி கொடுத்து, தற்போது இலவசமாக அந்த Remote Sensing Institute-க்கு பொருளைத் தந்திருக் கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திற்காக 9 சூப்பர் கம்ப்யூட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அண்ணா பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற Institute of Remote Sensing இந்தியத் துணைக் கண்டத்திலே மிகச் சிறந்த வல்லுநரைக் கொண்டிருக்கிறது என்பதனை உணர்ந்து மைய அரசு அந்த 9 சூப்பர் கம்ப்யூட்டர் களில் ஒன்றை தமிழகத்தில் இருக்கின்ற அண்ணா



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

பல்கலைக்கழகத்திற்குத் தந்திருப்பது அந்தத் துறையினுடைய சிறப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் பேசியதன் காரணமாகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே Centre for Crystal Growth என்பதன் மூலமாக செயற்கை மழை பெய்வதற்குப் பல ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறோம். வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்து, சில நேரங்களில் அதில் வெற்றி முழுமையாகக் கிட்டாத நிலையில் இருக்கிறது. நமது தமிழகத்தைச் சார்ந்த விஞ்ஞானி அங்கு சென்று பார்த்து, Centre for Crystal Growth. இருக்கின்ற விஞ்ஞான ஆராய்ச்சிகளைக் கண்டுபிடித்து, செயற்கை மழை பெய்விக்க உலகிலே முதன்முறையாக நவீன ஆராய்ச்சியைக் கண்டுபிடித்து இருக்கிறார். அதைக்கூட நடைமுறைப்படுத்த இருக்கிறோம். அந்த அளவிற்கு சிறப்பான முறையிலே அது அங்கு செயல்பட்டு வருகிறது.

அதைப்போலவே மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும், "Genetic Engineering" என்று சொல்லக் கூடிய ஒரு புதிய பிரிவு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே Biology Department -லே சிறந்த முறையிலே மருத்துவத் துறையிலே பல்வேறு ஆய்வுகளைக் கண்டறிந்து, கண்டு பிடிப்புகளைச் செய்யக்கூடிய அளவிற்கு உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது ஒரு சிறந்த மையமாக தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது, சிறந்து விளங்கிவருகிறது.

(இரவு 6-40)

அதைப்போலவே கல்லூரிகள் ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கோடு அரசு கொள்கை முடிவு எடுத்து பல கல்லூரிகளை தன்னாட்சிக் கல்லூரிகளாக மாற்ற தற்போது முடிவு செய்திருக் கிறது. அப்படி தன்னாட்சிக் கல்லூரிகள் என்ற முறையிலே 20 கல்லூரிகளுக்கு மேல் கோரிக்கை வந்திருக்கிறது. யு.ஜி.சி. என்று சொல்லக்கூடிய, மத்திய அரசினுடைய கல்வி மானியக் குழுவினுடைய ஆய்வுக்குப் பிறகு அவைகள் தன்னாட்சி உரிமை பெற்றவைகளாக ஆக்கப்படும். கோவையிலே

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 8

அவற்றை எல்லாம் கல்லூரியை மட்டும் யூனிவர்சிட்டி என்று சொல்லப்பட்ட பல்கலைக்கழகங்கள் அரசு ஆணும்பாது நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ்நாட்டிலே திருவையாறு பார்க்கும் மக்கள் எல்லாம், சென்னையிலே கலைக்கல்லூரி நிறுவனம் ஆகியவற்றை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு மாநில அரசு ஆணை அதற்குப் பார்த்து செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையிலே இன்னும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் சமத அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் மொழி வளர்ச்சி, கலை வளர்ச்சி, பண்பாட்டு மேம்பாடு முதலியவைகளும், கலாச்சாரத் தேவைகளும் மக்களுக்கு அமைய வேண்டும் என்ற நோக்கோடு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை உருவாகியது. மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, மரபு முதலியவைகள் ஊட்டமும், ஊக்கமும் பெறவேண்டுமென்ற வகையில் கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காப்பது, கற்பிப்பது, வளர்ப்பது, படைப்பது, வழங்குவது, பரப்புவது போன்ற பல பணிகளை மேற்கொள்வதற்காக அவை ஒருங்கிணைந்த தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டு அதிலே தற்போது பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழு உருவாக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப்பழங்கலை இயக்ககம், தமிழ் திட்ட இயக்ககம், தொல்பொருளாய்வுத்துறை, அகரமுதலித் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய துறைகளின் பணிகளை உலகத்தமிழ் மதிப்பிடவும், வழி முறைகளை வகுத்துக்காட்டவும் ஆராய்ந்து ம.பொ.சி. அவர்கள் தலைமையில் பெரியவர் ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. அதைப்போல நலிந்த கலைஞர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், மொழிக்காவலர்களுக்கு நிதியுதவி வழங்குதல், புதிய கலைகளுக்கு ஊட்டமும், ஊக்கமும் அளித்தல், அயல் மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை, தமிழில் பட்டய வகுப்புகளை நடத்துதல் முதலிய பணிகளுக்கு மானியம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.



1987 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

ஆட்சி மொழித்தமிழ் என்ற வகையில் மாவட்ட நிலையில் 70 சதவிகிதத்திற்கு மேல் அனைத்துமே தமிழ் என்ற முறையில் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆட்சிச் சொல்லகராதி நான்கு பதிப்புக்களைப் பெற்றிருப்பதோடு ஏறத்தாழ 70 துறைகளுக்குச் சிறப்புக்கலைச்சொல் துணை அகராதிகளையும் வெளியிட்டுள்ளது. திருவள்ளுவர், அறிஞர் அண்ணா, திரு.வி.க., பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய பெருந்தகையாளர்களின் பெயர்களில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

வாழ்வில் நலிந்த அகவை முதிர்ந்த கலைஞர்களுக்கு நிதி வழங்கும் திட்டத்தின்படி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் இதுவரை 1,767 நலிந்த கலைஞர்களுக்கு மாதம் ரூ. 150 வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும் இவர்களில் 135 கலைஞர்களுக்கு அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி பொற்கிழியும் வழங்கப்பட்டுள்ளது.

இயல், இசை, நாடக மன்றம் நாடகக் கருத்தரங்குகளை நிகழ்த்தியிருப்பதோடு, கூத்தநூல், பாபநாசம் சிவன் கீர்த்தனை நூல், கலைவாணர் வாழ்வில் முதலிய நூல்களுக்கு நிதியுதவி செய்து இருக்கிறது. இதுபோன்ற பல்வேறு ஆக்கப் பணிகளை தமிழக அரசு, தமிழ் பண்பாட்டுத் துறை மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி இருக்கிறது.

அதைப்போலவே தற்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது இன்னும் சிலவற்றை எடுத்துச் சொன்னார்கள். திரு. ஏகாம்பரம் அவர்கள் பேசுகின்றபோது 'அட்மிஷன் பார் டொனேஷன் இன் தி பிரைமரி ஸ்கூல்' என்று சொன்னார்கள். பிரைமரி ஸ்கூலைப் பொறுத்தவரைக்கும் அரசினுடைய கட்டுப்பாட்டில் இல்லை. Self-financing Primary Matriculation School பள்ளியைப் பொறுத்தவரைக்கும் எங்கே எந்த வகையில் ... நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து ... அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலு அவர்கள் சொன்னதுபோல் செல்ப்-பைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்

டொனேஷன் வாங்குவது ஒன்றும் குறை அல்ல. சட்ட ரீதியாக அவர்கள் நிதி வாங்கலாம் என்று வரையறுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பெரியார் மாவட்டத்திலே மாண்புமிகு பாலு அவர்கள் சொன்னதுபோல், அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரைக்கும் That is not a Self-financing College. அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் அப்படி டொனேஷன் வாங்கக் கூடாது. ஆனால் அப்படி வாங்குகிறார்கள்.

பொதுமக்களுடைய ஒத்துழைப்பு அதில் இருக்கிறபோதுதான் இதுபோன்ற குறைகளை நாம் களையமுடியும். ஆனால் எந்த அளவுக்கு ஏழைகளை, சாதாரண மக்களைப் பாதிக்கிற அந்த டொனேஷன் என்ற முறையைக் கடுமையாகத் தடுப்பது என்பது குறித்து அரசு தக்க நடவடிக்கையை ஆய்ந்து எடுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுடைய 'டிரான்ஸ்பர் அண்டு போஸ்டிங்' பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகிறபோது சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கதிர்வேலு அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். டைரக்டர், ஜாயின்ட் டைரக்டர் அளவிலே நல்லமுறையிலே பிரச்சினைகள் ஆசிரியர்களுக்குத் தீருகின்றன. ஆனால் கீழ்மட்டத்திற்குப் போகின்ற போது ஆசிரியர்கள் சொல்லொணாத் துயரத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் கதிர்வேலு அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் யாருக்கும் தெரியாதது அல்ல. ஆசிரியர் பெருந்தகைகள் எத்தகைய இடர்ப்பாடுகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். டிரான்ஸ்பர் முறை என்பதை அவை நன்றாக அறியும் என்றே கருதுகிறேன்.

வேலூர் பகுதி, வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் மட்டும், ஒரே ஆண்டிலே கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்ட, 600-க்கு மேற்பட்ட ஆசிரியர்களை இங்கும், அங்கும் என்று மாறுதல் செய்தது என்ற குற்றச்சாட்டு அவையிலே முதலிலேயே கூறப்பட்டு இருக்கிறது. [illegible] வந்திருக்கிறது. அந்த அளவுக்கு ஆசிரியர்கள் அங்கே பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு [illegible] இருக்கிறார்கள்.





பல்வேறு மாவட்டங்களில் அதிகாரிகளைப் பொறுத்த வரைக்கும், அவர்கள் One may be C.E.O., D.E.O., A.E.O., என்ற அளவிலே அதிகாரிகள் இருந்தாலும்கூட டிரான்ஸ்பர் ஒன்று மட்டுமே அவர்களுடைய பணி அல்ல. ஆசிரியர்களை மூன்றாண்டுகளுக்கு இடையிலே ஒரு இடத்திலிருந்து மாற்றம் செய்யக்கூடாது. அலிகேஷன்—குற்றச்சாட்டு ஏதேனும் இடையிலே இருக்குமேயானால், அதற்கு ஆதாரம் இருக்குமேயானால், moral turpitude அல்லது ஒழுக்கமற்ற முறையிலே ஏதேனும் செயல்பாட்டில் அவர் ஈடுபடுகிறார் என்பதற்கு ஆதாரம் இருக்குமேயானால், அவர்களை மாற்றுவது என்பது வேறு.

ஆனால் ஆண்டுக்காண்டு ஆசிரியர்களை மாற்றுவது, அதுவும் நூற்றுக்கணக்கில் 500, 600 ஆசிரியர்களை இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் என்று மாற்றுவது, கணவனை விட்டு மனைவியைப் பிரிப்பது, கல்யாணம் ஆகாத பெண்ணை பெற்றோரிடமிருந்து பிரிப்பது போன்ற மாற்றங்களைச் செய்கிற போது, அந்த De-Centralised பவர்—கீழ்மட்டத்திலே டிரான்ஸ்பர் பவர் இருக்கிறபோது அவர்கள் அத்துமீறி இதுபோன்ற பணிகளில் ஈடுபட்ட காரணத்தால்தான் ஆசிரியர்கள் மத்தியில் ஒரு மாபெரும் அதிருப்தி உருவானது.

1985 ஆம் ஆண்டு நடந்த ஒரு போராட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்போது அவர்கள் அரசிற்குச் சொன்ன முக்கியமான ஒன்று—மூன்று ஆண்டுகளுக்கு இடையிலே டிரான்ஸ்பர் செய்யக்கூடாது. எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பெரிய ஆபத்து, விபத்து எல்லாம் அடிக்கடி டிரான்ஸ்பர் என்ற முறையிலே கீழே செய்கிறார்கள். இந்த நிலையை மாற்றி எப்படி பிளஸ்-1 அண்டு பிளஸ்-2 என்று சொல்லப்படும் மேல்நிலைப்பள்ளியும், அதேபோல் 10, 11 என்று சொல்லப்படும் ஹைஸ்கூல்ஸ்-ம் எல்லாம் பொறுத்தவரையில் டைரக்டர் லெவலிலே டிரான்ஸ்பர் நடக்கிறதோ, அதுபோலவே எல்லா மட்டத்திலும் இந்நிலை இருக்குமானால், எங்களுக்கு ஆபத்து இல்லாமல் இருக்கும் என்று சொன்னார்கள். அப்படி ஆசிரியப் பெருந்தகைகளே தந்த கோரிக்கையை ஏற்றுத்தான் அரசு இந்த முறைக்கு வந்திருக்கிறது. அதில்கூட நாங்கள், அரசு

சொல்லியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்த
கிருஷ்ணா அவர்கள்கூட பேசுகிறபோது ஏதோ ஒரு புத்தகத்தைப்
படித்துக் காட்டி "இந்தி ஆர் இங்கிலீஷ்" என்று சொன்னார்கள்.
சென்றமுறை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்
அவர்கள் பேசுகிறபோது கூட "இந்தி ஆர் இங்கிலீஷ்" என்று
சொன்னார்கள். அது மிக மிகத் தவறான கருத்து. அப்படி அல்ல.
அதில் அவர்கள் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.
"In view of the fact that most of the students so admitted would
have been taught earlier through the medium of the mother tongue
and the regional language. The instruction will be provided through
the same medium upto VII or VIII Class." ஆக 8-வது வரைக்கும்
மட்டும்தான், அதற்குப் பிறகு "Intensive teaching of Hindi and
English both as language subjects and co-media will be undertaken"
அதாவது "Medium of instruction will be both English and Hindi.".
என்று தெளிவாக்கியிருக்கிறார்கள். "Through skilful use
of the media and of modern techniques of teaching languages,
switch over to Hindi and English after VII and VIII Classes would
present no difficulty." என்று கருதுகிறார்கள். எனவே, Common
medium would be Hindi and English in all Navodaya Schools
என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இது மைய அரசு, மாநில அரசுகளுக்கு அனுப்பியிருக்கிற
தாக்கீது. இதை நாம் எதிர்க்கிறோம். முழுமையாக எதிர்க்கிறோம்.
தாய் மொழியில்தான் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும்
என்பதுதான் இந்த அரசினுடைய ஆணித்தரமான கொள்கை.
இது அகில உலக அளவில் நடைமுறையில் இருந்து வருகிறது.
ஆகவே இதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. ஒருபுறத்தில்
தாய் மொழியைப் பயிற்சி மொழியாக வைத்துக் கல்வியைக்
கற்றுக் கொடுத்து வருகிற அதே நேரத்தில் ஆங்கிலத்திற்கு நாம்
முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணம்—நான் மைய அரசின்
நோக்கங்களைச் சொல்லவில்லை—வடபுலத்தில் இருக்கிற இந்தி
வெறியர்களுடைய நோக்கம்—ஆங்கிலம் என்கிற அந்த்
தமிழகத்தை விட்டு வெளியேறுகிறதோ அன்றே அந்த இடத்தை
இந்தியைக் கொண்டு நிரப்பிவிடலாம் என்று எண்ணுகிறார்கள்



அந்த எண்ணத்தால்தான் அவர்கள் "எல்லாம் தாய்மொழியில்
இருக்க வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். இப்படி அந்த
நோக்கத்தோடு அவர்கள் சொல்லும்போது நாம் தாய்மொழியில்
தான் எல்லாவற்றையும் கொண்டு வர விரும்புகிறோம் என்றாலும்
கூட ஆங்கிலத்தில் போதிய அறிவு ஒவ்வொரு குழந்தைக்கும்
இருக்கிறபோதுதான் "Interaction between the States and interac-
tion at the international level.". என்ற அளவுக்கு—மற்ற
மாநிலங்களோடு தொடர்பு கொள்ள அல்லது உலக நாடுகளோடு
தொடர்பு கொள்ள அல்லது தொழில் விஞ்ஞான ரீதியாக மேம்
பாடடைந்த கல்வி முறையோடு தொடர்பு கொள்ள ஆங்கில
அறிவு போதிய அளவுக்கு இல்லையென்றால் நாம் பின்தங்கிய
நிலைக்குச் சென்றுவிடுவோம். எனவே இந்தக் காரணத்திற்
காகத்தான் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க இந்த அரசு
முடிவு செய்து அதைக் கொடுத்து வருகிறது.

மைய அரசின் அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள்
அண்மையில் பேசுகிறபோது கூட ஐ.ஏ.எஸ். அண்டு அலைடு
எக்சாமினேஷன்களில் நமக்கு மிகக் குறைந்த அளவுக்கு இடம்
வருவதற்குக் காரணம் ஆங்கிலத்திற்கு நாம் இன்னும் அதிகமான
அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதுதான்
என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதை நாம் ஒப்புக்
கொள்கிறோம். அந்தக் கருத்தோடு நமக்குப் பிரச்சினை இல்லை.
ஆனால் தாய்மொழியில் பயிற்சி இல்லாமல் அதற்கு மாறாக
இந்தி அல்லது ஆங்கிலம்தான் பயிற்சி மொழியாக இருக்க
வேண்டும் என்று மைய அரசு நவோதயா கல்விக் கொள்கையில்
சொல்லுகிறது. எனவே இந்த அரசு அதை அணு அளவும் ஏற்றுக்
கொள்ளாது. என்றைக்குமே ஏற்றுக் கொள்ளாது என்பதை நான்
திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னொரு
பிரச்சினையையும் அதிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்
கிறார்கள். இதையும் எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.
ஏதோ மைய அரசு சொல்கிறது என்ற காரணத்திற்காக நாம்
ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல. பல ஆதாரம் காட்டுகிற
மாநிலங்களின் அமைச்சர்களே கூட—கல்வி அமைச்சர்களின்
மாநாட்டிற்கு வந்தபோது இதில் உள்ள அம்சங்களை அவர்களே
கூட எடுத்துச் சொன்னார்கள். இதில் உள்ள மிக முக்கியமான

பிரச்சினை—20 சதவிகிதம் மாணவர்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போக வேண்டும் என்று அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். "From Hindi-speaking States to Non-Hindi speaking States" -க்கு போக வேண்டும் என்று வருகிறபோது 8-வது வகுப்பை முடித்துவிட்டு 9-வது வகுப்புக்குப் போகிற பிஞ்சுப் பருவத்தில் இருக்கிற குழந்தையை—மாணவனை—இந்தி பேசாத மாநிலத்திலிருந்து இந்தி பேசுகிற மாநிலத்திற்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணுகிறபோது இதனால் தான் நேஷனல் இன்டகிரேஷன் வரும் என்று சொல்லுகிறார்கள். இது எத்தகைய ஆபத்தானது என்பதை நாம் அனுபவபூர்வமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதைவிட இன்னும் ஒரு முக்கியமான ஆபத்தும் இதிலே இருக்கிறது. அது ரிசர்வேஷன் ஆப் சீட் பற்றியது. 10-வது பிரிவில் சொல்லுகிறார்கள் "If sufficient, number of children of one of those two categories, i.e., Scheduled Tribes and Scheduled Castes, do not qualify, it would be possible to interchange the Seats" என்று சொல்லி அப்படி தாழ்த்தப்பட்ட மக்களோ அல்லது மலைவாழ் மக்களோ போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை என்றால் அந்த இடத்தை மற்ற பிரிவினருக்கு ஒதுக்கலாம் என்று சொல்லுவது எந்த அளவுக்கு மிக மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிற கிராமப்புறத்து ஏழை மக்களை, ஏழைச் சமுதாயத்தைப் பாதிக்கும் என்பதை அனைத்து மாநிலத்தையும் சார்ந்தவர்களும் உணர வேண்டியிருக்கிறது. இந்தி பேசுகிற மாநிலத்தைச் சார்ந்தவர்களேகூட இந்தப் பிரச்னையை உணர்கிறார்கள். இதிலே இருக்கிற பிரச்சனை இதுதான். நாம் ஜப்பான் மற்றும் ஜெர்மனி அல்லது அமெரிக்கா அல்லது மிக உயர்ந்த நிலைக்குப் போய்விட்ட ரஷ்யா போன்ற முன்னேற்றம் அடைந்த நாடுகளைப் போல் இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் 46 சதவீதம் எழுத்தறிவு உள்ளவர்கள்தான் நமது பட்டி தொட்டிகளில் இருக்கிறார்கள். இந்தியாவிலேயே இரண்டாவது நிலையில் இருக்கிற தமிழகத்திலேயே பட்டி தொட்டிகளில் 46 சதவீதம் மக்கள்தான் எழுத்தறிவு பெற்றிருக்கிறார்கள் என்றால் மற்ற மாநிலங்களில் உள்ள நிலைமையைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.





அப்படி கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஐந்தாவது வகுப்பில் ஒரு டெஸ்ட் வைக்கிறார்கள். அந்தத் தேர்வில் எல்லா பாடங்களையும் எழுத வேண்டும். அந்தத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்குத்தான் இந்த இரண்டு கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகிற 'நவோதயா' பள்ளியில் இடம் கிடைக்கும். யார் இதிலே வெற்றி பெற முடியும்? பட்டிக்காட்டில் 20 ஏக்கர், 30 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு வசதி படைத்த விவசாயிகள், படித்து வசதி படைத்த விவசாயிகளின் குழந்தைகளுக்குக் கிடைக்கும். பொருளாதாரச் செம்மையில் மிளிருகிறவர்களின் குழந்தைகளுக்குக் கிடைக்கும். கல்வியில் நலிந்தவர்களுக்கு, பொருளாதாரத்தில் நலிந்தவர்களுக்கு, ஒரு ஏக்கர் உள்ள குறுநில உழவர்களுக்கு அல்லது இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் வைத்துள்ள சிறுநில உழவர்களுக்கு அல்லது நிலமே இல்லாத உழவு வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஒருவருக்குக் கூட நவோதயா பள்ளிகளில் இடம் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும். இறுதியில் பொருளாதாரச் செம்மையில் இருக்கின்ற, அந்த வெஸ்டெட் இண்டரஸ்ட் என்று சொல்லக்கூடிய ரிச்சினால் என்று சொல்லக்கூடிய வர்க்கத்தினருக்கு மட்டுமே நவோதயா பள்ளிகளில் இடம் கிடைத்து அதிலேயிருந்து படித்தவர்கள்தான் இறுதியில் நேஷனல் ரெப்யூட்டெட் டாக்டராக, என்ஜினியராக, ஐ.ஏ.எஸ். அண்டு அலைட் எக்சாமினேஷனுக்குப் போக முடியும்; ஆளுகிற வர்க்கமாக, மேல் மட்டத்தில் நாட்டை ஆளுகிற, எப்படி வெள்ளைக்காரர்கள் இந்திய நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டார்களோ அதைப் போல ஆளுகிற வர்க்கமாக பணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் ஆகிய மக்களை உருவாக்கும் திட்டமாக நவோதயா பள்ளிகள் இருப்பதால் இந்தக் கல்வி கொள்கை 80 சதவீதம் ஏழையெளிய நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்த, பின்தங்கியுள்ள கிராமங்களைக் கொண்ட இந்திய துணைக் கண்டத்திற்கு சற்றும் ஒவ்வாத ஒன்று. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களை பெரிதும் பாதிக்கக்கூடிய ஒன்று, சமுதாயத்தில் பின்தங்கி இருக்கக் கூடிய மக்களை பாதிக்கக் கூடிய ஒன்று என்ற காரணத்தால் இந்தக் கொள்கையை தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு ஒரு சிறிதும் ஏற்கவில்லை என்பதை நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற
போது அண்ணா பலகலைக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும்
'கேட்' தேர்வில் 10 சதவீதம் பேர்தான் வெற்றி பெற்றிருக்
கிறார்கள். இந்த நிலைக்கு என்ன காரணம் என்றால், தரமற்ற
கல்விதான் என்று சொன்னார்கள். தவறான தகவலின் அடிப்
படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம்
பலவற்றைச் சொன்னார்கள். அதை நான் தெளிவுபடுத்த
விரும்புகிறேன். 'கேட்' என்று சொல்லப்படுகிற இந்தத் தேர்வை
பொறுத்தவரைக்கும் ஒட்டுமொத்தமாக இந்திய துணைக்
கண்டத்திலே தேர்வு எழுதியவர்கள் 27,083 பேர். அதிலே ஒட்டு
மொத்தமாக இந்திய துணைக் கண்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்
டவர்கள் ஏழாயிரம் பேர். அண்ணா பல்கலைக் கழகத்திலே
தேர்வு எழுதியவர்கள் 726 பேர். அண்ணா பல்கலைக் கழகத்
திலே தேர்வு எழுதிய 726 பேரில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 255
பேர். அகில இந்திய அளவிலே ஒட்டுமொத்தமாக பார்க்கும்
போது இந்தத் தேர்வில் அதிகமான எண்ணிக்கையில் வெற்றி
பெற்றவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த அண்ணா பல்கலைக் கழகத்
தைச் சேர்ந்த 255 பேர்தான். அதற்கடுத்து ரூர்கி யூனிவர்சிட்டி
யில் 22 பேர், அதற்கடுத்து பாம்பேயில் 186 பேர், அதற்கடுத்து 142
பேர், இந்திய துணைக் கண்டத்தில் அதிகப்படியான எண்ணிக்கை
யில் இந்தத் தேர்வில் வெற்றி பெற்று பாராட்டைப் பெற்றிருக்
கிறது அண்ணா பல்கலைக் கழகம். ஆகவே மிக தவறான
தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் ஏன்
சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை.

அதைப் போலவே என்ஜினியரிங் காலெஜ் அட்மிஷனில் ஊழல்
என்று சொன்னார். அவர் எந்த நிலையிலே சொன்னார் என்று
தெரியவில்லை. As far as these admissions are concerned, everything
is being computerised now. மாண்புமிகு உறுப்பினருக்கு
ஒரு வேளை இது தெரியாமல் இருக்குமோ என்னவோ, தெரிய
வில்லை. வினாக்கள்—விடைகள் திருத்துவதுகூட by means
of a computer. இந்த முறையைக் கொண்டு வந்துவிட்
டோம். நம்மைப் பார்த்து மற்ற மாநிலங்களிலும் இந்த
முறையைக் கொண்டு வர வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்
கிறார்கள். சில நேரங்களில் கிராமப்புற மாணவர்களுக்குப்





போதிய இடம் கிடைக்கவில்லை என்ற வருத்தம் அரசுக்கு உண்டு.
ஆனாலும் குற்றச்சாட்டு வரக்கூடாது என்பதற்காக
Purely on the basis of merit, things are being valued and evaluated
and, that too, by way of computerisation. இந்த முறையிலே நடக்
கிறபோது அதிலே குறைபாடு என்று எப்படி சொன்னார் என்று
தெரியவில்லை. அண்ணா டெக்னிக்கல் யூனிவர்சிட்டியைப்
பொறுத்தவரையில் they are being selected strictly in accordance
with the marks. அவர்களுடைய மதிப்பெண்களுக்கேற்ப
வரிசைப்படி தேர்வு செய்யப்படுகிறார்கள். For selection for admiss
ions to the Anna Technical University, the State is treated as a Uni
என்பதால் பல இடங்களில்
இருந்து அதிக மதிப்பெண்கள் பெற்று வருகிறார்கள். காரைக்
குடியில் இருந்து சென்னைக்கு எப்படி வந்தார் என்றால் அதிக
மதிப்பெண்களைப் பெற்று வந்திருப்பார். அதிக மதிப்பெண்
களைப் பெற்றவர்களுக்காகத்தான் அண்ணா யூனிவர்சிட்டி
அவர்களுக்குத்தான் அண்ணா யூனிவர்சிட்டியில் இடம் கிடைக்
கிறது. அந்த அடிப்படையில் நடைபெறுகிறதே ஒழிய மற்றபடி
அங்கே ஒன்றும் இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(இரவு 7-00)

மாண்புமிகு திரு. ரகுமான்கான் பேசும்போது சென்னைப்
பல்கலைக் கழகத்திலே சில குறைபாடுகள் இருப்பதைச்
சொன்னார். அவரிடம் அந்தத் தகவல்களைக் கேட்டிருக்கிறேன்.
தருவதாகச் சொல்லியிருக்கிறார். அதைப் பெற்றவுடன்
சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு அனுப்பி
விளக்கம் கேட்டு, அது குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள
இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை
பல்கலைக் கழகத்திலே செனட், சிண்டிகேட் ஆகியவற்றுக்கு
தேர்தல் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். வழக்கு
ஸ்டே செய்யப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்த வழக்குக்கு
தீர்வு பெற்று, முறைப்படி அங்கே தேர்தல்கள் நடத்த அரசு தக்க
நடவடிக்கைகள் எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகிறபோது,
மைக்ரோ டேஸ்ட் எஜுகேஷன் என்ற முறையில் கிராமப்புற
பொருளாதாரத்தை உயர்த்தும் அளவுக்கு புதிய கல்வித்

கொள்கை வேண்டுமென்றுச் சொன்னார்கள். மத்திய அரசு கொடுத்துள்ள தாக்கீதில் சற்று மாற்றங்கள் செய்து, கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய வொகேஷனல் எஜுகேஷனைக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தகிருஷ்ணா அவர்கள் பேசுகிறபோது ஸ்போர்ட்ஸ் ஆக்டிவிடீஸ் பொறுத்தவரையிலும் இன்னும் சில மேம்பாடுகள் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக எல்லா மாவட்ட அளவிலும் நிதி ஒதுக்கி, பல்வேறு ஆக்கப் பணிகள் நடைபெறுகின்றன. இன்னும் சில மேம்பாடுகள் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மைனாரிட்டி பள்ளிகளைப் பொறுத்தவரைக்கும் தமிழ் கட்டாயம் வர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி உட்பட பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து தக்க நடவடிக்கை ஆய்ந்து மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது, 86000 பேர் தொழிற் கல்வியைப் பயின்று வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற குறிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. வொகேஷனல் எஜுகேஷனைப் பொறுத்தவரையில் தற்போது இருக்கும் வொகேஷனல் சப்ஜெக்ட்ஸ்-ஐ மாற்றி, வேலை வாய்ப்பு தரும் வொகேஷனல் சப்ஜெக்ட்ஸ்-ஐ அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம் இது போன்ற பிரச்சினையை நீக்க முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதிப் பெயரில் பள்ளிக்கூடங்கள் கூடாது என்பது அரசினுடைய கொள்கை. அதை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் பதில் சொல்வது என்றால் நேரம் போதாது. அரசு அவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு தக்க நடவடிக்கைகளை அவ்வப்போது எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. அ. ரகுமான்கான்:** பேரவையினுடைய தலைவரவர்களே, ஆசிரியர் பெருங்குடி மக்கள், அந்தச் சமுதாயத்தினுடைய சார்பாக சில கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், அவர்களை அழைத்துப் பேசி, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவ வேண்டும். நான் இங்கே சபைக்கு வருவதற்கு முன்பாக அவர்கள் மத்தியில் பேசிவிட்டு வந்தேன். அவர்களோடு பேசுவதற்கு அரசாங்கம் மறுக்கிறது என்ற குற்றச் சாட்டை அவர்கள் சொல்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாக அமைச்சரவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள், மேலும் ஓர் ஆணையிட்டிருக்கிறார்கள். மொழிக் காவலர் நிதி உதவி என்ற தலைப்பின்கீழ் இந்த உதவியினை தமிழ் மொழிக் காப்பு, எல்லைப் போராட்டம் போன்ற வகையில் குண்டடி, துப்பாக்கிச் சூடு, தீக்குளிப்பு, சிறை வாழ்வு என்று மொழிக்காப்புத் தியாகத்தில் ஈடுபட்டவர்களின் குடும்பங்களுக்கு தலா 250 ரூபாய் 14—4—1987 முதல் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் போராட்டம் பற்றிச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி ஏற்கெனவே தெளிவாக்கியிருக்கிறேன். 1985-லே ஆசிரியர் போராட்டம் நடந்த போது மாண்புமிகு முதல்வரவர்கள் அதைப்பற்றிப் பேசி, அதிலே சுமூக உடன்பாடு ஏற்பட்டு, பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. மீதமுள்ள பிரச்சினைகள் சிலவற்றை 'ஒன் மேன் கமிஷன்'-க்கு விடப்பட்டது. தற்போது, ஜனவரி மாதத் தாக்கில் ஆசிரியர் பிரதிநிதிகள் பல்வேறு பிரிவினர் என்னை வந்து சந்தித்தனர். சந்தித்துப் பேசினார்கள். 2, 3 முறை சந்தித்து, விளக்கம் கேட்டு, அதுபற்றி மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு எழுதித் தாருங்கள் என்று கேட்டேன். இரண்டு முறை பேசிவிட்டு, மற்ற மாநிலங்களோடு எல்லாவற்றையும் ஒப்பிட்டு எழுதித் தருகிறோம் என்று சொல்லிச் சென்றவர்கள், 10-ஆம் தேதி போராட்டம் என்று போராட்ட அறிவிப்பு வெளியிட்டார்கள். போராட்ட

அறிவிப்பு வெளியிட்ட பிறகு அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. சிலர் போராட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். சிலர் போராட்டத்திற்கு மறுப்பு தெரிவித்தார்கள். அங்கீகரிக்கப்பட்ட சில சங்கங்கள் அரசோடு பேச்சு வார்த்தைக்கு வந்தபோது, அப்போது இவர்கள் பேச்சு வார்த்தைக்கு வரவில்லை. போராட்டம் என்ற முறையிலே ஈடுபட்டிருந்தார்கள். இதுதான் காரணம். இவர்கள் பேசுவதற்கு வந்து சுமூகமாக பிரச்சினை தீரவேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். ஒருபுறம் என்னிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, மறுப்புறம் போராட்டம் நடத்துகிறதாக அறிவித்துவிட்டு அவர்கள் பிளாக்மெயில் செய்வது போல் ஒரு பிரச்சினையை உருவாக்குகிற சூழ்நிலை ஏற்பட்டது. இந்த அரசைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிரச்சினை எதுவாக இருந்தாலும் பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதிலே அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது. உரிமைக்காகப் போராட உரிமையுண்டு. அதற்காக [illegible] பண்ணிய வைக்க முடியும் என்ற நோக்கத்தோடு சில பிரச்சினைகளை அணுகுவார்கள் என்றால் அதற்கு இந்த அரசு இடம் தராது.

**திரு. [illegible]:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுக்கு என்று தனி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை . . .

**திரு. கே. சுப்பையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் போராட்டம் என்பது பெரிய குற்றமல்ல. தாங்கள் வலியுறுத்துகிற கோரிக்கைகளை குறிப்பாக அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு ஜனநாயக மரபுகள் அனுமதித்திருக்கின்ற வட்டத்திற்குள்ளே இருந்துதான் போராடினார்கள். அவர்களை அழைத்து பேசுவது என்பது தவறல்ல. பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு முக்கியமான விஷயம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்து அவர்களிடமிருந்து தகவலைப் பெற விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அரசு உதவி பெறுகிற பள்ளிகளானாலும் உதவி பெறாத [illegible]யில் உருவாக்கப்பட்டிருக்கின்ற கல்லூரி[illegible]னாலும் சரி. பள்ளிகள் ஆனாலும் சரி, அங்கே பணியாற்றுகிற





ஆசிரியர்கள் உண்மையிலேயே வார்த்தைக்காகச் சொல்லவில்லை— கொத்தடிமைகள் போல் நடத்தப்பட்டு வருகிறார்கள். நடைமுறையில் கொடுக்கப்படுகின்ற சம்பளம் வேறு அங்கே வவுச்சரில் வாங்குகின்ற சம்பளம் வேறு. எனவே அரசு பள்ளி ஆசிரியர்களுக்குண்டான சலுகைகளும் உரிமைகளும், அரசு உதவி பெறுகின்ற பள்ளியானாலும், அரசு உதவி பெறாத பள்ளியானாலும், அமுல்படுத்தியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டும். சட்டரீதியாக கொண்டு வருவதற்கு வாய்ப்பிருந்தால் தனியாக ஒரு சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகள் தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அரசு உதவி பெறுகின்ற அல்லது பெறாத தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு ஆசிரியர்களுக்கு சமமாக பாவிக்கப்பட வேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அதற்கேற்ற நடவடிக்கையை கட்டாயம் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், சோ. மா. இராமச்சந்திரன், எஸ். என். இராமசாமி, கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

திருவாளர்கள், கி. வெங்கடாசலம், கே. சுப்பராயன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 17—**கல்வி** என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,96,83,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

[1987 ஏப்ரல் 8

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (9—4—1987) காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-08 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

71. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

138. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

139. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்).

140. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை).



1987 ஏப்ரல் 8]

## இணைப்பு I

(796ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 29-க்கான விடையை காண்க.)

(அ) தமிழ்நாட்டில் 1985–86-ல் இதுவரை குடிதண்ணீர் என்பது சம்பந்தமாக நடந்த போராட்டங்கள் 228.

(ஆ) போராட்டம் நடந்த இடங்கள் :—

**செங்கல்பட்டு மாவட்டம் :**

திருவொற்றியூர், பொன்னேரி, வள்ளூர் கிராமம், அம்பத்தூர், கும்மிடிப்பூண்டி, திருமழிசை, அரம்பாக்கம் பஜார், பொன்னேரி, மீஞ்சூர், புழல், சாலவாக்கம், மாலந்தூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருப்பரங்குன்றம், திருக்கண்டனம், ஆர். கே. பெட்.

**தென்னாற்காடு மாவட்டம் :**

விருத்தாச்சலம், சங்கராபுரம், செஞ்சி, திட்டக்குடி, குறிஞ்சிப்பாடி, அண்ணா கிராமம்.

**தர்மபுரி மாவட்டம் :**

ஒசூர், தெங்கணிக்கோட்டை, அரூர்.

**சேலம் மாவட்டம் :**

சங்ககிரி, இடைப்பாடி, ராசிபுரம், காட்டுவளவு, மற்றும் சவுந்தரபுரம், பாலநாயக்கன்பாளையம், நங்கவல்லி, சேலம் டவுன், ஆத்தூர், நாமக்கல், சேலம், ஆலம்பாளையம், பொட்டிரெட்டிபட்டி, வெண்ணந்தூர், வெல்லரிவள்ளி, குமாரபாளையம், எடப்பாடி, எருமப்பட்டி, நரசுதிப்பட்டி, குள்ளனூர், வேலூர், எம். கந்தம்பாளையம்.

**கோவை நகரம் மற்றும் கோவை மாவட்டம் :**

காரமடை, மரியாபுரம், சிறுமுகை, இடையர்பாளையம், தென்னனூர், நேரு நகர், சித்ரா அருகில் பீளமேடு, கள்ளிமடை, வீரகேரளம், பெரியநாயக்கன்பாளையம், மேட்டுப்பாளையம், திருப்பூர், அன்னுப்பர்பாளையம், வால்பாறை, உடுமலைப்பேட்டை, பீளமேடு.

பெரியார் மாவட்டம் :

வீரப்பன் சத்திரம், சூரம்பட்டி, மூலப்பாளையும், பவானி, சம்பை, காங்கேயம், வெள்ளக்கோயில், பெருந்துறை, சென்னி மலை, அரச்சலூர், நம்பியூர், ஊத்துக்குளி, புளியம்பட்டி, ஈரோடு, தாராபுரம், சத்தி, கொளத்துப்பாளையும், ஆப்பக் கூடல், நள்ளூர்.

நிலகிரி மாவட்டம் :

புழம்பட்டி, கோத்தகிரி, மசினகுடி, நடுவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் :

திருச்சி, எம். நல்லூர், தென்னாய்தகனம், பெரம்பலூர் திருவெறும்பூர், ஸ்ரீரங்கம், மேட்டுப்பாளையம், டி.டி. பேட்டை, சூரியமங்கலம், கள்பாளையம், உப்பிலியாபுரம், மணப்பாறை, ஆலத்தூர், தொட்டியம், கரூர், அரியாரூர், கரூர், லால்குடி, நாவல்பட்டு, திருவரம்பூர், கோமக்குடி, அரியலூர், சமயபுரம், விக்கிரமங்கலம், கே. பரமத்தி.

தஞ்சை மாவட்டம் :

நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், வேதாரண்யம், கொரடாச்சேரி, நன்னிலம், குடவாசல், மயிலாடுதுறை, சீர்காழி, பொறையார், தலைஞாயிறு, வெளிப்பாளையம், வில்லார் கங்கௌாய தோட்டம், கோட்டூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருவையாறு, பாலச்சூர் பேராவூரணி.

இராமநாதபுரம் மாவட்டம் :

பரமக்குடி, பார்த்திபனூர், முதுகுளத்தூர், இராமேஸ்வரம், வேர்கோடு.

காமராஜர் மாவட்டம் :

இராஜபாளையம், விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்சுழி.

புதுக்கோட்டை மாவட்டம் :

புதுக்கோட்டை, அறந்தாங்கி, பொன்னமராவதி, கந்தர்வக் கோட்டை.



மதுரை மாவட்டம் :

அவனியாபுரம், விளாங்குடி, பழங்கான்த்தம், வாலாந்தூர். கள்ளிக்குடி, மதுரை, செல்லம்பட்டி.

அண்ணா மாவட்டம் :

சௌரியார் பாளையம், சக்தி தியேட்டர் அருகில், நாகர் நகர், தாடிக்கொம்பு.

திருநெல்வேலி மாவட்டம் :

கயத்தார், விளாத்திகுளம், காமராஜ் நகர், கருப்பன்குளம், கோவில்பட்டி, குருவிக்குளம், இராஜப்புதுக்குடி.

கன்னியாகுமரி மாவட்டம் :

திருவட்டார், பத்மநாபபுரம், சடயன்குழி, கருங்கல், சந்தைக் கோணம், குள்ச்சல், நாகர்கோயில், புதுக்கடை, எட்டாவை, கிள்ளியூர், தெரு, பாலூர், அழகியபாண்டிபுரம், கிராத்தூர். தக்கலை, விலவூர், கன்னியாகுமரி நகர்புரம்,

## இணைப்பு—II.

(83 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1. தோற்றுவாய்.

**(1) கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும் :**

கல்விக்காக 1987–88 ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை 17—கல்வி'' இன் கீழ் ஒதுக்கியுள்ள ரூபாய் 597 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 2,874 கோடியில் சுமார் 21 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் 1987–88 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

1987–88 வரவு-செலவு மதிப்பீடு.

| | திட்ட மல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 2059. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு .. .. | 1,33 | .. | 1,37 |
| 2075. பலவகை—அகவிலைப் படிக்காக மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 8,57 | .. | 8,53 |
| 2202. பொதுக் கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி | 2,43,31 | 48,95 | 2,92,26 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. .. | 1,83,53 | 8,49 | 1,92,02 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 49,25 | 7,46 | 56,71 |
| 4. வயது வந்தோர் கல்வி | 1,27 | 4,91 | 6,18 |
| 5. மொழி வளர்ச்சி .. | 94 | 8 | 1,02 |
| பொதுக் கல்வி மொத்தம் | 4,78,30 | 69,89 | 5,48,19 |
| 2203. தொழில் நுட்பக் கல்வி | 16,46 | 4,15 | 20,61 |
| 2204. விளையாட்டும், இளைஞர் நலனும் .. | 3,97 | 1,94 | 5,91 |



1987–88 வரவு–செலவு மதிப்பீடு.

| | திட்ட மல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம், |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2205. கலை, பண்பாடு— | | | |
| நூலகங்கள் .. | 5,41 | 23 | 5,64 |
| ஆவணக் காப்பகங்கள் | 41 | 9 | 50 |
| நுண்கலைக் கல்வி : கலை கைத்தொழில் கல்லூரிகள் .. | 39 | 11 | 50 |
| இசைக் கல்லூரிகள் | 16 | 5 | 21 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு.. | 10 | 76 | 86 |
| தொல்பொருள் ஆராய்ச்சி | 22 | 21 | 43 |
| அருங்காட்சியகங்கள் கலை, பண்பாடு .. | 32 | 15 | 47 |
| மொத்தம் .. | 7,01 | 1,60 | 8,61 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் .. .. | 1,19 | .. | 1,19 |
| 3425. ஏனைய அறிவியல் பணிகள் .. .. | .. | 2,39 | 2,39 |
| 3454. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரங்கள்— | | | |
| மாவட்ட விவரச் சுவடிகள் | .. | 4 | 4 |
| பெரு மொத்தம்—மானியக் கோரிக்கை ''17—கல்வி'' .. | 5,16,83 | 80,01 | 5,96,84 |

துறைவாரியாக நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| கல்வித் துறை .. | 5,15,52 | 76,41 | 5,91,93 |
| மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை .. .. | .. | 2,39 | 2,39 |
| தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை .. .. | 1,31 | 1,21 | 2,52 |
| மொத்தம் .. | 5,16,83 | 80,01 | 5,96,84 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காகப் பிற மானியக் கோரிக்கைகளின்கீழ் 1987–88-இல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | 1987–88 வரவு செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 28— சமுதாய வளர்ச்சி-சமூகக் கல்வி .. .. | .. | 10 | 10 |
| மானியக் கோரிக்கை 37— பொதுப் பணி— அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள்— சிறு பணிகள் .. | 10 | 34 | 44 |
| 2071. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் | 33,11 | .. | 33,11 |
| 2236. சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள் வகையில் செலவு .. .. | 37,00 | 55,04 | 92,04* |

*"2236" என்ற தலைப்பில் உள்ள நிதி ஒதுக்கத்தில் ஒரு பகுதி இளைஞ்சிறார் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்ததாகும்.





(ஆ) வருவாய்க் கணக்கின் கீழ்வராத செலவு—

| | | | |
|---|---|---|---|
| 4202. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு— அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டடங்கள் .. | 8 | 5,80 | 5,88 |
| கடன்கள்— | | | |
| 6202. தேசிய கடன், படிப்பு உதவித் தொகைகள் .. .. | .. | 25 | 25 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன் | 3 | .. | 3 |
| 7615. தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்குக் கடன்கள் .. .. | 4,83 | .. | 4,83 |
| மொத்தம் .. | 75,15 | 61,53 | 1,36,68 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1987–88 ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 734 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும்—அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு; சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோர்களுக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கும் ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

[1987 ஏப்ரல் 8

**1987—88 ஆம் ஆண்டு கல்வித் திட்டப் பணி செலவு விவரம் :**

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (2202. கல்வி; 4202 கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு, 6202. கடன் முதலியன) கல்விக்காக 1987—88 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விபரம் வருமாறு ("+" குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்).

| | பொறுப் பேற்ற செலவினம். | 1987 88-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செல வினங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| I. பொதுக் கல்வி— | | | |
| 1. பள்ளிக் கல்வி .. | 48,50 +34 | 11,95 | 60,45 +34 |
| 2. வயது வந்தோர் கல்வி | 1,79 +2,97 | 15 | 1,94 +2,97 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 8,11 +25 | 91 | 9,02 +25 |
| 4. தமிழ் வளர்ச்சி .. | 4 | .. | 4 |
| மொத்தம் .. | 58,44 +3,56 | 13,01 | 71,45 +3,56 |
| II. தொழில் நுட்பக் கல்வி | 4,36 +9 | 45 | 4,81 +9 |
| III. விளையாட்டு, இளைஞர் நலன் .. .. | 1,56 +1,16 | .. | 1,56 +1,16 |



1987 ஏப்ரல் 8]

| | பொறுப் பேற்ற செலவினம். | 1987—88-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செல வினங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| IV. கலைப் பணிகள்— | | | |
| கல்வித்துறை .. | 43 | 3 | 46 |
| தமிழ் வளர்ச்சித் துறை | 1,11 | 14 | 1,25 |
| மொத்தம் .. | 1,54 | 17 | 1,71 |
| பெரு மொத்தம் .. | 65,90 +4,81 | 13,63 | 79,53 +4,81 |

### (ii) தேசியக் கல்விக் கொள்கை.

புதிய கல்விக் கொள்கையை உருவாக்கும் பொருட்டு மைய அரசு 1985 ஆகஸ்ட் திங்களில் "கல்வி ஒரு சவால்—ஒரு கொள்கைத் தொலைநோக்கு" என்னும் முன்னோடி அறிக்கையை வெளியிட்டது. பின்னர் நாடு தழுவிய விவாதத்திற்குப் பின்னர், புதிய தேசிய கல்விக் கொள்கை 1986 மே திங்களில் பாராளுமன்றத்தில் வைக்கப் பெற்றது.

2. தேசியக் கல்விக் கொள்கையை அமுல்படுத்துவது குறித்து மைய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்தும் பணியை மைய அரசின் "மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம்" கவனித்து வருகிறது. இக் கொள்கையின் பல்வேறு அம்சங்களை அமுல் படுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்கான விரிவான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

3. தேசிய கல்விக் கொள்கையில் கல்வி வளர்ச்சிக்காகத் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான அம்சங்கள், தமிழ்நாடு அரசுக்கு இசைவானதாகவே உள்ளன. பார்க்கப் போனால் தேசிய கல்விக் கொள்கையின் முக்கிய பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு ஏற்கனவே

7. புதிய கல்விக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஓரிரண்டு விஷயங்களில் மட்டும் இவ்வரசின் நிலை மைய அரசின் கொள்கைக்கு மாறுபட்டதாக உள்ளது. இவ்வரசின் நிலை அவ்வாறு மாறுபட்டதாகத் தோன்றிய போதிலும், அது விழுமிய கல்வித் தத்துவங்களின் அடிப்படையில் அமைந்த நிலையே ஆகும்.

8. புதிய கல்விக் கொள்கை, பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை பரிந்துரைத்துள்ளது. தமிழக சட்ட மன்றத் தீர்மானத்தின்படி அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தமிழக அரசு தமிழ்நாட்டுப் பள்ளிகளில் (கல்வித் துறை நிலை ஆணை 105/24—1—1968-ன் படி) பின்வரும் இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்தியது :—

| | | |
|---|---|---|
| பகுதி-ஏ மொழி. | 1—11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (10+2+3 வகுப்பு முறை அமுலுக்கு வந்தபின் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு இறுதியில் எஸ்.எஸ்.எல்.சி., நடைபெறுவதால் 1—10 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது). | வட்டார மொழி (தாய் மொழியானது வட்டார மொழி அல்லாத வேறு மொழியாக இருக்கும் பட்சத்தில் அந்த தாய் மொழி). |
| பகுதி-பி மொழி. | 3—11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (தற்பொழுது 3—10 வகுப்புகளில்). | ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத வேறு ஏதாவது மொழி. |

9. மும்மொழிக் கொள்கை எந்த நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதோ அதற்கேற்ப உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற இந்தி பேசும் மாநிலங்களில் செயல்படுத்தப்படுவதில்லை. அம்மாநிலங்களில் குடியேறி வசிக்கும் தென்னிந்தியர் சங்கங்கள் நடத்தும் ஓரிரு பள்ளிகளைத் தவிர பிற பள்ளிகளில் பள்ளிப் பாடத் திட்டத்தில் மூன்றாவது மொழியாக தென்னிந்திய மொழிகள் எவையும் கற்றுத் தரப்படுவதில்லை. சொல்லப் போனால், இந்தி மாநிலங்களில் பெரும்பாலான பள்ளிகளில் "ஒரு மொழிக் கொள்கையே" பின்பற்றப்படுவதாகக் கூறலாம்—அதாவது 6—8 வகுப்புகளில் மட்டுமே ஆங்கிலம் கட்டாய பாடமாகக் கற்றுத் தரப்பட்டு அதற்குமேல் வகுப்புகளில் அம்மொழி விருப்பப் பாடமாக உள்ளது. இந்தி பேசும் மாநிலங்களின் பள்ளிகளில் பலவற்றில் மூன்றாவது மொழியாக இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததும் இந்தியோடு நெருங்கிய தொடர்புடையதுமான சமஸ்கிருதமே கற்றுத் தரப்படுகிறது.

வகுப்புத் தொகுதிவாரியான மாணவ, மாணவியர் எண்ணிக்கை வருமாறு :—

| வகுப்புகள். (1) | மாணவர். (2) | மாணவியர் (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்). | | |
| 1—5 .. .. | 39.63 | 33.65 | 73.28 |
| 6—8 .. .. | 15.48 | 10.68 | 26.16 |
| 9—10 .. .. | 6.03 | 3.67 | 9.70 |
| 11—12 .. .. | 2.15 | 1.47 | 3.62 |
| | 63.29 | 49.47 | 112.76 |

நிருவாக வாரியாக பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

2. 1987-88-ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு பின் வரும் ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படவிருக்கின்றன :—

| | |
|---|---|
| இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பணியிடங்கள். | 500 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடற் பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள். | 25 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கு பி. எட். தரத்தில் தலைமை ஆசிரியர். | 100 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தமிழாசிரியர் பணியிடங்கள். | 75 |
| உயர்நிலைப் பள்ளிகளுக்கு பி.எட். தர ஆசிரியர் பணியிடங்கள். | 100 |
| நடுநிலைப் பள்ளிகளில் (ஏற்கனவே உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை உயர்த்தி) முழுநேரப் பணியிடங்கள். | 50 |
| | 850 |



**பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :**

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் : முக்கிய
3. பள்ளி வளர்ச்சிப் பணிகளில் உள்ளூர் மக்கள் முக்கிய
பங்கேற்க வேண்டுமென்பதை தேசியக் கல்விக் கொள்கை—1986
வலியுறுத்துகிறது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் பள்ளி
களில் வசதிகளைப் பெருக்குவதற்கு உள்ளூர் மக்களின் ஒத்
துழைப்பை பெறுவதில் முன்னோடியான தமிழ்நாடு 1986-87ல்
இவ்வகையில் சிறந்த சாதனை நிகழ்த்தியது. 1986-87ல் நடத்திய
9 மாநாடுகளின் மூலம் ஏறத்தாழ 5.23 கோடி மதிப்புள்ள நன்
கொடை பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது.

(ii) தொடக்கக் கல்வி.

தேசிய கல்விக் கொள்கை பின்வரும் இரு முக்கிய அம்சங்
களை வலியுறுத்துகிறது.

(i) 14 வயது வரையிலுள்ள குழந்தைகள் அனைவரையும் தொடக்கப் பள்ளிகளில் சேர்த்து இடையில் நின்று விடாமல் கல்வி பயிலச் செய்தல்.

(ii) தொடக்க கல்வியின் தரத்தை பெருமளவில் மேம்படுத்துதல். பள்ளி வயது சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை அளித்தல் 20 அம்ச திட்டத்திலும் இடம் பெற்றுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதி ஆண்டாகிய
1989-90-ம் ஆண்டின் இறுதிக்குள் அடைய வேண்டும் என மைய
அரசு கருதியுள்ள இலக்குகள் 6—11 வயது குழந்தைகளுள் 100
சதவிகிதமும, 11—14 வயது குழந்தைகளுள் 75 சதவிகிதமும்
பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்
டில் ஏற்கனவே 6—11-ல் வயதுத் தொகுதியினருள் பள்ளி
யில் சேர்ந்துள்ளோர் விழுக்காடு 100 சதவிகிதத்தையும், 11—14
வயதுத் தொகுதியினருள பள்ளியில் சேர்ந்துள்ளோர் விழுக்காடு
79.63 சதவிகிதத்தையும் எய்தியுள்ளது மகிழ்வு தரத்தக்கதாகும்.
தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1986—87-ல் கூடுதலாகப்
பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை வருமாறு:—

| வயதுத் தொகுதி. (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்). | | |
| 6—11 .. .. | 0.73 | 0.62 | 1.35 |
| 11—14 .. .. | 0.79 | 0.70 | 1.49 |
| | 1.52 | 1.32 | 2.84 |

2. கல்வித் தரத்திற்கு அடித்தளமாக விளங்கும் ஆரம்பக் கல்வியை விரிவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தும் நோக்கத்தில் 1986 ஜூலை 12-ம் தேதியிலிருந்து ஆரம்பக் கல்விக்கு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

3. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்க்கவும் சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக்கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும். தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்தும் இளஞ்சிறார் கல்வியில் இவ்வாறு தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வது தெளிவாகும்.

**முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1—10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.**

4. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கும், இடையிடையே நின்றுவிடுவோர் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் பெரும் பங்கு பெற்றுள்ளது. தமிழகத்தில் 1–7–1982/15–9–1982 முதல் 1–5 வகுப்புகளிலும், 15–9–1984 முதல் 6–10 வகுப்புகளிலும் அமுலாக்கப்பட்டது.

5. இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1–10 வகுப்புகளில் படிப்பவர்களில் அனைத்துத் துறை பள்ளிகளையும் சார்ந்த 64 இலட்சம் குழந்தைகள் 38,399 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகின்றனர். இம்மையங்களில் பெரும்பாலானவை பள்ளிக் கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும், மற்றவை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை; பிற்பட்டோர் நலத்துறை; நகராட்சி நிருவாகத் துறை ஆகியவற்றின் இயக்குநர்கள்; மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள்; ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன.

6. 1—5 வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும், அந்நாட்களுக்குரிய உணவு பொட்டலமும்





முதல் நாளன்றே தரப்படுகிறது. 6—10 வகுப்புக் குழந்தைகளுக்கு பள்ளி வேலை நாட்களில் சத்துணவு வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தரப்படும் உணவின் அளவு வருமாறு :

| | 1—8 வகுப்புகள். | 9—10 வகுப்புகள். |
|---|---|---|
| | (அளவு கிராம்களில்). | |
| அரிசி .. .. .. | 100 | 120 |
| பருப்பு .. .. .. | 15 | 15 |
| எண்ணெய் .. .. | 3 | 3 |
| காய்கறிகளும் மசாலாப் பொருட்களும். | 50 | 50 |

**1—8 வகுப்பு மாணவ, மாணவியருக்கு இலவச சீருடை :**

7. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1–8 வகுப்புகளில் பயில்வோருள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு பெறுவோர் அனைவருக்கும் ஆண்டுக்கு ஒரு இலவச சீருடை வழங்கும் மாபெரும் திட்டத்தை 1985–86 முதல் அரசு அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1986-87இல் மொத்தம் ரூ. 15.81 கோடி செலவில் 58.68 லட்சம் மாணவ, மாணவியருக்குச் சீருடைகள் அளிக்கப்பட்டன. இத்திட்டம் கைத்தறி மற்றும் நெசவுத்துறை, சமூக நலத்துறை, கதர்வாரியம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**1—8 வகுப்பு மாணவ, மாணவியருக்கு இலவச பாடப்புத்தகங்கள் :**

8. அனைத்துப் பள்ளிகளிலும் 1–8 வகுப்புகளில் பயின்று சத்துணவு பெற்று வருவோர்க்கு இலவசப் பாட நூல்களை வழங்குவதற்கான மாபெரும் திட்டம் ஒன்றையும் அரசு 1985-86 முதல் அமுலாக்கி வருகிறது. 1986-87-ல் மொத்தம் ரூ. 11.54 கோடி செலவில் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஏற்றுக்கொண்ட ரூ. 1.24 கோடி உட்பட) 60 லட்சம் மாணவ மாணவியருக்கு இலவசப் பாட புத்தகங்கள் வழங்கப்பட்டன. அவ்வாண்டில் முதல் வகுப்பில் பயிலும் 5 லட்சம் குழந்தைகளுக்கு ரூ. 11.52 லட்சம் செலவில் கரும்பலகைகளும் வழங்கப்பட்டன.

[1987 ஏப்ரல் 8

**புத்தக வங்கிகள் :**

9. அநேகமாக அனைத்துப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**1—8 மாணவ, மாணவியருக்கு இலவச காலணிகள் :**

10. 1987–88 முதல் அனைத்துப் பள்ளிகளிலும் 1–8 வகுப்புகளில் பயின்று சத்துணவு பெற்று வருவோருக்கு இலவச காலணிகள் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கு 1987–88-ல் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**பள்ளியில் இருந்து இடையில் நின்றுவிடுவோர் விழுக்காடு :**

11. பள்ளிகளில் மாணவர்கள் கூடுதலாகச் சேருவதற்கும், தொடர்ந்து படிப்பதற்குமான மேற்சொன்ன பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களின் காரணமாக பள்ளிகளில் சேரும் (6–11 வயதுத் தொகுதி) குழந்தைகளில் தொடர்ந்து ஆரம்பக் கல்வி நிலையில் படிக்காமல் இடையில் நின்றுவிடுவோர் விழுக்காடு 1977–78-ல் 40 விழுக்காடாக இருந்தது. 1985–86-ல் 22 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

**தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் :**

12. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1982-83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 4,500-க்கு ரூ. 30 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டன. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக "சமுதாய வளர்ச்சி" மானியக் கோரிக்கையில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற தொழிலாளர் வேலைக் காப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் :**

13. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1–6–1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் பள்ளிக் கல்வித்துறை கவனித்து வருகிறது. இப்பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 97,404 ஆகும். இவ்வாசிரியர்களுக்கு பணி விதிகள் விரைவில் வெளியிடப்படும்.



1987 ஏப்ரல் 8]

**நகராட்சி/மாநகராட்சித் தொடக்கப் பள்ளிகள் :**

14. நகராட்சிகள் நகரியம், மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் யாவரும் 1–6–1986 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இதனை அமுலாக்குவதற்கான விரிவான திட்டங்களை ஒருங்கிணைப்புக்குழு வகுத்து வருகிறது. அதுவரை இடைக்காலத்தில் தற்காலிக ஏற்பாடாக ஏற்கனவே உள்ள நடைமுறைகளின்படி இப்பள்ளிகள் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. 1986–87-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,550 ஆகும். (1,133 தொடக்க நிலை மற்றும் 417 நடுநிலைப் பள்ளிகள்). 16,451 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணி செய்கின்றனர்.

## (iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1986–87-ல் தமிழ்நாட்டின் 14–16 வயதுத் தொகுதியினர் 18.36 இலட்சம் பேர்களுள் 52.85 விழுக்காடாகிய 9.70 இலட்சம் பேர் உயர்நிலைப்பள்ளிகளில் 9–10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1986–87-ல் உயர்நிலைப்பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | சாதாரண பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் இதர மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்ற வேறொரு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,592 | 96 | 2,688 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 1,599 | 79 | 1,678 |
| | 4,191 | 175 | 4,366 |

[1987 ஏப்ரல் 8

1986–87-ல் மேற்கண்ட பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு—:

| (1) | மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) (2) |
|---|---|
| 8 ஆம் வகுப்பும் கீழும் .. .. .. .. | 18.57 |
| 9–10 வகுப்புகள் .. .. .. .. | 9.70 |
| 11–12 வகுப்புகள் .. .. .. .. | 3.62 |
| மொத்தம் .. | 31.89 |

1986–87 இல் 100 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

**அறிவியல் கல்வி :**

2. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. 1986–87 முடிய 1,135 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1987–88இல் மேலும் 12 பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக் கூடக் கருவிகள் பள்ளிக் கல்வி இயக்குநரால் மொத்தமாக வாங்கப் பெற்று பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 1986–87-லிருந்து பள்ளி ஒன்றுக்கு ரூ. 30,000 மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படுகின்றன. ஆய்வுக் கூடக் கட்டிடத்திற்காக ஒவ்வோரு அரசுப் பள்ளிக்கும் ரூ. 1.30 இலட்சம் செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடக் கட்டிடத்திற்காக கட்டிடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 78,000 இதில் எது குறைவோ அது கட்டிட மானியமாக வழங்கப்படுகிறது.

3. இதுவரையில் அறிவியல் ஆய்வுக் கூட வசதியினைப் பெறாத, கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக் காட்டுவதற்காக மொத்தமுள்ள கல்வி மாவட்டங்கள் 56-ல் 51 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி ஒன்று செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 5 கல்வி மாவட்டங்களுக்கும் 1987–88இல் ஆய்வுக்கூட வண்டிகள் வழங்கப்படும்.



1987 ஏப்ரல் 8]

4. பெங்களூரிலுள்ள விசுவேசுவரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகியவற்றிற்கு தென் இந்திய அறிவியல் கண் காட்சி ஒன்றை நடத்திவருகிறது. இக்கண்காட்சியில் 1980–லிருந்து தமிழகப் பள்ளிகளும் கலந்து கொள்கின்றன. 1985-க்கான தென் இந்திய அறிவியல் கண்காட்சி 1986 சனவரியில் பாண்டிச்சேரியில் நடந்தது. இக்கண்காட்சியில் தமிழ்நாடு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றது. தமிழக மாணவர்களில் மூவர் படிப்புதவித் தொகைகளும், 9 பேர்கள் சிறப்பு பரிசுகளும் பெற்றனர். இம்மாநில ஆசிரியர்கள் மூவருக்கு ஆசிரியர்கள் விருது கிடைத்தது. நமது பள்ளிகள் காட்சிக்கு வைத்த அறிவியல் பொருள்களையும் நமது மாணவர்களையும் அனை வரும் வெகுவாகப் பாராட்டினர்.

5. அறிவியல் கருத்தரங்குகள் ஒவ்வோராண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கு ஆகஸ்ட் 1986-ல் சென்னை எழும்பூரிலுள்ள மாநில பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கு பெங் களூரிலுள்ள விசுவேசுவரய்யா தொழில்நுட்ப அருங்காட்சி யக உதவியுடன் நடக்தப்பட்டது. மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த மாநில அளவிலான கருத்தரங்கிற்கு செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்றது.

6. கல்வித் தொழில் நுட்ப செயல்பாடு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பயிற்சி திட்டங்களுக்கும், கட்டிடங்கள் கட்டுவதற்கும், கருவிகள் வாங்குவதற்கும் மைய அரசால் 100 விழுக்காடு நிதியுதவி 1987–88 முடிய வழங்கப்படும். கல்வி தொலைக்காட்சி படநிலயத்திற்கு புதிதாக நியமிக்கப்படும் பணியாளர் செலவினையும் மைய அரசு ஏற்கவிருக்கிறது. தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் கல்வி தொலைக்காட்சி படநிலையம் ரூ. 63.5 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. இது 1988 ஏப்ரலில் கட்டி முடிக்கப்படலாம். மைய அரசு இதற்காக ரூ. 47 இலட்சம் வழங்குவதற்கு முன் வந்து ரூ. 5 இலட்சத்தை இதுவரை அளித்துள்ளது. இத்தொகையை பொதுப்பணித்துறை பெற்று கட்டிட வேலையை தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

**உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் :**

7. 1987–88 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம் .. .. .. .. .. | 3 |

அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் :

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| சிறு பணிகள் .. .. .. .. .. | 33 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டிட வேலைகளுக்கு 1987–88-ல் நிதி ஒதுக்கம் .. .. .. .. .. | 251 |
| புதுப் பணிகள் .. .. .. .. .. | 75 |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிகளுக்காக .. .. | 5 |
| மொத்தம் .. .. .. | 367 |

8. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்காக மொத்தம் ரூ. 5 கோடி செலவில் 1982–83 முதல் செயல்படுத்தப்படும் திட்டத்தில் பெரும் பகுதி நிறை வேற்றப்பட்டு விட்டது. முன்னாள் மாவட்டக் கழக உயர் நிலைப் பள்ளிக் கட்டிடங்களைப் பழுது பார்த்துப் பராமரிக்க ரூ. 1 கோடி செலவுக்கு அரசு 1985–86-ல் ஏற்பளித்துள்ளது. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் அரசு உயர்நிலைப் பள்ளி களுக்கு கட்டிடம் கட்டுவதற்காக 1986–87-ல் ரூ. 50 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

**கல்விச் சலுகைகள், படிப்புதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள் :**

9. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1–12 வகுப்பு களில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவச மாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்பு படிப்பு உதவித் தொகைகளையும், இதர வசதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறையிட மிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறு கின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை திட்டத்தைப் பள்ளிக் கல்வித் துறை நிருவகித்து வரு கிறது. இம் மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ் வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாகப்



படிப்புதவித் தொகைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின் றன. ஒருமுறை உதவித் தொகையினைச் பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளி வரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர். ஏற்பளிக் கப்பட்ட உண்டு-உறை பள்ளிகளில் தங்கிப் பயில்வோருக்காக மைய அரசு ஏற்படுத்தியுள்ள படிப்புதவித் தொகைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு மாணவர்கள் 21 பேர் 1986–87-ல் படிப்பு உதவித் தொகைகள் பெற்றனர்.

10. பெண்கள் கல்வியை ஊக்குவிப்பதற்காக மைய அரசு அண்மையில் அறிவித்துள்ள ஒரு திட்டத்தின்கீழ் 9–12 வகுப்பு களில் மாணவியர்கள் இலவசக் கல்வி காரணமாக எந்த அளவுக்கு படிப்புக் கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்படு கிறார்களோ அந்த அளவுக்கு மைய அரசு நிதியுதவி தர இசைந்து உள்ளது. இவ்வகையில் 1985–86-க்கு ரூ. 47.84 இலட்சம் மைய அரசு மானியமாக வழங்கியுள்ளது. இத் தொகை பெண்களுக் கான கல்வி வசதிகளைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

11. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகிய வற்றில் பள்ளி நேரத்திற்கு பின்னர், நாள் தோறும் ஆசிரியர் களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1986–87-ல் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8–10 வகுப்புகளில் 57,000 மாணவர்களுக்கும், 300 மேல்நிலைப் பள்ளிகளில் 11–12 வகுப்புகளில் 16,000 மாணவர்களுக்கும் பயனளித்து வந்தது. இத்திட்டம் 1987–88-ல் மேலும் 125 உயர்நிலைப் பள்ளிகள், மற்றும் 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

12. எஸ்.எஸ். எல். சி. தேர்வில் தவறிய மாணவர்களுக்கு பள்ளியிலேயே மூன்று மாத காலம் சிறப்பு போதனை தரும் புதிய திட்டம் ஒன்று 1984–85 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு தவறிய மாணவர்களில் 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு ஜூலை-அக்டோபர் மாதங்களில், தெரிந் தெடுக்கப்பட்ட 1,000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி களில் ஒவ்வொரு பள்ளியிலும் 20-லிருந்து 30 மாணவர்கள் வரை சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக அப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் குறிப்பாக நியமிக்கப்பட்ட இரண்டு முழு நேர பி.டி. ஆசிரியர்கள் அவர்களுக்கு போதனை அளிக்கின்றனர். அந்தந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திலோ பிற நேரத்திலோ இந்த போதனை தரப்படுகிறது.

[1987 ஏப்ரல் 8

(iv) பள்ளிப் பாடங்கள், பாடத் திட்டம், பாட நூல்கள், வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டம் :

வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் கல்வி முறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைத்து பள்ளித் கல்வியை அனைத்து மட்டங் களிலும் தொழில் மற்றும் வேலை வாய்ப்போடு இணைந்ததாக ஆக்க வேண்டுமென்பதாகும். இத்திட்டத்தின் நோக்கம் பள்ளி களில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், எல்லா நிலை களிலும் தங்களுடைய தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ள வும், உடலுழைப்பின் மேன்மையை உணர்ந்து கொள்ளவும் செய்ய வேண்டுமென்பதாகும். செயல்முறை அனுபவம் மூலம் தொழில் நுணுக்கங்களை அவர்கள் கற்றுக் கொள்ள இத் திட்டம் வகை செய்யும்.

2. இத்திட்டத்தின்பால் ஆர்வம் கொண்ட பல பள்ளிகள் தாமாகவே முன் வந்து, 1984–85-லிருந்து இத்திட்டத்தைப் பரிட்சார்த்த ரீதியில் செயல்படுத்தி வருகின்றன. இம்முன் னோடித் திட்டம் தற்போது 660 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி களில் 1.11 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது. முதற் கட்டமாக பல பள்ளிகளில் 8-ம் வகுப்பிலிருந்து அந்தந்தப் பள்ளியில் ஏற்கனவே உள்ள வசதி களைக் கொண்டு சமுதாய ஒத்துழைப்பு மற்றும் அரசு சார்பற்ற நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி தொடங்கப் பெற்றது. அந் தந்த பள்ளிகள் தத்தமது சூழ்நிலைகளுக்கேற்றவாறு ஆலோ சித்து தொடங்கி நடத்தும் வித விதமான தொழிற் பயிற்சிகள் நடத்தப் பெறுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். அப் பள்ளிகளில் ஏற்கனவே பணியாற்றி வந்த 2,200 ஆசிரியர்களின் பணி இதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் அந்தந்த வட்டார கைவினைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் போன்றவர் களிடமிருந்து நியமிக்கப்பட்ட பகுதிநேரப் பணியாளர்கள் 990 பேர்களுடைய பணியும் பயன்படுத்தப்பட்டது. 1985–86-ல் பகுதி நேர வாழ்க்கைக் கல்வி பயிற்றுநர் பணியிடங்கள் 750, மாதம் ரூ. 150 ஊதியத்தில் (வருடத்தில் 10 மாதங்களுக்கு) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. வாழ்க்கைக் கல்வித் திட்டத்திற்காக பாடங்கள், பாடத் திட்டம் தயாரிக்கவும், திட்டச் செயற்பாட்டை ஆய்வு செய்யவும் அண்ணா மாவட்டத்திலுள்ள காந்தி கிராம ஊரகப் பல்கலைக் கழகத்தில் செப்டம்பர் 1985 முதல் ஒரு ஆய்வு மையம் தொடங் கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ. 1 இலட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு தொடரும் மானியம் இப்பல்கலைக் கழகத் திற்கு இதற்காக வழங்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 8]

பள்ளிப் பாடங்கள், பாடத் திட்டம் ஆகியவற்றை திருத்தி அமைத்தல் :

4. தேசியக் கல்விக் கொள்கை 1986 மற்றும் வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டம் ஆகியவற்றிற்கேற்ப தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் பாடத் திட்டம், பாடங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். 1984 பிப்ரவரியில் அமைக்கப்பட்ட பாடத் திருத்தக் குழுக்கள் முதலமைச்சர் வாழ்க்கைக் கல்வித் திட்டத்திற்கேற்ப 1 முதல் 12 வகுப்புப் பாடங்களுக்கு திருத்திய பாடத் திட்ட வரைவை தயாரித்துள்ளன. தேசிய கல்விக் கொள்கைக்கேற்ப அப்புதிய பாடத் திட்ட வரைவுகள் மேலும் மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. அவற்றுக்கு இது குறித்து ஆலோசனை கூறி வழி நடத்துவதற்காக கல்வி வல்லுநர் களைக் கொண்ட ஒரு உயர்மட்டக் குழு தேவைப்பட்டது. ஆகவே 19–12–1986 அன்று டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில், கல்வி வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு அரசு மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயங்கள் குறித்து ஆக்க பூர்வமானவையும், செயலாக்கத் தக்கவையுமான அறிக்கைகளையும், ஆலோசனைகளையும் அவ்வப்பொழுது அளித்து வரும், பாடத் திட்டக் குழுக்கள் இந்த உயர்மட்டக் குழுவின் மேற்பார்வையில் செயல்படும்.

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் :

5. தற்பொழுதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1980–81-லிருந்து 1984–85 வரையுள்ள கால கட்டத்தில் படிப்படியாக வெளியிடப்பட்டுள்ளது. பள்ளி களுக்கான திருத்திய பாடத்திட்டத்தின்படியமைந்த பாட நூல் களை அச்சிடுவது பாடத் திட்ட திருத்த வேலை முடிந்த பிறகு மேற்கொள்ளப்படும். பாட நூல் துறை வல்லுநர்களின் பணி யைப் பயன்படுத்தி தரம் வாய்ந்த பாடபுத்தகங்களை உருவாக்கு வதற்கு சிறந்த முறைகளை உருவாக்குவது பற்றி ஆலோசிக்கப் படுகிறது.

6 தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் வட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 54–இன் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங் களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந் நிறுவனம் தனது வெளியீடுகளை தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்கிறது.

7. 1979–80 முதல் தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே செய்து வருகிறது. 1987–88 ஆம் ஆண்டில் தயாரிக்க இருக்கும் நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 6 கோடியாகும்.

8. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் வேறு பணிகளில் சில : 1–8 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பாட நூல்களை வழங்கும் செலவில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளுதல் ; அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல் ; பள்ளி சாராக் கல்விக்கான புத்தகங்கள், தமிழில் கல்லூரிப் பாட நூல்கள், தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலியனவாகும்.

### (V) ஆசிரியர் பயிற்சி.

தற்பொழுது பின்வரும் விவரப்படி அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நிறுவனங்கள் 75 உள்ளன :—

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அரசு .. .. .. | 14 | 15 | 29 |
| அரசு (சமூகநலத் துறை) | . | 1 | 1 |
| (உதவிபெறும்) தனியார் | 14 | 31* | 45 |
| | 28 | 47 | 75 |

* இவற்றில் சென்னை-7-ல் உள்ள கிறிஸ்தோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு இணைந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு 1-ம் இளஞ்சிறாருக்கான ஆசிரியை பயிற்சி நிலையங்கள் 3-ம் அடங்கும்.

1984–85-லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 40 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.



2. 1985-86-லிருந்து இடை நிலை ஆசிரியர் பயிற்சி என்ற தொழில் கல்விப் பாடம் மேல் நிலை வகுப்புகளில் பெண்களுக்காக பள்ளிக்கு 25 மாணவியர் சேரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1985—86-ல் 281 மேல் நிலைப் பள்ளிகளிலும், 1986–87-ல் 267 பள்ளிகளிலும் இப்பாடம் தொடங்கப்பட்டது.

3. இளநிலை ஆசிரியர்கள் (ஜூனியர் கிரேடு) இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடை நிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ் நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடி தொடர்பு பயிற்சியில் இது வரை 48,900 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இத் திட்டத்தின்கீழ் இப்பொழுது ஆண்டுதோறும் 10,000 பேர் வீதம் பயன் பெறுகின்றனர். மீதமுள்ள ஆசிரியர்கள் 25,900 பேரும் அடுத்த மூன்று ஆண்டுகளில் இப்பயிற்சியினைப் பெறுவர்.

4. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்புக்கான 10 மையங்கள், 1985-86-ல் மூன்று அல்லது நான்கு வாரங்கள் ஆங்கில பயிற்சியினை 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் 900 ஆசிரியர்களுக்கும், 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 1,035 பேருக்கும் நடத்தின.

5. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்திற்கு இவ்வரசு 1986-87-ல் ரூ. 3.94 இலட்சம் நிதியுதவி அளித்தது. உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆங்கில ஆசிரியர்கள் 27 பேர் இந் நிறுவனத்தில் நான்கு மாத பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். ஆங்கிலப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்காக மாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 25 இலட்சம் அளவில் செலவிடப்படுகிறது.

### (vi) தமிழ் நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வித் துறையின் கல்வித்தர வளர்ச்சியின் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை ஆரம்ப மற்றும் உயர் நிலை ஆகிய இரு நிலைகளிலும் கல்வி முறையினைப் புத்தமைக்கும் முக்கியப் பணியை மாநிலக் கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் எனக் கருதப்படுகிறது. பல்வேறு நிலைப் பள்ளி ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இந் நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல பயிற்சித் திட்டங்களை நடத்த 1987-88-ல் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந் நிறுவனம் செயற்படுத்தி வருகிறது :—

| திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| (i) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள் (56,000 மாணவர்கள்). |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி 35 வயது முடிய அனைவருக்கும் அவரவருக்கு இசைந்த தொழிற் சார்ந்த கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள். |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயதுத் தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல். | 75 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (iv) இளஞ்சிறார் கல்வி (3—5 வயதுக் குழந்தைகளுக்கு). | காரியாப்பட்டி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள். |

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி :

3. 1982-83-லிருந்து நிறைவேற்றப்பட்டு வரும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு இத்திட்டத்தின்கீழ் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சுமார் 1.76 இலட்சம் பேர்களுக்கும், உயர்நிலை, மேல் நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் 20,000 பேர்களுக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியில் பயிற்சி தரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை அனைத்திந்திய அளவில் மக்கள் தொகை கட்டுப்பாட்டுக் கல்வியின் கீழ் பயிற்சி பெற்ற மொத்த ஆசிரியர்களின் 35 விழுக்காடு ஆகும். மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி பயிற்றுவிக்கும் கோட்பாடுகள், முறைகள்



ஆகியவை பற்றிய வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், பள்ளி சாரர்க் கல்வி பயிற்றுநர்களுக்கும் தேவையான பயிற்றுவிப்பு வெளியீடுகளைத் தற்பொழுது தயாரிக்கக் கருதப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவருக்கும், வயது வந்தோருக்கு கல்வி புகட்டும் எழுத்தறிவு விளக்குநர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்படும்.

4. சென்னையிலும் வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர் கல்வி மையங்களை கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் 1978-லிருந்து நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் 1,200 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந் நிறுவனம் தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சியையும் நடத்தி வருகிறது. 6—10 வகுப்புகளில் தமிழ் கற்றுத் தரும் ஆசிரியர்கள் திறனை வளர்க்க அவ்வாசிரியர்களுக்கு அளிக்கப்படும் அஞ்சல் மற்றும் வானொலி வழிப் பயிற்சி மூலம் இதுவரை 19,000 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி :

5. உயர்நிலைப் பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறை) பள்ளியை (Open School) மாநில கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் 1985-86-ல் தொடங்கியுள்ளது. ஏற்கனவே 8—வது வகுப்பு தேறி 15 வயது நிறைந்தவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். ஆண்டு தோறும் 2,500 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். அஞ்சல் வழிப் பயிற்சியும் நேர்டித் தொடர்பும் இணைந்து இப்பள்ளி 12 மாத காலம் நடத்தப்பட்டு எஸ்.எஸ். எல்.சி.-க்கு இணையான கல்வி தரப்படும். இப்படிப்பு மிகவும் நல்ல வரவேற்பை பெற்று உள்ளது. அனைவருக்குமான அஞ்சல் முறைப் பள்ளியில் பயின்ற மாணவர்களில் முதல் அணியினர் மார்ச்சு 1986-லும், இரண்டாவது அணியினர் மார்ச்சு 1987-லும் பாடங்களை முடித்து விட்டு, இறுதித் தேர்வு எழுதியுள்ளனர். வாழ்க்கைக்கு உதவும் தொழிற் கல்விகளையும் அளிக்க வகை செய்யத் தக்க பாடத் திட்டத்தினை உருவாக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன் :

அண்மை ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு :—

(i) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1-6-1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது : நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆசிரியர்கள் 1-6-1986 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது.

(ii) இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக தகுதியாக்க அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி தொடங்கப்பட்டது ;

(iii) இடைநிலைத் தகுதி பெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது ; மற்றும் பி.எட். தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத் தரம்) தலைமையாசிரியர்களுக்கு பி.எட். சம்பள விகிதம் தரப்படுவது ;

(iv) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளை படிப்படியாக முழு நேரப் பதவிகளாக உயர்த்துதல் ;

(v) அனைத்து ஆசிரியர்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டு முதல் ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது; 1985-86 முதல் 15 நாட்களாக அதிகரிக்கப்பட்டது ;

2. ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நன்மைகளில் முக்கியமானவை வருமாறு :—

(i) கைத்தொழில் ஆசிரியர்களின் சிறப்பூதியம் ரூ. 5 லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்ற நடுநிலை அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் கைத்தொழில் ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் ;

(ii) ஆரம்ப, நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கான சிறப்பூதியத்தை உயர்த்தியது ; உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு சிறப்பூதியம் வழங்கப்பட்டது ;

(iii) எம்.எட். தகுதி பெற்ற, மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் அதிகப்படியான ஊதிய உயர்வுகள் இரண்டு அளிக்கப்பட்டது ;

(iv) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி பி.எட். தர ஆசிரியர், தலைமையாசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், கலை மற்றும் கைத்தொழில் ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் முதலியோருக்கு பயிற்சிக்காக ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.





(v) மேல்நிலைப் பள்ளிகளில் தேர்வு நிலைத் தலைமையாசிரியராகப் 10 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை அளித்தது.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்கள் :

3. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணி நிலைமைகளை மேம்படுத்த அரசு பின்வரும் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து உள்ளது :—

(i) மேல்முறையீட்டின்பேரில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக்கொள்ள வகை செய்தலும், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர்கள் இன்னலுக்குட்படுத்தாமல் தடுத்தலும் ;

(ii) சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைத் தவிர, பிற தனியார் பள்ளிகளில் நியமனங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலமே செய்யப்பட வேண்டும் என்ற விதியை யும், நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 விழுக்காடும் பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற விதியையும் அமுலாக்குதல் ;

(iii) தனியார் பள்ளியாசிரியர்களும் பிற பணியாளர்களும் பணியில் இருக்கும்பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள், மனைவி/கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படையில் அப்பள்ளிகளில் நியமனம் செய்து கொள்ளும் சலுகை.

(iv) தனியார் பள்ளிகளில் சராசரி மாணவர் வருகை ஆகஸ்டு மாதத்தில் உள்ளதன் அடிப்படையில் அப்பள்ளிக்கு விகிதத்தின்படி நிர்ணயிக்கும் மொத்த ஆசிரியர் பணியிட எண்ணிக்கையை அப்பள்ளி ஆண்டு முடியும்வரை தொடர்ந்து கடைபிடித்தல்.

அரசு அல்லாத கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வு கால நன்மைகள்.

4. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளி ஆசிரியர்களுக்கு 1—6—1970-லிருந்தும், தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1-4-1972-லிருந்தும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2—10—1970-லிருந்தும், பிறவகையான தனியார் கல்வி நிலைய பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதிகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன.

10. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் இதுவரை எழுத்தறிவு பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு:—

| திட்டத்தின் பெயர். | ஆடவர் | மகளிர். | மொத்தம் | மொத்த எண்ணிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சங்களில்) | | | |
| 1. ஊரகத்தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம் (1979 ஜூலை—1986 அக்டோபர்). | 3.32 | 9.96 | 13.28 | 6.50 |
| 2. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் (1980—81—1986 டிசம்பர்). | 5.53 | 14.01 | 19.54 | 9,90 |
| 3. தொண்டு நிறுவனங்கள் (1979-80—1986 டிசம்பர்). | 0.82 | 2.02 | 2.84 | 1.42 |
| 4. கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் (1979-80—1986 டிசம்பர்). | 0.63 | 0.66 | 1.29 | 0.59 |
| 5. நேரு இளைஞர் மையங்கள் (1979-80—1986 டிசம்பர்). | 0.17 | 0.12 | 0.29 | 0.13 |
| 6. ஒட்டுமொத்த எழுத்தறிவிப்புத் திட்டம்—தாமாகவே முன்வருபவர்கள் மூலம் (1986.) | 0.20 | 0.14 | 0.34 | 0.16 |
| 7. தேசியப் பணித் திட்டத்தைச் சார்ந்த மற்றும் சாராத மாணவர்கள் | 0.25 | 0.02 | 0.27 | 0.03 |
| 8. ஆசிரியப் பயிற்சி பெற்று வருபவர்கள் | 0.04 | 0.05 | 0.09 | 0.01 |
| மொத்தம் .. | 10.96 | 26.98 | 37.94 | [illegible] |



11. 1986 ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை [illegible]3,148 ஆகும். அம்மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 8.08 இலட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 6.50 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 8.08 இலட்சம் பேரில் 3.55 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

12. வயது வந்தோர் கல்வி மையங்களில் பெண்களைச் சேர்ப்பதில் சிறந்த பணியாற்றுவதற்கான விருதுகள் வழங்கும் திட்டம் ஒன்றை மைய அரசின் கல்வித் துறை 1983-84, 1984-85 ஆண்டுகளில் செயல்படுத்தியது. அவற்றில் தமிழ் நாட்டிற்கு 1983-84-ல் ரூ. 31.75 இலட்சமும் 1984-85-ல் ரூ. [illegible] இலட்சமும் மதிப்புள்ள விருதுத் தொகைகள் கிடைத்தன.

**ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள்.**

13. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் மீண்டும் பழையபடி எழுத்தறிவற்ற நிலைக்குப் போய் விடாமல் தடுப்பது ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். இவை ஓராண்டு செயல்படும். ஊரகத்தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 5.400 ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் தற்சமயம் செயல்பட்டு வருகின்றன. மைய அரசின் நிதியுதவியுடன் இம்மையங்கள் செயல்படுகின்றன.

[1987 ஏப்ரல் 8

**தொழிலாளர் கல்வி நிலையங்கள்.**

14. சென்னையில் தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்று 1982 ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டது. அது நகர்ப் புறங்களிலும் பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழி லாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிறது. இவற்றில் பயின்றவர்கள் வியாசர்பாடி, புஷ்பா நகர், நங்கநல்லூர், கபாலிவன் போஜனத் தோட்டம் ஆகிய இடங்களில் கூட்டுறவு அமைப்புக்களை தொடங் கியுள்ளனர். இத்தகைய நிலையம் ஒன்று மதுரையில் செப்டம் பர் 1985—லும், திருச்சியில் அக்டோபர் 1986 லும் தொடங்கப் பட்டுள்ளன. இவ்விரு நிலையங்களும் தனித்தனி ஆளுகைக் குழுக்களின் கீழ் உள்ளன. 1986-ல் 373 பயிற்சிகள் நடத்தப்பட் டன. 10,030 பேர் பயனடைந்துள்ளனர்.

**பள்ளி சாராக் கல்வி.**

15. காமராசர் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப் பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் (ஒரு மையத்திற்கு 30 சிறுவர்கள் வீதம்) 1980 81-ல் தொடங்கப்பட்டன. இம்மையங்கள் முதல் தொகுதியினருக்கு கல்வி புகட்டும் பணியை 1983-லும், இரண் டாவது தொகுதியினருக்கு 1986-லும் நிறைவேற்றி முடித்துள் ளன. வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர் களுக்குக் கல்வி அளிப்பதற்காக பள்ளிசாராக் கல்வி மையங்கள் பத்து 1985-ல் திறக்கப்பட்டன. 1985-ல் ''யூனிசெப்'' உதவி யுடன் சாத்தூர், வெம்பக்கோட்டை பகுதிகளில் பள்ளிசாராக் கல்வி மையங்கள் மேலும் 70 திறக்கப்பட்டுள்ளன.

16. இம்மையங்களில் சேருகின்ற மாணவர்களுக்கு 8-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுவதற்கான பயிற்சி மூன்றாண்டு களுக்குள் அளிக்கப்படுகிறது. முழுநேர இடைநிலை ஆசிரியர் கள் அல்லது பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் (இடை நிலை ஆசிரியர் சம்பள விகிதத்தில்) இம்மையங்களை நடத்து கின்றனர். இம்மையங்களுக்கென தனியாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பூனி அலுவலர்கள் இம்மையங்களை நிருவகிக்...



1987 ஏப்ரல் 8]

## VI. கல்லூரிக் கல்வி.

1987—88 வரவு—செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கல்விக்கான பல் கலைக் கழகங்களுக்கு வழங்கும் மானியம், அரசுக் கல்லூரி களுக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனு தவித் தொகை ஆகியவையும் இத் தொகையில் அடங்கும்.

2. தற்பொழுது பின்வரும் விவரப்படி கலை, அறிவியல் வணிகவியல் கல்லூரிகள் 198 செயல்பட்டு வருகின்றன.

| கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| | | முறையான வகுப்புகள்— | |
| அரசினர் கல்லூரிகள் | 54 | | |
| மானியம் பெறும் தனியார் கல்லூரிகள் | 133 | *198 பட்டப் படிப்பு | 1,77,472 |
| மானியம் பெறாத தனியார் கல்லூரிகள். | 11 | பட்ட மேற்படிப்பு | 17,037 |
| | | | 1,94,509 |
| | | மாலை நேர வகுப்புகள். | 34,000 |
| | | | 2,28,509 |

**பிற கல்லூரிகள்.**

| | | |
|---|---|---|
| கல்வியியல் கல்லூரிகள் | 22 | 2,928 |
| இதர கல்லூரிகள் | 20 | 1,930 |
| | | 4,858 |

* சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் 14 இவற்றுள் அடங்கும்.

3. பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 198 கலை அறிவியல், வணிகவியல் கல்லூரிகள் விவரம் வருமாறு:—

| பல்கலைக் கழகம். | நிருவாக வரம்பிற்குட் பட்ட மாவட்டங்கள் | கல்லூரி களின் எண் ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை பல்கலைக் கழகம். | சென்னை, செங்கற் பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், தர்மபுரி. | 64 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி. | 25 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப் பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. | 30 |
| மதுரை காமராசர் பல்கலைக் கழகம். | மதுரை, அண்ணா இராமநாதபுரம், பசும்பொன் முத்து ராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி. | 79 |
| | | 198 |

4. பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு (தமிழ்ப் பல்கலைக் கழகம் உட்பட) மானியம் தர 1987–88 நிதி நிலை அறிக்கையில் மொத்தம் ரூ. 8.82 கோடி (திட்டமில்லாத மானியம் ரூ. 2.40 கோடியும், திட்ட மானியம் ரூ. 6.42 கோடியும்) ஒதுக்கப்பட்டுள்ளது.





5. சுய ஆட்சிக் கல்லூரிகள் எண்ணிக்கை பெருகிட உதவப் படும் என தேசியக் கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்திந்தியாவிலும் பிற மாநிலங்களைத் காட்டிலும் தமிழ் நாட்டில் தான் சுயஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் நிறைய உள்ளன. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆண்டொன்றுக்கும் ரூபாய் 2 இலட்சம் வீதம் பல்கலைக் கழக மானியக் குழு அளித்து வந்த நிதியுதவி ஐந்தாண்டுகளுக்குப் பிறகும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை ஒய். எம். சி. ஏ. உடற் பயிற்சிக் கல்லூரிக்கும் சுய ஆட்சி உரிமை அளித்திருக்கிறது.

### பல்கலைக் கழகங்கள்.

6. மூத்த பல்கலைக் கழகங்களான சென்னை, மதுரை காமராசர் மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கான மானியத்தை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இப்பல் கலைக் கழகங்கள் தங்களது பணியைத் தொடர்ந்து செவ்வனே செய்து வருகின்றன. சென்னை, மதுரை காமராசர் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 1.25 கோடி பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதியுதவி தருவதற்கான திட்டங்களுக்கு அக் குழு ஏற்பளித்துள்ளது. இதேபோன்ற பல்கலைக் கழக மானியக் குழு நிதியுதவி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் ஒதுக் கப்பட்டுள்ளது.

7. 1981 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தொடங்கப்பட்ட ஐந்து புதிய பல்கலைக் கழகங்களுள், தமிழ், பாரதியார், பாரதிதாசன் மற்றும் அழகப்பா பல்கலைக் கழகங்கள், பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்தும் மைய அரசின் பிற நிறுவனங்களிட மிருந்தும் மானியம் பெறத் தகுதியுடயவை என அறிவிக்கப்பட்டு, நிதியுதவியையும் அவை பெற்று வருகின்றன. இவற்றில், பாரதியார், பாரதிதாசன் மற்றும் தமிழ்ப்பல்கலைக் கழகங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு வளர்ச்சிப் பணிகளுக் காக ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 1 கோடி வீதம் மானியமாக பல் கலைக் கழக மானியக் குழு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை யில் ஒரு பகுதியினை அப்பல்கலைக் கழகங்கள் பெற்று உள்ளன; உரிய திட்டங்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழு ஏற்பளிப்பும் தந்துள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு ஏற்பளித்துள்ள கட்டிட வேலைகளுக்கு மாநில அரசு தன் நிதியிலிருந்து தேவை யான இணை மானியம் வழங்க வேண்டியுள்ளது. மேலும் தொடரும் செலவினங்களைப் பொறுத்தவரையில் ஏழாவது திட்ட காலத்தின் 5-ஆவது ஆண்டு முடிந்தவுடன் பல்கலைக் கழக மானிய குழு நிதியுதவி நின்றுவிடுமாகையால், அதன் பின்னர் தொடரும் செலவினத்திற்கான முழுப் பொறுப்பையும் மாநில அரசு ஏற்க நேரிடும். மேற்சொன்னவாறு ஐந்தாண்டுத் திட்ட மானியங்கள் தவிர, பல்கலைக் கழகங்கள், குறிப்பிட்ட சில திட்டங்களுக்கும் நிதியுதவி பெறுகின்றன. இப் புதிய பல்கலைக் கழகங்களின் வளர்ச்சியின் முக்கிய அம்சங்கள் பற்றிய விவரம் வருமாறு :—

(i) பாரதிதாசன் பல்கலைக் கழகம் :

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக புதிய வளாகத்தில் மேலும் பல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது திருச்சி நகருக்குள் அமைந்துள்ள முதுகலைப் பட்ட மையத்தின் துறைகள் புதிய வளாகத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன.

(ii) பாரதியார் பல்கலைக் கழகம் :

நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. துணை வேந்தர் மற்றும் பேராசிரியர்களுக்கான குடியிருப்புக்கள் கட்டப் பட்டு, அவற்றில், பெரும்பாலானவற்றில் குடிவந்து விட்டனர். மேலாண்மை, சுற்றுப்புறச் சூழல், அறிவியல் மற்றும் மொழி யியல் துறைகளுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(iii) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் :

இப்பல்கலைக் கழகம், மற்ற பல்கலைக் கழகங்களைப் போலன்றி தனித் தன்மை வாய்ந்தது. ஆய்வு, அறிவுரை நல்குதல் மற்றும் மகளிர் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணித்தல் ஆகியவற்றில் இது ஈடுபட்டு வருகிறது. மகளிர் மற்றும் மகளிர் மேம்பாடு குறித்த ஆய்வறிக்கைகள் தயாரிக்க ஒரு விரைவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்தகைய 150 ஆய்வறிக்கை கள் விரைவில் தயாரிக்கப்படும். செயல்படுத்தத் தகுந்த அறிக் கைகள் அரசுக்கும், மகளிர் மேம்பாட்டில் ஈடுபட்டிருக்கும் இதர நிறுவனங்களுக்கும் அனுப்பப்படும். இப்பல்கலைக் கழகம் மாநிலத்தின் பல்வேறு பகுதியிலுள்ள மகளிரின் பிரச்சனைகள் குறித்த ஆய்வு செய்ய, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மையத்தை அமைக்கவிருக்கிறது. நாகர்கோவிலில் மையம் விரை வில் தொடங்கப்படவிருக்கிறது. ஏனைய மாவட்டங்களிலும் வரும் ஆண்டுகளில் இத்தகைய மையங்கள் திறக்கப்படும்.

(iv) தமிழ்ப் ப கலைக் கழகம் :

தமிழ்ப் பல்கலைக் கழகம் தனது பணியைத் தொடர்ந்து செவ்வனே செய்து வருகிறது. நூலகக் கட்டடம் தமிழர் கட்டி டக் கலையைச் சித்தரிக்கும் விதத்தில் ரூபாய் 120 இலட்சம் செல வில் கட்டப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் இதுவரை 60 நூல்களை வெளியிட்டுள்ளது.

(v) அழகப்பா பல்கலைக் கழகம் :

தொழில் சார்ந்த வேதியியல் மின்கணிப்புப் பொறி பயன்பாடு மேலாண்மைப் படிப்புகள், கம்பெனிச் செயலாளர் படிப்பு போன்ற வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் படிப்புகளை இப் பல்கலைக் கழகம் ஏற்கெனவே தொடங்கியுள்ளது. பல்கலைக்



கழக மானியக் குழு வரையறுத்துள்ளவாறு ஆசிரியர் பணி யிடங்கள் நிரப்பப்படுகின்றன. இப்பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்ட மானியம் விரைவில் பெறப் படும்.

8. வேலூர், சேலம் ஆகிய இடங்களில் சென்னைப் பல்கலைக் கழகமும், திருநெல்வேலியில் மதுரை—காமராசர் பல்கலைக் கழகமும் அமைந்துள்ள பட்ட மேற்படிப்பு மையங்கள் விரிவாக்கப் பட்டு வருகின்றன. இதற்காக அரசு இப்பல்கலைக் கழகங்களுக்கு தாராளமாக நிதியுதவி அளித்து வருகிறது. இப்பட்ட மேற் படிப்பு மையங்கள் விரிவாக்கப்பட்டு, பல்கலைக் கழக மானியக் குழுவின் ஒப்புதல் பெற்ற பின்னர், அவை, சேலம் திருநெல்வேலி ஆகிய இடங்களில், பல்கலைக் கழகங்கள் அமைப்பதற்கு முன் னோடி மையங்களாகத் திகழும்.

தேசியக் கல்விக் கொள்கை—உயர் கல்வி குறித்த அம்சங்கள்:

9. தேசியக் கல்விக் கொள்கையில் '' உயர் கல்வி ''—யின் கீழ் பின்வரும் அம்சங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி யுள்ளது.—

(i) தற்போது உள்ள உயர்கல்வி நிறுவனங்களை மேம் படுத்தலும், விரிவாக்கலும் ;

(ii) சுயாட்சி உரிமை பெற்ற கல்லூரிகளையும், துறை களையும் வளர்த்தல்.

(iii) படிப்புகளை புத்தமைத்தல் ;

(iv) ஆசிரியர்களுக்குப் பயிற்சி;

(v) ஆராய்ச்சியை வலுப்படுத்துதல் ;

(vi) திறனை மேம்படுத்துதல் ;

(vii) மாநிலம் மற்றும் தேசிய அளவில் ஒருங்கிணைப்புக் கான அமைப்புக்களை உருவாக்குதல்;

(viii) உயர்கல்வி பயிற்றும் ஆசிரியர்கள் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து வேறு பல்கலைக் கழகத்திற்கு சென்று பணி யாற்றுவதை ஊக்குவிதத்ல்.

அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தேசியக் கல்விக் கொள்கையின் பரிந்துரைகள் குறித்து துணை வேந்தர்கள் விவா தித்தனர். அதில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:—

(i) பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் தற்போது உள்ள வசதிகளை மேம்படுத்துதல் ;

(ii) சுயாட்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்;

(iii) கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு நிலையில் பாடத் திட்டங் களை வாழ்க்கைத் தேவைகளுக்கு உகந்தவாறு மாற்றியமைத்தல்.

[1987 எப்ரல் 8

பட்டப் படிப்பில் தொழிற் கல்விப் பாடங்களைக் கொண்டு
வரும் வாய்ப்புகள் குறித்தும் துணை வேந்தர்கள் பரிசீலிப்பர்,
கல்லூரி நிலையில் பாடங்களை மாற்றியமைப்பது குறித்து ஆலோ
சனை நல்க குழுக்கள் அமைக்கப்படும்.

மாநில உயர் கல்விக் குழு :

10. மாநில அளவிலான ஓர் உயர் கல்விக் குழு அமைக்கப்
படும். இதற்கான சட்ட முன்வடிவு ஒன்றும் விரைவில் கொணரப்
படும். இக்குழு, பல்கலைக் கழகங்களின் செயற்பாட்டினை
ஒருங்கிணைப்பதற்கு உதவுவதோடு, மாநிலத்தில் உயர் கல்வியை
நன்கு மேம்படுத்தவும் உதவும்.

அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும் :

11. அஞ்சல் வழி வகுப்புகள் மற்றும் மாலை நேரக் கல்லூரி
வகுப்புகளில் பயின்று வந்தவர்களின் விவரம் கீழே வருமாறு :—

அஞ்சல் வழி வகுப்புகள்—

| | |
|---|---|
| மதுரை காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள். | 1.47,000 |
| அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழகம்— | |
| மதுரை காமராஜர் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள். | 30,500 |
| மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் .. | 34,000 |
| | 2,11,500 |

கல்வித்தர மேம்பாடு :

12. தற்போதுள்ள அரசுக் கல்லூரிகளின் கல்வித்தர மேம்
பாடு முந்தைய ஆண்டுகளைப் போலவே ஏழாவது ஐந்தாண்டு
திட்டக் காலத்திலும் தொடர்ந்து முதன்மை வகிக்கின்றது.
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசுக்கல்லூரிகளில்
புதிதாக 65 பட்ட வகுப்புகளும், 30 பட்ட மேற்படிப்பு வகுப்பு
களும் தொடங்கப்பட்டன. 1985-86, 1986-87 ஆண்டுகளில்
புதிதாக 11 பட்ட வகுப்புகளும் (பி.காம் 7, பி.எஸ்.சி. 3
பி.ஏ. 1) 4 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் (எம்.எஸ்.சி. 3,
எம்.காம். 1) தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. 1987-88-ல்
அரசுக் கல்லூரிகளில் புதிதாகப் பட்ட வகுப்புகள் தொடங்க
ரூபாய் 4.68 இலட்சமும், பட்ட மேற் படிப்பு வகுப்புகள்
தொடங்க ரூபாய் 4.07 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.



1987 எப்ரல் 8]

13. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் அவ்வப்
போது கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து அவற்றிற்குத் தேவை
யான ஆய்வுக் கூடங்களும், நூலகங்களும் ஏற்படுத்தித் தரப்
படுகின்றன. அரசுக் கல்லூரி வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்
களுக்கான மரச்சாமான்களுக்காக 1985-86-ல் ரூபாய் 7.50
இலட்சம் ஏற்பளிக்கப்பட்டது. 1987-88-ல் இதற்காக ரூபாய் 3
இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்படும். சிதம்பரம் அரசினர் கலைக்
கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுதல் உள்ளிட்ட பெரும் பணிகளுக்காக
1987-88-ல் ரூபாய் 54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு
கல்லூரிகளில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக
விளையாட்டுத் திடல்கள் அமைப்பதற்கும், விளையாட்டுப்
பொருட்கள் வாங்குவதற்கும், 1987-88-ல் ரூபாய் 2 இலட்சம்
நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

14. வேலை வாய்ப்பு மற்றும் செய்முறைப் பயிற்சிக்கு
முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பட்ட வகுப்பு பாடத்
திட்டத்தை மாற்றியமைப்பதற்கும், நவீனப் படுத்துவதற்கும்,
தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் முனைந்துள்ளன.
இந்தப் பாடத் திட்ட மாற்றத்தின் காரணமாக அறிவியல் கூடங்
களுக்குப் புதிய உபகரணங்கள் வாங்குதல், நூலகங்களில் நவீன
புத்தகங்களின் படிகளை அதிக அளவில் வாங்கி வைத்தல் மற்றும்
கூடுதல் ஆசிரியர்களை நியமனம் செய்தல் ஆகியவை செய்யப்
படவேண்டியுள்ளன. இதனை எல்லா அரசுக் கல்லூரிகளிலும்
படிப்படியாக நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதற்காக 1987-
88-ல் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

15. கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் ஆங்கில மொழிபயிற்று
விப்பு மையத்தை வலுப்படுத்துவதற்காக 1987-88-ல் கல்லூரி
முதல்வர் நிலையில் ஒரு முதுநிலைப் பேராசிரியரும் உதவியாளரும்
நியமனம் செய்யப்பட விருக்கிறார்கள்.

16. அரசுக் கல்லூரிகளில் புதிய வகுப்புகள் தொடங்குதல்,
பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் புள்ளி
விவரங்கள் சேகரித்தல் போன்ற தேவையான வளர்ச்சிப் பணி
களைத் திட்டமிடுவதற்காக "கல்லூரி வளர்ச்சிப் பிரிவு" ஒன்று
கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் 1984-85-லிருந்து செயல்பட்டு
வருகிறது. இவ்வளர்ச்சிப் பிரிவிற்கு 1987-88-ல் ஒரு துணை
இயக்குநர் பதவி ஏற்படுத்தப்படும். 1986-87-லிருந்து இயக்கு
நரகத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு
வருகிறது. இத்துறையின் களப்பணி அலுவலர்களான வட்டாரத்
துணை இயக்குநர்கள் ஐவருக்கும் படிப்படியாக ஊர்திகள் வழங்
கப்பட்டு வருகிறது. அனைவருக்கும் 1987-88-க்குள் ஊர்திகள்
வாங்கி அளிக்கப்பட்டுவிடும்.

17. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந் தர உயர்வுக்
காக அவர்களை எம்.பில்., மற்றும் பி.எச்.டி., படிப்புக்கு அனுப்பு
வதற்காக பல்கலைக் கழக மானியக் குழுத் திட்டத்தின் கீழ்

1986-87-ல் பல்வேறு பாட ஆசிரியர்கள் 78 பேர் அவர்களுக்குரிய ஊதியம் மற்றும் படிகளுடன் இப்படிப்பிற்கு அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர் களும், விளக்குநர்களும், ஆண்டுதோறும் சிலர் வீதம் எம்.ஏ., எம்.எஸ்சி., படிப்பிற்கு மாநில அரசு செலவில் முகாமையில் அனுப்பும் திட்டத்தின் கீழ் 1986-87 முடிய 177 பேர் அனுப்பப் பட்டுள்ளனர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 41 பேர் முகாமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்

18. கல்லூரிக் கல்வித் துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமான சிலவற்றின் கீழ் பயன் பெறுவோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1986-87ல் புதிதாக தந்த படிப் புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல் நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1986-87ல் புதியவை மற்றும் புதுப் பிக்கப் பட்டவை மொத்தம் எண்ணிக்கை. | 1987-88ல் வரவு—செலவு மதிப் பீட்டில் ஒதுக்கி யுள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (ரூபாய் இலட்சத்தில்) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். (ஓரளவு மைய அரசு நிதி யுதவி பெறுவது). | 1,724 | 5,900 | 52.40 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம். (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,380 | 5,305 | 25.00 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப் புதவித் தொகை. | 70 | 120 | 2.00 |



மேலும் எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் முதன்மையாக வரும் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 6,000க்கு மேல் இருப்பினும் அவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

19. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களில் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர் களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப் பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு வருகிறது.

20. தமிழ் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இவ்வுதவிப் பணம் பெற்ற மாணவர் எண்ணிக்கை 1986-87-ல் 24,019 ஆகும். இத்திட்டத்திற்காக 1987-88-ல் ரூ. 44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை .00-க்கு அதிகமான பாடப் புத்த கங்களை வெளியிட்டுள்ளது.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

21. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய் துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை வருமாறு :—

(1) உரிய தகுதி பெற்ற பயிற்றுநர்களையும், விளக்கு நர்களையும், அவர்கள் மூன்றாண்டுகள் பணி முடித்தவுடன் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது;

(2) 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை பேராசிரியர்களாக உயர்த்தியது ;

(3) உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணி யாளருக்கு நேரடியாக சம்பளம் ;

(4) பின்வருவன போன்ற விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளைத் தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் விரிவாக் கியது :—

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம், விடுப்பு (ஈட்டிய விடுப்பு வசதி உட்பட) குழு ஈட்டுறுதித் திட்டம், பணியிலிருக்கும் போது, ஆசிரியர் மற்றும் பிற பணியாளர் இறந்துவிட்டால் அவர்களுடைய மகன் போன்ற நெருங்கிய உறவினருக்கு பணி நியமனம் செய்வதில் முன்னுரிமை.

[1987 ஏப்ரல் 8

22. கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பிறபணியாளர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகளும் 1985-86 மற்றும் 1986-87 ஆம் ஆண்டுகளில் அளிக்கப்பட்டுள்ளன :—

(1) பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்களில் சம்பளம் பெற்றுவரும் கல்லூரி ஆசிரியர்களுக்கும், பிறருக்கும் 1-10-1984 முதல் இடைக்கால நிவாரணம்—அடிப்படைச் சம்பளத்தில் 10 விழுக்காடு—மாதம் ரூ. 160 என்னும் உச்ச வரம்புக்குட்பட்டு ;

(2) 1985-86 கல்வியாண்டிலிருந்து கல்லூரிப் பணியாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஆண்டுக்கு 3 நாளிலிருந்து 18 நாட்களாக உயர்வு ;

(3) மானியம் பெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அரசுப் பணியாளர்களைப் போல அரசுப் பணத்திலிருந்து பண்டிகைக் முன்பணம் வழங்கல் ;

(4) சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் 1—4—1984 முதல் விரிவாக்கப்பட்டது.

(5) மானியம் பெறும் தனியார் கல்லூரிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களை நியமிப்பதற்கான கோட்பாடுகளை திருத்தியமைத்தல்.

சட்டக் கல்வி.

23. சட்டக் கல்லூரிகளில் 1986-87 ஆம் ஆண்டில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| சட்டக் கல்லூரி. | முழுநேர சட்டப் படிப்பு. | | மாலை நேர வகுப்புகள். |
|---|---|---|---|
| | மூன்றாண்டு சட்டப் படிப்பு. | ஐந்தாண்டு சட்டப் படிப்பு. | |
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை .. .. | 810 | 720 | 720 |
| மதுரை .. .. | 480 | 600 | 360 |
| திருச்சிராப்பள்ளி .. | 240 | 320 | 180 |
| கோயம்புத்தூர் .. | 240 | 320 | 180 |
| மொத்தம் .. | 1,770 | 1,960 | 1,440 |



1987 ஏப்ரல் 8]

முதுநிலை சட்டப் படிப்பு (1986–87-ல் துவக்கப்பட்டது).

| | |
|---|---|
| சென்னை சட்டக் கல்லூரி .. .. .. | 60 |
| மதுரை சட்டக் கல்லூரி .. .. .. | 15 |
| | 75 |

24. தமிழ் நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு 1983-84-ல் தொடங்கப்பட்டது. 1987-88-ல் ஐந்தாண்டு வகுப்புகள் தொடங்கப்பெறும். இந்தியாவில் பிற மாநிலங்கள் மூன்றாண்டு சட்டப் படிப்பை முழுமையாக நிறுத்தும்வரை இங்கும் தொடர்ந்து நடத்தி வரப்படும்.

25. வேலையில் இருப்பவர்களுக்கென்று 1983-84 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு மாலை நேர சட்ட வகுப்புகளும் நடத்தப் பெற்று வருகின்றன.

26. தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுள் சட்டக் கல்லூரி மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. தமிழில் சட்டம் பயிலுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## VII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

### (i) விளையாட்டும் உடற்பயிற்சியும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை நடவடிக்கைகளுக்காக 1987-88-ல் மொத்தம் ரூ. 2 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையின் கீழ் மொத்தம் 21 மாவட்ட விளையாட்டு மன்றங்கள் (நாகப்பட்டினத்தில் உள்ள இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட) உள்ளன.

### தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்.

2. தமிழ் நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திரு. ஜெயந்தி ஆதித்தன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக் கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு ரூ. 1 கோடியாகும். இக் கழகம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 15—11—1984 அன்று பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்திற்கு மானியம் தர 1987-88ல் ரூ. 90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 8

3. மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை ஆகியவற்றின் சார்பாக பெண் களுக்கான 10-வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் டிசம்பர் 1985-ல் கோயம்புத்தூரில் நடத்தப்பட்டன. கிராமப்புற மக்க ளிடையே விளையாட்டுகளில் ஆர்வத்தை உண்டாக்கும் பொருட்டு உடற்பயிற்சிகள், கூடைப்பந்து, ஹாக்கி முதலியவற்றுக்கான 18-ஆவது அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டியின் இரண் டாவது பிரிவு டிசம்பர் 1986-ல் திருச்சிராப்பள்ளியில் நடத்தப் பட்டது.

4. இளைஞர்களிடையே நல்லொழுக்கம், நன்னடத்தை மற்றும் சமுதாய உணர்வுகளை வளர்க்கும் நோக்கில் இளைஞர் நல நடவடிக்கைகளை முழுமையாகத் திட்டமிட்டு வளர்ப் பதற்காக தமிழ் நாடு மாநில இளைஞர் வாரியம் ஒன்றை நிறுவக் கருதி அதற்காக மைய அரசு நிதியுதவி கோரப் படுகிறது.

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும் :

5. தற்போது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | | ஆண்டு தோறும் சேரும் மாணவர்கள். |
|---|---|---|
| 1 | ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்) .. | 115 |
| 2 | எஸ்.ஆர்.கே. மாருதி உடற் பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன்பாளையம் (8—12 வகுப்பு கள்) .. .. .. .. | 90 |
| 3 | இராணி சீதை ஆச்சி மேல் நிலைப் பள்ளி, அண்ணாமலை நகர் (8—10 வகுப்புகள்) .. | 50 |
| 4 | பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மேல்நிலைப் பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்) .. .. .. | 50 |
| | | 305 |



1987 ஏப்ரல் 8]

மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள விளையாட்டு விடுதிகள் ஒவ்வொன்றிலும் 30 பேருக்குத் தங்கும் இட வசதிகள் உள்ளன. மேற்கூறிய பள்ளிகளிலும் விடுதிகளிலும் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| தடகளம் (Athletics) .. .. .. | 103 |
| கூடைப்பந்து .. .. .. .. | 57 |
| கால்பந்து .. .. .. .. | 83 |
| மட்டைப்பந்து .. .. .. | 18 |
| கையுந்துப்பந்து .. .. .. | 69 |
| நீச்சல் .. .. .. .. .. | 18 |
| வளைகோல்பந்து .. .. .. | 47 |
| | 395 |

6. விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்கு தீவிரமாக பயிற்சியளித்து அவர்களுடைய திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான "மிக இளமையில் தெரிந்தெடு" என்ற திட்டத்தையும் தொடக்க நிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் "இளமை யில் தெரிந்தெடு" என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகளில் குடியரசு நாள் மற்றும் பொங்கல் நாள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறு வோர்க்கும், மேல் நிலைப் பள்ளிகளில் "பாரதியார் விளை யாட்டுப் போட்டிகளில்" வெற்றி பெற்று முதலாவது, இரண் டாவது இடத்தைப் பெறுவோர்க்கும் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

7. அந்தந்த விளையாட்டு மன்றப் பகுதியிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை உடற் பயிற்சி கற்றுத் தரும் தகுதி வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் அவர் களுக்கு 5 நாள் பயிற்சி வகுப்புகளும், உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஏறத்தாழ 30 உடற் பயிற்சி ஆசிரியர்/ உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு இரண்டு அல்லது மூன்று விளையாட்டுகளில் ஆறு நாள் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டமும், மாவட்ட விளையாட்டு மன்றப் பயிற்சி யாளர்களைக் கொண்டு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்தப் பட்டு வருகின்றன.

மாணவர் அல்லாத இளைஞர்கள் .

8. மாணவர் அல்லாத இளைஞர்களிடம் விளையாட்டை யும், உடற் பயிற்சியையும் ஊக்குவிக்கும் வண்ணம், அரசு விளையாட்டு மையங்கள் நடத்துதல், 200 தனியார் விளையாட்டு மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டுக் கருவிகள் வாங்க மானியம் வழங்குதல் முதலான பல்வேறு திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வரு கின்றது.

9. கிராமியக் கலைகளான கரக ஆட்டம், கோலாட்டம், தெம்மாங்கு, வில்லுப்பாட்டு போன்றவைகளை ஊக்குவிப்பதற் காக ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசு அளவிலான இளைஞர் விழாக்கள் நடத்தப்படவுள்ளன. மாநில அளவிலான விளை யாட்டுப் போட்டிகளுடன் இவ்விழாக்கள் நடத்தப்படும். இதில் மாவட்டத்திற்கு 30 பேர் வீதம் 630 பேர் பங்கேற்பார்கள். மலையேறுவதில் அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சியினை இளைஞர்களுக்கு நல்க ஒரு திட்டமும் 1987-88-ல் தொடங்கப் படும்.

விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் :

10. தற்போது வட ஆற்காடு, தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், மதுரை, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் களில் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்தவெளி விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதர மாவட் டங்களிலும் திறந்தவெளி அரங்கங்கள் அமைக்க நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை தஞ்சாவூர், வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் நீச்சல் குளங்கள் கட்ட நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

11. வறுமையில் வாடும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 50 விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 75 வீதம் ஓய்வூதியம் தற்போது பெற்று வருகின்றனர்.

(ii) சாரண சாரணியர்.

12. தொண்டுள்ளம் கொண்ட சாரண சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் எல்லாவகைப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் தற்போது 1.54 இலட்சம் சாரண சாரணியர் உள்ளனர். இவ் வெண்ணிக்கை இந்தியா அனைத் திலுமுள்ள சாரண சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண சாரணியர் இயக்கம், மாநில அரசு மானியமாக ஆண்டுக்கு ரூ. 7 இலட்சம் பெற்று வருகிறது.





(iii) தேசிய மாணவர் படை.

13. தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்கத் தலைமை யகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் 5 அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண் ணிக்கை வருமாறு :—

| | பிரிவுகள் / படைகள். | அலுவலர் கள். | மாணவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப் பிரிவு (மாணவர்) .. | 45 | 225 | 17,970 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்).. | 5 | 47 | 3,400 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்) .. | 619 | 624 | 61,350 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்).. | 52 | 53 | 5,200 |
| மொத்தம் .. | 721 | 949 | 87,920 |

1987-88-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 2.80 கோடி செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப் படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

14. தேசிய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. அப்படை மாணவர் மாணவியருக்கான பலவிதமான பயிற்சி முகாம்களுக்கான செல வில் பாதியை மைய அரசும் பாதியை மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. பகுதி நேர தேசிய மாணவர் படை அலுவலர் களின் சிறப்பூதியம் 1986-87 முதல் மாதம் ரூ. 100 லிருந்து ரூ. 200-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

15. இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்பவர்களைத் தெரிந் தெடுப்பதற்காக மைய அரசுத் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழக தேசிய மாணவர் படை யினருக்கு சிறந்த பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் " இராணுவ அதிகாரித் தேர்வுக்கான முன்பயிற்சிப் பிரிவு " ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

16. தமிழ்நாட்டைச் சார்ந்த முதுநிலை, இளநிலை மற்றும்
மகளிர் பிரிவுகளின் 99 மாணவர்கள் 1987-ல் புதுடெல்லியில்
நடைபெற்ற குடியரசு நாள் முகாமிலும், பிரதமர் அணி வரிசை
யிலும் பங்கு பெற்று, மாநிலங்களுக்கிடையிலான முதன்மைப்
புதாகையை வென்று வாகை சூடினர். இதுதவிர தனி நபர்களுக்
கான பரிசுகளையும், கோப்பைகளையும், சிலர் பெற்றுள்ளனர்.

(iv) தேசிய பணித் திட்டம்.

17. தமிழ் நாட்டிலுள்ள தேசியப் பணித் திட்டத்தின் விவரங்
கள் 1986-87 நிலவரப்படி பின்வருமாறு :

| | பங்கு பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம்மொத்த மாணவர்களில் சிறப்புப் பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. .. | 65,000 | 32,500 |
| மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகள் (400 பள்ளிகள்) .. .. .. .. | 25,000 | 12,500 |
| மொத்தம் .. | 90,000 | 45,000 |

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசியப் பணித் திட்டம்
மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசியப்
பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத்
திட்டத்தின் கீழ் ரூ. 80-ம் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒவ்
வொரு முகாமிற்கும் ஒரு நபருக்கு ரூ. 100-ம் செலவிடப்படுகிறது.
இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும்,
மைய அரசும், 5 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக் கொள்
கின்றன. இதற்காக 1987-88-ல் மாநில அரசு நிதிநிலை மதிப்
பீட்டில் ரூ. 116 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில்
7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும்.
1986-87-ல் மேலும் 8,000 மாணவர்கள், தேசியப் பணித் திட்டத்
தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். தேசியப் பணித்
திட்டத்தின் கீழ் உள்ள மாணவர்கள் இதர பணிகளைத் தவிர
வயது வந்தோர் கல்வி பயிற்றுவிப்பதிலும் ஈடுபடுகின்றனர்.



## VIII. நூலகங்களும் ஆவணக் காப்பகங்களும்.

### (i) பொது நூலகங்கள்.

கிராமப் பகுதிகள் உள்ளிட்டு மாநிலம் முழுமைக்குமான சீரிய
நூலகப் பணி நடைபெறும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும்.
1987-88 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பொது
நூலக துறைக்கென ரூ. 5.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
பொது நூலகத் துறையின் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய
விவரங்கள் வருமாறு :

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை. | உறுப்பினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்) | |
| மாநில மைய நூலகம் (கன்னிமாரா நூலகம், சென்னை) .. .. | 1 | 4.40 | 0.29 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் உள்ள நூலகங்கள்— | | | |
| மாவட்ட மைய நூலகங்கள் .. .. .. | 18 | 114.10 | 12.23 |
| கிளை நூலகங்கள் .. | 1,511 | | |

**கன்னிமரா நூலகம் :**

2. சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்
தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து
நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியினை இந் நூலகம் இலவச
மாகப் பெறுகிறது. வருடத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்
களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8-00
மணி முதல் இரவு 8-00 மணி வரை) இந் நூலகம் செயல்படுகிறது.
வெளிநாட்டு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் வாங்குவதற்கென
இந் நூலகத்திற்கு கடந்த நான்காண்டுகளில் மொத்தம் ரூ. 33
இலட்சம் தரப்பட்டது. பொது மக்களின் வசதிக்காக இந் நூலகத்
திற்கென புகைப் படப் பிரிதி எடுக்கும் கருவி ஒன்றும் வாங்கப்
பட்டுள்ளது. புத்தகப் பெயர்ப் பட்டியலை மின்கணிப்பானில்
பயன்படுத்தத்தக்கவகையில் உருவாக்கவும் உத்தேசிக்கப்பட்
டுள்ளது.

மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் :

3. தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 18 மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின்கீழ்மொத்தம் 18 மாவட்ட மைப நூலகங்களும், 1,511 கிளை நூலகங்களும் செயல்படுகின்றன. 1987–88-ல் ரூ. 2 இலட் சம் செலவில் மேலும் சில கிளை நூலகங்கள் தொடங்க திட்ட மிடப்பட்டுள்ளது. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் பணி யாளர்கள் மொத்தம் 3,279. அவர்கள் 1–4–1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். 1985–86-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 1.27 கோடி பெற்றன (சென்னை மாவட்ட குழு பெற்ற ரூ. 55 இலட்சம் உட்பட). சில மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் வருமானம் புத்தகங்கள் வாங்குவது போன்ற செலவினங்களுக்குப் போது மானதாக இல்லை. எனவே, நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக்குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984–85-லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் சிறப்பு மானியமாக அரசு வழங்கி வருகிறது. மேலும், சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை மாவட்ட மைய நூலகங்களில் படிக்கும் பொது மக்கள் வசதிக்காக புகைப்படப் பிரதி (Photo copier) எடுக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

4. பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக நூலகவியல் நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

நூலக கட்டடங்கள் :

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின்கீழ் வட்டார நூலகங்கள் 6-க்கும், கிளை நூலகங்கள் 17-க்கும் கட்டடங்கள் முடிக்கப்பட்டுளளன. பல கிளை நூலகங்களுக்கான கட்டடங் கள் கட்டப்பட்டு வருகின்றன.

6. தருமபுரி, பெரியார் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் மாவட்ட மைய நூலகங்கள் கட்டுவதற்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. மேலும் மாவட்ட நூலக ஆணைக் குழுக்களால் ரூ. 305 இலட்சம் செலவில் 57 நூலகக் கட்டடங் கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 173 இலட்சம் செலவில் 43 நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(ii) ஆவணக் காப்பகம்.

சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தென்னிந்திய வரலாற்று ஆய்வறிஞர்களுக்கு ஒரு கருவூலமாக விளங்குகிறது. இக்காப்பகத்தில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம் பெனி, டச்சு மற்றும் டேனிஷ் கம்பெனிகள் ஆகியவற்றின் ஆவணங்களும், 1786-ல் தொடங்கப்பட்ட வருவாய் வாரிய





ஆவணங்கள், சென்னை நாணய சாலை ஆவணங்கள் முதலி யவை பேணிக் காக்கப்பட்டு வருகின்றன. வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட நவீன இயந்திரங்களைக் கொண்டு மதிப்பு மிக்க பழைய ஆவணங்களைப் பூச்சிகள் அரிக்காதவாறு பாது காக்கப்பட்டும், பழுதுபட்ட ஆவணங்களின் தாள்கள் வலு வூட்டி செம்மைப்படுத்தப்பட்டும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1982-ல் நிறுவப்பட்ட நுண் நிழற்படக் கருவி நன்கு செயல் பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் பழைய மூல ஆவணங் களை மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப்படு கின்றன. ஆராய்ச்சி செய்வோருக்கு மூல ஆவணங்களை கொடுக்காமல் நுண் நிழற்படப் பிரதிகளை வழங்கினால் மூல ஆவணங்கள் மேலும் நீண்ட காலம் சிதிலமாகாமல் இருக்கும். இக்கருவியைக் கொண்டு இதுவரை 35 மில்லி மீட்டர் படங்கள் இரண்டு இலட்சமும், 16 மில்லி மீட்டர் படங்கள் ஐம்பத்தாரா யிரமும் எடுக்கப்பட்டுள்ளன. வாசிக்கத் தக்க அச்சுப் பிரதிகள் 9,000 எடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆவண மையங்கள்.

2. வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும், நிருவாகத்திற்குப் பயன்படுபவையுமான சில ஆவணங்கள் மாவட்டங்களிலுள்ள பல அரசு அலுவலகங்களிலும் உள்ளன. 30 ஆண்டுகளுக்கு மேற் பட்ட ஆவணங்கள் யாவற்றையும் சேகரித்து மாவட்டந்தோறும் பாதுகாத்து வரும் நோக்குடன் மார்ச் 1982 முதல் சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட ஆவண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது போன்ற மற்றொரு மையம் பிப்ரவரி 1987-ல் சேலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு.

3. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல் வேறு வரலாற்று மற்றும் பிற வாழ்க்கைத்துறைகள் பற்றி ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் ஆர்வமும் திறமையும் மிகுந்த வர்களை ஊக்குவிப்பதற்காக, 1973-ம் ஆண்டு தமிழ்நாடு வர லாற்று ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டு தோறும் மாணவப் பணியிடங்கள் நான்கை வழங்கி வருகிறது. 1974-ம் ஆண்டிலிருந்து இதுவரை ஆராய்ச்சி மாணவர்கள் 13 பேர் இக்குழுவில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து ஆய்வு அறிக் கைகளை சமர்ப்பித்துள்ளனர். 1985–87-ம் ஆண்டிற்கான ஆராய்ச்சி மாணவர்கள் இருவர் 1986 பிப்ரவரி/மே மாதங் களில் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

## மாவட்ட விவரச் சுவடிகள்.

4. புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடிகளின் தமிழ் வடிவங்கள் விரைவில் வெளியிடப் படவிருக்கின்றன. தருமபுரி மாவட்ட விவரச் சுவடியின் இறுதி வடிவம் விரைவில் ஏற்கப்படவிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடி தயாரிக்கும் பணி தொடர்ந்து நடை பெறுகிறது.

## வெளியீட்டுப் பிரிவு.

5. கீழ்க்கண்ட தலைப்புகளில் தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள் அச்சிட்டு அல்லது படிபெருக்கி நகல் வடிவில் வெளியிடப்பட்டு விட்டன; சில தொகுக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

(1) நெயில் சிலை நீக்க அறப்போர் (அச்சிட்டு வெளியிடப் பட்டது).

(2) சென்னை எஸ்டேட் நிலச் சட்டம் 1908—1948 (படி கள் எடுக்கப்பட்டு வருகின்றன).

(3) கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும் (இறுதிப் படிவம தட்டச்சு செய்யப்பட்டுள்ளது).

(4) நகராட்சிகள்—தோற்றமும், வளர்ச்சியும் (இறுதிப் படிவம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது).

(5) 1920 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிட சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் ஆற்றிய பணி (தொகுக்கப்பட்டு வருகிறது).

''ஆவண அமுதம்'' என்ற பெயரில் காலாண்டு இதழ் ஒன்று வெளியிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் இதழ் விரைவில் வெளியாகும்.

## பயிற்சி.

6. அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற அலுவலகங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவண பராமரிப்பு குறித்து பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 59 நடந்து 981 பேர் பயன் பெற்றுள்ளனர். துறைத் தலைவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கான கூர்ந்தாய்வுப் படிப்புத் திட்டம் ஒன்று (இரண்டு நாட்கள்) 1982 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகின்றது. இதன் மூலம் இதுவரை 142 அலுவலர்கள் பயனடைந்துள்ளனர்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்கெல்லாம் சேர்த்துத்தான் பாளையங்கோட்டையில் அரசுக்குச் சொந்தமாக இருக்கிற சித்த மருத்துவக் கல்லூரியை மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க National Institute ஆரம்பிப்பதற்கு முதலமைச்சர் இணக்கம் தெரிவித்து, ஒப்புதல் தெரிவித்து இருக்கிறார்கள். விரைவில் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி National Institute ஆக மாறும்போது இவை எல்லாம் பரிசீலிக்கப்படும். அங்கே இவற்றை எல்லாம் கொடுப்பதற்கும், வாங்குவதற்கும் வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலாம்.

திரு. ஆ. பிரேம்குமார்: தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்திற்கு உபயோகப்படுகிற அளவிற்கு அருமையான மூலிகைகள் திண்டுக்கல் சிறுமலைப் பகுதியில் இருக்கின்றன. சென்ற ஆண்டு கூட மூலிகைப் பண்ணை அங்கே அமைப்பதற்கு ஆராயப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே சிறுமலைப் பகுதியில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தப்படுமா? சித்த மருத்துவத்தின் மூலம் அற்புதமான சுகம் கிடைக்கக்கூடிய சூழ்நிலையில் சித்த மருத்துவ மனைகளுக்கு சரியான விளம்பரம் இல்லாமல் இருக்கிறது. இங்கே செகரட்டேரியேட்டில் இருக்கும் சித்த மருத்துவமனை பற்றி கூட இன்னும் பலருக்குத் தெரியாமல் இருக்கிறது. அவைகளை கருத்தில் கொண்டு அந்த மருத்துவமனைகளுக்கு நல்ல விளம்பரம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் அறிந்தவரையில் சிறுமலை வாழைப்பழம்தான் புகழ் பெற்றது. அங்கே மூலிகை இருப்பதாக கேள்விப்பட்டதில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிந்த மூலிகைகளைப் பற்றிச் சொன்னால் அரசாங்கம் அது குறித்து பரிசீலிக்கலாம். விளம்பரம் போதுமானதாக இல்லையென்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதை மேலும் விளம்பரப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1987 ஏப்ரல் 8

## மாவட்டத் தொழில் மைய மேலாளர்கள்.

339—(*வினா எண் 3863) திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தொழில் மையங்களில் மேலாளர் (பொருளியல் ஆய்வு) பதவிகள் நிரப்பப்படாததின் காரணம் என்ன?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வணிகத் துறையில், தொழில் நுட்பத் தகுதி வாய்ந்த நபர்கள் இல்லாததால் தமிழகத்தில் உள்ள மாவட்டத் தொழில் மையங்களில் மொத்தம் உள்ள 14 மேலாளர் பணியிடங்களில் 7 நிரப்பப்படவில்லை. ஆகையால் இத்துறையில் உள்ள இதர அலுவலர் மூலம் இப்பதவிகளை நிரப்புவதற்காக அதற்கு தகுந்தாற்போல் தற்காலிக விதிகளை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பின்னாலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது 7 பேர்களை மேலாளர்களாக நியமித்து இருப்பதாகவும், 7 பேர்கள் மேலாளர்களாக அந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்கள்தான் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்கிறார்கள். ஏற்கனவே டெக்னிக்கல் குவாலிபிகேசனோடு நிறைய பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழு மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ அந்த டெக்னிக்கல் குவாலிபிகேசன் உள்ளவர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது மேலாளர் பதவி, அவர்கள் கீழ்மட்டத்தில் பணியாற்றி, படிப்படியாக பதவி உயர்வு பெறுகிறபோதுதான் முழுமையாக அந்த மேலாளர் பதவியை நிர்வகிக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். இருந்தாலும் கூட அந்த அனுபவத்தில் உள்ளவர்கள் யாராவது வெளியிலே இருக்கிறார்களா என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்யலாம். ஆனால் சிறந்த அனுபவம் உள்ளவர்களால்தான் அந்த இடத்திலே பொருத்தமாக பணியாற்ற முடியும் என்பதால் அந்தப் பதிலை நான் சொன்னேன்.



1987 ஏப்ரல் 8]

## இரவு நேர நெடுந்தூர பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்கள்.

340—(*வினா எண் 4814) திரு. க. சோலைராசு, திரு. மா. சின்னராசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவுநேர நெடுந்தூரப் பேருந்தில் இரண்டு ஓட்டுநர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கழகங்களில் இரவு நேர பேருந்துகளுக்கு இரு ஓட்டுநர்கள் நியமிக்கப்பட வேண்டிய நிலைகளில், இரு ஓட்டுநர்கள் நியமிக்கப்பட்டு ஓட்டுகிற வழக்கம் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று இரவு நேரத்தில் செல்கிற லாரிகளிலும், அல்லது தனியார் பஸ்களிலும் இரண்டு ஓட்டுநர்கள் இருந்துதான் ஓட்ட வேண்டும் என்று அரசு அறிவுறுத்துமா? இரவு நேரத்தில் அரசுப் பேருந்துகளை ஓட்டக்கூடிய ஓட்டுநர்களுக்கு சிறப்புப் படி ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரத்திலே ஓட்டுவதாக இருந்தாலும் சரி, அல்லது பகல் நேரத்திலே வண்டி ஓட்டுவதாக இருந்தாலும் சரி, 8 மணி நேரத்திற்கு மேல் தொடர்ச்சியாக ஒரு ஓட்டுநர் ஓட்டக்கூடாது, உடனே மாற்றப்பட வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அதற்கேற்பத்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். தனியார் துறையாக இருந்தாலும் கூட இப்படி செயல்படுவதுதான் அந்த ஓட்டுநர்களுக்கும், அந்த வண்டிக்கும், இன்னும் பொது மக்களுக்கும். எல்லோருக்கும் நல்லது என்பதை நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதைக் கடுமையாக்க வேண்டும் என்ற உணர்விலேதான் இப்போது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்து. இரவு நேரத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு ஏதாவது சிறப்பு ஊதியம் தரப்படுகிறதா என்று கேட்டார்கள். அதை ஒரு வகையிலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குறிப்பாக எவ்வளவு, எப்படி என்பதை நான் சொல்ல முடியாது. அதற்கான குறிப்பு இப்போதில்லை.

[1987 ஏப்ரல் 8

## வீட்டு வசதி வாரிய புதிய காலனிகள்.

341—(*வினா எண் 5489) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டு வசதி வாரியத்தால் புதிதாக உருவாக் கப்படும் காலனிகளில் சமீபமாக சிறிய தொழிற் கூடங்கள் அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புத் தர அரசு திட்டம் வகுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வீட்டு வசதி வாரியத்தால் புதிதாக உருவாக்கப்படும் காலனிகளில் சமீபமாக சிறிய தொழிற்கூடங்கள் அமைத்து அப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் திட்டம் சென்னையைச் சார்ந்த அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் பகுதிகளில் மட்டும் சிட்கோவால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உலக வங்கி யின் நிதியுதவியுடன் இது செயல்படுகிறது. மொகப்பேர் பகுதி யில் இப்பணி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பாக நடைபெற்று வருகிறது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பரப்பளவில் தொழிற்கூடங்கள் கட்டு வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது? இந்தத் திட்டத்தை மேலும் விரிவாக்குகிற திட்டம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 329 மனைகள் மேற்சொன்ன இடங் களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் பரப்பளவு ஒவ்வொன் றும் மாறுபடுகிறது. ஒன்று 558 சதுர அடி, அடுத்தது 168 சதுர அடி என்று இப்படியெல்லாம் வருகிறது. எனவே மொத்தமாக ஒவ்வொன்றையும் கூட்ட வேண்டும். ஆக 329 மனைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எங்கே வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் வீட்டு வசதி வாரியத்தோடு சேர்ந்து இதை அமுல் படுத்துவதற்கு எதிர்காலத்தில் ஆலோசிக்கப்படும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால், அந்தக் காலனிகளில் குடி யிருக்கின்ற படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா?



1987 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு முடிவை எடுக்க முடியாது என்று கருதுகிறேன். அதற்கான குறிப்பு இங்கே இல்லை. இருந்தாலும், தகுதியான வர்கள் யார் யார் என்பதைப் பார்த்து, யார் யார் மனுச் செய் கிறார்களோ, அவர்களிலிருந்து பொறுக்கி எடுப்பதுதான் சரி யாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே இதைப் பற்றி தனி யாக ஆய்வு செய்யலாம்.

## தேயிலை உற்பத்தியில் தேக்கம்.

342—(*வினா எண் 6988) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தடுக்க எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலையைப் பொறுத்தமட்டில், தேயிலைத் தூள் உற்பத்தியில் அண்மையில் தேக்க நிலை எதுவும் ஏற்படவில்லை.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கக் கூடிய உபாசி போன்ற நிறுவனங்கள் உற்பத்தி செய்த தேயிலையை விற்க முடியாமல் தேக்கம் அடைந்து, தொழிலாளர் களுக்குக் குறைந்த கூலியைத் தந்தும் தொழிலாளர்களை வேலை யிலிருந்து நீக்கம் செய்வதையும் அரசு அறியுமா? இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, உற்பத்தியிலே ஏதாவது தேக்கம் இருக்கிறதா என்று கேட்டார்கள். உற்பத்தியிலே தேக்கம் இல்லை. விற்பனையைப் பொறுத்தவரை அது நம்முடைய கையிலே இல்லாததால் அந்தந்த சூழ்நிலைக் கேற்ப அனுசரித்து நாம் செய்யவேண்டியிருக்கிறது. தொழி லாளர்களை வேலைநீக்கம் செய்கிறார்கள் என்பதற்கான குறிப்பு

என்னிடத்திலே இல்லை. இதுகுறித்து தொழிலாளர் துறையிலே யிருந்து குறிப்பு தருவார்களேயானால் முறையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய அனைத்து நபர்களுக்கும் ஒரு நலன் விளைவிக்கக்கூடிய முறையிலே தேயிலைத் தோட்டங்களை தேசியமயமாக்கக்கூடிய ஒரு கொள்கையை அரசு ஆராய்ந்து ஆணையிட உள்ளதா என்பதை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு முறை இப்போது நம்முடைய ஆலோசனையில் இல்லை. எல்லாவற்றையும் தேசிய மயமாக்கிவிடுவது என்பது நிச்சயமாக அரசாங்கத்திற்கும் நல்லதல்ல; பொது மக்களுக்கும் நல்லதல்ல. சில பொறுப்புகளை தனியாரும் ஏற்றுக்கொண்டால் அதைப் பொறுப்போடு செய்ய வேண்டும். அதைப் பொறுப்போடும் முறையோடும் செய்கிறார்களா என்பதை கண்காணிக்கின்ற முறையை அரசாங்கம் கொஞ்சம் கடுமையாக்க வேண்டும்; அதைச் செயல் படுத்த வேண்டும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியிலே தேக்கம் இல்லை; விற்பனை யிலேதான் தேக்கம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, இந்தியாவிலேயே அதிக மான சிறு விவசாயிகள் தேயிலை உற்பத்தி செய்கின்ற இடம் நீலகிரி மாவட்டம்தான். அந்த சிறு விவசாயிகள் கூட்டுறவு மூலமாக தேயிலை உற்பத்தி செய்வதிலே, தொழிற்சாலையிலே தேயிலை தேங்கிவிடுவதாலே, பச்சை தேயிலையை மிகவும் குறைந்த விலைக்கு ரூ. 3, ரூ. 3.50-க்கு விற்கின்ற கட்டாயம் இவர்களுக்கு ஏற்படுகிறது. அதிலிருந்து அவர்களைக் காப்பாற்று வதற்கு இந்த கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை, மற்ற கம்பெனிகளில் வாங்குவதைத் தவிர்த்து, இந்தக் கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய



தேயிலையை சிவில் சப்ளைஸ் நிறுவனம் வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி ஆலோசிக்கலாம். ஆனால் இப்போது தேக்க நிலை என்று சொன்னால், விற்காமல் இல்லை. உற்பத்தி செய்யப்படுகின்ற அத்தனை தேயிலையும் விற்கப்பட்டு விடுகிறது. ஆனால் விலை மட்டும் குறைவாக இருக்கிறது. அதைத் தான் இங்கே சொல்கிறார்கள். சிவில் சப்ளைஸில் நாம் தருகிற போது அன்றைக்கு மார்க்கெட்டிலே விலை எப்படி இருக்கிறதோ அதைக் கொடுத்துத்தான் வாங்குகிறோம். எனவே அப்படி பார்க்கிறபோது, இங்கே வாங்குவதும், அங்கே வாங்குவதும் ஒன்றாகத்தான் இருக்கும். விற்பனை தேங்கி விடவில்லை. விலை குறைவாக இருக்கிறது. எனவே நாமே நேரடியாக வாங்கினாலும் கூட விலையை நிச்சயமாக கூட்டிக் கொடுக்கக்கூடிய நிலையில் சிவில் சப்ளைஸ் இருக்காது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். எனவே விற்பனையிலே ஏதாவது சிரமம் இருந்து, உற்பத்தியான பொருள் வெளியிலே விற்கமுடியாத நிலை இருக்குமேயானால் இந்த அரசும் அதற்கு சித்தமாக இருக்கிறது. தற்போது எல்லாம் விற்பனையாகிக் கொண்டிருக்கிற காரணத்தால் அதிலே அவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்படாது என்று கருதுகிறேன்.

**நெடுகுளா கிராமத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை.**

**343—(* வினா எண் 11881) திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுகுளா கிராமப் பகுதியில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நெடுகுளா கிராமப்பகுதியில் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை துவங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, அந்தப் பகுதியில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைக்கின்ற எண்ணம் தற்போது இல்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் பரப்பளவில் சிறு விவசாயிகள் தேயிலையைப் பயிரிட்டு இருக்கிறார்கள். ஆகையால் அந்தப் பகுதிக்கு நடப்பு ஆண்டிலாவது கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோத்தகிரி கூட்டுறவுத் தொழிற்சாலையில் 39 லட்சம் டன் தேயிலை ஒரு ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்குத் தேவையான தேயிலை இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதற்குமேலே நிச்சயமாக கிடைக்காது என்று அங்கேயிருந்து தகவல் சொல்லியிருக்கிறார்கள். எனவே, தனியாக ஒரு தேயிலைத் தொழிற்சாலை ஆரம்பிப்பது என்பது அவசியமில்லாத ஒன்று என்றுதான் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை மீண்டும் ஒரு முறை பரிசீலித்துப் பார்த்து, சொல்லலாம்.

**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பு தவறான குறிப்பு என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதி, குறைந்தபட்சம் 3 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட ஒரு பகுதியாகும். அங்கே

1987 ஏப்ரல் 8]

தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் இரண்டு இருக்கின்றன. ஆகையால் கண்டிப்பாக இந்த ஆண்டு அந்தப் பகுதிக்கு ஒரு தேயிலைத் தொழிற்சாலையை அமைக்க அரசு நடவடிக்கைதை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தனியார் மூலமாக அங்கே தொழிற்சாலை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். ஒருவேளை தனியார் மட்டுமே வைத்திருக்கிற காரணத்தாலே, விலையிலே மிகவும் குறைத்து வாங்குகிறார்கள்; விவசாயிகளுக்கு சரியான விலை கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு, குறைபாடு இருக்குமேயானால் அதைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது கூட சரியாக இருக்கும். ஆனால் தனியார்கள் முறையாக அதைச் செய்து கொண்டு இருந்தால் அந்த இடத்தில் அரசின் சார்பாக ஒன்றை ஏற்படுத்துவது ஒரு தேவையில்லாத போட்டியை ஏற்படுத்துவது என்பது அரசுக்கும் நல்லது அல்ல, அவர்களுக்கும் நல்லது அல்ல. அவர்கள் தவறு செய்வார்களானால், அவர்கள் சரியான விலை கொடுக்காமல் இருப்பார்களானால், அதை அரசின் கவனத்திற்கு முறையாகத் தெரிவிப்பார்களானால், அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து முறைப்படுத்தி, அது நல்ல முறையில் நடப்பதற்கு உண்டான முயற்சியை நாம் மேற்கொள்ளலாம்.

(முற்பகல் 10-50)

## பால் சோதனையிடல்.

314. (*வினா எண். 4268) திரு. க. வெ. வீராணம்பலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் சோதனையிடும் அதிகாரத்தினை சுகாதார ஆய்வாளர்களிடம் உள்ளதுபோல், கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?

(ஆ) இல்லையெனில், அதன் விவரம் என்ன?

(இ) இத்தடி நோயிலிருந்து பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்க இவ்வித ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

[1987 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [(அ) முதல் (இ) வரை] பால் சோதனையிடும் அதிகாரத்தினை, சுகாதார ஆய்வாளர்களிடம் உள்ளது போல் கால்நடை ஆய்வாளர்களுக்கு வழங்குவது பற்றி நன்கு பரிசீலிக்கப்பட்டு, இயலாது என்று அரசு முடிவு செய்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, பால் சோதனையிடும் அதிகாரம் சுகாதார ஆய்வாளர் அல்லது கால்நடை ஆய்வாளர்களிடம் இருப்பதால், பொது மக்களுக்கு என்ன லாபம் இருக்கிறது என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக விவசாயிகள், அல்லது பண்ணை வைத்து இருப்பவர்கள் கொடுக்கின்ற பாலை சோதனையிட்டு தண்டிக்கிறார்கள். ஆனால் நமக்கு தெரிந்த வரையில் ஓட்டலில் பாலில் தண்ணீரை விடுவதை விடுத்து, அவர்கள் தண்ணீரில்தான் பாலை விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது, மக்களுக்கு தரமான பால் கிடைக்கின்ற வகையில் இந்த சோதனையை மாற்றக்கூடாதா? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார ஆய்வாளர்கள் பால் மற்றும் உணவுப் பொருட்கள் தரமாக உள்ளதா என்பதைப் பற்றியும், அதில் கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது, மற்ற சத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன என்றும் கணக்கு எடுக்கிறார்கள். ஆனால் கால்நடை மருத்துவத் துறையில் இருப்பவர்கள் இதில் என்ன கிருமிகள் இருக்கின்றன, எவ்வாறு இருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம் ஆராய்கிறார்கள். தற்போதுள்ள சட்டப்படி, அந்த சுகாதார ஆய்வாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுபோல் இதை மாற்றுவதற்கு தேவை இருந்தால், இதை நாம் மாற்றுவதற்கான முயற்சியை எடுக்கலாம்.



1987 ஏப்ரல் 8]

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தற்போது பால் சோதனையிடப்படுவது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? தனியார் விற்பனை செய்கின்ற பாலில் சுத்தமான வெண்ணெயை எடுத்துவிட்டு, தற்போது விற்பனையை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் வாங்குகிற பாலின் தரம் சோதனை செய்யப்படு கிறது. ஆனால் தனியார்கள் பாலில் வெண்ணெயை எடுத்து விட்டு விற்பதை, சில மாவட்டங்களில் தொழிலாக நடத்து கிறார்கள். அவர்கள் விற்கிறபோது, வெண்ணெய் எடுத்த பால் என்று சொல்லி விற்பதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலாது.

### திருவண்ணாமலைத் தொகுதி கீழ்நாத்தூரில் சார்பதிவாளர் அலுவலகம்.

206—(*வினா எண். 5655) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலைத் தொகுதி, கீழ்நாத்தூர் கிராமத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் துவங்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைத் தொகுதி, கீழ்நாத்தூர் கிராமத்தில் சார்பதிவகம் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாடுகளில் இருப்பதைப்போல சார் பதிவாளர் அலுவலகங்களில் ரூபாய் 500-க்கு மேற்பட்ட பிராமிசரி நோட்டு களை ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போடும்படி தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

## அம்பாசமுத்திரம் தொகுதி, மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைக் கம்பெனி.

207—(*வினா எண் 5679) **திரு. எஸ். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைக் கம்பெனி தேயிலையைப் பக்குவப்படுத்த அருகிலுள்ள அரசுக் காடுகளிலிருந்து விறகு எடுக்கின்றது என அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, (அ) புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் முன்பு நிறைய மரங்கள் வெட்டப்பட்டு, அது சம்பந்தமாக அரசுக்கு புகார் வந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டதற்குப் பின்பு, அந்த காட்டு இலாகா அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் பயனாக அந்தத் தவறுகள் குறைந்து இருக்கின்றன. இப்போது சில சில தவறுகள் நடப்பதாகத் தெரிகிறது. ஏன் என்றால் இந்தத் தேயிலையைப் பக்குவப்படுத்துவதற்கு அரசினுடைய பகுதியில் இருந்து விறகுகள் எடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இதன் காரணமாக எஸ்டேட்டிற்கு கீழே இருக்கின்ற மணிமுத்தாறு அணை சமீப காலமாக நிரம்புவது இல்லை. காரணம், காடுகளில் மரங்களை வெட்டுகிற காரணத்தால் மழை குறைவாக இருக்கிறது. இதை எல்லாம் கவனத்தில் கொண்டு, மேலும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.



1987 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் மாஞ்சோலைத் தேயிலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைக் கம்பெனி தேயிலையைப் பக்குவப் படுத்த அருகிலுள்ள அரசுக் காடுகளிலிருந்து விறகு எடுக்கிறது என அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா என்பதுதான் வினா. புகார் வரவில்லை என்பதுதான் என்னுடைய பதில். நாகர் கோவில் வனத்துறைச் சரக அலுவலர் 3—4—86, 4—4—86, 5—4—86 ஆகிய நாட்களில் மாஞ்சோலை எஸ்டேட்டுக்கு உட்பட்ட எல்லாப் பகுதிகளையும் தணிக்கை செய்தார். அரசுக் காடுகளி லிருந்து எந்தவித விறகையும் எஸ்டேட் அதிகாரிகள் உபயோகப் படுத்தவில்லை என்று தெரிய வந்துள்ளது. மேலும் மாஞ்சோ லைக்கு உட்பட்ட காடுகளுக்கு எந்தவிதச் சேதமும் இல்லை. இருப்பினும், உஷாருடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தற்போது வனத்துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற தேயிலைத் தோட்டக் கழகம் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆகவே ஏறத்தாழ 4,000 ஏக்கர் தேயிலை பரப்புள்ள அந்தத் தேயிலைக் கம்பெனியை அரசு கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே. இதுபற்றி தனியாகக் கேள்வி போடும்படி உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## தஞ்சை பெரிய கோவிலுக்கு எதிரில் கடைகள் கட்டுதல்.

208—(*வினா எண். 9264) **திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரிய கோவில் எதிரில் கடைகள் கட்டுவதற் கான ஏற்பாட்டை அரசு செய்யு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும் ?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சை பெரிய கோயிலுக்கு எதிரில் கடைகள் கட்ட கோயில் நிலம் எதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்குச் சொந்தமான இடத்திலே சுற்றுலாத் துறை மூலமாக அங்கே கடைகளைக் கட்டுவதற்கு, வெளிநாட்டு, உள் நாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருவதால், அது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை நகராட்சியோ, அல்லது மற்ற வேறு அரசுத் துறையோதான் கட்டவேண்டும். இது நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ரோடு ஓரங்களிலுள்ள இடம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, கட்ட வேண்டும்.

**புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம்.**

**209—(* வினா எண் 9792) திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது செயல்படும்?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மின்னளவிகளின் வாங்கிய செலவை திரும்பிப் பெறும் முறை.**

**210—(* வினா எண் 10562) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது 'மீட்டர்கள்' இருப்பு இல்லை என்ற காரணத்தால் வாடிக்கையாளர்



களை மீட்டர் வாங்கிக் கொடுக்கச் செய்து, பின்னர் அதன் விலையை திருப்பிக் கொடுக்கும் முறை நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மின்னளவிகள் வாரியத்திடம் இருப்பு இல்லாதவிடத்து நுகர்வோர்கள் மின்னளவிகளை வாங்கிக் கொடுத்து அதற்கான செலவை வாரியத்திடமிருந்து திரும்பிப் பெறும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது.

**திரு. வே. சோ. பஞ்சவர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் குடிசைகளுக்கு மின் இணைப்பு கோருவதற்காக பல மாதங்களுக்கு முன்பாக மனுக்கள் கொடுத்தும், அவற்றுக்கு இதுவரையில் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. மேலும் ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் இதற்கான தீர்மானம் போட்டு, அதற்குரிய கட்டணங்களைக் கட்டியும், அவற்றுக்கான ஒயர்களை மாற்றுவதில் தாமதமாகிறது. இந்த வேலைகளை விரைவில் முடித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவைத் தலைவர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஊர் அல்லது ஒன்றியத்தைக் குறிப்பிட்டு, அங்கே இதுமாதிரி ஒரு விளக்குத் திட்டத்தில் தடையிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான பரிகாரம் காணப்படும்.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.**

**345—(* வினா எண் 12106) திரு. கு. ரமணி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் இலாபத்தில் இயங்கி வருகிறதா?

[1987 ஏப்ரல் 8

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1983-84-ம் ஆண்டில் ரூ. 164.30 லட்சம் ரூபாயும், 1984-85-ம் ஆண்டில் 119.93 லட்சம் ரூபாயும் லாபம் ஈட்டியுள்ளது.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு லாபம் சம்பாதித்தும்கூட, அந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தில் பாடுபடுகின்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சமான ஒரு மாத போனஸ் தான் கொடுக்கப்படுகிறது. அதுவும் அலுவலக ஊழியர்களாக இருக்கக் கூடிய ஸ்டாஃப் மெம்பர் களுக்கும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினருக்கும் கொடுக்கப் படவில்லை. இதுபற்றி அமைச்சரவர்கள் ஏதாவது விசாரணை நடத்தியிருக்கிறார்களா? இதுபற்றி விவரங்கள் ஏதாவது தெரிவிக்கமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே தொழிலாளர்களுக்கு சட்டப்படி போனஸ் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொழிலாளர்கள் அல்லாதவர்களுக்கு போனஸ் கொடுக்க படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். இதுபற்றி விசாரித்து பதில் சொல்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் அல்லாத ஸ்டாஃப் மெம்பர்களும் அங்கே இருக்கிற ஊழியர்கள் தான். அவர்களுக்கும் போனஸ் உரிமை இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சில கொடைகள் கூட கொடுக்கப்படுவதில்லை. அந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தில் உள்ள நிர்வாக நடவடிக்கைகளில் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படுவதை அவ்வப்போது கவனித்து, சரியான முறையில் கொண்டு செல்வதற்கு, ஒரு 'ஸ்டாண்டிங் ஆர்டர்' இன்றைக்கு வரையில் இல்லாமலிருக்கிறது. என்பதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதைச் செய்தால் இதையெல்லாம் ஒழுங்குபடுத்தமுடியும். அதைச்செய்ய அமைச்சரவர்கள் முன்வருவார்களா?



1987 ஏப்ரல் 8]

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தேயிலைக் கழகத்தில் உள்ள அலுவலர்களுக்கு போனஸ் கொடுப்பது, ஸ்டாண்டிங் ஆர்டர் வழங்குவது சம்பந்தமாக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### நத்தம் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதி.

**1—வினா 1992—திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராஜக்கப் பட்டியில் கட்டப்பட்ட மேல் நிலைத் தொட்டிக்கு குடிநீர் சப்ளை இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராஜக்கப்பட்டியில் கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலைத் தொட்டி மூலம் தற்பொழுது தடை யின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**2—வினா 1946—திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், வேம்பார் பட்டியில் குடிநீர் வசதி செய்து தர அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

[1987 ஏப்ரல் 8

(ஆ) ஆம் எனில், குடிநீர் திட்டத்தினை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) சானார்பட்டி ஒன்றியத்திலுள்ள வேம்பார்பட்டிக் கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க ரூ. 4.998 இலட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கான பணிகள் விரைவில் துவங்கப் பெறும்.

3—வினா 1948—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், கோட்டைப்பட்டி, சாமிநாயக்கன்பட்டி ஆகிய ஊர் மக்களின் குடிநீர் வசதிக்காக மேல் நிலைத் தொட்டி நிறுவப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோட்டைப்பட்டி, சாமிநாயக்கன்பட்டி கிராமங்களில் மக்கட் தொகை முறையே 175 மற்றும் 210 ஆகும். இக்கிராமங்களில் இரு கையிறைப்பான்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. தற்போதுள்ள வழிமுறைகளின்படி மக்கட் தொகை 750-க்கும் மிகுந்து இருக்கும் குடியிருப்புகளில்தான் மேல்-நிலைத் தொட்டிகள் கட்டப்படுகின்றன.

4—வினா 1949—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், கோட்டைப்பட்டியில் குடிநீர் வசதியின்றியும், கால் நடைகளைப் பராமரிக்கத் தண்ணீர் வசதியின்றியும் பொது மக்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் உத்தேசம் உண்டா?



1987 ஏப்ரல் 8]

விடை—

(அ) மற்றும் (ஆ) இக்கிராமத்தில் குடிதண்ணீர் ஒரு திறந்த வெளிக் கிணற்றிலிருந்து கொள்ளப்படுகிறது. இக்கிராமத்தை வகை 6-லிருந்து மாற்றியபின் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்படும். மாநிலத்திலுள்ள அனைத்துக் குடியிருப்புகளின் நீர் ஆதாரம் மற்றும் நீர் நிலைமையைக் கண்டறிந்து தேவைப்படும் குடியிருப்புகளை வகை மாற்றம் செய்ய மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5—வினா 1956—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், கல்லுப்பட்டியில் குடிநீர் பைப்பை ஊருக்குள் போடாமல் மக்கள் குடிநீர் இன்றி கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பைப்புகள் போட்டுத் தர அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) 5,000 லிட்டர் கொள்ளளவுடன் கூடிய மேல் நிலைத் தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறது. இக்கிராமம் வகை 6-ஐச் சேர்ந்ததாகும். தற்போது நடைபெற்று வரும் மறு ஆய்வின்போது இக்கிராமம் வகை மாற்றம் செய்யப்படின், இங்கு மாற்று குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்படும்.

6—வினா 1957—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், மடூர் கிராமம், புகையிலைப்பட்டி குலாலர் தெரு மக்கள் குடிநீர் வசதியின்றி கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஒரு குழாய்ப் பிரிவு அமைத்து அம் மக்கள் கஷ்டம் தீர்க்க அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இக்குடியிருப்பில் உள்ள மக்கட் தொகை 50 தான். இங்கு ஒரு கையிறைப்பான் மூலமாக தண்ணீர் கிடைக்கிறது. ஆகையால் இப்போதைக்கு இது போதும் எனக் கருதப்படுகிறது.

**7—வினா 1958—திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், இராகுலாபுரம் கிராமத்திலுள்ள பரதேசி கவுண்டன்பட்டியில் வாழும் ஏழை விவசாய மக்கள் குடிநீர் வசதியின்றி அல்லலுறுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமத்தின் மக்கட் தொகை 253 ஆகும். இங்கு கையிறைப்பான் ஒன்று நல்லமுறையில் இயங்கி வருகிறது. இதிலிருந்து கிடைக்கும் குடிநீர் இக்கிராம மக்களுக்குப் போதுமானதாகும்.

**8—வினா 1959—திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், எம். பண்ணைப்பட்டி கிராமத்தில் குடிநீர் வசதிக்காக மேல் நிலைத் தொட்டி கட்டித்தர அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

இக்கிராமம் இப்போது வகை 6-ன் கீழ் உள்ளது. இங்கு ஒரு திறந்த வெளிக் கிணறு உள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மறு ஆய்வின்படி இக்குடியிருப்பு வகை மாற்றம் செய்யப்படின் அதற்கேற்ப குடிநீர்த் திட்டம் இங்கு மேற்கொள்ளப்படும்.



**9—வினா 1960—திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், கம்பளியம்பட்டி கிராமம் கஸ்பாவில் வசிக்கும் ஊர் பொது மக்களுக்கு புதியதாக வெட்டப்பட்ட கேணிக்கு பம்ப்செட் போட்டு, மேல்நிலைத் தொட்டி அமைத்து மேலும் 3 குழாய்களை அமைத்துத் தரும் செயற் குறிப்பு உண்டா ?

விடை—

கம்பளியம்பட்டி கிராமத்தில் ஒரு கையிறைப்பான் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயல்படுகிறது.

இக்கிராமம் வகை 6 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 3-ம் வகைக்கு மறு வகைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கேற்ப குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேல் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**10—வினா 1961—திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராசக்காப்பட்டி கிராமம், தீத்தாம்பட்டி, கல்லுப்பட்டியில் குடிநீர் வசதியின்றி ஏழை மக்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராசக்காப்பட்டி கிராமம், தீத்தாம்பட்டி மற்றும் கல்லுப்பட்டி குடியிருப்புகளில் தலா 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் தடையின்றி வழங்கப்படுவதால் அக்குடியிருப்புகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏதும் இல்லை.

[1987 ஏப்ரல் 8

11—வினா 1962—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராசக்காப் பட்டியில் (திடீர் நகர்) குடிநீர் வசதியின்றி அங்குள்ள மக்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராசக்காப் பட்டி (திடீர் நகர்) புதிதாக ஏற்பட்ட குடியிருப்பு ஆகும். இங்கு குடிநீர் வசதி செய்துதர 1986-87 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு கைப்பம்பு நிறுவ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### பாப்பம்பட்டி, ஆயக்குடி பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் வழங்க கட்டப்பட்ட பங்குத் தொகை.

12—வினா 2135—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி தொகுதி, பாப்பம்பட்டி, ஆயக்குடி பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் வழங்க பங்குத்தொகை கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ், வினாவில் குறிப்பிட்டுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதால் இக்கிராமங்களிடமிருந்து பங்குத் தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை.



1987 ஏப்ரல் 8]

(ஆ) ரூ. 21.20 இலட்சம் மதிப்பீட்டில் இக்கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

### கத்தரிபுலம் அரசு உயர்நிலைப் பள்ளி.

13—வினா 2727—திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கத்தரிபுலம் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கிவரும் கட்டிடத்தை காலி செய்ய வேண்டும் என வற்புறுத்துவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மாற்று இடம் ஏற்பாடு ஆகிவிட்டதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) கத்தரிபுலம் உயர்நிலைப்பள்ளி தனியார் பள்ளியாக இருந்தது. 1976-ல் பள்ளியின் நிர்வாகம் பள்ளியை நடத்த இயலாது என்று தெரிவித்ததால், அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பள்ளியின் கட்டடம், நிலம் மற்றும் கருவிகள் ஆகியவை அரசுக்கு ஒப்படைக்கப்படாததால், பள்ளியின் முன்னாள் நிர்வாகி இவற்றை அவருக்கு திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அவர் எந்தவிதமான உடன்பாட்டுக்கும் வராததால், பள்ளிக்கு 400 மீட்டர் தொலைவில் உள்ள 7 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை பள்ளிக்குப் பெறுவதற்கு பள்ளி வளர்ச்சிக் குழு மற்றும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் ஆகியவை முயற்சி செய்து வருகின்றன.

### அரசு மருத்துவ மனைகளிலுள்ள எக்ஸ்ரே கதிர் இயக்கக் கருவி.

14—வினா 2905—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள எல்லா அரசு மருத்துவமனைகளிலும் எக்ஸ்ரே கதிர் இயக்கக் கருவி இயங்குகிறதா?

(ஆ) அந்தக் கருவிகள் பழுதடைந்தால், அவை சரிசெய்ய நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

விடை—

(அ) அரசினர் இராஜா சர் இராமசாமி முதலியார் மருத்துவ மனை, சென்னை, மற்றும் அரசினர் மருத்துவமனை, சைதாப் பேட்டை, சென்னை ஆகிய இரண்டு மருத்துவமனைகளில் உள்ள எக்ஸ்ரே கருவிகள் மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் உள்ள 22 எக்ஸ்ரே கருவிகளில் 10 எக்ஸ்ரே கருவிகள் தவிர மற்ற எல்லா மருத்துவமனைகளிலும் கதிர் இயக்கக் கருவி கள் இயங்கி வருகின்றன.

(ஆ) கருவிகள் பழுதடைந்தால் அவற்றைச் சரிசெய்ய தலைமை கதிர் இயக்க தொழில் நுட்பனர்கள் (Chief X-ray Technicians) சென்னை அரசினர் பொது மருத்துவமனை, செங்கல்பட்டு மருத்துவமனை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் ஆகிய மருத்துவ நிலையங் களில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், அந்தந்த மருத்துவ மனை முதல்வர்கள், கதிர் இயக்கக் கருவிகளை எந்தக் கம்பெனி யிடம் வாங்கினார்களோ அந்தக் கம்பெனிகளிடம் தொடர்பு கொண்டு, அந்தக் கம்பெனியின் நிபுணர்களைக் கொண்டு கருவி களைப் பழுது பார்த்துக் கொள்கின்றனர்.

## குற்றங்களைத் தடுக்க காவல் நிலையங்களில் நவீன வசதிகள் ஏற்படுத்தல்.

15—வினா 3105—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றங்களைத் தடுக்கும் வகையில் காவல் நிலையங் களில் நவீன வசதிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம். குற்றங்களைத் தடுக்க மிக முனைப்போடு காவல் துறை இயங்கி வருகின்றது. குற்றங்களின் அதிகரிப்பைத் தடுக்கும் வகையில் காவல் நிலையங்களில் நவீன





வசதிகள் ஏற்படுத்தும் வண்ணம் அறிவியல் கருவிகள் (Sophisticated Equipments) 1984—85 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளில் வாங்குவதற்கு அரசாணை (பல்வகை) எண் 1048, உள்துறை, நாள் 24 மே 1984-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 1984-85-ம் ஆண்டில் கீழ்க்கண்ட அறிவியல் கருவிகள் வாங்குவதற்கு ரூ. 35,088 தொடர் இனச் செலவாகவும், ரூ. 5,81,050 தொடரா இனச் செல வாகவும் அனுமதிக்கப்பட்டது :—

| | |
|---|---|
| (1) வீடியோ, டி. வி. கேமரா யூனிட் | 1 |
| (2) டேப் ரெக்கார்டர் | 22 |
| (3) மெட்டல் டிடெக்டர் | 6 |
| (4) பிளேன் பேப்பர் காப்பியர் | 1 |
| (5) இன்வெஸ்டிகேட்டிங் கிட்ஸ் | 30 |
| (6) அல்ட்ரா வயலட் விளக்குகள் | 33 |

2. இரண்டாவது கட்டமாக 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 66,576 தொடர் இனச் செலவிலும் ரூ. 9,85,225 தொடரா இனச் செலவி லும் கீழ்க்கண்ட கருவிகள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப் பட்டது :—

| | |
|---|---|
| (1) மைக்ரோ பில்மிங் கருவி மற்றும் படச்சுருள் | 1 |
| (2) வீடியோ டி.வி. கேமரா யூனிட் | 1 |
| (3) இன்வெஸ்டிகேட்டிங் கிட்ஸ் | 30 |
| (4) பிளேன் பேப்பர் காப்பியர் | 1 |

3. இதுபோன்று இன்னும் பல கருவிகள் 1986-87, 1987-88 மற்றும் 1988-89 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் வாங்கப்பட உள்ளன. பெருகி வருகின்ற குற்றங்களைத் தடுப்பதற்கும், கண்காணிப்பதற்கும், சட்டம் ஒழுங்கு நிலை நாட்டுவதற்கும் காவல் துறையினருக்கு மேலே கண்ட அறிவியல் கருவிகள் பெரும் உதவியாக அமையும் என்பது தெளிவு.

[1987 ஏப்ரல் 8

### சென்னை, மேட்லி சாலைக்கு தார்ச்சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல்.

16—வினா 3724—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர், மேட்லி சாலையில் உள்ள ஜெயின் கல்லூரி மற்றும் அடுக்குமாடி வீடுகள் உள்ள குறுக்குத் தெருவிற்கு தார்ச் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) தியாகராய நகர், மேட்லி சாலையில் உள்ள ஜெயின் கல்லூரி மற்றும் அடுக்குமாடி வீடுகள் உள்ள குறுக்குத் தெருவிற்கு தார் சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை. தெரு விளக்குகள் அமைக்கும் திட்டம் உள்ளது.

(ஆ) தியாகராய நகர், மேட்லி சாலையில் உள்ள ஜெயின் கல்லூரி மற்றும் அடுக்குமாடி வீடுகள் உள்ள குறுக்குத் தெருவிற்கு மூன்று புதிய குழல் விளக்குக் கம்பங்கள் அமைக்க ரூ. 11,936 அடங்கிய திட்டம் மாநகராட்சியால் வரையறுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டிற்குள் நிறைவேற்றி வைக்கப்படும்.

### அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் சான்றிதழ்கள்.

17—வினா 4800—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அதிகாரிகளை நான்கு பிரிவுகளாகச் சம்பள அடிப்படையில் பிரித்த பின்பு (A. B. C. D) சில சான்றிதழ்கள் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் இருந்து பெறப்பட வேண்டும் என்றுள்ளது மாற்றப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன?



1987 ஏப்ரல் 8]

விடை—

அரசிதழ் பதிவு பெற்றோர் மற்றும் பெறாதோருக்கான தனி உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை ஒட்டி 'ஏ' மற்றும் 'பி' பிரிவினர் முன்னாள் அரசிதழ் பதிவு பெற்றோர் எனவும் 'சி' மற்றும் 'டி' பிரிவினர் முன்னாளைய அரசிதழ் பதிவு பெறாதோர் எனவும் வகைப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளின் விதித் தொகுப்புகள் (( மற்றும் நடைமுறை நூல்களில் குறிப்பிடப்பட்ட கடமைகளையும், பொறுப்புக்களையும் நிருவகிக்க ஏதுவாக, அந்தந்த விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்களுக்கு உரிய திருத்தம் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. எல்லாத் துறைகளிலும் மேற்கண்டவாறு திருத்தம் வெளியிடப்பட்டதும் சில சான்றிதழ்கள் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து பெறப்பட வேண்டும் என்ற நிலை முற்றிலும் மாறிவிடும்.

### கன்னியாகுமரி மாவட்டம் தேவாலயங்களிலுள்ள ஒலிபெருக்கிகள்.

18—வினா 4807—திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ எல்லா தேவாலயங்களிலும் ஒலிபெருக்கிகளை அமைத்துக்கொண்டு எல்லா நாட்களிலும் காலையிலும், மாலையிலும் விடுமுறை நாட்களில் பகல் நேரமெல்லாம் பாடல் போடுவதோடு சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறிக் கொண்டிருப்பதன் மூலம் அங்கு நிலைமை பரபரப்பாகி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடை செய்ய அரசு முன்வருமா?

விடை.—

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதி பெறாமல் தேவாலயங்களில் மட்டுமல்லாமல் அனைத்து மத ஆலயங்களிலும் ஒலிபெருக்கிகளைக் கட்டி பாடல்கள் பாடி பிரச்சாரம் செய்தது சம்பந்தமாக கடந்த சுமார் இரு மாதங்களில் (அதாவது டிசம்பர் 1985 மற்றும் ஜனவரி 1986) 31 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், மத ஆலயங்களில் குழாய் வடிவ ஒலி பெருக்கிகளுக்குப் பதிலாக பெட்டி

வடிவ ஒலி பெருக்கிகளை அனுமதி பெற்று வைத்துக்கொள்ள கோரப்பட்டுள்ளது. மத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் குறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்போது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது.

**காவலர் பதவிக்கு கல்வித் தகுதியை உயர்த்துதல்.**

19—வினா 5649—**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவலர் பதவிக்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**குந்தா நீர் மின்திட்ட அணைக்கட்டுப் பகுதியில் மண் சேராமல் பாதுகாக்க மானியம் வழங்கல்.**

20—வினா 5716—**திரு. கே. உச்சி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் குந்தா நீர் மின் திட்டத்தில் அணைக்கட்டுப் பகுதியில் மண்சேரா வண்ணம் பாதுகாக்க மானியம் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் குந்தா நீர் மின் திட்டத்தின் அணைக்கட்டுப் பகுதியில் மண்சேரா வண்ணம் பாதுகாக்க 1978-79 வரை விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமாகவும்,



50 சதவீதம் கடனாகவும் வழங்கப்பட்டது. பின்னர் 1979-80 மற்றும் 1980-81 ஆண்டுகளில் மத்திய அரசு வழங்கி வந்த நிதி உதவி 100 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு வழங்கி வந்த மானியம் 25 சதவீதமாக குறைக்கப்பட்டு கடன் 75 சதவீதமாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டது. 1981-82-ல் இருந்து, மத்திய அரசு மீண்டும் தன் நிதி உதவியை 100 சதவீதத்திற்கு உயர்த்தியது. இதனை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் மானியம் 1981-82-லிருந்து 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

**திருப்பத்தூர் அரசு மருத்துவமனை.**

21—வினா 5747—**திரு. கு. ரமணி:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துராமலிங்கம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, அரசு மருத்துவமனையில் மருத்துவர்களுக்குத் தேவையான கருவிகள் இல்லாமல் நோயாளிகள் கஷ்டத்துக்குள்ளாகி வருவது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) கண் நோய் பிரிவிலும் தேவையான கருவிகள் இல்லாமல் சிகிச்சை அளிக்க முடியாத நெருக்கடி இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனையில் மருத்துவர்களுக்கு தேவையான கருவிகள் போதிய அளவில் உள்ளன.

(ஆ) இந்த மருத்துவமனையில் கண் நோய் பிரிவு இது வரையில் அனுமதிக்கப்படவில்லை. எனவே, அந்தப் பிரிவுக்கு உரிய சிறப்புக் கருவிகள் தனியாக இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### திருநெல்வேலியில் அரசு பொருட்காட்சியில் தீ விபத்தால் ஏற்பட்ட சேதம்.

22—வினா 5985—**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி நகரசபை எதிரே உள்ள மைதானத்திற்குள் இருந்த பொருட்காட்சி 1985 ஜூலை மாதம் 4-வது வாரத்தில் தீப்பிடித்ததால் சேதம் எவ்வளவு?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் என்ன?

விடை—

(அ) திருநெல்வேலி அரசு பொருட்காட்சியில் 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட தீ விபத்தில் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 43,80,653.

(ஆ) (1) பாதிக்கப்பட்ட கடைக்காரர்கள் ஊர் செல்ல கடை ஒன்றுக்கு ரூ. 150 வீதம் 44 பேர்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டது

(2) தீ விபத்தில் எல்லா பொருட்களையும் இழந்த கடைக்காரர்களுக்கு அவர்கள் இன்னும் செலுத்த வேண்டிய தொகையான ரூ. 96,384 ரத்து செய்யப்பட்டது.

(3) பகுதி சேதமடைந்த 3 தனி உரிமைக் கடைக்காரர்கள் செலுத்த வேண்டிய மொத்த வாடகைத் தொகையில் ¼ பகுதியான ரூ. 45,950 ரத்து செய்யப்பட்டது.

(4) பொருட்காட்சி நடத்தவிருந்த நாட்கள் தீ விபத்தினால் குறைந்து, அதனால் வியாபாரம் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கும் தனி உரிமைக்காரர்களுக்கும் அவர்கள் செலுத்த வேண்டிய மொத்த வாடகைத் தொகையில் 6/44 பகுதியான ரூ. 31,003 ரத்து செய்யப்பட்டது. அரசு ரத்து செய்த மொத்தத் தொகை ரூ. 1,73,337 ஆகும்.





### உரிமம் வழங்கப்பட்டுள்ள கல்குவாரிகள்.

23—வினா 6011—**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை கல்குவாரிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) சென்னையைச் சுற்றி எத்தனை கல்குவாரிகள் உள்ளன?

விடை—

(அ) தமிழ்நாட்டில் 1,320 கல்குவாரிகளுக்கு பொது ஏலம் மற்றும் குத்தகை மூலம் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னையைச் சுற்றியுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் 50 கல்குவாரிகள் உள்ளன.

### கோவை தெலுங்குபாளையத்திலிருந்து எல்.ஐ.சி. காலனிவரை அமைக்கப்பட்ட பாதை.

24—வினா 6088—**திரு. அ. நடராசன்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி, தெலுங்குபாளையத்திலிருந்து பேரூர் பாதையில் உள்ள எல்.ஐ.சி. காலனி வரை புதிதாக அமைக்கப்பட்ட பாதை பாதியில் நிறுத்தப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) அதை மீண்டும் போட எடுத்த நடவடிக்கை யாது?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): கோவை மாநகராட்சி தெலுங்குபாளையத்திலிருந்து பேரூர் பாதையில் உள்ள எல்.ஐ.சி. காலனி அருகில் இணையும் இணைப்புச் சாலை வரையில், சாலையில் கிணற்று மண் பரப்பப்படும் வேலை முடிக்கப்பட்டது. கிணற்று

மண் அமுங்கியபின், சரளைக் கற்கள் பரப்புவதற்கும். தார் தளமிடுதலுக்கும் தனித்தனியாக இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது இதன் மதிப்பீடு மொத்தம் ரூ. 1,94,000 ஆகும். மன்ற அனுமதி பெற்றவுடன் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி, இப்பணி முடிக்கப்படும்.

**திருவலஞ்சுழி கிராமத்திற்கு தண்ணீர் விநியோகம்.**

25—வினா 6474—**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் திருவலஞ்சுழி கிராமத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி ஐந்து ஆண்டுகள் ஆகியும் இன்னும் தண்ணீர் விநியோகம் செய்யவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் மூலம் கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருவலஞ்சுழி என்ற கிராமத்திற்கு குடிநீர் வழங்க தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 1.07 லட்சத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, மின்விசை அறை, குடிநீர் விநியோகக் குழாய்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. ஆறு அங்குல விட்டமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் போதுமான நீர் ஆதாரம் இல்லாததால் மாற்று ஆதாரம் கண்டறியப்பட்டது. 2.5 மீட்டர் விட்டமுள்ள நீர் உறிஞ்சும் கிணறு அமைக்கப்பட்டு, 7—5—1986 அன்று மின் இணைப்பு பெறப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுகிறது. [illegible] 1986 அன்று பராமரிப்புக்காக இத்திட்டம் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



**விருவீடு கிராம உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம்.**

26—வினா 6498—**திரு. அ. பாலுச்சாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு ஒன்றியத்தில் "விருவீடு" கிராம உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): இப்பள்ளியில் தற்போது பயின்றுவரும் 251 மாணவ மாணவியருக்கு போதுமான கட்டட வசதி இருப்பதால்; தற்போது இப்பள்ளிக்கு புதிய கட்டிடம் தேவையில்லையென்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**கொடைக்கானல் தாலுகாவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தல்.**

27—வினா 6682—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலுகாவில் கீழ்ப் பழனி மலைகளில் அதாவது பாட்டலூர், கிழக்குச் செட்டியப்பட்டி போன்ற இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

**சிரங்காட்டுப்பட்டி கிராமத்திற்கு குடிநீர் வசதி.**

28—வினா 6913—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சிரங்காட்டுப்பட்டி கிராமத்திற்கு குடிநீர் வசதிக்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1987 ஏப்ரல் 8

விடை—

சிங்கார்ட்டுப்பட்டி கிராமத்தில், தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, மின்விசை மூலம் நீரேற்றி குடிநீர் வழங்கப்படுகிறது.

**1985-86-ல் குடிதண்ணீர் வசதி கோரி நடத்தப்பட்ட போராட்டங்கள்.**

29—வினா 7191—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86-ல் இதுவரை குடிதண்ணீர் வசதி கோரி நடந்த போராட்டங்கள் எத்தனை?

(ஆ) எந்த எந்த ஊர்களில்?

விடை—

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**முதனை கிராமம் விரெட்டிகுப்பம் வரையுள்ள நெடுஞ்சாலையை பழுதுபார்த்தல்.**

30—வினா 7340—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், முதனை கிராமம்—விரெட்டிகுப்பம் வரை சுமார் 2 கிலோமீட்டர் தூரம் நெடுஞ்சாலை மிகவும் சீர்கேடாக உள்ள காரணத்தினால் போக்குவரத்து இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

---

* 1049-1051 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1987 ஏப்ரல் 8]

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்படும் சாலையைப் புதுப்பிக்க பருவகால சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு மதிப்பீடுகள் முறையே ரூ. 40,000-க்கும், ரூ. 96,000-க்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளன.

**1978 முதல் 1985 ஆம் ஆண்டு முடிய உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்கள்.**

31—வினா 7783—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு முடிய உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்களின் அளவு எவ்வளவு?

விடை—

1978 ஆம் ஆண்டு முதல் 1984-85 ஆம் ஆண்டு முடிய உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்களின் அளவு 88.42 இலட்சம் மெட்ரிக் டன்.

**பழனி நகராட்சி எல்லையில் வீடுகள் கட்ட ஒதுக்கப்பட்ட தொகை.**

32—வினா 7830—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் பழனி நகராட்சி எல்லையில் வீடுகள் கட்டுவதற்கு 1985-86 ஆம் ஆண்டுகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 19,80,300.

(ஆ) விடுவிக்கப்பட்ட தொகை ரூ. 18,33,700.

[1987 ஏப்ரல் 8

**விளாத்திகுளம் தொகுதியில் மழையின்மையால் நிலங்களுக்கு தீர்வையை வஜா செய்தல்.**

33—வினா 7848—திரு. ச. குமார குருபர ராமநாதன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, தத்தநேரி, பல்லாகுளம், மேல் மாந்தை, வேலாயுதபுரம், சம்மங்குளம் கிராமங்களில் மழை இல்லாத காரணத்தால், நிலங்களுக்குரிய தீர்வையை வஜா செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

வேலாயுதபுரம் கிராமம் நீங்கலாக இதர கிராமங்களுக்கு வஜா கணக்குகள் தயார் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேலாயுதபுரம் கிராமத்தில் குளமோ, ஆயக்கட்டு நிலங்களோ இல்லாததால் வஜா வழங்கும் நிலை ஏற்படவில்லை.

**மாரனேரி-மணியம்பட்டி சாலையிலுள்ள பாலம்.**

34—வினா 7859—திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஒன்றியம், மாரனேரி-மணியம்பட்டி சாலையில் கட்டப்பட்டுள்ள பாலம் துண்டிக்கப்பட்டு அந்த சாலை செப்பனிடப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடன் வேலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிவகாசி ஒன்றியம், மாரனேரி-மணியம்பட்டி சாலையில் கட்டப்பட்டுள்ள சிறு பாலத்தின் இரண்டு பக்கங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால், அந்தச் சாலையினை செப்பனிடும் பணியை 1986-87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (அல்லது) ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்து செய்ய காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



1987 ஏப்ரல் 8].

**அண்ணா அம்மையப்பன் வாய்க்கால் லைனிங் திட்டம்.**

35—வினா 8075—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில் மண்ணியாற்றிலிருந்து இணைபிரியாள் வட்டம் என்னுமிடத்தில் இருக்கும் ரெகுலேட்டரில் இருந்து அண்ணா அம்மையப்பன் வாய்க்கால் லைனிங் செய்வதற்காக எடுக்கப்பட்ட வேலை நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அதை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

விடை—

(அ) அண்ணா அம்மையப்பன் வாய்க்காலுக்கு லைனிங் செய்யும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**ஆலங்குடி தொகுதி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல்.**

36—வினா 8145—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, காரம்பக்குடி ஒன்றியம், மேலப்பொன்னன் விடுதி, வெட்டன் விடுதி, முள்ளங்குறிச்சி, கணக்கன்காடு ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு தொடங்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், காரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேலப்பொன்னன் விடுதி, வெட்டன் விடுதி, முள்ளங்குறிச்சி ஆகிய மூன்று குடியிருப்புக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் விசையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்க

உத்தேசிக்கப்பட்டுள்ளது. கணக்கன்காடு குடியிருப்புக்கு 1986-87 ஆம் ஆண்டில் ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் சமுதாய ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல்.**

37—வினா 8336—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் பாசன வசதி இல்லாத கிராமங்களுக்கு சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் இறக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

இல்லை.

**1985 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த தீ விபத்துக்கள்.**

38—வினா 8549—திருமதி டி. வளர்மதி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் 1985-ம் ஆண்டு தீ விபத்துக்கள் எவ்வளவு?

விடை—

1985 ஆம் ஆண்டில் சென்னையில் 9 பெருந் தீ விபத்துக்கள், 11 நடுத்தர தீ விபத்துக்கள், 838 சிறிய தீ விபத்துக்கள் ஆக மொத்தம் 858 தீ விபத்துக்கள் நேர்ந்தன.

**கொடைக்கானல் தாலுக்காவில் குடிநீர்த் திட்டம்.**

39—வினா 8642—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுகா, பழம்புத்தூர், புதுப்புத்தூர் ஆகிய கிராமங்கள் உள்ளிட்ட குடிநீர்த் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008 136516

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருப்புவனம் நகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.**

40—வினா 8843—திரு. க. பரமலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி—திருப்புவனம் நகரில் (நகரப் பஞ்சாயத்து) பாதாள சாக்கடை அமைக்கும் சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

V211, 81 N87 N87-37.4

**சிக்கல் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் பணி.**

41—வினா 9039—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் வட்டம், சிக்கல் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டும் வேலை தொடங்கப்படும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்கு 1985-86 ஆம் ஆண்டில் அரசு வழங்கிய மொத்த நிதி ஒதுக்கத்தில் ரூ. 1.50 லட்சம் செலவில் இரு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டு (1986) முடிவிற்குள் இப்பணி முடித்துக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 8

**பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் தாட்கோ மூலம் வீடு கட்டுதல்.**

42—வினா 9232—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்ட அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை குடியிருப்புகள் அரசு கட்டிக் தர உள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடு கட்ட தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

**தமிழகத்திலுள்ள தொழு நோயாளிகள் மற்றும் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள்.**

43—வினா 9398—திரு. சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே ஆர். கணபதி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம், கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழு நோயாளிகள் மறுவாழ்வு இல்லங்கள் எத்தனை செயல்படுகின்றன ?

(ஆ) தமிழகத்தில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் எத்தனை உள்ளன ?

விடை—

(அ) தமிழகத்தில் கீழ்க்காணும் பத்து இடங்களில் தொழு நோயாளிகள் அரசு மறுவாழ்வு இல்லங்கள் செயல்படுகின்றன:—

1. பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னார்க்காடு மாவட்டம்.
3. பாகூர், தர்மபுரி மாவட்டம்.



1987 ஏப்ரல் 8]

4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
6. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
7. மல்லவாடி, வடஆற்காடு மாவட்டம்.
8. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
9. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.
10. செல்லியம்பட்டி, தர்மபுரி மாவட்டம்.

(ஆ) அரசு ஏழைகள் பராமரிப்பு விடுதி ஒன்று சென்னையில் மேல்பாக்கம் என்னும் பகுதியில் இயங்கி வருகிறது.

**நீலகிரி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட பணிகள்.**

44—வினா 9875—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகளும், அவற்றின் மதிப்பீடும் என்ன ?

(ஆ) வட்ட வாரியாக ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகளும், அவற்றின் மதிப்பீடுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| பணிகளின் பெயர். | எண்ணிக்கை. | மதிப்பீடு. ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. குடிநீர் திட்டம் | 71 | 17,95,632 |
| 2. சிறுபாலங்கள் கட்டுதல் | 9 | 2,18,153 |
| 3. இணைப்புச் சாலைகள் | 2 | 1,36,392 |
| 4. வடிகால்கள் கட்டுதல் | 15 | 1,53,436 |
| மொத்தம் .. | 97 | 23,03,613 |

[1987 ஏப்ரல் 8

(ஆ) வட்ட வாரியாக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வட்டம். | பணிகளின் எண்ணிக்கை. | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. உதகை | 52 | 11,23,293 |
| 2. குன்னூர் | 22 | 5,61,228 |
| 3. கூடலூர் | 23 | 6,19,092 |
| மொத்தம் .. | 97 | 23,03,613 |

## உதகை வட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பயனடைந்த பேரூராட்சிகள்.

45—வினா 9922—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பயனடைந்த பேரூராட்சிகள் யாவை?

(ஆ) செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவை?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள ஏழு பேரூராட்சிகள் பயனடைந்தன:—

1. முள்ளிகூர்.
2. சோலூர்.
3. நடுவட்டம்.
4. பாலக்கோலா.
5. இத்தலார்.
6. பிக்கட்டி.
7. கீழ்குந்தா.

(ஆ) செலவிடப்பட்ட தொகை ரூ. 20.08 இலட்சம்.



1987 ஏப்ரல் 8]

(இ) கீழே குறிப்பிட்டுள்ள 114 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. குடிநீர்த் திட்டங்கள் | 78 |
| 2. சிறு பாலங்கள் கட்டுதல் | 5 |
| 3. வடிகால் கட்டுதல். | 30 |
| 4. இணைப்புச் சாலை | 1 |
| | 114 |

## சிவலப்பேரி தண்ணீர்த் திட்டத்திற்கு ஜெனரேட்டர் வைக்கும் திட்டம்.

46—வினா 9294—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவலப்பேரி தண்ணீர்த் திட்டத்திற்கு ஜெனரேட்டர் வைக்க அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சின்னக்கண்ணனூர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தல்.

47—வினா 9383—திரு. க. பரமலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் மாவட்டம், மானாமதுரை ஒன்றியம் சின்னக் கண்ணனூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை 1986-87 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆணை வழங்குமா?

...

1986-87 ஆம் கல்வி ஆண்டில் சின்னக்கண்ணனூரில் உள்ள நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

**1985-86-ல் தமிழக அரசு பெற்ற கடன் தொகை.**

48—வினா 10146—திரு. ஆர். செங்கசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு 1985-86-ல் பொதுமக்களிடமிருந்தும் இதர பேங்குகளிடமிருந்தும் வாங்கிய கடன் எவ்வளவு?

(ஆ) எவ்வளவு வட்டி கொடுக்கப்படுகிறது?

விடை—

(அ) தமிழக அரசு 1985-86-ல் பொதுமக்களிடமிருந்து ரிசர்வ் வங்கியின் அனுமதியுடன் 1998-ல் முதிர்வு பெறும் 9.75 சதவிகித கடனீடுகளின் மூலமாக கடனாகப் பெற்றுள்ள தொகை ரூ. 77,55,00,000 (ரூபாய் எழுபத்தேழு கோடியே ஐம்பத்தைந்து இலட்சங்கள்) இது தவிர கடன் ஏதும் தமிழ் நாடு அரசால் பெறப்படவில்லை.

(ஆ) 1985-86-ல் ஈட்டப்பட்டுள்ள 1998-ல் முதிர்வு பெறும் கடனீடுகளுக்கு ஆண்டிற்கு 9.75 சதவிகித வட்டி விகிதத்தில் இரண்டு தவணைகளில் வட்டி கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

**மெட்ரோ வாட்டர் போர்டு தொழிலாளர்கள்.**

49—வினா 10498—திரு. ஆர். செங்கசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெட்ரோ வாட்டர் போர்டு தொழிலாளர்களுக்கு* போனஸ் வழங்காதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போனஸ் வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.



(ஆ) தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தில் பணியாற்றுவோர், போனஸ் கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். தீரப் பரிசீலித்தபின், அந்த வாரியம் இலாபம் ஈட்டும் நிறுவனம் அல்ல என்றும், போனஸ் சட்டத்தின்படி, போனஸ் வழங்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றும், உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், மேற்சொன்ன வாரியத்தைப் போன்று அதே நிலையில் உள்ளது. அது ஒரு பொதுமக்கள் பணிக்கான நிறுவனமாகும்.

50—வினா 10499—திரு. ஆர். செங்கசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெட்ரோ வாட்டர் போர்டு தொழிலாளர்களுக்கு எல்.டி.சி. வழங்காதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எல்.டி.சி. வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய செயற்குறிப்பு ஆய்வில் இருந்து வருகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

**(அ) அம்பாசமுத்திரம் சேரன்மாதேவி பகுதிகளில் பாசனக் கால்வாய்களைத் திறந்துவிட வேண்டியதன் அவசியம் குறித்து.**

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)**: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுக்காவில் இருக்கின்ற கடனா நதியில் 5-வது, 6-வது கால்வாய் திறக்கப்படாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் விவசாயிகள் பெரிதும்

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அணையிலே போதிய அளவு தண்ணீர் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய கோரிக்கையை கவனித்து திறக்காவிட்டால் காங்கேயன் கால்வாய் பகுதி, அம்பாசமுத்திரம், சோழமாதேவி பகுதியைச் சேர்ந்த 1,500 ஏக்கர் பயிர்கள் கருகிவிடுகின்ற அபாயம் இருக்கிறது. எனவே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், கருகிவிடுகின்ற அபாயகரமான நிலையில் இருக்கின்ற அந்தப் பயிரைக் காப்பதற்கு இன்றைக்கே நடவடிக்கை மேற்கொண்டு அந்தக் கால்வாய்த் தண்ணீரைத் திறப்பதற்கு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ) சின்னமனூர் வட்டம் கருங்காட்டன்குளம் பகுதியில் வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு நீரின்மை.**

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் வட்டம், கருங்காட்டன்குளம் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவையெல்லாம் point of information, point of order அல்ல.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, சுமார் 150 ஏக்கர் வெற்றிலை கொடிக்கால் நீரின்றி காய்ந்து போகும் நிலையில் உள்ளது. ஆகவே இந்தப் பயிரை பெரியாறு, கருணி யாறு ஆகியவற்றினுடைய ஊற்று நீரைப் பயன்படுத்தி காப்பாற்ற அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) சீர்காழி சிதம்பரம் தாலுக்காக்களிலுள்ள நெற்பயிர்களுக்குத் தண்ணீர்விட வேண்டியதன் அவசியம் குறித்து.**

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் சென்ற 28—3—1987 அன்று நான் கேட்டிருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது என்னுடைய சீர்காழி தாலுக்கா, தென்னார்காடு



மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் தாலுக்கா காட்டுமன்னார்குடி தாலுக்காவினுடைய கடைசிப் பகுதியிலே ஏறக்குறைய 20,000 ஹெக்டேர் நிலங்களில் குள்ளந்தார் என்ற நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர் இல்லை என்று கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கர்நாடகத்திலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீர் பெற்று இருக்கிறோம், விரைவிலே தருகிறோம் என்று சொல்லி விவசாயத்திற்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதற்காக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பயிரானது மே மாதம் தான் அறுவடை ஆகும். 2, 3 தடவை தண்ணீர் தேவைப்படும். எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) அதை திரு. இராமமூர்த்தி, பிரசிடெண்ட், காங்கிரஸ் ஐ கொள்ளிடம் யூனியன் என்ற மரியாதைக்குரிய உறுப்பினர் எனக்கு அனுப்பியிருக்கிறார்.

"Lower Anicut in Coleroon river was shut down fcr irrigation due to level and inflow of water reaching the least minimum. In both Sirkazhi and Chidambaram taluks about 20,000 acres of paddy crops in flowering stage that shall give a yield of 40,000 tones of paddy worth about eight crores of rupees are very badly in need of minimum three more water wettings. . . ." ஆகவே நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது குறைந்தது இரண்டு தடவையாவது தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல் ஏற்கனவே குள்ளந்தார் பயிருக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். இன்னும் சேரவில்லை என்று சொன்னால் மறுபடியும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஈ) மொழிபற்றிய அரசின் தீர்மானத்தின்மீது மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கை.**

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, நீங்கள் தெரிவித்ததைப் போல பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. எலிசிட்டிங் இன்பர்மேஷன் என்ற அடிப்படையில் கல்வி மானிய

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 8

கோரிக்கையின் மீது விவாதம் நடைபெறு இருக்கின்ற இந்த நேரத்தில் நான் ஒரு தகவலை அவை முன்னவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 3—11—1986 ஆம் நாளன்று மொழி பற்றிய அரசினர் தீர்மானம் அவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதையும், அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டதையும் அல்லது வைப்பதாகச் சொல்லப்படுவதையும் இந்த அவை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது.

9—12—1986 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கடிதம் எழுதினேன். அதற்கு பிரதமர் பதில் அளித்தார். அது வேறு விஷயம். 7—1—1987-ல் நான் பெற்ற பதில். முக்கியமான உரிமைப்பிரச்சினை என்ற காரணத்தினால் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 6 மாதம் தாண்டி விட்டது. அங்கிருந்து ஏதாவது பதில் வந்ததா? உயிர்த் துடிப்பு மிக்க உரிமைப் பிரச்சினையாக இருக்கின்ற அந்தத் தீர்மானத்திற்கு வடிவம் தருவதற்கு மைய அரசு தயாராக இருக்கிறது என்ற தகவல் நமது அமைச்சரவைக்கு கிடைத்திருக்கிறதா? கிடைத்தால் இந்த அவையில் அவர் வைப்பாரா? கிடைக்காவிட்டால் அதைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினை பற்றி இருக்கிற நிலைமைகளை அறிந்து இரண்டொரு நாட்களில் விளக்குகிறேன்.

**(உ) நெல்லை மாவட்டத்திலே அமையவிருக்கும் இந்தியக் கடற்படை நுண் தொடர்பு நிலையத்திற்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுத்தல்.**

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் என்ற முறையிலே —இன்றையதினம் மத்திய அரசு தமிழகத்திலே இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நுண் தொடர்பு தகவல் நிலையம், கைலாப் போன்று, நெல்லை மாவட்டத்திலே அமைத்திருக்கின்றது. அப்படி அமைக்கப்பட்ட அந்த நிலையத்திற்கு, இன்றைக்கு பல கோடி ரூபாய்க்கான அந்தத் திட்டத்திற்காக அதிகாரிகளையும், ஊழியர்களையும் தேர்ந்தெடுக்கின்ற அந்தப்



1987 ஏப்ரல் 8] [திரு. அ. மலர்மன்னன்]

பொறுப்பினை இன்றையதினம் நெல்லை மாவட்டத்திலே இல்லாமல், திருவனந்தபுரத்திலே இருந்து ஆட்களை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக இன்றையதினம் அதற்கு அருகிலே இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தை விட்டுவிட்டு—ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னால், அப்படித் தொடங்கப்பட்ட திட்டத்திற்கு இந்த மாநிலத்திலே இருக்கின்ற ஆட்களைப் பெருவாரியாக எடுக்கவேண்டும் என்ற நியதியும், வழிமுறையும் இதுவரையிலேயும் கடைப்பிடிக்கப்பட்டு வந்து இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அந்தத் திட்டத்திலே (குறுக்கீடுகள்) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்ஃபர்மேஷனிலே ரொம்ப வேண்டாம். பதில் கொடுப்பதற்கு இங்கே யாரும் இல்லை. (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் என்னிடம் முன் அனுமதி கேட்கவில்லை. என்னிடம் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று சொல்லவில்லை. எதைச் சொல்லி கேட்கப் போகிறீர்கள், என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நாளைக் காலை உங்களை அனுமதிக்கிறேன்.

**3. விதி 110 (1)-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.**

**(அ) தமிழக வறட்சிநிலை குறித்து.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110 (1)-ன் கீழ் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்து, ரூபாய் 347 கோடியே 25 இலட்சத்திற்கு நிதியுதவி கோரி ஒரு விவர அறிக்கை 13—3—1987 அன்று மைய அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதையொட்டி, மத்திய நிபுணர் குழு இம்மாநிலத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக உடனடியாக ரூபாய் 30 கோடி முன்பணமாக அளிக்கும்படி மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. 31—3—1987 வரை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், 1,631 ஆழ்துளைக் கிணறுகளும், 25 திறந்த வெளிக் கிணறுகளும் முடிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக 4 கோடியே 34 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் தனது வளமையான திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 81 இலட்சம் செலவில் 1524 ஆழ்துளைக் கிணறுகள்

அமைந்துள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் செயல்படுத்தும் திட்டங்களைத் தீவிரப்படுத்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூபாய் 26 கோடியே 31 இலட்சத்து 99 ஆயிரம் செலவில், 1 கோடியே 24 இலட்சத்து 99 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 11-10)

வறட்சியின் காரணமாக மாநிலம் முழுவதும் ஏற்பட்டிருக்கும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் நோக்கத்தான் குடிநீராகப் பயன்படுத்தத் தக்க நீரைப் பெற்று இருக்கும் பாசனக் கிணறுகளை—1956-ஆம் ஆண்டைய தமிழ்நாட்டு கோரிக்கை கட்டளை மற்றும் அசையாச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் கோரிப் பெறுமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்காக அவர்கள் அச்சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியாகச் செயல்பட அரசால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். மத்திய நிபுணர் குழு தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடவும், அரசு அனுப்பியுள்ள விவர அறிக்கையைப்பற்றி அரசு அலுவலர்களிடம் விவாதிக்கவும் 12—4—1987 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னைக்கு வர இருக்கிறது. இந்த மத்திய நிபுணர் குழுவின் தலைவராக மத்திய வேளாண்மைத்துறை இணைச் செயலாளர் திரு. ஜே. ஆர். சாஹா இருப்பார். அதனுடைய உறுப்பினராக மத்திய அரசின் நிதித் துறை இணை இயக்குநர் திரு. வி. சுவாமிநாதன் அவர்களும், சென்னையில் உள்ள மத்திய அரசினுடைய புகையிலைத் துறையினுடைய இயக்குநரான திரு. ஏ. எஸ். கோரி அவர்களும், ஊரக வளர்ச்சித்துறை துணை ஆலோசகர் திரு. வி. ரகு அவர்களும், மத்திய திட்டக் குழுவின் துணை ஆலோசகர் திரு. எம். எல். அகர்வால் அவர்களும்—ஆக மொத்தம் 4 உறுப்பினர்களைக் கொண்ட—ஒரு ஐவர் குழு வர இருக்கிறது. இந்தக் குழுவிற்கு திரு. ஜே. ஆர். சாஹா அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். இந்தக் குழு 12—4—1987 ஞாயிற்றுக்கிழமை மாலை டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்து சேருகிறது. 13—4—1987 மற்றும் 14—4—1987 ஆகிய 2 நாட்களிலும் வறட்சிப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கிறார்கள். 15—4—1987 அன்று அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடத்தி அன்று மாலையே டெல்லிக்குச் செல்ல இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒன்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது 14—4—1987 அன்று தமிழகத்தைப் பொறுத்த



வரையில் சித்திரை முதல் நாளாக இருப்பதன் காரணமாக ஆண்டுப் பிறப்பு என்று கருதப்படுகிற காரணத்தால் அந்த ஒரு நாளை விடுமுறையாக வைத்துக் கொண்டு, 15 ஆம் தேதியோடு 16-ஆம் தேதியையும் சேர்த்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுமானால் 13—4—1987 மற்றும் 15-4-1987 ஆகிய இரு நாட்களையும் வறட்சிப் பகுதிகளைப் பார்க்கிற நாட்களாக வைத்துக் கொண்டு 16-ஆம் நாளன்று அரசு அலுவலர்களுடன் கலந்து பேசுகிற நாளாக வைத்துக் கொள்கிற சூழ்நிலை ஏற்படும். அவர்கள் 12—4—1987 அன்று மாலை வருவதாக இருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்குவதில் தாமதம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டை கிடைக்காத பலர், மனுச் செய்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை உணவுப் பங்கீட்டு அட்டை வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

சென்னை நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் 1986-ம் ஆண்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர்களிடம் புதியதாக குடும்ப அட்டைகள் கேட்டு 5,682 பேர் விண்ணப்பம் செய்தனர். மேலும் 6,329 பேர் முன்பு இருந்த இடங்களில் குடும்ப அட்டையை திருப்பிக் கொடுத்து விட்ட சான்றிதழுடன், புதிய குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பித்தனர். ஆக மொத்தம் 12,011 பேர் விண்ணப்பித்தனர். அதில் 9,381 பேருக்கு புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டு விட்டது. விண்ணப்பங்களில் கொடுத்திருந்த முகவரியில், விண்ணப்பதாரர்கள் இல்லாததாலும், முன்பு

இருந்த இடத்தில் வைத்திருந்த குடும்ப அட்டையில் விண்ணப்ப தாரர்களின் பெயர் நீக்கப்பட்டதற்கான சான்றிதழோ அல்லது குடும்ப அட்டையை அதிகாரிகளிடம் திருப்பிக் கொடுப்பதற் கான சான்றிதழோ கொடுக்காததாலும், விண்ணப்பதில் கொடுக் கப்பட்ட முகவரியிலிருந்து குடிபெயர்ந்து சென்று விட்டதாலும், 2,498 விண்ணப்பதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்கப் படவில்லை, விண்ணப்பதாரர்களிடம் சில விவரங்கள் கேட்டு அவர்கள் இதுவரை தராததாலும், விசாரணைக்கு சென்ற போது வீடுகள் பூட்டி இருந்ததாலும், புரசைவாக்கம், தியாகராயநகர், அம்பத்தூர் மண்டலங்களில் 132 விண்ணப்பதாரர்களுக்கு புதிய அட்டைகள் இன்னும் வழங்கப்படாமல் உள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து, சரியான விவரங்களுடனும், சான்றிதழ்களுடனும் வரும் விண்ணப்பங்களுக்கு காலதாமதம் இன்றி புதிய அட்டைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறியலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன்கார்டுகளை ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள்தான் பயன்படுத்தி வருகிறார்கள். சென்னை நகரில், குறிப்பாக என்னுடைய தொகுதியான சேப்பாக்கத்தில் 1982-ஆம் ஆண்டு ரேஷன் கார்டுகள் தரப்பட்டன. என் தொகுதியில் மட்டும் எவ்வளவு கார்டுகள் தரப்பட்டன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் 1986 ஆம் ஆண்டோடு அந்த ரேஷன் கார்டுகள் காலாவதியாவதால் புதிய அட்டைகள் வழங்கப் படாமல் வெறும் சிலிப்—ஒரு காகிதம்—மட்டும் தான் தரப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? எனவே புதுப்பிக்கப்பட்ட ரேஷன் கார்டு அட்டைகள் அவர் களுக்குத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பிக்கப்பட்ட அட்டைகள் இந்த ஆண்டு வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் ஏற்கெனவே எவ்வளவு கார்டுகள் வழங்கப்பட்டன என்பதற்கான விவரம் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் பல மக்களுக்கு ரேஷன் கார்டு கிடைக்காமல் இருக்கின்றது. சான் றிதழ் வழங்கியும் கூட, அவர்களுடைய மனுக்கள் இன்னும்



பரிசீலனை செய்யப்படாமல் இருக்கின்றன. பாதிக்கப்பட்ட பலருடைய வீடுகளுக்கு இன்னும் அதிகாரிகள் வராமல் இருக்கிற காரணத்தால் பல மனுக்கள் பைசல் செய்யப்படாமலேயே இருக் கின்றன. அதன் காரணமாகப் புதிய கார்டுகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இந்தக் குறைகள் நீக்கப்பட்டு மனுக்கள் மீது புதிய கார்டுகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படிக் குறை இருக்குமானால் நிவர்த்திக்கப்படும்.

## (ஆ) மதுரை கோட்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஹார்விப்பட்டி நகரியத்தின் பராமரிப்புப் பணிகள்.

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கோட்ஸ் தொழிலாளர்கள் குடியிருப்பான ஹார்விப்பட்டி நகரியத்தின் குடிநீர், தெருவிளக்கு, சாலை, சாக்கடை ஆகிய அடிப்படை வசதிகளைப் பராமரித்திட, ஒப்பந்தத்தின்படி கடமைப்பட்ட மதுரை கோட்ஸ் மில் நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்திடாத காரணத்தால், நகரியத்தில் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு குறித்தும் அதனால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை

ஹார்விப்பட்டி என்பது மதுரை கோட்ஸ் லிமிடெட் என்ற நூற்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஒரு நகரியம் ஆகும். இந்த நகரியத்தை செயல் அலுவலர் (Executive Officer) நிர்வகித்து வருகிறார். இந்நகரியத்தைப் பராமரிக்க மதுரை கோட்ஸ் நிர்வாகம் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் ஏதும் செய்துகொள்ளவில்லை எனவும், ஹார்விப்பட்டி நகரியத்தைப் பஞ்சாயத்தாக மாற்றும்படி மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், அவ்வாறு ஹார்விப்பட்டி நகரியம் பஞ்சாயத்தாக மாற்றப்படும்வரை மதுரை கோட்ஸ்

நிர்வாகம் சில சிறிய பராமரிப்புப் பணிகளைச் செய்யுமாறு
கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், நிர்வாகமும் அவ்வாறே செய்து
வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

2. ஹார்விப்பட்டியில் கட்டப்பட்டுள்ள வீடுகளும், அந்த
வீடுகள் எழுப்பப்பட்டிருக்கும் நிலங்களும் மதுரை கோட்ஸ்
நிர்வாகத்திற்குச் சொந்தமானவை அல்ல என்றும் நிர்வாகம்
தெரிவித்துள்ளது.

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுரை ஹார்வி மில்ஸ் நிர்வாகத்தில் வேலை
பார்த்தவர்கள் என்ற வகையில் 1000 பேருக்கு மேற்பட்ட
தொழிலாளர்களுக்காக ஹார்விப்பட்டி நகரம் உருவாக்கப்
பட்டது. ஹார்வி மில்ஸ் தற்போது மதுரை கோட்ஸ் என்ற
பெயரில் இயங்கி வருகிறது. இந்த மதுரை கோட்ஸ் நிர்வாகம்
ஹார்விபட்டியின் அடிப்படை வசதிகளைக் கவனித்து வந்தது.
இன்று கூட தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து ஹார்விப்பட்டி
நகரியத்திற்குச் செலவுக் கணக்கு என்ற வகையிலே ஒரு கணிச
மான தொகை நிர்வாகத்தால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்த
நிலையில் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக ஹார்விப்பட்டி நகரியத்
திற்கு மதுரா கோட்ஸ் நிர்வாகம் குடிநீர், தெருவிளக்கு, சாலை,
சாக்கடை ஆகிய எந்தவிதமான அடிப்படை வசதிகளையும்
செய்யவில்லை. எனவே இதைக் கவனத்திலே கொண்டு, இந்த
ஐந்தாறு வருஷங்களாக பராமரிப்புப் பணிகளைச் செய்யாததன்
காரணமாக மதுரா கோட்ஸிடமிருந்து நஷ்டஈடு பெறுவதற்கு
அரசு முன்வருமா? மேலும் இனிமேல் எதிர்காலத்திலாவது
அரசின் உதவியை இந்த நகரியம் பெறுவதற்கும், அதைப்
போலவே பராமரிப்புப் பணிகளை அரசே மேற்கொள்ளுவதற்
காக இந்த நகரியத்தை ஊராட்சி மன்றமாக மாற்றவும் அரசு முன்
வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே,
நகரியப் பராமரிப்பைப் பொறுத்த வரையில் முதலாளிகளிடம்
விட்டால் நலநிதி செலவாகும், நகரியம் செவ்வனே இயங்காது
என்பதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.
ஏற்கெனவே வேலைகளைச் செய்யாமல் பணத்தை அந்த முத
லாளிகள் எடுத்துக் கொண்டிருந்தால் அந்தப் பணத்தைத்
திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். ஹார்விப்
பட்டியைத் தனி பஞ்சாயத்தாக அல்லது பேரூராட்சியாக ஆக்கு
வதைப்பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.



(இ) சேரன்மாதேவியிலுள்ள அரிகேசவநல்லூரில் ஆதி
திராவிட மக்களுக்கு மருத்துவ வசதியின்மை.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி அரிகேசவநல்லூரில் காமராஜ புரத்தில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு மருத்துவ வசதி இல்லாததால் அங்குள்ள பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம் அரிகேசவநல்லூர் மக்கள் தொகை சுமார் 4,200-ம், காமராஜபுரம் அரிசன காலனியின் மக்கள் தொகை 500-ம் ஆகும்.

மேற்சொன்ன கிராமத்துக்கு அருகில் தற்போது இயங்கி வரும் மருத்துவ நிலையங்கள்:—

1. 6 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை—வீரவ நல்லூர் 3 கி.மீ.

2. 6 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம்—முக்கூடல் 2 கி.மீ.

3. 24 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை—சேரன் மகாதேவி 11 கி.மீ.

பொதுவாக, பொதுமக்களுக்கு மருத்துவ வசதி செய்யும் பொருட்டு, அரசு சில கொள்கை முடிவு செய்து அரசாணை எண் 51, சுகாதாரம், நாள் 7—1—1977-ல் புதிய அரசு மருந்தகங்கள்/மருத்துவமனைகள் ஏற்படுத்தும்போது, அவை ஏற்கெனவே இயங்கி வரும் மருத்துவ நிலையங்களுக்கு 8 கி.மீ. சுற்றளவுக்குள் அமைத்தல் கூடாது என்று ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண் 83, சுகாதாரம், நாள் 18—1—1984-ன்படி கிராமப் புறங்களில் புதிதாக மருந்தகங்கள் மருத்துவமனைகள் ஏற்படுத்தும்போது. அவை ஏற்கெனவே இயங்கி வரும் மருத்துவ நிலையங்களுக்கு 8 கி.மீ. சுற்றளவுக்குள் அமைதல் கூடாது என்று ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண் 83,

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 8

சுகாதாரம், நாள் 18—1—1984-ன்படி கிராமப்புறங்களில் புதிதாக
மருந்தகங்கள்/மருத்துவமனைகள் திறப்பதற்கில்லை என்றும்,
அதற்குப்பதிலாக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களே மருந்தகங்
களைத் துவக்கி நடத்த நிதி நிலைக்கேற்ப 100 விழுக்காடு வரை
மானியம் அளிப்பது என அரசு முடிவெடுத்துள்ளது. ஊராட்சி
ஒன்றிய மருந்தகங்கள் திறப்பதற்கான செயற்குறிப்பை
பரிசீலித்து பகுதி 2 திட்டத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர்
செயற்குறிப்புகள் அனுப்புவார் என ஆணையிடப்பட்டுள்ளது.

அரிகேசவநல்லூர் காமராஜபுரம் கிராம மக்கள் எளிதில்
சென்று மருத்துவ வசதி பெறும்வண்ணம் தெற்கே 3 கி. மீ. தூரத்
தில் வீரவநல்லூரில் 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும்,
வடக்கில் 2 கி.மீ. தூரத்தில் முக்கூடலில் 6 படுக்கைகள் கொண்ட
ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கிழக்கில் 11 கி.மீ. தூரத்தில்
சேரன்மகாதேவியில் 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும்
இயங்கி வருகின்றன.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வீரவநல்லூரில் 6 படுக்கைகள் கொண்ட
மருந்தகம் இருக்கிறது, மருத்துவமனை இல்லை. அது
மட்டுமல்லாமல் அங்கே ஒரு டாக்டர் மட்டும்தான் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறார். எனவே அந்தப் பகுதியில் உள்ள மக்கள்
எல்லாம் ஒரு மருத்துவமனை வேண்டும் என்று கருதுகிறார்கள்.
வீரவநல்லூரில் 18 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். ஆதிகேசவ
நல்லூரில், அரிகேசவநல்லூரில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட
வர்கள் வாழ்கிறார்கள். எனவே அவர்களுக்கு போதுமான
படுக்கை வசதி, மருத்துவ வசதி இல்லை. வீரவநல்லூரில்
20 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவ மனையை உருவாக்கி
அங்கே பெண் மருத்துவர் ஒருவரைப் போட அரசு முன்வருமா?
அதற்குரிய முயற்சியை அரசு எடுத்துக் கொள்ளுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அறிக்கையை சரி
யாகப் படித்திருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க
மாட்டார்கள். கடைசி பாராவில் முழு விவரம் தரப்பட்டிருக்
கிறது. அதிலே எவ்வளவு தூரத்தில் மற்ற மருத்துவமனை



1987 ஏப்ரல் 8] [திரு. ப. உ. சண்முகம்]

வசதிகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு
மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமானால் அதன் சுற்றுப்
புற பகுதியில் 8 கிலோமீட்டர் தூரத்தில் அந்த வசதி இல்லாமல்
இருந்தால் தான் ஆரம்பிக்க வேண்டும் என்று இப்போது அரசு
தீர்மானித்து இருக்கிறது. அதை தளர்த்துவதாக இப்போது
உத்தேசமில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்
போல அவசியம் ஏற்பட்டால் அதைப் பற்றி அரசாங்கம் நிச்சய
மாகப் பரிசீலிக்கும்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அறிக்கை முழுவதையும் படித்தேன். அதாவது சேரன்
மகாதேவியில் ஒரு பொது மருத்துவமனை இருக்கிறது. அந்தப்
பகுதியிலே உள்ளவர்கள் அதைப் பயன்படுத்தலாம் என்று சொல்
லப்பட்டிருக்கிறது. சேரன்மகாதேவியைப் பொறுத்தவரை
யில் சேரன் தன்னுடைய பெண்ணான மகாதேவிக்கு அந்த
இடத்தைத் தானமாகக் கொடுத்தார் என்ற வரலாறு உண்டு. அந்த
அளவிற்கு சரித்திரப் புகழ் வாய்ந்த இடம் சேரன்மகாதேவி.
தந்தை பெரியார் அவர்கள் கூட குருகுலவாசம் பிரச்சினை சம்
பந்தமாக அங்கேயிருந்து வெளியேறிய வரலாறு உண்டு. அப்படி
பெரியார் வெளியேறிய முக்கியத்துவம் வாய்ந்த, சரித்திரப் புகழ்
வாய்ந்த, சேரன்மகாதேவி என்ற இடத்திற்கு இப்போதுள்ள 24
படுக்கைகள் கொண்ட மருத்துவமனை போதாது. காரணம்
கோட்டாட்சித் தலைவர் இருக்கின்ற இடம் அது. ஆர்.டி.ஓ.
இருக்கின்ற தலைமையிடத்திற்கு, ஒரு பெரிய மருத்துவமனையை
பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய பெரு
மைக்குரிய புரட்சித் தலைவர் ஆட்சியில், ஏற்படுத்தி பெரியார்
மருத்துவமனை என்று பெயரிட்டு ஒரு பெரிய மருத்துவமனையை
உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அப்படியில்லையென்
றால் இனியாவது பரிசீலனை செய்து அதை அரசு உருவாக்குமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பினர்
குறிப்பிடுகின்ற அனைத்தையும் அரசாங்கம் பரிசீலிக்கும். பெரி
யார் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த இடத்திலே வா. வே. சு.
ஐயர் குருகுலம் நடத்தினாலும் சாதியைப் பற்றி பிரச்சினை
குடிக்கிற தண்ணீரில் ஏற்பட்டு, சட்டி, பானை தகராறால்
பெரியார் அவர்கள் அங்கேயிருந்து வெளியேறினார்கள். இந்தப்
பிரச்சினையின் காரணமாகத்தான் வெளியேறினார் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வியோடு
நிற்பது நல்லது. வரலாறுகளையெல்லாம் சொல்லுவது சரி
யல்ல. வரலாறு தெரிந்தால் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால்
விட்டுவிட வேண்டும். பாண்டிய மன்னன் சேரனுடைய மகளைத்
திருமணம் செய்துகொண்டான். சேரன்மாதேவி பாண்டியனின்
மனைவி. பாண்டியனின் மனைவி பெயரால் 'சேரன்மாதேவி'
என்று அந்த ஊருக்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அது
ஒன்றும் தானம் கொடுத்ததல்ல. எனவே அப்படி வாலாற்றுக்
குறிப்பைச் சொல்லாமல் இருப்பது நல்லது. (சிரிப்பு).

(ஈ) வட ஆற்காடு மாவட்டம் புதூர்நாடு மருத்துவமனை
முறையாகச் செயல்படாமை.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம்,
ஜவ்வாது மலை, புதூர்நாடு அரசு மருத்துவமனை முறையாகச்
செயல்படாததால் மலைவாழ் மக்கள் சிகிச்சை பெற முடியாத
நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்
வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை
வைக்கிறேன்.

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையிலுள்ள புதூர்
நாடு அரசினர் மருந்தகம் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்
கீழ் ஆரம்பிக்கப்பட்டு 17—1—1980 முதல் செயல்படுகிறது.
மருந்தகத்தில் வெளி நோயாளிகள் சிகிச்சை மட்டுமே அளிக்கப்
படுகிறது. இம்மருந்தகத்திற்குக் கீழ்க்காணும் பணியாளர்கள்
ஒப்பளிக்கப்பட்டுள்ளது :—

(1) மருத்துவ அலுவலர்;
(2) மருந்தாளுநர்;
(3) துணைச் செவிலியர்;
(4) ஆண் செவிலியர் உதவியாளர்;
(5) பெண் செவிலியர் உதவியாளர்;
(6) துப்புறவுப் பணியாளர்;



அனைத்துப் பணியாளர்களும் பணியிலுள்ளனர். அங்கு
சராசரியாக ஒரு நாளைக்கு 20 வெளிநோயாளிகள் சிகிச்சை
பெறுகின்றனர். படுக்கை வசதியின்மையால் உள் நோயாளி
சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. மாதத்தில் சராசரியாக
15 முதல் 20 வரை சாதாரண சிறு அறுவை சிகிச்சைகளும்
செய்யப்படுகின்றன. இம்மருந்தகத்தில் தேவைப்படும் மருந்துகள்
போதிய அளவு இருப்பிலுள்ளது. எனவே இம்மருந்தகம்
நன்றாகச் செயல்படுகிறது.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, விவர அறிக்கையிலே உள்ள தகவல் திருப்தியளிக்கக்
கூடியதாக இல்லை. அங்கே தினசரி சிகிச்சை அளிக்கப்படுவ
தில்லை. மருத்துவர்கள் வாரம் ஒரு முறைகூட வருவது கடின
மாக இருக்கிறது. அவர் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள
திருப்பத்தூரில் தங்குகிறார். அங்கே இருக்கின்ற டாக்டர்கள்
தங்கும் குவாட்டர்ஸ் போதிய அடிப்படை வசதி இல்லாததால்,
அங்கே மருத்துவர் தங்கவில்லை. அது தவிர எமர்ஜன்சி கேஸ்
களைப் பார்ப்பதில்லை. இந்தத் தகவல்களை எல்லாம் தராமல்,
துறையினர் தவறான தகவல்களை மாண்புமிகு அமைச்சருக்குக்
கொடுத்துள்ளார்களா? இது குறித்து அமைச்சரவர்கள் ஆவன
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மருத்துவர் அங்கு தங்கவில்லை என்று சொன்
னால் அது தவறாகும். அது குறித்து கட்டாயம் நடவடிக்கை
எடுக்கப்படும். இங்கே தவறான தகவல்களைக் கொடுக்க
வில்லை. யார் யார் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று
பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கே தங்கித்
தான் பணியாற்ற வேண்டுமென்று அரசு கட்டாயம் வலியுறுத்தும்.
மாண்புமிகு உறுப்பினரவர்கள் புகார் கொடுத்தால் நிச்சயம் அரசு
நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, போதிய அளவுக்கு மருந்துகள் இருக்கிறதென்று குறிப்
பிட்டுள்ளதும் உண்மைக்கு மாறாக இருக்கிறது. அங்கே காலி
டப்பாக்களைத்தான் பார்க்கிறோம். நோயாளிகள் மருந்து
இல்லாமல் திரும்பி விடுகின்றனர். அது குறித்து அரசு சரி
யான முறையில் நடவடிக்கை எடுக்குமா? இந்த நிலை நீடிக்கும்
பட்சத்தில் மலைவாழ் மக்களுக்காக நானே முன் நின்று

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 ஏப்ரல் 8

போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். நான் முன்ன மேயே அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டதுபோல 1986 ஆம் ஆண்டு இந்த மருத்துவமனை கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு உத்தரவு வெளியிடப்பட்டது. அதுவும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச் சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் பல முறை இந்த அவையில் குறிப்பிட் டிருக்கிறேன். மருந்து இல்லை என்று எந்த மருத்துவமனை யிலும் குறையில்லாத அளவுக்கு அரசாங்கம் ஏராளமாக மருந்து களை வாங்கிக் கொடுத்திருக்கிறது. அங்கே மருந்து இல்லை என்றால், அது உண்மையானால், இப்போதே அதிகாரிகளை அனுப்பி அதை விசாரிக்கச் சொல்கிறேன். மருந்து இல்லாமல் இருக்க முடியாது. மருந்துகள் இல்லாமற் போனால், இருக்கிற வர்கள் அதைத் தவறான முறையில் பயன்படுத்தி இருக்க வேண்டும். மருத்துவர்கள், டாக்டர்கள் வருவதில்லை என்று சொன்னார்கள். இப்போது மருந்து இல்லை என்று சொல் கிறார்கள். இதை அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும். அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமென்று உறுதி அளிக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் போராட வேண்டிய அவசியம் இராது. இதைப் பாராட்டும் காலம் சீக்கிரம் வரும்.

(உ) காமராஜ் மாவட்டத்தில் நிலங்களின் மதிப்பீட்டை உயர்த்தி யிருப்பதால் பத்திரப் பதிவு பாதிப்பு.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜ் மாவட்டத்தில் நிலங்களின் மதிப்பீட்டைப் பல மடங்கு கூட்டியிருப்பதால், ஒரு வாரமாக மாவட்டம் முழு வதும் பத்திரப் பதிவு நடைபெறாமல் இருப்பதும், இது குறித்து மக்களின் அதிருப்தி பற்றியும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் பின்னாற அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1987 ஏப்ரல் 8] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

இந்திய முத்திரைச் சட்டத்தில் 1987 ஆம் ஆண்டு 47-ஏ என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. இப்பிரிவின்படி அசையாச் சொத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படும்போது அச்சொத்துக் களின் சந்தை மதிப்பிற்கேற்ப அரசுக்கு முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும் எனச் சட்ட பூர்வமாக்கப்பட்டது.

சொத்துக்களின் சந்தை மதிப்பை பத்திரம் பதிவு செய்யும் அதிகாரிகள் தெரிந்து கொள்வதற்காக பதிவுத் துறையில் முதன் முதலாக வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் 1967 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டன. இப்பதிவேடுகளில் உள்ள மதிப்புகள் 1981ல் மறு நியமனம் செய்யப்பட்டன. ஐந்து ஆண்டுகளுக்குப் பின் 1986 ஆம் ஆண்டில் இம்மதிப்புகளை மறுபடியும் திருத்தியமைக் கும் பணி மேற்கொள்ளப்பட்டு 1986 ஆம் ஆண்டு ஆகஸ்டு இங்க ளில் இப்பணி முடிக்கப்பட்டது. சொத்துக்களின் விற்பனை விவரங்கள், ஸ்தல ஆய்வு, அவற்றின் தன்மை, தரம் ஆகிய புள்ளி விவரங்கள் சேகரித்து அவைகளை நன்கு ஆய்வு செய்து அவற் றிற்கேற்ப மதிப்புகள் தற்போது மறுநிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

இவ்வாறு மறு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்புக்கள் 1—3—1987 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

காமராஜர் மாவட்டத்தில் 1—3—1987 முதல் புதிய வழிகாட்டி மதிப்புகள் அமலுக்கு வந்தபின், அப்பதிவு மாவட்டத்தில் பதிவு கள் ஸ்தம்பித்து விட்டதான வினாவின் பேரில் விசாரித்ததில், விருதுநகரில் அமைந்துள்ள 1 நிர் இணை சார்பதிவகம் மற்றும் 2 நிர் இணை சார்பதிவகம் தவிர மற்ற சார பதிவகங்களில், எந்த வித மாற்றங்களும் இல்லாமல் எப்போதும்போல் பதிவுகள் நடை பெற்று வருவதாக பதிவுத்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதிய வழிகாட்டி மதிப்புகள் அமலுக்கு வருமுன்னர் (1987 பிப்ரவரி 23 ஆம் தேதி வரை) பதிவான ஆவணங்களும், புதிய நிர்ணயம் அமலுக்கு வந்தபின் 2—3—1987 லிருந்து 23—3—1987

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 8

வரை பதிவான விவரங்களும், சென்ற ஆண்டு பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு மாதங்களில் 1 முதல் 23 ஆம் நாள் வரை பதிவான விவரங்களும் கீழ்க்கண்டவாறு உள்ளது—

| வரிசை எண்ணும், சார்பதிவாளர் அலுவலகம் பெயரும். | 1987 பிப்ரவரியில் பதிவானவை, 1—2—87 முதல் 23—2—87 வரை. | 1987 மார்ச் மாதம் பதிவானவை, 1—3—87 முதல் 23—3—87 வரை. | 1986 பிப்ரவரியில் பதிவானவை, 1—2—86 முதல் 23—2—86 வரை. | 1986 மார்ச் மாதம் பதிவானவை, 1—3—86 முதல் 23—3—86 வரை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் விருதுநகர் ... | 190 | 71 | 132 | 131 |
| 2 இரண்டு நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் .. .. | 240 | 103 | 198 | 167 |
| 3. சிவகாசி .. .. | 274 | 214 | 234 | 169 |
| 4. சாத்தூர் .. .. | 248 | 179 | 129 | 175 |
| 5. ராஜபாளையம் .. | 233 | 207 | 197 | 188 |
| 6. அருப்புக்கோட்டை | 178 | 217 | 182 | 218 |
| 7. திருசுழி .. | 97 | 85 | 93 | 105 |
| 8. ஸ்ரீவில்லிப்புத்தூர் | 229 | 245 | 183 | 176 |
| 9. பந்தல்குடி .. | 69 | 45 | 36 | 39 |
| 10. காரியாப்பட்டி .. | 102 | 85 | 61 | 74 |
| 11. வத்தராப்பு .. | 156 | 97 | 80 | 92 |
| 12. குன்னூர் .. | 92 | 88 | 61 | 82 |
| 13. கீழ்ராஜகுலராமன் | 111 | 93 | 64 | 59 |
| 14. சேத்தூர் .. | 107 | 80 | 93 | 77 |
| 15. திருத்தங்கல் .. | 206 | 126 | 153 | 121 |
| மொத்தம் .. | 2,532 | 1,935 | 1,896 | 1,878 |



1987 ஏப்ரல் 8] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

மேற்கண்ட விவரங்களிலிருந்து புதிய வழிகாட்டி மதிப்புகள் அமலுக்கு வந்ததிலிருந்து காமராஜர் மாவட்டத்தில் பதிவுகள் நடைபெறவில்லை என்பது உண்மை அல்ல என்பது புலனாகும். 1986 பிப்ரவரி, மார்ச், ஆகிய இரு மாதங்களில் 1 முதல் 23 ஆம் நாள் வரை பதிவான ஆவண விவரங்களையும் பரிசீலித்தால் 1987 மார்ச் மாதத்தில் பத்திரப் பதிவு அதிகம் என்பது புலனாகும்.

காமராசர் மாவட்ட பதிவுத்துறைக்குட்பட்ட "நிலம் வாங்குவோர் விற்போர் பாதுகாப்புச் சங்கம். ராஜபாளையம்" என்று ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு எண் 69/86. இச்சங்கத்தின் ஸ்தாபகர்கள் அனைவரும் நிலம் வாங்கி 'பிளாட்' செய்து விற்கும் புரோக்கர்கள். இவர்கள் முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் உட்பட ஒட்டுமொத்தமாக தொகை பேசிப் பெற்றுக்கொண்டு பத்திரப் பதிவு செய்து தரும் பொறுப்பு உட்பட ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள். எனவே புதிய வழிகாட்டிப் பதிவேட்டில் கண்டுள்ள மதிப்பீட்டினால் இவர்கள் தொழில் சற்று, தற்காலிகமாக பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த மதிப்புகளை ஏற்க மறுத்து, கிளர்ச்சிகளில் (Agitation) ஈடுபட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. மக்கள் சார்பில் மறுப்பு தெரிவிப்பதாகக் கூறியுள்ளபோதிலும், இதில் ஈடுபட்டிருப்பது முழுமையாக இந்த புரோக்கர்களே. இவர்கள் மக்களை பத்திரம் பதிய வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு 'நோட்டீஸ்' ஒன்று அச்சடித்து விநியோகித்திருக்கிறார்கள். இதன் காரணமாக விருதுநகரில் மட்டும் பத்திரப் பதிவுகள் சற்று மந்தமாக உள்ளது.

வழிகாட்டி மதிப்புகளைப் பதிவுக்கு வரும் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு சொத்து சரியாக மதிப்பிடப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதனை அறிய உதவும் பல ஆதாரங்களில் வழிகாட்டி மதிப்புகளும் ஒன்று. இதனையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்த முடியாது. வழிகாட்டி மதிப்பை ஏற்காத பொதுமக்கள் ஆவணங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். மதிப்பு குறைவாக இருக்கலாம் என பதிவதிகாரி ஐயம் கொண்டால் அதுமாதிரி நிலைகளில் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 எ (1)-ன்கீழ் "கலெக்டருக்கு" அனுப்பவார். "கலெக்டர்" நியாயமான மதிப்பு நிர்ணயம் செய்ய விதிகளில் வகையுண்டு. ஆகவே மதிப்பு அதிகம் என்று கருதும் பொதுமக்கள், ஆவணப் பதிவிற்குப் பின் கலெக்டரால் மதிப்பு நிர்ணயம் செய்து கொள்ள பரிகாரம் இருக்கிறது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 8

1—3—1987 ஆம் நாள் முதல் அமலுக்கு வந்துள்ள இம் மதிப்பு
களை எதிர்த்து சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள திரு. ஞான
சுந்தரம் என்ற வீடுமனை விற்பனையாளர் ஒருவரால் சென்னை
உயர்நீதிமன்றத்தில் தொடுத்த நீதிப் பேராணையில் (Writ
Petition No. 2576/87) -ல் தடையாணை கோரப்பட்ட வழக்கு
17—3—1987 அன்று உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்
டுள்ளது. இதன் மூலம் இதில் உள்ள சட்ட நியாயம் நன்கு
புலனாகும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்க அறிக்கை
திருப்தி அளிப்பதாக இல்லை. பத்திரப் பதிவு, முத்திரைத்தாள்
உட்பட மொத்தமாக தொகை பேசிப் பெற்றுக்கொண்டு பத்திரப்
பதிவு செய்து வரும் புரோக்கர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.
அதை எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று அறிய
விரும்புகிறேன். அந்த மாதிரி புரோக்கர்கள் இருப்பதாகத்
தகவல் இல்லை. அது பற்றிய விவரத்தை, உங்கள் மூலமாக,
அமைச்சரவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.
அதைப் போலவே நான் கேட்டிருக்கின்ற கேள்வி சென்ற
வாரமாக பத்திரப் பதிவு நடைபெறவில்லை என்பது. ஒரு
கொடுத்திருக்கின்ற விளக்கக் குறிப்பிலே 2—3—1987 ஆனால்
23—3—1987 வரை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல்
வரை என்று கொடுத்தால்கூட சரியாக இருக்கும் என்று 1 முதல் 15
கிறேன். அந்த வாரத்திலே பத்திரப் பதிவு நடைபெற்று கருது
கின்றதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். இருக்
கூடுதலாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் எவ்வளவு
தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 23—3—1987 வரை கணக்கு கேட்டுக்
தாலும் கூட, விருதுநகரில் 50, 60 தான் பத்திரப் பதிவு ஆகியிருக் கொடுக்
கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்
கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, முதன்முதலாக வழிகாட்டி மதிப்புப் பதி
வேடுகள் 1967 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டன. பிற்பாடு 1981ல்
தயாரிக்கப்பட்டன. அதற்குப் பிறகு 1986 ஆம் ஆண்டு தயாரிக்கப்
பட்டன, 1—3—1987 முதல் அமலுக்கு வந்திருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காமராஜ் மாவட்டம் பூராவும்
பத்திரப் பதிவு செய்யப்படுவதைத் தொடங்கி இருப்பதாகச்



1987 ஏப்ரல் 8] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

சொல்லுகின்றார்கள். இந்த விவர அறிக்கையில் 1—3—1987 முதல் 23—3—1987 வரை இரண்டு மூன்று இடங்களைத் தவிர குறிப்பாக விருதுநகரில் உள்ள சார் பதிவகங்கள் தவிர மற்ற இடங்களில் போன ஆண்டு இதே பருவத்திலே அதிகமாகப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அங்கு இடங்களை வாங்கி, பிளாட் போட்டு, வீடு கட்டுவதற்கு விற்பதற்கு என்று ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு எண் 69/86. அந்தப் பதிவு எண்ணில் "நிலம் வாங்குவோர்—விற்போர் பாதுகாப்புச் சங்கம், ராஜபாளையம்" என்று பதிவு செய்து கொண்டு அவர்களே மக்களைப் பத்திரம் புதிய வரவேண்டாம் என்று தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது நான் கேட்கின்ற கேள்விக்குப் பதிலே சொல்லவில்லை. 2—3—1987 தேதியின்படி கொடுக்கப்பட்டிருக்கின்ற வழிகாட்டிப் பத்திரப் பதிவு மதிப்பீடு முன்பு இருந்ததைவிட, எவ்வளவு அதிகமாக விருதுநகரில் பதிவாக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூர், விருதுநகர் போன்ற இடங்களிலே பத்திரப் பதிவு மதிப்பீடு அதிகமாக இருப்பதாகச் சென்னை உயர்நீதி மன்றத்தில் தடை வாங்கியிருப்பதாக அறிகிறேன். அது சரிதானா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். அதுபோல வேறு எங்கேயெல்லாம் தடை வாங்கியிருக்கின்றார்கள். இதில் மேலும் ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்தப் பத்திரப் பதிவுகளிலே இருக்கின்ற மதிப்பீட்டை அரசு ஏற்றுக் கொள்ளும்போது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்கவும்.

திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான விவசாயிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதிப்பீடு கூடி இருப்பதால், இந்த மதிப்பீட்டைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது, அரசுக்கு அவர்கள் கட்டியது போக மீதித் தொகையைத் தருவார்களா என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதையும் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியத்தின் மீது பேசும் போது நான் மிகத் தெளிவாக அரசின் கொள்கையை விளக்கி யிருக்கிறேன். பத்திரம் பதிவு செய்யப்பட வருகின்றபோது, வழி காட்டி மதிப்புப் பதிவேடு என்பது அங்கேயுள்ள பத்திரம் பதிவு செய்யும் அதிகாரிகளுக்காக வைக்கப்பட்டு இருக்கிறது. அதற்குக் குறைவாகப் பத்திரம் லேபிள் ஒட்டிப் பதிவு செய்யப் பட்டால் அதைப் பதிவு செய்ய முடியாது என்று அதிகாரிகள் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லவும் இல்லை. அதைப் போல்வே அதிகாரிகள் அதிகமாக ஸ்டாம்ப் ஒட்டுங்கள் என்று சொன்னால் அவர்களும் சப்-கோர்ட்டுக்குப் போகவேண்டும். அதிகமாக ஸ்டாம்ப் ஒட்டியிருந்தால் சப்-கோர்ட்டுக்கு பதிவு செய்தும் போகலாம். ஆகவே தடை எதுவும் இல்லை. ஏற்கெனவே சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் அப்ஜக்ஷன் 2576/87-ல் சென்னையில் உள்ள திருஞானசுந்தரம் என்பவர் [illegible] அரசாங்கம் இஷ்டப்படி விலை மதிப்பை ஏற்றிவிட்டது என்று கூறி இதனை தடை செய்யக்கோரி மனு [illegible] செய்யப்பட்டிருக்கிறது. இதனால் பொது மக்களுக்கும் [illegible] கஷ்டமில்லை. ஒருசில வீட்டுக்கு மனை [illegible] விற்பவர்களுக்குத்தான் கஷ்டமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் [illegible] அந்த மதிப்பீடு போட்டு [illegible] தயாரா என்று கேட்கிறார். அந்தப் பட்டியலைக் [illegible] அதற்கு நான் பதில் சொல்லுகிறேன்.

### 5. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசுகின்ற நேரத்தில் * என்ற வார்த்தையை நீக்கினேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் பேச்சில் அந்த வார்த்தை இருந்தால் நீக்கி விடுவோம்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு: இன்றைய பேரவைக் கூட்டம் இன்று கல்வி மானியத்தின் மீது பேசி முடியும்வரை தொடர்ந்து [illegible] இடைவேளை இல்லாமல் நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.



1987 ஏப்ரல் 8]

(முற்பகல் 11-30)

### 6. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,96,83,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,96,83,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. சோ. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், குறிப்பாக லால்குடி தொகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளிக் கட்டடங் களை ஆய்வு செய்து நல்ல கட்டிடங்கள் பள்ளிகளுக்கு உருவாக் கித் தருதல் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,96,83,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சாத்தான் குளத்தில் ஓர் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,96,83,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 ஏப்ரல் 8

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மற்றும் இதர கல்வி நிலையங்களிலும், நிரப்பப்படாத ஆசிரியர் பணி இடங்களை நிரப்பிட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,96,83,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், லால்குடி, பூவாளூர், புள்ளம்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள மேல் நிலைப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடமும், புள்ளம்பாடி ஒன்றியத்தில் இலுவைப்பட்டி, சரடமங்கலம், மால்வாய், எம். கண்ணனூர், ராமநாதபுரம், திரணிபாளையம் ஆகிய கிராமங்களிலும் லால்குடி ஒன்றியத்தில், அப்பாதுரை, மாந்துறை, பல்லாபுரம், கூகூர், வாளாடி ஆகிய ஊர்களில் ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்தல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,96,83,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களின் பெயர்களில் உள்ள சாதிப் பெயர்களை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,96,83,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



1987 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்கீழ், "தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி" என்ற அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. அவற்றை நான் படித்ததாக எடுத்துக்கொண்டு குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டுகிறேன். மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்துக்களை அறிந்த பின் என் பதிலுரையை நான் அளிக்கின்றேன்.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று விழைகிறேன். தற்காலத்திலே, குழந்தைகளைப் பள்ளிகளிலே சேர்ப்பது, படிக்க வைப்பது என்பது பெற்றோர்களுக்குப் பாரமாக இருந்து வரும் நிகழ்ச்சியாக இருக்கின்றது. Education is a liability to the parents என்ற நிலையில்தான் இன்றைய கல்வியானது நிலவிக் கொண்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று நான் நினைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஆர்ட்டிகிள் 41-லே கட்டாயப் படிப்பு என்று நாம் சொல்கிறோம். அதே நேரத்தில், மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் என்றால் அது Costly affair ஆகத்தான் இருக்கிறது. பெற்றோர்களைச் சந்தித்து உரையாடுவதன் மூலமாக அவர்களுடைய மன நிலையை, உள்ளக் குமுறலைக் கண்டிப்பாகப் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் நினைக்கின்ற தரமான பள்ளிகளில் குழந்தையைப் படிக்க வைப்பதற்கு ஏறத்தாழ 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் ஒவ்வொரு மாதமும் செலவாகிறது. அரசாங்கத்தில் பணிபுரிகின்ற ஒரு குமாஸ்தா ஒரு மாதத்திற்கு 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையில் எவ்வாறு செலவு செய்ய முடியும்? குழந்தைக்கு எப்படிக் கல்வியைக் கற்றுத் தர முடியும்? மக்கள் விரும்பும் கல்வியை, மக்கள் விரும்பும் பாடத் திட்டங்களை, மக்கள் விரும்பும் மொழிகளை, தரமான கல்வியை, பெற்றோர்கள் திருப்திப்படும் வகையிலே கல்வித் திட்டத்தை நீங்கள்

* 1052—1154-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. டி. என். முருகானந்தம்] [1987 ஏப்ரல் 8

குழப்பத்தை விளக்கியிருக்கிறார்கள் என்பது பார்த்தவர்களுக்குத் தெரியும். அதைப்போலத்தான் உங்களுடைய திட்டமும் இருக்கிறது. உங்களுடைய கொள்கை 'இரட்டைவால் குருவி' அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதை மிகுந்த வேதனையோடு சொல்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது தமிழ்நாடு டெக்ஸ்புக் சொசைட்டி; தமிழ்நாடு பாட புத்தக நிறுவனம் இருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. அதனுடைய கடமைகளை அது செவ்வனே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற இந்தியாவிலே இருக்கிற மிகப்பெரும் எழுத்தாளர்கள் எழுதியவற்றைப் பாடமாக வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய சிறந்த எழுத்தாளர்கள் எழுதியவற்றையும் பாடமாக வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஷேக்ஸ்பியர், ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த் போன்றவர்கள் எல்லாம் எழுதியவற்றைப் பாட புத்தகங்களில் இடம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையில் நாங்கள் எல்லாம் பெரிதும் மதிக்கக்கூடியவரும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அரும்பாடுபட்டவருமான அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய வரலாற்றையும் பாடப் புத்தகங்களில் இடம் பெறச் செய்ய வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி எல்லாக் கூட்டங்களிலும் சொல்லி வருகிறார்கள். இந்தத் தேசிய ஒருமைப்பாட்டை விளக்குகின்ற வகையில், தேசிய ஒருமைப்பாட்டை விளக்குகின்ற வகையில் அன்னை இந்திரா காந்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முதல் வகுப்பிலிருந்தே நீங்கள் பாடமாக வைக்க வேண்டும். அதன் மூலம் இந்த நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க வழிவகை செய்ய வேண்டும்; இதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குத் தரமான கல்வியைக் கற்க மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலைமை வர வர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நல்ல எதிர்காலத்தை மனதிலே வைத்து அவர்கள் வெளிநாடுகளுக்கு, அமெரிக்காவுக்கு, இங்கிலாந்துக்குச் செல்லுகின்ற நிலைமை இந்த ஆட்சியில் வந்திருக்கிறது. வடநாட்டுக்காரர்கள், வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள் என்றால் அவர்கள் வியாபாரத்தை மனதிலே வைத்து, வியாபாரத்தைப் பெருக்கும் எண்ணத்தில் செல்கிறார்கள்.



1987 ஏப்ரல் 8] [திரு. டி. என். முருகானந்தம்]

(முற்பகல் 11-40)

அதாவது வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்கள் செல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டுக்குப் போகிறார்கள் என்றால் தரமான கல்வி இங்கே கிடைக்கவில்லை என்பதால்தான் அவர்கள் வெளிநாட்டுக்கு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. புகழ் பெற்ற அரசியல் தலைவர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அங்கே சிகிச்சை அளிக்கும் டாக்டர்கள் இந்தியர்களாகவும், பெரும்பாலும் தமிழர்களாகவும்தான் இருக்கிறார்கள். நாம் இங்கிருந்து வெளிநாட்டுக்குச் சென்று சிகிச்சை பெறுகிறோம். ஆனால் அங்கே இருக்கிற டாக்டர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல திறமை வாய்ந்த டாக்டர்களை நாம் ஏன் தமிழகத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது? அப்படிப்பட்ட வசதிகளை, மருத்துவ பட்டப் படிப்புக் கல்வித் தகுதிகளை நாம் ஏன் இங்கேயே முயற்சி செய்து வழங்கக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொழிக் கொள்கையை மாணவர்களிடத்தில் விட்டுவிட வேண்டும். எந்த அரசியல் கட்சியும் இந்த மொழியைத்தான் மாணவர்கள் கற்க வேண்டுமென்று சொல்கின்ற நிலையை எடுக்கக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்திய அரசின் அடிப்படை உரிமை கூடச் சொல்கிறது. எனவே ஒரு மாணவன் தமிழ் படிக்க வேண்டுமென்றால் தமிழ் படிக்கட்டும்; ஆங்கிலம் படிக்க வேண்டுமென்றால் ஆங்கிலம் படிக்கட்டும்; இந்தி படிக்க வேண்டுமென்று சொன்னால் இந்தி படித்துவிட்டுப் போகட்டும். நீங்கள் ஏன் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ள வேண்டும்? எனவே இந்த மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்குப் பரிபூரணமான சுதந்திரத்தை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல்கலைக் கழகங்களை அதிகப்படுத்துவதால் எந்தவிதமான பலனும் இருப்பதாகத் தெரியவில்லை. Expansion of the University is no use, but expansion of the University education is more important— என்று நான் மெத்த பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்பெல்லாம், அதாவது காங்கிரஸ்

கட்சி ஆண்டகாலத்தில் Director of Public Instruction என்ற ஒரு இயக்குநருக்குக் கீழே கல்வித்துறை இயங்கி வந்ததை நான் நினைவுகூர விரும்புகிறேன். தரமான கல்வியையும், முறையான நிர்வாகத்தையும் நடத்திக் காட்டி தமிழகத்திற்கு பெரும் புகழையும் முன்பிருந்தவர்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள் ஆனால் இப்போதிருக்கிற நிலைமையில் Public money for educational development and not for educational establishment என்றுதான் இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல்கலைக் கழகத்தினுடைய கல்வித்தரம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

உதாரணமாக அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள நிலைமையைச் சொல்கிறேன். பொறியியல் பட்ட மேற்படிப்புக்கான GATS என்று சொல்வார்கள். Graduates Aptitude Test Service. இது ஒரு அகில இந்திய டெஸ்ட். இதில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்த ஆண்டு 10 சதவீதம் பேர்தான் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள் அகில இந்திய ரீதியில். அண்ணா பல்கலைக் கழகத்தில் இன்ஜினியரிங் படிப்பு படிப்பதற்கான மாணவர்களை நாம் தேர்வு செய்யும்போது 90 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண் பெற்ற மாணவர்களை, நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர்களைத்தான் அதாவது தகுதி வாய்ந்தவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறோம். அவர்கள் பி.இ. படிக்கிறார்கள். ஆனால் எம்.இ. படிப்புக்கான கேட் எக்ஸாமினேஷனுக்கு போகும்போது தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 சதவீதம் பேர் கூட பாஸ் பண்ண முடியாத சூழ்நிலைதான் இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் இந்த நிலையைப் போக்குவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும். இன்னும் 30 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆளுக்கு 10 நிமிஷம் கொடுத்தால் 6 மணிக்கு முடியும். 15 நிமிஷம் கொடுத்தால் நைட் 10 மணிக்கு முடியும். 20 நிமிஷம் கொடுத்தால் மிட் நைட்டில் தான் முடியும். எனவே சீக்கிரம் முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. டி. என். முருகானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்னையில் இருக்கிற மாணவனுக்கு காரைக்குடியில் சீட் கொடுக்கிறார்கள். காரைக்குடியில் இருக்கிற மாணவனுக்கு சென்னையில் அட்மிஷன் கொடுக்கிறார்கள். எந்த அடிப்படையில் இவ்வாறு கொடுக்கிறார்கள்? இதிலே பெரிய ராக்கெட் அதாவது ஊழல் நடந்திருப்பதாக என்னிடத்தில பலர் புகார் செய்திருக்கிறார்கள். சென்னையைச் சேர்ந்த மாணவனுக்கு காரைக்குடியில் இருக்கிற இன்ஜினியரிங் காலேஜில் அட்மிஷன் கொடுக்கிறார்கள். மதுரையைச் சேர்ந்த மாணவனுக்கு கன்னியாகுமரியில் இடம் கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதியான செஞ்சியைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கு தஞ்சாவூரில் உள்ள கல்லூரியில் அட்மிஷன் வழங்கப்பட்டு இருக்கிறது. வேறு கல்லூரியில் அனுமதி வழங்கி இருக்கலாம். இந்த நிலை எதற்காக வந்தது? இப்படிப்பட்ட நிலைமைகளால் அரசாங்கத்திற்குக் கண்ணியக்குறைவு ஏற்படவில்லையா? ஏன் இதுபோன்ற நிலைமைகளை அதிகாரிகள் ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்கிறேன். ஆங்காங்கே உள்ள மாணவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற இன்ஜினியரிங் கல்லூரிகளில் இடம் வழங்கி இருக்கலாம். அதைவிட்டுவிட்டு சென்னையிலும், மதுரையிலும் மற்ற இடங்களிலும் இவ்வாறு வழங்கிக்கொண்டிருக்கின்ற நிலைமை நியாயமானதுதானா? இதிலே மிகப்பெரிய ஊழல் நடந்திருக்கிறது. இதனை நான் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வருகின்ற கல்வி ஆண்டிலாவது இதுபோன்ற நிலை ஏற்படக்கூடாது என்று நான் மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அண்ணா பல்கலைக் கழகத்தில் தொலை உணர்வு மையம் அதாவது Remote Sensing Centre என்று ஒன்று இருக்கிறது. குறிப்பாக பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்களாக, பேராசிரியர்களாகப் பணியாற்றவேண்டுமென்றால் பி.எச்.டி. படித்தவர்கள்தான் பணியாற்ற முடியும். ஆனால் இயக்குநராக ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவர் பி.எச்.டி. படிக்கவில்லை. அந்தத் துறையைப் பற்றியும் அவருக்குத் தெரியாது. ஏன் இந்த நிலை? அவர் முறையாக

அந்தத் துறையைச் செயல்படுத்துவாரா? அந்தத் துறைக்கு நல்ல பெயரை அவர் வாங்கிக் கொடுக்க முடியுமா என்று நான் கேட்கிறேன். தமிழக அரசு கூட 1½ கோடி ரூபாய் மானியம் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

அடுத்தபடியாக பல நிலைகளில் இப்போது Private study என்று படிக்கிறார்கள். ஒரு மாணவன் எஸ்.எஸ்.எல்.சி. எழுத வேண்டும் என்று சொன்னால் 16 வயது இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வயதிற்கும் அறிவிற்கும் என்ன சம்பந்தம் என்று நான் கேட்கிறேன். எந்த மருத்துவராவது அப்படி சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்களா? ஏன் வயதை வைத்து ஒரு மாணவனுடைய திறமையையும், அறிவையும் நீங்கள் எடை போடுகிறீர்கள். வெளிநாட்டில் அப்படிக் கிடையாது. உதாரணமாக இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் கூட ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு செய்தி வெளியானது. இங்கிலாந்தில் ஒரு கணிதப் பேராசிரியருடைய மகள் 13 வயதில் பி.எச்.டி., வாங்கியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அங்கே 13 வயதிலே ஒரு பெண் பி.எச்.டி. வாங்குகிறாள். இங்கே 16 வயது நிரம்பினால்தான் ஒரு மாணவன் எஸ்.எஸ்.எல்.சி. யே எழுத முடியும் என்று இருக்கிறது. 8-வது படிக்கின்ற ஒரு மாணவன் எஸ்.எஸ்.எல்.சி. எழுத விரும்பினால், அதற்கான தகுதியும், அறிவும் அவனுக்கு இருந்தால், அனுமதி வழங்க வேண்டியது தானே இந்த அரசின் கடமை என்று நான் கேட்கிறேன். ஆகவே, இந்தக் கொள்கைகளை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். அறிவுக்கும் வயதிற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே அதை உடனடியாக மாற்றிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கரெஸ்பாண்டென்ட் எஜுகேஷன் என்றும், ஓப்பன் யூனிவர்சிட்டி என்றும் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், கரெஸ்பான்டென்ஸ் கோர்ஸிலே பி.யூ.சி. படித்து பி.ஏ. படிக்கின்ற முறையை வைத்திருக்கிறார்கள். ஓப்பன் யூனிவர்சிட்டியிலே நேரிடையாக பி.ஏ., எழுதுகிறார்கள். ஏன் அப்படி? ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது அல்லவா? அனைவருக்கும் ஒரே கேள்வி, ஒரு மாதிரியான பாடத் திட்டங்கள். பரீட்சைகள் என்று எழுதுகிறார்கள். ஒரே தேர்வு நிலையில் ஏன் இந்த நிலை இருக்கிறது?





அடுத்தபடியாக தமிழகத்திலே இருக்கிற மாணவ, மாணவியர்களுக்கு எப்படி காவல் துறையில் யூனிபாரம் இருக்கிறதோ, எப்படி ராணுவத்திலே யூனிபாரம் இருக்கிறதோ அந்த வகையிலே தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான உடை இருக்க வேண்டும் என்பதை அமல் நடத்த வேண்டும். தனியார் பள்ளிகளையும் சேர்த்து ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்; வேண்டுமானால் அந்தப் பள்ளிகளின் பெயர்களை அவர்கள் நெஞ்சில் குத்திக் கொள்ளட்டும். ஆனால் உடை ஒரே மாதிரியாக தமிழகம் பூராவும் இருக்க வேண்டும். அப்போதுதான் பள்ளி மாணவர்களிடையே வேற்றுமை இருக்காது. பணக்கார வீட்டு பிள்ளைகள், ஏழை வீட்டுப் பிள்ளைகள் என்ற வேறுபாடு அவர்களுக்குள் இருக்காது. அந்த மாதிரி ஒரு நிலைமையை அரசு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

**திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தக் கல்வி மானியத்தை வரவேற்று பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக . . . (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி ஒவ்வொருவரும் நேரத்தை அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டும். 10 நிமிடம் தந்தால் 6 மணி வரை போகும். 15 நிமிடம் தந்தால் 10 மணி வரைக்கும் போகும். 20 நிமிடம் தந்தால் விடியற்காலையில் 4 மணி வரைக்கும் போகும். எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் எவ்வளவு நேரம் எடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள், எப்படி பிரித்துக் கொடுக்கச் சொல்லுகிறார்கள் . . . . (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்).

**திரு. கு. ரமணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியம் மற்ற எல்லாவற்றையும் விட பெரிய மானியம். மிகவும் முக்கியமான மானியம். இதற்கு ஒரு நாள் கூட கொடுத்திருக்கலாம், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை பி.ஏ.சி., மீட்டிங்கிலேயே நீங்கள் சொல்லி இருக்கவேண்டும். இங்கே வந்து என்னிடம் கேட்பதில் பயன் இல்லை. ஒரு நாள்தான் என்று அங்கேயே முடிவு செய்தாகிவிட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, 2 நாள் வைத்தாலும், முதல் நாள் 3 மணி நேரம், மறுநாள் 3 மணி நேரம் என்று 6 மணி நேரம் தான். அதை இப்பொழுதே, 6 மணி நேரம் எடுத்துக்கொள்வோம். அவருக்கு நேரம் முடிந்து இரண்டு தடவை எச்சரிக்கை மணி அடித்தாகிவிட்டது. அப்படியும் கேட்கவில்லை என்றால் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்களா. . . . எதற்கும் ஒரு வரையறை இருக்க வேண்டாமா? 30 பேர்கள் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வது, ஒரு நாள் என்கிறபோது சட்டமன்றம் கூடுவது ஆறு அல்லது ஏழு மணி நேரம் தான் வருகிறது. இந்த மானியத்தை நாளைக்கு எடுத்துக் கொள்வோமென்றால் காலையில் கேள்வி நேரம் மற்றும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொண்ட பிறகு மூன்று மணி நேரம்தான் கிடைக்கும். இன்றைக்கு வைத்துக் கொள்வதை இரவு பத்து மணி வரைக்கும் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரே நாளில் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாமென்று சொல்லியாகி விட்டது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடமா, 15 நிமிடமா என்பதை நீங்களே வரையறுத்துச் சொல்லிவிடுங்கள். அப்படியில்லாமல், ஒவ்வொரு வரும் எழுந்து கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால் துணைச் சபா நாயகர் என்ன செய்ய முடியும்? எதையும் ஒரு வரையறைக்குள் கொண்டு வரவேண்டும் அல்லவா? ஒவ்வொரு மூலையிலிருந்தும் எழுந்து கட்டளையிட்டால் என்ன செய்ய முடியும்?

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசுவார். மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. சண்முகம்:** துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் வருவாய்க் கணக்கில் கல்வித் துறைக்காக 597 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த 597 கோடி ரூபாயில் 484 கோடி ரூபாயை பள்ளிக் கல்விக்காக ஒதுக்கியிருப்பதை மீண்டும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ...



கல்விக்காக இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கி இருப்பதிலிருந்து கிராமப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு கல்வியறிவை நல்ல முறையில் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. அந்தவகையில் ஆரம்பக் கல்வியை நல்ல முறையில் கொடுப்பதற்காக தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் என்னென்ன கோரிக்கைகளை நான்காவது ஊதியக் குழுவிலே கேட்டார்களோ அவற்றில் பெரும்பாலான கோரிக்கைகளை அரசு ஏற்று, அந்தப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வழங்குவதால் கிராமப் பகுதிகளில் இருக்கிற குழந்தைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்கும் வாய்ப்பை உருவாக்க முடியுமென்ற எண்ணத்தோடு அவர்களுடைய கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிக்கூடங்களில் தரமான கல்வியைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றால்—இப்போது பள்ளிகளுக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டிற்காண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதற்கு முன்னாலேயெல்லாம் இப்படி மாணவர்கள் அதிகமாக வராத நிலையிருந்த போது, வகுப்புகளில் 30, 40 அல்லது 25 என்ற எண்ணிக்கையில் தான் மாணவர்கள் இருப்பார்கள். கிராமப் பகுதிகளில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், பாமர மக்களின் குழந்தைகள் கல்வி அறிவை எல்லாவகையிலும் பெறவேண்டுமென்ற எண்ணத்தில், குழந்தைகள் பள்ளிக்கு ஏன் வராமல் இருக்கிறார்கள் என்பதை நன்கு ஆராய்ந்ததற்குப் பிறகு, குழந்தைகளுக்கு மதிய உணவு இல்லாத காரணத்தால், அவர்களுக்கு சட்டை. சீருடை இல்லாத காரணத்தால், பாடப் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதற்கு முடியாத காரணத்தால் அந்த நிலை இருக்கிறது என்பதை உணர்ந்ததற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இலவச சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு இலவச சீருடைகளைக் கொடுத்தார்கள். இலவசமாக பாடப் புத்தகங்களை அளித்தார்கள். இப்போது காலணிகளையும் அளிக்க இருக்கிறார்கள். இப்படி பல கோடி ரூபாய்களை செலவு செய்து சலுகை அளித்த பிறகு அங்கேயிருக்கிற

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 8

பாமர மக்களின் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வேண்டுமென்ற எண்ணத்தை அதிகமாகக் கொண்டிருப்பதால் 60, 70, 80 என்று ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் கிராமப் பகுதிகளில் இருக்கிற குழந்தைகள் நடுவர் ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையின் அடிப் படையில் ஒன்று முதல் 11 வயதுடைய குழந்தைகள் 100 விழுக் காட்டை பள்ளியில் சேர்க்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அதேபோல 11 வயது முதல் 14 வயது வரையிலுள்ள குழந்தைகள் 75 விழுக்காட்டை பள்ளியில் சேர்க்க வேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறார்கள். தமிழக அரசு, 1986-87 ஆம் ஆண்டிலேயே 1 முதல் 11 வயது உடைய குழந்தைகள் 100 விழுக்காடு அளவிற்கு அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். 11 வயது முதல் 14 வயது வரை உள்ள மாணவர்கள் 79.69 விழுக்காடு என்ற அளவிற்குச் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த நடுவர் ஆட்சி சொல்லிய அந்தக் கணக்கைவிட, மாணவர்களை அதிகமாகச் சேர்க்கக்கூடிய வாய்ப்பை தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு இடையிலே, குழந்தைகளுக்கு அடிப்படையில் ஆரம்பக் கல்வியைத் தரமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்படித் தரமாக கற்றுக் கொடுப்பதற்காக, ஒரு வகுப்பிலே நிச்சயமாக 40 மாணவர்களுக்கு மேல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படிக் கூடுதலான மாணவர்கள் இருப்பார் களானால், கூடுதல் ஆசிரியர்களைப் போடவேண்டும். இதை மனதில் கொண்டுதான் தமிழக அரசு இப்போது 500 இடைநிலை ஆசிரியர்களை கூடுதலாக நியமனம் செய்வதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் அரசு ஏற்படுத் தியதற்குப் பின்னால் நிர்வாகத்திலே சில இடங்களில் சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தால், இத்தனை வேலைகள் செய்தாலும் தரமான கல்வி இல்லை என்ற குறை மக்களிடத்திலே இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

தனியார் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் [illegible] அரசு கொடுக்கிற ஊதியத்தை [illegible] முடியாத நிலை இருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் அங்கே தரமாக, முழுமை யான அளவில் பணியாற்றுகிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு



1987 ஏப்ரல் 8] [திரு. இரா. சண்முகம்]

கல்வியை எந்த வகையிலே எல்லாம் சொல்லிக் கொடுக்க முடியுமோ, அந்த வகையிலே எல்லாம் சொல்லிக் கொடுக் கிறார்கள். ஆனால் அரசுக் கல்வி நிலையங்களில் உள்ள ஆசிரியர்கள் அரசு அறிவித்த சம்பளத்தை முழுமையாகப் பெற்றுக்கொண்டும், முழுமையான கல்வியை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதனால் தான் தனியார் பள்ளிக்கூடங்களிலே மாணவர்களைச் சேர்ப் பதற்கு எவ்வளவு டொனேசன் கொடுத்தாகிலும், அங்கே சேர்ப் பதற்கு வசதி படைத்தவர்கள் எல்லாம் போய்க்கொண்டிருக் கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களை கிராமப் பகுதியிலே போய்த் தொடங்குவதற்கான அடிப்படைக் காரணமே, வசதி குறைந்த மக்கள் பெற்றெடுத்த குழந்தைகள் முறையாக அந்தக் கல்வியைப் பயிலவேண்டும், அப்படி பெற்றக் கல்வியின் மூலமாக வருங்காலத்திலே அவர்கள் தரமுள்ள வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான், கிராமப் பகுதியிலே ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தந்திருக்கிறது. எனவே இப்படிப்பட்ட குறைகளை நாம் களைய வேண்டும் என்று சொன்னால், அங்கே பள்ளிகளை ஆய்வு செய்கிற மேற்பார்வையாளர்களாக இருக்கிற டி.ஐ.-க்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் எல்லாம் முறையாக அந்த ஆய்வு வேலையை மேற்கொள்ளவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சத்துணவுக் கூடங்களை ஆய்வு செய்வதற்கு அக்கறை காட்டுவதைப் போன்று, பள்ளிக்கூடங்களில் இருக்கிற மாணவர்களுக்கு, ஓர் ஆண்டுக் காலத்தில் எப்படி அந்த ஆசிரியர்கள் கல்வியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்ற சோதனை செய்கிற நிலையில் அவர் களுக்கு அக்கறையில்லை என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன். அந்த வகையிலே டி.ஐ. க்கள் எல்லாம் 3 ஆண்டுக்காலம் அல்லது 2 ஆண்டுக்காலம் பள்ளித் துணை ஆய்வா ளராக பணியாற்றிய பின் மீண்டும் அவர்கள் பள்ளிக்கூடத்திலே போய்ப் பணியாற்றுகிற நிலைமையை அரசு உருவாக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏதோ ஒரு காலத்திலே பள்ளித் துணை ஆய்வாளராக ஆகிவிட்டவர்கள், எப்படியாகிலும், பள்ளித் துணை ஆய்வாளராகவே நீண்டகாலத் திற்கு பணியாற்றிவிட்டுச் செல்லவேண்டும் என்ற எண்ணம்

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 8

அவர்களுக்கு மேலோங்கி நிற்பதை இந்த அரசு தடை செய்ய வேண்டும். அவர்கள் முறையாக எந்த ஒரு நடவடிக்கையையும் செய்யாமல் இருக்கிற அவல நிலைமையைப் போக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏ.இ.ஓ.க்கள்—உதவிக் கல்வி அலுவலர்கள் என்று ஒரு போஸ்டை நாம் போட்டிருக்கிறோம். இந்த உதவிக் கல்வி அலுவலர்களுக்கு என்ன வேலை என்று சொன்னால், ஒரு அப்பர் டிவிசன் கிளார்க்கைப் போல, அந்த அலுவலகத்திலே உட்கார்ந்து கொண்டு, எப்போதும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அலுவலகத்திலே போய் நிர்வாகம் செய்வதற்காக இந்த ஏ.இ.ஓ. போஸ்டுகளை நாம் போட்டிருக்கிறோமா, அல்லது துணை ஆய்வாளர்கள் ஆய்வு செய்கிற இடங்கள் என்று இல்லாமல், மற்ற இடங்களில் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கூடங்களை அவசியம் ஆய்வு செய்யவேண்டும் என்று அவர்களுக்கு பரிந்துரை செய்திருக்கிறோமா என்று தெரியவில்லை. ஏ.இ.ஓ.-க்கள் அலுவலகத்திலே உட்கார்ந்திருந்தாலும் கூட, அந்த ஏ.இ.ஓ.-க்கள் இடத்திலே எழுத்தர்களாக இருப்பவர்கள் ஒன்றும் தெரியாதவர்களாக அங்கே இருக்கிறார்கள். அந்த அலுவலகத்தில் மாதாமாதம் சம்பளம் வாங்கவேண்டும் என்று சொன்னாலும், அல்லது அவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை சம்பளத்தைக் கூட்டிக்கொடுக்கும் பணியைச் செய்யவேண்டும் என்று சொன்னாலும், அல்லது பி.எப். பிலிருந்து லோன் போடவேண்டும் என்று சொன்னாலும், ஆசிரியர்கள் தான் இன்றைக்கு அந்த ஏ.இ.ஓ.-க்களுடைய அலுவலகத்திலே போய்ப் பணியாற்ற வேண்டும். எனக்கு பி.எப்.பிலிருந்து லோன் வேண்டும் என்றால், அந்த ஆசிரியரைப் போய்ப் பாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆசிரியர்கள் ஆண்டு முழுவதும் அந்த ஏ.இ.ஓ. அலுவலகத்திலே போய்ப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை நிச்சயமாகத் தடை செய்து, முறையாக எழுத்தர் பணியை முறையாகத் தெரிந்தவர்கள் இடத்திலே அந்தப் பணியைக் கொடுக்க, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏ.இ.ஓ.-க்கள் அவசியம் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் இருக்கிற பள்ளிகளில்—மொத்தம் இவ்வளவு பள்ளிக் கூடங்கள் இருக்கிறது என்றால்,—குறைந்தது இத்தனை பள்ளிக்



1987 ஏப்ரல் 8] [திரு. இரா. சண்முகம்]

(நண்பகல் 12-00)

கூடங்களைக் கண்டிப்பாக ஆய்வு செய்யவேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், டி.ஈ.ஓ. அலுவலகத்திலிருந்து, டி.ஈ.ஓ. ஆண்டுக்கு ஒருமுறை உயர்நிலைப் பள்ளிகளுக்குச்
சென்று ஆய்வுசெய்ய வேண்டுமென்று இருந்தாலும்
அவர்கள் முறையாக ஆய்வு செய்வதற்கான வாய்ப்பைப்
பெறாமல் பல பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு
செய்யப்படாமலேயே நின்று விடுவதை, நிச்சயமாக நாம் தடை
செய்யவேண்டும். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஆய்வு நடத்தி
யாக வேண்டும். அந்த வகையிலே, உயர்நிலைப் பள்ளிகளின்
ஆய்வு அதிகமாக இருந்தாலும்கூட, டி.ஈ.ஓ. அலுவலகங்கள் அந்த
ஆண்டுக்கு முன்னாலேயே எந்தெந்தப் பள்ளிக்கூடங்களுக்கு
ஆய்வு மேற்கொள்ளப்படுகிறதோ அந்தந்தப் பள்ளிக்கூடங்களுக்கு
ஆய்வு செய்வதற்கான அறிவிப்பை ஆண்டின் துவக்கத்திலேயே
அனுப்பி விடவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே இங்கே
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்
லாமல், உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி இல்லை.
ஆரம்பப் பாடசாலைகளுக்கு பள்ளிக்கட்டிட வசதிகள் இருக்
கின்றன. ஆனால் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிட
வசதி என்பதே இல்லை. உயர்நிலைப்பள்ளிகளுக்கு கட்டிட வசதி
இல்லாத காரணத்தால், தன்னிறைவு என்று கொண்டு வந்து,
எப்படி கிராமங்களுக்குத் தண்ணீரை 3, 5 கட்டங்களாகப் பிரித்து
எவ்வாறு நிவர்த்தி செய்யப்படுகிறதோ அதைப்போல உயர்
நிலைப் பள்ளிகளுக்கு அவசியமாக கட்டிடங்களைக் கட்டித் தர
வேண்டும். கட்டிடங்களைக் கட்டித் தந்தால்தான் மாணவர்கள்
உள்ளே உட்கார்ந்து கல்வி கற்கின்ற சூழ்நிலை ஏற்படும்.
அப்போதுதான் ஆசிரியர்களும் பாடங்களை சிறப்பாகச் சொல்லித்
தருவதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்கும். அந்த வகையிலே
கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும். மேல்நிலைப் பள்ளி
களுக்கும் கட்டிடங்கள் இல்லை. ஆய்வுக்கூடங்களை மட்டும்
கட்டிக் கொடுக்கிறோம். அந்த ஆய்வுக்கூடங்களுக்குப்
பதிலாக பள்ளிக் கட்டிடங்களை அவசியம் கட்டித் தரவேண்டு
மென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 8

டிருக்கிறேன். முதியோர் கல்வி, முறை சாராக் கல்வி என்றும்
ஏற்படுத்தி அதன் மூலமாக பி.ஏ., பி.எட்., படித்தவர்களை அங்கே
மேற்பார்வையாளர்களாக நியமனம் செய்திருக்கிறோம். அவர்
களுக்கு நாம் என்ன சம்பளம் கொடுக்கிறோம் என்று சொன்
னால் 600 பிளஸ் 75 என்று கன்சாலிடேட்டட் பே-யாக கொடுக்கி
றோம். அவர்கள் முறையாகக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு,
பி.எட். படித்துவிட்டு வந்தவர்கள். எட்டு ஆண்டுக் காலமாக
அந்தப் பணியைச் செய்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான
சலுகையும் இல்லை. அவர்கள் இதிலே வேலைவாய்ப்பைப்
பெற்றவுடனேயே வேலைவாய்ப்பு அலுவலகத்திலே உள்ள அவர்
களுடைய பதிவு எண்ணையும் நீக்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு
அங்கேயும் வேலை கொடுக்க முடியாத ஒரு அவல நிலை. இந்த
இடத்திலேயும் பி.எட் படித்து, முறையாகப் படித்த கல்விக்கு,
அவர்களுக்குத் தேர்வு நிலை கிடைக்காத நிலை இருக்கிறது.
ஆகவே இவர்களுக்கும் மற்ற பி.எட். படித்த ஆசிரியர்களுக்கு
கொடுக்கிற அடிப்படைச் சம்பளத்தைக் கொடுத்து, ஏ.ஈ.ஓ.,
டி.ஈ.ஓ. போன்றவர்களை பணி மாற்றம் செய்வதுபோல இவர்
களையும் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போட்டுவிட்டு உயர்நிலைப்
பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும், முதியோர்,
வயது வந்தோர், முறைசாராக் கல்விகளில் போடுவதற்கான
வாய்ப்பை நிச்சயம் உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்
திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் உயர்
நிலைப் பள்ளிகள் இல்லாமல் பல இடங்கள் இருக்கின்றன.
எப்போது அந்தப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நிலை
யிலே இருந்தும்கூட, இதுநாள் வரையிலும் அவைகளுக்கு
துணைக் கட்டிடங்களோ, அல்லது கட்டிடங்களோ இல்லாமல்
இருக்கிற பள்ளிகள், கொப்பூர், மணவாளநகர், ஆற்காடுகுப்பம்,
பேரம்பாக்கம் போன்ற இடங்களில் இருக்கின்றன. திருத்தணி
பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருத்தணி ஆண்கள் உயர்நிலைப்
பள்ளி இவைகளுக்கும் கட்டிட வசதியில்லை. இவைகளுக்குக்
கட்டிட வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு,
அதுமட்டுமல்லாமல், இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டுச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளிலே
பணியாற்றுகின்ற ஆசிரியர்களை பணிமாற்றம் செய்வதிலே சற்று



1987 ஏப்ரல் 8] [திரு. இரா. சண்முகம்]

கவனமாக இருக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்று
கின்ற ஆசிரியர்கள் பாடங்களை நடத்திவிட்டு, 6 மாதங்களுக்குப்
பின்னாலே அந்த ஆசிரியர் ரெக்கொஸ்ட் கேட்கிறார் என்ற கார
ணத்தினாலே, சென்னைக்கு அருகாமையிலே கேட்கிறார் என்ற
காரணத்திற்காக அவரை அங்கேயிருந்து பணி மாற்றம் செய்து
விடுகிறார்கள். பணிமாற்றம் செய்வதற்கு முன்னாலே அந்த
இடத்திலே ஒரு ஆசிரியரைப் போட்டுவிட்டுச் செய்தால் பரவா
யில்லை; அப்படி இல்லாமல் ஆசிரியரை பணிமாற்றம் செய்து
விட்டு, அந்த இடத்தை வேகண்ட்டாக, காலி இடமாக வைத்து
விட்டால் பிளஸ் 2 படிக்கும் மாணவர்கள் தேர்வு எப்படி எழுது
வார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே
ஜாயிண்ட் டைரக்டர்களாக இருப்பவர்கள் இதுபோன்று ஆயிரக்
கணக்கான மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். நானேகூட
பலமுறை நேரடியாகச் சென்று கேட்டேன் வேறு ஒருவரை
அந்த இடத்திலே நீங்கள் போட்டுவிட்டு மாற்றம் செய்யவேண்டு
மென்று. நாங்கள் கேட்கும்போது சொல்கிறார்கள், ஆண்டுக்
கடைசியிலே மாறுதல் செய்யமாட்டோம் என்று. ஆனால் அவர்
களாகப் போடுகிறபோது அந்தச் சட்டம் எங்கே போய்விடுகிறது
என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, அவர்களை
மாற்றுகிறபோது வேறு ஆசிரியர்களை அந்தந்த இடங்களிலே
போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டு முதலிலே
இம்மாதிரியான மாற்றங்களை அனுமதிக்கலாம். ஆண்டு இறுதி
யிலே தயவுசெய்து இந்த மாதிரியான மாறுதல்களை அனுமதிக்க
வேண்டாம் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, டி.ஈ.ஓ. அலுவலகங்களைப்பற்றி ஒருசில
வார்த்தை சொல்ல விரும்புகிறேன். செங்கை மாவட்டத்திலே 4
டி.ஈ.ஓ. அலுவலகங்கள் இருக்கின்றன. அதிலே இரண்டிலே
தொலைபேசி வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். செங்கல்பட்
டிலே இருப்பதற்கும், திருவள்ளூரிலே இருப்பதற்கும் தொலை
பேசி வசதி இல்லை. என்ன காரணத்திற்காக இப்படி ஒரு மாறு
பாடு? டி.ஈ.ஓ. அலுவலகத்தில் சிலருக்குக் கொடுப்பதும், சில
ருக்கு இல்லாமல் இருப்பதற்கும் காரணம் என்ன என்பதை நான்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 8

கடைசியாக, கடலூர் கல்வி மாவட்டம் பெரியதாக இருக்கிற காரணத்தால், அருமைச் சகோதரர் அவர்கள் இங்கே சொன் னார்கள். அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து டி.ஈ.ஓ. அலுவலகம் ஒன்றைக் கல்லூர் கல்வி மாவட்டத்திற்கு என்று சிதம் பரத்தில் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கு இந்தக் கல்வி மானி யத்திற்கு 587 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது மொத்த பட்ஜெட் தொகையில் 21 சதவீதம் என்று பெருமைப்பட சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே ஆதாரத்தோடு சொல்லுவது என்று சொன்னால் இங்கே பல்வேறு பள்ளிகள் மரத்தடியின் நிழலில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. வெளி யிடத்தில், ஓப்பன் ஸ்பேசில் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சேர் இல்லை, பெஞ்சு இல்லை, இது போன்ற அடிப்படை வசதிகள் இல்லை என்று சொல்லி ஆடிட்டர் ரிப்போர்ட் பக்கம் 44-ல் விரிவாக Lack of essential facilities என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது எல்லாம் இவ்வளவு தொகை ஒதுக்கிய பிறகு கூட இந்த Lack of essential facilities என்று ஒவ்வொரு மாவட்ட ரீதியாக அவர்கள் சோதனை செய்து புள்ளிவிவரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அப்படியானால் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகை பயன்படுத்தப்படுகின்றதா அல்லது ஒதுக்கப் பட்ட தொகை * * என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதுபோலவே இப்போது கல்வி பொதுப் பட்டியலில் இருக் கிறது. பொதுப் பட்டியலில் இருக்கிறது என்றால் அதை மத்திய அரசு அவர்களுடைய கையில் வைத்துக்கொண்டு இந்தியைத் திணிப்பதற்கு . . . .

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. சா. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது ஒதுக்கப்படுகிற தொகை * * அல்லது அது என்ன ஆயிற்று என்று கேட்கிறார். இரு பொருள்படும்படி சொல்கிறார். ஆதாரம் இன்றி சொல்லுவது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம். இறுதியில் நான் பதில் சொல்லும்போது விளக்கமாகப் பதில் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த * * என்ற வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட போது கூட கல்வி மாகாணப் பட்டியலில் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சிக்காக கடைசிவரையில் இருந்து அதை மரண சாசனமாகச் சொல்லிவிட்டுப் போனார்கள். இந்த அரசு மாநில சுயாட்சியில் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்கிறது. ஆகவே கல்வி பொதுப் பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு வரவேண்டும். ஏன் என்று கேட்டால் கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதால் இந்தி போன்ற காரியங்களைத் திணிப்பதற்கு அதை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றை நான் சொல்வேன், நம்முடைய மத்திய அரசு மாதிரிப் பள்ளிகளை, நவோதயா பள்ளிகளைக் கொண்டுவந்து இங்கே இந்தியைத் திணிக்கிற காரியங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் இன்னும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன், மாவட்டந்தோறும் 2 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு ஒரு புதிய கிளாஸ், ஒரு புதிய வர்க் கத்தை ஏற்படுத்த இருக்கிறார்களாம். ஏற்கனவே, பல்வேறு கிராமப்புறங்களில், நகர்ப்புறங்களில் சரியான பள்ளிக்கூடங்கள் இல்லை, சரியான வசதிகள் இல்லை. பேசிக் அமினிடீஸ் இல்லை. அவைகள் அப்படியே . . .

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 ஏப்ரல் 8

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அவைக்கு தவறான தகவலைச் சொல்கிறார். அதனால் தான் தலையிடுகிறேன். இல்லை என்றால் தலையிட மாட்டேன். மத்திய அரசினர் நவோதயா பள்ளிகளை இங்கே கொண்டு வந்து இந்தியைத் திணிக்கிறார்கள் என்று சொல்லுகிறார். இங்கே தமிழகத்தில் நவோதயா பள்ளிகள் திறக்கப்படவில்லை. மத்திய அரசின் நவோதயா பள்ளிகள் இங்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எழுந்து ஆனதால்தான் நான் திரு. சித்தன் அவர்களைப் பேச அனுமதித்தேன். இல்லை என்றால் நான் அனுமதித்து இருக்கமாட்டேன். ஆகவே திரு. சித்தன் அவர்களே உங்கள் கட்சியின் சார்பில் பேசும்போது திரு. ரகுமான்கான் பேச்சுக்குப் பதில் சொல்லச் சொல்லுங்கள். இப்படி குறுக்கிட வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். நவோதயா பள்ளிகளைப் பற்றிய குறிப்பு நம்முடைய கல்வி மானியத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. மேற்கு வங்கத்தில் இருக்கக்கூடிய முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்கள் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். இந்த நவோதயா பள்ளி என்ற தேசிய கொள்கை இருக்கிறது அல்லவா அந்த கொள்கையின் அடிப்படையில் மாவட்டந்தோறும் 2 கோடி ரூபாய் ஒதுக்குவது என்றும், அதிலே அவர்களுக்கு இலவச ஆஸ்டல், மற்ற பெனிபிட்டில் கொடுப்பது என்றும் ஒரு புதிய கிளாசை, ஒரு புதிய துறையை, ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்குகிறார்களாம். ஏற்கனவே ஒரு வர்க்கம் சாதாரண ஏழை எளிய பிள்ளைகள், வசதி இல்லாத கிராமப்புற பிள்ளைகளாக இருக்கிறார்கள். இப்போது இந்த 2-வது வர்க்கத்தை உருவாக்குவது வரவேற்கத்தக்கது அல்ல. அதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

அதேபோல் இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 8-வது வகுப்பிலிருந்து இந்தியும், ஆங்கிலமும் பயிற்று மொழியாக ஆகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.



1987 ஏப்ரல் 8]

## ஆவணக் காப்பக நூலகம்.

7. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந் நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள் நீதி மன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலைமதிப்பற்ற நூற் தொகுப்புகள் இந் நூலகத்தில் உள்ளன. 1867-ம் ஆண்டு ''அச்சகங்கள் மற்றும் புத்தக பதிவுச் சட்டம்'' அமுலுக்கு வந்த காலத்திலிருந்து இம்மாநிலத்தில் வெளியாகியுள்ள அனைத்து மொழி நூல்களுக்கும் ஒவ்வொரு படி இந் நூலகத்தில் உள்ளது.

## IX. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1987—88-ல் ரூ. 22 கோடி (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, மற்றும் அவற்றில் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1986—87-ல் இருந்தபடி), ஆகியவை வருமாறு :—

| கல்வி நிறுவனங்கள். | எண்ணிக்கை. | | ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பொறியியல் கல்லூரிகள். | 31 மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரி (தமிழ் நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு). | பட்ட வகுப்புகள் | |
| | | (i) முழு நேரம் | 6,067 |
| | | (ii) பகுதி நேரம் | 640 |
| | | பட்ட மேற்படிப்பு | |
| | | (i) முழு நேரம் | 276 |
| | | (ii) பகுதி நேரம் | 56 |
| | | பட்ட மேற்படிப்புப் பட்டயம்— | |
| | | (i) முழு நேரம் | 21 |
| | | (ii) பகுதி நேரம் | 5 |

[1987 ஏப்ரல் 8

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்புப் பட்டயப் படிப்பு நிறுவனங்கள் (கலை, கைத் தொழில் மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிகள் 3 உட்பட). | 135 | பட்டய வகுப்புகள்—<br>(i) முழு நேரம்<br>(ii) பகுதி நேரம்<br><br>பட்டய மேற்படிப்பு—<br>(i) முழு நேரம்<br>(ii) பகுதி நேரம்<br><br>சான்றிதழ் வகுப்பு—<br>(i) முழு நேரம்<br>(ii) பகுதி நேரம் | <br>23,150<br>1,315<br><br><br>295<br>90<br><br><br>110<br>230 |
| தொழில் நுட்ப மேல்நிலைப் பள்ளி | 14 | முழு நேரம் | 840 |

2. கடந்த ஏழு ஆண்டுகளில் 20 புதிய பல்தொழில் பயில கங்கள் (மகளிருக்கென 13 உட்பட) திறக்கப்பட்டதால் பல் தொழில் பயிலகங்களில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாண வர் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஷிப்டு முறையும் புகுத்தப்பட்டு 1983-84-க்குள் ஏழு பல் தொழில் பயிலகங்களுக்கு விரிவாக்கப்பட்டது.

சுயநிதி (Self Financing) தொழில் கல்வி நிறுவனங்கள் :

3. பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங் களில் பெருமளவில் சேர விரும்பும் மாணவ, மாணவியர் எண் ணிக்கையைக் கருத்தில் கொண்டும், அத்தேவையை ஈடு செய் யும் அளவுக்கு அரசு அல்லது அரசு மானியம் பெறும் தொழிற் கல்வி நிறுவனங்களைத் தொடங்கி நடத்த அரசு நிதி நிலை இடம் தராததாலும், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகா ராஷ்டிரம் போன்ற மாநிலங்கள் ஏற்கனவே சுயநிதி தொழிற் கல்வி நிறுவனங்களைத் தொடங்க அனுமதித்துள்ளன. உதாரண மாகர்நாடகத்தில் 1983—84-லேயே 43 பொறியியல் கல்லூரிகள் இருந்தன. அவற்றில் பயின்ற மாணவர்களின் மொத்த எண் ணிக்கை 28,000. (தமிழகத்தில் 4.84 கோடி மக்கள் தொகை. கர்நாடகத்தில் 3.71 கோடி மக்கள் தொகை). பொறியியல் கல்வியானது அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்களைத் தருவதோடு மட்டுமின்றி சுயமாக தொழில் தொடங்கி நடத்தவும் வகை செய்வதாகும். இந்தச் சூழ்நிலையில் அரசுக்கு தொடராச் செலவோ, தொடரும் செலவோ ஒரு காலத்திலும் ஏற்படாத வகையில், தனியார் தொழிற் கல்வி நிறுவனங்களைத் தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனு மதிப்பதற்காகத் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தத் தனியார் தொழிற் கல்வி நிறுவனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான்



1987 ஏப்ரல் 8]

அத்தகைய அனுமதி வழங்கப்படுகிறது. அந்நிபந்தனைகளில் முக்கியமான சில வருமாறு : போதுமான நிலத்தைத் தனியார் நிருவாகம் தரவேண்டும்; ரொக்க வைப்புத் தொகையாக பல் தொழில் பயிலகமானால் ரூ.10 இலட்சமும், பொறியியல் கல்லூரி யானால் ரூ. 30 இலட்சமும் ஏற்படுத்த வேண்டும் ; அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்; சேரும் மாணவர்களிடம் எத்தகைய தலைக் கட்டண மும் ( Capitation Fee ) வசூலிக்கக்கூடாது; நிபந்தனைகள் மீறப்பட்டால் தொழிற் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தரவேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்தாண் டுகளில் 77 தனியார் பாலிடெக்னிக்குகளும், கடந்த மூன்றாண்டு களில் 24 பொறியியற் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. (இவற்றில் * 3 பாலிடெக்னிக்குகள் இன்னும் செயல்படத் தொடங்கவில்லை).

4. இவ்வாறு கடந்த நான்கு ஆண்டுகளில் அதிக அளவில் பாலிடெக்னிக்குகளும், பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப் பெற்றதால் கணிசமான அளவில் கிராமப்புற ஏழை மாணவர், மாணவியரில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் தொழில் நுட் பக் கல்வியை பட்ட நிலையிலோ, பட்டய நிலையிலோ பயில வழி கிட்டியுள்ளது. 1986—87-ல் 950-க்கு மேற்பட்ட மாணவி கள் பொறியியற் கல்லூரிகளிலும், 1,600-க்கு மேற்பட்ட மாண விகள் பாலிடெக்னிக்குகளிலும் சேர வாய்ப்பு கிட்டியுள்ளது. தொழில் நுட்ப பயிலகங்களில் ''மின் கணிப்பியல்'' 1985—86 லிருந்து ஒரு கட்டாய பாடமாக வைக்கப்பட்டது. மேலும், எல்லா அரசு மற்றும் உதவிபெறும் பாலிடெக்னிக்குகளுக்கும், மின்கணிப்புப் பொறி வசதி செய்து தரப்பட்டுள்ளது. மின் கணிப்பு அறிவியல் மற்றும் பொறியியல் குறித்த மூன்றாண்டுப் பட்டயப் படிப்பு 1985—86-ல் இருந்து 3 பாலிடெக்னிக்குகளில் தொடங்கப்பட்டுள்ளது. சில பொறியியல் கல்லூரிகளில் மின் கணிப்புப் பாடம், பட்டப்படிப்பு நிலையில் கற்றுத்தரப்பட்டு வருகிறது. இதனை பட்ட மேற்படிப்பிலும் புகுத்துவதற்கு திட்டம் வகுக்கப்படுகிறது. வாலாயமான பொறியியற் பாடப் பிரிவுகளைத் தவிர பல்வகையான புதிய பாடப் பிரிவுகளும் இப்பயிலகங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

5. பொறியியல் கல்லூரிகள்/பல்தொழில் பயிலகங்கள் ஆகிய வற்றின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(i) சுயநிதி பயிலகங்களில் செய்யப்படும் வசதிகளை மதிப் பிடுவதற்காக தொழிற் கல்வி இயக்குநர் அவ்வப்பொழுது ஆய்வு கள் நடத்துகிறார். பாட போதனை வசதிகள் அளிப்பது குறித்து பயிலக நிருவாகங்களை அவ்வப்போது அழைத்து விவாதித்து கண்காணித்து வருகிறார்.

[1987 ஏப்ரல் 8

(ii) (அ) பல்கலைக் கழகங்களின் ஆய்வுக் குழுக்கள் :

பயிலகங்களை அந்தந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதற்கு அனுமதி வழங்கும் கட்டத்தில் அமைந்துள்ள வசதிகளை மதிப்பிடும் பொருட்டு பல்கலைக் கழகங்கள் ஆய்வுக் குழுக்களை அமைக்கின்றன. நிருவாகங்கள் செய்துள்ள வசதிகளின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் பல்கலைக் கழகங்கள் தற்காலிக இணைப்புக்கு அனுமதி வழங்குகின்றன.

(ஆ) தொழிற் கல்வி இயக்குநரின் ஆய்வுக் குழுக்கள் :

அரசு மற்றும் மானியம் பெறும் தனியார் பல்தொழில் பயிலக முதல்வர்களைக் கொண்ட ஆய்வுக் குழுக்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் சுயநிதி பயிலகங்களை ஆய்வு செய்து அங்குள்ள வசதிகள் குறித்து அறிக்கைகள் தருவதோடு, ஆய்வுக் கூடங்கள் மற்றும் தொழிற் கூடங்கள் அமைப்பது ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்குகின்றன.

(iii) ஆய்வுக் கழகம்/குழுக்கள் :

இம்மாநிலத்திலுள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகள்/பல்தொழில் பயிலகங்கள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டு அவை செயல்படும் விதத்தை ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக தொழிற் கல்வி இயக்குநர் தலைமையில் ஒரு ஆய்வுக் கழகம்/ஆய்வுக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

6. இவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதின் விளைவாக அரசு மானியம் பெறும் தனியார் பயிலகங்களுக்குச் சமமாக சில சுயநிதி பயிலகங்களும் நல்ல வசதிகளைச் செய்துள்ளன. மேலும் தொழிற் கல்வித் தேர்வில் சுயநிதி பயிலகங்கள் சிலவற்றின் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் நன்றாக உள்ளது.

7. நாகப்பட்டினம் வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக்கில் இயங்கிவரும் ஏ.டி.ஜே. தருமாம்பாள் பெண்கள் பிரிவு ஒரு முழுநேர பெண்கள் பாலிடெக்னிக்காக 1986–87-லிருந்து மாற்றப்பட்டது. அதில் சேர்க்கப்படும் மாணவியர் எண்ணிக்கை 120 ஆகும். சேலம் தியாகராசர் பல்தொழில் பயிலகத்திலும் பொள்ளாச்சி நாச்சிமுத்து பொறியியல் கல்லூரியிலும் 1987–88-லிருந்து '' மின்னணுவியல் மற்றும் பொறியியலில் '' ஒரு புதிய பட்டயப் படிப்புப் பிரிவு தொடங்கப்படும். மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் 1987–88-லிருந்து '' மின்னணுவியல் மற்றும் செயற்பாடு '' குறித்த பி.இ. பட்டப் படிப்பு தொடங்கப்படவிருக்கிறது. சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு 1987–88-ல் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 8]

8. பாடத் திட்டத்தில் '' மின்னணுவியல் தொழில் நுட்பம் '' ஒரு கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் மின்னணுப் பொறிகள் உள்ளன. பணியாளர்களின் தகுதி, பணி முதலிய விவரங்கள் மற்றும் துறை சம்பந்தப்பட்ட பல்வேறு புள்ளிவிவரங்கள் யாவும் மின்னணுப் பொறியியல் பதிவு செய்து தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

தேர்வுப் பணிக்கு மின்னணுப் பொறியைப் பயன்படுத்துதல் :

9. பல்வேறு பட்டயத் தேர்வுகளையும் (அந்தந்த பருவமுறை இறுதியில்) எழுதும் பல்தொழில் பயிலக மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே அதிகரித்துள்ள பணிச் சுமையை நன்முறையில் சமாளிக்கும் நோக்குடன் தேர்வாளர் பட்டியல், தேர்வு, அனுமதிச் சீட்டு, மதிப்பெண் அட்டை, பட்டயச் சான்றிதழ் முதலியவற்றைத் தயாரித்தல், தேர்வு முடிவினை வெளியிடுதல் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்னணுப் பொறி பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1986–87-லிருந்து பட்டயத் தேர்வுக்கான விடைத் தாள்களை மதிப்பீடு செய்ய மையமதிப்பீட்டு முறை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிட இயல்கிறது. மதிப்பீடு சீராகவும், துல்லியமாகவும் இருப்பதுடன் அஞ்சல் செலவினமும் குறைந்துள்ளது. விடைத்தாள் திருத்துவோர்களுக்கு மதிப்பீட்டு மையத்திலேயே மதிப்பூதியம் தரப்படுகிறது. ஒவ்வொரு பாடத்திற்கும் விடைத்தாள் திருத்தும் மையம் தனித் தனியே நிர்ணயிக்கப்பட்டு மதிப்பெண்களைப் பட்டியலிட அம்மையங்களில் மின்கணிப்புப் பொறிகளும் பயன்படுத்தப்படுவதால் தேர்வு முடிவுகளை துரிதமாக வெளியிட முடிகிறது.

10. மேலும் பல்வேறு தேர்வுகளில் பாட வாரியாகவும், பாலிடெக்னிக் வாரியாகவும், மாணவ, மாணவியர் மதிப்பெண் விவரங்களைப் பட்டியல் செய்து மாநில சராசரியோடு ஒப்பிட்டு மாணவர்களின் திறன் மதிப்பீட்டு அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் எந்தெந்த கல்வி நிலையங்களில் எந்தெந்த பாடங்களில் மாணவர்கள் குறைவான மதிப்பெண்கள் பெற்றிருக்கின்றனர் என்பதைப் பார்த்து அதற்கான காரணங்களை ஆய்வு செய்து பரிகாரங்களை மேற்கொள்ள இயல்கிறது.

வணிக வியல் பாடங்களில் தேர்வுகள் :

11. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு, வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத்தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

அண்ணா பல்கலைக் கழகம் :

12. இப்பல்கலைக் கழக கல்லூரிகளில் 1985–86-ல் படித்து வந்த மொத்த மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| பயிலகம். | பட்டப்படிப்பு. | | பட்ட மேற்படிப்பு. | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். | முழு நேரம். | பகுதி நேரம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கிண்டி பொறியியற் கல்லூரி .. .. | 1,734 | 792 | 619 | 182 | 3,327 |
| சென்னை தொழில் நுட்பவியல் நிறுவனம் | 490 | .. | 116 | 75 | 681 |
| அழகப்பா தொழில் நுட்பவியல் கல்லூரி .. | 440 | .. | 80 | 39 | 559 |
| கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புப் பள்ளி | 119 | .. | 42 | 4 | 165 |
| | 2,783 | 792 | 857 | 300 | 4,732 |

மொத்த மாணவர் எண்ணிக்கை 4,732-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 650 பேர்களும், வெளிநாட்டினர் 4 பேர்களும், மகளிர் 649 பேர்களும் அடங்குவர்.

13. 1985–86-ல் புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,383 ஆகும். இதில் இளநிலைப் பட்ட வகுப்பு களில் சேர்ந்தவர்களில் 9.7 விழுக்காட்டினரும், முதுநிலைப் பட்ட வகுப்புகளில் சேர்ந்தவர்களில் 8.7 விழுக்காட்டினரும், எம்.ஃபில். மற்றும் பிஎச்.டி. சேர்ந்தவர்களில் 29 விழுக்காட்டினரும் மகளிர். ஆவர். இளநிலை பட்ட வகுப்பில் சேர்ந்தவர்களில் 17 விழுக் காட்டினரும், முதுநிலைப் பட்ட வகுப்பில் சேர்ந்தவர்களில் 6.5 விழுக்காட்டினரும், எம்.ஃபில். மற்றும் பிஎச்.டி.ல் சேர்ந்தவர் களில் 3.5 விழுக்காட்டினரும் ஆதி திராவிடர் பழங்குடியினரைச் சார்ந்தவர்களாக இருந்தனர்.

14. இப்பல்கலைக் கழகத்தில் 1985–86-ல் பிஎச்.டி.க்காக பதிவு செய்த ஆராய்ச்சி மாணவர்களின் எண்ணிக்கை 59 ஆகும். ஐந்து பேர் சமர்ப்பித்த ஆய்வுகளை பிஎச்.டி. பட்டம் வழங்கு வதற்காக பல்கலைக் கழகம் ஏற்றது. அவ்வாண்டில் பல்கலைக்



கழகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் எழுதிய 250-க்கும் மேலான ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டன. அல்லது மாநாடுகள், கருத்தரங்குகள், சூழியங்கள் ஆகியவற்றில் படிக்கப்பட்டன. பல்வேறு வெளி நிறுவனங்கள் வேண்டுகோளின்படி அவற்றின் சார்பாக மொத்தம் ரூ. 53 இலட்சங்கள் மதிப்புள்ள ஆராய்ச்சிப் பணிகள் 22-ஐ பல்கலைக் கழகம் நிறைவேற்றிக் கொடுத்தது.

15. 1985–86 நிதியாண்டில் இப்பல்கலைக் கழகம் மாநில மைய அரசுகளிடமும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமும் பெற்ற மானியங்களின் விவரம் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தமிழ்நாடு அரசு .. .. .. .. | 372 |
| பல்கலைக் கழக மானியக்குழு .. .. | 111 |
| மைய அரசு .. .. .. .. | 75 |

1987–88 வரவு-செலவுத் திட்டத்தில் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மானியம் தர (திட்ட மானியம் ரூ. 20 இலட்சம் உட்பட) ரூ. 250 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

16. திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு மானியமாக ரூ. 66 இலட்சமும், சென்னை கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ.5 இலட்சமும் 1987–88-ல் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## X. தமிழ் வளர்ச்சி—பண்பாடு.

மொழி வளர்ச்சியும் கலை வளர்ச்சியும் நாட்டின் பல்வேறு வளர்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. மொழி வளர்ச்சியோடு, கலை வளர்ச்சியும், இலக்கியவெழுச்சியும் எப்போதும் இணைந்தே ஊட்டம் பெறும். கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைப் படைத்தல், வளர்த்தல், காத்தல், கற்பித்தல், வழங்குதல் பரப்புதல் ஆகிய நிலைகளில் மொழி, கலை பண்பாட்டின் அமைப்புகளும் பிரிவுகளும் ஒருங்கிணைந்து தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கட்டுக்கோப்பில் செயற்படுகின்றன. தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப் பழங்கலை இயக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தொல்பொருளாய்வுத்துறை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகிய துறைகளின் பணிகளை அவ்வப்போது ஆய்ந்து திறனிய மதிப்பிடவும், வழிமுறைகளை வகுத்துக் காட்டவும் அவ்வப்போது கருத்துரை வழங்கவும் தமிழ் வளர்ச்சி உயர்நிலைத் தமியர் குழு தமிழக அரசால் அமைக்கப்பட்டது.

2. இதுகாறும் தருமபுரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், சேலம், ஈரோடு, ஆகிய 5 மாவட்டத் தலைநகரில் தமிழர் குழுவும் தமிழ் வளர்ச்சித் துறையும் ஆட்சிமொழிக் கருத்தரங்கை நடத்தியுள்ளன.

### (i) தமிழ் வளர்ச்சித் துறை.

ஆட்சியிலும், நடைமுறையிலும் பொது வழக்குத் துறைகளிலும் தமிழ் மொழியில் பயன்பாட்டை விரிவாக்கவும் மேம்படுத்தவும் தேவையான பணிகளை மேற்கொள்வது இத்துறையின் நோக்கமாகும். மொழியாக்கத்தின் ஏனைய பணிகளும் இத்துறையின்பாற்படும்.

**ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :**

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றங் குறித்துத் துறைத் தலைமையலுவலகங்கள், மாவட்டாட்சியர் அலுவலகங்களைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டச் சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்து வருகின்றனர். ஆட்சிமொழித் திட்டத்தை அலுவலகங்களில் முழு அளவில் நிறைவேற்ற 1980-இல் முனைப்புத் திட்டம் தொடங்கப் பெற்றுச் செயன்மையில் உள்ளது. துறைத் தலைமையலுவலகங்களிலும், மாவட்டாட்சியர் அலுவலகங்களிலும், சார்நிலை அலுவலகங்களிலும் ஆட்சிமொழித் திட்டம் செயற்படுத்தும் போக்கினை வலுப்படுத்தவும் தலைமைச் செயலகத்திலும் முழுமையான முறையில் நிறைவேற்றவும் அரசு ஆணையிட்டுள்ளது. தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்களும் இத்திட்டத்தை மேற்கொள்ள ஆணை வகை செய்கிறது.

2. ஆட்சிமொழித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்குத் தமிழ்த் தட்டச்சு பொறிகள் வழங்கும் செயற்பாடு முதலிடம் பெறுகிறது. ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளுக்கு மாற்றாகத் தமிழ்த் தட்டச்சு பொறிகளை அலுவலகங்களுக்கு அளிப்பதற்கு இத்துறை ஒப்புதல் வழங்குகிறது. 1986-இல் மட்டும் [illegible] தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டன. இதுவரை வழங்கிய மொத்தத் தமிழ்த் தட்டச்சுகள் 2,527 ஆகும்.

**ஆட்சிச் சொல்லகராதி :**

3. ஆட்சிச் சொல்லகராதிக்கு இதுவரை நான்கு பதிப்புகள் வந்தன. அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. ஐந்தாம் பதிப்பினைத் தொகுக்கும் பணி நடப்பிலுள்ளது. ஒவ்வொரு துறைக்கும் உரிய கலைச் சொற்களைத் தனித்தனியே தொகுத்து சிறப்புச் சொல்லகராதிகள் வெளியிடப் பெறுகின்றன. 1986–87-இல் பதினொரு துறைகளுக்குரிய அகராதிகள் வெளிவந்தன. இதுகாறும் 70 (எழுபது) துறை அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன.





**தமிழாக்க நூல் வெளியீடு :**

4. 1986-இல் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் காவல் துறையின் குற்றப் புலனாய்வு நூலின் தமிழாக்கப் பதிப்பும், மாநிலத் துறைமுகத் துறையின் 1955-ஆம் ஆண்டைய இந்தியத் துறைமுக நல்வாழ்வு விதித் தொகுப்பும் வெளியிடப்பட்டன.

**சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம் :**

5. சிறந்த நூல் வரைவை ஊக்கும் வகையில் 21 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 1985-இல் வெளிவந்த சிறந்த நூல்களுக்கு 15–1–1987 ஆம் நாளில், திருவள்ளுவர் திருநாளில் பரிசுகள் வழங்கப்பட்டன. 1987–88-லும் இத்திட்டத்திற்கு நிதியொதுக்கப்பட்டுள்ளது.

**நூற்பதிப்புக்கு நிதியுதவித் திட்டம் :**

6. உயர்ந்த நூல்களை வெளியிட நிதியுதவி செய்வதென்னும் திட்டப்படி, 1986–87-இல் 27 நூல்களை வெளியிட அரசு நிதி உதவி வழங்கியது. இத் திட்டம் 1987–88-லும் தொடரும்.

**தமிழிருக்கை நிறுவுகை—தமிழாராய்ச்சிப் பணிகள்—பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல்—நிதியுதவித் திட்டம் :**

7. அயல் மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கை நிறுவவும் தமிழ்ப் பிரிவு பட்டய வகுப்புத் தொடங்கவும் நிதியுதவி வழங்கப் பெறுகிறது. தமிழ்ப் பணியாற்றும் நிறுவனங்களுக்கும் அரசால் நிதியளிக்கப்படுகிறது. ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு மன்றச் சார்பில் வெளிவரும் கூரியர், பன்னாட்டுத் திராவிட, மொழியியற் பள்ளி, ஆசியவியல் ஆய்வு நிறுவனம் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகம், உசுமானியப் பல்கலைக் கழகம், கிருட்டிணதேவராயர் பல்கலைக் கழகம் (அனந்தப்பூர்), பெங்களூர் தமிழ்ச் சங்கம் முதலியன நிதியுதவி பெறுவன. புது தில்லி தமிழ்ச் சங்கத்தின் அரங்க அமைப்புக்கென்க் கட்டட நிதியுதவியாக ரூ. 5 இலட்சம் இவ்வாண்டில் வழங்கப்பட்டது. மேலும், அயல் மாநிலங்களிலுள்ள சில பல்கலைக் கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இத்திட்டத்தின் வழியாக நிதி வழங்கக் கருதுகிறோம்.

**தமிழ் நூல் விவர அட்டவணைத் திட்டம் :**

8. தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்பும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இத்திட்டப்படி இதுவரையில் 22 தொகை நூல்கள் வெளி

வந்துள்ளன. மேலும் வெளியிடும் நிலையில் இரு நூல்கள் உள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியான நூல்களுக்கு விளக்கக் குறிப்பு எழுதப்படுகின்றது. இனி வருவனவற்றை உருளச்சு வகையில் வெளியிட முடிவு செய்யப் பட்டுள்ளது.

**தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம் :**

9. அகவை முதிர்ந்த தமிழறிஞர் முப்பதின்மர், ஆண்டு தோறும் இத்திட்டப்படி நிதியுதவி பெறுவர். நிதியுத விக்குத் தெரிவு பெறும் அனைவரும் திங்கள்தோறும் ரூ. 250 பெறுகின்றனர். இதுகாறும் 274 பெருமக்கள் பயனடைந்துள்ள னர்.

**சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு :**

10. தமிழிலக்கியங்களைப் பிறமொழிகளிலும் பிறமொழி யிலக்கியங்களைத் தமிழிலும் பெயர்த்து வெளியிட வகை செய்கிறது. இத்திட்டப்படி இதுவரை எட்டு நூல்கள் வெளிப்போந்தன. இத்திட்டம் தொடர்பாகப் புது வல்லுநர் குழு அமைக்கப் பெறுகிறது.

**வரலாறு வரையும் திட்டம் :**

11. முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஆறு தொகுதி களில் வெளியிட முடிவெடுக்கப்பட்டது இதுவரை 2 தொகுதிகள் எழுதப்பெற்று வெளியாயின. மூன்றாம் தொகுதியாகப் பல்லவர் —பாண்டியர் வரலாறு விரைவில் அச்சேறும். இத்திட்டத்தைச் சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையிடம் ஒப்படைக்க அரசு கருதுகிறது.

**விழாக்களும், விருதுகளும் :**

12. திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் அரசு விழா வாகத் தமிழ் வளர்ச்சித் துறை நடத்தி வருகிறது. திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களை எழுதும் அறிஞர்களுக்குத் திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது. 1986 ஆம் ஆண்டிற்குரிய விருது முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர் களுக்கு வழங்கப்பெற்றது.

13. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் அண்ணா விருதும் திரு. வி. க. பிறந்த நாளில் திரு.வி.க. விருதும் வழங்கப் படுகின்றன.

14. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளில் புகழ்வாய்ந்த கவிஞருக்கு விருது வழங்கப் பெறுகிறது. 1986 ஆம் ஆண்டைய விருதினைக் கவிஞர் மு. மேத்தா பெற்றார்.



15. தஞ்சை மாவட்டம் திருவழுந்தூரில் ஆண்டுதோறும் கம்பர் விழா அரசு விழாவாக நடைபெறுகிறது. கொங்குநாட்டுப் பகுதியில் இளங்கோவடிகள் விழா கொண்டாட அரசு கருதி யுள்ளது.

**நினைகல் நிறுவுதல் :**

16. சங்கச் சான்றோர் பெருமையைப் போற்றிப் பரப்பும் வண்ணம் நினைகல் நிறுவு திட்டம் தோற்றப்பட்டது. சங்க காலச் சான்றோர்களில் 200 பேர் பிறந்த இடங்கள் இதுகாறும் தெரிய வந்துள்ளன. இவ்விடங்களில் அரசின் சார்பில் நினை கல் நிறுவப்பெறும். நினைகல்லில் புலவர் தம் பாடல்கள் பொறிக்கப்பெறும். இத்திட்டம் படிப்படியாக ஐந்தாண்டுகளில் நிறைவெய்தும். மதுரையில் பிறந்த சங்கச் சான்றோர்களின் நினை தூண்கள் 1986 ஏப்ரலில் நிறுவப் பெற்றன.

**ஊர்ப் பெயர்ச் செம்மை :**

17. தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களைத் தமிழில் செம்மை செய்யும் பொறுப்பும் இவ்வியக்கத்ததாகும். மைய நிலவியல் துறை, இருப்பூர்தித் துறை, அஞ்சல் துறை என்றனைய மையத் துறைகளுக்கு ஊர்ப் பெயர்கட்குப் பொருத்தமான தமிழ் எழுத் திணைப்பைத் துறை வழங்கி வருகிறது.

18. இலக்கணப் பிழை, பொருட் பிழை மலிந்த ஊர்ப் பெயர்களைத் திருத்திச் சரியான பெயர்களை வழக்கில் கொண்டு வர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தெருப் பெயர்களில் சேர்ந்திருக்கும் சாதிப் பெயரொட்டுக்களை நீக்க வேண்டு மென்ற அரசாணைக்கொப்ப, தமிழகத்தின் தெருப் பெயர்கள் திருத்தப் பெறுகின்றன.

19. வருவாய் நிருவாகத் துறையுடன் இணைந்து திருத்த மான ஊர்ப் பெயர் பட்டியற் பதிப்பினை வெளியிடவும் முயற்சி நடைபெறுகிறது. இந்நோக்கத்தோடு மாநிலப் பெயர் ஆணைக் குழு அமைப்பினை அண்மையில் அரசு தோற்றியுள்ளது.

**மொழிக் காவலர் நிதியுதவி :**

20. மொழிக் காவலர்களுக்குத் திங்கள் தோறும் நிதியுதவி வழங்குவதெனத் திட்டம் செயற்பாட்டுக்கு விரைவில் வர வுள்ளது.

**உலகத் தமிழ்ச் சங்கம் :**

21. உலகத் தமிழ்ச் சங்கம் 1986 ஏப்பிரல் திங்களில் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப் பெற்றது. இந்தி யாவின் அயல் மாநிலங்களில் வாழும் தமிழ் மக்களையும், பரந்து

விரிந்த நிலையில் பாரெங்கும் பல்வேறு நாடுகளிலுள்ள தமிழ் மக்களையும் தமிழமைப்புகளையும் மன்றங்களையும் நிறுவனங் களையும் மொழி கலை, நாகரீகம், பண்பாட்டு, நோக்கில் கலந்துறவாடும் இணையமாக உலகத் தமிழ்ச் சங்கம் விளங்கும். இது பற்றிய பொருண்மை ஆராயப்படுகிறது.

22. மதுரை மாநகரில் இச் சங்கத்திற்கென நிலம் உரிமை யாக்கப் பெற்றுள்ளது. இங்கு கட்டிடங்கள் எழுப்ப நட வடிக்கை இவ்வாண்டு மேற் கொள்ளப்படும். தக்க ஏற்பாடு களைச் செய்வதற்கு தனியலுவலர் அமர்த்தப்பட்டுள்ளார். சங்கத்தைப் பதிவு செய்வதற்குரிய ஏற்பாடுகள் நடப்பிலுள்ளன.

(ii) மொழி பெயர்ப்புத் துறை.

தலைமைச் செயலகத் துறைகளின் அலுவல் யாவும் தமிழி லேயே அமைய வேண்டுமென்னும் அரசு கொள்கைக்கு மொழி பெயர்ப்புத் துறை அரணாகத் திகழ்கிறது. ஆங்கிலத்தில் எழுதப் பெறும் இன்றியமையாக் குறிப்புகள், கோப்புகளைத் தமிழில் தருவது இத்துறையின் பணியாகும்.

2. தலைமைச் செயலகத்தில் சுற்றோட்டக் குறிப்புகள், அரசு நிருவாக அறிக்கைகள், சட்டமன்றப் பேரவை வினாக் களுக்குரிய குறிப்பு, பொது நிறுவனங்கள் குழு, பொதுக் கணக் காய்வுக் குழு அறிக்கைக் குறிப்புகள், அறிவிக்கைகள், விதிகள், அமைச்சர்கள் உரைக் குறிப்பு, பொதுத் (சட்டம்-ஒழுங்கு) துறை யின் கோப்புகள் ,'காபிபோசா' சட்டத்தின் கீழ் வரும் வழக்குகள் தொடர்பான கோப்புகள் தமிழாக்கம் செய்யப் பெறுகின்றன.

3. சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட உரைத் தொடரில் வைக்கப் பெறும் ஆவணங்களும், மானியக் கோரிக்கை, கொள் கைக் குறிப்பு, சாதனை அறிக்கை ஆகியவும் தமிழாக்கம் செய் யப்பெறுகின்றன. நிதித்துறை வெளியிடும் வரவு-செலவுத் திட்ட ஆவணங்களும் இத்துறைப் பிரிவினால் (முகமையில் அனுப்பப் படுவோர்) மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன. பொது மக்கள் நலங் கருதி, அவ்வப்போது அரசு வெளியிடும் தகவல் விவர அறிக்கைகளும் வழிகாட்டிக் குறிப்பு நூல்களும் இத் துறையால் மொழி பெயர்க்கப்படுகின்றன.

4. நடப்பாண்டில் செய்த வழக்கப் பணிகளோடு பல பணி களைக் கூடுதலாக இத்துறை செய்து முடித்தது. தேர்தல் ஆணைக் குழுவிற்காகக் கட்சிகளின் கொள்கை விளக்கம், ஆங்கில ஆக்கம் செய்யப்பட்டது. விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை, துறைக் குறிப்புகள் மொழியாக்கம் பெற்றன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டவறிக்கையைத் தமிழாக்கம் செய்யும் பணி நடந்து வருகிறது.



(iii) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

தமிழாய்வுப் பணியைச் சிறப்பு நிலையில் உலகளாவிய திறத்தில் வளப்படுத்த பிரெஞ்சு அகாதமி போன்ற தனி நிறு வனம் தேவை என்ற நோக்கில் உலகத் தமிழாராய்ச்சி நிறு வனத்தை 1970 ஆம் ஆண்டில்அரசு நிறுவியது.

2. இந்நிறுவனம் இன்றுவரை 128 நூல்களை வெளியிட் டுள்ளது. இந்நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 7 இலட்ச ரூபாய் நிதி யுதவியை அரசு வழங்கி வருகிறது. தமிழ் பயில விரும்புவோர்க்கு ஒலியிழை வாயிலாக (Audio Tape) மொழியைக் கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்திலுள்ளன. மொழிப் பயிற்சிக் கூடத்தில் நடத்தப் பெறும் தமிழ் வகுப்புகளால் அயல் நாட்டு மாணவர் பயனடைந்துள்ளனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிற மொழி யினர்க்கேற்ற பாட நூலுடன் ஒலியிழை பொருந்திய 'தானே தமிழ் கற்கும்' முறை உருவாக்கப்பட்டுள்ளது. மொழி பெயர்ப் பியலிலும், சுவடிப் படிப்பியலிலும், பட்ட மேற்படிப்புப் பட்டயப் படிப்பு இந்நிறுவனத்தில் நடத்தப்படுகின்றது. உருசிய மொழி யும் கற்றுத் தரப் பெறுகின்றது. நடப்பு நிதியாண்டில் 'தமிழ்க் கலைச் செல்வங்கள்' என்னும் கருத்தரங்கு தொடங்கப் பெற் றுள்ளது.

3. நிறுவனத்தின் பணிகளைச் சீரமைத்து (1) இலக்கியவியல் (2) மொழியியல், (3) கலை பண்பாட்டியல், (4) சமூகவியல், (5) பிற மொழிக் கல்வியியல் எனத் துறைகள் வகுக்கப்பட்டுள் ளன.

4. கிழமைக் கருத்தரங்கு, ஆய்வு மன்ற அரங்கு அறக்கட் டளைப் பொழிவுகள் நடைபெறுகின்றன. இதுகாறும் பதி னைந்து அறக்கட்டளை உரை நூல்கள் வெளிவந்துள்ளன.

5. மாவட்ட ஊர்ப் பெயராய்வு, இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள், அறவிலக்கியங்களின் மதிப்பீடும் வளர்ச்சியும், தொல்காப்பிய உரைவளம் , தமிழ் நாடகக் களஞ்சியம் போன்ற ஆய்வுத் திட்டங்கள் தொடரப்பட்டுள்ளன. பாரெல்லாம் பரந்த தமிழர், தமிழ் வாத்திய மரபு, தொல்காப்பிய உரைவளம், சங்கப் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு, நாட்டுப்புற வியல் ஆய்வு, தென் கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, கதைப் பாடல்கள், தமிழ்த் துணைவன், தமிழ் மொழிப் பயிற்சி நூல் ஆகிய பன்னூல்களின் ஆக்கப் பணிகள் நடைபெறுகின்றன.

(iv) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கம் :

மறைந்த மொழி ஞாயிறு பாவாணரால் தனி வகையில் ஆய்ந்து தொகுக்கப்பட்ட அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்க ளடங்கிய செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலியின்

முதன் மடல் முதற்பகுதி சனவரி 1985-இல் வெளியிடப்பெற்றது. பாவாணர் மறைவு இப்பணித் தொடர்ச்சிக்கு பேரிழப்பாயிற்று. பாவாணர் வேர்ச் சொல் வரிசை, கட்டடத் தச்சுத் தொழிற் சொல் வரிசை, மீன் பிடி தொழிற் சொல், மும்மொழிக் கையகர முதலி ஆகிய துணை நூல்களும் வெளிவரவுள்ளன. அகர முதலியின் ஏனைய பகுதிகளைத் தொகுத்து வெளியிடும் பணி யினைத் தனித்தமிழ் அகர முதலி வெளியிடும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கும் கருத்துரு ஆய்விலுள்ளது.

(V) தொல்பொருளாய்வுத் துறை.

தொல்பொருளாய்வுத்துறை 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட துறையாகும். இத்துறை கல்வெட்டுப் பிரிவு, தொல் வரலாற்றுக் கட்டிடக் காப்புப் பிரிவு, வரலாற்றிட அகழ்வாய்வுப் பிரிவு, அச்சீட்டுப் பிரிவு, அகழ்வைப்பகப் பிரிவு என்ற பிரிவுகளோடு இயங்குவதோடு மாணவர்க்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும், தொல்லியல் ஆர்வத்தையும், பயிற்சியையும் தோற்றுவித்தும் ஊக்குவித்தும் வருகின்றது.

2. மதுரை திருமலை மன்னர் அரண்மனை, தஞ்சை நாயக்க மராத்தியர் அரண்மனை ஆகிய வரலாற்றுப் புகழிய கட்டிடங் களை தொன்மை மாறாது இத்துறை பேணி வருகிறது. கல் வெட்டுச் சிறப்பும், கலைச் சிறப்பும் வாய்ந்த பழுதடைந்த கோயில்கள் சிலவற்றையும் இத்துறை பழுதுபார்த்து உள்ளது. சிலை களவுத் தொடர்பாக நடைபெறும் வழக்குகளில் சிலைகளை அடையாளங்காட்டுவதற்கு இத்துறையினர் தகுதியுடையவராக ஏற்கப்பட்டு, வழக்குகளில் சான்றுரை கூறுகின்றனர். தில்லைக் கோயிற் குடமுழுக்கில் இத்துறையும் அறநிலையத்துறையும் இணைந்து கோயிற் கலை பற்றிய கருத்தரங்கு நடத்தியது.

3. இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் கல்வெட்டுக் கள் ஏராளமான அளவில் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுக் களை ஆய்ந்து அச்சிடுவதற்கு கல்வெட்டுப் பிரிவு ஒரு தனிப்பிரி வாகச் செயல்படுகிறது. இப்பிரிவு 3,650 சிற்றூர்களுக்குச் சென்று 6,200 கல்வெட்டுக்களைப் படியெடுத்து உள்ளது. இவற்றில் 2,000-க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் அச்சிடப் பெற்றுள்ளன. மேலும், ஊர் வாரியாகக் கல்வெட்டுக்களை ஆய்ந்து அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது. மைசூரில் மைய அரசு நிருவாக பொறுப்பில் உள்ள கல்வெட்டுப் பாதுகாப்பு மையத் தில், பெரும்பாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் 25,000 குறையாமல் தாளில் பதிவு செய்யப்பட்டிருப்பதை, சென்று படித்து நகல் எடுத்துவர இத்துறை பணிபுரிந்து வருகிறது.

4. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பண்டைய தமிழக ஊர்களை யும், நகரங்களையும் அகழ்ந்தறிய அகழ்வாய்வுப் பிரிவு அமைந் துள்ளது. இதுகாறும் கொற்கை கரூர், கங்கைகொண்ட சோழ புரம் போன்ற பன்னிரண்டு இடங்களில் இத்துறை அகழ்வாய்வு



மேற்கொண்டது. பாண்டியப் பெருவேந்தரின் தலைநகராகிய கொற்கையில் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய சிறப்புக் கூறுகள் ஆய்வில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. சங்ககாலச் சேரவேந்தர் தலைநகராகிய கரூரில், ரோமானியப் பேரரசருடன் தமிழகத்துக் கிருந்த தொடர்பை வலியுறுத்தும் வகையில், பொருண்மைகள் சில அகழ்வில் வெளிப்பட்டுள்ளன. முதலாம் இராசேந்திர சோழன் நிறுவிய கங்கைகொண்ட சோழபுரம் ஏறக்குறைய கி.பி. 1020-ல் இருந்து 1300 வரையில் தலைநகரமாகத் திகழ்ந்தது. இப் பெருநகர் முற்றிலுமாக மறைந்து புதைந்ததை இத்துறை அகழ் வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. சோழர் கால அரண்மனைக் கட்டிடப் பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மாமல்லபுரத் திற்கு ஏழு கல் தொலைவில் வாசவசமுத்திரத்தில் ரோமானியத் தொடர்பு நிலவியதை அகழ்வாய்வு கண்டறிந்துள்ளது. கோய முத்தூருக்கு அருகில் போளுவாம்பட்டியில் பண்டை நகரத்தின் சுவடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

5. இவ்வாண்டும் போளுவாம்பட்டியில் அகழ்வாய்வில் சுடு மண் பொம்மைகளும் விலையுயர்ந்த கல் மணிகளும், கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சுடுமண் பொம்மைகள் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். இங்கு நடந்த அகழ்வாய்வில் கண்டெடுக் கப்பட்ட பானையோடுகளில் 4—5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றுக் காணப்படு கின்றன. பண்டைக்கால எழுத்து வடிவம் (தமிழ்) தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் கிட்டியதன் மூலம், பண்டைத் தமிழ கத்தின் கல்வி, கலை, மரபுச் சிறப்புக்கள் புலனாகின்றன.

6. இராமநாதபுர மாவட்டம், அழகன்குளத்தில் இவ்வாண்டு அகழ்வாய்வு புதிதாகத் தொடங்கப்பட்டது. அகழ்வாய்வில் ரோமானிய மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகள், மட்கலங் களின் ஓடுகள், மதுக் குடங்களின் பகுதிகள், வேலைப் பாடமைந்த சங்கு வளையல்கள், விலையுயர்ந்த கல்மணிகள், பிற்காலத்திய பானை ஓடுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. இவையன்றி, வட இந்தியாவில் ஆட்சி புரிந்த மோரியர் காலத்துப் பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து அகழ்வாய்வு இங்கு நடந்து வருகிறது.

7. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்தப் பகுதியிலமைந்த வரலாற்றுச் சின்னங்களின் பட்டியலையும் உதிரிச் சிற்பங்களின் பட்டியலையும் சுவடி சேமிப்புப் பணிகளையும் மேற்கொள்ள மாவட்டந்தோறும் தொல்லியல் அலுவலரை நியமிக்க முடி வெடுத்து இதுகாறும் தொல்லியல் அலுவலர்கள் எழுவர் நிய மிக்கப்பட்டிருந்தனர். 4,000-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் அலுவலர்களால் சேகரிக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களின் தொல்பொருள் அலுவலர்கள் சுவடிகளைப் பட்டியலிட்டுப் படித்து அச்சாக்குதற்கு ஆயத்த நிலையில் செம்மையாக்கியுள்ளனர்.

[1987 ஏப்ரல் 8

8. தென்மார்க்கு நாட்டுப் பிரதமர் அண்மையில் தரங்கம் பாடி வந்தபோது , தரங்கம்பாடிக் கோட்டையையும், நமது துறையின் வைப்பக மாட்சியையும் பாராட்டியது குறிக்கத் தக்கதாகும். 'தரங்கம்பாடி' எனும் கலைச் சிற்றேடு அச்சிட்டு வழங்கப்பட்டது.

9. கல்வெட்டுத் தொகுதிகள், இலக்கிய சுவடிப் பதிப்புகள், கோயில்கள், வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய ஆய்வு நூல்கள் சிறுவர் வரலாற்று நூல்கள், காலாண்டிதழ், 'கல்வெட்டு' என்ற வகையில் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக நூற்றுக்கு மேலான நூல்களை இத்துறை வெளியிட்டுள்ளது.

10. சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தையும், தொல்பொருள் ஆய்வுத் துறையே நிருவகித்து வருகிறது. நூலகத்திலுள்ள சிறந்த கையெழுத்துப் படிகளில் பயனுள்ளவற்றை அச்சிட்டு வெளி யிடவும் இத்துறை ஆவன செய்யும்.

11. இத்துறையின் கட்டுப்பாட்டில் 15 அகழ் வைப்பகங்கள் இயங்குகின்றன. வாடகைக் கட்டிடங்களில் இவ்வைப்பகங்கள் அமைந்ததால், காட்சியகங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டக் கருதப்பட்டுள்ளது. முதற்கட்டமாகப் பூண்டி அருங் காட்சியகத்திற்குச் சொந்தமான கட்டிடம் கட்ட அரசு முடி வெடுத்துள்ளது.

12. அகழ்வாய்விடங்கள், வரலாற்றுச் சின்னங்கள் ஆகிய வற்றைக் காத்தல் தொடர்பாக ஒளிப்படம் எடுப்பதற்குத் தனியாகப் படப்பிரிவு இயங்குகிறது. படப்பிரிவுக்கு நுண்ணிய ஒளிநிலை-துணைக் கருவிகளை வாங்குவதற்காக ரூ. 77,000 ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.

13. சென்னை, மதுரை, ஆகிய இடங்களில் இரு வேதியற் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. அகழ்வாய்வுகளிலும், தொல்லிடங் களின் மேற்பரப்பு ஆய்வுகளிலும் கண்டெடுக்கப்படும் பொருள் களைத் துப்புரவு செய்யும் பணி, இப்பிரிவால் நடைபெற்று வருகிறது. வேண்டிய நுண்கருவிகள் வாங்குவதற்காக ரூ. 25,000 வழங்கப்பட்டுள்ளது.

14. இவ்வாண்டு வெள்ளிவிழா, அகழ்வியல் கருத்தரங்கம், ஆய்வுப் பயிலரங்குகள் முதலிய நடத்தத் திட்டமிடப்பட் டுள்ளது.



1987 ஏப்ரல் 8]

## (vi) அருங்காட்சியகத் துறை.

தொன்மை வடிவங்களையும், படிமங்களையும் அருங்கலைப் பொருள்களையும் அறிவியல் பொருண்மைகளையும் காட்சிப் பொருளாக அமைத்து நாட்டின் கலை மரபைக் காத்துக் காட்சிக் கல்வி வழங்கும் கலைக் கூடமாகத் திகழும் தொன்மையான அருங்காட்சியகங்களுள் சென்னையில் அமைந்த அருங்காட்சி யகம் குறிக்கத் தக்கதாகும்.

மாவட்ட அருங்காட்சியகம் :

2. மாநிலத்தின் இயற்கைவளம, கலை நலம், பண்பாட்டு மரபுகளை அம்மாவட்டத்தினர் அறிந்து போற்றும் வகையில் மாவட்டந்தோறும் அருங்காட்சியகம் அமைய வேண்டுமென்னும் அரசின் கொள்கைப்படி, இவ்வாண்டில் ஈரோடு, கடலூர், கோய மூத்தூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் மாவட்ட அருங் காட்சியகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

சிறுவர் அருங்காட்சியகம் :

3. சிறுவர்களின் ஆர்வத்திற்கும் அறிவாக்கத்துக்கும் அர வணைப்பு வழங்கும் வகையில் ரூ. 34 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ''சிறுவர் அருங்காட்சியகம்'' விரைவில் திறக்கப்படவுள்ளது. காட்சிக் கூடங்கள், செயல்முறை அறை கள், சிறப்புக் காட்சி மாடம், இயற்கைப் பொழில் ஆகியவை இக் காட்சியகத்தின் சிறப்புக் கூறுகளாம்.

காட்சிக்கூடங்கள்—சீரமைப்பு :

4. வருகையாளர்களைக் கவரும் வகையிலும், நற்பயன் விளையும் வகையிலும் அருங்காட்சியகத்தின் காட்சிக் கூடங்கள் பல சென்னையில் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட கலைக் கூடமும், மரச் சிற்பக் கூடமும் இவ்வாண்டில் சீரமைக்கப்படவுள்ளன. பொருளியல்-தாவரவியல் கூடம், நாட்டுப்புறக் கலைக்கூடம் ஆகியவை அண்மையில் சீர மைக்கப்பட்டன.

5. புதுக்கோட்டை அருங்காட்சியகத்தின் படிமக்கூடம், மீன் கூடம், ஊர்வன, முதுகெலும்பற்ற உயிரினக் கூடம் ஆகியவை சீரமைக்கப்பட்டு வருகின்றன.

பண்பாட்டுப் பலகணி :

6. தமிழ்ப் பண்பாட்டுக் கலைமாட்சியை விளக்கும் வகையில் இசை, நடனம், நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு திங்கள்தோறும் தமிழ்ப் பண்பாட்டு

பலகணி எனும் காட்சியுரை நிகழ்ச்சி நடந்து வருகின்றது. இது
வரை 24 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகள்
காணொலிப் படங்களாகப் (Video cassettes) பதிவு செய்யப்பட்டு
வருகின்றன. மதுரையிலும் இப்பலகணி தொடங்கப்பட்டுள்ளது.

**கல்விப் பணி :**

7. அரும்பொருட் காப்புத் திட்டம், ''வடிவமைப்பு—கண்
காட்சி அமைப்பு பொதுமக்கட் பாங்கு'' என்னும் தலைப்பில்
தென் மாநிலங்களுக்காகப் பயிலரங்குகள் நடத்தப்பட்டன.
மாக்சுமுல்லர் பவன், இண்டாக் போன்ற பண்பாட்டு மையங்கள்
உடனுதவின. அருங்காட்சியகத்தின் கல்விப் பணியாக மாண
வர்களைக் காட்சிக் கூடங்களுக்கு அழைத்துச் சென்று காட்சிப்
பொருட்களை விளக்கிக் கூறி, கல்வியியற்பட்ட திரைப்படங்
களும் காண்பிக்கப்படுகின்றன. மதுரை அருங்காட்சியகத்தில்
''நாட்டுப் புறவியல்'' எனும் தலைப்பில் கருத்தரங்கு நடை
பெற்றது.

**அருங்காட்சியகப் பவளவிழா :**

8. புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் அரசர் மரபி
னரால் 1910 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட புதுக்கோட்டை
அருங்காட்சியகத்தின் பவள விழா 1986 ஆம் ஆண்டு டிசம்பர்
''திங்களில் நடைபெற்றது. புகழ் பொலியும் புதுக்கோட்டை''
எனும் தலைப்பில் பவள விழாவில் பயன்மிகுந்த கருத்தரங்கும்
நடத்தப்பட்டது.

### (vii) திருக்குறள் நெறிபரப்பு மையம்.

வான்புகழ் வள்ளுவரின் கருத்துக்களைப் பாமர மக்களிடை
யேயும் மாணவர்களிடையேயும் பரப்பும் அமைப்பாகத் திருக்
குறள் நெறிபரப்பு மையம் அரசால் தோற்றுவிக்கப்பட்டது.
இம்மையத்தில் திருக்குறள் பயிற்சி வகுப்பு வெள்ளிக்கிழமை
தோறும் நடைபெற்று வருகிறது. குறட்பயிற்சி மூலம் பள்ளி
மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிக்கும் புதுவகைத் திட்டமும்
செயற்படுத்தப்படுகின்றது. மாவட்டக் கல்வியலுவலர்களின்
துணையுடன் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் திருக்குறளைப்
பரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருக்
குறள் நெறி பரப்பும் பிற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு
இப்பணியைச் செம்மைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்படுகின்றன. திருக்குறள் புலமையாளர்களும், திருக்
குறள் நெறியாளர்களும் ஆண்டுதோறும் நடைபெறும் திருக்குறள்
மாநில மாநாட்டில் சிறப்பிக்கப்படுகின்றனர். இம்மாநாடு
தமிழக மாவட்டங்களில் சுழல் முறையில் நடத்தப்படவுள்ளது.
இந்த மாநாடு திருச்சியில் நடந்தது.



### (viii) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மத்திய சங்கீத
நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்
படுத்தும் கலை நிறுவனமாகும். இயல், இசை, நாடகம், நாட்டி
யம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை நமது மாநிலப்
பண்பாட்டு மரபுப் போக்கில் இம்மன்றம் போற்றி வளர்த்து
வருகிறது.

2. இந்திய மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுக் கொள்
கொடைத் திட்டத்தைச் செயற்படுத்துதல், வறுமையில் வாடும்
நலிந்த கலைஞர்களிடமிருந்து நிதியுதவி வேண்டி வரும் விண்
ணப்பங்களை ஆய்ந்து பரிந்துரை செய்தல், தமிழகத்தில்
இயங்கும் கலை மன்றங்களின் மூலம் தகுதிவாய்ந்த கலைஞர்
களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்தல், சிறந்த
கலைஞர்களின் கலைகளையும், நாட்டிய நாடகங்களையும்
ஊக்கவும், உருவாக்கவும் மானியம் வழங்கல், சிறந்த கலை
நூல்களை அச்சிட்டு வெளியிட மானியம் வழங்கல், இசை
நாடக மேதைகளின் நினைவைப் போற்றும் விழாக்களை நடத்து
தல், இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள்
ஆகிய துறைகளில் சிறந்த கலைப் பணியாற்றிய பெருமக்களுக்கு
'கலைமாமணி' விருது வழங்கல், ஆகிய கலைப் பணிகளை இம்
மன்றம் ஆற்றி வருகின்றது. இதுவரை 687 கலைஞர்கள் கலை
மாமணி விருது பெற்றுள்ளனர். மறைந்தும் மறையாப் புகழ்
பெற்ற 184 கலைஞர்களின் திருவுருவப் படங்களையும் மன்றம்
திறந்து வைத்துள்ளது.

3. கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தின்படி 1986 ஆம்
ஆண்டு அக்டோபர் திங்களில் 'கூலு' பள்ளத்தாக்கில் நடை
பெற்ற தசரா விழாவில் பங்குபெறத் தமிழகத்திலிருந்து ஒரு
கலைக் குழுவையும், தில்லியில் மத்திய சங்கீத நாடக அகாதமி
நடத்திய 'லோக் உற்சவ்' கலை விழாவில் பங்கு பெற ஒரு
தெருக்கூத்து கலைக் குழுவையும், உத்திரப் பிரதேசம் லக்னோ
வில் நடைபெற்ற தேசிய ஊரக நாடகக் கலை விழாவில் பங்கு
பெற ஒரு தெருக்கூத்து குழுவையும் இம்மன்றம் அனுப்பி வைத்
தது. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தில்லி 'கதக்'
நாட்டிய நிகழ்ச்சியும், பரோடா நிருத்யஸ்ரீ கலை நிறுவனத்
தாரின் 'காளிதாசனின் மேகதூதம்' என்ற நாட்டிய நாடக
நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன. 1986 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்களில் மணிப்பூர் மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வருகை
புரிந்த கலைக் குழுவினர் பல இடங்களில் கலை நிகழ்ச்சி நடத்
தினர். 1987 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பஞ்சாப்
மாநிலத்திலிருந்து கலைக் குழு வருகை தந்து கலை
நிகழ்ச்சிகள் நடத்தியது. 1987 ஆம் ஆண்டு மார்ச்சுத்
திங்களில் நாகாலாந்து மாநிலத்திலிருந்து கலைக் குழு வருகை
தந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தி முடித்தது.

[1987 ஏப்ரல் 8

4. இசை, நாட்டியம், நாடகம், ஊரகக் கலைகள் ஆகிய துறைகளில் கலைப் பணி புரிந்துவரும் கலைஞர்களின் வாழ்க் கைக் குறிப்புகளைத் தொகுத்து நூல் வடிவத்தில் பதிப்பிக்கும் பணி நடப்பிலுள்ளது.

5. ஊரகக் கலைப் பயிற்சி நிறுவனங்களை ஆங்காங்கு நிறுவுவதற்கு முன்னோடியாகப் பாடத்திட்ட உருவாக்கம் வல்லுநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக் கலைக் குழுக்களை உருவாக்கும் பணியில் மன்றம் இப்போது ஈடுபட்டுள்ளது.

6. தமிழ் நாடக எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் புதிய நாடகப் படைப்புகளை உருவாக்கவும் ஒரு புதிய திட்டத்தை இம்மன்றம் அறிவித்துள்ளது. 'வரதட்சிணை', 'குடிப் பழக் கம்', 'தீண்டாமை' ஆகியவற்றின் கொடுமைகளை நோக்க மாகக் கொண்டு உருவாக்கப்படும் மூன்று சிறந்த நாடகங்களைத் தெரிவு செய்து அந்நாடக ஆசிரியர்களுக்கு முறையே ரூ. 5,000, ரூ. 3,000, ரூ. 2,000 என்ற வகையில் பரிசு வழங்க எண்ணி யுள்ளது. வாழ்வில் நலிந்த அகவை முதிர்ந்த கலைஞர்களுக்கு நிதி வழங்கும் திட்டத்தின்படி, இதுவரை 1,767 கலைஞர்கள் பயனடைந்துள்ளனர். 135 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது.

7. மறைந்த இசை நாடக நாட்டிய மேதைகளின் பிறந்த நாள் விழாக்களை மன்றமே நடத்தி வருகின்றது. இவ்விழா வின் சிறப்பு நிகழ்ச்சியாகக் கலைவாணர் நினைவு நாளின்போது சிறந்த நகைச்சுவைக் கலைஞர்கள் பதின்மர் தேர்ந்தெடுக்கப் பட்டு, ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 பரிசாக வழங்கப்படுகின் றது. சுவாமி சங்கரதாசர் நினைவு நாள் விழாவின் போது இசை நாடக நடிகர்கள் பதின்மரைத் தெரிந்தெடுத்து ஒவ்வொரு வருக்கும். 2,000 பரிசாக வழங்கப்பட்டது. பம்மல் சம்பந்த னார் பிறந்த நாள் விழாவின்போது, சிறந்த நாடகக் கலைஞர்கள் பதின்மரைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 பரிசாக அளிக்கப்படுகிறது. பண்ணிசைக் கலைஞர் பாபநாசம் சிவனாரின் பிறந்தநாள் விழாவை இம்மன்றம் கொண்டாடியது.

8. நாடகத் திரைக் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர் களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின்படி, அரசு திரைப்படக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு மாதந் தோறும் ரூ. 75 முதல் ரூ. 100 வரையிலான படிப்புதவித் தொகை நான்கு பேர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.



1987 ஏப்ரல் 8]

### (ix) இசைக் கல்லூரிகள்.

சென்னை

குரலிசை கருவியிசை, இசையியல், ஆடற் பயிற்சி முதலிய கலைத் துறைகளில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மாணவர்க்குத் தக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது.

2. கருவியிசை பயிலும் பிரிவில் 33 மாணவர்கள் அரசின் உதவித் தொகை பெறுகின்றனர். கல்லூரியின் தொடர்ந்த வளர்ச்சிக்குச் சான்றாகத் தற்போது 604 மாணவர்களும், இக் கல்லூரியைச் சார்ந்த நான்கு மாலை நேர இசைக் கல்லூரிகளில் 204 மாணவர்களும் இசைப்பயிற்சி பெற்று வருகின்றனர். இக் கல்லூரியில் மொத்தம் 70 ஆசிரியர்களும் பிற அலுவலர்களும் பணி புரிகின்றனர். நூலகம் அமைப்பது, இசை நிகழ்ச்சிகள் நடைபெற ஒலிப் பொருத்தம் அமைப்பது, புகழ் வாய்ந்த இசைப் பேராசிரியர்களை விருந்து நிலையில் அமர்த்துவது முதலியன புதிய பணிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை—அண்ணா நகரில் புதியதாக மாலை நேர இசைக் கல்லூரியைத் தொடங்கவிருப்பத்தோடு பரதநாட்டியம், மிருதங்க வகுப்புகளும் மாலை நேரக் கல்லூரியில் தொடங்கப் படவுள்ளன.

மதுரை

3. மதுரை அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, கருவியிசை, இசையியல், ஆடற் பயிற்சி முதலிய வகுப்புகள் நடத்தப்படு கின்றன. தற்போது 69 மாணவ/மாணவியர் பயிலுகின்றனர். மதுரையில் அமைந்துள்ள அரசு இசைக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டித் தரப்படும்.

### (x) சவகர் சிறுவர் இல்லம்—தமிழ்நாடு.

இந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பாரதப் பிரதமர் சவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு வழங்கிய தொகை ரூ. 15.73 இலட்சத்தைக் கொண்டு அரசினர் தோட்ட வளாகத்தில் இந்நிறுவனம் செயற் படுகிறது. சவகர் சிறுவரில்லங்களைத் தமிழ்நாட்டிலுள்ள 12 மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்குரிய கருத்துருக்கள் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

2. பள்ளிச் சிறுவர்களுக்கு ஏட்டுக் கல்வியோடு தத்தம் ஆக்கத் திறமைகளைத் தாம் தெரிந்து வெளிப்படுத்தும் வகை யில், பல்வேறு வகையான செயல்முறைத் திட்டங்களையும், பயிற்சிகளையும், இந்நிறுவனம் மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறது.

[1987 ஏப்ரல் 8

3. 1986–87 ஆம் ஆண்டில் தலைமை நிறுவனத்தில் 1,512 சிறுவர்களும், மதுரை, புதுக்கோட்டை நிறுவனங்களில் முறையே 200 மற்றும் 150 சிறுவர்களும் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுகின்றனர்.

4. சவகர் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பள்ளி, மாணவ மாணவியர் அசாம் மாநிலத்தில் நிகழ்ந்த தேசிய ஓரங்க நாடக ஓவியப் போட்டியில் பங்கு பெற்றுத் தனி நடிப்பிற்கு முதற் பரிசையும், ஓவியத்திற்கு இரண்டாம் பரிசையும், நாடகத்திற்கு மூன்றாம் பரிசையும் வென்றுள்ளனர். புதுடில்லி நிருவாகத்தின ரால் தேசிய அளவில் நடத்தப்பட்ட நடனம் நாடகப் போட்டி யில் 12 மாநிலங்கள் பங்கு கொண்டதில் இவ்வில்லச் சிறார்கள் பங்கேற்ற நடனத்திற்கான இரண்டாம் பரிசையும், நாடகத் திற்கான மூன்றாம் பரிசையும் பெற்றனர். அமெரிக்கா, நார்வே நாடுகளில் நடைபெற்ற உலகக் குழந்தைகள் தேசிய கலை விழா விற்கு இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 8 சிறுவர்களில் இந்நிறுவனத்தைச் சார்ந்த சிறுமியும் ஒருவர் என்பதில் நிறு வனம் பெருமையடைகிறது. குடியரசு நாள் அணி வணக்க நிகழ்ச்சியில் சவகர் சிறுவர் இல்லம் தொடர்ந்து பரிசுகளைப் பெற்று வருகிறது.

5. சுற்றுப் புறத் தூய்மை விழிப்புணர்ச்சி பற்றிய தாவளம் (முகாம்) இவ்வாண்டு நடத்தப் பெற்றது. மதுரையிலும், எழும்பூரிலும் சிறுவர் இல்லக் கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன.

6. தேசிய உடற் பயிற்சிப் போட்டிகளில் இவ்வில்லச் சிறுவர் கள் பங்கேற்றனர். அங்கேரி கலைப்போவியப் போட்டிக்கு இவ்வில்லச் சிறுவர்களின் ஓவியங்கள் அனுப்பப்பட்டன. இல வயக் கணிப் பொறி வகுப்பும், கூட்டுப் பாடல் இசை வகுப்பும் நடத்தப்படுகின்றன. குழந்தையர் சங்கமும் தொடங்கப்பட் டுள்ளது.

7. தேசிய அளவில் இவ்வில்லச் சிறுவர்கள் கருநாடகத்தில் தென் மண்டல இளைஞர் விழாவிலும், காசுமீர மாநிலத்தில் நடைபெற்ற தேசிய ஒருமைப் பாட்டுத் தாவளத்திலும், புது தில்லியில் நடைபெற்ற தேசியக் குழந்தைகள் பயிற்சி அரங்கிலும் கல்கத்தாவில் நடைபெற்ற ஒருமைப் பாட்டுப் பயில் களத்திலும் பங்கு கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

### (xi) தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு.

கைவினைக் கலை மன்றமாக விளங்கும் ஓவிய நுண்கலைக் குழு ஓவியம், சிற்பம் முதலிய கலைகளின் வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் பின்வரும் திட்டங்களை மேற்கொண்டுள்ளது :—

1. ஆண்டுதோறும் ஓவிய சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களைக் காட்சியாக அமைத்துச் சிறந்த கலைப் படைப் பாளர்களாகிய மூத்த கலைஞர்களுக்கு விருது, பரிசுகளை வழங்கு தல்.



1987 ஏப்ரல் 8]

2. தமிழ்நாட்டில் உயர்நிலை, மேனிலைப் பள்ளி மாணவர் களிடையே நுண்கலையறிவைப் பேணி வளர்க்கவும் புதிய அணுகுமுறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் கலையாசிரியர் களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டத்தை நடத்துதல், தென்னார்க் காடு மாவட்டம் சார்பாகக் கடலூரிலும், நெல்லை கட்ட பொம்மன் மாவட்டம் சார்பாகத் திருநெல்வேலியிலும் இவ் வாண்டுக்குரிய சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

3. பொது மக்களிடையே கலையறிவை மேம்படுத்தவும், இன்றைய நடப்புக்களை, நுணுக்கங்களைத் தெரியப்படுத்தவும், மாவட்டந்தோறும் ஓவிய சிற்பக் கலைஞர்களைக் கொண்டு, கோவை, மதுரை, திருச்சி, தருமபுரி, பெரியார் மாவட்டங்களில் செயல் விளக்கப் பயில் கூடங்கள் நடந்தன.

4. தமிழ் நாட்டிலுள்ள கலையமைப்புகளுக்கு மானியம் அளித்தலும் குழுவின் பணியாகும்.

5. சென்னையிலும், கும்பகோணத்திலும் அரசு கலைத் தொழிற் கல்லூரியிலும், மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியிலும் பயிலும் இளங் கலைஞர்க்கு ஓவிய/சிற்ப ஆய்வுப் பணிக்கும், இராசத்தானிலுள்ள 'பனஸ்தாலி' போன்ற இடங்களுக்குச் சென்று ஓவிய, சிற்பக் கலைகளில் சிறப்புப் பயிற்சி பெறவும், மானியவுதவி வழங்கியது.

6. ஆங்காங்கே கண்காட்சி நடத்தத்தக்க வகையில் குழு துணை புரிந்தது.

7. ஓவிய சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலைப் படைப்புகளை வாங்கிச் சென்னையில் 'வளர்கலைக் கூடத்தில்' மக்களின் பார்வைக்காகக் காட்சியரங்கு ஏற்பாடு செய்தல்.

8. ஓவிய சிற்பக் கலைகளைப் பற்றிய கருத்தரங்கும், பயி லரங்கும் நடத்த ஏற்பாடு செய்தல்.

9. சிறந்த ஓவியங்களைக் கொண்ட அஞ்சலட்டைகள் அச் சிடுதல்.

10. ஓவிய சிற்பக் கலைகளின் இன்றைய வளர்ச்சியையும் தமிழ்நாட்டுக் கலைஞர்கள்-தமிழ் நாட்டின் பண்பாடு-மேம்பாடு ஆகியவற்றை விளக்கும் கட்டுரைகள் கொண்ட 'நுண்கலை' என்னும் இருமொழிக் கலையிதழை ஆண்டிற்கு இருமுறை வெளி யிடுதல்.

11. மாநிலங்களுக்கிடையே கலைக் காட்சி நடத்தும் திட்டத் தின்படி தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கலைப்படைப்புகளைப் பிற மாநிலங்களிலும் பிற மாநிலக் கலைஞர்களின் கலைப்

படைப்புகளைத் தமிழ்நாட்டிலும் காட்சியாக வைத்தல். இவ்வாண்டு பம்பாய் மாநகரில் சென்னை சோழமண்டலக் கலைஞர்களின் கலைக்காட்சி நடத்தப்பட்டது.

12. பல்வேறு மாநிலங்களிலுள்ள கலைஞர்களுக்கிடையே கருத்து கொள்கொடை நடைபெறும் வண்ணம் ஆண்டுதோறும் கலைஞர் தாவளம் (முகாம்) நடத்துதல்.

13. 1987–88 ஆம் ஆண்டில் மேற்கூறிய திட்டங்களுடன், பின்வரும் கலைப் பணிகளையும் இக்குழு செயற்படுத்தக் கருதுகிறது.

14. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு நடத்திவரும், கலையாசிரியர் பயிற்சித் திட்டங்கள், செயல் விளக்கப் பொழிவுகளில் பங்குபெறும் ஆசிரியர், பொதுமக்கள் ஆகியோருக்கும் பயன் தரும் வகையில் ஓவிய சிற்பக் கலை நுணுக்கப் படங்களைப் பதிவு செய்யவும், கலை வித்தகர்களைப் பற்றிய சிற்றேடுகளைத் தமிழில் கொணரவும் திட்டமிட்டுள்ளது.

15. தமிழகத்தின் சிறந்த ஓவிய சிற்பக் கலைஞர்கள், கலையார்வலர்கள், கலைத் திறனிகள், வித்தகர்கள், கலை நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், ஓவியக் கூடங்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரம் அடங்கிய 'யார்-எவர்' என்னும் கையேட்டை வெளியிடவும் திட்டமிட்டுள்ளது.

16. தமிழ்நாட்டில் கடந்த 87 ஆண்டுகளாக ஏற்பட்ட நுண் கலை மறுமலர்ச்சி பற்றிய ஆய்வுத் தொகுப்பை வெளியிடக் கருதப்பட்டுள்ளது.

## (xii) தமிழ்ப் பழங்கலை இயக்கம்.

தொன்மையும் சீர்த்தியும் வாய்ந்த தமிழகப் பழங்கலைகளுக்குப் புத்துயிரும் புதுப் பொலிவும் ஊட்டும் பெருநோக்கத்துடன் தமிழ்ப் பழங்கலை இயக்ககம் அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

**மாவட்ட வரலாற்றுக் களஞ்சியங்கள் :**

2. மாவட்ட வரலாற்றுக் களஞ்சியங்களை உருவாக்கக் கருதி, செங்கற்பட்டு, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், வடார்க்காடு ஆகிய மாவட்டங்களைப் பற்றிய விவரத் தொகுப்புகள் அணியமாக்கப்பட்டு வல்லுநர் குழுவின் பார்வையிலுள்ளன.



**தமிழ்ப் பண்பாட்டுக் காட்சியகம் அமைத்தல் :**

3. தமிழ்ப் பண்பாடு, நாகரிகம், கலைச் சிறப்பு மிளிரும் பொருள்களைத் திரட்டி, சென்னையின் மையப் பகுதியில் கலை மரபுக் காட்சியகம் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வளர்கலைக் கூடத்தின் இரண்டாம் தளத்தில் அப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

**குரல் நலக் காப்புத் திட்டம் :**

4. நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோரின் நல்லுரைகளை நிகழ் காலத்தினர்க்கும் எதிர் காலத்தினர்க்கும் பயன்படும் வகையில் வாயுரை பதிவு செய்ய, குரல் நலக்காப்புத் திட்டம் உருவாகியுள்ளது. இத்திட்டத்தின்படி, சென்னையிலும் சூழவிலுமாகத் தமிழறிஞர்கள் 46 பேரின் உரைகளை ஒலிப்பதிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஊரகக் கலை விழா-பண்பாட்டுக் கருத்தரங்கம் :**

5. மரபு குன்றாத செந்தமிழ்ப் பழங்கலைகளைத் தெரிவு செய்து அக்கலை நாயகர்களுக்கு ஊக்கமூட்டவும், கலை மணம் கமழச் செய்யவும் பழங்கலைக் கருத்தரங்கம், ஊரகக் கலை விழாக்களைச் சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் சென்னையில் கருத்தரங்கும், கலை விழாவும் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி, கலை மரபு, பண்பாட்டு மேம்பாட்டுக் கூறுகளைக் கருத்திற் கொண்டு இத்துறைகள் தத்தம் பணிகளை ஆற்றி வருகின்றன.

# இணைப்பு

## பள்ளிக் கல்வி பற்றிய விபரங்கள்.

(மாணவர்கள் இலட்சத்தில்)

| (1) | 1976–77 (2) | 1979–80 (3) | 1984–85 (4) | 1985–86 (5) | 1986–87 (6) |
|---|---|---|---|---|---|
| **அ. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறார் மொத்த எண்ணிக்கை—** | | | | | |
| **வயதுத் தொகுதி 6—11** | | | | | |
| சிறுவர் .. .. .. | 31.93 | 33.27 | 36.11 | 36.39 | 36.93 |
| சிறுமியர் .. .. .. | 31.23 | 32.54 | 35.28 | 35.54 | 36.08 |
| மொத்தம் .. | 63.16 | 65.81 | 71.39 | 71.93 | 73.01 |
| **வயதுத் தொகுதி 11—14** | | | | | |
| சிறுவர் .. .. .. | 14.37 | 14.97 | 16.25 | 16.37 | 16.62 |
| சிறுமியர் .. .. .. | 14.05 | 14.64 | 15.88 | 16.00 | 16.23 |
| மொத்தம் .. | 28.42 | 29.61 | 32.13 | 32.37 | 32.85 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 14—17/14—16 (1979–80 லிருந்து)—** | | | | | |
| சிறுவர் .. .. .. | 11.86 | 8.36 | 9.08 | 9.15 | 9.29 |
| சிறுமியர் .. .. .. | 11.60 | 8.15 | 8.87 | 8.94 | 9.07 |
| மொத்தம் .. | 23.46 | 16.51 | 17.95* | 18.09 | 18.36 |

* 1984–85-ல் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது— அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செயயப்பட்டதாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஆ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—** | | | | | |
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | | |
| சிறுவர் .. .. .. | 32.02 | 34.34 | 38·11 | 38.90 | 39·63 |
| சிறுமியர் .. .. | 25.50 | 27.94 | 32.33 | 33.03 | 33.65 |
| மொத்தம் .. | 57.52 | 62.28 | 70.44 | 71.93 | 73.28 |
| **வயதுத் தொகுதி 11—14—** | | | | | |
| சிறுவர் .. .. .. | 9.74 | 11.02 | 13.95 | 14.69 | 15.48 |
| சிறுமியர் .. .. | 5.76 | 6.65 | 9.24 | 9.98 | 10.68 |
| மொத்தம் .. | 15.50 | 17.67 | 23.19 | 24.67 | 26.16 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1979-80-லிருந்து):— | | | | | |
| சிறுவர் .. .. .. | 5.34 | 4.20 | 5.42 | 5.72 | 6.03 |
| சிறுமியர் .. .. .. | 2.68 | 2.14 | 3.10 | 3.44 | 3.67 |
| மொத்தம் .. | 8.02 | 6.34 | 8.52 | 9.16 | 9.70 |

இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம் :—

(விழுக்காடுகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 6—11:— | | | | | |
| சிறுவர் .. .. .. | 100.3 | 103.21 | 105.53 | 106.91 | 107.31 |
| சிறுமியர் .. .. .. | 81.7 | 85.87 | 91.64 | 92.94 | 93.27 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 91.7 | 94.64 | 98.66 | 100.00 | 100.37 |
| வயதுத் தொகுதி 11—14:— | | | | | |
| சிறுவர் .. .. .. | 67.3 | 73.60 | 85.82 | 89.74 | 93.12 |
| சிறுமியர் .. .. .. | 41.0 | 45.44 | 58.21 | 62.38 | 65.81 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 54.4 | 59.68 | 72.18 | 76.21 | 79.63 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 14–17/14–16 (1979–80-லிருந்து):— | | | | | |
| சிறுவர் .. .. .. | 44.9 | 50.2 | 59.69 | 62.50 | 64.98 |
| சிறுமியர் .. .. | 23.1 | 26.4 | 34.93 | 38.48 | 40.44 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 34.1 | 38.44 | 47.45 | 50.64 | 52.85 |

ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 27,306 | 27,662 | 28,847 | 29,118 | 29,268 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 5,730 | 5,685 | 5,691 | 5,691 | 5,665 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 3,020 | 2,088 | 2,476 | 2,569 | 2,686 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | 1,138 | 1,474 | 1,554 | 1,678 |
| மொத்தம் .. | 36,056 | 36,573 | 38,488 | 38,932 | 39,299 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர்கள் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் (10-ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை :

| (1) | 1976–77 (2) | 1979–80 (3) | 1984–85 (4) | 1985–86 (5) | 1986–87 (6) |
|---|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 1,11,033 | 1,12,535 | 1,16,305 | 1,16,625 | 1,17,321 |
| நடுநிலைப்பள்ளிகள் .. | 67,846 | 66,568 | 66,849 | 66,919 | 65,875 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 72,838 | 34,102 | 38,328 | 39,978 | 40,059 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | 45,257 | 62,932 | 64,347 | 67,473 |
| மொத்தம் .. | 2,51,717 | 2,58,462 | 2,84,414 | 2,87,869 | 2,90,728 |

ஊ. சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை (30–9–1986 நாளன்று உள்ளவாறு) :

(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள் .. | 36 | 39 | 42 | 43 | 44 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 33 | 37 | 42 | 43 | 44 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 24 | 23 | 28 | 28 | 30 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | 28 | 28 | 29 | 30 |



(2) வகுப்புத் தொகுதிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. .. | 36 | 38 | 41 | 42 | 45 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 32 | 36 | 38 | 37 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 30 | 26 | 26 | 27 | 26 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | 22 | 21 | 22 | 18 |

1986–87 இல் (1986 அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர்கள். (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|
| முதல் நிலைப்பள்ளிகள்: | | | | |
| அரசு .. .. .. | 1,463 | 29,268 | 51.77 | 1,17,321 |
| நகராட்சி .. .. .. | 1,133 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 21,604 | | | |
| தனியார் .. .. .. | 5,068 | | | |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| **நடுநிலைப் பள்ளிகள்—** | | | | |
| அரசு .. .. .. | 231 | | | |
| நகராட்சி .. .. .. | 417 | 5,665 | 29.10 | 65,875 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,073 | | | |
| தனியார் .. .. .. | 1,944 | | | |
| மொத்த தொடக்கப் பள்ளிகள் | | 34,933 | 80.87 | 1,83,196 |
| **உயர்நிலைப்பள்ளிகள் சாதாரணம்—** | | | | |
| அரசு .. .. .. | 1,765 | | | |
| நகராட்சி .. .. .. | 80 | 2,292 | 10.74 | 33,953 |
| தனியார் .. .. .. | 447 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | 11 | 0.09 | 258 |
| மெட்ரிகுலேசன் .. .. | | 212 | 0.73 | 3,433 |
| சி. பி. எஸ். ஈ. முதலியன .. | | 86 | 0.44 | 2,415 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | | 2,569 | 11.37 | 40,059 |



| (1) | | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளிகள்—சாதாரணம்— | | | | | |
| அரசு .. .. .. .. | | 744 | | | |
| (தொழில் நுட்பம் அரசு .. | 11 | 14 | 1,469 | 17.71 | 59,869 |
| தனியார் .. | 3 | | | | |
| நகராட்சி .. .. .. | | 62 | | | |
| தனியார் .. .. .. | | 649 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | | 30 | 0.37 | 1,066 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | | 100 | 1.00 | 3,023 |
| சி.பி.எஸ்.ஈ. போன்ற பள்ளிகள் | | | 79 | 0.83 | 3,515 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் | | | 1,678 | 19.91 | 67,473 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் .. | | | 4,366 | 31.89 | 1,07,532 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளி களும் சேர்த்து) .. .. | | | 39,299 | 112.76 | 2,90,728 |

மாணவர் : 63.29 இலட்சம்.
மாணவியர் : 49.47 இலட்சம்.

நிர்வாக வாரியாக 1986-87 ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்:

| (1) | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். அரசுப் பள்ளிகள். (2) | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். (3) | நகராட்சி (4) | தனியார். (5) | மொத்தம். (6) | ஆசிரியர் விவரங்கள். ஆண். (7) | ஆசிரியர் விவரங்கள். பெண். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 7,596 | 70,439 | 9,337 | 29,949 | 1,17,321 | 72,047 | 45,274 |
| நடுநிலைப் பள்ளிகள் | 3,295 | 26,965 | 7,114 | 28,501 | 65,875 | 33,872 | 32,003 |
| உயர்நிலைப் பள்ளிகள். | 24,652 | .. | 1,499 | 13,908 | 40,059 | 24,169 | 15,890 |
| மேல்நிலைப் பள்ளிகள். | 29,122 | .. | 3,414 | 34,937 | 67,473 | 41,042 | 26,431 |
| மொத்தம் .. | 64,665 | 97,404 | 21,364 | 1,07,295 | 2,90,728 | 1,71,130 | 1,19,598 |



1986-87-ல் பள்ளிகளில் படித்து வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை—வகுப்பு வாரியாக:

| வகுப்புகள். (1) | | மேல் நிலைப் பள்ளிகள். (2) | உயர் நிலைப் பள்ளிகள். (3) | நடு நிலைப் பள்ளிகள். (4) | தொடக்கப் பள்ளிகள். (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|---|
| | | (இலட்சக் கணக்கில் மாணவர்கள்). | | | | |
| —5 | மாணவர் .. .. | 0.70 | 0.64 | 10.20 | 28.09 | 39.63 |
| | மாணவியர் .. .. | 0.70 | 0.52 | 8.75 | 23.68 | 33.65 |
| | மொத்தம் .. .. | 1.40 | 1.16 | 18.95 | 51.77 | 73.28 |
| —8 | மாணவர் .. .. | 5.46 | 4.04 | 5.98 | .. | 15.48 |
| | மாணவியர் .. .. | 3.42 | 3.09 | 4.17 | .. | 10.68 |
| | மொத்தம் .. .. | 8.88 | 7.13 | 10.15 | .. | 26.16 |
| —10 | மாணவர் .. .. | 3.86 | 2.17 | .. | .. | 6.03 |
| | மாணவியர் .. .. | 2.15 | 1.52 | .. | .. | 3.67 |
| | மொத்தம் .. .. | 6.01 | 3.69 | .. | .. | 9.70 |

| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| 1—12 | மாணவர் .. .. | 2.15 | .. | .. | .. | 2.15 |
| | மாணவியர் .. .. | 1.47 | .. | .. | .. | 1.47 |
| | மொத்தம் .. .. | 3.62 | .. | .. | .. | 3.62 |
| —12 | மாணவர் .. .. | 12.17 | 6.85 | 16.18 | 28.09 | 63.29 |
| | மாணவியர் .. .. | 7.74 | 5.13 | 12.92 | 23.68 | 49.47 |
| | மொத்தம் .. .. | 19.91 | 11.98 | 29.10 | 51.77 | 112.76 |

ஆப்பு தொகுதி வாரியாக பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை :

| வகுப்புகள். | ஆசிரியர் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | ஆசிரியர். | ஆசிரியை. | மொத்தம். |
| 1—5 .. .. .. .. | 93,060 | 68,782 | 1,61,842 |
| 6—8 .. .. .. .. | 41,356 | 30,017 | 71,373 |
| 9—10 .. .. .. .. | 23,511 | 13,343 | 36,854 |
| 11—12 .. .. .. .. | 13,203 | 7,456 | 20,659 |
| மொத்தம் | 1,71,130 | 1,19,598 | 2,90,728 |



## இணைப்பு

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1979-80 | 1984-85 | 1985-86 | 1986-87 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) பி.ஏ. .. .. .. | 47,872 | 61,802 | 60,208 | 60,809 |
| (2) பி.எஸ்சி. .. .. .. | 56,847 | 82,596 | 81,949 | 82,769 |
| (3) பி.காம் .. .. .. | 21,744 | 32,028 | 33,559 | 33,894 |
| (4) பட்ட மேற்படிப்பு .. .. | 9,263 | 15,635 | 16,858 | 17,037 |
| மொத்தம் .. | 1,35,726 | 1,92,061 | 1,92,574 | 1,94,509 |
| 2. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | 3,752 | 4,347 | 4,497 | 4,526 |
| (2) தனியார் கல்லூரிகள் .. | 8,438 | 9,540 | 9,829 | 10,042 |
| மொத்தம் .. | 12,190 | 13,887 | 14,326 | 14,568 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. | 51 | 53 | 54 | 54 |
| (2) தனியார் (மானியம் பெறுபவை) | 136 | 134 | 133 | 133 |
| (3) தனியார் (மானியம் பெறாதவை). | .. | 6 | 8 | 11 |
| மொத்தம் .. .. | 187 | 193 | 195 | 198 |

பிற கல்லூரிகளுக்கான 1986–87 ஆம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | அரசு. | தனியார். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கல்வியியற் கல்லூரிகள் .. .. | 7 | 15 | 2,928 | 235 |
| 2. உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. | .. | 3 | 297 | 26 |
| 3. புலவர் கல்லூரிகள் .. .. | .. | 15 | 1,401 | 171 |
| 4. சமுதாயப் பணிப்பள்ளி .. | .. | 2 | 232 | 19 |
| மொத்தம் .. .. | 7 | 35 | 4,858 | 451 |



இணைப்பு

தொழில் நுட்பக் கல்வி.

| (1) | 1976-77 (2) | 1979-80 (3) | 1984-85 (4) | 1985-86 (5) | 1986–87 (6) |
|---|---|---|---|---|---|
| (அ) கல்வி நிலையங்களின் எண்ணிக்கை— | | | | | |
| 1. பொறியியல் கல்லூரிகள்— | | | | | |
| (1) அரசு .. .. .. | 4 | 3 | 4 | 4 | 4 |
| (2) தனியார் .. .. | 3 | 3 | 3 | 3 | 3 |
| (3) சுயநிதி நிறுவனம் .. | .. | .. | 17 | 23 | 24 |
| (4) தன்னுரிமையுள்ளவை | 5 | 7 | 7 | 7 | 7 |
| மொத்தம் .. | 12 | 13 | 31 | 37 | 38 |
| 2. பாலிடெக்னிக்குகளும் சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | | | | |
| (1) அரசு .. .. .. | 19 | 20 | 23 | 23 | 23 |
| (2) தனியார் .. .. | 19 | 19 | 35 | 35 | 35 |
| (3) சுயநிதி நிறுவனம் .. | .. | .. | 53 | 71 | 77 |
| மொத்தம் .. | 38 | 39 | 111 | 129 | 135 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| தொழிற்பாட மேல் நிலைப் பள்ளிகள்— | | | | | |
| (1) அரசு .. .. | 11 | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. | 3 | 3 | 3 | 3 | 3 |
| மொத்தம் | 14 | 14 | 14 | 14 | 14 |
| (ஆ) பயின்ற மொத்த மாணவர்கள் எண்ணிக்கை—* | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் | 7,885 | 13,084 | 16,295 | 20,435 | 24,755 |
| (2) பாலிடெக்னிக்குகள் .. | 14,131 | 16,560 | 39,215 | 51,995 | 65,855 |
| (3) தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகள். | 2,166 | 1,977 | 1,560 | 1,320 | 1,320 |
| மொத்தம் ... | 24,182 | 31,621 | 57,070 | 73,750 | 91,930 |

* தன்னுரிமையுள்ள கல்வி நிறுவனங்களைத் தவிர்த்து.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் சென்னை-600 008
136516
V2311,81 N87 D
N87-37-4